இந்தியக்
காட்சி சாலைகளின்
விளக்கம்

ஆசிரியர் :
C. சிவராமமூர்த்தி,
காவலர், இந்தியத் தேசியக் காட்சி சாலை, புதுடில்லி.

மொழிபெயர்ப்பு :
தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்,
M. A., I. A. S. (Retd.)

இந்திய அரசாங்க விஞ்ஞான ஆராய்ச்சி வளர்ச்சி, விவகார அமைச்சகத்திற்காக
தமிழ்நாட்டு அரசாங்க செய்தித்துறை நெறியாளரால்
வெளியிடப்பட்டது.

109—17

இந்தியக் காட்சிச் சாலைகளின் விளக்கம்

ஆசிரியர் :

C. சிவராமமூர்த்தி,

காவலர், இந்தியத் தேசியக் காட்சிச்சாலை, புது டில்லி.

மொழி பெயர்ப்பு :

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்,

M.A., I. A. S. (Retd.)

©

தமிழ்நாடு அரசாங்கம்

1963

இந்திய அரசாங்க விஞ்ஞான ஆராய்ச்சி கல்லாசார, விவகார அமைச்சகத்திற்காக தமிழ்நாடு அரசாங்க செய்தித் துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.

விலை : ரூபாய் 5.

இ.கா.சா.–A

பொருளடக்கம்

	பக்கம்
விஞ்ஞான ஆராய்ச்சி, பண்பாட்டுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஹுமாயூன் கபீர் அவர்களின் முன்னுரை ..	V
ஆசிரியர் முன்னுரை	VII
படங்களின் பட்டியல்	IX
இந்தியாவிலுள்ள பொருள்காட்சிசாலைகளின் பட்டியல்	XI
இந்தியக் காட்சிச்சாலைகள்	1
புதை பொருட் கலாச்சாரக் காட்சிசாலைகள்	10
புகைப்படங்கள்	

முகவுரை

பழங்காலத்திலேயே இந்தியாவில், காட்சிசாலைகளும் சித்திரகூடங்களும் இருந்து வந்திருக்கின்றன என்பதை ஆதார பூர்வமாக அறிகிறோம். கிராமத்தில் உள்ள கோயில், கலைகளையும், கைத்தொழில்களையும் வளர்க்கும் சிறிய கூடமாய் அமைந்திருக்கிறது. அது சங்கீதம், நடனம், சிற்பம், சித்திரம், மர வேலை, தச்சு வேலை, துணி நெசவு, உலோக வேலை முதலிய கலைகள் மூலம் ஒரு கலை உணர்வை மக்களுக்கு ஊட்டியிருக்கிறது கோயில்களைத் தவிர, மன்னர்களும் கலைக்காவலர்களாய் இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களே அடிக்கடி தனிப்பட்ட காட்சிச்சாலைகளையும் பொதுவான கலைக்கூடங்களையும் நிறுவியிருக்கிறார்கள். சாதாரணமான பொழுது போக்கு நிலையங்களாகவும், கல்வி, கலாச்சாரம் வளர்க்கும் பண்ணைகளாகவும் அமைந்த சித்திரசாலைகள், விசுவகர்ம மந்திரங்கள் ஆகியவற்றைப்பற்றி எல்லாம் இதிகாசங்கள் கூறுகின்றன.

இந்தப் பழைய பாரம்பரியம், மத்திய காலத்திலும் இன்றும் வளர்ந்திருக்கிறது. அரசுகள் எல்லாம் பேரரசுகளாய் வளர்ந்து பிரபுக்கள் தொகை பெருகியபோது ராஜீயக் காட்சிச்சாலைகளும் பணக்கார ரஸிகப் பெருமக்கள் சேகரித்த அபூர்வப் பொருள்களும் அவற்றில் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. சில சமயங்களில் போரில் வென்ற நாடுகளிலிருந்து கிடைத்த வெற்றிச் சின்னங்களை வைத்தே காட்சிசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சில சமயங்களில் கலை உணர்வு உடைய குடும்பத்தாரும், தனிப்பட்டவரும் சேர்த்த பொருள்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் விஞ்ஞானிகள் சேர்த்துக்கொடுத்த பொருள்கள், உலக அதிசயங்களை ஆய்ந்து அறிந்த அறிஞர்கள் தேடிச்சேர்த்த பொருள்கள் முதலியவைகளை வைத்து, ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்திருக்கின்றன. எப்படி ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அவை பொதுமக்களிடையே அறிவை வளர்க்கவும் அவர்களுக்கு இன்பம் ஊட்டவும் உதவியிருக்கின்றன. அத்துடன் பல விஷயங்களைக் கற்கவும் ஆராயவும் உதவியாய் இருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் வளர்ந்த இக்காலக் காட்சிச்சாலை பழங்காலத்தோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதும் வியப்பன்று. இன்றைய காட்சிச்சாலைகளின் ஆரம்பம் 1814-ல் வங்காள ஆசியக் கழகத்தார் பூதத்துவம், தாவரம், விலங்கினம், மக்கள் இனம், புதைபொருள் முதலிய பொருள்களைச் சேகரித்து வைத்து காட்சிச்சாலையாகவே தொடங்கிற்று. பின்னரே சித்திரங்களும் நெசவுத்துணிகளும் மற்றக் கைத்தொழிற்பொருள்களும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இதுவே நாளடைவில் கல்கத்தாவில் இந்தியக் காட்சிச்சாலையாக உருப்பெற்று, இன்று ஆசியாவிலே உள்ள காட்சிச்சாலைகளுள் பெரியது என்னும் நிலைக்கு உயர்ந்திருக்கிறது.

இதற்குப் பின் ஐந்தாண்டுக் காலத்தில் சென்னை இலக்கியக் கழகம் இதைப்போல ஒரு காட்சிச்சாலையை உருவாக்கத் திட்டமிட்டது. அந்த நூற்றாண்டின் இடைக் காலத்தில் பம்பாயில் விக்டோரியா ஆல்பர்ட்டுக் காட்சிச்சாலை உருவாகியிருக்கிறது. அத்துடன் மருத்துவ சம்பந்தமான பழைய காட்சிச்சாலையும் தொடங்கியிருக்கிறது. ராஜதானியின் தலைநகரங்கள் சுதேச மன்னர்களின் இருப்பிடங்கள் ஆகியவற்றில் அந்த நூற்றாண்டு முடிவதற்குள்ளேயே காட்சிச்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இப்படியே நாட்டின் முக்கியமான நகரங்களில் எல்லாம் காட்சிச்சாலைகள் உருவாகியிருக்கின்றன.

ஆதிகாலத்திலிருந்தே காட்சிச்சாலைகள் கல்வி கலாசார வளர்ச்சியின் கேந்திரங்களாய் அமைந்து வந்திருக்கின்றன. இந்தியா சுதந்திரக்குடியரசு நாடாகியபின், தேசிய வாழ்வில் இந்திய அங்கம் வகிக்கும் அமைப்புகளாக அமைந்துவிட்டன. சுயாட்சி என்பது ஆட்சிப் பொறுப்பில் ஒவ்வொரு மனிதனும் பங்கு கொள்வதாகும். இப்படிப் பங்கு பெறும் மனிதன் போதிய கல்வி அறிவும் உணர்வும் பெற்றிராவிட்டால், அதனால் நன்மையைவிட அதிகக் கெடுதலே விளையும். ஆதலால், ஒவ்வொருவருக்கும் தக்க கல்வி அறிவைப் புகட்ட வேண்டுவது இன்றைய அரசியலின் தவிர்க்கலாகாத கடமையாகும். அதோடு பள்ளிக்கூடங்கள்,

கல்லூரிகள், தொழிற்கூடங்கள் மூலம் பாரம்பரியமாகப் புகட்டப்படும் கல்வி அறிவு இதற்குப் போதுமானதன்று என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தக் கல்வி நிறுவனங்கள் எல்லா வயதினர்க்கும் முதியவர்களுக்கும் பயன் அளியா என்பதும் தெரிந்திருக்கிறது. இந்தக் கல்விக் கூடங்களின் பாடத்திட்டங்கள், இன்றைய மனிதன் தெரிந்து கொள்ள வேண்டுவனவாகிய விஷயங்களைப் பற்றியெல்லாம் போதித்துவிடவும் இயலாது. காட்சிச்சாலைகளில், கலைக்கூடங்களில் மனிதன் பார்த்துத்தெரிந்துகொள்ளும் விஷயங்களை எல்லாம் நூல்கள் மூலமாகவும் பெற முடியாது. ஆசிரியர் சொல்லிக்கொடுக்கும் சொல்லுக்கும், நூலில் உள்ள எழுத்துக்கும் மேலாக, கண்கொண்டு பார்த்துத் தெரிந்துகொள்வதே முதியவர்களுக்கும் எல்லாப் பகுதியினருக்கும் உகந்ததாகும். அதனால், அவர்கள் எல்லா அறிவையும் பெற்றுக்கொள்ளலாம்.

இதனாலேதான் கலைக்கூடங்கள், விஞ்ஞானக் காட்சிச்சாலைகள், தொழிற்கூடங்கள், சுகாதாரம், விவசாயம், வனம், தொழில், புதைபொருள், பூதத்துவம், விலங்கினம், தாவரம், மக்கள் இனம் இவை பற்றிய பலதிறப்பட்ட காட்சிச்சாலைகள் நமக்கு அவசியமாகின்றன. புதைபொருள் இலாகாத்துறையினர் தாம் அகழ்ந்து எடுத்த இடங்களிலேயே நிலைத்த காட்சிச்சாலைகளை நிறுவி அங்கேயே தமக்குக் கிடைத்த பொருள்களைக் காட்சிக்கு வைக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். மனித வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, தொழில் வளர்ச்சி ஆகியவைகளைப் பற்றி மாணவர்களுக்கு விளக்கப் பல்கலைக் கழகங்களும், மற்றக் கல்வி நிலையங்களும் தனித்தனி காட்சிச்சாலை அமைக்க வேண்டியிருக்கிறது.

கல்வி சம்பந்தமாகக் காட்சிச்சாலைகளின் பொறுப்பை எண்ணினால் பல விஷயங்கள் நினைவிற்கு வரும். பொருள்களை நன்முகக் காட்சியில் வைக்க வேண்டும். காட்சிச்சாலைக்கு வருபவர்களது அறிவு, ஆர்வம், தரம் அறிந்து அவர்களுக்கு உதவவேண்டும். பொருள்களை அறிமுகப்படுத்துவது என்பது அப்படியே அடுக்கி வைப்பதுமட்டுமன்று; அவற்றின் பூர்வம், வளர்ச்சி, விளக்கம் முதலியவைகளை எடுத்துக்காட்டுவதுமாகும். இதில் வெற்றி காண்பது காட்சிச்சாலையினர், மாணவர்கள், அறிஞர்கள், பொதுமக்கள் ஆகிய எல்லாரும் சேர்ந்து ஒத்துழைப்பதனாலேதான் முடியும். சொல்லப்போனால், இன்றைய காட்சிச்சாலையினர், காண வருபவர்களுக்குக் காத்திருப்பதனால் மட்டும் மனநிறைவு அடையக் கூடாது. காட்சிப்பொருள்களைப் பற்றிய விளக்கங்களை மக்கள் இருக்கும் இடந்தேடி எடுத்துச்சென்று, அவர்களுக்கு ஒரு ஆர்வத்தை உண்டாக்கி, அவர்களிடையே காட்சிச்சாலைக்கு வரவேண்டும் என்ற ஆசையை எழுப்ப வேண்டும். இப்படி நூல்கள், காட்சிச்சாலைகள், மக்களுக்கு ஆர்வம் ஊட்டுவதன் மூலமும், போதிய அறிவு புகட்டுவதன் மூலமுந்தான் அவை இன்றைய உலகிலே உண்மையான சர்வகலைக்கழகங்களாய் விளங்குகின்றன.

மார்க்கம், ஹெர்கிரீவ்ஸ் என்பவர்களே தங்களது விளக்கப் புத்தக மூலமாக இந்தியக் காட்சிச்சாலைகளின் வரலாற்றை முதன்முதல் தொகுத்தவர்கள். அதற்குப் பின்னால் நாட்டில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. இந்தியா பாக்கிஸ்தான் பிரிவினையால் சில காட்சிச்சாலைகளை நாம் இழந்துவிட்டோம். ஆயினும், பல புதுக் காட்சிச்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்திருக்கின்றன. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள மாணவர்களது தேவையைப் பூர்த்தி செய்ய, யுனெஸ்கோ ஸ்தாபனத்தார் 1951-ல் காட்சிச்சாலைகளைப் பற்றிய தேசிய விளக்கப் புத்தகம் தயாரிக்க வேண்டும் என்றனர். இந்த வேலை நமது புதைபொருள் துறை சூப்பிரண்டென்டுகளில் ஒருவரான ஸ்ரீ சுவராமமூர்த்தியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் மிக்க உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் அந்த வேலையைச் செய்து முடித்திருக்கிறார். அவர் தயாரித்ததைப் பல நிபுணர்கள் பரிசோதித்துப் பல திருத்தங்கள் செய்தார்கள். விளக்கப் புத்தகம் முழு உருவம் பெற்ற போது இந்தியாவில் பல தரப்பட்ட காட்சிச்சாலைகளின் தகவல்கள் நிரம்பிவிட்டன. 1958-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 31-ஆந்தேதி வரை இந்தியாவில் உருவான காட்சிச்சாலைகளின் வரலாறு, வளர்ச்சி, விளம்பர வசதிகள் முதலிய தகவல்கள் எல்லாம் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

புது டில்லி,
1959 ஆ, செப்டெம்பர் மீ, 12 உ

ஹுமாயூன் கபீர்

முன்னுரை

'யுனெஸ்கோ' டைரக்டர்-ஜெனரல் விரும்பியபடி, 1952-ல் இந்திய அரசியலார், அனைத்துலகக் காட்சிச்சாலைக் குழுவினர் திட்டமிட்ட இந்தியக் காட்சிச்சாலைப் பட்டியல் தயாரிக்க முயன்றுவருகின்றனர். அதன் மூலம் இந்தியக் காட்சிச்சாலைகளின் வளர்ச்சியைப் பற்றிய தகவல்களை எல்லாம் பொது மக்களுக்கு உதவ நினைத்தனர். 1936-ல் மார்க்கமும் ஹெர்கிரீவ்ஸும் தயாரித்த இந்தியக் காட்சிச்சாலை விளக்கத்திற்குப் பின்னால், இந்திய நாடு பிரிவினையாகிவிட்டது. சில காட்சிச்சாலைகள் பாக்கிஸ்தானுக்குப் போய்விட்டன. சில காட்சிச் சாலைகள் மூடப்பட்டுவிட்டன. புதியனவாகச் சில காட்சிச்சாலைகள் தோன்றியிருக்கின்றன. இன்னும் பல தோன்றிக்கொண்டே இருக்கின்றன. அதனால், இன்றுவரை வளர்ந்திருக்கும் காட்சிச்சாலைகளின் விளக்கம் ஒன்று தயாரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தியப் புதைபொருள் துறை டைரக்டர்-ஜெனரல் என்னை இந்த வேலையில் ஈடுபடுத்தினார்.

முதலில் என்னை இதற்கென்றே நியமிக்கப்பட்ட முழுநேர அதிகாரியாக்கி, எல்லாக் காட்சிச்சாலைகளுக்கும் நான் நேரில் சென்று விளக்கம் தயாரிக்குமாறு திட்டமிட்டார்கள். பின்னர் நான் பார்க்கும் கல்கத்தா இந்தியக் காட்சிச்சாலைப் புதைபொருள் துறையின் சூப்பிரண்டென்ட் வேலையோடு இதையும் செய்தல் போதும் என்றார்கள். தகவல்களைச் சேகரித்தல் போதும் என்று சொன்னார்கள். இது காரணமாக இந்த விளக்கம் நான் நேரில் சென்று பல காட்சிச்சாலைகளையும் கண்டு தயாரித்த விளக்கமாக அமையவில்லை. தகவல் எல்லாம் கடிதமூலமாக 1953-55-ஆம் ஆண்டுகளில் சேகரித்தவைகளே. இவற்றுடன் 31-12-58-ஆம் வரையில் உள்ள தகவல்களும் சேகரித்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வேண்டிய தகவல்கள் எல்லாம் விரும்பியதுமே விரைவில் கிடைக்கவில்லை. சில சமயங்களில் சரியான பதில்கள் பெற நிரம்பக் காலதாமதம் ஆகியிருக்கிறது.

இந்தச் சமயத்தில், என்னுடன் ஒத்துழைத்துத் தகவல்களைச் சேகரித்துக் கொடுத்த இந்தியக்காட்சிச்சாலை அதிகாரிகளுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விளக்கம் தயாரிக்க எல்லா வசதிகளும் செய்து கொடுத்த விஞ்ஞான ஆராய்ச்சி கலாசார விவகார அமைச்சர்க்கும், இந்தியப் புதைபொருள் துறை டைரக்டர் ஜெனரலுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறுகிய காலத்தில் அட்டவணை எல்லாம் தயாரித்துக்கொடுத்த ஸ்ரீ I. D. மாத்தூருக்கும் என் நன்றி உரியது.

புது டில்லி,
1959-ம்ஞு மேமீ 6உ.

சிவராமமூர்த்தி,
காவலர், இந்தியத் தேசியக்காட்சிச்சாலை.

படங்களின் பட்டியல்

இதழ் 1.

1. சாக்கியர்கள் புத்தரைப் போற்றி வணங்குதல்
சாதவாஹனர் காலம், கி.பி. 2-வது நூற்றாண்டு, பழங்கால புதைபொருள் காட்சிசாலை, அமராவதி.

2. பெஸ்ஸாட் என்பவர் வரைந்த அடிமைப்பட்ட சிங்கம்
ஜலார் ஜங் பொருள்காட்சிசாலை, ஹைதராபாத்.

இதழ் 2.

1. ஜி. எப். வாட்ஸ் என்பவர் வரைந்த ஆர்பியஸும் யுரிடைஸும், ஜலார் ஜங் பொருள்காட்சிசாலை, ஹைதராபாத்.

2. யாஹூதின் சூர் ஆணைப்பற்றி ஜஹாங்கீர், ஷாஜஹான் சக்கரவர்த்திகள் எழுதிய அவர்களின் சொந்த கையெழுத்துப் பிரதிகள், ஜலார் ஜங் பொருள்காட்சிசாலை, ஹைதராபாத்.

இதழ் 3.

1. 1876-ம் வருஷத்தில் பென்ஸோனி என்பவர் வரைந்த முகத்திரை அணிந்த ராக்கேல்
ஜலார் ஜங் பொருள்காட்சிசாலை, ஹைதராபாத்.

2. மெபிஸ்டோபீல்ஸும் மார்கரத்தாவும் (இத்தாலிய மரச் செதுக்கு வேலை)
ஜலார் ஜங் பொருள்காட்சிசாலை, ஹைதராபாத்.

இதழ் 4.

1. பழங்காலக் கலைத்திறனை விளக்குவதாய் மூரட்டுக் கம்பளத்தில் வரையப்பட்ட மிதுனமும் ஸலபஞ்சிகாவும் கொண்ட சித்திரம்.
இச்வாகு கி.பி. 2-வது நூற்றாண்டு, பழங்கால பொருள் காட்சிசாலை, நாகார்ஜுனகொண்டா.

இதழ் 5.

1. செதுக்கு வேலைச் சித்ரகூடம்
அஸ்ஸாம் அரசினர் பொருள்காட்சிசாலை, கௌஹத்தி.

இதழ் 6.

1. சிரிக்கும் சிறுவன். (சுட்டெடுத்த மண்சிலையின் தலை).
கி.மு. 3-வது நூற்றாண்டு, மௌரியர் காலம், பாட்னா பொருள்காட்சிசாலை, பாட்னா.

2. சங்கீஸாவில் புத்தர் அருட்பீடத்தில் இறங்குதல் (வெண்கலச்சிலை)
கி.பி. 9-வது நூற்றாண்டு, பாலர் காலம், குர்கிஹார், பாட்னா பொருள்காட்சிசாலை, பாட்னா.

இதழ் 7.

1. தாரா (வெண்கலச் சிலை)
கி.பி. 9-வது நூறருண்டு, பாலர் காலம், பாட்னா பொருள் காட்சிசாலை, பாட்னா.

2. சவுரி வீசுவோன் (கற் சிலை)
கி.மு. 3-வது நூற்றாண்டு, மௌரியர் காலம், பாட்னா பொருள்காட்சிசாலை ,பாட்னா.

இதழ் 8.

1. தாகூர்சிங் வரைந்த ஓவியம்
ஸ்ரீ பவானி பொருள்காட்சிசாலை, அவுந்த்.

2. ரவி வர்மா வரைந்த ஓவியம்
ஸ்ரீ பவானி பொருள் காட்சிசாலை, அவுந்த்.

3. சுவரிலுள்ள துவாரத்தின் மூலம் பார்க்கும்படி இருட்டறையில் காண்பிக்கப்படும் ஒளிப்படங்கள்—சிங்கங்கள்.
பரோடா பொருள்காட்சிசாலையும் ஓவியக்கூடமும்.

இதழ் 9.

1. நகராட்சி மன்ற பொருள்காட்சிசாலை (பண்பாட்டு மையநிலையம்) ஆமதாபாத்.

2. ஆமதாபாத் நகராட்சி மன்ற பொருள் காட்சிசாலையிலுள்ள சித்ரகூடத்தின் உட்புறத்தோற்றம்.

இதழ் 10.

1. ஓவியக்கூடம்
பரோடா பொருள்காட்சிசாலையும் ஓவியக்கூடமும், பரோடா.

2. சித்ர வேலைக்கூடம்
வாட்ஸன் பொருள்காட்சிசாலை, ராஜ்கோட்.

இதழ் 11.

1. இசைவாணர் இருவர் (கற் சிலை)
கி.பி. 11-வது நூற்றாண்டு, மேலைச்சளுக்கியர் காலம், கன்னட ஆராய்ச்சிக் கழக பொருள்காட்சிசாலை, தார்வார்.

2. சேஷசாயி விஷ்ணு.
கி.பி. 6-வது நூற்றாண்டு, மேலைச்சளுக்கியர் காலம், எய்ஹோல், வேல்ஸ் இளவரசர் மேற்கிந்திய பொருள் காட்சிசாலை, பம்பாய்.

3. கோமதேஸ்வரர்.
கி.பி. 8-வது நூற்றாண்டு, வேல்ஸ் இளவரசர், மேற்கிந்திய பொருள்காட்சிசாலை, பம்பாய்.

இதழ் 12.

1. உலோகம் கண்டுபிடிக்கும் கருவி.
விஞ்ஞானப் பொருள்காட்சிசாலை, தேசிய இயற்கை வள ஆராய்ச்சிக்கூடம், புது டில்லி.

2. சுற்றுலா தொலைக்காட்சிப் பெட்டி (மூடப்பட்ட நிலையில்)
விஞ்ஞானப் பொருள்காட்சிசாலை, தேசிய இயற்கை வள ஆராய்ச்சிக்கூடம், புது டில்லி.

இதழ் 13.

1. உழைப்பின் வெற்றி.
ஸ்ரீ டி. பி. ராய் சௌத்ரி வரைந்தது, தேசிய நவீன சித்ர கலைகூடம், புது டில்லி.

2. பாரதத் தாய்.
அமிர்த ஷெர்ஜில் வரைந்தது, தேசிய நவீன சித்ரகலைக் கூடம், புது டில்லி.

3. முகத்திரை அணிந்த பெண.
டாக்டர் ரவீந்தரநாத் தாகூர் வரைந்தது, தேசிய நவீன சித்ர கலைக்கூடம், புது டில்லி.

இதழ் 14.

1. கணேசர், பூகோள ரீதி, கால ரீதி, தேசிய பொருள் காட்சிசாலை, புது டில்லி.
2. நடேசர் (வெண்கலச் சிலை).
   10-வது நூற்றாண்டு, திருவரங்குளம், தேசிய பொருள் காட்சிசாலை, புது டில்லி.
3. பறக்கும் கந்தருவர்கள் (கற்சிலை)
   கி.பி. 6-வது நூற்றாண்டு, மேலைச்சளுக்கியர் காலம், எய்ஹோல், தேசிய பொருள்காட்சிசாலை, புது டில்லி.

இதழ் 15.

1. இந்திய நாணயங்களின் வரலாறு, நீதிமுறைச் செல்வச் செழிப்பு, தேசிய பொருள்காட்சிசாலை, புது டில்லி.
2. இந்திய எழுத்துக்களின் வரலாறு. (அ) வளர்ந்தோங்கிய விதம், தேசிய பொருள்காட்சிசாலை, புது டில்லி.

இதழ் 16.

1. தந்தத்தில் செய்த செதுக்கு வேலைப் பொருள்கள்.
   ஸ்ரீ ரெங்கநாத சுவாமி வகையறு தேவஸ்தான பொருள் காட்சி சாலை, ஸ்ரீரங்கம்.
2. ஷை ஷை ஷை

இதழ் 17.

1. அரசினர் சிற்பக கலைக்கூடம், திருவனந்தபுரம்.
2. பறவைகளின் கண்காட்சிக் கூடம், உயிரினப் பிரிவு, அரசினர் பொருள்காட்சிசாலை, திருவனந்தபுரம்.

இதழ் 18.

1. பழங்காலப் புதை பொருள் காட்சிக் கூடத்தின் உட் புறம்—வெண்கலச் சிலைகள், அரசினர் பொருள்காட்சி சாலை, திருவனந்தபுரம்.
2. பழங்காலப் புதை பொருள் காட்சிக் கூடத்தின் உட்புறம்—மரத் தேர், அரசினர் பொருள்காட்சிசாலை, திருவனந்த புரம்.

இதழ் 19.

1. செதுக்கு வேலை சிற்பக்கூடம்.
   பழங்காலப் புதை பொருள் காட்சிக கூடத்தின் விஸ்தரிக்கப் பட்ட பகுதி, அரசினர் பொருள்காட்சிசாலை, சென்னை.
2. அரசினர் பொருள்காட்சிசாலை, சென்னை.

இதழ் 20.

1. கல்யாண சுந்தரமூர்த்தி (குழாங்களுடன்) வெண்கலச் சிலை.
   சோழர் காலம், கி.பி. 11-வது நூற்றாண்டு, தஞ்சாவூர் சிற்பக் கலைக்கூடம், தஞ்சாவூர்.
2. உயிரினங்களின் காட்சிக்கூடம், எலும்புக் கூடுகள், அரசினர் பொருள்காட்சிசாலை, சென்னை.

இதழ் 21.

1. மக்கள் இனப்பிரிவு ஆராய்ச்சிக் கழகப் பொருட்காட்சி சாலையிலுள்ள காட்சிக் கூடம். சிந்த்வாரா.
2. கல்வெட்டுகள் காட்சிக்கூடம், அரசினர் பொருள்காட்சி சாலை, நவ்காங்.

இதழ் 22.

1. மஹாபாண்டங்கள், மஹந்த் காசிதாஸ் ஞாபகார்த்த பொருள்காட்சிசாலை, ரெய்ப்பூர்.
2. ஸ்ரீ கிருஷ்ண பகவதி (கற்சிலை) கி.பி. 10-வது நூற்றாண்டு, சந்தலர் காலம், அரசினர் பொருள்காட்சிசாலை, நவ்காங்.
3. யாக தக்ஷிணமூர்த்தி (கற்சிலை) கி.பி. 10-வது நூற்றாண்டு, சந்தலர் காலம், அரசினர் பொருள்காட்சிசாலை, நவ்காங்.

இதழ் 23.

1. மைசூர் அரசினர் பொருள்காட்சிசாலை, பெங்களூர்.

இதழ் 24.

1. ராஜபுதன பொருள்காட்சிசாலை, அஜ்மீர்.
2. அரசினர் பொருள்காட்சிசாலை, ஆள்வார்.

இதழ் 25.

1. போதி சத்வர் கற்சிலை.
   கி.பி. 6-வது நூற்றாண்டு, குப்தர் காலம், கௌசாம்பி பொருள்காட்சிசாலை, அலஹாபாத் பல்கலைக் கழகம், அலஹாபாத்.
2. கஜலெட்சுமி (சுட்டெடுத்த மண் சிலை) கி.பி. 6-வது நூற்றாண்டு, குப்தர் காலம், கௌசாம்பி பொருள்காட்சிசாலை, அலஹாபாத் பல்கலைக் கழகம், அலஹாபாத்.
3. போதி சத்வர் (கற்சிலை) கி.பி. 6-வது நூற்றாண்டு, குப்தர் காலம், கௌசாம்பி பொருட்காட்சிசாலை, அலஹாபாத் பல்கலைக் கழகம், அலஹாபாத்.

இதழ் 26.

1. கலைக்கூடத்தில் சிறு குழந்தைகள், மோதிலால் நேரு பாலசங்கரஹாலயா, லக்ஷ்மணபுரி.
2. சரித்திர காலத்துக்கு முற்பட்ட கருவிகள், குருகுல பொருட் காட்சிசாலை, குருகுல கங்கரி, ஹரித்துவர்.

இதழ் 27.

1. போதிசத்வ சிம்ஹநாதர், கி.பி. 11-வது நூற்றாண்டு கஹாதவாலர் காலம், மஹோலி, அரசினர் பொருள் காட்சிசாலை, லக்ஷ்மணபுரி.
2. புத்தர், கி.பி. 5-வது நூற்றாண்டு, குப்தர் காலம், மங்குவார், அரசினர் பொருள்காட்சிசாலை, லக்ஷ்மணபுரி.

இதழ் 28.

1. தயிர் கடையும் கோபிகா ஸ்திரீகள், குப்தர் காலம், கி.பி. 5-வது நூற்றாண்டு, பாரத் கலா பவன் பொருள்காட்சி சாலை, வாரணாசி.
2. யக்ஷி, குஷானர் காலம், கி.பி. 2-வது நூற்றாண்டு பாரத் கலாபவன், பொருள்காட்சிசாலை, வாரணாசி.

இதழ் 29.

1. சிற்பக் கலைப் பகுதி, இந்தியப் பொருள்காட்சிசாலை, கல்கத்தா.
2. ஹரிஷிகேசர் (வெண்கலச் சிலை) கி.பி. 10-வது நூற்றாண்டு பாலர் காலம், பங்கிய சாஹித்ய பரிஷத் பொருள்காட்சி சாலை, கல்கத்தா.
3. விஷ்ணுவும் பக்தனும், செப்புத் தகட்டில் செதுக்கப்பட்டது. கி.பி. 12-வது நூற்றாண்டு, சுந்தரவனம், அஷுதோஷ் இந்திய சிற்பக் கலைக் பொருள்காட்சிசாலை, கல்கத்தா பல்கலைக் கழகம், கல்கத்தா.

இதழ் 30.

1. சூரியன் (கற்சிலை), கி.பி. 6-வது நூற்றாண்டு, குப்தர் காலம், காசிப்பூர், சுந்தரவனம், அஷுதோஷ் இந்திய சிற்பக்கலைப் பொருள்காட்சிசாலை, கல்கத்தா பல்கலைக் கழகம், கல்கத்தா.
2. இந்தியப் பொருள்காட்சிசாலை, கல்கத்தா.
3. பர்ஹுத் கலைக்கூடம், பழங்காலப் புதைப் பொருள் பிரிவு, இந்தியப் பொருள் காட்சிசாலை, கல்கத்தா.

பொருள் காட்சிசாலைகளின் பட்டியல்

பொருள்காட்சிசாலைகளின் பட்டியல்

பழங்காலப் புதை பொருள்களும், பண்பாட்டு விளக்கப் பொருள்களும் உள்ள பொருள் காட்சிசாலைகள்.

ஆந்திரப் பிரதேசம்

1. அலம்பூர் .. .. பழங்கால புதைபொருள் பிரதேச பொருட் காட்சி சாலை.
2. அமராவதி .. .. பழங்கால புதைபொருள் பொருள்காட்சி சாலை.
3. ஹைதராபாத் .. ஹைதராபாத் பொருட்காட்சிசாலை.
4. ஹைதராபாத் .. ஜலார் ஜங்க் பொருட்காட்சிசாலை.
5. கொண்டாபூர் .. பழங்காலப் புதைபொருள் பொருட்காட்சி சாலை.
6. மதனபள்ளி .. மதனப்பள்ளி கல்லூரி பொருட்காட்சிசாலை.
7. நாகார்ஜுனகொண்டா. நாகார்ஜுனகொண்டா பொருட்காட்சிசாலை.
8. ராஜமஹேந்திரம் .. ஆந்திரா வரலாற்று ஆராய்ச்சிக் கழகப் பொருட்காட்சிசாலை.
9. திருப்பதி .. .. ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொருட்காட்சிசாலை.
10. விஜயவாடா .. விக்டோரியா ஜூபிளி பொருள்காட்சிசாலை.

அஸ்ஸாம்

11. கௌஹத்தி .. அஸ்ஸாம் அரசினர் பொருட்காட்சிசாலை.

பீஹார்

12. புத்தகயா .. .. பழங்காலப் புதைபொருள் காட்சிசாலை.
13. தர்பங்கா .. .. சந்திரதாரி பொருள்காட்சிசாலை.
14. கயா .. .. கயா பொருள்காட்சிசாலை.
15. நாலந்தா .. நாலந்தா பொருளகாட்சிசாலை.
16. பாட்னா (பாடலிபுரம்) .. பாட்னா பொருளகாட்சிசாலை.
17. வைசாலி .. .. வைசாலி பொருள்காட்சிசாலை.

பம்பாய்

18. ஆமதாபாத் .. .. நகராட்சி மன்ற பொருள்காட்சிசாலை (பண்பாட்டு மைய நிலையம்).
19. ஆமதாபாத் .. .. லேக் போலாபாய் ஜேவிங்பாய் கல்வி, ஆராய்ச்சிக கழகப் பொருள்காட்சிசாலை.
20. அம்ரேலி .. .. ஸ்ரீ ஹரிதர பாய் குழந்தைகள பொருள்காட்சி சாலை.
21. அவுந்த் .. .. ஸ்ரீ பவானி பொருள்காட்சிசாலை.
22. பரோடா .. .. பொருள் காட்சிசாலையும், ஓவியக்கூடமும் சயாஜிநகர்.
23. பரோடா .. .. பழங்கால புதைபொருள் இலாகா பொருள் காட்சிசாலை, M. S. பல்கலைக் கழகம், பரோடா.
24. பவநகர் .. .. பார்ட்டன் பழங்காலப் பொருள்காட்சிசாலை.
25. பூட்ஜ் .. .. கட்ச் பொருள்காட்சிசாலை.
26. பம்பாய் .. .. வேல்ஸ் இளவரசர் மேற்திந்திய பொருள் காட்சிசாலை.
27. பம்பாய் .. .. விக்டோரியா ஆல்பர்ட் பொருள்காட்சிசாலை விக்டோரியா பூங்கா.
28. தரம்பூர் .. .. லேடி வில்ஸன் பொருள்காட்சிசாலை.
29. தூலியா .. .. I. V. K. ராஜ்வடே ஸன்ஸோஷன் மண்டல் பொருள்காட்சிசாலை.
30. ஜாம்நகர் .. .. பழங்காலப் பொருள்கள் பொருளகாட்சி சாலை.
31. ஜுனகாத் .. .. ஜுனகாத் பொருள்காட்சிசாலை.
32. கோலாப்பூர் .. .. கோலாப்பூர் பொருள்காட்சிசாலை.
33. நாகபுரி .. .. மத்திய பொருளகாட்சிசாலை.
34. பூனா .. .. பாரதிய இதிஹாஸ சயம்ஷோதகா மண்டல பொருள்காட்சிசாலை
35. பூனா .. .. தக்காணக் கல்லூரி பட்டப் பிற்படிப்பு ஆராய்ச்சிக் கழகப் பொருள்காட்சிசாலை.
36. பிரபாஸ் பட்டண .. பிரபாஸ் பட்டண பொருள்காட்சிசாலை.
37. ராஜ்கோட் .. .. வாட்ஸன் பொருள்காட்சிசாலை.
38. சபர்மதி (ஆமதாபாத்). காந்தி ஸ்மாரக் சங்க்ரஹாலயா.
39. சேவாஷ்ராம் .. காந்தி ஸ்மாரக் சங்க்ரஹாலயா.
40. சூரத் .. சர்தார் வல்லபாய் பட்டேல் பொருட்காட்சி சாலை.
41. வல்லபாய் வித்யாநகர். சிற்பக் கலைப் பொருள்கள், பழங்காலப் புதைபொருள்கள் பொருள்காட்சிசாலை.

டில்லி

42. டில்லி .. .. பழங்கால புதைபொருள்கள் பொருள் காட்சி சாலை, செங்கோட்டை.
43. டில்லி .. .. இந்திய யுத்தகால ஞாபகார்த்த பொருள் காட்சிசாலை.
44. புது டெல்லி .. காந்தி ஸ்மாரக் ஸங்க்ரஹாலயா.
45. புது டெல்லி .. தேசிய நவீன கலைப பொருள்கள் காட்சிக் கூடம்.
46. புது டெல்லி .. இந்தியப் தேசிய பொருள்காட்சிசாலை.

ஹிமாசலப் பிரதேசம்

47. சம்பா .. .. பூரி சிங் பொருள்காட்சிசாலை.

ஜம்மு, காஷ்மீர்

48. ஜம்மு .. .. தோகரா கலைப் பொருள் காட்சிக்கூடம்.
49. ஸ்ரீநகர் .. .. எஸ். பி. எஸ். அரசினர் பொருள்காட்சி சாலை.

கேரளா

50. திருச்சூர் .. .. பழங்கால புதைபொருள்கள் பொருள்காட்சி சாலையும ஓவியக்கூடமும.
51 திருச்சூர் .. .. சமஸ்தான பொருள்காட்சிசாலையும், உயிரினங்களின் பூங்காவும்
52. திருவனந்தபுரம் .. அரசினர கலைப்பொருள் காட்சிக்கூடம் (ஸ்ரீ சித்ராலயம்).
53. திருவனந்தபுரம் .. அரசினர் பொருள்காட்சிசாலை.

மத்யப் பிரதேசம்

54. பில்ஸா விதிஷா .. விதிஷா பொருள்காட்சிசாலை.
55. போபால் .. .. மத்திய பொருள்காட்சிசாலை.
56. தார் .. .. மாவட்ட பழங்காலப் புதைபொருள் பொருள் காட்சிசாலை.
57. குவாலியர் .. .. பழங்காலப் புதை பொருள் பொருள்காட்சி சாலை, குவாலியா கோட்டை.
58. குவாலியர் .. .. சமஸ்தான பொருள்காட்சிசாலை, ஜம்னுபாக்.
59. இந்தூர் .. .. மத்திய பொருள்காட்சிசாலை.
60. காஜுராஹோ .. .. பழங்கால புதைபொருள் பொருள்காட்சி சாலை.
61. நவ்காங் .. .. சமஸ்தான பொருள்காட்சிசாலை, துபேலா அரண்மனை.
62. ராய்ப்பூர் .. .. மஹந்த் காசிலால் ஞாபகார்த்த பொருள் காட்சிசாலை.
63. சௌகார் .. .. பழங்காலப் புதைபொருள் பொருள்காட்சி சாலை, சௌகார் பல்கலைக்கழகம்.
64. சாஞ்சி .. .. ஸ்தூபி
65. சோணகிரி .. .. திகம்பர் ஜெயின் பொருள்காட்சிசாலை.

சென்னை

66. சென்னை .. .. செயின்ட் ஜார்ஜ் கோட்டை பொருள்காட்சி சாலை.
67. சென்னை .. .. ர் பொருள் காட்சிசாலையும் தேசிய அரசினர் பொருள்கள் காட்சிக்கூடமும்.
68. மதுரை .. .. காந்தி ஸ்மாரக் சங்க்ரஹாலயா (காந்தி ஞாபகார்த்த பொருள் காட்சிசாலை).
69. மதுரை .. .. ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் தேவஸ்தான பொருள காடசிசாலை.
70. பத்மனாபபுரம் .. பழங்காலப் பொருள்கள் பொருள்காட்சி சாலை.
71. புதுக்கோட்டை .. அரசினர் பொருள்காட்சிசாலை.
72. ஸ்ரீரங்கம் .. .. ஸ்ரீரெங்கநாத சுவாமி வகையரு தேவஸ்தான பொருள்காட்சிசாலை.
73. தஞ்சாவூர் .. .. தஞ்சாவூர் சிற்பக்கலைப் பொருள்கள் காட்சிக் கூடம, அரண்மனைக் கட்டிடங்கள்.

மைசூர்

74. பெங்களூர் .. .. அரசினர் பொருள் காட்சிசாலை.
75. பிஜாபூர் .. .. பழங்காலப் புதை பொருள்கள் பொருள் காட்சிசாலை.
76. சித்ரதுர்க்கம் .. .. பக்கத்து எல்லைகளில் கிடைத்த பழங்காலப் பொருளகள் பொருள காட்சிசாலை.
77. தார்வார் .. .. கன்னட ஆராய்ச்சிக்கழக பொருள்காட்சி சாலை.
78. ஹம்பி .. .. பழங்கால புதைபொருளகள் பொருள்காட்சி சாலை
79. மங்களூர் .. .. அரசினர் பொருள்காட்சிசாலை, ஸ்ரீமந்தி பவன், பிஜாய்.
80. மங்களூர் .. .. மஹாத்மா காநதி பொருள்காட்சிசாலை, கனரா உயாநிலைப் பள்ளி.

ஒரிஸா

81. பாரிபாடா .. .. பாரிபாடா பொருள்காட்சிசாலை.
82. பெல்கந்தி .. .. பெலகநதி பொருள்காட்சிசாலை.
83. புவனேஸ்வரம் .. ஒரிஸா அரசினர் பொருள்காட்சிசாலை.
84. கிச்சிங் .. .. கிச்சிங் பொருள்காட்சிசாலை.

பஞ்சாப்

85. அமிர்தஸரஸ் .. சீக்கியர் மத்திய பொருள்காட்சிசாலை.
86. பாட்டியாலா .. மாகாண பொருள்காட்சிசாலை.
87. சிம்லா .. .. பஞ்சாப் அரசினர் பொருள்காட்சிசாலை.

ராஜஸ்தான்

88. அஜ்மீர் .. .. ராஜபுதன பொருள்காட்சிசாலை.
89. அல்வார் .. .. அரசினா பொருள்காட்சிசாலை அல்வார்.,
90. அம்பர் .. .. பழங்காலப் புதைபொருள்காட்சிசாலை.
91. பிகானீர் .. .. கங்கா பொன விழா பொருள்காட்சி சாலை.
92. பரத்பூர் .. .. சமஸ்தான பொருள்காட்சிசாலை.
93. பூண்டி .. .. தேசிய வம்ச பரம்பரைப் பாதுகாப்புக்கழக பொருள்காட்சிசாலை.
94. ஜெய்ப்பூர் .. .. அரசினர் மத்திய பொருள்காட்சிசாலை.
95. ஜலாவார் .. .. பழங்காலப் புதைபொர்ருள்கள் காட்சி சாலை.
96. ஜோதிபுரி .. .. சர்தார் பொருள்காட்சிசாலை.
97. கோட்டா .. .. பொருள் காட்சிசாலையும் சரஸ்வதி பந்தரும்.
98. ஸங்கிரீலா .. .. சோட்டுராம் பொருள்காட்சிசாலை.
99. சிகார் .. .. சிகார் பொருள் காட்சிசாலை.
100. உதயபுரி .. .. விக்டோரியா ஹால் பொருள்காட்சிசாலை.

உத்தரப் பிரதேசம்

101. அலஹபாத் .. .. அலஹபாத் பொருள்காட்சிசாலை.
102. கலபி .. .. மஹாத்மா காந்தி ஹிந்திசங்கரஹாலயா, ஹிந்தி பவன்.
103. ஹரித்துவார் .. குருகுல பொருளகாட்சிசாலை, குருகுல, கங்கிரி.
104. லஷ்மணபுரி .. சமஸ்தான பொருள்காட்சிசாலை.
105. மதுரா .. .. பழங்கால புதை பொருள்கள் பொருள் காடசிசாலை (கர்ஸன பழங்காலப் புதை பொருளகாட்சிசாலை).
106. சாரநாத் .. .. சாரநாத பொருள்காட்சிசாலை.
107. வாரணஸி .. .. பாரத் கலா பவன் சிற்பக் கலைப் பொருள்கள், பழங்கால புதைபொருள்கள் காட்சிசாலை, வாரணஸி இந்து பல்கலைக் கழகம்.

மேற்கு வங்காளம்

108. கல்கத்தா .. .. இந்தியா பொருள்காட்சிசாலை.
109. கல்கத்தா .. .. விக்டோரியா ஞாபகார்த்த ஹால் பொருள் காட்சிசாலை.
110. கல்கத்தா .. .. அஷுதோஷ் இந்திய சிற்பக்கலைப் பொருள்கள காட்சிசாலை.
111. கல்கத்தா .. .. நகராட்சி மன்ற பொருள்காட்சிசாலை.
112. கல்கத்தா .. .. ஏஷியாட்டிக் ஸொஸைட்டி பொருள்காட்சி சாலை.
113. கல்கத்தா .. .. பங்யே சாஹித்ய பரிஷத் பொருள்காட்சி சாலை.
114. கல்கத்தா .. .. குருசடே பொருள்காட்சிசாலை.
115. கந்தல்பாரா .. ரிஷி பங்கிம் நூல் நிலையமும் பொருள் காட்சிசாலையும்.
116. மால்டா .. .. பி. ஆர். ஸென பெர்ருள் காட்சிசாலை.
117. சாந்தி நிகேதனம் .. ரவீந்தர சாதனை (தாகூர் பொருள்காட்சி சாலை).
118. செரம்பூர் .. .. செரம்பூர் கல்லூரி பொருள்காட்சிசாலை.
119. தாம்லூக் .. .. ஹாமில்டன உயர் நிலைப் பளளி பொருள் காட்சிசாலை.

II

கல்வி, விஞ்ஞான பொருள்காட்சிசாலைகள்.

ஆந்திரப் பிரதேசம்

1. குண்டூர் .. .. வைத்தியக் கல்லூரி பொருளகாட்சி சாலைகள்.
2. ஹைதராபாத் .. சுகாதார பொருள்காட்சிசாலை.
3. விசாகபட்டணம் .. ஆந்திரா வைத்தியக் கல்லூரி பொருள் காட்சிசாலைகள்.

அஸ்ஸாம்

4. கௌஹத்தி .. அஸ்ஸாம் வனப் பொருள்கள் பொருள் காட்சிசாலை.

பம்பாய்

5. ஆமதாபாத் .. .. பி. ஜெ. வைத்தியக் கல்லூரி பொருள் காட்சிசாலை.
6. பரோடா .. .. நகராட்சி மன்ற சுகாதார பொருள் காட்சி சாலை.
7. பரோடா .. .. கல்லூரி பொருள் காட்சி சாலை.
8. பம்பாய் .. .. கிராண்ட் மெடிகல் கல்லூரி பொருள் காட்சிசாலை.
9. பம்பாய் .. .. செயின்ட் ஸேவியர் கல்லூரி பொருள் காட்சி சாலை.

10. பம்பாம் .. .. சேத் கோவர்த்தனதாஸ் சுந்தர்தாஸ் வைத்தியக் கல்லூரி பொருள்காட்சிசாலை.

11. ஷை .. .. வேல்ஸ் இளவரசர் பொருள் காட்சி சாலையிலுள்ள பம்பாய் இயற்கை வரலாற்று கழகத்தினர் பொருளகாட்சிசாலை.

12. பூனை .. .. பி. ஜே. வைததியக் கல்லூரி பொருள் காட்சிசாலைகள்.

டில்லி

13. டில்லி .. .. மக்கள் சமூக வளர்ச்சி விளக்க பொருள் காட்சி சாலை, டில்லி பல்கலைக் கழகம்.

14. புது டில்லி .. .. பொறியியல் பொருள்களகாட்சிசாலை.

15. ஷை .. .. விஞ்ஞான பொருள் காட்சி சாலை, தேசிய பௌதிக ஆராய்ச்சிக் கூடம்.

16. ஷை .. .. லேடி ஹேஸ்டிங்ஸ் வைத்தியக் கல்லூரி பொருள்காட்சிசாலை.

கேரளா

17. எர்ணாகுளம் .. உயிரினங்கள், தாவரங்கள் பொருள்காட்சி சாலை, மஹாராஜா கல்லூரி.

சென்னை

18. அண்ணாமலை நகர் .. உயிரினங்களின் பொருள்காட்சிசாலை, அண்ணாமலை பல்கலைக் கழகம்.

19. கோயம்புத்தூர் .. விவசாயக் கலலூரி பொருளகாட்சிசாலை.

20. ஷை .. .. காஸ் வனப்பொருளகள் பொருள்காட்சி சாலை.

21. சென்னை .. .. வைத்தியக் கல்லூரி பொருளகாட்சிசாலை.

22. ஷை .. .. பொறியியல் கலலூரி பொருளகாட்சிசாலை, ஜிண்டி.

23. ஷை .. .. ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி பொருள் காட்சி சாலை.

24. மண்டபம் கேம்ப் .. மத்திய சமுத்திர மீன் இனங்கள் ஆராய்ச்சி நிலையம விபர விளகக பொருளகாட்சி சாலை.

25. தாம்பரம் .. .. உயிரினங்களின் பொருள்காட்சிசாலை, சென்னை இறிஸ்துவ கலலூரி.

26. திருச்சிராப்பள்ளி .. செயின்ட் ஜோஸப் கல்லூரியிலுள்ள இயற்கை வரலாற்று பொருள்காட்சி சாலை.

மத்தியப் பிரதேசம்

27. சிந்த்வாரா .. .. மக்கள் இன ஆராய்ச்சிக் கழக பொருள் காட்சிசாலை.

28. சிவபுரி .. .. வட்டார வன இலாகா பயிற்சிப் பள்ளி பொருள்காட்சிசாலை.

மைசூர்

29. பெங்களூர் .. .. மத்திய கல்லூரி பொருள்காட்சிசாலை.

30. மைசூர் .. .. பலகலைக் கழக வைத்தியக் கல்லூரி பொருள்காட்சிசாலைகள்.

பஞ்சாப்

31. அமிர்தசரஸ் .. தாவர வர்க்கப் பொருள்காட்சிசாலை, பஞ்சாப் பல்கலைக் கழகம.

32. ஹோஷியார்பூர் .. உயிரினஙகளின் பொருள்காட்சிசாலை பஞ்சாப் பல்கலைக் கழகம்.

உத்தரப் பிரதேசம்

33. ஆக்ரா .. .. செயின்ட் ஜான்ஸ் கல்லூரி பொருள்காட்சி சாலை.

34. அலஹாபாத் .. .. பல்கலைக் கழக பொருள்காட்சிசாலைகள்.

35. டேராடூன் .. .. வன இலாகா ஆராய்ச்சிக் கழகம், கல்லூரி பொருள் காடசி சாலை.

36. ஷை .. .. நில அளவைக் கலை பொருள் காட்சி சாலை, இந்திய நில அளவு.

37. லக்ஷ்மணபுரி .. மாகாண சுகாதாரக் கழக பொருள் காட்சி சாலை.

38. ஷை .. .. பல்கலைக் கழக பொருள்காட்சிசாலை.

39. ஷை .. .. மோதிலால நேரு பாலர் சங்கரஹாலயம்.

மேற்கு வங்காளம்

40. கல்கத்தா .. .. வைத்தியக கல்லூரி பொருள்காட்சிசாலை.

41. ஷை .. .. உஷ்ணப் பிரதேச மருந்துகள் பள்ளிக்கூட பொருள்காட்சிசாலை.

42. ஷை .. .. ஆர். ஜி. கார் வைததியக் கல்லூரி (வியாதிகளின் தனமை, காரணங்கள், அவற்றிற் குரிய மருந்துகள் முதலிய விளக்கங்களையுடைய) பொருள்காட்சிசாலை.

43. டார்ஜிலிங் .. .. இயற்கை வரலாற்று பொருள்காட்சிசாலை.

III

தொழில், வர்த்தகம் சம்பந்தப்பட்ட பொருள்காட்சி சாலைகள்.

அஸ்ஸாம்

1. கௌஹத்தி .. வர்த்தகப் பொருள்காட்சிசாலை, கௌஹத்தி பலகலைக் கழகம், ஜாலுகாபரி.

2. ஷை .. .. குடிசைத் தொழில்கள் பொருள்காட்சி சாலை.

பம்பாய்

3. ஆமதாபாத் .. .. துணி வகைகளில் காலிகோ துணி பொருள் காட்சிசாலை.

4. பூனை .. .. லார்டு சிவே மஹாராஷ்டிர தொழில் பொருள்காட்சிசாலை.

டில்லி

5. புது டெல்லி .. கை நூற்பத்திறன் கலைப் பொருள்கள் காட்சிசாலை.

கேரளா

6. திருவனந்தபுரம் ஸ்ரீமூலம் ஷஷ்டியப்தபூர்த்தி ஞாபகார்த்த கழக பொருள்காட்சிசாலை.

சென்னை

7. சென்னை .. .. மததிய கைத் தொழில் பொருள்காட்சி சாலை.

8. ஷை .. .. விக்டோரிய தொழில் பயிற்சிக்கூடம்.

ராஜஸ்தான்

9. பிலானி .. மத்திய பொருள்காட்சிசாலை.

மேற்கு வங்காளம்

10. கல்கத்தா .. .. பிர்லா கைத்தொழில், தொழில் துறை பொருளகாட்சிசாலை.

11 ஷை .. .. கலைப் பொருளகள்காட்சிசாலை.

12. ஷை .. .. அரசினா தொழில். வர்த்தகப் பொருளகாட்சிசாலை.

இந்தியக் காட்சிச்சாலைகள்

காட்சிச் சாலைகளின் தோற்றமும் வளர்ச்சியும்.

இந்தியாவின் காட்சிச்சாலைகளின் வரலாற்றை அறிய, 1784-ல் சர் வில்லியம் ஜோன்ஸ் என்ற சிறந்த அறிஞர் ஆரம்பித்த வங்காளத்து ஆசியச் சங்க வரலாற்றிலேயே ஆரம்பிக்க வேண்டும். அந்த சங்க அங்கத்தினர்கள் பல வருஷங்களாகச் சேகரித்து வைத்திருந்த அபூர்வப் பொருள்களை எப்படிப் பதனப்படுத்துவது என்பதே அந்தச் சங்கத்தின் பிரச்சினையாய் இருந்திருக்கிறது. 1796, 1814-ல், டேனிஷ் தாவர ஆராய்ச்சியாளர் டாக்டர் வாலிச்சு, ஒரு காட்சிச் சாலை அமைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். அந்தக் காட்சிச் சாலையின் கௌரவ காவலராகத் தாம் வேலை செய்வதாகவும் ஒப்புக்கொண்டார். தாம் சேகரித்து வைத்திருந்தவைகளின் பிரதிகளைக் கொடுத்து உதவவும் முன் வந்தார். அவருடைய ஆலோசனையைச் சங்கம் ஒப்புக்கொண்டு காட்சிச்சாலை இரண்டு பிரிவாய் ஆரம்பிக்கப்பட்டது. ஒன்று, புதைபொருள் மக்கள் இனம் இலாக்கா; மற்றொன்று, பூதத்துவ விலங்கின இலாக்கா. காட்சிச்சாலை வளர ஆரம்பித்து, 1896-ல் சங்கத்தின் நிதிநிலைமை திருத்தியாக இல்லாததால், சர்க்காரிடம் நிதிக்கு விண்ணப்பித்தது. 1839 வரை திரும்பத் திரும்ப விண்ணப்பித்துக்கொண்டது காரணமாகக் கிழக்கு இந்தியக் கம்பெனியின் டைரக்டர்கள், காட்சிச்சாலையை நிர்வஹிக்க ஒரு தொகையைத் தந்து உதவினார்கள். விசேஷ காரியங்களுக்காக, அவ்வப்போது மானியங்கள் கொடுக்கவும் சர்க்கார் அனுமதித்தது.

பொருளாதார பூதத்துவதைப் பற்றிய காட்சிச்சாலை கல்கத்தாவில் 1840-ல் திறக்கப்பட்டது. அதைச் சங்கக் கட்டடத்திலேயே முதலில் வைத்திருந்தார்கள். பிறனர்தான் பூதத்துவ நிர்ணய சபைக் கட்டடத்திற்கும் அதன் பின்னர் அரசாங்கக் காட்சிச்சாலைக்கும் கொண்டுபோயிருக்கிறார்கள். பூதத்துவம், விலங்கினம், புதைபொருள் முதலிய பல காட்சிப்பொருள்களை எங்கு வைப்பது என்பதைப்பற்றிச் சங்கத்திற்கும், சர்க்காருக்கும் நீண்டகாலமாகக் கடிதப்போக்கு வரத்து நடந்திருக்கின்றன. பேரரசு காட்சிச்சாலைக் கட்டடம் (Imperial Museum) 1875-ல்தான் கட்டி முடித்திருக்கிறது. கைத்தொழில, கலைப் பிரிவுகளில் காட்சிப் பொருள்களுக்குப் புதிய கூடங்கள் அமைக்க, புதிய கட்டடங்களை கட்டிச் சேர்த்திருக்கிறார்கள். 1904-ல் இந்தக் காட்சிச்சாலை தருமகர்த்தர் கூட்டத்துக்குத் தலைவராயிருந்த சர் ஹெர்பர்ட் ரிஸ்லி எனபவர் காலத்திலேதான் காட்சிச் சாலையை, பூதத்துவம், விலங்கினம், மக்கள் இனம், புதைபொருள், கலை, கைத்தொழில் என்று ஐந்து பிரிவுகளாக்கவேண்டும் என்று திட்டமிடப்பட்டது.

சென்னையில் ஒரு காட்சிச்சாலை நிறுவிக்க 1819-லேயே முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. சென்னை இலக்கியக் கழகம் (லண்டன் ஆசிய சங்கத்தின் ஒரு கிளையாக) வேலை தொடங்கி 1828-ல் பொருளாதார பூதத்துவ சம்பந்தமான பொருள்களைச் சேகரிக்க ஆரம்பித்திருக்கிறது. 1843-ல் சங்கம் இக்காட்சிச்சாலை அமைக்கச் சர்க்காரின் அனுமதி கோரியிருக்கிறது. கிழக்கு இந்தியக் கம்பெனி நிர்வாகிகள், மத்தியப் பொருட்காட்சிச்சாலையைச் சென்னையில் அமைக்க அனுமதி தந்தனர். 1850-ல் உதவி ரணவைத்தியராக இருந்த எட்வர்ட் கிரீன் பால்பர், இந்தக் காட்சிசாலை காவலராகப் பணியாற்ற முன் வந்தார். இக்காட்சிசாலை விரைந்து வளர வேலை செய்தவர் அவரே. சென்னை தவிர, பங்களூர், திருச்சி, பெல்லாரி, கோயம்புத்தூர், கடலூர், உதகமண்டலம், செக்கந்தராபாது, மங்களூர் முதலிய இடங்களிலும் சிறு காட்சிச்சாலைகள் அமைக்கத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டவரும் அவரே. இப்படி ஆறு காட்சிசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவைகளில் ராஜமகேந்திரத்தில் உள்ளதைத் தவிர மற்றவைகள எல்லாம் 1861-லேயே மூடப்பட்டன.

1851-ல் டாக்டர் எர்க்ஸ்கின் என்பவரால், விக்டோரியா ஆல்பர்ட்டுச் சாலை நிறுவப்பட்டது.

ஆசியாவில், இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட மிகப் பழைய மருத்துவக் காட்சிச்சாலை, பம்பாயிலுள்ள கிராண்ட் மெடிக்கல் கல்லூரிக் காட்சிச்சாலைதான். கலைக்கூரி ஆரம்பித்த சில வருஷங்களுக்குள்ளேயே 1845-ல் இந்தக் காட்சிச்சாலையை ஆரம்பித்திருக்கிறார்கள். காட்சிச்சாலைப் பொருள்களுக்கு 1850-லேயே பட்டியல் தயாரித்திருக்கிறார்கள்.

1857-ல் ஜெனரல் காலின்ஸ் திருவனந்தபுரத்தில் ஒரு காட்சிச்சாலை ஆரம்பித்திருக்கிறார்.

பம்பாயில் காட்சிச்சாலை அமைக்க 1848-ல் எண்ணியிருந்தார்கள். 1851-ல் லண்டனில் நடத்திய பெரிய பொருட்காட்சிக்குப் பொருள்கள் சேகரிக்கும் முயற்சி தீவிரமாக நடந்ததால் 1857-ல், பொருளாதார சம்பந்தமான பொருள்களைச் சேகரித்து டாக்டர் பூயிஸ்து என்பவரது முயற்சியால் ஒரு காட்சிச்சாலை உருவாகியிருந்தது ஆனால், சிப்பாய் கலகம் காரணமாக இந்தக் காட்சிச்சாலையின் அமைபபுத் தடைபட்டிருந்தது. காட்சிச்சாலைக் கட்டடம், சிபபாய்கள் தங்குமிடமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. கடைசியாக 1871-ல் இன்றைய விக்டோரியா ஆல்பர்ட்டுக் காட்சிச்சாலைக் கட்டடம் கிடைத்தது, காட்சிச்சாலை திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டது.

லக்ஷ்மணபுரியிலும், நாகபுரியிலும் 1863-லேதான் காட்சிச்சாலைகள் அமைக்கப்பட்டன. அதற்கு அடுத்த ஆண்டிலேயே லாகூரில் ஆரம்பித்தார்கள். பங்களூரில் இருக்கும் மைசூர் சர்க்கார் காட்சிச்சாலை 1865-லேதான் உருவாகியது. மதுராக காட்சிச்சாலையோ, 1874-ல்தான் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த ஆண்டில ரெய்ப்பூர் காட்சிச்சாலை தொடங்கப்பட்டது. 1888-ல் ராஜ்காட் காட்சிச்சாலையும் அதற்கும் பத்து வருஷங்கள் கழித்தே ஸ்ரீநகரில் காட்சிச்சாலையும் தோன்றின.

புதிய காட்சிச்சாலைகள் ஆரம்பிக்க மகாராணியின் ஜூபிலி கொண்டாட்டத்தின் உதவி

1887-ல் விக்டோரியா மகாராணியின் ஜூபிலி கொண்டாட்டம் நடந்தது. இந்தியாவில் மாத்திரம் அல்லாமல், பிரிட்டிஷ் பேரரசு முழுவதுமே பல காட்சிச்சாலைகள் தோன்றும் புதிய சகாப்தத்தையே உருவாக்கியிருக்கிறது. பல புதிய காட்சிச்சாலைகள் இந்தியாவில் ஆரம்பித்தது இப்போதுதான். சென்னையில் விக்டோரியாத் தொழில் துறை நிலையம், கல்கத்தாவில விக்டோரியா நினைவு மண்டபம், இவை தவிர, ஜெய்ப்பூர், உதயப்பூர், ராஜ்காட், விஜயவாடா முதலிய இடங்களிலும் காட்சிச்சாலை அமைக்கப்பட்டிருக்கின்றன.

லார்டு கர்சான் முயற்சிகள்

இப்படி எல்லாம் காட்சிச்சாலைகள் வளர்ந்திருந்தாலும், இந்த நாட்டிலே காட்சிச்சாலைகள் அமைப்பதில் வேகம் அதிகரித்தது லார்டு கர்சான் அவர்களது காலத்திலேதான், அவருடைய உற்சாகத்திற்குக் கொஞ்சமும் குறையாத உற்சாகத்துடனேயே அப்போது புதைபொருள் துறை டைரக்டராய் இருந்த சர் ஜான் மார்ஷல் வேலை செய்திருக்கிறார். 1902 முதலே, காட்சிச்சாலை வரலாற்றிலே புதிய சகாத்தம் ஆரம்பித்திருகிறது. பிராந்தியக் காட்சிச்சாலைகள் பல அமைப்பதற்குப் புதைபொருள் துறை உதவியிருக்கிறது. பத்து வருஷ காலத்திற்குள் அஜ்மீர், பரிபாடா, சம்பா, ஜோத்பூர், கஜூலாஹோ, குவாலியர், பீஜப்பூர, டாக்கா முதலிய இடங்களில் காட்சிச்சாலைகள் தோன்றுவதற்கெல்லாம் தலராஊக்கம் அளித்தவர் சர் ஜான் மார்ஷலே. சாரநாத்தில் புதை பொருள் காட்சிச்சாலை ஒன்றை அமைக்கவும், புது டில்லியில் மத்திய ஆசியப்பழம்பொருட்காட்சிச்சாலை அமைக்கவும் காரணமாயிருந்தவரும அவரே மேலும், கர்சான் தந்த ஊக்கமே வங்காளத்தில் உள்ள மால்டாவிலும், பம்பாயில் உள்ள பீஜப்பூரிலும், ஆகராவில் உள்ள தாஜல், தார், பிஷாவர் முதலிய இடங்களிலும் காட்சிச்சாலைகள் அமைக்க உதவியது.

பம்பாயில் வேல்ஸ் இளவரசர் காட்சிச்சாலை 1904-லேயே ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தும், அதற்கென்று சர்க்காரும் வீரும்பாய் இப்ராஹிம் போன்ற பெருமக்களும் நிறைய மானியங்கள் வழங்கியும், 1914-லேதான் கட்டடம் கட்டி முடிந்தது. பின்னரும் அதில் யுத்தகாலத்து மிலிடெரி ஆஸ்பத்திரி வைத்திருந்தது காரணமாகக் காட்சிச்சாலைக்கு அக்கட்டடம் 1921-லேதான் கிடைத்தது. அதன் பின்னரே, ராயல் ஆசியக் கழகம் மக்கள் வளர்ச்சிச் சங்கம், பம்பாய்ப் பிரகிருதி சாத்திரக் கழகம் முதலியவைகள் சேகரித்து வைத்திருந்த பொருள்களும், அ ற்றுடன் டாட்டா சேகரித்து வைத்திருந்த பொருள்களும் காட்சிச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டன மேற்குப் பிராந்தியப் புதைபொருள் இலாக்காக்காரர்கள் சேகரித்த பொருள்கள் எல்லாம் அக்காட்சிச்சாலையில் இடம் பெற்றன.

நிலைத்த காட்சிச்சாலைகள்

நீலேபெற்ற காட்சிச்சாலைகளில் சாரநாத்துக் காட்சிச்சாலை 1904-லேயே வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. நாலந்தாக் காட்சிச்சாலை 1917-ல் தான் ஆரம்பிகப்பட்டிருக்கிறது. எழு வருஷங்கள் கழித்தே, மொஹஞ்சோதாரோவில் காட்சிச்சாலை தோன்றியிருக்கிறது. அதைத தொடர்ந்தே ஹாரப்பா, தக்ஷசீலம் முதலிய இடங்களிலும், இரண்டு வருஷத்தில் காட்சிச்சாலைகள் உருவாகி இருக்கின்றன. இவையெல்லாம் சர். ஜான் மார்ஷலின் மூயறசியால உருவானவை. பதினேழு வருஷங்களுக்கு முன்புதான் நாகார்ஜுன கொண்டாவிலும், அதற்குப் பிந்தியே ஐதராபாதில் கொண்டப்பூரில், ஹம்பியில், அமராவதியில எல்லாம் காட்சிச்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஐதராபாது ராஜ்ய புதைபொருள் இலாக்கா 1952-ல் ஆலம்பூரில் பல சிற்ப வடிவங்களைச் சேகரித்து ஒரு மண்டபத்தில் நிறுவியிருக்கின்றது. இந்த நிலைத்த காட்சிச்சாலை, ஆந்திரப் பிரதேசச் சர்க்காரின் கண காணிப்பில் இருக்கிறது. கஜுராஹோவில் உள்ள திறந்த வெளிக் காட்சிச்சாலை மத்திய புதைபொருள் இலாக்காவின் நிர்வாகத்திற்குச் சமீபத்திலேதான் வந்திருக்கிறது. இதே இலாக்காவினர் புத்தகயாவில் உள்ள காட்சிச்சாலையை விரிவாக்கி இருக்கினறனர். இது 1956-ல் நடந்த புத்த ஜயந்தியை ஒட்டி நடந்திருக்கிறது. இநத நிலைத்த காட்சிச்சாலைகளில் ஒன்றாக ஸ்ரீரங்கப்பட்டணத்தில் திப்புவின் ஞாபகார்த்த சின்னங்கள் சேகரிக்கப்பட்டு ஒரு புதிய காட்சிச்சாலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

மற்றச் சமஸ்தானக்காட்சிச் சாலைகள்

பல சமஸ்தான சர்க்கார்கள் ஆங்காங்கே, அவற்றின் ஆடசியில் உள்ள இலாக்கா அங்கத்தினர் சேகரித்துக் கொடுத்த தவைகளை வைத்துப் பல காட்சிச்சாலைகளை அமைத்திருக்கின்றன. அப்படி உருவானவைகளே இந்தூர், ஐதராபாது, ஹிமத் நகர், ஜாம் நகர், கொல்ஹாபபூர், பத்மநாபபுரம், ரேபா (இன்றைய நவகாங்) முதலியவை. இவை எல்லாம் 1921-க்கும் 1947-க்கும் இடைபிட்ட காலத்தில் தோன்றியவை.

நகராட்சி மன்றத்தார் (முனிசிபல் கார்ப்பரேஷன்) ஆதரவில் நடக்கும் காட்சிச் சாலைகள்

சில நகரங்கள், சில பட்டணங்களில் உள்ள நகராட்சி மன்றங்கள், காட்சி சா அமைப்பில் மிகுந்த அக்கறை காட்டி, அவைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியிருக்கின்றன. அவற்றில் ஒன்றே பமபாய் வேல்ஸ் இளவரசர் காட்சிச்சாலை. நகராட்சி மனறத்தார் இதோடு விக்டோரியா ஆல்பர்ட்டுக்காட்சிச்சாலை ஒன்றை ஆரம்பிகவும் மிகுந்த உற்சாகம் காட்டியிருக்கிறார்கள நிரம்பச் சேகரித்த பொருள்களோடு தொடங்கிய அல பாது காட்சிச்சாலை ஒரு பெரிய கட்டடத்தில் இருக்கிறது. அதை அலகபாது நகராட்சி மன்றத்தாரே நிர்வகிக்கிறார்கள். பூனா நகராட்சி மன்றத்தார், 1929-ல் புதிய பெம்பூட்டப்பட்ட லார்டு ரீயே மராத்திய கைத்தொழில் காட்சிச்சாலை நிர்வாகத்திற்கு பெரும்பொருள் கொடுத்து உதவி இருக்கிறார்கள. ஆரம்பத்திலே தொழிற்காட்சிச்சாலையாக ஆரம்பிக்கப்பட்ட கல்கத்தா நகராட்சிக காட்சிச்சாலை இப்போது ஒரு சுகாதார விளக்கக் காட்சிச்சாலையாக மாறி இருக்கிறது. இதைப் போன்று மற்றொரு சுகாதாரக் காட்சிச்சாலை பரோடா நகராட்சியினரால் நடத்தப்படுகிறது. இரண்டே வருஷத்திற்கு முன் அழகான பெரிய கட்டடம் ஒன்று கட்டி, அதில் ஒரு காட்சிச் சாலையை அமைத்து மற்ற நகராட்சி மன்றத்தார்க்கே வழி காட்டியிருக்கிறது. அந்த அகமதாபாது நகராட்சி மன்றம் காட்சிப பிமாணத்தாலே கல்வி புகட்டும் முயற்சியில் ஈடுபட்டு, காட்சிச்சாலைகள் அமைத்த நகராட்சிகளைப்பற்றிய ஒரு சில தகவல்களே இவை.

சங்கங்களும் தனிப்பட்ட பெரியோர்களும் அமைத்துள்ள காட்சிச் சாலைகள்

மேலே குறிப்பிட்ட காட்சிச்சாலைகளைத் தவிர, இன்னும் பல காட்சிச்சாலைகள், சங்கங்களும் தனிபபட்ட பெரியார்களும் எடுத்துக்கொண்ட முயற்சியால உருவாகி இருக்கின்றன. பூனாவில் உள்ள பாரத இதிகாச சமசோதக மண்டலம், அப்படி உருவான காட்சிச்சாலைகளில் ஒன்று. கௌகதியில் காமரூப அனுசந்தான சமிதியார் உருவாக்கிய காட்சிச்சாலையே பின்னர் அரசாங்கக் காட்சிச்சாலையாகி இருக்கிறது. ஒரு பெரிய கல்லூரியின் சரித்திரப் பிரிவின் சங்கத்தார் தோற்றுவித்த ஒரு காட்சிச்சாலை பின்னர் அரசாங்கக் காட்சிச்சாலையாக மாறிற்று என்பது வியத்தற்குரியதுதான். ஆனால், இந்த வியததற்குரிய காரியமே ஒரிஸ்ஸாவில் நடநதிருக்கிறது. ராவனஷா கல்லூரி சரித்திர சங்கத்தார் ஆரம்பிதத காட்சிச்சாலையின் பொருள்களை வைத்தே புவனேஸ்வரதில் அரசாங்கக் காட்சிச்சாலை வளர்ந்திருக்கிறது. 1910-ல் திறக்கப்பட்ட பங்கிய சாஹித்திய பரிஷத் காட்சிச்சாலையும் இப்படி உருவான தொன்றே.

திகாபாதி யா குமார் சரத்குமார் ராயின் தளரா முயற்சியால் உருவானதே வரேந்திர ஆராய்சசிக் கழகத்தார் நிறுவிய காட்சிச்சாலை. இப்போதிருக்கிற இடதிறகு இக்காட்சிசசாலை 1919-ல் வந்திருக்கிறது.

1919-ல் வாரணசியில் பாரத் கலா பவனத்தைச் சேர்ந்த ராய் கிருஷ்ணதாஸரின் முயற்சியாலேயே, ஒரு நல்ல கலைக் காட்சிச்சாலை நிறுவப்பட்டிருக்கிறது. அலகபாத் நகராட்சி மன்றத்தாரது காட்சிச்சாலை B. M. வியாஸ் எ பவர் சேகரித்து வைத்திருந்த பொருள்களை வைத்தே முதலில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மதனப்பள்ளி பிரம்மஞான சபைக் கல்லூரி காட்சிசாலை, டாக்டர் J. H. கவின்ஸ் முயற்சியால் உருவானதே. இதைப் போலவே புனித சேவியர் கல்லூரி இந்திய சரித்திர ஆராய்ச்சிக் கழகதினது காட்சிச்சாலையும் ரெவ. H. ஹீராஸ், S. J. என்பவரது முயற்சியால் உருவானதே.

சர்வ கலாசாலைக் காட்சிச் சாலைகள்

புதைபொருள் துறையினர் சேகரித்த பொருள்களைக் கொண்டு, சர்வகலாசாலையார் காட்சிச்சாலை அமைத்துக் கொள்வது மைசூரில் சாத்தியமாய் இருந்திருக்கிறது. நீண்ட காலமாகப் புதைபொருள் இலாக்கா டைரக்டரே, இதைக் கண்காணித்து வந்திருகிறார் எனறாலும், முதன் முதல் சர்வகலாசாலையார் காட்சிச்சாலை நிர்மாணித்தது கல்கத்தாவிலேதான். கல்வி, கலாசாரத்தின பாது காவலராய் அமைந்த பெரியார் சர் அசுடோஷ் முகர்ஜியின் பெயரால் அந்தக் காட்சிச்சாலை அமைக்கப்பட்டிருகிறது. இந்தக் கல்கதாச் சர்வகலாசாலையைப் பினபற்றிய மறறைய சர்வகலாசாலைகளும், காட்சிச்சாலைகள அமைக்க ஆரம்பித்திருக்கின்றன. இப்படித்தான அலகபாது சர்வகலாசாலையில் கௌசாம்பிக் காடசிச்சாலையும் ஹரித்துவார் குருகுல சர்வகலாசாலையில் மற்றொரு காட்சிசாலையும் உருவாகியிருக்கிறன. இப்போது வாரணசி சர்வகலாசாலை பாரத கலாபவனத்தின் காடசிச்சாலையை ஏற்று நிர்வகிக்க முன் வந்திருகிறது. வல்லப விததியாநகர் சர்வகலாசாலையிலும, சாகர் சர்வகலா

சாலையிலும் பழம்பொருள் சேகரிக்கப்படடு, காட்சிச்சாலைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. மக்கள் இன வீளக்கம் சம்பந்தமான காட்சிச்சாலை டில்லி, கௌகத்தி சர்வகலா சாலைகளில் இன்று இருக்கிறது. சமீப காலத்தில், புதை பொருள்களை அகழ்ந்து எடுப்பதிலும் ஆராய்வதிலும், பல கழகங்கள் அக்கறை காட்டி வருகின்றன. அதன் பலனை வைசாலி, கயா, திருப்பதிச் சர்வகலாசாலைகளில் காட்சிச்சாலை கள் வளர்ந்திருக்கின்றன. திருப்பதியில் உள்ள வேங்கடேஸ்வரன் காட்சிச்சாலை, சர்வகலாசாலையின் காட்சிச்சாலை மட்டு மன்றி, அதுவே ஒரு பெரிய கோயில் காட்சிச்சாலையாகவும் இருக்கிறது. பூனாவில் தக்காணத்து ஆராய்ச்சிக் கல்லூரியைச் சேர்ந்த காட்சிச்சாலையும், தார்வார் கன்னட ஆராய்ச்சிக் கழகத்தின் காட்சிச்சாலையும், புதைபொருள் அகழ்ந்து எடுத்தது காரணமாகக் கிடைத்த பழம்பொருள்கள் பலவற்றைச் சேகரித்து வைத்திருக்கின்றன. இதைப் போலவே, பரோடா சர்வகலாசாலையும் கிடைத்த பொருள்களை அலங்காரமாக அடுக்கி வைத்திருக்கின்றது.

சமீபத்தில் கௌகத்தியில் வர்த்தக சம்பந்தமான ஒரு காட்சிச்சாலையை, அங்குள்ள சர்வகலாசாலை உருவாக்கி இருக்கிறது. சர்வகலாசாலையார் உருவாக்கிய வர்த்தக சம்பந்தமான காட்சிச்சாலை இந்தியாவில் இது ஒன்றுதான்.

விஞ்ஞான சம்பந்தமான விஷயங்களைக் கற்பதற்கு எளிதாக இருக்கும்படி, சர்வகலாசாலையில் உள்ள பல பிரிவுகளில் அவரவர்கள் பாட சம்பந்தமான பொருள்களைச் சேகரித்துக் காடசிச்சாலைகள் நிறுவியிருக்கிறார்கள். இப்படியே, மருத்துவ சம்பந்தமான பல பிரிவுகளுக்கும் பொறி இயல் சம்பந்தமான பல பிரிவுகளுக்கும் காட்சிச்சாலைகள் இருக்கின்றன. மருத்துவக் கல்லூரிகளும் பொறி இயல் கல்லூரி களும் அவரவர்களுக்குச் சமபந்தப்பட்ட பாடங்களை விளக்குவதற்கெனக் காடசிச்சாலைகளை ஆரம்பித்திருக்கின்றன. அங்கெல்லாம் உடற்கூறு நோய்க்கூறு சுகாதாரம் முதலியவை களைப்பற்றிய காட்சிப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

வனம், விவசாயக் காட்சிச்சாலைகள்

டேராடூனில் உள்ள வனக் கல்லூரியில் அழகான ஒரு காடசிச்சாலை இருக்கிறது. மரம், மரம் வளர்த்தல், காடடில் கிடைக்கும் விலைபொருள்கள், பூச்சி, புழுக்கள் பற்றி யெலாம் பலபல பகுதிகளாக இக்காட்சிச்சாலை பிரிக்கப் பட்டிருக்கிறது. இந்த வனக் கல்லூரி ஆராய்ச்சிப் பள்ளி யின் காட்சிச்சாலைக் கட்டடம் இந்தியாவில் மாத்திரம் அன்றி ஆசியாவிலேயே சிறந்ததொரு கட்டடம். டேரா டூனில் இந்த வனக் கல்லூரி 1878-லேயே ஆரம்பிக்கப் பட்டிருந்தாலும், வன ஆராய்ச்சிக் கழகத்தை 1914-ல் ஆரம்பித்தபோதுதான், இந்த ஆராய்ச்சி நிலைய வேலைகள் துரிதமாக்கப்பட்டு, இக்காட்சிச்சாலையும் உருவாகப்பட்டிருக் கிறது.

கோயம்புத்தூர் காஸ் வனக் காட்சிச்சாலை 1902-லேயே ஆரம்பிக்கப்பட்டது. அது ஸ்ரீ. H.A. காஸ் என்பவரது பெரு முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டதால் அவர் பெயரைத்தாங்கி யிருக்கிறது. அவர் வேலையிலிருந்து ஓய்வு பெறுமுன் கட்டடமும் கட்டி முடிந்துவிட்டது.

விவசாயம், அதை ஒட்டிய சாஸ்திர ஞானம் இவைகளை விளக்க 1909-ல். விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கழகத் தின் ஒரு பகுதியாக விவசாயக் காடசிசாலை ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. பூதத்துவம், விவசாயக்கருவிகள், நிலத் தின் தனமை, உரங்கள் மற்றும் விவசாயம், தாவரம், விலங்குகள், பூச்சி புழுக்கள் என்னும் விவசாய சம்பந்த மான பொருள்களே இக்காட்சிச்சாலையில் நிறைந்திருக் கின்றன.

பொறி இயல் காட்சிச் சாலைகள்

சென்னையை அடுத்த கிண்டியில் உள்ள பொறி இயல் கல்லூரியில் பொறி இயல் மாணவர்களுக்கு மிகவும் அவசிய மான மாதிரிப்பொருள்கள் நூற்றுக்கணக்காகச் சேகரிக் கப்பட்டு அங்குள்ள காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. பொறி இயலின் பல பிரிவுகளில சேர்ந்து கற்கும் மாணவர் களுக்கென நன்முறைப் பராமரிக்கப்பட்ட விரிவான வேலைக் கூடமும் நிறுவி இருக்கிறார்கள். டில்லியில் சமீபத் தில் ஆரம்பிக்கப்பட்ட பொறி இயல் காட்சிச் சாலையில், நதி களில் கட்டிய அணைத்திட்டங்கள், அவைகளை விளக்கும் சிறிய அளவில் செய்து காட்டியிருக்கும் மாதிரிக் கட்ட டங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. நீர்ப்பாசனம் மின்சாரம் முதலியவை நாட்டில் எப்படி வளர்ச்சியுற்றிருக் கின்றன என்பதை இவை நன்கு காட்டுகின்றன.

மருத்துவக் காட்சிச் சாலைகள்

பம்பாய் கிராண்ட் மெடிக்கல் கல்லூரியில் உள்ள நோய்க் கூறு காட்சிச் சாலைதான் இந்தியாவிலுள்ள புராதனமான காட்சிச் சாலை. அது 1845-லேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கிருகும் பொருள்களின் பட்டியல் 1850லேயே தயாரிக் கப்பட்டிருக்கிறது. மருத்துவ சம்பந்தமான பல பிரிவுகளுக் கும் உரிய காடசிச்சாலைகள் நாடு முழுவதும் வளர்ந்து வருகின்றன. பம்பாயில் கிராண்ட் மெடிக்கல் கல்லூரியின் நோய்க்கூறு காட்சிச் சாலையும் 1903-லேயே உரு வாக்கப்பட்டிருக்கிறது. சென்னை மருத்துவக் கல்லூரியின் நோய்க் கூறு காட்சிச் சாலையும் 1908-லேயே ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. சுகாதாரம், பூச்சி புழுக்கள் சம்பந்தமான பிரிவுகள் முறையே 1928-லும் 1952 லுமாக ஆரம்பிக் கப்பட்டிருக்கின்றன. கல்கத்தா மருத்துவக் கலலூரியின் நோய்க்கூறு காட்சிச் சாலையில் 1823-லிருந்தே சேகரிக்கப் பட்ட பொருள்கள் இருக்கின்றன. டாக்டர் ஆலன் வெப் என்பவரே 1849-ல் இக்காட்சிச்சாலையின் காவலராய் இருந்திருக்கிறார். அவர் காலத்தில் உயர்ந்த பொருள்கள் பல இக்காட்சிசசாலையில் இடம் பெற்றிருக்கின்றன.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி ஆரம்பித்ததுமே நோய்க் கூறு காட்சிச்சாலையையும் 1923லேயே ஆரம்பித்திருக்கிறார்கள் அங்கக்கூறு சுகாதாரம மருந்து வகைகள் பற்றிய காட்சிச் சாலையோ 1950-லேதான் உருவாகியிருக்கிறது.

பம்பாயில் சேத் கோவர்த்தனதாஸ்—சுந்தர்தாஸ் மருத்து வக கல்லூரியின் அங்கக்கூறு, நோய்க்கூறு காட்சிச்சாலைகள் முறையே 1925, 1926-ஆம் ஆண்டுகளிலதான் ஆரம்பிக்கப் பட்டன டில்லி லேடி ஹார்டிஞ் மருத்துவக் கல்லூரி காட்சிச்சாலை 1917-ல் தோன்றியிருக்கிறது. சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் அங்கக்கூறு, சுகாதாரம், மருந்து வகைகளின் காட்சிச்சாலைகளும், பரோடா மருத்துவக் கல்லூரியின அங்கக்கூறு, மருந்து, நோய்க்கூறு, நோய் வராது தடுக்கும் முறைகளைப்பற்றிய காட்சிச்சாலைகளும் சமீப காலத்தில், அதாவது 1949-ல் உருவானவைகளே.

கல்கத்தாவிலுள்ள உத்தராயண மருத்துவக் கல்லூரி யின் (School of Tropical Medicine) காட்சிச்சாலை 1921-ல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மருத்துவ ஆராய்ச்சி, மருந் தின் தன்மைகளைப் படடம் பெற்ற பின்னும் தொடர்ந்து செய்யும் ஆராயச்சி சம்பந்தமான பல பொருள்களை கொஞ்சம் கொஞ்சமாக இங்கே சேகரித்து வைத்திருகிறார் கள். மகளியல சம்பந்தமானவை, நோய்வாய்ப்பட்ட பிராணிகளை அறுத்துச் சோதனை செய்தவை, மனித உடலை உயிர் போவதற்கு முன்னும் பின்னும் அறுத்துச் சோதனை செயதவை மற்றும் உஷ்ணப் பிரதேச நோய்கள் சம்பந்த மானவைகளைப் பற்றிய மாதிரிகள் பல இங்குச் சேகரிக்கப் பட்டிருக்கின்றன. இவையெல்லாம் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன; விஷயங் களில் தெளிவு ஏற்படுவதற்குப் பெரிதும் உதவுகின்றன.

லக்னௌவில் 1928-ல் நிறுவப்பட்ட ராஜீய சுகாதார நிலையத்தின் காட்சிச் சாலையில், கனம், பிரசிருதிசாஸ்திரம், இரஸாயன சாஸ்திரம், அங்கக்கூறு, தடுக்கக்கூடிய வியாதிகள், தண்ணீர் வழங்குதல், காற்று, காற்றருட்டம், கழிவு நீர்க்கால் வாய், ஊட்டமூள்ள ஆகாரம் இவைகளைப்பற்றி எல்லாம் விரிவான பகுதிகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

இயற்கை வரலாற்றுக் காட்சிச் சாலைகள்

சரித்திரம், புதைபொருள் ஆராய்ச்சிக் கழகங்கள் எப்படிச் சரித்திரப் புதைபொருள் காட்சிச் சாலைகள் உருவாவதற்குக் காரணமாய் இருந்தனவோ அப்படி இயற்கை வரலாற்று ஆராய்ச்சிக் கழகங்கள், தனிப்பட்ட இயற்கை வரலாற்றுக் காட்சிச் சாலைகள் அமைப்பதற்கும், மற்றக் காட்சிச்சாலைகளில் இயற்கை வரலாற்றுப் பிரிவுகள் அமைத்ததற்கும் காரணமாய் இருந்திருக்கின்றன. பம்பாய் வேல்ஸ் இளவரசர் காட்சிச்சாலையின் இந்தப் பிரிவில் இந்தியச் காட்சிச்சாலைகளில் காணக்கிடைக்காத பல பொருள்கள் இருக்கின்றன. இவைகளைச் சேகரிப்பதற்குப் பெரிதும் உதவியவர்கள் பம்பாய் இயற்கை வரலாற்றுக் கழகத்தாரே. இந்தப் பிரிவில் வைக்கும் பொருள்களுக்கு என, அக்கழகத்தார் கழக அங்கத்தினரிடையே ரூ. 23,000 நன்கொடை வசூலித்தார் என்பதையும் மேலும் சர்க்கார் ரூ. 17,500 மானியம் அளித்தது என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். இவைகளைக் கொண்டே 1938-ல் காட்சிச்சாலையின் இந்தப் பகுதிக்கு ஒரு கட்டடம் கட்டியிருக்கிறார்கள். இந்தப் பகுதியை விரிவு செய்து மேலும் பெரிய கட்டடம் கட்ட இதுவே முதல் அடிப்படை.

டாஜீலிங்கில் இயற்கை வரலாற்றுக் காட்சிச்சாலை அமைக்க 1902-லேயே திட்டமிடப்பட்டிருந்தும், 1925-லேதான் இயற்கைவரலாற்றுக் கழகம் நிறுவி, அதனபின் கட்டடம் கட்டி, காவலரை நியமித்து, காட்சிச்சாலை நிர்வகிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ C. M. இங்லிஸ் என்பவரின் தளரா முயற்சியால், இக் காட்சிச் சாலையின் தரம் உயர்ந்திருக்கிறது. அது காரணமாக பேரரசுக் காட்சிச்சாலைக் கழகத்தின் செயலாளரான ஸ்ரீ பார்க்கம் என்பவரின் பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது.

எர்ணகுளம் மகாராஜா கல்லூரியில் விலங்குகள், தாவரங்களின காட்சிச்சாலை 1874-ல் ஆரம்பித்தபோதே மற்றக் கல்லூரிகளிலும் இயற்கை வரலாற்றுக் காட்சிச் சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1885-ல் சென்னைக் கிறிஸ்தவக கல்லூரியில் விலங்கினங்களின் காட்சிச்சாலை உருவாகி இருக்கிறது. இன்னும் பதினெரு வருஷங்கள் கழிந்த பின்னரே திருச்சிராப்பள்ளிப் புனித ஜோஸப்புக் கல்லூரியில் விலங்கினங்களின் காட்சிச்சாலை தோன்றியிருக்கிறது. பங்களூர் சென்ட்ரல் கல்லூரியில், பூதத்துவ காட்சிசாலையை 1898-லேயே ஆரம்பித்திருந்தாலும், அங்குத் தாவரப் பகுதியை 1921-லும் விலங்கினங்களின பகுதியை 1923-லும் தோற்றுவித்திருக்கிறார்கள்.

இந்திய வரலாற்று ஆராய்ச்சி நிலையத்தின் காட்சிச்சாலை ஆரம்பிப்பதற்குப பத்து வருஷங்களுக்கு முன்பே பம்பாய்ப் புனித சேவியர் கல்லூரியின் இயறை வரலாற்றுக் காட்சிச் சாலை 1918-ல் தோன்றியிருக்கிறது. 1910-லேயே அலகபாது சர்வகலாசாலையின் பூதத்துவக் காட்சிச்சாலை முக்கியமாக டாச்டர் W. H உட்லண்டு என்பவரது முயற்சியால் உருவாகி இருக்கிறது. சர்வகலாசாலையில் தாவரப் பிரிவு ஏற்பட்டதும் தாவரக் காட்சிச்சாலையும் தோன்றி இருக்கிறது. 1952-ல் இதே அலகாபாது சர்வகலாசாலையின் ஆதரவில் கௌசாம்பியில் உருவான சரித்திரப் புதைபொருள் காட்சிச்சாலை வேறு, இந்த இயற்கை வரலாற்றுக் காட்சிச்சாலைகள் வேறு என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும.

பௌதிக சாஸ்திர காட்சிச் சாலைகள்

பௌதிக சாஸ்திரத்தின் அவசியம், அதில் வைக்கவேண்டிய அபூர்வப் பொருள்கள் மற்றத் தளவாடங்களின் முக்கியத்துவம் எல்லாம் தெரிந்தே பல நாடுகளில் பௌதிக சாஸ்திர சம்பந்தமான காட்சிச்சாலைகளை நிறுவியிருக்கிறார்கள். அவைகளை சிறப்பான ஆராய்ச்சிக்கும், பொது மக்களுக்கு அறிவைப் புகட்டுவதற்கும் உதவியிருக்கின்றன. புதுடில்லியில் தேசீயப் பிரசிருதி ஆராய்ச்சி நிலையத்தை ஆரம்பித்த போதே, இந்தத துறையில் கவனம்செலுத்தி ஒரு காட்சிச்சாலையைத் தொடங்கியிருக்கிறார்கள் இக்காட்சிச்சாலை வளர்ந்து ஓங்கும் என்பது எதிர்பார்க்கபபடுகிறது. பிர்லா ஹவுஸ் என்னும் பெரிய கட்டடத்தை இன்மாகக் கொடுத்தது காரணமாக, தொழில் துறைக் காட்சிச்சாலை ஒன்றும் விரைவில் அமைக்கப்பட இருக்கிறது.

தொழிற்காட்சிச் சாலைகள்

சாதாரணமாகக் கண் காட்சிகளுக்கு என்று பல பொருள்களைச் சேகரித்து, பின்னர் அப்படிச் சேகரித்த பொருள்களைக் கொண்டே ஒரு நிலையான காட்சிச்சாலையை உருவாக்குவது வழக்கம் என்பதையும் மறந்துவிடுதல் கூடாது. இப்படிச் சிறிதாக ஆரம்பித்த கண்காடசிகளே பெரிய காட்சிச்சாலைகளாக உருவாக உதவியிருக்கிறது. அப்படி நடத்திய கண்காடசிகளில், கலை, கைத்தொழிற் பொருள்கள் முக்கியத்துவம் பெற்றன. கைத்தொழிற் பொருள்களை மட்டும் கொண்டே உருவான காட்சிச் சாலைகளும் உண்டு. பூனாவில் லார்ட ரே மகாராஷ்டிர கைத்தொழிற காட்சிச்சாலை இபபடி 1888-லேயே தோனறியிருக்கிறது. பூனாவில் நடந்த ஒரு இந்தியக் கலைக்காட்சிக்கு வாதிருந்த பொருள்களை வைதது ஆரம்பிக்கப்பட்ட இந்தக் காட்சிசசாலை நாளும் வளர்ந்து ஓங்கி ஒரு பெரிய காட்சிச்சாலையாய் நின்று நிலவுகிறது.

முதல் முதல் தனிப்பட்ட ஸ்தாபனமாக ஆரம்பிக்கப்பட்ட ஒன்றுதான் பின்னர் 1936-ல் பீஹார் வர்த்தகக் காட்சிச்சாலையாக உருவாகியிருக்கிறது. நாளும் இக்காட்சிச்சாலை வளர ஸ்ரீ P. M. சென்குப்தா மிகவும் உதவியிருக்கிறர். இக் காட்சிச் சாலை இப்போது இலலை. இரண்டாவது உலக யுத்தம் முடிந்ததும் கல்கத்தாவில பெரிய அளவில் ஒரு வர்த்தகக் காட்சி சாலை ஆரமபிக்கபபட்டது. மேற்கு வங்காளச் சர்க்கார் அதை ஒரு பெரிய நிலையமாகச் செய்திருக்கிறது. விக்டோரியா ராணியின் வைர விழாவில் ஆரம்பிக்கபபட்ட பல காட்சிச்சாலைகளில சென்னை விக்டோரியா தொழில் நிலையம் (Victoria Technical Institute) என்பதும் ஒன்று. இதைப் போன்றதே 1927-ல் திருவாங்கூர் மகாராஜாவின் சஷ்டி அப்த பூர்த்தி ஞாபகார்த்த நிலையம். இந்த நிலையத்தில் தந்தம், மரம் முதலியவைகளில் செய்யப்பட்ட கலைப பொருள்களைச் சேகரித்து இதனை ஒரு சிறந்த கைத்தொழிற்காட்சிச் சாலையாகச் செயதிருக்கிறார்கள்.

சமீப காலத்தில் அகமதாபாதில் 1949-ல் ஸ்ரீகௌதமசாராபாயால் ஆரம்பிக்கப்பட்ட காலிகோ காட்சிச்சாலை மிகச்சிறந்தது. கவர்ச்சிகரமானதொரு கட்டடத்தில், அழகான சாமான்களைச் சேகரித்து அடுக்கி வைத்திருக்கிறார்கள். இககாட்சிச் சாலையில் இன்றைய நெய்தல் தொழிலில் கைத்திறன் காடடும் பொருள்களே முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. இந்தியப் பொருளாதாரம் கைத்தொழில் இவைகளின் இன்றைய நிலையையும் இங்குச் சிறு கைதொழிலும் யந்திர சாதனமும் என்ன என்ன செய்தல் கூடும் எனபதையுமை நன்முக விளக்கி, கண்களுக்கு நல்லதொரு விருந்து அளிதிருக்கிறார்கள். பஞ்சு, சணல், கம்பளி, பட்டு, நைலான் முதலிய பசுமையோடு கூடிய பொருளகளை எப்படி நூற்பது, எப்படி நெயவது என்பதைப் படிபபடியாக விளக்கும் முறைகளை எல்லாம் இங்கு அழகாகக் காட்டுகிறார்கள் அன்னறய கிராமத்தான் எப்படி வேலை செய்தான், யந்திர சாதனங்களைப் படைத்த இன்றைய மனிதன் எப்படி வேலை செயகிறான என்பனவெல்லாம் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

குழந்தைகள் காட்சிச் சாலை

பௌதிக சாஸ்திர உண்மைகள், இயற்கை வரலாறுகள், அசைவு, ஆகர்ஷணம், உயிர்கள் பிறப்பு இறப்புகளைப் பற்றிய தகவலகள், கலை கைத்தொழில், சரித்திரம் பண்பாடு இவைகளை எல்லாம் திறம்பட விளக்க நல்ல மாதிரிப் பொருள்கள், மாதிரிப்படங்கள் எல்லாம் நிறைந்த காட்சிச்சாலைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன என்பதை அறிவோம். அம்மாதிரி

குழந்தைகளின் காட்சிகளை, இப்பணிக்கென்றே தம்மை அர்ப்பணித்துக்கொண்ட ஸ்ரீ P. G. மேத்தா உருவாக்கியதொன்று. 1957-ல் லக்னௌவில் ஆரம்பித்த மோதிலால் நேரு பால சங்கிரகாலயம் ஸ்ரீ C. B. குப்தா அவர்களின் முயற்சியால் ஆரம்பித்ததொன்று. சமீபத்திலேதான் சென்னை சர்க்கார் காட்சிச்சாலையை ஒட்டி ஒரு குழந்தைக் காட்சிச்சாலையை நிறுவ அஸ்திவாரமிட்டிருக்கிறார்கள். நல்ல பொம்மைகளைக் கொண்ட குழந்தைகள் காட்சிச்சாலையை, ஸ்ரீ சங்கர்பிள்ளை சேகரித்தவைகளைக் கொண்டு, டில்லியில் தொடங்கியிருக்கிறார்கள்.

கோயிற்காட்சிச் சாலைகள்

இந்தக் காட்சிச்சாலைகளின் வரிசையில், சிறப்பாகத் தென்னிந்தியாவில் பெரிய கோயில்களில், விரும்பத்தகுந்த முறையில், நல்ல காட்சிச் சாலைகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. சமய வளர்ச்சியோடு நிற்காமல், மக்களின் கலாசாரம், பொருளாதாரம், கலவி, வாழ்வு முதலியவைகளை வளர்க்கும் பண்ணைகளாகக் கோயில்கள் இருப்பது பிரசித்தம். இக்கோயில்களுள் ஒவ்வொன்றுமே தனித்த காட்சிச் சாலை ஆதலால், கோயில்களில் இத்தகைய காட்சிச் சாலைகள் அமைப்பது மிகவும் பொருத்தமானதே. இத்தகைய கோயில் காட்சிச்சாலைகளில் தஞ்சை பிரஹதீஸ்வரர் கோயிலில் ஆரம்பித்த ராஜராஜ காட்சிச் சாலையைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்தக் காட்சிச்சாலையையே தஞ்சைச் சரஸ்வதி மஹாலில் அமைத்திருக்கும் கலைக்கூடத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். இதைப் போலவே, கல்லிலும் செம்பிலும் வடித்த உருவங்களை நிறைத்து ஸ்ரீரங்கம் கோயிலில் ஒரு காட்சிச்சாலையும், தந்தச் சாமானகளை நிறைத்து மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் ஒரு காட்சிச்சாலையும் உருவாக்கியிருக்கிறார்கள். திருப்பதியில் ஸ்ரீவேங்கடேஸ்வர சர்வகலாசாலையின் ஒத்துழைப்போடு தொடங்கியுள்ள ஸ்ரீவேங்கடேஸ்வரர் காட்சிச்சாலை சிறந்ததொரு கோயில் காட்சிச்சாலை. அங்குச் சேகரிக்கப்பட்டுள்ள சிற்ப வடிவங்கள், சாஸனங்கள் அனந்தம்.

புதைபொருட்சோதனையாளர் ஆதரவில் வளர்ந்த புதைபொருட்காட்சிச் சாலைகள்

காட்சிச்சாலைகள் அமைப்பின் வரலாற்றில், பூதத்துவம், உயிர் தத்துவ சம்பந்தமான பொருள்களைச்சேகரித்ததே முதல் முதல் நடந்திருக்கிறது. இந்தப் பொருள்களை வைத்தே முக்கியமான காட்சிச்சாலைகள் இந்தியாவில் ஆரம்பமாகி இருக்கின்றன. லார்டு கானிங்கு ஆரம்பித்த வடவிந்திய புதைபொருள் சோதனை இலாக்கா, அதன் அதிகாரியாக ஜெனரல் கன்னிங்காம் நியமனம் ஆனபின்புதான், காட்சிச்சாலைகள் உருவாவதில், புதைபொருள் இலாக்காவின்பங்கு எவ்வளவு முக்கியத்துவம் உடையது என்பதுதெரிந்திருக்கிறது. ஜெனரல் கன்னிங்காமின் தளரா முயற்சிதான் இன்றும் பெருமைப்படத்தக்க உயர்ந்தபொருள்கள் காட்சிச்சாலையில் சேர்வதற்குக் காரணமாக இருந்திருக்கிறது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதைபொருள் இலாக்காவிற்கு, சர் ஜான் மார்ஷலும், லார்டு கர்ஜானும் புத்துயிர் அளித்து அதனை வளர்த்த போது புதைபொருட்காட்சிச்சாலைகளும், காட்சிச் சாலைகள் புதைபொருள் பிரிவுகளும் தோன்றி மக்கள் கவனத்தைக் கவர ஆரம்பித்திருக்கின்றன. இந்தியாவின் பழம்பெருமையை நிலைநிறுத்த லார்டு கர்ஜான் மேற்கொண்ட முயற்சியும் ஊக்கமும் பிரசித்தமானவை. அதைப் போலவே சர். ஜான்மார்ஷல் பரிவோடு செய்த உதவியும் நான் முன்னரே குறித்தபடி பல புதைபொருட் காட்சிச் சாலைகள் உருவாகக் காரணமாயிருக்கின்றன. காட்சிச்சாலைகள் அமைப்பதன் அவசியத்தை உணர்ந்து சர். மாாடடிமெர் வீலர் என்பவர் 1945-ல் புதைபொருட்பிரிவையே ஆரம்பித்திருக்கிறார். இதனால் 1949-ல் டில்லியில் ஆரம்பித்த இந்திய தேசீயக் காட்சிச்சாலை புதிய வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆரம்பத்தில் கர்னல் காலின் மாக்கன்சி போன்றவர்களின் ஊக்கமும் அத்துடன் ஆசியக் கழகம் போன்ற கழகங்களின் ஆதரவும் பல காட்சிச்சாலைகள் தோன்ற உதவி இருக்கின்றன. மானியங்களும் நிறையக் கிடைத்திருக்கின்றன. புதைபொருட்சோதனை ஆரம்பிப்பதற்குப் பல வருஷங்களுக்கு முன்னாலேயே சகா நாத்தில் குப்தர்கள் காலத்தில் கிடைத்த புத்தர் வடிவங்களில் எண்ணற்றவைகளை சர் ஜான் மார்ஷல் 1935-லேயே கொடுத்து உதவியிருக்கிறார். இன்று இந்தியக் காட்சிச்சாலையில் இருக்கும் ஆசியக் கழகத்தின் உயிர் ஓவியங்களான சிற்ப வடிவங்கள் எல்லாம், அப்போது லெப்டினண்ட கவர்னராய் இருந்த ஹானரபிள் G.F. எட்மனஸ்டன் கொடுத்தனவே. ஜாவாவோடு பிரிட்டிஷார் கொண்டிருந்த அந்தக்குறுகிய காலத் தொடர்பே, ஆசியக் கழகத்தாரால் இந்தியக் காட்சிச் சாலைக்கு அபூர்வமான ஜாவாச் சிற்ப வடிவங்களைக் கொடுக்கக் காரணமாய் இருந்திருக்கிறது. ஆனால், சர் அலெக்ஸாண்டர் கன்னிங்காம் புதைபொருள் இலாக்கா டைரக்டராக வந்து காந்தாரச் சிற்பங்களையும், புத்தகயையில் உள்ள அபூர்வப் பழங்காலப் பொருள்களையும், இவைகளுக்கு எல்லாம் மேலாக பர்ஹூத் வாயிற்கிராதிகள் எல்லாம் கொடுத்த பின்புதான் இந்தியக் காட்சிச் சாலை நிலை பெற்றிருக்கிறது. இவைகளே இந்தியக் காட்சிச் சாலையில் விலை மதிப்புடைய பொருள்கள். கன்னிங்காம் இப்படிப் பொருள்களை உதவுவதுடன் நிற்கவில்லை; J.D.M. பெக்லர் என்பவருடன் சேர்ந்து அவைகளை முறையே அடுக்கி அலங்கரிப்பதிலும் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் காலத்திலேதான் புதைபொருட் பிரிவை அசோக கூடம், இந்தோ சைத்தியகூடம், குப்த கூடம், முகம்மதிய கூடம் என்று நாலு கூடங்களாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். இந்த வகைப்படுத்தலையே சிலசில மாறுதல்களுடன் இன்றும் கையாண்டு வருகிறார்கள் இதை டாக்டர் ஆண்டர்ஸன் என்பவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

1873-ல் பர்ஹூத் ஸ்தூபியில் பாழ்பட்டுக் கிடந்தவைகளில் இருந்து பல புதைபொருள்களை, அங்குள்ள மக்கள் அழிப்பதற்கு முன்னமே சேகரித்து இந்தியக் காட்சிச்சாலைக்குச் சேர்ந்த ஜெனரல் அலெக்ஸாண்டர் கன்னிங்காமுக்கு நாம் எவ்வளவு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்! அதற்கும் இரண்டு வருஷங்களுக்குப் பின்னரே கன்னிங்காம் பர்ஹூத் பகுதியை ஆண்டு வந்த நாகோது அரசரிடம், அந்தப்பொருள்களைச் சர்க்காருக்குவழங்கும்படிவேண்டியிருக்கிறார். அங்கிருந்து பர்ஹூத் ஸ்தூபியில் மிஞ்சி இருந்த வாயில் கிராதிகளையே எடுத்து வந்திருக்கிறார் அவர். எஞ்சியவை சில அலகபாது காட்சிச்சாலையிலேயே இருக்கின்றன. இப்படி பர்ஹூத்திலிருந்து இப்பொருள்களை எடுத்துச் செல்லக் காரணமாயிருந்ததற்காக அவரை மூர்க்கன் என்று கூடத் திட்டியிருக்கிறார்கள் அக்காலத்தில். இப்படிக் கற்கோட்டையைப் பிரித்து எடுத்துச் செல்வது மூர்க்கமான செயல்தான் என்று பேராசிரியர் சில்டர்ஸ் அன்று எழுதி வைத்திருக்கிறார். ஆனால், எடுக்காமல் விட்ட பொருள்களை எல்லாம் அப்பக்கத்து மக்கள் வண்டிகளில் எடுத்துச் சென்று வீடு கட்டிக்கொண்டார்கள் என்பதை அறிகிற போது இவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லலாம்!

இது கர்னல் மெக்கன்சி செய்த மற்றொரு காரியத்தையும் நம் நினைவுக்குக் கொண்டுவரும். 1797-ல் அமராவதி ஸ்தூபியைக் கண்டுபிடித்தார் அவர். அவைகளில் பலவற்றை ஆசியக் கழகத்திற்கும் மசூலிப்பட்டினத்திற்குமாக அனுப்பி வைத்தார். எடுக்க முடியாது விடப்பட்ட சலவைக் கற்களை எல்லாம் மக்கள் எடுத்துக் கட்டடங் கட்டியிருக்கிறார்கள்; சுண்ணாம்பாக நீற்றி இருக்கிறார்கள். அமராவதி ஸ்தூபியில் அருமையான கலைப்பொருள்கள் சென்னை பிரிட்டிஷ் காட்சிச் சாலையில் வைத்துள்ள விலை மதிக்க முடியாத பொருள்களைத் தவிர மற்றவைகள் எல்லாம் இப்படித்தான் அழிந்துபோயிருக்கின்றன.

மேஜர் H. H. கோல் என்பவரது அளப்பரிய கருணையினால், காந்தாரச் சிற்பங்களில் சிறந்ததொரு பகுதி சென்னைக் காட்சிச் சாலைக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், டாக்டர் சர்ஸ்டன், காட்சிச்சாலைப் பொருள்கள், அந்தந்தப் பிராந்தியத்திற்கு உட்பட்டவைகளாகவே இருக்க வேண்டும் என எண்ணியிருக்கிறார். அது காரணமாக, இந்தியக் காட்சிச்சாலையிலிருந்து காந்தாரச் சிற்பங்களில் சிறந்தவைகள் என்று கருதத்தக்கவைகள் திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி அவசரத்தில் செய்த தீர்மானம்

வருந்தத் தக்கதே. இப்படியே பிடீ என்பவரது முயற்சியால் சேகரிக்கப்பட்டவைகளும் சிதறுண்டு போய்விட்டன.

டாக்டர் D.B. ஸ்பூனர் என்பவரது முயற்சியால் அவர் சாஹரிபஹலோல், தக்திபாஹி, ஷாஜிகிதேரி முதலிய இடங்களிலிருந்து தோண்டி எடுத்த அபூர்வ சிற்பங்கள் பெஷாவர் காட்சிச் சாலையை வளம்படுத்தியிருக்கின்றன. இந்தப் பிராந்தியத்திலிருந்தே கனிஷ்கருடைய அழகு செப்பின் பகுதி ஒன்று அரிய பொருளாகக் கிடைத்திருக்கிறது. அது பெஷாவர் காட்சிச்சாலையில் மதிப்பிட முடியாத பொருளாக இன்றும் இருக்கிறது. கன்னிங்காமின் முயற்சியால் கல்கத்தாவில் உள்ள இந்தியக் காட்சிச்சாலையிலும் லாகூர் காட்சிச் சாலையிலும் காந்தாரக் கலைப் பொருள்கள் இடம் பெற்றது போல எல்லைப் புறத்தில் சர் ஜான் மார்ஷல் நடத்திய புதைப்பொருள் சோதனைகள் இன்று இந்தியாவிலேயே இந்தியக் காட்சிச் சாலையில் சிறந்ததெனக் கருதப்படுகின்ற காந்தாரச் சிறப வடிவங்கள் சேகரிக்கப்படுவதற்குக் காரணமாய் இருந்திருக்கின்றன.

ஸர் ரத்தன், ஸர் டோரப் டாட்டா, ஸர் அக்பர் ஹைதாரி போன்ற கலை அன்பர்களிடமிருந்து பல அரிய பொருள்களை இனாமாகப் பெறும் பாக்கியத்தைப் பம்பாயில் உள்ள வேல்ஸ் இளவரசர் காட்சிச் சாலையின் இயற்கை வரலாற்றுப் பகுதி பம்பாய் இயற்கை வரலாற்றுக் கழகத்தாரால் உருவானதொன்று.

புதைபொருள் இலாக்கா மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் உள்ள காட்சிச் சாலைகளின ஒத்துழைப்போடு வேலை செய்யவேண்டுமென்று சர் ஜான் மார்ஷல் ஆரம்பத்திலிருந்தே எண்ணியிருக்கிறார். இந்த முறையைப் பின் பற்றியேதான் மாகாண ரீதியாய் ஆரம்பிக்கப்பட்ட காட்சிச் சாலைகளில் எல்லாம் புதைபொருட்பிரிவுகள ஏற்பட்டிருக்கின்றன. ஆதித்தநல்லூர், பெரும்பேர் முதலிய இடங்களிலிருந்து எடுத்த இரும்புக் காலத்து புராதனப் பொருள்களும் அமராவதியிலிருந்து எடுத்த புத்தர் சிலைகளும் மற்றப் புராதனப் பொருள்களும், செப்பு விக்கிரகங்களும் தென் பிராந்தியப் புதைபொருள் இலாக்கா சூப்பரின்டென்டு ஸ்ரீ. ரீ என்பவரால் அகழ்ந்து எடுக்கப்பட்டவை. அவைகளே இன்று சென்னைக் காட்சிச் சாலையில் இருக்கின்றன. அதே காட்சிச் சாலையில் தனுவுலபாடு என்னும் இடத்தில் நடத்திய புதைபொருள் சோதனையில் கிடைத்த பொருள்கள் சமணப்பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை புதைபொருள் சோதனையாளர்களின் முயற்சியால் கிடைத்தவைகளே. சென்னைக் காட்சிச் சாலையில் உள்ள செப்புப் பட்டயங்கள், அங்குள்ள செப்புச் சிலைகளைப் போலவே எண்ணிக்கையில் அதிகம் ஆனவை. அவைகளைச் சேகரிக்க, ஜில்லாக் கலெக்டர்களும் ஜட்ஜ்களும் உதவியிருக்கிறார்கள். இவைகளில் பல இவற்றை வைத்திருந்தவர்களால் கோர்ட்டில் ஒப்படைக்கப்பட்டவை. அவைகளில் உள்ள எழுத்துக்களை வாசிக்க முடியாத காரணத்தால், அந்தப் பட்டயங்களின் மூலம் தங்கள் மூதாதையர் சொத்துக்கள் பிறர் அனுபவித்ததைத் திரும்பவும் பெற முடியும் என்று நம்பியே பட்டயங்களை அவைகளின் சொந்தக்காரர்கள் கோர்ட்டுகளில் ஒப்படைத்திருக்கிறார்கள். பின்னால் இவைகளால் பலன் ஒன்றும் இல்லையென்று கண்டு திரும்பப் பெறாமலும் இருந்திருக்கிறார்கள். இப்படி உரிமை கொண்டாடுவார் இல்லாததால் இவைகளைக் கோர்ட்டார் காட்சிச் சாலைகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள். புதைபொருள் இலாக்காவில் உள்ள சாஸனப் பகுதியினரிடம் கிடைத்த செப்புப் பட்டயங்களையும் காட்சிச் சாலைக்கே அனுப்பி வைத்திருக்கின்றனர். மேற்குப் பிராந்தியப் புதைபொருள் இலாக்கா சூப்பிரன்டின் பெருமுயற்சியாலே, வேல்ஸ் இளவரசர் காட்சிச் சாலையின்புதை பொருட்பிரிவு வளம் பெற்றிருக்கிறது. இந்தக் காட்சிச் சாலையின் பொக்கிஷங்கள், அய்ஹோல் எலிபெண்டாவில் கிடைத்த அருமையான சிற்ப வடிவங்கள்.

1911-12-ஆம் வருஷங்களில் டைரக்டர் ஜெனரலாக வேலை பார்த்த டாக்டர் J.Ph. ஓகெலின் ஆர்வமும், ஊக்கமும், இந்தியாவில் காட்சிச்சாலை அமைப்பதற்கு ஊன்றுகோலாய் நின்றிருக்கின்றன. 1911-ல் கீழ் நாட்டுக் கலை அரங்கும், காட்சிச் சாலை மகாநாடும் நடந்த போது, அப்போதிருந்த முப்பத்து ஒன்பது காட்சிச் சாலைகளின் தகவல்களை டாக்டர் ஓகல் தந்திருக்கிறார். சம்பாக் காட்சிச்சாலை இவரது முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டதே. ராய்பஹதூர் ராதாகிருஷ்ணன் விரைவில் உருவாக்கிய மதுராக்காட்சிச்சாலையும் டாக்டர் ஓகெலின் ஆதரவாலும், அவர் அளித்த உதவித்தொகைகளாலுமே தோன்றியிருக்கிறது. இதைப் போலவே, லக்னௌவிலும், டில்லியிலும் உள்ள காட்சிச்சாலைகளும், கல்கத்தாவில் உள்ள இந்தியக் காட்சிச்சாலையும் இவரது ஆதரவினால் வளர்ந்தவைகளே. இவர் காட்சிச்சாலைகளின் மகாநாட்டின் தலைவராய் அமைத்து காட்சிச்சாலைகளின் நிர்வாகத்தைப் பரிவுடன் பாராட்டி இருக்கிறார்.

புதைபொருள் இலாக்கா சூப்பிரன்டுகள் மாகாணக் காட்சிச் சாலையில் உள்ள புதைபொருட்பிரிவு நிர்வாகிகளோடு ஒத்துழைத்தது காரணமாகச் சிற்ப வடிவங்கள், செப்புச் சிலைகள், நாணயங்கள் எல்லாம் களஞ்சியச்சேமிப்புச் சட்டத்தின் படி (Treasure Trove Act) ஆர்ஜிதம் செய்ய எளிதாக இருந்திருக்கிறது. சென்னைக் காட்சிச்சாலைப் புதைபொருட்பிரிவிற்கு ஓர் உதவியாளரை நியமிக்கும் வரை, புதைபொருள் சம்பந்தமான விஷயங்களில் ஆலோசனை சொல்லும் கவுரவ அதிகாரியாகச் சர்க்கிள் சூப்பிரன்டே இருந்திருக்கிறார். இதைப் போலவே எல்லைப்புறச் சர்க்கிள் சூப்பிரன்டே. பெஷாவர் காட்சிச்சாலையின் கௌரவக் காவலராய் வேலைச் செய்து வந்திருக்கிறார். மேற்குச் சர்க்கிள் சூப்பிரன்டே பீஜப்பூர்க் காட்சிச்சாலையின் கௌரவக் காவலராய் இன்றும் இருந்தவருகிறார். இவை தவிர, புதைபொருள் இலாக்காச் சூப்பிரண்டுகளே பல காட்சிசசாலைக் குழுவில் அங்கம் வகித்து வருகிறார்கள்.

மதுரா, சென்னை, லக்னௌ முதலிய இடங்களில் உள்ள காட்சிச்சாலைகளுக்குப் பொருள் சேகரிக்கப் புதைபொருள் இலாக்கா உதவியிருக்கிறது; ஆலோசனைகள் கூறுவதோடு மானியங்களும் உதவியிருக்கிறது.

புதைபொருள் சோதனை செய்பவர்கள் தங்களுக்குக் கிடைத்த அரும்பொருள்களைக் காட்சிச்சாலைக்குத் தாராளமாகப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்கள். அதனாலேதான் மோஹஞ்சோதரோவில் கிடைத்தவைகள் இந்தியாவில் உள்ள பல காட்சிச் சாலைகளிலும் காணக்கிடைக்கின்றன. புதைபொருள் இலாகாப பொருள்களை முக்கியமான காட்சிச்சாலைகளுக்குக்கடனாகவும் உதவியிருக்கிறார்கள். பீயர்ஸ் என்பவர் சேகரித்த நவரத்தினங்களும் நாணயங்களும் இப்படித்தான் இந்தியக் காட்சிச்சாலையில இடம் பெற்றிருக்கின்றன. இப்படியே கடனாகக் கொடுத்த பொருள்கள் பல இன்றும் சென்னைக் காட்சிச்சாலையிலும், பாட்னாக் காட்சிச்சாலையிலும், பம்பாய் வேல்ஸ் இளவரசர் காட்சிச்சாலையிலும் இருக்கின்றன. பல இடங்களில் அகழ்ந்து எடுக்கப்பட்ட பொருள்கள் ஆங்காங்கே உள்ள காட்சிசாலைகளுக்குத் தாராளமாக வழங்கப்பட்டிருக்கின்றன. இப்படியே பஸரா, பாடலிபுத்திரததில் கிடைத்த குர்சிகார செப்புச் சிலைகளும் பாட்னாக் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. பீதா, சதேத்மஹேத், சாங்கிஸாவில் கிடைத்தவை லக்னௌ காட்சிச்சாலையில் இருக்கின்றன. நால் என்ற இடத்தில் அகழ்ந்து எடுத்த பொருள்களே குவெட்டாக் காட்சிசசாலையில் இருந்தன. பின்னர் 1934-ஆம் வருஷ பூகம்பத்திற்குப் பின்பு அவைகள் இந்தியக் காட்சிச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டன.

இந்த நேசப்பான்மையோடு புதைபொருள் இலாக்கா வேலை செய்தது காரணமாகவே, காட்சிச் சாலைகள் மேலும் மேலும் வளர்ந்தோங்கின. ஆதராபாது, குவாலியர், பரிபாடா, ஆஜ்மீர், கஜுராஹோ, கிச்சிங், சாஞ்சி என்னும் இடங்களில் உருவான ராஜீயக் காட்சிச்சாலைகள் எல்லாம் புதைபொருள் இலாக்காவிற்கு மிகவும் கடமைப்பட்டிருக்கினறன. காட்சிச் சாலையில் பொருள்களை வரிசைப்படுத்தி வைக்கக்கூட இந்த இலாக்காவினர் உதவியிருக்கின்றனர். மதுரா, கிச்சிங், பரிபாடா என்னும் இடங்களில் ஸ்ரீ ராமபிரசாத் சண்டா என்பவர் செய்த உதவியை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

கலைக் கூடங்கள்

புதைபொருட் காட்சிச் சாலை எண்ணிக்கையில் விரைந்து வளர்ந்தது போல, கலைக்கூடங்கள் வளரவில்லை. பல காட்சிச்சாலைகளில் கலைப் பகுதிகள் இருந்தாலும, அங்கு இருப்பவை எல்லாம் ராஜஸ்தான், மொகலாயர், தெக்கானி வகுப்பைச் சேர்ந்த படங்களே. பல விதமான சித்திரங்களோ, அவைகள் வளர்ச்சியைக் குறிக்கும் சரித்திர விளக்கங்களோ, இரண்டு மூன்று காட்சிச்சாலைகளைத் தவிர மற்ற இடங்களில் இல்லை. இந்தியச் சித்திரம், ஐரோப்பியச் சித்திரம் இரண்டையுமே சிறப்பாகக் காட்டும் கலைப்பகுதி பம்பாய் வேல்ஸ் இளவரசர் காட்சிச்சாலையில் இருக்கிறது. அங்கு மத்திய காலத்திலும், இன்றும ஐரோபபாவின் பிரபல ஓவியர்கள் தீட்டிய சித்திரங்கள் இருப்பதுடன், அஜந்தாச் சித்திரங்களின் நகல்களும் அவற்றுடன், மத்திய காலத்தில் உருவான பல திறப்பட்ட சித்திரங்களும் காட்சிக்கு வைக்கப் பட்டிருக்கினறன.

பிரபலமான பரோடா சாயாஜிராவ் மகாராஜாவின் தாராள மான பொருள உதவியால், பரோடாவில், அழகானதொரு கலைக்கூடம் உருவாகி இருக்கிறது. அங்குள்ள ஐரோப்பிய, இந்திய முறைச் சித்திரங்களைப் பற்றி விரிவான விளக்கம் எழுதி டாக்டர் கோட்ஸ் சிறு கையேடு ஒன்றையும் வெளி யிட்டிருக்கிறார். திருவனந்தபுரத்தில், மகாராஜாவின் உதார குணத்தாலும், டாக்டர் ஜேம்ஸ் கசின்ஸ என்பவரின் ஆர்வத் தாலும் ஒரு கலைகூடம் உருவாகி அதில் இந்திய ஐரோப்பிய முறைச் சித்திரங்களைப் பூரணமாக வகைப்படுத்தி வைத்திருப்ப துடன சீனர்களது சித்திரங்கள், ஜப்பானியரது சித்திரங்கள், இந்தோனேஷியாச் சித்திரங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக் கின்றன. இது இந்தியாவிலே நல்ல வளமானதொரு கலைக் கூடம்.

இதைப் போலவே, பெரிதும் இன்றைய இந்திய ஓவியர் களின சித்திரங்களே நிறைந்த ஒரு கலைக்கூடம் மைசூரில் இருக்கிறது. அஜந்தா, பாக் சித்திரங்களின் அழகான பிரதிகள் தயார் செய்து குவாலியர் காட்சிச் சாலையில் வைத் திருக்கிறார்கள். ஐதராபாதில அஜந்தா எலலோராச் சித்திரங் களின் பிரதிகளுககு என்றே தனியே ஒரு பகுதியை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இன்னும் ஐதராபாது சாலர்ஜங் காட்சிச்சாலையில், ஐரோபபியச சித்திரங்களில் உயர்ந்தவை களைச் சேகரித்து வைதிருக்கின்றனர்.

நீண்ட காலமாகச் சென்னைக் காட்சிச் சாலையில் ஒரு கலைக் கூடம் அமைக்க வேண்டுமெனறு விரும்பியும் இக்கனவு சமீப காலத்திலேதான் பலித்திருக்கிறது. அழகான விக்டோரியா தொழில் நிலையத்தின் கட்டடதில் சென்னைக் காட்சிச் சாலையின் இணைப்பாகத் தேசீயக் கலைக்கூடம் உருவாகி யிருக்கிறது. இந்திய நாட்டின கலை—அதிலும் சிறப்பாகத் தென்னிநதியக் கலை—இங்கு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இங்குப் பழமையான இடைக காலத்துப் புதுமையான சித்திரங்களின் பகுதிகள் இருக்கின்றன. உலோகக் கலை, கிராமியக் கலையின் மாதிரிப் பொருள்களும் இங்கே வைக்கப் பட்டிருக்கின்றன.

டில்லியில் ஆரம்பித்திருக்கும், இன்றைய கலையின் தேசீயக் கலைக்கூடம், இந்தியக்கலைகள், இன்றைய வளர்ச்சியை காட்டுவதே முக்கிய நோக்கமாகக் கொண்டது. தேசீயக் காட்சிச்சாலையில் மொஸ், ராஜஸ்தானி முறைச் சித்திரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தியச் சித்திர வரலாறு முழுவ தையும் தெரிந்துகொளளும் வகையில் அந்தப் பழைய அஜந்தா சுவர்ச் சித்திரங்களிலிருந்து விஜயநகர மன்னர்கள் காலம் வரையுள்ள சுவர்ச் சித்திரங்களின் பிரதிகள் எடுத்து இங்கே வைத்திருக்கினறனர்.

காட்சிச் சாலைக் கட்டடங்கள்

பின்னர் ஆரம்பிக்கப்பட்ட காட்சிச் சாலைகளுக்கு எல்லாம் நல்ல கட்டட வசதி கிடைத்திருக்கின்றது. ஆனால், முந்திய காலத்திலே ஆரம்பிகப்பட்டவைகள் எல்லாம், பழையனவும் வசதியற்றனவும் இன்றைய காட்சிச்சாலை அமைப்புக்கு ஒவ்வா தனவுமான கட்டடங்களிலேயே இருக்கின்றன. ஏதாவது ஒரு பெரிய கட்டடம் கிடைத்தால், அங்குக் காட்சிசாலையை அமைத்துவிடலாம் என்பதுதான் வழக்கமாயிருந்திருக்கிறது. இதனால் காடசிச்சாலைப் பொருள்களைக் கவரும் வகையில் முறைபடுத்தி வைக்க இயலாது சிரமப்படவேண்டியிருந்தி ருக்கிறது. லக்னௌ காட்சிச்சாலை இதற்கு ஓர் எடுதது க் காட்டு. இந்தக் காட்சிச்சாலையைத் தனித்தனியாக இருக்கும் இரண்டு கட்டடங்களில் அமைந்திருபபது காரணமாக இக் குறை மிகைப்படுத்திக் காட்டப்படுகிறது. சமீப காலத்தில் உருவான சில காட்சிச்சாலைகள் நல்ல புதிய கட்டடங்களில் அமைக்கப்படடிருகின்றன என்பது மகிழ்ச்சிக்கு உரியது. இவைகளே, நெருக்கமாகப் பழைய கட்டடங்களில் சில வருஷங்கள் இக்காட்சிசசாலை வைக்கப்பட்டு இருந்த நிலையை ஞாபகமூட்டி மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கினறன.

அலகாபாது நகராடசிக் காட்சிச் சாலை, பழைய நகராட்சிக் கட்டடத்தின் இருட்டு அறை ஒன்றிலிருந்து, புதிடமிடுக் கட்டிய புதிய அழகிய கட்டடதிற்கு வந்துருக்கிறது. வார ணாசி இந்து சர்வகலாசாலையைச் சேர்ந்த பாரத கலா பவனக் காடசிச் சாலைக்கெனறு சமீபதில் கட்டபபட்ட புதிய கட்டடம் மிக அழகானதென்று. ரெய்ப்பூர்க் காட்சிசசாலையும் ஒரு நல்ல அழகிய கட்டடம் கட்டி, அதில புதிதாகவே தொடங்கி யிருகிறது. மதுராக் காடசிச் சாலை ஆரம்பத்தில் சிறிதும் தகுதியறற கட்டடத்தில் ஆரமபித்தாலும், இன்னும் விஸ் தரிக்கக்கூடிய முறையில நன்கு திட்டமிட்டுக் கடடிய கட்டடத் தில் இப்போது அமைக்கப்பட்டிருக்கினறது. பம்பாய்க காட்சி சாலைகள் கட்டடம் சம்பநதப்பட்ட வகையில நிரம்ப அதிர்ஷ்டம் உடையவை. விஸ்தாரமான இடத்தில். நல்ல அடிப்பனட இட்டுக கட்டப்பட்டுள்ள சென்னைக் காட்சிச் சாலையில் புதை பொருட்கூடம் கட்டுவதறகென நல்ல இடம் ஒதுக்கப்பட்டி ருக்கிறது. அகமதாபாதில் சமீபத்தில் 'நாகரீக கேந்திரம்' எனற பெயரில் ஆரம்பிக்கப்படட காட்சிசசாலைக்கு அழகான கட்டடம் ஒன்று கட்டத திட்டமிட்டிருகிறார்கள்.

காட்சிச் சாலைக் கடடங்கள் கட்டுவதற்குத் திட்டமிடுவது மிகவும் அவசியம். எவ்வளவுதான் நல்ல பொருள்களைச் சேகரித்தாலும், அவைகளை நல்ல வெளிச்சமுடைய தகுதி யான கட்டடங்களில் அமைததால்ன்றி, அவைகளின் அழகை எடுதுதுக்காட்ட முடியாது. நெருகுகமுள்ள இடங்களில் காட்சிச் சாலைகள் அமைத்து அவைகளை விஸ்தரிக்க முடியாதபடி செய்திருகிறார்கள். காட்சிச்சாலை வளரும் ஸ்தாபனம். அவை கள் வளருவதற்கு வசதிகள் இருக்க வேண்டும். இந்தியக் காட்சிச் சாலை இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. துரதிருஷ்ட வசமாக பழைய கட்டடத்தில் இருப்பது மாத்திரம் அனறி விஸ்தரிக்க இயலாத இடதிலும் அது இருகிறது.

சரியாகக் கட்டப்பட்ட காடசிச் சாலையில் பொருள்களை வைக்கும் கூடங்களுக்கு ஏறபட்ட இடம் போக, காட்சிப் பொருள்களை இரஸாயனப பராமரிப்புச் செய்வதற்கு வேண்டிய பரீக்ஷைச் சாலைக்கும், காட்சிச் சாலை ஊழியர்கள் இருப்பதற்கும், சேமித்து வைக்கும் பொருள்களைப பதனப்படுத்தி வைப்பதற் கும் வசதிகளும ஏறபடவேண்டும். இத்தனை வசதியும் நிறைந் திருக்கிறது. சென்னைக் காட்சி சாலையில் காட்சிச சாலை ஆராய்ச் சிக்குப பெரிதும் பயன்படும் ஒரு பெரிய நூல் நிலையமும் அங்கே வளர்ந்திருக்கிறது.

அலங்கரித்து வைத்தல்

காட்சிச சாலையைப் பராமரிபபவர்கள், காட்சிப் பொருள்களை எவ்வளவு அழகாக அடுக்கி வைக்க முடியுமோ, அவ்வளவு அழகாக ஆடம்பரமாக வைக்கவே விரும்புவார்கள். இது விரும்பத்தக்கதன்று. காண வருபவர்கள், வைத்திருக் கும் பொருள்களின வரலாற்றைத் தெரிந்துகொளளும அள விற்கு அவைகளைக் காட்சியில் வைத்தல் போதுமானது. அதிகப்படியாகச் சேகரித்து வைத்திருக்கும் பொருள்களைச்

சேமித்துவைக்க விசாலமான நல்ல இடம் வேண்டும். பொருள்கள் கூடங்களில் நன்முக அடுக்கி வைக்கப்பட வேண்டும். காட்சிச் சாலையிலுள்ள பெருளுள்கள் ஆராய்ச்சி மாணவர்களுக்குக் கிடைப்பது போல இவைகளும் அவர் களுக்குக் கிடைக்க வகை செய்ய வேண்டும்.

சிட்டு ஒட்டுதல்

பொருள்களை விளக்கும் சீட்டுகள் சுருக்கமாக, தெளிவாக விஷயத்தை விளக்குவனவாக இருக்கவேண்டும். காண வரு பவர்கள் அதிக நேரம் செலவழிக்க விரும்பமாட்டார்கள்; பொறுமை உடையவர்களாக இருக்கமாட்டார்கள். இது ஞாபக மிருக்கவேண்டும். அவர்களுக்கிருக்கும் காலவரையறைக்குள் அப்பொருள்களிடம் ஓர் ஆர்வம் பிறக்க வழி செய்யவேண் டும். காட்சிச் சாலையிலிருந்து வெளியே போகும்போது, உப யோகமான சில தகவல்களையாவது அவர்கள் தெரிந்து கொண்டு போகவேண்டும். பல காட்சிச்சாலைகளில் ஆங்கிலத் தோடு இந்திய பாஷைகளுள் ஒன்றுக்கு மேற்பட்ட பாஷைகளில் விளக்கச் சீட்டு எழுதிவைக்கிறார்கள். இனனும் பல காட்சிச் சாலைகளில் இது செய்யப்படவில்லை. காட்சிச் சாலையைக் காண வருபவர்களுக்கு இவ்விளக்கச் சீட்டுகள் மிகவும் அவசிய மானவை என்பதை மறந்துவிடுதல் கூடாது.

பிறருக்குக் கொடுப்பதிலும் பரஸ்பரம் மாற்றிக்கொள்வதிலும் கையாளவேண்டிய முறை

காட்சிச் சாலை இயக்கம் ஆரம்பித்த அந்த நாளிலே, கல் கத்தா, சென்னை, லக்னௌ முதலிய நிலைபெற்ற காட்சிச்சாலை களிலிருந்து, மற்றக் காட்சிச் சாலைகளுக்குக் காட்சிப் பொருள் களைத் தாராளமாக வழங்கி வந்தார்கள். இப்படிப் பல பொருள்களைப் பெற்று வளம்பெற்ற காட்சிச் சாலைகளில் ஒன்று பம்பாய் வேல்ஸ் இளவரசர் காட்சிச சாலை; பிறகாட்சிச் சாலைகளுக்குக் கொடுத்தல் மற்றக் காட்சிச் சாலை களிலிருந்து பெறுதல் என்ற பரிவர்த்தனை முறை தாராள மாகக கையாளப்படவேண்டியதொன்று. காட்சிப்பொருள் கள் ஒரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போவதனால் பல்ன உண்டு. இம்முறை இந்தியாவில் உள்ள பல காட்சிச் சாலைகளில் கையாளப்படுகிறது. பல துறைகளில் இந் தியாவின் செல்வம் எப்படி இருக்கிறது என்பதை விளக்க மாகக் காட்ட இம்முறை உதவுகிறதல்லவா?

இயற்கை வளம், கலாசார வளம் இவைகளின் பல துறை களை வகுத்துக்கட்ட ஒரிடத்திலேயே கலைப்பொருள்கள் குவிந்திருக்கக் கூடாது. வரலாற்று அறிவைப் பலரும் அறியச் செய்ய அது உதவாது. இந்தியக் கலையையும், கலாசாரத தையும், மாறைய வளங்களையும் ஒரே தடவையில் மேலெ ழுந்த வாரியாகப் பார்க்கப் போதிய பொருள்கள் எல்லா இடத் தும் நிரம்பி திருக்கவேண்டும். சென்னைக் காட்சிச் சாலையில் முதலில் கர்ஸ்டன் என்பவர் இந்த வாய்ப்பைக் குறைத்துக் காந்தாரச் சிற்பங்களை அவைகள் எங்கிருந்து கிடைத்தனவோ அங்குள்ள காட்சிச் சாலைக்கே அனுப்பிவிட்டார். பல வருஷங் களுக்குப் பின்னர் சிறந்த காட்சிச் சாலை அதிபராய் இருந்த டாக்டர் கிரேவ்லி, பரந்த நோக்கத்தோடு, புதைபொருட் பிரிவிலேயே, இந்தியக் கலைகளின் பல பிரிவுகளையும் காட்ட வகை செய்தார். இந்தப் பணிக்குப் பல காட்சிச் சாலைகள், புதைபொருட்சோதனையாளர்களின் ஒத்துழைப்பு விரும்பப் பட்டது அது எதிர்பார்த்தபடியும் கிடைத்தது.

பள்ளிகளுக்கு உதவுதல்

பள்ளிகளுக்கு உதவும் பணி சிறப்பாக நடப்பது சென்னைக் காட்சிச் சாலையிலேதான் என நினைக்கிறேன். புத்தகத்தில் படிக்கும் பல விஷயங்களை நேரில் காண்பதன் மூலமாக, சிறந்த அறிவு பெறுவதைப் பள்ளி ஆசிரியர்கள் துணையோடு அடிக்கடி காட்சிச் சாலைக்கு வந்து காணும் பள்ளிப் பிள்ளைகள் பெறுகிறார்கள். சர்வகலாசாலை மாணவர்கள், அவருளளும் பட்டப்படிப்புக்குப் பின் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் காட்சிச் சாலையிலுள்ள பொருள்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். கலை, விக்கிரக வித்தை, நாணயங்களின் ஆராய்ச்சி செய்கிறவர்கள் எல்லாம் காட்சிச்சாலைக்கு வந்து, அங்குள்ள பொருள்களை ஆராய்ந்து படிப்பதை நிறுத்த முடியாது. இந்தியக் காட்சிச் சாலையில் உள்ள புதை பொருட்பிரிவு பல சர்வகலாசாலை மாணவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், விசேஷமாக கல்கத்தாவில் உள்ளவர் களுக்கும் மிகுந்த ஊக்கம் தருவதாய் இருக்கிறது. இது போலவே, பௌதிகம் இயற்கை வரலாறு இவைகளைக் கற்கும் மாணவர்கள், காட்சிச் சாலைகளுக்கு அடிக்கடி வருவதன் மூலம் மிக்க பயன் அடைகிறார்கள். கல்கத்தா இந்தியக் காட்சிச் சாலையிலும், சென்னைக் காட்சிச் சாலையிலும் பூதத்துவப் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ள பொருள்கள் இந்த மாணவர்களின் ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. எதோ புத்தகத்தில் அனுமானமாகப் படித்த பல விஷயங்களை நேரில் கண்ணால் கண்டு தெளிவாகத் தெரிந்து கொள்ள அல்லவா இப் பொருள்கள் உதவுகின்றன? இத னாலேதான் பல பள்ளிகளில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உதவும் வகையில் அவர்களது சொந்தக் காட்சிச் சாலைகளையும் அமைத்திருக்கிறார்கள்.

ஆராய்ச்சியும் வெளியீடுகளும்

பள்ளிகளுக்கு உதவும் பணியோடு, ஒவ்வொரு காட்சிச் சாலை யும் ஆராய்ச்சி செய்வதிலும் வெளியீடுகள் வெளியிடுவதிலும் கவனம் செலுத்தவேண்டும். இவை மூலமாகததான் மற்றச் சகோதர ஸ்தாபனங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு அதனால் எல்லோரும் பலன் அடைய முடியும். டாக்டர் கிரேவ்லியின் தளரா முயற்சியினாலேதான் மற்ற இந்தியக் காட்சிச்சாலைகள் எல்லாவற்றையும்விட, சென்னைக் காட்சிச்சாலை தான் வெளியீடுகள் வெளியிடுவதில் முந்திக்கொண்டிருக் கிறது. டாக்டர் H. கோட்ஸ் என்பவரது முயற்சியினால், பரோடாக் காட்சிச் சாலையின் சித்திர கூடமும், துண்டுப் பிரசுரம ஒன்றை வெளியிடுகிறது. காட்சிச் சாலையிலுள்ள பொருள்களின் ஜாபிதாவை வெளியிட்டதோடு அப்பொருள்களைப்பற்றிய சுவை யான தகவல்களையும் கொடுக்கிறது. சமீபத்தில் பம்பாய் வேல்ஸ் இளவரசர் காட்சிச் சாலையினரும் பிரசுரம் வெளியிட ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது மகிழ்சிக்குரிய செய்தியாகும். முன்னர்ப் பல வெளியீடுகளை வெளியிட்ட இந்தியக் காட்சிச் சாலையினர் திரும்பவும் வெளியீடுகள் வெளியிட ஆரம்பித் திருக்கிறார்கள். இந்தியக் காட்சிச் சாலையினர் தாங்களே முத லில் காட்சிச் சாலையின் பல பிரிவுகளைப்பற்றி வெளியீடுகள் பிரசுரித்தார்கள். என்றாலும், டாக்டர் ஆண்டர்ஸன் எழுதிய மூலையூட்டும் பிராணி வர்க்க விளக்கம், J. C. ரோஜர்ஸ், V. ஸ்மித், நெல்சன், ஸைட், ஆலன் முதலியவர்கள் எழுதிய நாணயங்களைப் பற்றிய புத்தகங்கள், இன்னும் பல பிரசுரங்கள் இந்தியக் காட்சிச சாலையினது பழைய நினைவுகள் எல்லாம் பூதத்துவ விலங்கினம் முதலிய பிரிவுகளின் வெளியீடுகளே. புதைபொருள் இலாக்காவின் வழி காட்டி என்ற இரண்டு புத்தகங்களும் மற்றும் இந்தியக் காட்சிச்சாலைப புதை பொருட்பிரிவில் உள்ள பொருள்களைப்பற்றிய தகவல்களும் எல்லாம் புதைபொருள் சோதனையார் வெளியிட்டனவே.

காட்சிச் சாலைப் பொருள்களின் பட்டியல், வழி காட்டிகள், மற்ற வெளியீடுகள வெளியிடுவதே டு கட்சிச் சாலைப் பொருள்களைத் தக்க முறையில் விளம்பரப்படுத்தப் புதை பொருள் சோதனையாளர்கள் காட்சிச்சாலையினருக்குப் பெரிதும் உதவி வந்திருக்கிறார்கள் என்பதை ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். பர்ஹுத்தில் சேகரித்தவை களைப்பற்றி எழுதிய டாக்டர் பர்கூஸ் என்பவரே சென்னைக் காட்சிச் சாலையில் உள்ள அமராவதிச் சிற்பங்களைபற்றிய விவரங்களை முதனமுதலில் சிறு புத்தகமாக எழுதி வெளி யிட்டிருக்கிறார். லாகூர் காட்சிச்சாலையில் உள்ள புத்த சிலைகளைப்பற்றிய விரிவான பட்டியல் முதலில் டாக்டர் D. B. ஸ்பூனர் தயாரித்து, பின்னர் ஸ்ரீ ஹெர்கிரீவ்ஸ என்பவரால் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. மதுராக் கலைக்டரின் வேண்டுகோளின்படி அங்குள்ள காட்சிசசாலைப் பட்டியலை டாக் டர் ஒகெல் தயாரித்திருக்கிறார். திரும்பவும் டாக்டர் ஒகெ சம்பா ராஜ்யத்தில், புதை பொருள் அகழ்ந்து எடுத்ததுடன்

அங்கு ஒரு காட்சிச் சாலை நிறுவவும், அதைப்பற்றி விவரமான பட்டியல் தயாரிக்கவும் செய்திருக்கிறார். ஹெர்கிரீவ்ஸ் எழுதிய 'கலலிலே புத்தர் கதை என்ற புதகத்தில் லாகூர் காட்சிச் சாலையிலுள்ள காந்தாரச் சிற்பங்களைபபற்றி விவரித்திருக்கிறது. நாகபுரிக் காட்சிச் சாலையில் புதைபொருட் பிரிவில் உள்ள பழம்பொருள்களைபபற்றி ஸ்ரீ V. நடேச அயயர் விவரமான பட்டியல் தயாரிதிருக்கிறார். லக்னௌ காட்சிச் சாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் பொருள்களைப்பற்றி, 'சமீபத்தில் சேர்த்த சிறப வடிவங்கள்' என்று ஒரு குறிப்பு எழுதி, அதில் அவைகளை விவரித்திருக்கிறார். சாஞ்சியில் பல வருஷகாலம் இருநது பல ஆராயச்சிகள நிகழ்த்தியதோடு ஸர். ஜான் மார்ஷல் அங்குள்ள காட்சிச் சாலைப் பழம்பொருள்களைப் பற்றிய பட்டியல் தயாரிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார். 1910க்குப பின் இந்தியக் காடசிச்சாலைகளோடு நெருங்கிய தொடர்பைப் புதை பொருள் சோதனையாளர்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதன் பின், அகழ்வதன் மூலமும் ஆராய்ச்சி செய்வதன் மூலமும் கிடைத்த பொருள்களால காட்சிச் சாலைகளை வளப்படுத்தியதுடன், அப்பொருள்களைத் திருத்தமாக ஒழுங்குபடுத்தி வைப்பதிலும் அக்கறை காட்டியிருக்கிறார்கள். இத்துடன் தொடர்ந்து வேலை செய்த R.D. பானர்ஜி, ராம்பிரசாத் சண்டா, N. G. மசூம்தார் முதலிய சூப்பிரன்டுகள பல கையேடுகளும் சிறு புத்தகங்களும் எழுதியிருகிறார்கள். பெரிய காட்சிச் சாலைகளில், விலங்கினம் முதலிய பிரிவுகளின் பட்டியல்கள் தயாரித்து அப்போதைக்கப்போது வெளியிட்டிருக்கிறார்கள். நாகபுரிக் காட்சிச் சாலையில உள்ள பாம்புகள், பறவைகள், மீன்கள், விஷ ஜந்துகள், மூலையூட்டும் பிராணிகளைப்பற்றி எல்லாம் பல புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. சென்னைக் காட்சிச் சாலையிலும், இயற்கை வரலாறறுப் பிரிவில் அதிக கவனம் செலுததி, விலஙனகிதைப்பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அங்குள்ள காவலாட்களும், பம்பாய் வேல்ஸ இளவரசர் காட்சிச் சாலையின ஊக்கம் நிறைநத காவலர் ஸ்ரீ B.H. பிரேட்டரும் சுவையான பல வெளியீடுகளை வெளியிட்டிருகிறார்கள். இயற்கை வரலாற்றுக் கழகத்தார் வெளியிட்ட அருமையான வெளியீடுகள் இந்தப் பிரிவிறகே தக்க ஆதரவை அளித்திருக்கின்றன. டார்ஜிலிங் இயற்கை வரலாற்றுக் கழகத்தார் மூன்று மாதஙகளுக்கு ஒரு முறை வெளியிடும் பததிரிகை, டாஜிலிங் காட்சிச சாலை பரப்பும் கல்விப பணிக்கு மிகவும் உதவி இருக்கிறது.

டேராடூன் வன ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த காட்சிச் சாலை அதிருஷ்டமுடையது. போதிய பணம் இருப்பதனால் அதனால் பல வெளியீடுகளை வெளியிட முடிகிறது. இந்த அருமையான காட்சிச் சாலையிலிருந்து வெளி வரும் வெளியீடுகளோ பற்பல; பலதரப்பட்டவை. கோயம்புத்தூரில் உள்ள காஸ் வனக்காட்சிச் சாலையினர், வனத்தாவரத்தைப் பற்றியும், மரங்களை இனம் பிரிகும் வகைகளைப பற்றியும் சிறு புத்தகஙகள் வெளியிடடிருக்கிறார்கள். புதைபொருள், கலை சம்பநதமான விஷயங்களுக்கும, விலஙகினம், மானிடவர்க்கம், தாவர சம்பந்தமான விஷயங்களுக்கும் பல வெளியீடுகளைச் சென்னைக் காட்சிச் சாலையார வெளியிட்டிருக்கிறார்கள.

வேல்ஸ் இளவரசர் காட்சிச் சாலை கலை சம்பந்தமாகச் சுவையான பல வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறது என்றாலும் மத்திய ஆசியப பழம்பொருட காடசிச் சாலை கலைப்பகுதியைப் பற்றி வெளியிட்டிருக்கும் வெளியீட்டைப்போல மற்றக காட்சிச் சாலைகள் வெளியிடவில்லை. சமீபத்தில் இநதிய காடசிச சாலை, இகாலததில் சிறநத ஓவியர் எனறு பெயர் பெற்ற அபனீந்துரநாத தாகூரது கலைலையப்பற்றி ஓர் அழகான புத்தகத்தை வெளியிட்டிருக்கிறது.

சரித்திரக் கழகத்தோடு தொடர்பு கொணடுள்ள சில காட்சிச் சாலையாகள், அவர்களது பத்திரிகைகளிலே, அவர்கள் ஆராய்ச்சியை வெளியிட்டு வருகிறார்கள். ஆனால், ராஜஷாகியில் உளள பரேந்திரா ஆராய்ச்சிக் கழகத்தார், கௌஹாதியில் உளள காமரூப அனுசந்தான சமிதி, தாகாவில் உள்ள கணட ஆராய்சசிகழகம், பூனாவில் உள்ள டெக்கான் கல்லூரி பட்டம் பெற்றபின் செய்யும் ஆராய்ச்சி நிலையத்தார் வெளியிட்டிருக்கும் சிறு புத்தகங்களும் மிகவும் உபயோகமானவை.

காட்சிச்சாலை விளக்கச் சம்பந்தமான பொதுஜன சேவை.

விலை அதிகம் இல்லாத படக்கார்டுகள், வழி காட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றையே பொதுமக்கள் பெரிதும் விரும்புவார்கள். சென்னைக் காட்சிச் சாலையார் வெளியிட்டிருக்கும் படக்கார்டுகளும், அஜந்தாக் குகைப் புகைப்படங்களும், இந்தியாவின் வெளியீடுகளில் சிறந்தவை. ஒவ்வொரு காட்சிச் சாலையினரும் அவரவர்களைக் படக் கார்டுகள் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. சமீபத்தில் தோன்றிய அசுதோஷ காட்சிச் சாலையும் படக்கார்டுகள வெளியிட்டிருக்கிறது. இந்தத் துறையில் இந்தியக் காட்சிச் சாலை, வேல்ஸ் இளவரசர் காட்சிச் சாலை, பாட்னா, பரோடா, ஆஜ்மீர், குவாலியர் முதலிய காட்சிச் சாலைகளின் சேவையைப பற்றி அதிகம் சொல்ல வேண்டுவதில்லை. சில காட்சிச் சாலைகளில பொது ஜனங்களுக்குப் பயன்படும் சொற்பொழிவு அரங்குகள் இருக்கின்றன. காட்சிச் சாலைப் பணியில இந்தச் சேவையும் முகியமான ஒன்றுதானே! காட்சிச் சாலைகளுக்குப் புதிய கட்டடம் கட்டும்போது இந்த அமிசத்தையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டே கட்டுகிறார்கள. கூடுமானால், ஒவ்வொரு காடசிச் சாலையும் பொது ஜனங்கள் விரும்பும் சினிமாப்படங்கள் தயாரித்துக் காட்ட வேண்டும். ஒரு காட்சிச் சாலையில் கற்சிலைகள், செப்புச்சிலைகள் நிறைய இருந்தால், அங்குக் கல்லில் சிலையை எப்படிச் செதுக்குவது, உலோகத்தில் வடிவத்தை எப்படி வார்ப்பது எனனும் முறைகளையும் சினிமாபபடம் மூலம் காட்ட ஏற்பாடு செய்யலாம். இதைப்யோல ஒரு கலைக்கூடத்தில், ஒரே வடடாரத்தில் ஒரே காலத்தில் கிடைத்த சில உருவங்கள் இருந்தால், அவைகளையும் அவைகளைச் சார்ந்த சிற்ப வடிவங்களையும் படம் எடுத்து, கலை வளத்தைச் சினிமாவாகக் காட்டவேண்டும் இன்னும் இயற்கை வரலாறறுப் பிரிவில் உள்ள பொருள்கள், பறவைகள், மிருகங்கள், அவை வாழும் இடங்கள், அவை எப்படி வாழ்கின்றன என்பதைச் சினிமாப்படங்கள் மூலம் காட்டுவதனால நன்றாக விளக்க முறும்.

பொதுமக்களது ஆர்வத்தைத் தூண்டுவதன் மூலமும் அவர்கள் உள்ளதில் பதியவைப்பதன் மூலமுமே காட்சிச் சாலைகள் இனி வளரவேண்டும். அதற்கென விளக்கப் படங்கள் நிறைந்த புத்தகங்கள் வெளியிட வேண்டும். கண் கவரும் முறையிலும் பொது மக்களது கற்பனையைத் தூண்டும் முறையிலும் இந்த இலக்கியம் வளரவேண்டும்.

காட்சிச் சாலையின் காவலர்.

பேசப் பொருள்கள் நிறைந்த காட்சிச் சாலையில் பேசும் நபர் அதன் காவலரே. காட்சிச் சாலையின் வளாச்சி தளர்ச்சி எல்லாம் அக்காவலருடைய ஆற்றல், ஆர்வம், அறிவு, பயிற்சி முதலியனவற்றையும், அவற்றுடன் அவர் பொதுமக்களிடமும் நிர்வாகிகளிடமும் பெறும் அனுதாபத்தையும் ஒத்துழைப்பையும் பொறுத்தனவே. அநேக காட்சிசாலைகளில் காவலரோ கணகாணிப்பாளரோ இல்லை. எதோ காவலா என்ற பெயரளவில் இருகக்ம இடங்களிலும கவர்ச்சிகரமான சம்பளவிகிதமோ அல்லது உத்தியோகமோ இல்லாத காரணத்தால், அவர்களிடம் ஓர் அலட்சியம் காணப்படுகிறது. அதனால், அநேக காட்சி சாலைகள் வளர்வதற்குப் பதிலாக தளர்கின்றன. காடசிச் சாலைப் பொருள்களின பாதுகாவலும் அவைகளைப் பறறிய அறிவை விரிவாகிப்பதும மடடுமே அவர் வேலையல்ல; இன்னும் அநேக வேலைகள அவர் செய்ய வேண்டியிருக்கின்றன. பல கேளவிகளுக்கு அவர பதில் சொலலியாகவேண்டும்; பலபிரசினைகளைத் தீர்க்கவேண்டும்; பொதுமகளிடம் ஒரு சுவையை உருவாகக வேண்டும். அத்துடன நல்ல புலமையோடு காட்சிச் சாலைக்கு வரும அறிஞர்களோடு பேசத் தெரியவேண்டும். சாட்சிச் சாலை ரஸிகர்களையும்

பொதுமக்களையும் திருத்திப்படுத்தும் வகையில் பொருள்களை அலங்கரித்து வைக்கத் தெரிய வேண்டும். காட்சிப் பொருள்களுக்குச் சுருக்கமாகவும், காண வருபவர் கருத்தைக் கவரும் வண்ணமும் சீட்டு எழுதி வைக்கத் தெரியவேண்டும்; இனிமையும் எளிமையும் அதே சமயத்தில் கவர்ச்சியும், நல்ல தகவல்கள் நிறைந்தும், வருபவர்கள் வாங்கத்தகுந்த குறைந்த விலையிலும் கையேடுகள் எழுதி வெளியிடத் தெரிந்தவராகவும் இருக்கவேண்டும்; அவர்தான் காட்சிச் சாலையில் உள்ள பொருள்கள் அத்தனைக்கும் பட்டியல் தயாரிக்கவேண்டும். தயாரிக்கும் பட்டியல் காட்சிப் பொருள்களின் முழுவிவரம் கொடுப்பதுடன், அறிஞர்கள் விரும்பும் தகவல்களையும் தரவேண்டும். அதே சமயத்தில் காண வருபவர் சோர்வு அடைந்துவிடா வண்ணம் அவர்களுக்கு அவசியமான வசதிகள் எல்லாம் செய்துகொடுக்கவும் வேண்டும். கலைமகள் கொலுவிருக்கும் இடமாகக் குளிர்ச்சியும் அமைதியும் நிறைந்து களிப்பூட்டும் இடமாகவும் காட்சிச் சாலை அமையவேண்டும். காண வருபவர்கள் அறிவை விருத்திபண்ணிக்கொள்வதுடன் அப்படியே உல்லாசமாகச் சில மணி நேரம் கழிக்கும் இடமாகவும் காட்சிச் சாலை இருக்கவேண்டும்.

புதைபொருட் கலாசாரக் காட்சிச்சாலைகள் :

ஆந்திரப்பிரதேசம்

ஆலாம்பூர்

ஜனத்தொகை—10,000.

புதைபொருள் நிலையான காட்சிச் சாலை :

தோற்றம்.—1952.

வரலாறு.—இக்காட்சிச் சாலை 1952-ல் சிற்பவடிவங்கள், கல்வெட்டுகள, மற்றும் கலைப்பொருள்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1953-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 10-ஆம தேதி அன்று உதவி ஜனாதிபதி டாக்டர் S. ராதாகிருஷ்ணன் இங்கு விஜயம் செய்திருக்கிறார். அதன் பின் புகழ் பெற்ற பல பெரியார்கள் இதைப் பார்வையிட்டு இக்காட்சிச் சாலை வளரத்துணை புரிந்திருக்கிறார்கள்.

நோக்கமும் பொருள்களும்.—இங்குள்ளனவெல்லாம், சிற்பவடிவங்கள், கல்வெட்டுகள், சிறந்த வேலைப்பாடுடைய கட்டடக் கலைத்துணுக்குகளே. இந்தியக் கலையில் ஆர்வமுள்ள அறிஞர்களின் கவனத்தை இக்காட்சிச் சாலை ஈர்க்கிறது.

விளக்க நடவடிக்கைகள்.—இங்கு இன்னும் காவலர் நியமிக்கப்படவில்லை. ஆதலால், இங்குள்ள பொருள்களைப் பற்றி விளக்கம் கூற வசதி இல்லை என்றாலும் ஆங்கிலத திலும் தெலுங்கிலும் விவரச் சீட்டுகள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

வெளியீடுகள் —இல்லை.

வேலை செய்யும் நேரம்:—பகல் எல்லா நாட்களிலும் 9 மணி முதல ஒருமணி வரை—2 மணி முதல் 5 மணி வரை திறந்திருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக்குழு.—ஆந்திரப் பிரதேச சர்க்கார் புதைபொருள் டைரக்டர் நிர்வாகத்தில் இருக்கிறது.

ஊழியர்கள்.—இல்லை.

நிதி நிலை.—தனியாள் ஒருவரும் ஏற்படுத்தப்படவில்லை.

விளக்கக் குறிப்பு.—தக்ஷிணகாசி என்று வழங்கும் ஒரு முக்கியமான ஸ்தலத்தில், இந்த நிலைத்த காட்சிச் சாலை அமைந்திருக்கிறது. பாதிக்கூரை வேய்ந்ததும், மீதிப்பாதி திறந்திருப்பதுமான ஒரு பெரிய மண்டபத்தில் இக்காட்சிச் சாலையை நிறுவியிருக்கிறார்கள். வசதியான கட்டடம் இனி மேலேதான் ஏற்படவேண்டும். திலைசரி 100 பேருக்கு மேல் வந்து பார்க்கிறார்கள். மகாசிவராத்திரி, தசரா முதலிய திருநாட்களிலும், அங்குள்ள தர்காவில் நடக்கும் உர்ஸ் பண்டிகையிலும், பல யாத்திரிகர் கூட்டம் அதிகமாக வரும். அந்த வட்டாரத்தில் கிடைத்த பொருள்களைக் கொண்டே உருவான காட்சிச் சாலை இது.

அமராவதி

ஜனத்தொகை:—6,000.

புதைபொருட் காட்சிச்சாலை.

தோற்றம்.—1951.

வரலாறு.—சென்னைக் காட்சிச் சாலைக்கும் பிரிட்டிஷ் காட்சிச் சாலைக்கும் அனுப்பியது போக, பிரபலமான அமராவதி ஸ்தூபி இருந்த இடத்தில் பரவிக் கிடந்த சிற்ப வடிவங்களைச் சேர்த்து உருவாக்கியிருக்கிறார்கள். முதலில் ஒரு குடிலில் வைத்திருக்கிறார்கள். பின்னர் 1951-ல் ஒழுங்காக அடுக்கிக் காணவருபவர்களுக்கு வசதியாக வைத்திருக்கிறார்கள். காட்சிச் சாலை, கட்டடம் கட்டச் சுமார் ரூ. 90,000 வரை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். தரைப்படம், மதிப்பீடு எல்லாம் தயாராகிவிட்டன.

நோக்கமும் பொருள்களும்.—ஸ்தூபியில் உள்ள கற்பலகைகள் நெடியதும் குறுகியதுமான கிராதிகள், மதில் முகடுகள், புத்தர் சிலைகள, இன்று அமராவதி சிற்பங்களின் நூல் வகைகளையும் விளக்கும் ஸ்தூபியின் செதுக்கிய துண்டுகள் இங்கு இடம் பெற்றிருக்கின்றன. முந்திய பிந்திய காலத்துக் கல்வெட்டுகள் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—காண வருபவர்கள் விரும்பினால் பாதுகாவலர் பொருள்களுக்கு விளக்கம் கூறுவர். ஆங்கிலத்திலும் தெலுங்கிலுமாக இரண்டு பாஷைகளிலும் காட்சிப் பொருள்களுக்குச் சீட்டு எழுதி வைத்திருக்கிறார்கள்.

வெளியீடு.—இல்லை.

வேலை செய்யும் நேரம் :—காட்சிச் சாலை எல்லா நாட்களிலும காலை 9 மணி முதல் மாலை 5-30 மணி வரை திறந்து வைக்கபடுகிறது.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—இந்திய சர்க்கார் புதைபொருள் இலாகாவின் காட்சிச் சாலைப் பிரிவினைழ் நடக்கிறது.

ஊழியர்கள்.—நாகார்ஜுன கொண்டாக் காட்சிச் சாலைக் காவலரைச் சேர்ந்த ஒரு பாதுகாவலரும், மூன்று சிப்பந்திகளும்.

நிதி நிலை.—வருஷாந்தரச் செலவு ரூ. 6,000.

விளக்கக் குறிப்பு.—நல்ல இடத்தில், காண வருபவர்கள் வருவதறகு வசதியாகக் காட்சிச் சாலை அமைந்திருக்கிறது. தினசரி 70 பேர்களும் ஒரு வருஷத்தில் 25,000 பேர்களும் வந்து காணகிறார்கள். விடுமுறை நாட்களில் இன்னும் மிகுதியாக வருவார்கள். மேலும், காட்சிச் சாலையைப் பார்த்து ஆராய்ச்சி செய்ய மாணவர் பலர் வருகிறார்கள். தோண்டி எடுத்தவையும் தேடிச் சேகரித்தவையுமே இங்குள்ள பொருள்கள்.

ஐதராபாது

ஜனத்தொகை—10,58,722.

(i) ஐதராபாது காட்சிச்சாலை

தோற்றம்.—1930.

வரலாறு.—ஹிஜிரி 1349-ல் (கி.பி. 1930) இந்த ஐதராபாது காட்சிச் சாலை மாட்சிமை தங்கிய நைஜாமால் ஆரம்பிக்கப் பட்டது. நன்முக அமைக்கபபட்ட ஒரு பொதுப் பூங்காவில்

இக்காட்சிச் சாலை அமைக்கப்பட்டது. தோண்டி எடுக்கப்பட்ட பல பொருள்கள் இங்குச் சேர்க்கப்பட்டன. அஜந்தா எல்லோராவில் உள்ள சுவர்ச் சித்திரங்கள் பெரிய அளவில் நகல் எடுக்கப்பட்டு இங்கு வைக்கப்படிருக்கின்றன.

தோக்கமும் பொருள்களும்.—முக்கியமான பொருள்கள். (1) சிற்பங்கள், (2) கல்வெட்டுகள், (3) காசுகள், (4) இந்தியக் கலையின் சிறு படங்கள், (5) அஜந்தாச் சித்திரங்களின் நகல்கள், (6) பித்ரிபாண்டங்கள, (7) உலோகப் பாண்டங்கள், (8) பழைய சைனப் பாண்டங்கள், (9) சரித்திரப் பழம் பொருள்கள், (10) துப்பாக்கிகள், ஆயுதங்கள், (11) நெசவுத் துணிகள், (12) விளக்கப்படங்களுடன் கூடிய அரபி, பாரசீகப் புத்தக நகல்கள், (13) இன்றைய கலை அமிசங்கள், (14) மற்றவை. கி பி. முதல், இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்த சதவாகனர்கள் காலத்துச் சிற்பங்களிலிருந்து காகதீயர்கள் காலத்துச் சிற்பங்கள் வரை அடங்கியிருக்கின்றன. பானிகிரி, கொண்டாபூர், திரிமூலகிரி முதலிய இடங்களில் உள்ள அந்தப் பழைய சிற்பங்கள் முக்கியமானவை. செப்புப் படிவங்களில், வாரங்கல்லில் கிடைத்த கலையழகுடன் கூடிய ஒரு சிறிய தொகுதி குறிப்பிடத் தகுந்தது.

இக்காட்சிச்சாலையில் உள்ள சாஸனப் பகுதியில், சில மிகப் பழைய ஏடுகள், ராணி ருத்ராம்பா காலத்து (கி.பி.1273) கோட்டகிரிப் பட்டயங்கள் யாதவ அரசன் ராமசந்திரதேவன் காலத்துப் பட்டயங்கள், இன்னும் முக்கியமான செப்புப பட்டயங்கள் எல்லாம் இருக்கின்றன. இன்னும் வெளியிடப் படாத பல காசுகள், சதவாகனர் காலத்துக் காசுகளின் புதியனவாகக் கண்டுபிடித்தவைகள் எல்லாம் இங்கு நிறைய உண்டு. யாதவர்கள், விஜய நகர மன்னர்கள், பாமினி, மற்றும் டெக்கான் ராஜ்யங்களின் காசுகளும் இருக்கின்றன. நல்ல பழைய தோட்டாக்கள், ஆயுதங்கள் பல சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இவை டெக்கான பிரதேசத்தில் செய்யப்பட்டவைகளாக இருக்கவேண்டும. பழைய காலத்தில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் வியாபாரத்தில் எவ்வளவு தொடர்பு இருந்தது என்று காட்டக்கூடியதும, சீன நாட்டிலிருந்து இங்குக் கொண்டு வரப்பட்டதுமான சைனப் பாண்டங்கள் பல இருக்கின்றன. இதற்கென்று ஒரு தனிப் பிரிவே இருக்கிறது. இங்குச் சேகரிக்கப்பட்டிருக்கும் பித்ரி பாண்டங்கள், அளவிலும அதிகம்; புதியவைகளுங்கூட. அஜந்தா எல்லோராவில் உள்ள சித்திரங்களை அவைகள் அங்கிருக்கும் அளவிலும் வண்ணத்திலும் தீட்டி அலங்காரமாக மாட்டியிருக்கிறார்கள். 1913-ல் இவைகளை வைப்பதற்கு எனறு கட்டிய விசாலமான கட்டடத்தை உதவி ஜனதிபதி டாக்டர் S. ராதாகிருஷ்ணன் திறந்து வைத்திருக்கிறார்.

விளக்க நடவடிக்கைகள்.—3,000 புத்தகங்கள் அடங்கிய ஒரு சிறு புத்தகசாலை இலாக்காவின் உபயோகத்திற்கென்று வைக்கப்படிருக்கிறது. சொற்பொழிவுகள நடத்த ஏற்பாடுகள் உண்டு. கண் காட்சிகளும் நடத்துகிறார்கள். ஒளி நிழற் படங்கள் தயாரிக்கப்படிருக்கின்றன. வரும் மாணவர்களுக்கு உதவி வழி காட்டிகள் உண்டு.

வெளியீடுகள்.—

1. பார்மதி—ஒரு புதிய மொகல் தங்சாலை. K. M. அஹமத்—ரூ. 1.

2. கொண்டாப்பூரில் கிடைத்த சதவாகன அரசரின் ஒரு புதிய காசு—டாக்டர் ராமராவ்—ரூ. 1.

3. மிஷ வமிசத்தின் இன்னும் சில காசுகள். மாஸ்கி கொண்டாப்பூர் புதை பொருளகள்: V. V. மிராஷி—ரூ. 1.

4. சதவாகனரது ஈயக காசு. கொண்டாப்பூர் புதை பொருள்.—V. V. மிராஷி—ரூ. 1.

5. ராஜ்யக் காட்சிச் சாலையில் சில அபூர்வக் காசுகள்.—பாமனியும் மொகலும்—K. M. அஹமத் ரூ. 1.

6. ராஜ்யக் காட்சிச்சாலையில் சில அபூர்வ மொகல் காசுகள். ஐதராபாது—டெக்கான்.—K. M. அஹமத்—ரூ. 1.

7. கொண்டாப்பூர் புதைபொருளாகக் கிடைத்த சுமாக கிராமக அரசரது காசுகள்.—V. V. மிராஷி—ரூ. 1.

8. கொண்டாப்பூர்ப் புதைபொருளாகக் கிடைத்த சில அபூர்வ மிஷ காசுகள்—V. V. மிராஷி—ரூ. 1.

9. ஐதராபாது ராஜ்யத்தின் புதை பொருளாகக் கிடைத்த சுகக்ஷத்திரப்ப, திரிகூடகக் காசுகள்—ரூ. 1.

10. ஸ்படிக புத்தர் தலை.—ரூ. 1.

11. சாளுக்கியன் தொங்கட்டங்கள்.—K. M. அஹமத் ரூ. 1.

12. ஐதராபாது காட்சிச் சாலையிலுள்ள அரபி, பாரசீக, உருது கையெழுத்துப் பிரதியின் பட்டியல்—முகம்மது கவுஸ்—ரூ. 3.

13. மத்னவி மௌலானாரூம்—இமாதின் பேரனுக்குப் பேரனை உஸ்தாத் அப்துல் கரீம் எடுத்த ஹி.1103-ல் உள்ள கையெழுத்துப் பிரதி போட்டோப் பிரதி.

வேலை நேரம்.—வியாழன் மற்றைய கெஜட்டில் வெளியான ரஜா நாட்களைத் தவிர்த்து, மற்ற நாட்களில் பகல் 9-மணி முதல் 12-மணி வரையும், 2-மணி முதல் 5-மணி வரையும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—ராஜ்யக் காட்சிச்சாலையானதால் ஆந்திரப் பிரதேச சாககார் கல்வி இலாக்கா செக்ரிட்டரியின் ஆளுகைக்குள் இருக்கிறது. ஒரு காவலர் காட்சிச்சாலையைப் பாதுக்கொள்கிறார். புதைபொருள் இலாக்கா டைரக்டர் கண்காணித்துக்கொள்கிறார்.

ஊழியர்கள்.—காவலர், உதவிக் காவலர், பட்டியல் தயாரிப்பாளர் கூடத்தின் உதவியாளர், காசுகளை வைத்திருப்பவர், கணக்கர், தாங்கு குமாஸ்தாக்கள், தச்சர், கொத்தர், பொறியர், 26 பியூன்கள்.

நிதி நிலை.—வருஷத்திற்கு ரூ. 70,000 செலவு.

விளகக் குறிப்பு.—நல்ல பொருத்தமான இடத்திலே ஐதராபாதிலே இக்காட்சிச் சாலை அமைந்திருக்கிறது. தினசரி 500 பேரும வருஷத்தில் 150,000 பேரும் பார்க்க வருகிறார்கள். கட்டட வசதி போதாது. புதிய கட்டடம் கட்ட முயறசி செய்யப்பட்டு வருகிறது. புதைபொருள் சோதனைகளில கிடைப்பதும வாங்குவதும களஞ்சியச் சேமிப்புச சட்டத்தினபடி கிடைப்பதுமே இங்குச் சேர்க்கப்படுகின்றன. இருவரும செயதுகொளளும் ஒப்பந்தத்தின்பேரில், மாதிரிப் பொருள்களை மற்றக் காடசிசாலைக்குக் கொடுக்கவும் அங்கிருந்து பெறவும் வசதி உண்டு. காட்சிப் பொருள்களின் சிறப்பியல்புகளை விளக்க, படங்கள மாதிரிகள் எல்லாம் ஓர் அளவு தயாரிக்கப்பட்டிருக்கின்றன. விளாச் சீட்டுகள ஆங்கிலம், உருது, தெலுங்கில் எலலாம் இருக்கின்றன. இந்தியக் காடசிச் சாலைக் கழகத்தின் நிலைய அங்கத்தினர் பதவியும் வகிக்கிறது.

(ii) சாலர்ஜங் காட்சிச்சாலை

தோற்றம்.—1951.

வரலாறு.—நவாப் சாலாஜங் என்று வழங்கப்படும் மிர்யூசுப் அலிகான் பெயர் இக்காட்சிச் சாலைக்கு இடப்பட்டிருகிறது. அவர் சேகரித்த கலைப் பொருளகளே இங்கு நிறைந்திருக்கின்றன. சாலர்ஜங் குடும்பத்தில இவர் தாம கடைசி வாரிசு. இவர் நுண்ணிய கலை அறிவு படைத்தவர். 1949-ல் இவர் இறக்கும்போது இக்காட்சிப்பொருளகளை ஒழுங்கு படுத்தி அடுக்கிக் காட்சிச்சாலை திறக்க விரும்பிய

இவரது கனவு நனவாகவில்லை. அந்தக் கலைப்பொருள் களின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஐதராபாது சர்க்கார் இவருடைய நகர மாளிகையிலேயே அடுக்கி வைத்தது. மேல் நாட்டுக் கீழ்நாட்டுப் பாணியும் கலந்த முறையிலே கட்டப்பட்ட தொரு கட்டத்திலே இந்தக் காடசிச் சாலையிலே 16–12–51 அன்று இந்தியப் பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு திறந்து வைத்தார். இந்தக் காட்சிச்சாலையை இந்திய சர்க்கார் 2–12–58–ல் தனது மேற்பார்வையில் வைக்க எடுத்துக் கொண்டது.

நோக்கமும் பொருள்களும்.—இக்காட்சிச்சாலையில் இரண்டு பிரிவுகள் உள்: மேலை நாட்டுக்கலை, கீழை நாட்டுகக்கலை. கீழை நாட்டுக்கலைப் பொருள்கள 40 பெரிய அறைகளையும் தாழ்வாரங்களையும் நிரப்பி இருக்கின்றன. திருஷ்டாந்தப் படங்கள் நிறைந்த கொரான, சிறந்த கவிஞர்களுடைய முதல தரமான நூல்கள், நல்ல எழுத்தில, சிறந்த ஓவியர்கள் தீட்டிய பாடல்கள், உயாநத கையெழுதது்ப் பிரதிகள் நிறைய அங்க உண்டு. மிர் அலியால் கதீப் எழுதிய ரௌசத் உல் முஹிபின், இமாதின் திறமையைக் காட்டும் லவாயிஜாமி, சுல்தான் அலி அல் மேஷதியின் கையெழுத்திலேயே சிரூய்குஸ்ரு, யகூத அல் முஷ்டாஷிமி நாஸ்க் முறையில் எழுதிய கொரான் ஆகிய எல்லாம் அங்கே உண்டு. சுங், மிங் காலத்தியவையும் (கி.பி. 1,000—1,500) அதற்குப் பிந்திய சிங்—ஹி காலத்தியவையும் (கி.பி. 1,500—1,700) ஆன பழைய சீனப் பாண்டங்கள நிறைய இருக் கின்றன. சமயச் சின்னங்களும், அழகிய வெண்கலங்களும் பளபளப்பும் உடைய செலபன் பாண்டங்களும் இங்கு அதிகம். போர்க்கருவிப் பகுதியில் இருப்பவைகளில் அநேகம் மொகலாயர் காலத்தவை. மற்றவை, மன்னர்கள், ராஜகுமாரகள் பரம்பரையைச் சோந்தவை. இங்குள்ள ஜேட செதுக்குவேலை, சிறந்த வேலைப்பாட்டிற்கும் தரத்திற்கும் எடுததுக்காடடானவை. மரகதமும் மாணிக்கமும் வைத்து இழைதத நூர்ஜஹான் உடைவாள், வைரம், மரகதம், மாணிகம் வைத்து இழைத்த ஜஹாங்கீரது உடைவாள், ஷாஜகானது எனமல் பூசப்பட்ட கட்டாரி, அவுரங்கஜீபின் ஜேட் உடவாள், தானுஷாவியின் நவரத்தின கத்தி, அவுரங்கசீபன் சாதாரணக் கத்தி, இங்குள்ள ஆயுதங் களில அழகானவை, முக்கியமானவை. ஜேட பகுதியில், சிறந்த பொருளகள் வைக்கப்பட்டிருக்கினறன. மூலாம் பூசிய வாசனைப்பெட்டி, கணணகள் பினபுறம், ஹுக்கா குழாய், வில்வளையங்கள் எலலாம் அழகிய மாதிரிப் பொருள கள் முந்திரி வர்ண சைன ஷேடுகளும், தூயவெளளை நிற மொகல ஷேடுகளும் அவைகளுக்கு எனறே தயாரிதத அழகிய பெட்டிகளில அலங்காரமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

கீழைநாட்டு மாளிகைகளில மிகவும் சிறப்பான அமிசமான சமக்காள விரிப்புகளின பலரகங்கள் இங்கே இடம் பெறறிருக் கின்றன கசான் நாட்டு வெல்வட் சமக்காளங்கள, கிர்மன் கற்பகதரு சமக்காளங்கள், டப்ரீஜ், ஷிராஜ், இஸ்பகான, ஹீரத்து முதலிய இடங்களில் உளள தறிகளில் இருந்து வந்ததும் சிறந்த வேலைப்பாடும் அழகிய வண்ணக் கோலங்கள் நிறைந்ததுமான சமக்காளங்கள ஏராளம். இந்தியததறிகளில் ஆங்கலததறிகளில் உருவானவைகளும் இடம் பெற்றிருக்கின்றன. ஜெயப்பூரிலிருந்து, ஜரிகை வேலைகள் நிறைந்த சமக்காளமும், தந்த சமக்காளமும் குறிப்பாகக் கண்டு மகிழவேணடிய பொருள்கள்.

இந்திய சித்திரகூடப் பகுதியில் குறிப்பிடத் தகுந்த மொகலாயச் சிறிய படங்கள் இருக்கினறன. அரசிளங் குமரர்கள, குமரிகள், தெக்கணத்து முறையில் எழுதபபட்ட நாகரணிப் படங்கள் எலலாம் அங்கே உண்டு. மூன்று அறைகளில் காங்கிராச் சித திரங்களும், ராஜபுததிரச் சித்திரங் களும் அங்கே வைக்கபபட்டிருகின்றன. டெககான் சித்திரப் பகுதியில் நைஜாம் அலிகான் வேடடைக்குப்போகும் காட்சியைத் தீட்டிய இரண்டு பெரிய படங்கள், சுகததாய் படங்களும் இருக்கின்றன. இன்றைய ஓவியர்களான Dr. ராய் சௌதரி, தாகூர் சகோதரர்கள், மாணிஷி டே, சாரதா உசில் முதலியவர்கள் படங்களும் சேகரிக்கப் பட்டிருக்கின்றன.

மரத்தாலும், உலோகத்தாலும் செய்த சிற்ப வடிவங்களும் இருக்கின்றன. சோமாஸகந்தர், நடராஜர், தமிழ் நாயன் மார்கள், மதுரை, கொசசி, கள்ளிக்கோட்டையில் செய்த மரத்தில் செதுக்கிய வடிவங்கள் எல்லாம் இங்கு இடம் பெறறிருக்கின்றன. ஆசியநாட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களில், எகிப்து, டமாஸ்கஸ் பிரதேசத்துச் சாமான்களும், இந்தியநாட்டு தட்டுமுட்டுச் சாமானகளில், காஷ்மீர், தனனிந்தியச் சாமான் களும் இருக்கின்றன. இவைகளில் முக்கயமாகக் குறிப்பிடக் கூடியவை, திபபுசுல்தான் காலதது வேலை என்று பாராட்டப் படக்கூடிய இரண்டு தந்த நாற்காலிகளும், மேல்நாட்டுத் தட்டுமுடடுச் சாமான்களின் பகுதியில், பதினலாம் லூயி, பதினைந்தாம் லூயி என்பவர்களோடு தொடர்பு கொண்ட சாமான்களும் உண்டு. இத்தாலியச் சிற்பி ஒருவனல் மரத்தில் செய்யப்பட்ட மெபிஸ்டோபிலிஸ, மர்கரித்தா சிறபவடிவங் களும், சீனப் பாண்டங்களும், பளிங்குக் கண்ணாடிகளும் இடம் பெற்றிருக்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் வேலையன திறத்தை விளக்கும் பென்ஜானி செயத முககாடிட்ட ரேசசலின சலவைக் கல் சிலை கண்டு மகிழத் தக்கதொன்று.

மேலை நாட்டுச் சரித்திர அரங்கில், லாண்ட்சீர், வாட்ஸ், லேய்ட்டன, கூபபா, டச்சு, பிரிட்டிஷ், பிரெஞ்சு, இத்தாலி தேசத்து ஓவியர்களின் சித்திரங்களும் இருக்கின்றன. இவை தவிர, கான்ஸ்டபிள் எழுதிய இயற்கைக் காட்சிகள், ரூபென்வெஸ், ரப்பேல் ராட்டிசெல்லி, டிஷியன், வேலஸ்க்வஸ் முதலிய பிரபல ஓவியர்களின படங்களின் நகல்களும் சேர்க்கப்பட்டிருக்கினறன.

1956-ல, குழந்தைகள் பகுதி என்று தனியாய் ஒரு பகுதியைச் சோத்திருகிறார்கள். இதில் காலத்தாலும் கலை அழகாலும் சிறப்புற்ற பொம்மைகள பல அலங்காரிகப் படடு வைக்கப்பட்டிருக்கினறன. ஐரோப்பா, சைனு, ஜப்பான் நாட்டுப் பொமமைகளும், இநதியப் பொம்மை களோடு ஒப்பிட்டுப் பார்கும் வகையில் வைக்கப்பட்டிருக் கின்றன. பொம்மை, மின்சார ரயில், வீடுகள், சங்கீதப் பெட்டிகளுடன் பாடும் பறவை, கூவும் கானரிப்பறவை எல்லாம் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.–இக்காட்சிச்சாலை பொதுமக்களால் பாராட்டப்படுகிறது. இந்தியாவில் பல பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வரும் யாத்திரிகர்கள் ஐதராபாது வரும்போது இக்காட்சிச்சாலையப் பார்க்கத் தவறுவதில்லை. நவமபர் முதல் வாரத்தில் காட்சிச்சாலை வாரம் நடத்தும்போது காண வருவார் தொகை அளவுகுமேல் அதிகமாகிவிடும். அப்போது நுழைவுக் கட்டணத்தை மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் குறைத்து வருகிறார்கள். இதனல் பள்ளி மாணவர்களும் கலாசாலை மாணவர்களும சாரி சாரியாக முன்னேற்பாட்டுடன் வந்து கண்டு மகிழ்கிறார்கள்.

வெளியீடுகள்.–காட்சிச்சாலை நினைவு மலர் ரூ. 3. செலாடன், ஆயுதங்கள், இந்திய சித்திரங்கள், கையெழுத்துப் பிரதிகள், சமக்காளங்கள, பித்ரிச் சாமானகள், ஐரோபபியச் சித்திரங் களின் பட்டியல் விரைவில் வெளியிடப்படலாம் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

வேலை நேரம்.—வெள்ளிக்கிழமைகளும் மற்றும் ஈத்-உல் பிடர், ஈத் உல் சுகா, முகரம் 10 நாள், தூலணடி, நவாபு சலார்ஜங் தினம், முதலிய விழா நாட்களும் தவிர மற்ற நாட்களில எல்லாம் காலை 10-30 மணி முதல் மாலை 5-30 மணி வரை திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—ரூ. 1 பொது டிக்கட்டிற்கு. ஷேட் அறைக்கு 8 அணா. குழந்தைகள் பிரிவிற்கு 2 அணா. முன்னேற் பாட்டுடன் வரும் பள்ளி மாணவாகள், சிப்பாய்கள், கிசான்கள கூட்டதிற்கு அரைக்கட்டணம்.

நிர்வாகக் குழு.—காட்சிச் சாலையும், புத்தகசாலையும், ஆந்திரப்பிரதேச சர்க்காரால் நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளர், வருமானத் துறைக் குழுவின் அங்கத்தினர் ஸ்ரீ அனந்த ராமன், I.C.S. என்பவர் மேற்பார்வையில் நடந்து வந்தது. 1958ஐ டிசம்பர்மீ 2ஐ நிர்வாகத்தை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டது.

ஊழியர்.—ஸ்ரீ S. S. ரஸ்வி, ஜாயிண்ட் சூப்பிரண்டு, ஸ்ரீ S. M. அஹமத் ரஸ்வி, B.A., உதவி சூப்பிரண்டு, அரங்கின் உதவியாளர் நால்வர், கலைஞர்கள், படம் வரைபவர், 27 வேலைக்காரர்கள் (ஆண்), மூன்று வேலைக்காரிகள், 29 பாரசல், 2 மின்சார வேலை செய்பவர்கள், 2 தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள், தச்சர், 6 தூப்புக்காரிகள், கடிகாரம் ரிப்பேர் செய்பவர் என்பவர்கள் உண்டு. கீழ்நாட்டுப் புத்தகசாலைக்கு ஒரு சூப்பிரண்டு, 2 உதவி சூப்பிரண்டுகள், 2 எழுத்தாளர்கள், 2 அட்டவணை தயாரிப்பவர்கள், பைண்டர், பக்கம் தைப்பவர் எல்லாம் உண்டு. தாற்காலிக ஆராய்ச்சிப் பகுதியில், இரண்டு ஆலோசகர்கள், 5 ஆராய்ச்சி உதவி யாளர்கள், ஒரு பைண்டர் இருக்கிறார்கள்.

நிதி நிலை.—டிக்கட்டு விற்பனைமூலம் வரும் பணம், செலவைச் சரிக்கட்டுகிறது. எதிர்பார்க்கும் இந்த வருஷத்திய செலவு ரூ. 1,89,443 என்றால் எதிர்பார்க்கும் வரவு ரூ. 1,90,000-க்குக் குறைவில்லை.

விளக்கக் குறிப்பு.—இந்த சாலர்ஜங் காட்சிச்சாலை ஒரு தனி மனிதரின் முயற்சியால் அவருடைய வாழ்க்கைக் காலத்தில் அவராலும் அவர் குலத்தாராலும் சேர்க்கப்பட்ட கலைப் பொருள்களே. இவற்றோடு புதியனவாகப் பெற்றுச் சேகரிக்கப் பட்டவைகளும் இருக்கின்றன. இவை பொது மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றன. வருஷத்திற்கு 148,000 காட்சி யாளர்களை வருகிறார்கள். தினசரி 500 போ வந்து காண் கிறார்கள். இக்காட்சிச்சாலைக்கு ஒரு புதிய கட்டடம் கட்டத் திட்ட மிட்டிருக்கிறார்கள். இது விரைவில் தேசிய ஸ்தாபனமாகவே வளரும்.

கொண்டாப்பூர்

ஜனத்தொகை—2,000.

புதைபொருட்காட்சிச்சாலை

தோற்றம்.—1952.

வரலாறு.—கொண்டாப்பூர் முதலில் ஐதராபாத் ராஜ்யத்தில் இருந்தது. ராஜ்ய புதைபொருள் இலாக்கா, அங்கே அகழ்ந்து கி.மு. 200-க்கும், கி.பி. 200-க்கும் இடையிட்ட சாதவாகன காலத்து அற்புதப் புதைபொருள்களை எடுத்து இந்த ராஜ்யம் இந்தியாவுடன் இணைந்தபின் புதைபொருள் இலாகாவினரே இந்த இடத்தின் மேற்பார்வையை ஏற்றுக்கொண்டு காட்சிச்சாலையை உருவாக்கி யிருக்கிறார்கள்.

நோக்கமும் பொருள்களும்.—இந்தக் காட்சிச் சாலையில் சாதவாகனர் காலத்துப் பழம்பொருள் பல இருக்கின்றன. முக்கியமானவை பாண்டங்களும், மட்கலங்களும், சிறுவடிவங் களும், மாலைகளும், வளையல்களும், காசுகளும், இரும்புச் சாமான்களுமேயாகும்.

விளக்க நடவடிக்கைகள்.—காணவருபவர்கள் விரும்பினால் காவலர் பொருள்களை எடுத்துக்காண்பிப்பார். ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் சீட்டுகள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

வெளியீடுகள்.—(1) கொண்டாப்பூர் (2) கொண்டாபூரி லிருந்து சில மாலைகள்—M. G. தீக்ஷித் (3) கொண்டாப்பூரி லிருந்து செதுக்கிய பாண்டங்களும் கடாவிய பாண்டங்களும்.

வேலை நேரம்.—எல்லா நாட்களும் காலை 9 முதல் மாலை 5 மணி வரை.

(ii) சித்திர ராமாயணம் 1916. பிரிட்டிஷ் இந்தியன் பிரஸ பக்கங்கள்—72:60.

(iii) சிவாஜி ஆலபம்—மூன்று தொகுதிகள்.

வேலை நேரம்.—செவ்வாய்க் கிழமை தவிர மற்ற நாட்களில் பகல் 12 மணி முதல் மாலை 5-30 மணி வரை.

அனுமதி :—கட்டணம் இல்லை

நிர்வாகக் குழு.—பம்பாய சர்க்காரின் தஸ்தாவேஜு சரித்திர நினைவுச் சின்னங்களின் டைரக்டருடைய நேரடி நிர்வாகத்தில் இருக்கிறது.

ஊழியர் :—காட்சிச் சாலை உதவியாளர் ஸ்ரீ M. R. இனாம் தாரும், ஆறு ஏவலரும்.

நிதி நிலை.—வருஷாந்தரச் செலவுத் திட்டம் ரூ. 9,000.

விளக்கக் குறிப்பு :—ரஹிமத்பூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பத்து மைல தூரத்தில் இருக்கிறது. திரளானவர் வந்து பார்க்கிறார்கள். 1951—52-ல் வந்தவர்கள் 17,235 பேர். ஜனவரியில் நடக்கும் வருஷாந்தர பௌஷ சந்தைக் காலத்தில் காண வருபவர் கூட்டம் அதிகமாயிருக்கிறது. இப்போதிருக்கிற பொருள்களுக்கு இடவசதி போதுமானது. இன்னும் வந்தால் விஸ்தாரமாக வேண்டும். ஆயுதங்தாங்கிய மூன்று காவலர்கள் இரவும் பகலும் காவல் காக்கிறார்கள். நாணயங்களும் விலையுயர்ந்த பொருள்களும் இரும்புப் பெட்டிகளில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. காட்சிச் சாலையின் ஒவ்வொரு அறையிலும் பார்க்க வருபவர்கள் வசதியாக உட்காரச் சலவைக்கல் பீடங்கள் அமைந்திருக்கின்றன. கிட்டத்தட்ட எல்லாப் பொருள்களும் காலஞ்சென்ற ராஜா சாஹேப் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்த போது விலைக்கு வாங்கிச் சேர்த்தவைகளே.

பரோடா

ஜனத்தொகை 211,407.

ஸாயாஜி பாகிலுள்ள பரோடாக் காட்சிச் சாலையும் படங்களின் அரங்கமும்.

தோற்றம்:—1894.

வரலாறு:—மாட்சிமை தங்கிய மகாராஜா சாயாஜி ராவ் III கெயிகவாட் ஆரம்பித்தது பரோடாக் காட்சிச் சாலை. வெளிநாடுகளுக்கு மகாராஜா சென்று பொழுது முறையாக அழகிய பொருள்களைச் சேர்த்திருக்கிறார். அப்படிச்சேர்த்த பொருள்களையெல்லாம் காட்சிச் சாலைக்குக் கொடுத்து உதவியிருக்கிறார். காட்சிச் சாலைக் கட்டடத்திற்கு 1887-ல் அஸ்திவாரம் போட்டு 1894-ல் கட்டி முடித்திருக்கிறார்கள். சித்திரகூடம் 1908-ல் கட்ட ஆரம்பித்தது, 1914-லதான் கட்டி முடிந்திருக்கிறது. எனறாலும், 1921லதான் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கூடுதலான அறைகள் பின்னாச் சேர்த்திருக்கிறார்கள். 1943-ல் வைத்த பொருள்களைக் கவாச்சியுடையனவாகத் திரும்பவும் மாற்றி ஒழுங்குபடுத்தியிருக்கிறார்கள். 1948-ல் பரோடாவைப் பம்பாய் ராஜ்யத்தோடு இணைத்து, இக்காட்சிச் சாலையைப் பம்பாய சர்க்கார் கலவி இலாக்கா தன மேற்பார்வையில் ஏற்றிருக்கிறது. குஜராத்து வட்டாரத்தில் இருக்கின்ற மிகப் பெரியதும் அதிமுக்கியமானதுமான காட்சிச்சாலை இதுதான்.

மகாராஜா தந்து உதவிய பொருள்களுடன், காட்சிச்சாலையின் முதல் டைரக்டர் ஸ்ரீ J. F. பிளேக்கு என்பவர் காட்சிச் சாலையை உருவாக்க முனைந்திருக்கிறார். பின்னர்க் கலை புதை பொருள் இயற்கை வரலாறு என்ற பகுதிகளுடன் நாளும் நாளும் வளர்ந்திருக்கிறது காட்சிச்சாலை. சில காலம் ராஜ்யப் புதைபொருள் ஆராய்ச்சியாளராய் இருந்த ஸ்ரீ R. B. புட் என்பவர் காட்சிச்சாலையில் பூதத்துவப் பகுதி உருவாக்க உதவியிருக்கிறார். பரோடா ராஜ்யத்தின் கலை டைரக்டராய் இருந்த டாக்டர் E. கோன-வீனா கலைக்கூடத்தை ஒழுங்குபடுத்தி வைத்திருக்கிறார். 1943-லிருந்து டாக்டர் கோட்ஸ் காட்சிச் சாலையையும், சித்திர அரங்கினையும் மேலும் உருவாக்கி இருக்கிறார்.

நோக்கமும் பொருள்களும்.—விலங்கினம், பூதத்துவம், பொருளாதாரம், தாவரம், மக்கள் இனம். இந்தியக்கலை புதை பொருட்பகுதியின் காட்சிச் சாலையில் உள்ள அகண்ட இந்தியா, சீனா, ஜப்பான, எகிப்து, ஈராக், பாரசீகம் கிரீஸ், ரோம், மத்திய கால ஐரோப்பியக் கலைப் பொருள்களும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

கட்டடத்தின் அடித்தளத்தில் 'ஐரோப்பிய' அறைகள் என்ற பெயரோடு நான்கு அறைகளில், 7-ஆம் நூற்றாண்டு முதல் 18-ஆம் நூற்றாண்டு வரையும் 18-ஆம் நூற்றாண்டு முதல் 20-ம் நூற்றாண்டு வரையிலும் உள்ள கிரேக்க ரோமன் ஐரோப்பியக் கலைப்பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஓர் அறையைச் சிறுபடங்கள், அச்சிட்டவை, நாணயங்களுக்கென ஒதுக்கியிருக்கிறார்கள். ஆசியாவின் கலாசாரத்தை ஆறு அறைகளில் விளக்கியிருக்கிறார்கள். ஒன்றில் அகண்ட இந்தியா என்ற பெயரில் பாமா, இலங்கை, சயாம், மலேயா, இந்தோசைனா, இந்தோனேசியப் பொருள்கள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். மற்றொன்று ஜப்பானிய அறை. மூன்றாவது, திபேத்திய. நேப்பாளத்தது மற்றொன்று, எகிப்து பாபிலோனியாவைச் சேர்ந்தது. இன்னும் இரண்டு சீனாகளுக்கும் இஸ்லாமியாகளுக்கும் கடைசி அறையில் பாரசீகம், ஈராக்கு, துருக்கி, சிரியா, எகிப்து, ஸ்பெயின் தேசத்துப் பொருள்கள். ஐந்து கூடங்களில், இந்திய நாகரிகம் கலைகளுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்றில் சரித்திர காலத்திற்கு முந்தியனவும் சரித்திர காலத்தனவுமான பழம்பொருள்கள். மற்றொன்று மொகலாயா காலத்திலிருந்து கி. பி 15-ம் நூற்றாண்டு வரை உள்ளவை. ஒரு கூடம் பரோடா ராஜ்ய சரித்திரத்தையே விளக்கும்.

கி.பி. 1200-ஆம் வருஷத்திற்குப் பின் வளர்ந்த கைத்தொழிற்கலைகளும் சித்திரங்களும் ஓர் அறையில உள்ளன. குஜராததி, மராத்தாக கலைகளுககு என்று ஒரு தனி அறை பரோடா அறை என்ற பெயரில இருக்கினறது.

15-ஆம் நூற்றாண்டு முதல 18-ஆம் நூற்றாண்டு வரையுள்ள ஐரோப்பியச் சித்திரங்கள இரண்டு அறைகளிலும், 19-ஆம் நூற்றாண்டுச் சித்திரங்கள ஓர் அறையிலும் வைககப்பட்டிருககினறன. இன்றைய இந்தியக் கலைகள் இரண்டு கூடங்களில ஒழுங்காய வைககப்பட்டிருககினறன. இன்னும் இரண்டு கூடங்கள் புரூனர் கூடம், ரோரிச்சுக்கூடம் என்னும் பெயரில் இருக்கின்றன.

காட்சிச்சாலையின் இயற்கை வரலாற்றுப பகுதிப்பொருளகள் பததுக்கூடங்களில அடுக்கி வைககப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஐந்து விலங்கினங்களுக்கும மற்றவை மிகப் பழைய காலத்துப பூதத்துவததிற்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மக்கள இயலுக்கு இரண்டு கூடங்கள் உள்ளன.

விலங்கினப் பகுதியில் முதுகு எலும்பு உள்ளவைகளிலும் முதுகு எலும்பு இல்லாதவைகளிலும் குறிப்பிட்ட பல சேர்க்கப்பட்டிருக்கின்றன. பறவைகள், விஷஜந்துக்கள, நிலத்திலும் நீரிலும் வாழ்வன, மீன்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன.

பூதத்துவப் பகுதியில், பெரிய பாறைகள், கனிப் பொருள்கள், இறுகிய மரங்கள் இருக்கின்றன.

பொருளாதாரத் தாவரப் பகுதியில் மாதிரி விவசாய, மருந்துச் செடிகளும் இருக்கின்றன.

மக்கள் இயல் பகுதியில், இந்திய மக்கள அவர்கள் கலாசாரத்தை விளக்குவதுடன், இந்தியாவின் பழங்காலக் குடிகளின் வாழ்க்கையும் விளக்கப்பட்டிருக்கின்றது. இனனும் திபேதது, சைனா, ஜப்பான், ஆப்பிரிக்கா, அமெரிககா, புது கினியாப் பிரதேசத்திலிருந்தும் பொருள்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

சரித்திர காலததிற்கு முந்திய பழைய கற்கால, புதிய கற்கால நாகரிகத்துடன் அந்தப் பழைய மோகஞசோதாரோ ஹாரப்பா காலம முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை இந்தியக கலையும் நாகரிகமும் எபபடி வளர்ந்திருக்கின்றன என்பதையும் விளக்கியிருக்கிறார்கள். மௌரிய, கங்க, குஷான், காந்தாரப பாணியில் உளள கலைகளைக் காறைவேலை செய்து வைத்திருப்பதுடன், முக்கியத்துவம் வாய்நத சிறபங்கள செப்புச் சிலைகள் முதலிய பல மூல வடிவங்களையும் சேர்த்திருக்கிறார்கள். மாத்ரிகாஸின் பிரதிநிதிததுவத்திற்கு இடாரில உள்ள கி.பி. ஆறும் நூற்றாண்டின சிற்பங்களுடன் கோடாவிலிருந்து வந்த ஜைன விக்கிரகங்கள், இங்குள்ள புதை பொருள் பகுதியில் உள்ள அதி முக்கியப் பொருள்கள.

பஹாரி, பசோலி, காங்கிரா, மண்டி, குலுபாணியில் உள்ள குஜாராத்திய ராஜஸ்தானி சித்திரங்களும், ஜைன, இந்திய சிறு படங்களும் ராஜ்மாநாமாவை விளக்கும் மொகலாய சித்திரங்களும் ஹம்சாநாமாவின் ஓர் ஏடும் இந்தியக் கலைப் பகுதியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கினறன.

கருத்தைச் செலுத்திச் செய்யும் கலைகளான நெசவு மரச் செதுக்கு வேலை, மெருகெண்ணெய் வேலை, தந்தவேலை, நகைகள் முதலியன வங்காளம், ஒரிஸா, தென்னிந்தியா, தககாணத்திலிருந்து சேகரிக்கப்பட்டிருக்கினறன. இன்னும் மொகலாயாருக்கு முந்திய கால, மொகலாயக் காலப் பொருள்களின் மாதிரிகள், அவைகளைச் சேர்நத கலைப் பொருள்கள் எல்லாம் காடசிக்கு வைக்கப்படடிருக்கின்றன. கெயிக்வாடுகள காலத்து பரோடா ராஜ்யத்தில் அபிவிருத்தி அடைந்த கலைப்பொருள்களுக்கும் ஒரு சிறப்புப் பகுதி இருக்கிறது.

அகண்ட இந்தியாவிற்கு என்று ஒதுக்கிய பகுதியில் இலங்கை, சயாம், கம்போடியா, பாலி, ஜாவாவிலிருந்து வந்த மாதிரிப பொருள்கள் இருக்கினறன.

சீனப் பகுதியில் நல்ல அழகான சித்திரங்கள, சிற்பங்கள, பாததிரங்கள, செப்பு வடிவங்கள, ஜேட அலங்கார வேலைகள, தந்தம் மரம், மெருகெண்ணெய வேலைகள், பாணடங்கள், போாசிலேன சாமானகள், மற்றும நல்ல நெசவு வேலைகள் வைக்கபபட்டிருக்கின்றன.

ஜபபானியப் பகுதியில, செப்பு வடிவங்கள, மரசசெதுக்கு வேலைகள், தந்தம எலும்புகளில் செயத சிறு வடிவங்கள, போாசிலேன வேலைகள, சிததிரங்கள், வேலைபபாடடோடு கூடிய உலோக வேலைகள், துணிகள், மெருகெண்ணெய வேலைகள் உண்டு.

எகிப்திய-பாபிலோனியக் கூடததில் புகழ் பெற்ற சிற்பங்களின் வர்ணம் தீட்டிய காறை வேலைகளும, அவறறுடன் கவாசசியுள்ள மூலப் பொருள்களும் இருக்கின்றன.

தெனமேற்கு ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள இஸ்லாமிய நாகரிகததைக் காட்டும் படங்கள் நிறைந்த கையெழுத்துப் பிரதிகள், பெர்சிய ஷாநாமாவின் சிறு படங்கள, மறறைய பிரதிகள எலலாம சோக்கப்பட்டிருக்கினறன.

விளக்க நடவடிக்கைகள்.—பொதுமக்கள் உபயோகிக்கக் கூடிய நலல புததகசாலை உணடு. அதில் 5,474 புததகங்களும் 4,100 சஞசிகைகளும் இருக்கினறன. சனிககிழமைகளில் இரணடு மணி நேரத்திற்கு இரணடு பெண் வழி காட்டிகள் இருககிறாகள். நிழல படங்களும் சினிமாப் படங்களும் நிறையச சேர்ககப்பட்டிருககினறன. பரோடா ராஜயம் இணைவதற்கு முனனால் சிறப்புச சொற்பொழிவுகள் செய்யமானியம் இருநதது. நல்ல பிரசங்க மேடையும் இருககிறது. இப்போது எல்லாம் ஏகதேசத்திலேதான சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்படுகினறன. சிறபபான பொருட்காட்சிக்கு வசதியாக அமைக்கப்பட்ட பெரிய மண்டபம் இருக்கிறது. முக்கியமாக ஆங்கிலத்திலே எழுதி வைத்திருககும் விலாசச் சீட்டுகளும் உண்டு. காடசிச்சாலைக் கலையைப் பற்றிய வகுப்புகளைக் காட்சிச் சாலையிலுள்ள சர்வகலாசாலையுடன சேர்ந்து நடத்துகின்றனர்.

வெளியீடுகள்.—(1) H. கோட்ஸ் எழுதிய பரோடாக் காட்சி சாலை, சிததிர கூடத்திலுள்ள பொருள்களை விளககும் சுவடி. (2) பரோடாக் காட்சிச் சாலை, சித்திர கூடததின் துண்டுப் பிரசுரம், (3) பிரயாண நினைவுகள், (4) பழைய ஐரோப்பியக் கலையைப் பற்றிக கீழ் நாட்டாாகளது அபிப்பிராயம், (5) ஐரோப்பியப் படங்களின பட்டியல, (6) மராத்தியர்களது கலையும அதன பிரச்சினைகளும், (7) கண் படைத்த கல்வி, (8) படக் கார்டுகள் முககியக் காட்சிப பொருள்கள்.

வேலை நேரம்.—குடியரசு தினம், சுதந்தர தினம், தீபாவளி போன்ற ஐந்து விடுமுறை நாட்கள் தவிர, மற்ற நாட்களில் காலை 9-30 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். சனிக்கிழமை மாலை 3 மணி முதல் 5 மணி வரை பெண்களுககென்று ஒதுக்கியிருக்கிறார்கள்.

அனுமதி.—கட்டணம் இல்லை. வியாழக்கிழமை மட்டும் காணவருபவர்களிடம் நபா ஒன்றுக்கு இரண்டணா அல்லது 12 நயா பைசே வசூலிககிறார்கள்.

ஊழியர்.—டைரக்டர் ஸ்ரீ V. L. தேவ்கார், M.A., பார்த்துப் கொள்பவர்கள்—ஸ்ரீ B. L. மான்காட், B.A. (Hons) LL.B., ஸ்ரீ P.G. குப்தா, M.Sc., தலைமைக் குமாஸ்தா, மூன்று குமாஸ்தாக்கள், படம் பிடிப்பவர். படம் எழுதுபவர்—கூடத்து உதவியாளர், செத்த பிராணிகளுக்குப் பஞ்சடைக்

போர், புத்தகசாலை அதிபர், படடியல் தயாரிப்போர், தச்சர், இரண்டு நாயக்கா, இரணடு ஜமேதார், 21 பியூன்கள, 8 காவலாளிகள்.

நிதி நிலை.—காட்சிச் சாலையின வருஷச் செலவுக்கு ஒரு லக்ஷ ரூபாய் திட்டமிடப்படுகிறது.

விளக்கக் குறிப்பு.—தினசரி காண வருபவர் **1,000** பேர்; வருஷத்தில் **4,00,000** பேர். சிறப்பான பொருட்காட்சிகள், மற்றும், ஜனமாஷ்டமி, தசரா, அனந்த சதுர்த்தசி, ஈத்உர்ஸ் முதலிய விடுமுறை நாட்களில் அதிகம் பேர் பாரக்க வருகிறர் கள். உருக்குப் பெட்டிகளிலும் காட்ரெஜ் பெட்டிகளிலும் நாணயங்கள வைக்கப்பட்டிருக்கினறன. சேர்த்து வைககும் பொருள்களுக்கு இடம் போதவில்லை. அறைகளுக்குள் போவதும் சிரமமே. இரசாயனப் பரிசோதனைகக வசதி இலலை என்றலும், M. S. சர்வகலாசாலையார் வேணடும்போது வசதி செய்து தருகிறர்கள். தேடிச் சேகரிததல், விலைக்கு வாஙகுதல், களஞசியச் சேமிப்பு மூலம் சேர்த்தல், அகழ்ந்து எடுத்தல், இலவாகப பெறுதல், மாறறிக்கொள்ளுதல் மூலமே பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. களஞசியச் சேமிப்பு, பொருள்களைப் பெற அஙகீகாரம் பெற்றிருக்கிறது. மற்றக் காட்சிச்சாலைப் பொருளகளை மாறறிப் பெறறுக்கொள்ள அனுமதி உண்டு. தரைப்படஙகள், விளக்கப் படங்கள், மாடலகள், அசசுகள், படங்கள் எல்லாம் தயாரிக்கப்படுகின்றன. ஆலல, நிதியும் இடமும் அவைகளுக்குப் போதுமானவை யாக இல்லை. இந்தியக் காட்சிச்சாலைக் கழகத்தில ஆரம்ப அங்கம் வகிக்கிறது. முதலில், கலை, மக்கள் இயல், விலஙகினம், இவைகளை இனறைய முறையில் அமைகக திட்ட மிடப்பட்டிருக்கிறது. பின்புதான குழந்தைக காட்சிகள், படக்காட்சிகள், சொற்பொழிவுகள், பள்ளிக்கூடச் சேவை, பொதுமக்களுக்குத் துண்டுப் பிரசுரம் விநியோகித்தல் எல்லாம செய்யபபடும். வாரம் ஒருமுறை வெளளிக்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரையும், மாலை 2–30 மணி முதல் 8–30 மணி வரையும் காட்சிச சாலைக் கலையைப் பற்றி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

பரோடா M. S. சர்வகலாசாலையின் புதைபொருள் இலாக்காக் காட்சிச் சாலை.

தோற்றம்.—1950.

வரலாறு.—புதைபொருள் இலாக்கா 1950–ல் ஆரம்பித்த போது இந்தக் காட்சிச் சாலையும் உருவாகி இருக்கிறது. சர்வ கலாசாலை மானியக் கமிஷனது உதவியால, காட்சிச சாலை வசதிகள் எலலாம் விரிவடைந்திருக்கின்றன. ஒரு நிரந்தரப் பக்கவாட்டுக் கட்டடமும் சிறப்பான பொருட்காட்சிக கட்டடமும் கட்டத் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறர்கள.

நோக்கமும் பொருள்களும்.—குஜரத்–நர்மதை பள்ளத் தாக்கில் கிடைத்த புதைபொருள்களே இக்காட்சிச் சாலையின் முக்கியப் பொருளகள். இவறறுடன் புதை பொருள் இலாக்கா அதிகாரிகள மாணவர்கள் எலலாம் அகழ்ந்தும் தேடியும் எடுத்த பொருள்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மெல்போர்ன் ஆஸ்திரேலியப் புதைபொருள் நிலையத்தினின் றும் மாற்றிக்கொண்டு வரப்பட்ட பழம்பொருளகளும் உண்டு. காட்சிச் சாலையின் முக்கிய நோக்கம் கற்பிப்பதும், ஒப்புமைப பாடங்கள படிக்க வகை செய்வதுமே. சர்வகலாசாலையார் அகழ்ந்து எடுக்கும் பழம்பொருள்களை வைக்கவே இக் காட்சிச் சாலை நிறுவி இருகிறார்கள். இந்தியப பொருள்கள் அயல் நாட்டுப் பொருள்களை மேலும் சேர்த்துப படிப்பிக்க உதவுவதும் இக்காட்சிச் சாலையின் நோக்கம்.

விளக்க நடவடிக்கைகள்.—சர்வகலாசாலைப புதை பொருட்பகுதி மாணவர்களின் ஆராய்சசிக்கென முக்கியமாக ஏற்படடது இக்கலாசாலை. கற்பிப்பதே இக்காடசியின் முக்கிய நோக்கம். அதற்காக மாணவர்களுக்கு எல்லா வசதி களும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆங்கிலததிலும குஜராத் தியிலும் விளகக சீட்டுகள் எழுதி வைக்கப்பட்டிருக்கினறன விளககப் படங்கள, வரிவடிவஙகள், தரைப்படங்கள், பொருள் களைச் சிததிர அலங்காரததுடன் காட்டத் தயாரிக்கப்படடிருக் கின்றன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்:—எல்லா நாட்களிலும் காலை 11 மணி முதல மாலை 5 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—பரோடா M. S. சர்வ கலாசாலைப் புதை பொருள் பழைய இந்திய கலாசார இலாகாவின் ஒரு பகுதியே இக்காட்சிச் சாலை.

ஊழியர்.—இலாக்கா அதிகாரிகளை, ஒரு காவலரது உதவி யோடு கண்காணித்துக்கொள்கிறர்கள். காவலர் இலாக்கா வின் ஆராய்ச்சித் திட்டத்தையும் கவனித்துக்கொள்கிறர.

நிதி நிலை.—இதறகென்று தனியாக நிதி ஒதுக்கப்பட வில்லை. இலாகாவின ஒரு பகுதியே காட்சிசசாலை.

விளக்கக் குறிப்பு :—எல்லா வசதிகளும் நிறைந்த ஒரு புதுக் கட்டடம், சர்வ கலாசாலை மானியக் கமிஷனது உதவி யால், உருவாகிக்கொண்டிருக்கிறது. சூழ்நிலை புதை பொருள் பாதுகாபபிறகு என ஒரு ரஸாயனச் சாலையும் கட்டத் திட்டமிடபபட்டிருக்கிறது. அகழ்ந்து எடுத்தல, தேடிச் சேர்ததல, மாற்றிகொள்ளுதல் மூலமே பொருள்கள் சேகரிக்கப்படுகினறன.

பவ நகர்

ஜனத்தொகை.—137,951.

பார்ட்டன் பழம்பொருட்காட்சிச் சாலை:

தோற்றம்.—1895.

வரலாறு.—1895-ல் இக்காட்சிச்சாலை திறக்கபபட்டது. பார்ட்டன புத்தக சாலைக் கட்டடத்திலே ஆரம்பிக்கப்பட்டது. பின்னர்ப் பழைய சமஸ்தானக கல்லூரியின ரஸாயன சாலைக் கட்டடத்திற்குக் கொணடுபோகப்பட்டது.

நோக்கமும் பொருள்களும்.—சிற்பங்கள், சல்வெட்டுகள், செப்புப் பட்டயஙகள, சமஸ்கிருத கையெழுத்துப் பிரதிகள், நாணயஙகள், செங்கறகள, வல்லபி மணபாண்டத் துண்டுகள், சிகோர் சுவர்ச் சித்திரஙகளின் நகல்கள், உலோக வடிவஙகள், எண்ணெய் வர்ணப் படஙகள், மற்றும் சிலாபம் போன்ற எத்தனையோ சிலலறைப பொருளகள், அஙகேயே தயாரிக் கப்பட்ட கைத்தொழில் விவசாயக் கருவிகள் எல்லாம் காட்சிச சாலையில இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—காண வருபவர்க்குக் காட்சிச் சாலைப் பொருள்கள் விவரிக்கப்படுகின்றன. காவலர் ஏக தேசத்தில் பளளிகளுக்கும் கலலூரிகளுக்கும் சென்று சொற் பொழிவுகள் நிகழ்ததுகிறர். காட்சிச்சாலையில் பள்ளி, கல்லூரி மாணவர்கள அக்கறை காட்டுகிறர்கள்.

வெளியீடு :—(1) சமஸ்கிருத பிராகிருத சாஸனங்கள் (1896), (2) பாரசிக சாஸனங்கள் (1889), (3) குஜராத்தியில் பிராசீன லேக சங்கிரஹம் (1885).

வேலை நேரம் :—வெள்ளி, வியாழன் பிற்பகல தவிர மற்ற நாட்களில் காலை 8-30 மணி முதல் **12** மணி வரை.

அனுமதி :—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—காந்தி ஸ்மிருதிக் காப்பு.
ஊழியர்.—காவலர் ஸ்ரீ இந்திராசங்கர் ரவால், குமாஸ்தா, நாலு பியூனகள், ஒரு சௌக்கிதார்.

நிதி நிலை :—ரூ. 28,746.

விளக்கக் குறிப்பு.—தினசரி காண வருபவர்கள் 40 முதல் 50 வரை; வருஷத்தில் 17,320. காட்சிச் சாலைக் கட்டடம் காட்சியில் இருக்கும் பொருள்களுக்குப் போதுமானது. நாணயங்கள் கலாலுவில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சௌக்கிதார் அவைகளைப் பார்த்துக்கொள்கிறார். ஒதுக்கி வைக்கப்படும் பொருள்களைச் சேமிதது வைக்க இடம் போதாது. அகழந்து எடுத்தலும், களஞ்சியச் சேமிப்புச சட்டப் படி ஆஜர்தம் செய்தலும். இலவமாகப் பெறுதலும், பொருள சேர்க்கும முயற்சிகள். களஞ்சியச் சேமிப்புச் சடடத திற்கு அங்கீகாரம் பெற்றிருகிறது. இநதியக் காட்சிச்சாலைக் கழகத்தில் ஸ்தாபன அங்கம் வகிக்கிறது.

பூஜ்

ஜனத்தொகை.—30,985.

கட்சுச் காட்சிச் சாலை

தோற்றம்.—1877.

வரலாறு.—1877-ல் இக்காட்சிச் சாலை ஆரம்பிக்கப்பட்டது. கலைப் பொருள்களைச் சேகரிப்பதில் ஆர்வங் காட்டிய கட்சு அரசர்களது பெருமுயற்சியே இக்காட்சிச் சாலை உருவாக்கு வதற்கு முதறகாரணம். அவர்கள தங்கள் கலைஞர்களுடைய வேலைத்திறனை மெச்சி ஆதரித்திருக்கிறார்கள். கைத்தொழி லில் சிறந்தவர்களை ஆதரித்து அவரது பொருள்களில் சிறந்தவைகளை வாங்கிக் காட்சிச்சாலையில சேர்த்திருக்கிறார்கள். இப்படிப் பொருள் சேர்த்தது காரணமாக 4,000 காட்சிப் பொருள்கள் சேர்ந்தன. கட்சுப் பிரதேசத்தின கலையும் கைத் தொழிலும் இடம்பெற்று. ஒரு நல்ல சிவப்புக் கல் கட்டடத்தில் காட்சிச் சாலை அமைந்தது. ஹமிராசார் எரிகரையில் முக்கிய மான இடததில் இன்று காட்சிச் சாலை இருகிறது.

நோக்கமும் பொருள்களும்.—பல துறைகளிலும் அடைந் திருக்கும் கலாசார வளர்ச்சியை அங்கு வைத்திருக்கும் பொருள்கள் மூலமும் அவற்றிற்கென்று எழுதிவைக்கப்பட்ட சீட்டுகள சரித்திரக் குறிபுகள் மூலமும், இக்காட்சிச் சாலை எடுத்துக்காட்டுகிறது. வெள்ளிச் சாமான்கள், பின்னல் வேலைகள், எனமல் சாமான்கள எலலாம் கட்சில தயாரான வையே. இனனும் இந்தப் பிராநதியத்திற்கே உரியனவான ஆயுதங்கள், இவறறுடன் கட்சின் சரித்திரப் பிரசித்தி பெற்ற சிறபங்கள், நாணயங்கள், மற்றவைகள் எல்லாம் காட்சிச் சாலையில் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—நகரத்தில உளள பள்ளிப் பிள்ளைகள் பக்கத்திலுளள கிராமத்தில் எல்லாம் காட்சிச் சாலையை வந்து பார்த்துப் போகிறார்கள். காட்சிப் பொருள் களைப் பற்றித் தெரிந்துகொள்ள வசதி செய்து கொடுகக படுகிறது. இதைப்போலப் பக்கத்திலுளள சித்திரக் கலாசாலை மாணவர் வந்து படங்கள் எழுதிக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்படுகினறன. காட்சிச் சாலைப் பொருள்களைக் கொண்டு, குறித்த காலத்தில் பொருட்காட்சிகளும் நடதது கிறார்கள். ஆங்கிலத்திலும், குஜராத்தியிலும் விலாசச் சீட்டுகள் எழுதி வைக்கப்படடிருக்கின்றன. நகரத்தில் உள்ள கைவேலைக்காரர்கள் காட்சிச் சாலையிலுளள நகைகளின் மோஸ்தர்களைத் தெரிந்துகொளளவும் வசதி செய்யப் பட்டிருகிறது.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—சனிக்கிழமை மாலை, ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை நாட்கள் தவிர, மற்ற நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கிறது.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக்குழு.—பம்பாய்ச் சர்க்காரின் நிர்வாகததின்கீழ் இருக்கிறது.

ஊழியர்.—காவலர், செத்த மிருகங்களுக்குப் பஞ்சடை போர், அங்கேயே படம் எடுப்பவர், குமாஸ்தா, டைபிஸ்டு, மூன்று பியூன்கள்.

நிதி நிலை:—வருஷாந்தரத் திட்டம் ரூ. 70,930.

விளக்கக் குறிப்பு.—எல்லோரும் எளிதாக வரக்கூடிய சிறநத இடத்தில காட்சிச சாலை இருக்கிறது. தினசரி 50 பேரும, வருஷத்தில் 18,000 பேரும வருகிறாகள். கோகுலாஷ்டமி, சிதாலா விழாக் காலஙகளில, சநதைத் தினஙகளில், பொருட்காட்சி நடத்தும் காலங்களில் திரளான கூட்டம் வரும். கட்டடம் போதுமானது; வசதியானது. இரவும் பகலும் காவல் காக்க ஏற்பாடுகள் உண்டு. விலையுயாந்த பொருளகள் எல்லாம் பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய இடங்கள் இருக்கின்றன. பிரதிகள்தாம் அதிகமில்லை. புத்தக சாலை இல்லை. ஆனால், ஒன்றை உருவாக்க முயற்சிகள் நடக் கின்றன. தேடிச சேகரித்தல, விலைகரு வாங்குதல், அகழ்நது எடுத்தல், களஞசியச் சேமிப்புச் சட்ட மூலம் இனி மாய்ப்பெறுதல் முதலியவைகளின் மூலமே பொருளகள் சேகரிக்கப்படுகின்றன. காட்சிப் பொருள்களை விளக்கத் தரைப் படம், விளக்கப்படம் எல்லாம் தயாரிக்கப்படுகின்றன.

பம்பாய்

ஜனத்தொகை, 2,839,270.

(1) மேற்கு இந்திய வேல்ஸ் இளவரசர் காட்சிச் சாலை :

தோற்றம்.—1904.

வரலாறு.—1904-ஆம் ஆண்டு, சர்க்கார் ஒரு கமிட்டி நிய மிதது, பம்பாய் நகருககு ஒரு காட்சிச் சாலை அமைப்பதைக் குறிதது ஆலோசிகக ஆரம்பித்தது. மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசரும், இளவரசியும் இந்தியாவுக்கு விஜயம் செய்வதை ஒட்டி ஒரு பொதுக் கூடடம் கூட்டினர். அந்தக் கூடடததில் வேல்ஸ் இளவரசா இந்தியாவிற்கு வந்ததன் ஞாபகார்த்தமாக ஒரு பொதுக் காட்சிச்சாலை அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. இன்று காட்சிச் சாலை கட்டி யிருக்கும் இடம சர்காரால கொடுக்கப்பட்டது. சர்க்காரும் பம்பாய் நகராண்மைக் கழகமும் வருஷந்தோறும் பண உதவி செய்ய ஒப்புக்கொணடன. சர்கார் மூன்று இலட்சமும், நகராண்மைக் கழகம் இரணடரை இலட்சமும் கொடுத்து, இளவரசர் ஞாபகார்த்த நிதியை ஆரம்பித்து வைத்தனர். இவற்றுடன் சா. கரீம் பாய் இப்ராஹிம மூனறு இலட்சம் நன்கொடை கொடுத்தார். சர். கவாஜி ஜஹாங்கீர் அரை இலட்சம் நனகொடையாகக் கொடுத்தார். முதலில் மூன்று கட்டடஙகள் கட்டுவதென்றும், மத்தியக கடடடத்தில் கலைபபொருளகள் புனித பொருளகள வைப்பதென்றும்,மற்ற இரண்டிலும் இயற்கை வரலாறறுப் பகுதியையும கைத் தொழில் பகுதியையும் வைப்பதென்றும் எண்ணினர். ஆனால், திடைத்த பணத்தைக கொண்டு இப்படி மூன்று கட்டடம கட்ட முடியவிலலை. மத்தியக் கட்டடம் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டது. கட்டடத்தை வரைந்து கடடியவர், காலஞ்சென்ற ஸ்ரீ G. விட்டெட் என்பவர் இந்திய-சாரசெனிக் பாணியில இக்கட்டடம் ஒன்பது லட்சம்ரூபாய செலவில் கட்டிமுடிக்கப்பட்டது. 1914-ல் கடடம் கட்டி முடிந்ததும் பெரிய யுத்தம் ஆரம்பித்ததும் இக் கட்டடத்தையே யுத்த கால ஆஸ்பத்திரியாக மாற்றினர். 1921-ல்தான் தர்மகர்த்தர் குழுவினிடம் கையில கடடம் ஒப்புவிக்கப்பட்டது. அவர்களே காட்சிச் சாலையை நடத்தவும் பாதுகாக்கவும் முன்வநதனர். காட்சிச்சாலையில் கலை, புதை பொருள, இயற்கை வரலாறு என்னும் மூன்று பகுதிகளை அமைத்தனர். 1921-லிருந்துதான் பொது மக்கள் வந்து காண அனுமதிக்கப்பட்டனர்.

தர்மகர்த்தர்கள் மற்றப் பகுதிகளைக் கட்ட முனைந்தனர். அதறகு வகுத்த திட்டம் ஐந்தரை இலட்சம். அதற்கும் போதிய பணம் இல்லாததால, வகுத்த திட்டங்களைக் குறைதது இரண்டரை இலட்சத்தில் 1935-ல் கட்டி முடிததனா. இயறகை வரலாற்றுப் பகுதி, அங்கு வைக்கப்பட்டது. ஆனால், இனறு அதே பகுதி மத்தியக கட்டடத்தின கீழ்த் தளத்திலேயே வைக்கப்பட்டிருககிறது. கலைப் பகுதியும புதைபொருட்பகுதியும் முதல் தளத்தில் வைக்கப்பட்டிருக் கின்றன. புதிதாகக கட்டிய கட்டடத்தில் 1938-ல் பொது மக்கள அனுமதிக்கப்பட்டனர். சர் தோராப்ஜி டாட்டாவின் தர்மத்தை நடத்தும் தர்மகர்த்தர்கள், காட்சிச சாலைக்கு அரை இலட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்தனர். பமபாய் இயற்கை வரலாற்றுக் கழகத்தார் சேகரித்த பொருள்களை இயற்கை வரலாறறுப் பகுதியில் வைததனர். அவாகளே தஙகள் அங்கத்தினரிடம் ரூ. 23,000 நன்கொடையாக வசூலித்தனர். சர்க்காரும ரூ. 17,500 விசேஷ நன் கொடை கொடுத்து உதவியது. இப்படிக் கட்டிய புதிய கட்டடம், இயற்கை வரலாற்றுப் பகுதியை விரிவுபடுத்தும் ஒரு பெரிய திட்டததைச் சேர்ந்ததே. பம்பாயைப் போன்ற தொழிற்சாலைகள நிறைந்த பெரிய பட்டணத்தில் இன்னும் தொழிற்கலைப் பகுதி சேர்க்கப்படவில்லை. இதற்குப் பணம் இன்மையேதான் காரணம்.

இருபத்திரண்டு வருஷ காலமாக, இக்காட்சிச் சாலை, பம்பாய் நகராட்சி, கலவித துறைகளில ஒரு முககிய ஸ்தாபனமாய் இருந்து வந்திருக்கிறது. இதனைப் படித்த வர்கள், புகழ் பெற்றவர்கள், மாணவர்கள் எல்லாம் வந்து பார்த்திருக்கிறார்கள. யுதத கால நெருக்கடி காரணமாகப் பல விலையுயர்ந்த பொருளகளும் முக்கியமான பொருள்களும் பததிரமான இடங்களுக்குக் கொண்டுபோய்விட்டாலும், இருக்கிற காட்சிப் பொருள்களே இடததை அடைததுக் கொண்டும் காண வரும் பலருக்கு அக்கறை தருவனவா கவும் இருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—முன்று பிரிவுகள் இக் காட்சிச் சாலையில் உண்டு. (1) கலை, (2) புதைபொருள, (3) இயறகை வரலாறு. முதலில இட்ட திடடப்படி தொழில் துறைப் பொருள்களும இஙகு இருக்க வேண்டும. தர்மகர்த்தர்கள தொழில துறைப்பகுதியை ஆரம்பிப்பதைப் பற்றிக் கவனித்துக்கொணடுதானிருக்கிறாகள்.

கலைப்பகுதி.—இந்திய ஐரோப்பிய சித்திரங்கள், சீன தேசத்துப் போர்சிலேன், ஜேடுகள, ஜபபான் மெருகெண் ணெய் வேலைகள, இந்திய-ஆசிய உலோக வேலைகள், தந்த வேலைகள, அச்சடித்த துணிகள், பின்னல வேலைகள், துப்படடிகள், ஆயுதஙகள், படைக்கலங்கள் இன்னும் ஐரோபபிய இந்தியப பழம்பொருள்கள் இங்கு நிறைய இருக் கின்றன. இபபகுதி காலஞசென்ற சர். ரததன டாட்டா சர். போஸ் டாட்டா இருவரும் வாரிக் கொடுதத பரிசுப் பொருள்களால் வாங்கியனவும், நன்கொடையால் பெற்றவையுமான பல பொருளகளைக் கொண்டு வளம் பெற்றிருக்கிறது.

இந்தியச் சித்திரங்கள், தொங்கட்டங்கள், நாணயங்கள், படைககலஙகள் முதலியவைகளைப் புருஷோததம மாவ்ஜி எனபவரிடம் ரூ. 1,42,500-க்கு பம்பாய் சாககார் வாங்கிய பொருள்களை வைத்துக்கொண்டே 1915-ல இந்தப பகுதி ஆரம்பிக்கப்படடிருககிறது. சத்தாராவில் ஆட்சி செய்த அரசர்களிடமிருந்து கிடைத்த ஞாபகச் சின்னஙகள், சிறந்த மொகலாயச் சித்திரங்கள் இப்போது காட்சிச சாலையில் இருக் கின்றன.

காலஞ் சென்ற ரத்தன் டாட்டா நன்கொடையாகக் கொடுத்த பொருள்கள், ஐரோப்பிய இந்தியச் சித்திரங்கள், ஷேடுகள், படைககலங்கள், சீனப் போர்சிலேன், துணி மணிகள், சலவைக் கல் சிலைகள், வெனிஸ நகரத்துப் பீங்கான்கள், உலோகப் பொருள்கள், சீன ஜப்பான் சித்திரங்கள், இன்னும் எவ்வளவோ கலைப பொருள்கள். இவைகளில் பல, இங்கிலாந்தில் யார்க் ஹவுசில் இருந் தவை; 1922-ல்தான பம்பாயக்குக் கொணடுவரப்பட்டன. சீனதேசத்து ஜேடுகளும், போர்சிலேன் சாமான்களும் மிகவும் அதிகம். கல்வி ரஸிகர்கள் இவைகளைப் பெரிதும் மதிககிறார் கள்.

1921-ல் சர் தோராப்ஜி டாட்டா, ஐரோப்பியச் சித்திரங்கள, சலைவைக்கல் சிலைகள், ஆயுதங்கள எல்லாம் கொடுத்து உதவினார். 1933-ல் அவர் இறநத போது அவர் சேகரித்து வைததிருந்த போர்சிலேன் பொருள்கள், பித்தளை செம்புப் பாத்திரங்கள், இநதியபபடங்கள் எல்லாவற்றையுமே காட்சிச் சாலை இனாமாகபபெறறது.

1925-ல இக்கலைப் பகுதிககு, இநதியச் சித்திரஙகள், படம் போட்டோ கையெழுத்துப பிரதிகள, நகல் எடுத்தவைகள் எல்லாம சர்-அக்பர் ஹைதாரி கடனாகக் கொடுத்து உதவினார். 1938-ல், கான் பஹதூர் சையத அஹமத் எழுதிய 30 அஜநதாச் சித்திர நகல்களையும இனாமாகக் கொடுததார். யுத்த காலததில் ஸர் அக்பர் ஹைதாரி கடனாகக் கொடுத்திருந்த பொருளகளை 1940-ல திரும்பப் பெறறுககொணடார். ஆனால, அவர் இறந்த பின வாரிசுகள தககாணததுச் சித்திரங்கள் உட்படப பொறுககி எடுக்கப்பட்ட பல படஙகளைக்கொடுதது உதவி னாகள. அவைகளில மூனறு கதாததுணியில எழுதிய பெரிய சித்திரஙகள. அவைகளின அளவைபபாரககும்போது காகிதத் திலோ, துணியிலோ வரைந்த தககாணததுக கலை, மொக லாயர் கலைகளில சிறந்தது எனபது தெரிகிறது.

1928-ல பம்பாய சர்க்கார், கலைக கல்லூரி சேகரித்தவை என்று 2,000 காட்சிப பொருளகளை, இக்கலைப பகுதிக்குக் கொடுதது உதவிறறு. இவைகளில உலோகப் பாணடஙகள், இநதிய ஆங்கிலேயப் பாணடஙகள், வெள்ளி தஙக நகைகள், தநதம், சந்தனச் செதுக்கு வேலைகள், காகிதத்தில செய்த பொம்மைகள், பட்டு நூல் துணிகள், அச்சடிதத காலிக்காத் துணிகள் எல்லாம் இருககின்றன. இப்பொருள்களில விசேஷ மானவை பித்ரிச் சாமானகளே. ஒரே வணணம் தீட்டிய 25 படககார்டுகள, 1927-ல வெளியிடப்பட்டன. பின்னர் இவை இந்தியச் சிததிரஙகளின் அழகை எடுத்துக் காட்டவில்லை எனறு கணடு பல வர்ணப் படங்களாகவே தயாரிததனர். இவைகள் பொது மக்களால் பாராட்டப்படுகின்றன.

1940-ல் ஆயுதங்கள் படைக் கலஙகளை அலஙகரித்துக்காட்ட அவைகளைத் தாஙகிய வீரர்களையே பொம்மைகளாக உருவாககிக் கணணாடிப பெட்டிகளுககுள் நிறுததிப போதிய செயறகை விளககுகள் அமைத்துக காட்ட முனைந்தனர். இது பொருள்களின் அழகை அதிகப்படுத்தியது.

புதைபொருட்பகுதி.—இந்தப புதைபொருட்பகுதியை ஆரம்பிப்பதறகு மூலமாயிருநதவை இரண்டு. ஒனறு பூனா புதைபொருட்காடசிச சாலையிலிருந்து கிடைதத பழைய இநதிய நாணயங்கள்; மறறொனறு ராயல ஆசியக் கழகததின் பமபாய் பிரிவினா கடனாகக் கொடுதத கற்சிலைகள. 1925-ல் சென்னை மாகாணத்திலிருநது ஸ்ரீ H. W. செட்டான்கார என்பவர் சேகரித்திருந்த சரிததிர காலத்திற்கும முந்திய பல கல் ஆயு தஙகளைப் பம்பாய இயறகை வரலாற்றுப் பகுதியினர் இனாமா ககொடுததனர். ஸ்ரீ M. மககுயின, டாகடர் J. M. அன வாலா இருவரும, சூசாவிலிருநதும் பாரசீகத்துப் பல பகுதி களிலிருநதும் கிடைத்த பழமபொருளகளை K. R. காமா கீழ்க்கலை ஸதாபனததிறகு உதவியிருந்தனர். அவைகளை 1934-ல அநத ஸ்தாபனத்தார் கடனாகக் கொடுததனர். 1935-ல் மொஹஞ்சோதாரோவிலிருநது கிடைதத சரித்திர காலத்திற்கு நந்திய பழம்பொருளகளில் ஒரு பஙகை, இந்தியப் புதைபொருள் டைரகடா ஜெனரலிடமிருந்தும் பெற்றனா. கயிர்பூர் ராஜ்யததில் (சிந்து) பல இடங்களில் அகழ்ந்து எடுத்த சரித்திர காலத்திற்கு முந்திய கல் ஆயுதங் கள, பாணடங்கள், மண்ணால செயத பொமமைகள முதலிய வைகளைப பம்பாய்ச சர்வகலாசாலை மக்கள் கூட்டுறவுப பேராசிரியர் டாக்டர் G.S. குரியே இனாமாகக் கொடுத்து

உதவினார். பஞ்சாபில் ஹரப்பாவில் அகழ்ந்தெடுத்த சரித்திர காலத்திற்கு முந்திய பொருளகளை லிம்பிதாககூர் சாஹிபுவின் சாரபாக 1939 ல் குரியே திருமபவும் கொடுத்தார். இப் பிரிவில் உளள சிற்பஙகளும் நாணயங்களும் விலைக்கு வாங்கியோ அல்லது இனாமாகப் பெறறோ சோததவை.

இங்குள்ள சரித்திர காலத்திற்கு முந்திய பொருளகளில் ஆந்திரப் பிரதேசத்துக் கடப்பையிலிருந்து கிடைத்த பழைய கற்காலத்து ஆயுதங்கள், சென்னையிலுள்ள பெரும்பெயர், பம்பாயில உள்ள அமராவதி, உத்தரப் பிரதேசததில் உள்ள பந்தா ஜில்லா முதலிய இடங்களில் கிடைத்த புதிய கற்கால ஆயுதங்கள், மொஹஞ்சோதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் அகழ்ந்து எடுத்த இந்தியப் பட்டண நாகரிகததை விளக்கும் பல திறப்பட்ட ஆயுதங்களின் துணுக்குகள், இன்னும் தெனனிநதியாவின் இரும்பு யுகத்தில் கிடைத்தவை எலலாம் இருக்கின்றன.

சரித்திரகாலப் பொருள்களில் முககியமான காட்சிப் பொருள்கள் சிறபங்கள், நாணயங்கள், கலலிலும், செம்பிலும் இருககும் சாஸனங்கள் எல்லாம் இருக்கின்றன. காந்தார பாணி, அமராவதி பாணிச் சிற்பங்கள், பழம் பெருமையை யுடைய முந்திய குப்தர் காலத்துக் கலை, சீந்துவில் உள்ள மிர்புர்க்காஸ் தலத்திலிருந்து கிடைத்த மண் பொம்மைகள், சாளுககிய நாட்டிலிருந்து கிடைத்த மத்திய இந்துக்கள் காலததுச் சிற்பங்களுக்கு உதாரணமானவை இங்கு இருக் கின்றன. சளுக்கியர் காலத்து (கி.பி. 516–757) சிற்பஙகளில் அயஹோலில கிடைத்த நாலு பெரிய அர்த்த சித்திரவடி வங்கள் ராஷ்டிர கூடர் காலத்து (கி.பி. 757–793) சிற்பங் களில பிரபலமான எலிபெண்டாக் குகைகளிலிருந்து கிடைத்த பிரமா, மகிஷமர்ததினி வடிவஙகளும் இருக்கின்றன. அய் ஹோலில் கிடைத்தவைகளில் இரண்டு சிவபார்வதி வடிவங் களும், ஒரு பிரமாவின் வடிவமும், அனந்தன் என்னும் சேஷசயனத்தில் படுத்துக் கிடக்கும் விஷ்ணு வடிவமும் உண்டு.

கி. மு. மூன்றும் நூற்றாண்டு முதல் மொகலாயர் காலம் வரையுள்ள தங்கம் வெள்ளி செம்பு நாணயங்களில பழைய இந்திய நாணயங்கள் 20,000 வரை இங்கு இருக்கின்றன.

அசோகர் காலம் முதல் மகம்மதியர்கள் ஆண்ட காலம் வரையுள்ள கல் சாஸனங்கள், காலவாரியாக முறைப்படுத்தி வைத்திருப்பது, கல்வெட்டு எழுத்து எப்படி வளர்ந்தது என்பதைக் காட்டுகிறது. இருக்கும் 61 செபபுப பட்டயஙகளில், அநேகம் கி.பி. ஐந்தாம் நூற்றாணடிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரை கத்தியவார் தீபகற்பததிலிருந்த வல்லபி பரம்பரையைச் சேர்ந்தவை.

எகிப்திலிருந்து கிடைத்த ஒரு மம்மி, சில கல் சிற்பங்கள், கிழக்கு ஆப்பிரிக்க சோமாசிலாண்டிலிருந்து கிடைத்த பழைய கற்கால ஆயுதஙகள், பாரசீகதது சூசாவிலிருந்து கிடைதத பல பழம்பொருள்கள், மேலும் சுவிட்ஜர்லாந்திலிருந்து கிடைத்த புதிய கற்கால ஏரிகரைக்குடியிருப்பில் கிடைத்த சரித்திர காலத்திற்கு முற்பட்ட செதுக்கிய கூர்முனைக் கற்கருவி என்பவைகளே பிறநாட்டிலிருந்து கிடைத்தவைகளில் முக்கிய மானவை.

இயற்கை வரலாற்றுப் பகுதி.—பம்பாய் இயற்கை வரலாற்றுக் கழகமும், காட்சிசசாலைத் தரும கர்த்தர்களும ஓர் ஏற்பாடு செய்து கொண்டனர். அதன் மூலமாக, கழகப பொருள்கள் பல பொருட் காட்சிக்குக் கிடைத்தன.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் முன்னேற்றமடைந்த பல காட்சிசசாலைகளைப் பார்த்து அஙகு அனுஷ்டிக்கப் பெறும் முறைகளைக் கையாண்டு, காட்சிப் பொருள்களை அமைககவும் அவைகளுக்கு விளக்கச் சீட்டுகள் எழுதவும் கற்றுக்கொண்ட காரணத்தால், நிரம்ப அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. இஙகே இது வரை இந்தியாவில் கையாண்ட முறைகளின் தரத்தையே இது உயாத்தி இருப்பதுடன், மேலும் காட்சிப்பொருள்களில் ஒரு கவர்ச்சியையும், காணவருபர்களிடம் ஏற்றுத் தெரிந்து கொள்ள ஓர் அக்கறையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

பொருள்களை அடுக்கி வைப்பதில், விலங்கினம், பறவை இனம், விஷ ஜநது இனம், மீன் இனம் இவைகளில பல திறபபட்டவைகளைக காடடிக காண வருபவர்களிடம் ஒரு குழப்பததை ஏற்படுத்தாதிருப்பதே முககிய நோககமாகக் கையாளப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் இனத்தையும் அதற் குரிய வகுப்பு இனவாரியாகக் பாகுபாடு செய்திருப்பதன் மூலமாக, விலங்கினப் பகுதியில் ஒரு தெளிவான அறிவைப் பார்ப்பவாகள் பெற முடிகிறது. இப்படிக் காட்சிப் பொருள்கள் மூலம் ஒரு தெளிவை உண்டாக்கிய பின், இவைகளில் அக்கறையும் ஆர்வமும் பிறக்கும் வகையில் கவர்ச்சிகரமான முறையில அடுக்கவும் தெரிநதிருக்கிறார்கள். இந்தக் கூடங்களை அழகான விளக்குகளால அலஙகரித்திருபபது சிறப்பானது.

காட்சிச் சாலைக்குள் நுழைந்ததும் மூன்று அழகிய ஒளி விளக்குக் காட்சிகள் கண்களில் படும். குடும்பத்தோடு கூட்டில் இருக்கும் நீர்நாரைக்கூட்டம் அங்கிருப்பவைகளில் சிறப்பானது. பறவைகள் தத்தம் கூடுகளில இருந்துகொண்டோ நின்று கொண்டோ காட்சி அளிக்கின்றன. சில கூடுகளில் முட்டைகளும் சில கூடுகளில் குஞ்சுகளும் காணப்படுவதுடன், அவைகள் எபபடி வளர்கின்றன என்பதும் காட்டப்படுகின்றது. பின்னர்ச் சுவர்களில் தீட்டியிருக்கும் இயற்கைக் காட்சிகள, தூரத்தில் மலைகளும் அங்குள்ள வனாநதரத்தில பறவைகளின் குடி யிருப்புகளிடையே நாமிருப்பதும் போன்ற உணர்ச்சியை உண் டாக்கும் இரண்டாவது Diorano, ஓர் உயர்ந்த கற்பாறையில் நீண்ட அலகுடைய ராஜாளி தன் குஞ்சுடன் உட்கார்ந்திருப் பதைக்காட்டும. மூன்றாவதாக, லாமர் கேயர் என்னும் பறவை யின் கூடு எப்படிக் கம்புகள் காயந்த சுள்ளிகள் முதலியவை களால் கட்டப்பட்டிருக்கின்றன என்பதைக் காட்டும். ஆண் பறவை ஒரு சூன்றின முகட்டிலும், அதற்குப் பணி செய்து கொண்டு பெண் பறவையும் இருப்பதாகக் காட்டப்பட்டிருக் கிறது. மலைப புலத்தில் சிம்லாமலைப் பகுதியும், கீழே வெயில டிக்கும் பள்ளத்தாக்கும் இடையில மலை கவிந்திருக்கும் ஒரு குகையில கூடு கட்டியிருப்பதும் காடடப்பட்டிருக்கினறன.

பால் கொடுத்து வளர்க்கும் பிராணிகளின் தொகுதியில், காட்டெருமை, கறுப்புக்கடா, புலி, புளளிமான், பாலசிங்கம் முதலியவை அவைகளுக்குரிய காடுகளில் இருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது.

மீன்கள பகுதியில், தண்ணீருககுள்ளேயே ஒளி விளக்கு அமைத்து அஙகு இந்தியக் கடலில் கிடைக்கும் சாதாரண சுறாமீனகள் வைக்கப்பட்டிருககின்றன.

விஷ ஜந்துக்களின் உடலமைப்பைக் காட்டுவதுடன் அவைகள் ஊர்ந்துசெல்லும் விதம், வாழும வகை, தோணடும் நிலை, தோப்புக்களிலும், மரங்களிலும் நீர் நிலைகளிலும் எல் லாம் வாழும் முறைகளையெலலாம் விளக்கி வைத்திருக்கிறார் கள. அந்த ஜநதுககள் தங்கள இரையை எப்படிப பிடிக் கின்றன, கொல்கினறன, அவைகளின் விஷப்பற்கள எபபடி இருக்கின்றன எனபவை எலலாம் சாதாரண மக்களும் அந்த விஷயத்தில் அக்கறையுள்ள மாணவர்களும எளிதில் கற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில அமைந்திருக்கின்றன. பொருள களை அலமாரிகளில் வைக்காமல் நல்ல பலகைப் புறத்தில் கண்ணாடிப் பெட்டிகளில் நகர்த்தக்கூடிய சட்டங்களில் வைத்திருக்கிறார்கள். இப்படி வைத்திருப்பது, ஒழுங்கு பண்ணவும், கண்ணுக்கு இனியதாக அமைக்கவும் உதவுகிறது. விஷ ஜந்துக்களைத் தவிர மறறவைகளுக்கு அவர்கள நீண்ட பெட்டிகள் அமைத்துக் காட்சிப் பொருள்களை வைததிருக் கின்றனர். அதனால் குறைந்த இடத்தில் நிறைநத தொரு காட்சிச் சாலையை அமைகக முடிந்திருக்கிறது. பால் கொடுக்கும் பெரிய மிருகங்களைத் தவிர மற்றவைகளை வைப்பதற்கெல்லாம் 18 அடி அகலத்திற்கு மேல் போகா மலே சடடங்கள் வைத்திருக்கிறார்கள். கூடத்தில் பல வர்ணங்கள் தீட்டியிருப்பது கண்ணுக்கு விருந்தாகவும், கவர்ச்சி விளைப்பதாகவும் இருக்கிறது. அங்குள்ள சுவர்ச் சித்திரங்கள் அலங்காரமாக இருப்பதுடன் நல்ல அறிவு வளர்ச்சிக்கும் உதவுகின்றன. உதாரணமாக,

பம்பாயில் நடக்கும் மீனவர் தொழிலை விளக்கும் நான்கு பெரிய சித்திரங்கள், காட்சிப் பொருள்களுக்குச் சிறப்பான விளக்கம் தருகின்றன. ஊர்வனவற்றின் பகுதியில்,பறப்பவை, பெரிய கடல் பல்லிகள் முதலியவை அந்தக காலத்தில் அவைகள் எவ்வளவு பெரியனவாய இருந்தன என்றும் தற்காலத்தில் தரையில், கடலில், ஆகாயத்தில் இருப்பவை எல்லாம அளவில் எவ்வளவு குறுகிவிட்டனவென்றும் காட்டுகின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிச் சாலையில் உள்ள வாசகசாலை விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும், இலாக்காவினர் உபயோகத்திற்குமே ஏறபட்டது; பொது ஜன உபயோகத்திறகு ஏற்படடதன்று. ஆனால், படிக்கவும், ஆராய்ச்சி செய்யும் மாணவர்கள், அறிஞர்கள் உபயோகித்துக்கொள்ளவும் அனுமதிகப்படுகிறது. ஆராய்ச்சி மாணவர்களுக்குக் காட்சிப் பொருளகளையும் பற்றும் சேமித்து வைத்திருப்பவைகளையும் காணவும, ஆராய்ச்சி செயயவும் வசதி செய்து தரப்படுகிறது. இங்குள்ள மூனறு பகுதிகளில் உள்ள பொருள்களைப்பற்றி நடகுமு சொற்பொழிவுகளைக் கேட்க ஆசிரியர்களும் அழைக்கப் படுகிறார்கள். இயற்கை வரலாற்றுப் பகுதியிலுள்ள பொருள்களைப் பற்றிச் சொறபொழிவுகள் நிகழ்த்த ஒரு விசேஷ அதிகாரி நியமிக்கப்படடிருக்கிறார். நிழற்படக் கணணுடிகள் தயாரித்து வைத்திருக்கிறாகள். ஆனால், அவைகளை வெளியிடங்களுக்கு அனுப்புவதில்லை. சமயா சமயங்களில், காட்சிசாலைக்காரர்களோடு வெளியூர் அறிஞர் களையும் சொற்பொழிவு நிகழ்த்த அழைப்பதுண்டு. அகில இந்திய ரேடியோவிலும் காட்சிச் சாலைப்பொருள்களைப் பற்றி யும் அவைகள் காட்டும் கலாசாரத்தைப் பற்றியும் பேச்சகள் ஏற்பாடு செய்வதும் உண்டு. விசேஷ காலங்களிலும் குறிப் பிட்ட நேரங்களிலும் பொருட்காடசிகள் ஏற்பாடு செய்வ துண்டு. அதற்கு வெளியிடங்களிலிருந்து காட்சிபபொருள்களைக் கடனாக வாங்கி வைபபதுணடு. இப்படியே இநதக் காட்சிசாலைப் பொருள்களை மற்றப் பொருட்காட்சிகளுக்கு அனுப்புவதுண்டு. ஆங்கிலதிலும், ஹிந்தியிலும போதிய அளவிற்கு விளக்கச் சீட்டுகள் வைகைப்பட்டிருக்கினறன.

வெளியீடுகள்.—1. இந்தியக்கலை. ரூ. 2.50

2. சரித்திர காலததிற்கு முநதிய இந்தியப் பழம் பொருளகளைப் பற்றிய கையேடு–ரூ. 1–00.

3. குஜரத் சுல்தான்களின நாணயஙகளின பட்டியல் ரூ. 5.

4. பிராமணிய காலத்துப் பழம்பொருளகளைப் பற்றிய வழி காட்டி (மராத்தி—குஜராத்தி)—ஒவ்வொனறும் 14 நயா பைசா.

5. மேறகு இந்திய இளவரசர் காட்சிசாலைத துண்டுப் பிரசுரம் No. 1. ரூ. 2.

6. மேற்கு இந்திய வேல்ஸ் இளவரசர் காட்சிச்சாலைத் துண்டுப் பிரசுரம் No. 2, ரூ. 3-00.

7. மேற்கு இந்திய வேல்ஸ இளவரசர் காட்சிச்சாலைத் துண்டுப்பிரசுரம் No. 3, ரூ 4.00.

8. மேறகு இந்திய வேல்ஸ் இளவரசர் காட்சிச்சாலைத் துண்டுப்பிரசுரம் No. 4, ரூ. 4.00

9. படங்கள் போடடு மடித்தவை I ஒட்டகச் சண்டை மொகலாயா பாணி (டில்லி 17-ஆம் நூற்றாண்டின முதல் 25 வருஷம்) ரூ. 1.00.

10. படங்கள் போடடு மடித்தவை II—ஆஜ்மீருக்கு ஜஹாங்கீர் விஜயத்தில ஒரு நிகழ்ச்சி, மொகலாயர்பாணி (டில்லி) கி.பி. 1610.–ரூ. 1.00.

11. படங்கள் போட்டு மடித்தவை III—கதாநாயகி, கதாநாயகனுக்கு மாலை அணிவித்தல்—அமரு சதகத்தில் ஒரு ஏடு, மால்வா பாணி—கி. பி. 1680—ரூ. 1.00.

12. பட்டங்கள் போட்டு மடித்தவை IV-பாம்பாட்டி-ராஜஸ்தானி பாணி (பணடி) கி. பி 1760. ரூ. 1·00.

13. படங்கள் போட்டு மடிததவை V-ராதாகிருஷ்ணர் பேரில மனமதன் அனபு எய்தல—ராஜஸ்தானி பாணி (மேவார்) கி.பி 1600. ரூ. 1–00.

14. படங்கள் போட்டு மடித்தவை VI-கிருஷ்ணன காதலுக்கு எங்கி நிற்கும் ராதை, ராஜஸ்தானி பாணி (மேவார்) கி. பி. 1600. ரூ 1–00.

15. வர்ணப் படக்கார்டுகள் (11 செய்திகள்) ஒவ் வொன்றும் 14—நயே பைசே.

16. அஜந்தாப் படக்கார்டுகள். (3 படங்கள்) ஒவ்வொன் றும் 6 நயே பைசே.

வேலைநேரம்.—திங்கட்கிழமை தவிர மற்ற எல்லா நாடகளி லும் திறந்திருக்கும். அக்டோபர் முதல் பெப்ருவரி வரை காலை 10 மணி முதல் மாலை 5.30மணிவரை, மார்ச்சு முதல் ஜூன வரை காலை 10 மணி முதல் மாலை 6-30 மணி வரை ஜூலை முதல் செப்டெம்பர் வரை காலை 10 மணி முதல மாலை 6 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

ஊழியர்.—காவலர்—டைரகடர், கலைப்பகுதி—டாக்டர் மோதி சந்திரா, M.A.Ph.D (லண்டன); காவலர்—புதைபொருட் பகுதி ஷ் S.N. சக்கரவர்த்தி, M.A., உதவி காவலர் கலை–புதை பொருட்பகுதி ஸ்ரீ பிரமோத சந்திரா, B.S.F.S. (ஜியார்ஜ டவுன். U.S.A.), நாணயம் பார்ப்பவர் ஸ்ரீ P.L குப்தா, M.V. காவலர் இயறகை வரலாற்றுப் பகுதி, ஸ்ரீ V.K. சாரி, B.A.L.T. கலைக்கூட உதவியாளர், இயற்கை வரலாற்றுப பகுதியின உதவிகாவலர், போட்டோ படம் பிடிபபவர, தச்சர், மறறும் தொழில்துறை வேலைகள் செய்பவர், தலைமைக குமாஸ்தா, கணக்கர், மூனறு டைப்பிஸ்டு குமாஸ்தாகள, 10 சௌகிதார்கள், ஹவில்தார, மூனறுநாயக்கர்கள, 5 பியூன்கள, 13 காவலர், 19 ஹமால்கள், தூபபுக்காரகள்.

நிதி நிலை.—வருஷாந்திரத திட்டம் ரூ. 3,28,570.

விளக்கக் குறிப்பு.—பம்பாய் நகரதின் மதியில், எல்லோரும் எளிதாகச் சென்று காணக்கூடிய இடத்தில காடசிச்சாலை அமைநதிருக்கிறது. தினசரி சராசரி 4,000 பேர் வரை வநது பாகுகிறாகள். ஞாயிற்றுக்கிழமை, மற்றும் விடுமுறை நாடகளில் எலலாம் 8.000முதல் 10,000 பேர் வரை தினசரி வருகிறாகள. செவவாய்க்கிழமை, வியாழக்கிழமை களில, மாணவாகள சாவதானமாய இருந்து காடசிப்பொருள களைப்பறறி அறிய ஆளுகு 2 அணு வசூலிக்கப்படுகிறது. காட்சிச்சாலைக கட்டடம காட்சிச்சாலைகெனறே திட்டமிட்டுக கட்டியதால் தகுதியான கட்டடமாய இருகுகிறது. எனறாலும், பகுதிகளை விரிவு செய்யவும், வளாகவும போதிய இடம இல்லை. ரஸாயன ஆராய்ச்சிகும் இடம் இல்லை. பகல எல்லாம் காவற்காரர்கள காக்கிறாகள. பின்னும் ஆறு மணிகு ஒரு தரம் காவல் மாற்றும் சௌகிதார்களும இரவும் பகலும் உள்ளிருந்தே காக்கிறார்கள். இரவில் சௌக்கிதார்கள இரண்டிரண்டு பேராக காட்சிசாலையைக காக்கிறார்கள். இதறகெனறே கட்டிய கன அறையில் நாணயங்கள, மறற விலையுயர்ந்த பொருள்கள் பத்திரப்படுத் தபபட்டிருக்கினறன. அங்குள்ள கூடங்களில் பார்ப்பவர் கள் வசதியாக இருபபதற்கு ஆசனங்கள் போட்டிருக்கிறார்கள். விசிறிகளும இருக்கின்றன. காட்சிச்சாலை வெளியீடு கள், படக்கார்டுகள், மடிப்புகள் எல்லாம விறகத் தனி இடம இருக்கிறது. போட்டோ, படங்கள் எடுக்கவும, பிரதியை எடுகக வும் ஏறபாடுகள் இல்லை. என்றாலும், கேட்பவர்களுக்கு வசதி செய்துகொடுகக்படும். வாங்கியும், இலவமாகவும், கடனகவும் களஞ்சியச் சேகரிபபு மூலமாகவும், கைமாற்றுகவும் வாங்கிச் சேர்த்த பொருள்களை அங்கிருக்கின்றன.

அகழ்ந்து எடுக்க எற்பாடுகள் இல்லை. களஞ்சியச் சேமிப்பு, சாமான்கள் பெற அங்கீகாரம் பெற்றிருக்கிறது. வெளியீடுகள் பொருள்களின் பிரதிகளை மறறக் காட்சிசாலை ஸ்தாபனங்களோடு மாற்றிக்கொள்ளவும் எளிதானதிட்டம் உண்டு. தரைப் படம், விளக்கப்படம், மாடல் படங்கள் எல்லாம் வேண்டும் போது தாயாரித்துக்கொள்கிறார்கள்.

விக்டோரியா தோட்டத்தில் விக்டோரியா ஆல்பர்ட்டுக் காட்சிச்சாலை.

தோற்றம்.—1855

வரலாறு.—பழங்கலைப் பொருள் ரஷிகர் டாக்டர் பியூஸ்ட் என்பவரது முயற்சியாலதான் காட்சிச்சாலை இயக்கம் பம்பாய் மாகாணத்தில் வலுத்தது. 1848-ல் கவர்னராய் இருந்த சர் ஜான் ரஸ்ஸல் இளார்க்குக் காலத்தில் மேலும் ஊக்கம் அடைந்தது. 1851-ல் லண்டனில் நடந்த பொருட்காட்சியைப் பார்த்து அந்த ஆசை இன்னும் வளர்ந்தது. 1855-ல் காட்சிசாலைக் குழு ஒன்று 5 அங்கத்தினர்களுடன் டாக்டர் ஜீம்பேயைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டது. பொருளாதாரப் பொருள்களைக் கொண்டு ஒரு காட்சிச்சாலை அமைக்கும் பொறுப்பு இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. டாக்டர் பியூஸ்ட் என்பவரைக் கௌரவக் காரியதரிசியாகவும், காவலராகவும் நியமித்தார்கள். 31-8-1855, 3-9-1855ல் நடந்த கூடடங்களில், இயற்கை வரலாறு, பொருளாதாரம், பூத்தத்துவம், தொழில், கலை சம்பந்தமாக ஒரு மத்தியக காட்சிசாலை அமைக்கும் வாய்ப்புக் கவனிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 6,000 மூலதனத்துடனும் மாதம் சிப்பந்திகளுக்கு ரூ. 86 எனற திட்டத்துடனும் காட்சிச்சாலை வேலைதொடங்கியிருக்கிறது. சோதத பொருள்களை நீண்ட காலமாகக் காடசிக்கு வைக்கவே இலலை. 1856ல் கன்னிங்காம் பிரபு வந்த போது மட்டும் கொஞ்சக்காலம் காட்சியில் வைத்திருந்திருக்கிறார்கள். 1856 நவம்பரில், டாக்டர் பியூஸ்ட ஸ்தானத்தில டாக்டர் பிரேசர் வந்திருக்கிறார். 1856 டிசம்பரில், இன்னுமை ரூ. 2,000 நனகொடை கிடைத்திருக்கிறது. 1857 மார்ச்ச மாதநதான் பலருங்காணக் காட்சிச்சாலை தொடங்கியிருக்கிறது. இந்தியர் எழுச்சி நடந்த காலத்தில், நகரத்தில் சிப்பாய்கள இருப் பிடத்தில் உள்ள சாப்பாட்டு அறையிலிருந்த இக்காட்சிச்சாலை யைக் காலிபண்ணும்படி பிரிகடீர் உத்தரவு ப்போட்டுவிட்டார். விரைவாக அவைகளை அப்புறப்படுத்தியதில் பலவற்றை இழந்துவிட்டார்கள். பல கெட்டுப்போயின. எஞ்சிய கொஞ்சம் பொருள்களைக் கொண்டு டவுன் ஹாலில் காட்சிச்சாலையை ஆரம் பித்தனர். 1858ல் டாக்டர் பர்ட்வுட் என்பவரைக் காவலராக நியமித்தார்கள். அதே வருஷத்தில் சர் ஜாம்செட்ஜீ ஜீஜிபாய் ரூ. 100, ஸ்ரீ ஜகந்நாத் சங்கர் சேட் ரூ. 500, ஸ்ரீ பிராம்ஜி நஸ்ஸர் வாஞ்சி ரூ. 600 நன்கொடை வழங்கினர்கள். சர் மங்கள தாஸ நாத்துபாய், நல்ல செதுகுவேலை செய்த கருங்காலித் தட்டி ஒன்றை இனமாகக் கொடுத்தார். அதனை இன்னும் காட்சிச்சாலையில் பார்க்கலாம். அதே வருஷத்தில் விகடோரியா தோட்டத்திலும், காட்சிச்சாலையை நடத்திய குழு வினர் விக்டோரியா மகாராணியின் ஞாபகார்த்தமாக ஒரு காடசிசசாலை அமைக்க விரும்பினர். பாவ்தாஜி ஸ்ரீ சங்கர் சேட் அக்குழுவின் அங்கதினர். பொதுமக்கள் ரூ 1,16,141 நனகொடை கொடுத்து உதவினர். சாக்கார் ஒரு லக்ஷம் ரூபாய் நனகொடையும் ஒரு நலல இடமும் கொடுத்து உதவிற்று. அந்த இடத்தை விவசாயத்தோட்டவேலை கழகத் தினரிடம் கொடுத்து இப்பொழுது காட்சிச்சாலை இருக்கும் இடதைப் பரிவர்தனையில் பெற்றனர். 19-11-1862-ல் காட்சிசாலையின அஸ்திவாரக்கல மாட்சிமை தங்கிய H.E. சர். H.B.E. பிரேர் எனபவரால் போடப்பட்டது. அப்போதிருந்த வியாபார மந்தத்தால் மிகுந்த செலவில் புதிய கடடடம் கட்டவேண்டும் என்று டாக்டர் பர்ட்வுட் பாவு தாஜி பணத் திறகு விடுத்த வேண்டுகோளுக்குப் போதிய ஆதரவு இல்லாது போய்விட்டது. 1868-ல் சர்ககாரே முதலில் ஒரு லக்ஷமும் பின்னர் ரூ 43,000-மும் செலவு செய்து கட்டடத்தை மொத்தம் ரூபாய் 3,59,838 செலவில் கட்டி முடித்தது. மாட்சிமை தங்கிய ராணியின் கணவர் இறந்ததும் இக்காட்சிச் சாலைக்கு விக்டோரியா ஆல்பர்ட்டுக காட்சிச்சாலை என்று புதுப் பெயர் சூட்டப்பட்டது. 1868-ல் டாக்டர் பர்ட்வுட ஓய்வு பெற்றார். 1871-ல் டாக்டர் கிரே நியமிக்கப்பட்டார். 22-5-1872-ல்தான கர்ட்சிச்சாலையைப் பொதுமகளை காண, பம்பாய்க் கவர்னர் செய்மர் பிட்ஜிரால்ட எனபவா திறந்து வைத்தார். சர்க்கார அளித்த வருஷவாரி மானியம் ரூ. 500 செலவுகுப் போதுமானதாய் இல்லை. ஆனல், சுதேசமன்னர் தள் பணம் கொடுத்து உதவினர்கள். 1881-ல் இயற்கை வர லாற்றுப் பகுதியில் முதல் முதல் பொருள்கள் சேகரிக்கப் பட்டன. 1883-ல் மீன்களின்வகைகளில் நல்லவை பலகொண்டு வரப்பட்டன. 1885-ல் மாதிரிப்பொருளுக்குச் சர்க்கார் மானியம் ரூ. 1,200 காட்சிச்சோடனைக்கு ரூ. 600 என உயர்ந்தது. 1855 அக்டோபரில காட்சிச் சாலை நிர்வாகம், பம்பாய் நகர மன்றத்திற்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர் டாக்டர் மாக்டோனல்ட் (1850–1903), டாக்டர் பர்ன்ஸ (1903–1918), M. பெர்ன் (1918–1930), ஸ்ரீ. பாய் (1930–1939) என்னும் காவலர்களின்கீழ் விருத்தியடைந்தது. காட்சிச்சாலை 1903-ல் புதுப்பிக்கப்பட்டது. இயற்கை வரலாறறுப் பொருள் கள் அங்கே வைக்கப்பட்டன. தொழில் சம்பந்தமாகக் கச்சாப் பொருளகளிலிருந்து பல தரப்பட்ட சாமான்கள் எப்படிச் செய்யப்படுகினறன என்பதை விளக்கமாகக் கூறும் பல மாடல்கள் வைக்க எல்லா முயற்சியும் எடுக்கப்பட்டன.

நோக்கமும் பொருள்களும்.—இது விவசாயம் தொழில் சம்பந்தமாக ஏற்பட்ட காட்சிச்சாலையே. ஆதலால், விவசாயம், மகளில், சமயம், பௌராணிகம், சித்திரம். போர்ப்படை ஆயுதம், தொழில், பாண்டம், பூதத்துவம், பழைய பம்பாய் என்னும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அங்கே போட்டோப் படங்கள், தரைப்படங்கள், விளகப்படங்கள் எல்லாம் பழைய பம்பாயைப் பற்றி உண்டு.

காஷ்மீரக் காகித வேலைகள், ஆக்ரா கற்பதிவு வேலைகள், அஹமதாபாத், மைசூர் மரப்பதிவு வேலைகள், தஞ்சாவூர் நெட்டி வேலைகள் எல்லாம் கட்டடத்தின் அடித்தளத்தில் வட பாகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. விவசாய சம்பந்தமான அபிவிருத்திகளைக் காட்டும் மாடல்கள், கிராம சுகாதாரம், கரும்பு நெல் சாகுபடி, திருத்தப்பெற்ற உழவுக் கருவிகள், விவசாயக் கருவிகள், நீர் இறைப்பவை, ஒரு கிராம அமைப்பில் அங்கு மக்கள் வாழ்வையும், சுத்தமாக வாழும் முறையையும் விளக்கும் படங்கள் எல்லாம் மத்திய ஹாலின் வலப்பக்கம் இரண்டு அறைகளில் வைக்கப்பட்டி ருக்கினறன. பம்பாய், சோராம்பூர், லக்னௌ, மூல்தான், கல்கத்தா, அலகபாத், குவாலியர், ஜெய்பூர், பட்டன் முதலிய இடங்களில் செய்த பாண்டங்களும், அயல் நாடு களிலிருந்து வாங்கிய பாண்டங்களும் முதல வரிசையில் தென்பக்கத்தில் இருக்கின்றன. பஞ்சாபிலிருந்து வந்தி ருக்கும் உலோக வேலைகள் எனகிரஸ்ட், பித்ரி, எனமல பாத்திரங்கள், ஜெய்ப்பூர், சாஞ்சி, ஐதராபாத், தக்காணம் லக்னௌ, மூர்ஷிதாபாத் பித்ரி வேலைகள். மூர்ஷிதாபாத் லக்னௌ, காசி, ஜெய்ப்பூர், பூனு, நாசிக்கு, மைசூர், மதராஸ், மதுரை முதலிய இடங்களில் செய்த விசேஷ காலத்துப் பாண்டங்களும் விளக்குகளும், ஆக்ராவிலிருந்து இந்து விக்கிரகங்கள், குடிசைத் தொழில் பொருள்கள், ஜம்பூர், ஜுஹூவிலிருந்து தேங்காய், மரம், சிப்பி வேலைகள், ஜெய்ப்பூரில காகிதத்தில் பசையால் செய்த பறவைகள், இந்தியா ஜப்பான பழங்கள், காய்கறிகள், ரத்னகிரி, திருவாங கூர், கட்டாக் கொம்பு வேலைகள் எல்லாம இரண்டாவது வரிசையில் வைக்கப்பட்டிருகினறன. ஸ்ரீ. செட்டான் கார் என்பவர் கொடுத்த இந்திய, ஆப்பிரிக்க, ஐரோப்பிய சரித்திர காலத்திற்கு முந்திய ஆயுதங்கள், வடமேற்கு மூலையில் உள்ள அறையில் வைக்கப்பட்டிருக்கினறன. வட கிழக்கு மூலையில் படி ஏறும்போது, இமய மலையைக் கடக்கும்போது காணும் மக்களின் சடலங்கள, சர் J. J. கலைக கலலூரியில் தயாரித்த பழைய ஜமக்காளங்கள், போட்டோக் கள், ஆக்ராக் கோட்டையில் சிவாஜி என்னும் கதை மாடல்கள் எல்லாம் இருக்கின்றன. காஷ்மீர், கட்சு. ஜெய்ப்பூர்,

பம்பாய், மைசூர், மதராஸ், கல்கத்தா, காசி முதலிய இடங்களில் வெள்ளிப் பாத்திரங்களின நகைகளின மோஸ்தர் எப்படி இருக்கின்றன எனறு காட்டப்படடி நக்கிறது. பம்பாய் ராஜ்யம் பம்பாய்தீவு இவைகளின தரையமைப்பை விளக்கும உபபுசத் தரைப்படம், சில அபூர்வ ஸ்கெச்சுகளுடனும், அசசுப் படங்களுடன் வடகிழகு, வடமேறகில் உள்ள அறைகளில் வைகக்பட்டிருக்கினறன. கல்கத்தா, மூர்ஷிதாபாத், லக்னௌ, காசி, டிலலி, லாகூர், தஞ்சாவூர், திருவனந்தபுரம், மிராஜி, பூனு முதலிய இடங்களில் தோற்கருவி, துளைகருவி, நரம்புக் கருவி முதலிய சங்கீத வாதியங்களுடனும், ஐம்பது வருஷத்திறகு முன் இந்தியாவின் பல பாகங்களிலுள்ள மக்கள் அணிந்த உடை வகைகளும், பல மதவாதிகளது மாடல்களும், பம்பாய் ராஜ்யதில் மக்கள் விரும்பும விளையாட்டுகள தலையணிகளின் மாடல்களும், லகனௌ, குஜராத், கட்சு முதலிய இடங்களிலிருந்து வந்திருக்கும பின்னல் வேலையும், அசசடித்த துணிமணிகளும் மேல பக்கத்தில் இருக்கின்றன. வடகிழப்பக்கம் உள்ள அறையில் 18-ஆம் நூற்றாண்டில் எழுதிய நவக்கிரஹ அஷ்டதிக்குபபாலகருடைய சித்திரங்கள், மொகல், ரஜபுத், மைசூர், வங்காளம், பாட்னு, இன்னும் இன்றைய பாணியில் உள்ள சித்திரங்கள், பாட்னு பாணியில் அபிரகத்தில் எழுதிய சித்திரங்கள், இந்து சிறு படங்கள, பொசியன், ஜெயின் கையெழுத்துப் பிரதிகள் 18-ஆம் நூற்றாண்டின் ஜெய்ப்பூர் பாணியில் ராகமாலா சித்திரங்கள் சிலவைக்கப்பட்டிருக்கினறன. தென்பககத்திலோ இந்திய ஆயுதங்கள், விற்கள், அம்புகள், குத்துவாள், பெரிய வாள், போ அங்கியும் சின்னங்களும் மெடலகளும அணிந்த ரஜபுத்திர சிப்பாயின் உருவமும் வேறே வைத்திருக்கிறார்கள். ராமாயணம், மகாபாரதம் என்னும - இநதிய இதிகாசங்களில் வரும் தேவதைகளின் உருவங்களின மாடல்கள், கீழ்ப்பக்கத்து அறையில் இருகின்றன. இனனும் இங்கேயே, இந்தியக கைதொழிலில, செம்புப் பாத்திர வேலைகள், குஜரத் முதலிய இடங்களிலிருந்து வநத மூத்துசசிப்பிபில செதுக்கிய வேலைகள், குஜரத், மைசூர, பாமாவிலிருந்து வந்த மெருகெணணெய் வேலைகள், கம்பாயிலிருந்து வநத பொருள்கள், மைசூர் திருவனநதபுரத்திலிருந்து வந்த தந்தச் சிற்பங்கள், டிலலி, ஜெய்ப்பூர், பூனு, மைசூரிலிருந்து வந்த சிறிய தொளப் பெட்டிகள், வகைப்படுத்திய சாமான்கள், குஜரத்து, மைசூர், திருவனந்தபுரம் முதலிய இடங்களிலிருநது வந்த செதுகிய சநதன மரவேலைகள எலலாம இருகின்றன. இநதோ பாக்டரியன், இந்தோ பாநதியன், இந்தோ சிதியன், குஷான், மேற்கு க்ஷத்ரபாய், குபதா, காபூல அரசர், மொகலாயர், குஜரத் சுல்தானகள, கிழக்கு இந்தியக் கம்பெனி, மொகலாயருககு முந்திய சுதேச மனனாகளது நாணயங்கள் அடங்கிய பெடடி அடித்தளத்திலேயே வைக்கப் பட்டிருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிசாலையை ஒட்டி அமைத்திருக்கும் புத்தக சாலையை இலாக்காகாரர்களும் பொது மக்களும் உபயோகப்படுத்துகின்றனர். வெளியில எடுததுப போக அனுமதிப்பதில்லை. புதை பொருள் விவசாயம், மக்கள் இயல், பூததத்துவம, சரித்திரம், நாணயம், காட்சிசாலைகளைப் பற்றிய 1,200 புத்தகங்களும், ஆறு பததிரிகைகளும் இருக்கின்றன. உபாத்தியாயர்கள் கூட்டிவரும் பள்ளிப் பிள்ளைகள் சுமார் 10,000 பேர் பகுதி பகுதியாகக் காட்சிச் சாலையை ஒரு வருஷத்தில் வந்து பாத்துச் சென்றிருக்கின்றனர். ஆராய்ச்சி அறிஞாகள புததக சாலையை நனகு பயன் படுததிககொள்கிறாகள். காவலர் இவர்களுக்கு எலலாம் தகக வசதி செய்து கொடுத்திருக்கிறார். பூததத்துவப் பகுதியைப படிக்கக் கலாசாலை மாணவர்களும வருகிறார்கள். ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் விளக்கச் சீட்டுகள் இருகின்றன. ஆரம்பப பாடசாலை மாணக்கர்களுக்கும் உபயோகமாயிருக்கிறது.

வெளியீடுகள்.—விக்டோரியா ஆல்பர்ட்டுக் காடசிசாலை சிறு நூல் ஓர் அணு. இது ஒன்பது தடவை பிரசுரிததாகிவிட்டது. 1946-க்குப் பின் 28,000 காப்பிகள் அச்சடித்திருக்கிறார்கள்.

வேலை நேரம்.—திங்கள், மேலும் மகா சிவராத்திரி, ஹோலி, கோகுலாஷடமி, கணேஷ சதுர்த்தி, தசரா, தீபாவளி, குடியரசு தினம், சுதந்தர தினம முதலிய விடுமுறை நாடகள் தவிர மறறக காலங்களில் காலை 10-30 மணி முதல 5-30 மணி வரை ஞாயிற்றுக்கிழமைகளில காலை 8-30 மணி முதல் மாலை 5-30 மணி வரை.

அனுமதி.—ஞாயிறு, வெளளி, விடுமுறை நாட்களில் நபர் ஒன்றுகு 3 நயா பைசா டிககட்டு. புதன்கிழமை, பெண்கள் குழந்தைகள, மாணவர் குழாததிறகு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நிர்வாகக் குழு.—அகண்ட பம்பாயின் டிப்டி முனிசிபல் கமிஷனர்.

ஊழியர்.— டாக்டர் S. C. உபாத்தியாயா, MA., LL.B. DI. Ph.D. காட்சிசாலை உதவியாளர் (குமாஸ்தா), காட்சிசாலைக கலைஞர, காட்சிச்சாலை உதவிக் கலைஞர், நாயக்கு ; 9 பியூன்கள, 4 ஹாமல்கள், 5 காவல் வேலைக்காரர்.

நிதி நிலை.—வருஷாந்தரத் திட்டம் ரூ. 53,000.

விளக்கக் குறிப்பு.—நகரின் நடுமத்தியில் காட்சிச்சாலை இருகிறது. தினசரி 3,588 பேர் வந்து பார்த்துப் போகிறார்கள். விடுமுறை நாட்களில கூட்டம் அதிகம். மிகப் பழைய கட்டடம் ஆனதால, காட்சிசாலைக்கு இடம் போதுமானதாய் இல்லை. சேமித்துவைக்கும் பொருளகளைச் சேர்த்து வைக்கப் போதிய இடம் இலலை. ரஸாயன ஆராய்ச்சிககும் இடம் இல்லை. இங்குளள பொருள்களில் பல வாங்கிச் சேர்த்தவையே.

புனித சேவியர் கல்லூரிக் காட்சிச்சாலை

இந்திய வரலாற்று ஆராய்ச்சி நிலையத்தாரது காட்சிச் சாலை.

(கலவி, பௌதிகக் காட்சிச் சாலைகள என்ற தலைப்பின கீழ்ப பாக்க.)

தர்மாப்பூர்.

ஜனத்தொகை—5,096.

லேடி வில்சன் காட்சிச் சாலை.

தோற்றம்—1928.

வரலாறு.—வெளி நாட்டிலிருந்து வரும் சாமான்களைக் போட்டி போட்டுகொண்டு, சாமானகள் செய்ய மக்களுககு உறசாகம அளிககும் நோக்கத்தோடு தர்மாப்பூர மகாராஜா 1928-ல் இககாடசிசாலையை ஆரம்பிதது வைத்தார. இதகு வெளி நாடடுக காட்சிப் பொருளே அதிகம் ; இந்தியப பொருள்கள் குறைவுதான். காரணம், வெளி நாட்டு வேலை எப்படி இருகிறதென்று கணடு, அத்துடனை உள நாட்டு வேலையையும ஒப்பிட்டு மக்கள் சிறந்த பொருள்களைச் செய்ய வேணடும் எனபதே. காட்சிச்சாலை ஆரம்பித்தது முதல பம்பாய்த தொழில் இலாக்கா நிர்வகிதது வருகிறது. காட்சிசாலைககு இரணடு கட்டடங்கள் இருகின்றன. மத்தியக கட்டடம 5,850 சதுர அடியில கட்டப்பட்டிருகிறது. ஒரு மாடி இருக்கிறது. அதில் இருப்பவை (a) கணணாடி வேலைகள், (b) தந்த வேலை, (c) கலலிலும் மரததிலும் செதுக்கு வேலை, (d) உலோகவேலை, (e) சீனப பாண்டங்கள், (f) நெசவுத் துணிகள், (g) புல, மூங்கில வேலைகள், (h) மெரு கெணணெய், பதிவு வேலைகள், (i) நாணயங்கள், (j) கரன்சி தபால் தலைகள, (k) வனம, விவசாயப் பொருள்கள, (l) சித்திரகூடம், (m) உடைகள, அணிகள, (n) மண் பாண்டஙகள், செங்கற்கள்.

இரணடாயிரத்து முன்னூறறுநான்கு சதுர அடியில் விஸ்தரிககபபட்டுள்ள புதிய கட்டடதில் பல திறப்பட்ட சங்கீதக் கருவிகள வைக்கப்பட்டிருக்கினறன.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச் சாலையில் இருக்கும் பகுதிகள்.

(a) தொழில், விவசாயம், (b) இயற்கை வரலாறு, விலங்கினம், (c) பூததத்துவம், (d) புதை பொருள் (நாணயம், செங்கல், மண்பாண்டம்), (e) மக்களியல் (ஆபரணங்கள் உடைகள்), (f) சங்கீதக் கருவிகள், (g) சித்திரங்கள, (h) வனம், (i) ஆயுதங்கள்.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிச்சாலைக்கு அடிக்கடிவரும் பிள்ளைகளுக்குக் காவலரே காட்சிப் பொருட்களை விளக்குகிறார். பிராந்திய மொழி குஜராத்தியாக இருப்பதால், காட்சிப் பொருள்களுக்கு ஆங்கில விளக்கச் சீட்டுகளுடன் குஜராத்தி மொழியிலும் விளக்கச் சீட்டுகள் இருக்கின்றன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரை, மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—பம்பாய்ச் சர்க்காரின் நிர்வாகத்தின்கீழ் இருக்கிறது.

ஊழியர்.—ஸ்ரீ. D. H. கோப்பர், M.A., குமாஸ்தா, ஒரு பியூன், 3 ஹாமல்கள், 2 காவறகாரர்கள்.

நிதி நிலை.—வருஷாந்தரத் திட்டம் ரூ. 11,070.

விளக்கக் குறிப்பு.—சௌகரியமான இடத்தில் காட்சிச் சாலையிருக்கிறது. கட்டடம் பொருள்கள் வைகைப் போதுமானது; வசதியானது. சேமித்து வைப்பதற்கும் பிரதிகள் வைப்பதற்கும் இடம் இருக்கிறது. தினசரி சராசரி வருபவர் 117 பேர்; வருஷத்தில் 43,000 பேர்; தசரா, முஹரம், தீபாவளி முதலிய விழாக்காலங்களில் அதிகக் கூட்டம் வரும். பகலும் இரவும் காட்சிச்சாலையைக் காவல் காக்க இரண்டு காவற்காரர்கள் இருக்கின்றனர். காட்சிச்சாலை பந்தோபஸ்தான இடம் அல்லாததால், அங்குள்ள சர்க்கார் கஜானாவிலேயே நாணயங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. காட்சிச் சாலைப் பொருள்கள் எல்லாம் தர்மர்ப்பூர் மகாராஜா விலைக்கு வாங்கிப் பரிசளித்தவை. காட்சிச்சாலை முறையை மாறறி மக்கள் வகைப் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுக்கத் திட்டம் இருக்கிறது. ஆதி மனிதர் வாழும் பிரதேசம் ஆனதால், ஆதி மனிதன் ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் நிறுவ எண்ணியிருக்கிறார்கள். காட்சிச் சாலை கழகத்தில் ஸ்தாபன அங்கம் வகிக்கிறது.

தூலியா

ஜனத்தொகை—22,517.

I.V.K. ராஜ்வாடே சன்ஷோதன் மண்டலக் காட்சிச் சாலை

தோற்றம்.—1932.

விளக்கக் குறிப்பு.—இக்காட்சிச் சாலை பொது மக்களால் விரும்பப்படுகின்றது. நல்ல நிலையில் அமைக்கப்பட்டதாயும், எல்லாரும் போய்ப் பார்க்கக்கூடியதாயும் இருக்கின்றது. காடசிச் சாலைக்குப போதிய இடம் இல்லை. அபூர்வமான நாணயங்கள், அணிகலன்கள், நகைகள் முதலிய விலை உயர்ந்த பொருள்களைப் பத்திரப்படுத்தி வைத் திருக்கிறார்கள. இரஸாயன ஆராய்ச்சிச் சாலை இல்லை. இங்குள்ள பொருளகள் அகழ்ந்து எடுததல், இறைமாகப்பெறு தல், கடனுகப் பெறுதல் மூலமாகச் சேகரித்தவைகள். இந்தியக் காட்சிச்சாலைக் கழகத்தில் ஸ்தாபன அங்கம் வகித்து வருகிறது. முன்னுல் வின்செஸ்டர் பொருட்காட்சிச் சாலை என்றுபெயர் வழங்கியதை இப்போது "சர்தார் வல்லபபாய் பட்டேல் காட்சிச்சாலை, சூரத்து" என்று பெயர் மாற்றியிருக் கிறது.

வல்லப் வித்யா நகர்

ஜனத்தொகை.—25,767.

சிற்ப, புதைபொருட் காட்சிச் சாலை.

தோற்றம்.—1949.

வரலாறு.—புதை பொருள் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வலலப் வித்யாநகரிலுள்ள இந்தப் புதைபொருட் காட்சிச் சாலை பல இடங்களில் நிலம் அகழ்ந்து எடுத்த போது சேகரிக்கப்பட்ட பொருள்களை வைத்து ஆரம்பிக்கப்பட் டிருக்கிறது. ஸ்ரீ பாய்லால்பாய் டி. பட்டேல், ஸ்ரீ பிக்காபாய் பட்டேல, ஸ்ரீ எ. வி. பாணிடியா, மற்றும் பலர் எடுத்த அக்கறை காரணமாக மதிய குஜராத்திலிருந்து சேகரிக்கப் பட்ட பொருள்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், பார்ஸி வகுப்பைச் சேர்ந்த அறிஞர் டாக்டர் என். எ. தூதி எனபவர் தம்முடைய சொந்தப் புத்தக சாலையையும், பலவிடங்களிலிருந்து தாம் சேகரித்து வைத் திருந்த வெண்கலப் பொருள்களையும், மற்றும் பழங்காலப் புதைபொருள்களையும் மிகவும் தாராளமாக இக்காட்சிச் சாலைக்கு வழங்கியுளளார்.

நோக்கமும் பொருள்களும்.—இக்காட்சிச் சாலையில் சிற்பங் கள, நாணயங்கள, வெண்கலப் பொருள்கள், கல்வெட்டு களின் பிரதிகள், சரித்திரகாலத்துக்கும் முற்பட்ட பழங்காலப் பொருள்கள், மரத்தில் செதுக்கப்பட்ட உருவங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

சிற்பங்களில கிறிஸ்தவ சகாபதத்தின ஆரம்ப காலத்தைச சேர்ந்ததான ஸோஜித்ராவிலிருந்து வந்த தலைச் சிறபபும் அவ்வினதத்தில் குஜராத்து மாகாணத்தைச் சேர்ந்த மிகமிகப் பழங்காலத்து புதைபொருளகளும் மிகவும் முக்கியம் வாய்நதனவாய் இருகினறன. மத்திய காலத்தைச் சேர்ந்த கம்பிரா, பார்சா, கைரா ஆகிய இடங்களில் கிடைத்த பல சிற்பங்களும் இங்கே இருக்கினறன டாக்டர் தூதி என்பவரால கொடுக்கப்பட்ட முக்கியப் பொருள்கள், கிட்டத் தட்ட 2,500 வெண்கலப் பொருள்கள், சித்திரம், செதுக் கப்பட்ட நாணயங்கள், ஒரு தனிப்பட்ட மக்கள் பிரிவிறகுரிய நாணயங்கள், சாதவாகன, குப்த, இந்து-சஸானிய. குஜராத மாகாணப பிறகால முகமதிய நாணயங்கள் ஆகிய பல விதமான நாணயங்கள் இங்கே இருகின்றன. ரெய்பூர், தாரபபூரிலிருந்து கிடைதத கல் வெட்டுப் பிரதி கள், முதலாவது பீமதேவ மன்னன் வழங்கிய கட்ச பத ஸ்ரஸவர் உருவம் பொறிக்கப்பட்ட தாமிரசாஸனம், ஈஸ்வர மன்னன் வழங்கிய கலாசலா மானிய தாமிரச் சாஸ னம் எல்லாம் ஒன்றுசோந்து காடசிச் சாலையின கல்வெட்டுப பிரிவாகத் திகழ்கினறன. நர்மதை நதியின பள்ளததாக்கு களிலிருந்து கிடைத்த மிகு பழக்காலக் கற்கருவிகளும மாஹிஷ்மதி (மகேஸ்வர்), நாக்தா (M.B.), சிகலதா, பிரகாஷா, கடங்கி முதலிய இடங்களிலும், சரித்திர காலத் துகுமு முற்பட்ட காலத்தில நர்மதா நதிக்கரையிலுள்ள மனடலேஸ்வர், ஓங்கரேஸ்வர் ஆகிய இடங்களுக்கு மத்தியில

வியாபித்திருந்த குன்றுகளிலிருந்தும் கிடைத்த கற் கருவிகளும், வர்ணந்தீட்டிய மண் பாண்டங்களும், சரித்திர காலத்துக்கு முற்பட்ட பொருள்களும் அங்கே சேகரிக்கப் பட்டிருக்கின்றன. ஓர்சாங், கர்ஜான் பள்ளத்தாக்குகளில் கிடைத்த சில பழங்காலக் கற்கருவிகளும் நர்மதா நதிக் கரையிலுள்ள ஹோஷங்காபாத் என்னுமிடத்தில், கூழாங் கற்களுக்கும் மணலுக்கும் இடையே புதைந்து கிடந்த பிராணி ஒன்றின் எலும்புக்கூடும் காட்சிச் சாலையில் வைக்கப் பட்டிருக்கின்றன.

மேலும், இந்தியாவின் மேற்குப் பகுதியிலுள்ள இடங் களைப் பற்றியும் மற்றும் பல விவரங்களையும் தெரிவிக்கும் பெரிய தரைப் படங்களும், பற்பல கால வரைகளில் குஜராத்து மாகாணத்தில சிற்பக்கலை, கலவெட்டுகள், சித்திரக்கலை, பழங்கால எழுத்துகள் முதலியன எவ்வாறு அபிவிருத்தி அடைந்து வந்திருகின்றன என்பதைப் பார்த்த அளவிலே தெரிந்துகொள்ளும்படியான விவரக் குறிப்புகளும் இருக் கின்றன. தவிர, சரித்திர காலததுக்கு முந்திய மண் பாண் டங்களைப் பற்றியும் கலைத்திறன்களைப் பற்றியும் விவரக் குறிப்பு களும் இங்கு இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—புதைபொருள் ஆராய்ச்சி ஸ்தாப னததைச் சேர்ந்த புத்தகசாலை ஒன்று இக்காட்சிச்சாலையில் நிறு வப்பட்டிருப்பதோடு அதற்குள்ளேயே ஒரு படிப்பகமும் சேர்க் கப்படடிருக்கிறது. சர்தார் வல்லபபாய் வித்தியா பீடம் இக் காட்சிச்சாலை சம்பந்தமாய மிகவும் சிரத்தை எடுத்து வருகிறது. இக்காட்சிச் சாலையிலுளள பொருள்களைப்பற்றிப் பள்ளிச் சிறுவர்களுக்கு விளக்கம் தெரிவிபபதற்கு வசதி செய்யப் பட்டிருக்கிறது. பட்டப்படிப்பு முடிந்து மேறபடிப்புப் படிக் கின்ற மாணவர்களும் இக்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ள பொருள்களின் மூலமாகத் தரைப்படங்கள், விவரக் குறிப்புகள், போடடோக்கள் சேகரிப்பதறகு வசதி செய்கிறது. இநதியா விலும் வெளி நாடுகளிலும் உள்ள சித்திரக்கலை, மண்பாண் டக் கலை, பழங்கால இந்தியாவின் எழுத்துகள் வரலாற்றினைப் படங்கள் மூலம் விளக்கம் தெரிவிக்க விவரக் குறிபபுகள் இருக்கின்றன. ஆங்கிலம், குஜராத்தி பாஷைகளில் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—ஞாயிற்றுக் கிழமை, சர்க்கார் விடுமுறை நாடகள் தவிர, மற்ற நாட்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரை, மாலை 2-30 மணி முதல் 5-30 மணி வரை திறந்திருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—புதைபொருள் ஆராய்ச்சி நிலையத்தின் நிர்வாகத்தில் இருந்து வருவதுடன், வல்லப் வித்தியா நகரிலுள்ள சரூட்டார் வித்தியா மண்டலின் ஒரு பிரிவாக வும் இருகிறது.

ஊழியர்கள்.—காட்சிச் சாலைக்கென ஊழியர்கள் இல்லை. புதைபொருள் ஆராய்ச்சி நிலையத்தின் டைரக்டரே கவனிதது வருகிறார்.

நிதி நிலை.—வருஷத்துக்கு ரூ. 10,000.

விளக்கக் குறிப்பு.—காட்சிச்சாலை ஜனத தொகை அதிகமா யுள்ள பக்கத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. கல்விக்குத் தேவையான பல விவரங்களையும் தெரிவிக்கிறது. தினந் தோறும் பார்க்க வருபவர் 500 பேர். காட்சிச் சாலைக்கெனச் சொநதக் கட்டடம் இல்லாத குறையினால் காட்சிப் பொருள் களின் சேர்க்கை அதிகரிகக அதிகரிக்க அடிக்கடி இடம் மாற்ற வேண்டியிருக்கிறது. தற்சமயம் இது வல்லப் வித்தியா நகரிலுள்ள B. J. கல்லூரி ஹால் ஒன்றில இருக்கிறது. பொருள்கள் சேகரித்தல் மேனமேலும் அதிகரித்து வருகிற படியால், காட்சிச் சாலைக்குச் சொந்தக கட்டடம் ஒன்று தேவை. பழங்காலப் புதைபொருள்களை இரசாயன ஆராய்ச்சி செய்ய நேரிடும்போது நகரிலுள்ள விஞ்ஞானக் கல்லூரியும் தன் ரசாயன ஆராய்ச்சிக் கூடத்தைப் பயன்படுத்திக்கொள்ள உதவுகின்றது. சாமான்களை வைத்தெடுக்கும் பண்டக சாலைக்கும் இடம் போதியதாக இல்லை. அகழ்ந்து எடுத்தல், இரவலாகப் பெறுதல் மூலமாகப் பொருள்கள் சேகரிக்கப் படுகின்றன. பொருட்காட்சிச் சாலைக் கழகத்தில் இக்காட்சிச் சாலை ஸ்தாபன அங்கம் வகிக்கிறது.

டில்லி

ஜனத்தொகை—914,790.

(i) புதைபொருட்காட்சிச் சாலை—செங்கோட்டை.

தோற்றம்.—1909.

வரலாறு.—டில்லி நகராட்சி மன்றத்தாரால் டில்லி நகரில் ஒரு புதைபொருட்காட்சிச் சாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது ஆரம்பிக்கப்பட்ட பின்பு சேகரிக்கப்பட்ட பொருள் கள் ஒரினப் பொருளாகக் கிடைக்காமல், வெவ்வேறு இனங்களாகக் கிடைத்தபடியால், அவை பயனில்லை என்று கருதிக் காடசிச் சாலை ஆரம்பிகபபட்ட சில வருஷங்களுக்குள் மூடப்பட்டது. அப்பொழுது அதிலிருந்த பொருள்களில் சிலவற்றை மட்டும் வைத்து 1909-ல் டில்லிக் கோட்டையில் நௌபத்கானாவில் ஆரம்பிகப்பட்டது. அது முதல் இது வரை அக்காட்சிச் சாலையிலேயே அப்பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பின்னர்க் காட்சிச் சாலை 1919-ல் நௌபத்கானாவிலிருந்து இப்பொழுது இருந்து வரும் மும்தாஜ் மஹாலுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—இக்காட்சிச் சாலை மொகலாயர் காலத்துச் சரித்திர சம்பநதமான பொருள்களை முற்றிலும் சேகரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்டது. அப்பொருள்கள் சுல்தான்களின் அரசாட்சிக் காலத் தையும், மொகலாய மன்னர்கள் அரசாட்சி செய்த காலத் தையும் சேர்ந்த சிற்பங்களும் கல்வெட்டுகளும் ஆகும். அக்காலத்துப் போர்க்கருவிகளும், பார்மன போன்ற பத்திரங்களும், சன்னதுகளும், தரைப்படங்களும் 1857-ல் ஏற்பட்ட கிளர்ச்சியின் சின்னங்களும், ஜமக்காள வகை களும், கையெழுத்துப் பிரதிகளும், அழகான கையெழுதது ரகங்களும் ஆகும். காட்சிச் சாலையில் ஒரு வராந்தாவும் 82 அடி நீளம் 31 அடி அகலமுள்ள ஒரு ஹாலும், 43 அடி நீளம் 21 அடி அகலமுள்ள மற்றொரு ஹாலும் இருக் கின்றன. வெளிப்பக்கம் உள்ள ஹாலில் 1857 ஆம் வரு ஷத்துக் கிளர்ச்சி சம்பந்தபபட்ட தடடுமுட்டுச் சாமானகளும், பற்பல விதமான பொருள்களும், பழங்காலத்துப போர்க் கருவிகளும், அசோங்க முத்திரை கங்களும் முத்திரைக் கற்களும், அரசர்களின் சொந்த முத்திரைகளும், செதுக்கு வேலைப பொருளகளும், கையால் வரைந்த படங்களும், போடடோக்களும், ஜமுக்காளங்களும், கையெழுத்துப் பிரதி களும், உச்சிடித்த புத்தகங்களும், மொகலாயர் கால ஆடை வகைகளும் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. உட்புற முள்ள ஹாலில் மொகலாயர் காலத்துப படங்கள் அழகான கையெழுத்துத் தினுசுகள், பார்மன, சனனது, மற்றும் பல பதிர வகைகள், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தரைப் படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. வராந்தாவில் செதுக்கு வேலைப்பாடு அமைந்த பொருள்கள், கல்வெட்டுத் தினுசு கள் வைகபபட்டிருக்கின்றன. 1857-ஆம் வருஷத்துக் கிளர்ச் சிகளுப் பின் தேசீயப் பொருட்காட்சிச் சாலையில வைக்கப் பட்டிருந்த பகதூர்ஷா, அவர் மனைவி ஜீனத்மஹால் அவர் களின் உயரத்திற்குச் செய்யப்பட்ட சிலைகள் இரண்டு, அவர்களின் சொந்த உடைகளையும ஆபரணங்களையும் அணி வித்து இக்காட்சிச் சாலையில வைக்கப்பட்டிருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—புதைபொருள் ஆராய்ச்சியா ளரின உபயோகத்துக்காகக் காட்சிச்சாலையில் சுமார் 748 புத் தகங்களும் சில (வாரமாத)பத்திரிக்கைகளும் வைக்கபபட்ட

ஒரு சிறு புத்தகசாலை இருக்கிறது. காட்சிச் சாலையைப் பார்க்க வருகிறவர்கள் படிக்க விரும்பினால் புத்தகங்களைக் கொடுக்கிறார்கள். பள்ளி கல்லூரி மாணவர்கள், பொது மக்கள் முதலியோர்களுக்குக் காவலர் காட்சிச் சாலை முழுவதையும் சுற்றிக் காண்பித்து, அங்குள்ள பொருள்களுக்கு விளக்கம் கூறுகிறார். மேலும், அவர் சில முக்கிய விஷயங்களைப்பற்றிச் சொற்பொழிவும் செய்கிறார். ஹிந்து, உருது, ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பொருள்களைப்பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கு உதவியாக விளக்கக் குறிப்புகளும், தரைப் படங்களும் சேர்க்கப்பட்டு வருகின்றன. காட்சிச் சாலையின் அபிவிருத்தியில் பல்கலைக் கழகங்களும், மற்றும் பல ஸ்தாபனங்களும் மிகவும் சிரத்தை எடுத்து வருகின்றன.

வெளியீடுகள்.—(1) 1926-ல் வெளியிடப்பட்ட காட்சிச்சாலைப் பட்டியல்.

(2) நெல்சன் ரைட் என்பவரால் எழுதப்பட்ட "டில்லி சுல்தான்கள் காலத்து நாணயங்களும், நிறுத்தல் அளவை, முகத்தல் அளவைப் பொருள்களும்" என்ற புத்தகம்.

(3) இந்தியப் புதைபொருள் ஆராய்ச்சி இலாக்கா டைரக்டர் ஜெனரல் அவர்களின் ஆண்டு அறிக்கைகள் அடங்கியுள்ள இந்தக் காட்சிச் சாலையின் ஆண்டறிக்கைகள்.

வேலை நேரம்.—வருஷம் முழுவதும் எல்லா நாட்களிலும் காட்சிச் சாலை திறந்திருக்கும். கோடை காலத்தில் காலை 8 மணி முதல் 11 மணி வரை, மாலை 4 மணி முதல 7 மணி வரை, குளிர் காலத்தில் காலை 10 மணி முதல் 1 மணி வரை, மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

அனுமதி.—காட்சிச் சாலைக்குள் போய்ப் பார்க்கக் குறிப்பிட்ட நுழைவுக் கட்டணம் எதுவும் இல்லை. ஆனால், செங்கோட்டைக்குள்ளிருக்கும் புதைபொருள் வட்டாரத்தைப் பார்க்க வயது வந்தோர்க்குத தலைக்கு 12 நயா பைசாவும், குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் நபர் ஒன்றுக்கு 6 நயா பைசாவும் வசூலிக்கப்படுகின்றன.

நிர்வாகக் குழு.—இந்திய சர்க்கார், புதைபொருள் ஆராய்ச்சி இலாக்காச் சூப்பிரண்டெண்டின் பொதுவான நிர்வாகத்துக்கு அடங்கிய காவலர் பொறுப்பில் இருந்துவருகிறது.

ஊழியர்கள்.—காவலர் ஸ்ரீ நரீந்தர்நாத், M.A., குமாஸ்தா, ஐந்து சேவகர்கள், இரண்டு இரவு காவற்காரர்கள், ஒரு தூப்புக்காரன்.

நிதி நிலை.—வருஷத்துக்கு ரூ. 24,000.

விளக்கக் குறிப்பு.—இக்காட்சிச் சாலை செங்கோட்டையினுள் வசதியான இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. பலரும் எளிதில் போய்ப் பார்க்கலாம். தினம் 1,200 பேர்களும் வருஷத்திற்குச் சுமார் 450,000 பேர்களும் பார்த்துப் போகிறார்கள். சுதந்தர தினம், வசந்த பஞ்சமி, கிறிஸ்துமஸ் தினம் ஆகிய விடுமுறை நாட்களில் அதிகமான மக்கள் பார்க்க வருகிறார்கள். காட்சிச் சாலையைப் பகலிலும் இரவிலும் காவல் செய்ய 4 சௌக்கிதார்கள் இருக்கிறார்கள். நாணயங்களும், மற்றும் விலையுயர்ந்த பொருள்களும் இரும்புப் பெட்டியில் பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. விசேஷ சந்தர்ப்பங்களுக்கென ஒதுக்கி வைக்கப்படும் புதைபொருள்களைச் சேர்த்து வைப்பதற்குப் போதிய இடவசதி இருக்கின்றது. காட்சிச் சாலைகளுள்ளே ரஸாயன ஆராய்சிக்கூடம் இல்லையாயினும், பழங்காலப் புதைபொருள்களைப்பற்றி ரஸாயன ஆராய்ச்சி செய்ய அவசியம் ஏற்படும்பொழுது மற்றக காட்சிச் சாலைகளில் இவ்வித ஆராய்ச்சிகள் செய்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள உதவி ரஸாயன பரிசோதகர் இங்கு வந்து ரஸாயன ஆராய்ச்சி செய்கிறார். கடன முறையில் இக காட்சிச் சாலையின் பொருள்கள் மற்றக காட்சிச் சாலைகளுக்கும் அங்குள்ள பொருள்கள் இங்குமாக மாற்றிக்கொள்ளப் படுகின்றன. முக்கியமாகப் பொருள்கள் விலைக்கு வாங்கியே சேர்க்கப்படுகின்றன.

(ii) இந்திய யுத்தகால ஞாபகார்த்தப் பொருட்காட்சிச் சாலை. தோற்றம்—1919.

வரலாறு.—காட்சிச் சாலை 1919-ல் ஆரம்பிக்கப்பட்டது. இது டில்லி செங்கோட்டையில் நௌபத்கானு மேல் மாடியில் புதை பொருள்கள் சேகரிக்கப்பட்டு வைத்துள்ள இடத்தில் இருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—யுத்தகால வெற்றிச் சின்னங்களை சேகரித்து வைப்பதற்காக இக்காட்சிச் சாலை நிறுவப்பட்டிருக்கிறது. இதில் 1914-18 வரை நடந்த முதல் உலக யுத்தததில பயனபடுத்தப்பட்ட போர்ககருவிகளும், வெடி மருந்து முதலியவைகளும், போட்டோக்களும் சேகரித்து வைககப்பட்டிருக்கினறன. பல போா முனைகளில் கிடைத்த வெற்றிச் சினனங்கள இங்கே இருக்கினறன. அவற்றில் முக்கியமானவை மெஸபொதாமியா, கிழக்கு ஆப்பிரிக்கா, வடமேற்கு எல்லை மாகாணம் ஆகிய இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டவையாகும். மேலும், யுத்தப் படங்கள், போட்டோகள, யுத்தகாலப் புதைக வெளியீடுகள், தபால் தலைகள், நாணயங்கள், ரூபாய் நோட்டுகள், வெடி மருந்து வகைகள், பட்டாள விருதுச் சின்னங்கள் முதலியனவும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—ஒவ்வொரு வெற்றிச் சின்னத்திற்கும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பார்க்க வருகிறவர்களுக்குக் காவலர் காட்சிச் சாலையைச் சுற்றிக காண்பிகிறார. இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பற்பல கல்வி ஸ்தாபனங்களைச் சேர்ந்தோர் காட்சிச சாலையைப் பார்த்துப் போகிறார்கள்.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—எல்லா நாட்களிலும் காட்சிச் சாலை திறந்திருக்கும். கோடை காலத்தில் காலை 8 மணி முதல் 11 மணி வரை, மாலை 4 மணி முதல் 7 மணி வரை, மாரி காலத்தில் காலை 10 மணி முதல் 1 மணி வரை, மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

அனுமதி.—டில்லிச் செங்கோட்டையில் புதைபொருட் காட்சிக்கென ஒதுகப்பட்டுள்ள நிலப்பரப்பில் இந்த இந்திய யுத்த கால ஞாபகார்த்தப் பொருட்காட்சிச் சாலை நிறுவப் பட்டிருப்பதால், அந்த எல்லைக்குள் பிரவேசிக்க வயது வந்தவாகளுக்குத தலைக்கு 12 நயா பைசா வீதமும், குழந்தைகளுக்குத் தலைக்கு 6 நயா பைசா வீதமும் அனுமதிக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. காட்சிச் சாலையைப் பார்ப்பதற்கு வேறே தனிக் கட்டணம் எதுவும் இல்லை.

நிர்வாகக் குழு.—டில்லி பிரதம கமிஷனருடைய அதிகாரத்தின்கீழ்க் காட்சிச் சாலை இருந்துவருகிறது. அவரே காட்சிச சாலைக குழுவின தலைவர். அவர் மூலமாக இந்திய சர்க்காரின் விஞ்ஞான ஆராய்ச்சி, கல்வி அபிவிருத்தி இலாக்காவின் வருஷ வரவு-செலவைத் திட்டமிட்டுக் காட்சிச் சாலைகளுக் கொடுத்துவருகின்றனர்.

ஊழியர்.—காவலர் ஸ்ரீ அஷ்கர் அலிகான, குமாஸ்தா, வேலைக்காரன், ஆறு கையாட்கள், தூப்புக்காரன், இரவுக் காவல் சௌக்கிதார்.

நிதி நிலை.—இந்திய சர்க்காரின் விஞ்ஞான ஆராய்சசி கல்வி அபிவிருத்தி இலாக்கா வருஷ வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 14,000 காட்சிச சாலைக்கு ஒதுக்கி, அத்தொகையை டில்லிப பிரதம கமிஷனர் மூலம் கொடுத்துவருகின்றது.

விளக்கக் குறிப்பு.—இக்காட்சிச் சாலை மிகவும் நல்ல இடத்தில் நிறுவப்பட்டிருகிறது. நாள் ஒனறுக்கு 2,000 பேரும், வருஷத்துக்கு 730,000 பேரும் பார்க்க வருகிறார்கள். சுதந்தர தினம், கங்கா அஸனை, பைசாகி தஸரா தினங்களில அதிகக் கூடடம் வரும். காட்சிப் பொருள்கள்

வைக்கப் போதுமான இடவசதி இருக்கிறது. இங்குள்ள காட்சிப் பொருள்கள் யாவும் இந்திய சர்க்கார் பாதுகாப்பு இலாக்கா வினரால் காட்சிச்சாலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

புது டில்லி

ஜனத்தொகை—276,314.

(i) காந்தி ஸ்மாரக் சங்கிரகாலயம் (காந்தி நினைவு காட்சிச்சாலை)

தோற்றம்.—1949.

வரலாறு.—1949-ல் காந்தி ஸ்மாரக் நிதிக் குழுவினர் மகாத்துமா காந்தியின் ஞாபகார்த்தமாக இந்தியாவில் நான்கு முக்கிய நகர்களில் காட்சிச் சாலை நிறுவ வேண்டுமெனத் தீர்மானித்தனர். அதன்படி புது டில்லி, சேவாகிராமம், சபர்மதி, மதுரை ஆகிய நானகு நகர்களிலும் காந்தி ஸ்மாரக் சங்கிரகாலயம் நிறுவினர். புது டில்லியில இருக்கும் காட்சிச் சாலை, மத்தியக் காட்சிச் சாலையாகும். மகாத்துமா காந்தி சம்பந்தப்பட்ட ஆதாரங்கள், அவர் விட்டுச் சென்றவைகள், அவர் எழுதிய புதகங்கள், அவரைப் பற்றிப் பிறரால் எழுதப்பட்ட புத்தகங்கள், கடிதங்கள், சித்திரங்கள், போட்டோகள் முதலியவைகளைச் சேகரித்து இக்காட்சிச சாலையில் வைதது்ப் பாதுகாத்து வரவேண்டும் என்பதே நோக்கம். முதன்முதலாக இக்காட்சிச் சாலை 1949-ல் பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது. பின் 1951-ல் புது டில்லியில் மன்சிங ரோடு 2-ஆம் நம்பர் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இப்பொழுது ராஜ கட்டத்தில் இதற்கெனச் சொந்தமாகக் கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு மாற்றப்படப் போவதாய் இருக்கிறது. மகாத்துமா காந்தியால் இந்தியாவின் முகிய பாஷைகளிலும், அயல நாட்டு மொழிகளிலும், இந்தியாவில் உள்ளவர்களுக்கும், வெளிநாட்டிலுள்ளவாகளுக்கும் எழுதப் பட்ட கடிதங்களின போடடோ நகல்களைக் கடந்த எட்டு வருஷத்தில் இக்காட்சிச் சாலை தயார் செய்திருக்கிறது. அதே போல அநேக போட்டோக்கள், சித்திரங்கள், காந்திஜியின் சுதை உருவப பொருள்கள் முதலியன சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்திய அரசினரிடமிருந்து மகாத்துமா காந்தியின் பிரார்த்தனைகளும் சொறபொழிவு களின் கிராமபோன் ரிகார்டுகளும இங்கே வாங்கி வைக்கப்பட் டிருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—இங்கே சேகரித்து வைக்கப் பட்டுளள பொருள்கள் காந்திஜி விட்டுச் சென்றனவும், அவருக்குச் சொந்தமானவுமான உருவப படங்களும், அவர் எழுதியுள்ள நூல்களுமாகும். இவ்வகையில 70-க்கு மேற் பட்ட காடசிப் பொருள்கள இருக்கின்றன. அவைகளில் மகாத்துமா காந்தி உபயோகித்து வந்த பாக்கெட் கடிகாரம், அவருடைய மூககுக் கண்ணாடிகள், பாதரகஷைகள், அவர் உபயோகித்த சிறிய தட்டுமுட்டுச் சாமான்கள், அவர் உயிரைக் கவர்ந்த மூன்று துப்பாகிக குணடுகளில் ஒரு குணடு, அவரைத் துப்பாக்கியால் சுட்டதும் அவர் உயிர நீத்த போது அணிந்திருந்த இரத்தம் தோய்ந்த உடைகள் முதலியன இருக்கினறன. காந்திஜியின ஜீவிய காலத்தில் பல சந்தர்ப்பங்களில் அவர் ஆறறிய தேசப் பணிகளில் பலவற்றை விளக்கும சுமார் 700 போட்டோக்களும் இருக்கின்றன. காட்சிச் சாலையில் வர்ணநதீடடிய காந்திஜியின் உருவப் படங்கள் 32 இருக்கின்றன. அவற்றுள காந்திஜியின் உயரத்துக்கு எணணெய் வண்ணத்தால் ஸ்ரீ W. லாஙஹாமர் தீட்டிய படமும் ஒன்றுகும். இவ்விதமான பொருள்களைச் சேர்பபதன் மூலம் காட்சிச் சாலைப் பொருள்கள் அதிகரிக் கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—மகாத்துமா காந்தி வாழ்ந்து காட்டிய வாழ்க்கைக் குறிக்கோள்கள் முதலியவற்றின் சகல அமிசங்களையும் உணர்ந்து நம் நாட்டினர் வாழ்சகை நடத் தும்படி கற்பிக்க வேண்டும் என்பதாகாகவே இக்காட்சிச் சாலை நிறுவப்பட்டுளளது. இக்காட்சிச் சாலையில் மேலே சொல்லிய பொருள்களைச் சேகரித்து வைத்துக்காண்பிப்பதன் மூலமாக மட்டுமல்லாமல், இந்திய தேசிய காங்கிரஸ் வருஷந்தோறும் நடத்தும் மகாநாடுகளில் அமைக்கப்படும் பொருட்காட்சியிலும் பாபு மண்டபம் என்ற பெயருடன் காட்சி அரங்கு ஒன்று ஏற்படுத்தி, அதிலும் இப்பொருள் களைக் காட்சிக்காக வைத்து வருகின்றனர். காந்தீய நோக்கம், குறிக்கோள், நடவடிக்கைகள் ஆகிய இவைகள் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வோருக்கு உதவியாகக் காந்திஜியாலும், அவரைப்பறறிப் பிறராலும் எழுதப்பட்டுள்ள நூல்களும், மற்றும் அத்துறையில் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உப யோகமான புத்தகசாலையொன்றும் இக்காட்சிச் சாலையில் இருக்கின்றன. தற்சமயம் இங்கே ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ரஷியம், டச்சு, இத்தாலியம், சுவீடன், ஜப்பானியம், சீன, தாய் நாடு, பர்மியம், இந்தோனேஷியம், போர்த்துகீசியம், ஸ்பானி யம் ஆகிய பற்பல மொழிகளில் 9,000 புத்தகங்களும், 80 (வார மாதப்) பத்திரிக்கைகளும் இருக்கின்றன. இநதப் புத்தக சாலையோடு இணைந்துள்ள படிப்பகதது்ல் ஆராய்ச்சிக்கு உப யோகமாக மகாதது்மா காந்தியால் ஸ்தாபிக்கப்பட்ட வாரப் பத்திரிகைகளில் பல கட்டுகளும், 40 பல்கலைத் திரட்டு நூல் களும் (Magazins), வாரப் பத்திரிக்கைகளும், தினசரிப் பத்திரிக்கைகளும் இருக்கின்றன. மேலும், இங்கே காந்திஜி யின் கடிதங்களையும், குறிப்புகளையும், மனுகளையும் வைத் திருக்கின்றனர். அவற்றுடன் ஆராய்ச்சியாளருக்குப் பயன் தரும் முறையில் கால விவரங்களுடன் செய்திகளை மெய்ப் பிக்கக்கூடிய ஓர் ஆராய்சசிப் பிரிவையும் (Documentary Service) இங்கே அதி விரைவில் ஆரம்பிக்கபபோகிறார்கள். இவை தவிர, ஒரு வாரத்தில் இரு முறை காந்திஜியின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படக் காட்சிகள் மூலமாக வும் காண்பித்து வருகிறார்கள்.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—காந்தி ஸ்மாரக் நிதி

ஊழியர்கள்.—சமீப காலம் வரை காக்கா சாஹேப் கலேல்கார் இந்தக் காட்சிச் சாலையின் டைரக்டராய் இருந் தார். ஓர் உதவிக் காவலர், உதவி புத்தகசாலைக் குமாஸ்தா, மற்றும் 10 பேர்.

நிதி நிலை.—காந்தி ஸ்மாரக் நிதிக் குழுவினர் கொடுக் கும் தொகை ரூ. 60,000.

விளக்கக் குறிப்பு.—காட்சிச்சாலையும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள காந்திஜியின் வாழ்க்கை வ லாறு, குறிக்கோள் முதலியவற்றைப் பற்றிய நூலகளைக் கொணட ஆராய்ச்சி யாளருக்கு உபயோகமான புத்தகசாலையும் பொது மக்களுக்கு மிகவும் உபயோகமாயிருபபதால், தினந்தோறும் 100 பேர் வரை பார்கக வருகிறார்கள். இப்பொழுது கட்டப்பட்டு வரும் புதிய கட்டடத்துக்கு இக்காட்சிச்சாலை மாற்றப்படும்பொழுது இது ஒரு முக்கிய கலைக்கூடமாய்த திகழும். திரைப்படக் காட்சி நடத்தப்படும் மண்டபம் ஒன்றும் இங்கே இருக்கிறது. அதோடு புத்தகசாலையும் சேரும்போது இங்குள்ள பெஞ்சு களில் எல்லாம் ஜனத்திரள் நிறைந்துவிடும்.

(ii) தற்காலக் கலைகளின் தேசியக் கலா மண்டபம்.

தோற்றம்.—1953.

வரலாறு.—தற்காலக் கலைத் திறனில் சித்திரத்திலும், சிற்ப வேலையிலும் சிறந்த பொருள்களைப் பொது மக்களுக் குத் தெரிவிக்க நம நாட்டின் தலைநகரில ஒரு கலா மண்ட பம நிறுவ வேண்டுவது அவசியம் என்று கருதி, 1954-ல் இந்தத் தற்காலக் கலைகளின் தேசியக் கலாமண்டபம் ஸ்தாபிக்கப்பட்டது. இது முதன்முதலாக 1954—ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 29—ஆம் தேதியில வசதியாய்க் கிடைதத ஜெய்ப்பூர் ஹவுஸ் என்ற விசாலமான கட்டடத் தில் ஆரம்பிகக்பபட்டது. இங்குள்ள காட்சிப் பொருள்கள் மிகவும் கை நுட்பத் திறனும், கலை மதிப்பும் உடையனவாய் இருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச்சாலை ஸ்தாபிக்கப் பட்ட நோக்கத்தின்படி இதில 18ஆ7–ம் வருஷ முதறகொண்டு நாளதுவரையுள்ள சித்திரக்கலை, சிற்பக்கலைப் பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. 1,774 பொருள்கள் இருக்கின்றன. அவை—நேபாளம், குஜரத்து, தென் இந்தியா ஆகிய இடங்களிலிருந்து கொண்டுவந்த உலோகச் சிலைகள், கையால் அச்சடிக்கப்பட்டதும் பூ வேலைகள் செய்யப்பட்டது மான துணி ரகங்கள், ரஜபுத்திர கங்கிர வர்ணப்படங்கள், வங்காளச் சித்திர கூடத்தைச் சேர்ந்த அபனீந்திரநாத் தாகூர், நந்தலால் போஸ, ககனேந்திரநாத் தாகூர், அப்துர் ரஹிமான் சுக்தாய், க்ஷிதீந்திரநாத மஜூம்தார், இனனும் பலரால் வரையப்பட்ட சித்திரங்கள், அம்ரித் ஷேர்கில் வரைந்த சித்திரங்கள், இரவீநதிரநாத் தாகூர் வரைந்த படங்கள, மற்றும் பல பேராசிரியர்களின் படங்களும் ஆகும். அவ்வக்காலத்தில் நாட்டின் பற்பல பிரிவுகளிலும் உள்ள சிததிரிகர்கள் வரைந்த சித்திரங்களுடன் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும தறகாலத்தில் இருந்துவரும் சிற்பி களின் சிற்பங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், மரக்கட்டைகளில் செதுகிய உருவங்களும் படங்களைக் கோடு களின மூலம் செதுக்கிக்காட்டும் உலோகத் தகடுகளும் (line cuts), உலோகத தகடுகளிலும் மரக் கட்டைகளிலும் கூடைந்தல மத்த சிறபங்களும், தண்ணீர் வர்ணப் படங்களும் இங்கே இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இங்குள்ள துணைக் காவலர் வருவோர்க்குக் காட்சிப் பொருள்களைப் பற்றிய விவரங்களை விளக்கமாக எடுத்துரைக்கிறார். ஆபீஸ் வேலை செய்பவர்கள வந்து பார்ப்பதற்கு வசதியாகப் பின் நேரங்களிற்கூடக் காட்சிச் சாலை திறந்து வைகசப்பட்டிருக்கிறது. ஹிந்தியிலும், ஆங்கி லத்திலும் விளக்கச் சீட்டுகள வைக்கப்பட்டிருக்கினறன. நாட்டின பல்வேறிடங்களிலும் பரவிய சமயகாலதது்ச் சிற்பக் கலைதிறமையைப் பொது மக்கள் ஒபபிட்டுப் பார்க்கவும், தற்காலக் கலைத்திறனின் படிபபடியான வளர்ச்சியைக் கற்றுணர்ந்து புகழவும் வேண்டுமெனபதே இக்கலாமண்ட பதின நோக்கம். இதைக் குறிகோளாகக் கொண்டு சில சமயங்களில் கல்வி நிலையங்களிலுள்ளோர் இதனை வந்து பார்க்கும்படியும், திரைப்படக் காட்சிகளும சொற்பொழிவு களும் நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

வெளியீடுகள்.—பட அட்டைகளும் காட்சிப் பொருள் களின பட்டியல் வழி காட்டியும் வெளியிட வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

வேலை நேரம்.—திங்கட்கிழமை, முக்கியமான சர்க்கார் விடுமுறை நாடகள் தவிர, மற்ற நாட்களில் காலை 10 மணி முதல் 1 மணி வரை, மாலை 2 மணி முதல 8 மணி வரை திறந்திருக்கும்.

அனுமதி.—கட்டணம இல்லை.

நிர்வாகக் குழு.—இந்திய சர்க்காரின் விஞ்ஞான ஆராய்ச்சி, கலைப் பணபாடடு நட்வடிக்கை அமைச்சரவை மேறபாவையில இருகிறது.

ஊழியர்கள்,—கலா மண்டபக் காவலர் ஸ்ரீ P. K. தாஸ் குபதா, B. A., F.R.S.C. (LONDON), புத்தகசாலை அதிகாரி ஸ்ரீ K.D. பானர்ஜி B A ,B.SC., DIP. LIB. மற்றும் சூப்பரின டெனடெண்டு,தொழிறபயிற்சி உதவியாளர், போட்டோ பிடிப் பவர், 8 குமாஸ்தாக்கள், கணக்கர், சுருக்கெழுத்துகாரா, 3 ஜமேதார்களு, 11 கலைபபிரிவு வேலை ஆடகள், 7 சௌகி தாகளு, 4 தூபபுக்காரர்களு.

நிதி நிலை.—வருஷத்துக்கு ரூ. 1,85,000.

விளக்கக் குறிப்பு.—இக்கலா மண்டபம் இந்தியா கேடடின் பக்கத்தில அமைகபப்பட்டிருக்கிறது. எல்லோரும் எளிதாகப் பார்க்கலாம் தினம் சராசரி நூற்றுக்கு மேற் பட்டோ பார்க்க வருகிறார்கள். டில்லி நகரின சீதோஷ்ண நிலையாலும் சில சமயங்களில் ஏற்படும் அதிக உஷ்ணம் அல்லது அதிகக் குளிர்ச்சியாலும் படங்கள் கெட்டுப்போகாத படி பாதுகாக்கப்படுகின்றன. இந்திய தேசியப் பொருட்காட்சி சாலையில் இரசாயன ஆராய்சசியாளராக வேலை பார்க்கும் ஸ்ரீ T. R. கய்ரோலா என்பவர் இங்கும் ஆராய்ச்சியாள ராய் இருக்கிறார்.

(iii) இந்திய தேசியப் பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—1949.

வரலாறு.—இத்தகைய பொருட்காட்சிச் சாலை ஒன்றை நிறுவ வேண்டும் என்று 1942-ஆம் வருஷத்திலிருந்தே இந்திய சர்க்காருக்கு எண்ணம் இருந்தது. 1945–ஆம வருஷம ஜனவரி மாதத்தில புதை பொருள் ஆராய்ச்சி மத்தியக குழுவினர் தேசீயக கலைப்பொருள, புதைபொருள், உயிர்வர்க்க சரித்திரக் காட்சிச் சாலை ஒனறை நிறுவ வேண் டியதற்கான திட்டத்தைப்பற்றி ஆலோசனை செயதனர். அவ்விதமான ஒரு பொருட்காட்சிச் சாலையை நிறுவுவதால் அது இந்திய நாட்டுக் கலைக் கல்வியை அபிவிருத்தி செய்யவும், இநநாட்டின் பல்வேறு பகுதியில உள்ளவர் கள் செயயும ஆராய்ச்சிகளுக்கு மிகவும உதவியாய் இருக்கு மென்றும், இநதியாவைப் பொறுத்த வரையில் இத் தகைய பொருட்காட்சிச்சாலை ஒனறைக் காலதாமதமினறி உடனே நிறுவவேண்டுவது அவசியம் என்றும் தீர்மானித் தனர். இநதிய சர்க்கார இத்திட்டத்தை ஒப்புக்கொணடு இந்நோக்கததை விவரங்களுடன் பரிசீலனை செய்து தெரி விக்கும்படி, சா மாரிஸ குவையர் தலைமையின்கீழ் ஒரு கமிட்டியை நியமித்தனர். அக்கமிட்டி பரிசீலனை செய்து விவரங்களுடன கொடுத்த அறிக்கையை 1949–ஆம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில அபிவிருத்தி போர்டார் முத லாவது ஐந்தாணடுத் திட்டத்தோடு சேர்த்துக்கொள்ள அனு மதித்தனர். ஆயினும், பணமுடை காரணமாக இத் திட்டம் மீண்டும் இருமுறை திருதது அமைக்கப்பட்ட முறை யில் தேசீயக் கலைப்பொருள, புதைபொருள், உயிர் வர்க்கப் பொருட்காட்சிச் சாலை ஒன்றை நிறுவுவதென்றும், அதறகு டைரக்டர் குழு ஒன்றும், (1) சரித்திர சம்பந்தப் பட்ட புதைபொருள பிரிவு, (2) கலைபபொருள் பிரிவு, (3) சரிததிர காலத்துக்கு முறபட்ட புதைபொருள் பிரிவு, (4) நாணயஙகள், கலவெட்டுப் பிரிவு, (5) உயிர்வர்க்க (பணபாடு, உடற்கூறு) சரித்திரப் பிரிவு எனறு ஐந்து பிரிவுகள் இருக்கவேணடும் என்றும் முடிவு செய்யப் படடது. இததிடடத்தை 1950–51-ஆம் வருஷத்தில் தொடங்கி எட்டு படிகளாகப் படிப்படியாகப் பூர்த்தி செய்துவிடவேண்டும் என்பதும் தீர்மானிக்கபபட்டது.

நமது நாடடின் பல பகுதிகளிலிருந்தும் நன்கொடையாகவும் கடனுகவும், கிரயமாகவும் சேகரிகபப்பட்ட சுமார் 50,00,000 ரூபாய் மதிப்புள்ள பழங்காலப் பொருள்களும், கலைப் பொக்கிஷங்களுமாகச சேர்த்துவைக்கப்பட்டன. இவைகளே இக் காட்சிச் சாலையின மூலபபொருள்களாய் அமைந்தன. இவை களைக்கொணடு புது டில்லியில ராஷ்டிரபதி பவனத்து அறை கள், நடைப்பாதைகள இவைகளை அடுதது்ள்ள தர்பார் ஹால் முதலிய இடங்களில் காட்சிசசாலை நிறுவப்பட்டது. என்றாலும், இக்காட்சிச் சாலைப பொருள்கள் அனைத திற்கும வசதியுள்ள ஒரு தகுதியான பெரிய கட்டடம் தேவை எனறு உணரப்பட்டதால், அவ்வெண்ணதைப் பூர்த்தி செயயும வகையில் 1955–ஆம் வருஷம், மேமாதம், 12–ஆம தேதி இந்தியப பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்களால் ராஜபாதையும், ஜனபாதையும் சந்திக்கு மிடத்தில் புதுக்கட்டடத்திற்கு அஸ்திவாரக்கல் நடப்படடது. இப்புதிய பெரிய கடடம் அறுகோண வடிவில் மூன்று மாடிகளைக் கொண்டதாய் இருக்கும்.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச் சாலையில் 320 கற் சிலைகளும, மேற்கு இந்திய, ராஜஸ்தான, பகாரி, மொகலாய வர்ணக கலைக்கூடங்களைச் சேர்ந்த சுமார 8,000 சித்திரங்களும், 615 செப்புச் சிலைகளும், அவற்றில் சில ஒப்பற்ற வேலைத்

திறமையுடையவை—1,000 துணி ரகங்களும், 4,200 பெர்சிய, அராபியக்கையெழுத்துச் சுவடிகளும், 1500 சமஸ்கிருத, பாலி, பிராகிருத, தேவநாகரிக் கையெழுத்துச் சுவடிகளும், 10,000 நாணய வகைகளும், மிகவும் விலைமதிப்புடைய இருண்ட பச்சை நிறமான ஆபரணக்கற்களும், ஆபரணங்களும் இருக்கின்றன. இவற்றுடன் போர்க்கருவிப் பிரிவு ஒன்றும் சேர்க்கப்பட்டு வருகிறது. இப்பிரிவில் ஹைதராபாதி லிருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 5,000 போர்க் கருவிகளும் சேர்க்கப்பட்டதன் மூலம் இப்பிரிவுப் பொருள்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. மேலும் இக்காட்சிச்சாலையில் சிறு அலங்காரப் பொருள்கள் வரிசையில மரக்கட்டையில் செதுக்கிய சிற்பவேலைகளும், தந்தம், கண்ணாடி, கொம்பு, உலோகவகைப்பொருள்களும் இருக்கின்றன. மோஹஞ்சோதாரோ, ஹாரப்பா, ஜுகார், ஜாங்கர், அம்ரி, நாரோ, கொராண்டி, நால் ஆகிய இடங்களில் கிடைத்த புதைபொருளகளும், சமீபத்தில் பஞ்சாபு மாகாணத்தில் அம்பாலா ஜில்லாவிலுள்ள ரூப்பார் என்ற இடத்தில் அகழ்ந்து எடுத்த புதைபொருளகளுமாகச் சேர்ந்து சரித்திர காலத்துக்கும் முற்பட்ட காலப் புதைபொருள பிரிவாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பொருள்களைச் சிந்து அறை என்ற அறையில் வைத்திருக்கிறார்கள்.

கற்சிலைகளையும், மரச்சிலைகளையும் பற்பல அறைகளில் வைத்து அவற்றை மௌரிய, சுங்க, குஷான, காந்தார, சாதவாகன, இக்ஷ்வாகு, குப்த, பால, சேன, ஆரம்பகால மேலைச் சளுக்கிய, பிற்கால மேலைச் சளுக்கிய, ஹொய்சால, சோழ, காக்காத்திய கலைப்பள்ளிகளாக வகைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் மதுரா, நாகார்ஜுனகொண்டா, தியோகார், குவாலியர், பிகானீர், எய்ஹோல், பட்டக்கல், சாரநாத், நாலந்தா, கோஞரக், ஹெல்பீடு ஆகிய இடங்களிலிருந்து கிடைத்த ஆரம்பகால, மத்தியகாலக் கற்சிலைகள் மரச்சிலைகள் மேலே சொல்லிய பாணிகளின் புதைபொருள்களுக்கு எடுத்துக்காட்டுகளாய் இருக்கின்றன. இன்னும் பல பாணிகளில் பொருள்களைத் தேடிக்கொண்டு வந்து சேர்க்க வேண்டியிருக்கிறது. அவற்றையும் வருகின்ற வருஷங்களில் தேடிப்பிடித்துச் சேர்ப்பதன் மூலம் சகல பாணிகளையும், புதை பொருள்களையும் சேர்க்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள பொருள்களில் முக்கியமானவை :—கற்சிலைகள், மதுராவிலிருந்து கிடைத்த நிற்கும் புத்தர் சிலை, ராம்பூர்வா நந்தித்தூண், லோகநாதர் சிலை, எய்ஹோவிலிருந்து கிடைத்த பறக்கும் கந்தருவர்கள்.

மேலும் அஹிச்சாத்ரா, கௌசாம்பி, கொண்டாப்பூர், அக்கனூர், நாலந்தா ஆகிய இடங்களில் கிடைத்த அழகான சித்திர வேலைப்பாடுள்ள மட்கலங்களும், சிந்து நதிப் பள்ளத்தாக்குகளிலிருந்து கிடைத்த மட்கலங்களும் இருக்கின்றன. இந்த மட்கலங்களின்மீது தகூஷயக்ஞ அழிவு, பைரவ மூர்த்தி உருவத்தில் சிவன், மகாபாரதக் கதையிலுள்ள ஒரு போர்க்களக் காட்சி முதலிய சித்திரங்கள் அழகாக வரையப்பட்டிருப்பதுடன், அக்கனூரில் கிடைத்த சிறிய அளவு குப்தகாலத் தலைகளும், இடுப்பளவு சிலைகளும், மிக்க அலங்காரங்களுடன கூடிய தலையணி சூடிய பார்வதி தேவியின் தலையும், அஹிச்சாத்ராவில் கிடைத்த ஆண் பெண் ஜோடிகள், ஹைதராபாதிலுள்ள கொண்டாப்பூர் பழங்கால மணபாணங்களும் இருக்கின்றன. சமீபத்தில் ஸ்ரீ S.V. ராம மூர்த்தி சேகரித்துக் கொடுத்த ஆறு பெரிய சோழர்காலத்து வெண்கலச் சிலைகள் இங்குச் சேர்க்கப்பட்டதன் மூலம் காட்சிச் சாலையிலுள்ள செப்புச்சிலை வடிவங்களுக்கே ஒரு தனி அழகு ஏற்பட்டுவிட்டது. ஆறு சிலைகளில் ஒன்று திருவரங்குளத்திலிருந்து கிடைத்த சதுரத் தாண்டவ நடராஜர் சிலையாகும். இது ஒப்புவமை இல்லாத அழகான சிலை. அதிருஷ்டவசமாக மேலும் மிகு பழங்காலச்செப்புச் சிலைகள் சில கிடைத்துள்ளன. அவைகளாவன:— மோஹஞ்சோதாரோவிலிருந்து கிடைத்த நாட்டியப் பெண், கிழக்கு இந்திய மத்திய காலத்துச் சிறிய உருவச் சிலைகள் நாலந்தாவில் கிடைத்த சிலைகள் கருணிகர வடிவில் அமைந்த போதி சத்துவர் சிலை, புத்த சமய ஸ்தூபிகள், முலாம் பூசிய உருவங்கள், இவற்றில் முக்கியமானதெனத் தேர்ந்தெடுத்தவை தர்பார் ஹாலில் வைக்கப்பட்டிருக்கின்றன.

காட்சிச்சாலையில் மிகவும் அழகான சித்திரங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் ராஜஸ்தான் பாணிச் சித்திரங்கள், பல பாவனைகளில் சிறந்த வேலைத்திறனுடன் எழுதப்பட்டுள்ள சித்திரங்கள், பகாரிவர்ண பாணியின் சித்திரங்கள், அந்தப் பகாரி பாணிச் சித்திரங்கள், பஸோஹ்லி, கூலு, கார்வாலில் கிடைத்த ஆரம்பகால சித்திரங்கள் முதல் காங்க்ரா பாணியில் நல்ல அழகுடன் கூடிய சித்திரங்கள் வரை இருக்கின்றன. எண்ணிக்கை குறைவாயிருந்தாலும் மொகலாயர் கால சித்திரப் பிரிவில் துஸுக்கே ஜஹாங்கிரியிலிருந்து எடுத்த சிறிய அளவு நேர்த்தியான ராம்பூர் சித்திரங்களும், மொகலாய சக்கரவர்த்திகளும் இளவரசர்களும் பிரபுக்களும் தங்கள் கையால் எழுதிய மதிப்பு மிகுந்த சில சித்திரங்களும் இருக்கின்றன. இந்தியச் சித்திரக் கலையின் பழங்கால நிலையைக் காட்டும் சித்திரங்களுக்கு எடுத்துக் காட்டாக அஜந்தா, பாக், பித்தல் கோரா, பாதாமி ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வந்த சுவர்ச் சித்திரங்களும் இங்கே இருக்கின்றன.

கையெழுத்துச் சுவடிகள் பிரிவில் டோங் புத்தக சாலையிலிருந்து கொண்டுவந்த 3,700 கையெழுத்துச் சுவடிகளும், ஸ்ரீ ஜடாசங்கர் சாஸ்திரியிடமிருந்து வாங்கிய சமஸ்கிருதக் கையெழுத்துச் சுவடிகளும் இங்கே இருக்கின்றன. மேலும், புகழ் பெற்ற பாபா நாமா கையெழுத்துச் சுவடியின் பட விளக்கத்துடன் கூடிய நகல், மொகலாய இளவரசர்களின் ராஜகுடும்பப் புத்தகசாலையிலிருந்து கிடைத்த பல அபூர்வமான குரான் பிரதிகளும் மற்றும் பல கையெழுத்துச் சுவடிகளும் இருக்கின்றன. மொகலாய இளவரசர்களின் புத்தகசாலையிலிருந்து கிடைத்த பிரதிகளில் ராஜ முத்திரைகளும், அவர்களின் சொந்தக் கையெழுத்துக்களும் இருக்கின்றன.

நாணயங்களின் வரிசையில் குப்தகால நாணயங்களின் மிக மதிப்புள்ள பாயண நாணயங்கள் இருக்கின்றன. சாஸானிய நாணயங்களில் சுமார் 1,700 ம், மகமதிய நாணய இனங்களில் சுல்தான்களுடையவும் மகமதிய அரசர்கள் வமிச பரம்பரையில் உள்ளனவுமான எராளமான நாணயங்கள் இருக்கின்றன. தென்னாடுகளின் பிரபலமான நாணயங்களும் சமீபத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டுகளைச் சேர்ப்பதில் ஆதிகால, மத்தியகால, பரம்பரையினரின் மாணியத் தாமிரச் சாஸனங்களில் முக்கியமான வைகளைக் கிரயம் கொடுத்து வாங்கிச் சேர்க்கவேண்டுமெனத் தீர்மானித்து அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, கல்வெட்டுகள், சாஸனங்கள் முதலியன சேகரிக்கப்பட்டிருக்கின்றன. ஸர் ஆரெல்ஸ்டீன் என்பவர் தேடிக்கொணர்ந்த சில மத்திய ஆசியப் பழங்காலப் பொருள்களில் சில பொருள்களும் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள மக்களின் சமகாலத்திய உடை வகைகளையும் ஒரு காட்சிப்பிரிவாக வைக்க வேண்டுமெனத் தீர்மானித்திருப்பதால் அதன்படி இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள மக்களின் உடை வகைகள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. தவிர, இந்திய ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, பிரதம மந்திரி முதலானவர்களுக்குக் கிடைக்கும் பரிசுப் பொருள்கள் எல்லாம் இக்காட்சிச் சாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

காட்சிப் பொருள்கள் நாட்டின் எப்பகுதியைச் சேர்ந்தனவாயும், எந்தப் பாணியைச் சேர்ந்தனவாயும் இருக்குமோ, அதற்கு ஏற்றபடி காட்சிச்சாலை அறைகளைத் தனித்தனி பிரித்து அவ்வறைகளில் அந்தப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன. பிராமி நாகரி. வங்காளி, தமிழ், கிரந்தம், கன்னடம், தெலுங்கு ஆகிய இந்திய மொழிகளிலுள்ள எழுத்துகள் பிறந்து வளர்ந்த விவரங்களையும், அவை திபேத்து, கிழக்கு

துர்கிஸ்தானம், இலங்கை, பர்மா, அன்னம், மலாயா, ஜாவா, போர்னியோ ஆகிய இடங்களில் பரவியுள்ள விவரங்களும் படிப்படியாக விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. அதே போல இந்திய றாணயங்கள், இந்திய வடிவ அமைப்பு, அவைகளின் தோற்றுவாய், வளர்ச்சி, விவரங்களைப் படிப்படியாக விளக்கும் விவரக் குறிப்புகளும், அகர வரிசையிலுள்ள ஒவ்வொரு தனி எழுத்தின் தோற்றுவாய், வளர்ச்சி விவரக் குறிப்புகளும் தயார் செய்யப்பட்டு, தர்பார் ஹாலில் வைக்கப்பட்டிருகின்றன. இவைகளைப் பார்க்கும் பொதுமக்கள் இதயத்தில் இவைகளின் வரலாற்றைத் தாங்களும தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவா உண்டாகவேணடுமென்ற கருத்துடன் கவர்ச்சிகரமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுடன் இந்திய மக்களின் ஆபரண வகைகள், தட்டுமுட்டுச் சாமான்கள், ஆடைத் தினுசுகள், சிற் பங்கள் முதலியவற்றையும் தனித்தனி சிறிய அறைகளில் காட்சிக்கு வைக்க வேண்டுமென்பதும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

மணல் மேடுகளின் கீழ்ப் புதைந்துகிடந்து, சர் ஆரெல்ஸ்டீன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட புகழ்பெற்ற, மத்திய ஆசிய பழங்காலப் பொருள்களின் வரிசையைச் சேர்ந்த மிக்க அழகு வாய்ந்த சில சுவர்ச்சித்திரங்கள் மத்திய ஆசிய பழங்காலப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை வரிசைப்படுத்தி மாற்றியமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

விளக்க நடவடிக்கைகள்.—இந்தத் தேசீயப் பொருடகாட்சிச் சாலைக்குத் தகுதியான புத்தகசாலையொன்றும் அமைக்கப் பட்டு வருகிறது. உயர்தர உததியோகஸ்தர்கள் போன்ற முக்கியமான பார்வையாளர்கள, பளளிச் சிறுவர்கள், மற்றும் பொதுமக்கள் முதலியோர் இக்காடசிச்சாலையைப் பார்க்க வரும்பொழுது இங்குள்ள விளக்கச் சொறபொழி வாளர்களும், காட்சிச்சாலையின உதவி அதிகாரிகளும அவாகளுக்கு வேண்டும் உதவி செய்கிறார்கள். சிற்பங்கள, புதை பொருள் சம்பந்தப்பட்ட பற்பல விஷயங்களைத திரையில் படங்காட்டி விளக்கம் தெரிவிப்பதற்கு உபயோகிக்கப்படும் படத்தட்டுகள் 2,000 இருக்கின்றன. இக்காட்சிச்சாலைக்கு அவைகள் தேவைப்படும்பொழுது மேறசொல்லிய புதை பொருள் இலாக்கா அவற்றை இக்காட்சிசசாலைக்குக் கொடுத்து உதவுகிறது. மேலும் இக்காடசிச்சாலையும் தனக் கெனச சொந்தமாக அவ்வகைப் படக் கண்ணாடித் தட்டுகளைச் சேகரிக்க ஆரம்பித்திருச்கிறது. காட்சிப்பொருள் களுக்கு ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. காட்சிசசாலை வட்டாரத்திலுளள பலகலைக் கழகமும், கல்வி நிலையங்களும் இதன் வளர்ச்சியில் அக்கறை யுடையவைகளாய் இருக்கின்றன.

வெளியீடுகள்.—1. சர்ககார் மாளிகையில் நடந்த இந்திய கலைப் பொருட்காட்சி விழாவின்போது வெளியிடப்பட்ட காட்சிப் பொருள பட்டியல் விலை ரூ. 1.

2. அதே பொருட்காட்சி விழாவில் வெளியிடப்பட்ட காட்சிப் பொருள்களின் போட்டோப் படங்கள் உள்ள புத்தகம் விலை ரூ. 3, ரூ. 5.

3. இந்தப் பொருட்காட்சிச்சாலையின் உட்பிரிவுகளிலுள்ள காட்சிப் பொருள்களின் விவரங்களைத் தெரிவிகும் துணைப் புத்தகம் விலை ரூ. 1.

4. தபாலகார்டு அளவில் (இந்தியச் சிற்பங்களின் படங்களையுடைய) 16 கார்டுகள் கொண்டவை விலை 94 நயா பைசா.

5. தபால் கார்டு அளவில் (புத்தமதச் சிறபங்களின் படங்களையுடைய) 15 கார்டுகள் கொண்டவை விலை 94 நயா பைசா.

வேலை நேரம்:—சர்க்கார் கெஜெட்டில் பிரசுரிக்கப்படும் விடுமுறை நாட்களும், ஒவ்வொரு திங்கட்கிழமையும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.

அனுமதி.—சனிக்கிழமை தவிர, மற்ற எல்லா நாட்களிலும் கட்டணம் இல்லை. சனிக்கிழமைகளில் மட்டும் வயது வந்தவர்களுக்கு நபர் ஒன்றுககு 50 நயா பைசா வீதமும் குழந்தைகளுக்கு 25 நயா பைசா வீதமும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மாணவர்களுக்குக கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—இந்திய சர்க்காரின் விஞ்ஞான ஆராயச்சி, கலைப் பண்பாட்டுத் துறை மந்திரி சபையின் ஆட்சியினகீழ் இக்காட்சிச் சாலை இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—பாதுகாவலர்—ஸ்ரீ C. சிவராமமூர்த்தி, M. A., ஸ்ரீ J. K. ராய், B. A , A.M.A. (London).

இரசாயன ஆராய்ச்சியாளர்—T. R. கயரோலா, M.Sc.

பிரதிப் பாதுகாவலர்—ஸ்ரீ A. K. பட்டாச்சாரியார், M.A. P R S.—ஸ்ரீ Y. புகாரி, M.A.

கீழ்த்தரப் பாதுகாவலர்—ஸ்ரீ சத்யஷ்ரவா, M.A.

மூன்று காட்சிப் பொருள் விளக்கச் சொற்பொழிவாளர்கள், மூனறு கலைக்கூட உட்பிரிவு உதவி அதிகாரிகள், புத்தக சாலையைப பார்த்துக்கொளளும் கைத்தொழில் பயிற்சி அதிகாரி ஒருவர், இரண்டு இரசாசன ஆராயச்சி உதவியதிகாரிகள், இரசாயனச்சாலை அதிகாரிகள் இருவர், தலைமைச் சிறபி ஒருவர், இதரச் சிற்பிகள் மூனறு பேர், சித்திர வேலைக்காரர் ஒருவர், மாதிரிப் படங்கள் வரைபவர் ஒருவர், குறிப்புத்திறனுளி ஒருவர், தச்சர் ஒருவா, ஜமேதார் இரண்டு பேர், போட்டோ பிடிப்பவர் இருவர், கலைக்கூட உட்பிரிவு உதவியாட்கள் பதினெட்டுப் பேர், தூப்பு வேலைக்காரர் ஐந்து பேர், சௌகிதார் ஏழு பேர், காரியதரிசி ஸ்ரீ B. N. பரத்வாஜ், B.A., அலுவலக மேற்பார்வையாளர், கணக்கர், கணக்குக் குமாஸ்தாக்கள், மேற்பிரிவு குமாஸ்தாகள, மூனறு சுருக்கெழுத்துக்காரர்கள, ஐந்து கீழ்ப்பிரிவு குமாஸ்தாக்கள், பண்டகசாலைப் பாதுகாவலர் ஆகிய இவர்கள் இககாட்சிச் சாலையின் ஊழியர்கள்.

நிதி நிலை.—வருஷ வரவு-செலவுத் திட்டத் தொகை, ரூ. 7,41,000.

விவரக் குறிப்பு.—ஜன பாதையில் கட்டப்பட்டுவரும் இக் காட்சிச்சாலைக்குரிய சொந்தக் கட்டடத்தின கட்டடம் முடியும் வரை இது இபபொழுது தற்காலிகமாக ராஷ்டிரபதி பவனத்தின ஒரு பகுதியில் இருந்து வருகிறது. மாதந் தோறும சராசரி 6,500 பேகள வரை காட்சிச்சாலையைப் பார்க்க வருகிறார்கள. ஆனால், ஆயுதபூஜை நாளிலும்மற்றும் முக்கியமான சாககார் விடுமுறை நாடகளிலும் ராஷ்டிரபதி பவனதத்திலுளள மொகலாய பூங்கா, பொது மக்களுகாகத் திறந்து வைகைப்படும்பொழுது பார்வையாளாகள் கூட்டங் கூட்டமாய் வருகிறார்கள. பொருட்காசிக கலைசகூடங் களுகும மறறும் பொருட் காட்சிச்சாலைத தேவைகளுக்குமாக இககாட்சிச்சாலைக்கு இனனும் அதிகமான இடம் தேவைப் படுகிறது. மேலே சொலலிய புதிய கட்டடம் கட்டி முடிந்து விட்டால் அவ்வசதிகள யாவும் கிடைக்கும.

இரசாயன ஆராய்ச்சிக்காக இரசாயன பரிசோதனைக் கூடம் இபபொழுது ஆரம்பிக்கப்பட்டிருகிறது. இக்காட்சிச் சாலையின பிரதான வாயில் பக்கத்தில் இருகும் விற்பனை நிலையததில் இக்காடசிச்சாலைப் பொருள்களின் போட்டோக்கள், வார்ப்பு வேலைப் பொருளகள் அசலுககுச் சரியான நகல படங்கள் முதலியன விற்கப்படுகின்றன. இக்காட்சிச்சாலையி லுள்ள பொருள்கள் யாவும் முக்கியமாக இதரக்

காட்சிச் சாலைகளிலிருந்து கடனாக வாங்குவதன் மூலமாகவும், புதைபொருள் வட்டாரங்கள் எனத் தெரியவரும் இடங்களில் அகழ்ந்தெடுத்த வகையிலும், இந்திய சர்க்கார் புதைபொருள் இலாக்காவிலிருந்து பெற்றுக்கொண்டது மூலமாகவும், இந்திய சர்க்காரால் நிரயத்துக்கு வாங்கியதன் மூலமாகவும், பற்பல ராஜ்ய சர்க்கார்கள் கடனாகவும் இலாமாகவும் கொடுத்ததன் மூலமாகவும் சேகரிக்கப்பட்டுள்ளவையாகும். எனைய பொருட்காட்சிச் சாலைகளுடன் பொருள்களின் நகல்களைப் பரிவர்த்தனை செய்துகொள்வதன் மூலமாகவும் காட்சிப் பொருள்களைச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணமும் இக்காட்சிச்சாலை அதிகாரிகளுக்கு இருந்து வருகிறது. இந்திய சர்க்காரிடம் மானியம் கேட்கும் உரிமையுடைய பொருட்காட்சிச்சாலைகளில் இது முதற்படியில் இருக்கிறது. இந்தியப் பொருட்காட்சிச்சாலைகள் சங்கத்தில் இக்காட்சிச்சாலை ஒரு ஸ்தாபன அங்கம் வகிக்கிறது.

ஹிமாசலப் பிரதேசம்

சம்பா

ஜனத்தொகை—6,858.

பூரிசிங் பொருட்காட்சிச்சாலை, சம்பா.

தோற்றம்.—1908.

வரலாறு.—இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் டாக்டர் J. Ph. வோகல் எனபவர் வடக்கு வட்டாரம், புதைபொருள் ஆராய்ச்சி இலாக்கா மேற்பார்வையாளராய இருக்கும்பொழுது சம்பா சமஸ்தானத்தில் புதைபொருள்களை அகழ்ந்து எடுக்கும் பணியை ஆரம்பித்துச் சில இடங்களை அகழ்ந்ததில் சில கல்வெட்டுகளும், உலோகச் சாஸனங்களும் கிடைத்தன. அவைகளைப் பாதுகாக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சம்பா சமஸ்தான ராஜா பூரிசிங் என்பார் அத்தகைய பழங்காலப் பொருள்களை வைத்துப் பாதுகாப்பதற்குப் பொருட்காட்சிச்சாலைதான் தகுதியான இடமாகும் என்று ஆலோசனை சொன்னார். அதன்படி, 1908-ஆம் வருஷம் ஒரு பொருட்காட்சிச்சாலை திறக்கப்பட்டது. திறந்தவுடன் சம்பா சமஸ்தானம் சம்பந்தப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பத்திரங்கள் யாவும் அக்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டன. அவற்றுள் சம்பா சமஸ்தான அரசாளுக்குக் காபூல் துரானிய மன்னர்களால் கொடுக்கபட்ட பாரசீக சன்னதுகள் அடங்கியிருந்தன. மேலும், பூரிசிங் ராஜாவின் அரண்மனையிலிருந்த எண்ணற்ற சித்திரங்களும் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டன. பிறகு படிப்படியாக அவ்வட்டாரத்துக் கைத்தொழில் பொருள்களும், பழங்காலப் போர் வீரர்களின் கவசங்கள் முதலியனவும் அக்காட்சிச்சாலையில் சேர்க்கப்பட்டன.

நோக்கமும் பொருள்களும்.—அந்தச் சமஸ்தானத்தின் சரித்திர சம்பந்தப்பட்ட பொருள்களையும், அவ்வட்டாரச் சிற்பம், கைத்தொழில், உயிர் வாக்க சரித்திரப் பொருள்களையும் சேகரித்து வைக்க வேண்டும் என்பதே இக்காட்சிச்சாலையை ஆரம்பித்ததின் நோக்கம். சரித்திரத் துறையில் சம்பா சமஸ்தானத்துடன் தொடர்புடைய பகதூர் சமஸ்தானங்களிலும், ஜில்லாக்களிலும் உள்ள பொருள்களும் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. காட்சிச்சாலையில் அடியில் காணும் பிரிவுகள் இருக்கின்றன :—

(a) கல் வெட்டுகள் கல் சிற்பங்கள், (b) செப்புப் பட்டயங்கள், (c) காகிதத்தில் எழுதப்பட்ட பத்திரங்கள், (d) படங்கள், (e) ஞாபகச் சின்னங்கள், கல் சித்திரங்களின் போடோக்கள், (f) செதுக்கு வேலைப்பாடமைந்த மரச் சித்திரங்கள், எனைய மர வேலைப் பொருள்கள், (g) பழங்கால ஆயுதங்கள், (h) பூச் சித்திர வேலைப்பாடமைந்த துணிகளும், இதர வகைத் துணிகளும், (i) பல வகைப்பட்ட பொருள்கள், (j) உயிர் வர்க்க வரலாற்று மாதிரிப் பொருள்கள்.

விளக்க நடவடிக்கைகள்.—இக்காட்சிச்சாலையின் உபயோகத்துக்காகச் சுமார் 500 புத்தகங்கள் கொண்ட ஒரு புத்தகசாலை இருக்கிறது. அபூர்வமாகத்தான் இப் புத்தகங்கள் பொதுமக்கள் படிப்பதற்காகக் கொடுக்கப் படுகின்றன. ஒவ்வொரு பொருளுக்கும் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கினறன. மாணவர்கள் பொதுமக்கள் முதலியோர் இக் காட்சிச் சாலையைப் பார்க்க வரும்பொழுது இங்கே சமீபத்தில் அமர்த்தப்பட்ட காட்சிச்சாலை உதவி அதிகாரி இங்குள்ள பொருள்களைப்பற்றிய விவரங்களை எடுத்துச் சொல்கிறார்.

வெளியீடுகள்.—J. Ph. வோகல், ph.d. (கல்கத்தா 1909), என்பவர் வெளியிட்டுள்ள சம்பா பூரிசிங் பொருட்காட்சிச் சாலைப் பட்டியல் விலை ரூ. 1-75 ந.பை.

வேலை நேரம்.—சர்க்கார் கெஜட்டில் பிரசுரிக்கபபடும் விடுமுறை நாட்களும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் இக்காட்சிச் சாலை திறக்கப்பட்டிருக்கும். ஏப்பிரல் முதல் செப்டெம்பர் வரையுள்ள மாதங்களில் காலை 8 மணி முதல் 12 மணி வரையும், அக்டோபர் முதல் மார்ச்சு முடியக் காலை 10 மணி முதல் 1 மணி வரையும் இக்காட்சிச்சாலையின் வேலை நேரம்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—ஹிமாசலப் பிரதேசப் பொருட்காட்சிச் சாலைகளின் கல்வி டைரக்டர் மூலம் ஹிமாசலப் பிரதேசச் சர்க்கார் காட்சிச் சாலையை நிர்வகித்து வருகிறது. சம்பா ஜில்லாப் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் தமது உத்தியோகத்துடன் காட்சிச் சாலையின் காவலராகவும் இருந்துவருகிறார்.

ஊழியர்கள்.—கௌரவக் காவலர்—ஸ்ரீ தௌலத்ராம் குப்தா, B.Sc. B.T., காட்சிக்கூட உதவியதிகாரி, பகுதி நேரக் குமாஸ்தா, இரண்டு வேலைக்காரர்கள், சௌக்கிதார் ஒருவர்.

நிதி நிலை.—வருஷத்திற்கு ரூ. 6,000.

விவரக் குறிப்பு.—பொருட்காட்சிச் சாலை நகரின் மத்தியில் இருக்கிறது. பக்கத்து ஜில்லா வாசிகள் இங்கு வந்து பார்க்க வசதியுடையதாய் இருக்கிறது. நாள் ஒன்றுக்குச் சராசரி 75 பேர்களும், வருஷம் ஒன்றுக்குச் சராசரி 28,000 பார்வையாளர்களும் வந்து பார்த்துப் போகின்றனர். மழைக் காலத்தைவிடக் கோடைக் காலத்தில் அதிகம் பேர் வந்து போகிறார்கள். இது தவிர, அந்நகரில் நடக்கும் மிஞ்சார் சந்தை, மணிமஹேஷ்மேளா ஆகிய சந்தை நாட்களில் ஏராளமான கூட்டங்கள் வருகின்றன. காட்சிப் பொருள்களை விஸ்தரித்து வைக்க, பண்டகசாலை அமைக்க இடம் போதாத தாய் இருக்கிறது. இரவு காவல் செய்வதற்கு ஒரு சௌக்கிதார்தான இருக்கிறார். பீரோக்களில் நாணயங்களும், நகைகளும், மற்றும் விலையுயர்ந்த பொருள்களும் வைத்துப் பூட்டப்படடிருக்கின்றன. சரித்திர சம்பந்தமான பத்திரங்கள் நெருப்புத் தாக்காத இரும்புப் பெட்டிகளில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கின்றன. இங்குள்ள காட்சிப் பொருள்கள், புதிதாகத் தேடிக் கண்டு பிடித்தல், விலை கொடுத்து வாங்குதல், அகழ்ந்து எடுத்தல், மானியம் மூலம் சேகரிக்கப் படுகின்றன. சமீப காலத்தில் ஹிமாசலப் பிரதேசத்தில் இணைக்கப்பட்ட ராஜ்யங்களிலிருந்து இக்காட்சிச் சாலைக்குக் கொண்டு வந்தும், விலை கொடுத்து வாங்கியும் சில பொருள்கள் சேசரிக்கப்பட்டுள்ளன. இப்பொழுது புதுடில்லியிலுள்ள தேசீயப் பொருட்காட்சிச் சாலையிலிருந்து வரும் 'உஷா சரித்திரம்' போனற புத்தகங்களில் உள்ள சித்திரங்களை இக்காட்சிச் சாலை இதரக் காட்சிச் சாலைக்குச் சில சமயங்களில் அனுப்பி வருகிறது. ஹிமாசலப் பிரதேசத்திலுள்ள பொருள்களையுடைய காட்சிச் சாலையாக இக்காட்சிச் சாலையை விரிவுபடுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தவிரவும், முனபு பழக்கத்திலிருந்து இப்பொழுது விரைவாக மறைந்து வரும் பழங்கால இசைக்கருவிகள், ஆபரணங்கள், இவ்வட்டாரக் கைத்தொழிற் பொருள்கள் முதலியவைகளையும் காட்சிச் சாலையில் சேர்த்து வைக்க வேண்டுமென்பதும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஜம்மு-காஷ்மீர்

ஜம்மு

ஜனத்தொகை—தெரியவில்லை.

• டோக்ரா சித்திரகூடம்.

தோற்றம்.—1954.

வரலாறு .—ஜம்முவிலுள்ள பொது ஜனங்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, பகாரிச் சித்திரங்களில சிறந்தவைகளைச் சேகரித்து வைக்கப்பட்டுள்ள இக்காட்சிச் சாலை 1954-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இப்பொழுது 432 சித்திரங்கள இருக்கின்றன. இவற்றுடன் மேன்மேலும் அதிக சித்திரங்கள் சேர்க்கப்படுகின்றன. இங்கே சரித்திர சம்பந்தப்பட்ட போர்க் கருவிகள், துணி வகைகள், மொகலாய, பாரசீகப் பாணி களில் அழகான சித்திர விளக்கத்துடன் கூடிய ஷாநாமா, சிக்கந்தா நாமா உட்பட்ட பல அபூர்வமான கையெழுத்துப் பிரதிகள், கல், மரச் சிற்பங்கள், இசைக் கருவிகள் முதலியனவும் இருக்கின்றன. இவற்றுடன் சிவாலிக் பிரதேசங் களில் காணப்படும் கற்பாறைத் தினுசுகள், புதைந்து கிடந்ததால் கெட்டிப்பட்டு இறுகிப்போன மிருகங்கள அல்லது செடி கொடி வகைப் பொருள்கள் இவைகள அடங்கிய பூதத்துவப் பொருளகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

விளக்க நடவடிக்கைகள்.—சித்திரக் கலைகள சம்பந்தப் பட்ட உயர்தரப் புத்தகங்களைக் கொண்ட சிறிய புத்தகசாலை ஒன்று இங்கே இருக்கிறது. அத்துடன் மேலும் மேலும் பல புத்தகங்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன. விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பார்வையாளர்களுக்கு ஹிந்தியில் மொழி பெயர்த்துச் சொல்கிறார்கள். காட்சிச் சாலை காவலர், பார்வையாளர் விரும்பினால் அங்குள்ள பொருள்களைப்பற்றி விளக்கம் தெரிவிக்கிறார். அப்பிரதேச மக்களுக்கு அவர் களுடைய பரம்பரைக் கலைப் பண்பாட்டு மேன்மையை விளக்கிக் காட்டச் சில சமயங்களில் பொருட்காட்சி விழாக்கள் நடத்தப்படுகின்றன. இந்தப் பொருட்காடசிச சாலையே மேலே சொல்லியபடி பொது ஜனங்களின் வேண்டுகோளுக் இணங்கி, பகாரிச் சித்திரங்களில முகியமானவறறைச் சேகரித்துக் கூட்டியதன் மூலமாகத்தான 1954-ஆம் வருஷத் தில் இந்திய ஜனாதிபதியால் ஆரமபித்து வைக்கப்பட்டது. அவ்வட்டாரத்திலுள்ள மாணவர்கள் இக்காட்சிச சாலையின் வளர்ச்சியில் பெரிதும் ஆர்வமுடையவர்களாய் இருக்கிறார்கள்.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—சர்க்கார் விடுமுறை நாட்களும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் திறக்கப்பட்டிருக்கும். கோடை காலத்தில காலை 8 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையும், மழைக் காலத்தில் காலை 10 மணி முதல் 1 மணி வரையும், மாலை 4 மணி முதல் 7 மணி வரையும்.

அனுமதி .—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு .—இக்காட்சிச் சாலை கல்வி டைரெக்டர் அதிகாரத்தின்கீழ் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—காவலர் : ஸ்ரீ சன்னார் சந்த் ஷர்மா, குமாஸ்தா, இரண்டு வேலைக்காரர்கள்.

நிதி நிலை.—வருஷ வரவு-செலவுத திட்டம், ரூ. 6,975.

விளக்கக் குறிப்பு.—இக்காட்சிச் சாலை காந்தி பவனத்தில் பின பக்கமுள்ள அறையொன்றில் இருக்கிறது. இடம் போதாது. நாள் ஒன்றுக்குச சுமார் 10 பேர் வீதமும், வருஷம் ஒன்றுக்குச் சுமார் 4,000 பேர் வீதமும் காட்சிச் சாலையைப் பார்க்க வருகிறார்கள். தேடிக் கண்டுபிடித்தல், இனம் மூலமாகப் பொருள்கள் சேர்க்கப்படுகின்றன.

ஸ்ரீநகர்

ஜனத்தொகை—250,000

S. P. S. சர்க்கார் பொருட்காட்சிச் சாலை.

தோற்றம் .—1898.

வரலாறு.—ஜம்மு-காஷ்மீர் சமஸ்தானதிலும் அதைச் சார்ந்துள்ள லடாக், பல்டிஸ்தான, கில்ஜித் என்னும் நாடு களிலும் உள்ள பழங்காலப் பொருள்களையும், இவ்விடங களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களையும காடசிக்கு வைகக ஸ்ரீநகரில ஒரு பொருட்காட்சிச சாலை நிறுவ வேண்டுமெனக் கேட்டுத தளபதி ராஜா சா அமர்சிங (K. C. S. I.)கும, படைத்தலைவர் S. H. கோதரேயும், மேன்மை தங்கிய மஹாராஜா பிரதாபசிங அவர்களிடம ஒரு மகஜர சமாப்பித்தார்கள். அக்காடசிச் சாலையை நிா வகித்துவர ஜம்முவிலும் ஸ்ரீநகரிலும் உள்ள சமஸ்தான தோஷ்காகுவிலிருந்து பொருள்கள இனமாய் வழங்க வேண்டுமெனறும் அம்மகஜரில் கேட்டிருநதாகள. அதற் கிணங்கி மஹாராஜாவும் அவர் குடும்பததைச சேர்நத இள வரசரும் சால்வைகளையும் படைக்கருவிகளையும் அன்போடு கொடுத்தார்கள். அவைகள் காட்சிப் பொருளகளாக வைக் கப்பட்டன. பினபு அகழ்ந்தெடுத்த இடங்களில் கிடைத்த புதைபொருள் பிரிவு ஒனறும இக்காட்சிச சாலையில் நிறு வப்பட்டது. அதன்பின சமஸ்தானத் தாதுப்பொருள இலாக காவிலிருநது பெற்ற பல வகைத தாதுப் பொருள்களைக கொண்டும், சமஸ்தானத்திலுள்ள பற்பல கல்வி நிலையங களிலிருந்து கிடைத்த தாதுப் பொருளகளைக் கொணடும இக்காட்சிச சாலையில தாதுப் பொருள பிரிவு ஒனறும ஆரம பிக்கப்பட்டது. சமீப காலத்தில இககாட்சிச சாலை இருந்து வரும கட்டடம புதுபபிகபபட்டதுடன் இஙகுள்ள காட்சிப் பொருள்களை யாவும விஞ்ஞான ரீதியில் மாற்றி அமைகபபட்டன. 1952–ஆம் வருஷத்தில வனவளப் பிரிவு, பட்டுக் கைத்தொழில் பிரிவு எனற இரணடு பிரிவுகளும் ஆரமபிகபபட்டன. காட்சிச சாலையை இனனும் அதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று ஒரு திட்டம் சாககார் ஆலோசனையில் இருந்து வருகிறது.

நோக்கமும் பொருள்களும்.—இககாட்சிச் சாலையில் புதை பொருள்கள, நாணயங்கள், உயிா வர்க்கஙகளின வரலாறு, துணி வகைகள, கைததொழில, கலைப் பொருளகள், சித்திரங்கள, பூதத்துவப் பொருள்கள ஆகியவை கொணட தனித்தனி பிரிவுகள இருகின்றன. இவைகளுடன் சமீப காலதில் வனவளம, பட்டுக் கைத்தொழில பொருள் களுகக இரணடு தனிப் பிரிவுகளும சேர்க்கப்பட்டிருக்கினறன. புதைபொருள்களின பிரிவில அகழ்ந்தெடுத்த புதை பொருள்கள வைககப்பட்டுளளன. இங்குள்ள சிறபங்கள கி. பி. 5-ஆம் நூறறாண்டு முதல் கி. பி. 15-வது நூறறாண்டு வரையுள்ள காலததைச் சோநதவைகளாய் இருக்கின்றன. அவ்வகைப் பொருள் சோகைகயில் (கி. பி. 4-ஆம், 5-வது நூற்றாண்டுகளைச் சேர்ந்த புதத கால) ஹார்வான் ஓடுகள் இருகினறன. அவைகளில் பூகோள சாஸ்திரப் படங்களும், பூ அலஙகாரங்களும் காணப்படுகின்றன. இது தவிர (தற்சமயம பண்ட்ரீதன் எனறு வழக்கப்படும்) அசோக மனனருடைய புராணதிஸ்தானத்திலுள்ள (கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த) புத்தர் பிரான், அவலோஹி தேஸ்வரர் ஆகியோர் சிலைகளும், மூன்று தலைகளையுடைய ஒரு விஷ்ணுவின் சிலையும், மூன்று இலைகளையுடைய ஒரு வளைவின் அடியில் அமர்ந்துள்ள புததர் சிலையும், மற்றும் அவந்திபுரம், பரிஹாசபுரம் ஆகிய இடங்களில் கிடைத்த (கி. பி. 8-வது, 9-வது நூற்றாண்டுகளைச சேர்ந்த) புதைபொருள்களும், (கி. பி. 10 முதல் 13-வது நூற்றாண்டு வரையுள்ள காலத்தைச் சேர்ந்த) பண்ட்ரீதன், வெரிநாங் ஆகிய இடங்களில் கிடைத்த திருமூர்த்தி, முத்தலை விஷ்ணு, மற்றும் பற்பல ஆண்பெண் தெய்வங்களின் சிலைகளும் இப்பிரிவில் இருக்கின்றன. மேலும் இவைகளோடு கல்வெட்டுகளும், அரசாங்க முத்திரை களும், செப்புச் சிலைகளும், மொகலாயர் காலத்து ஓடுகளின்

வகைகளும் இங்கே சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. இக் காட்சிச் சாலையின் நாணயப் பிரிவில் இந்தோ-பாக்டீரிய, இந்தோ-கிரிய, குஷான, குப்த நாணயங்களும், இந்து மன்னாகளின நாணயங்களும் மிகுபழங்காலந் தொட்டு நாளது வரையுள்ள இந்த சமஸ்தான மன்னர்களின் நாண யங்களும் இருக்கினறன. மேலும் சுததம் செய்து தரம் பிரிக்க வேண்டிய அநேக நாணயங்களும் உண்டு.

உயிர் வர்க்க வரலாற்றுப் பிரிவில் காஷ்மீர்ப் பிரதேச மிருக வகைகளும், போட்டி விளையாட்டுப் பறவையினங்களும், உணவைக் கொரித்துத் தின்னும் பிராணி வகைகளும், ஊர் வனவும், நீர் வ ழ்வனவும் கழுகு இனங்களுமா இருக கின்றன. பல வகைப் பறவைகளின் முட்டைகளும் இருகின்றன.

துணிகளின் பிரிவில் போர்வைகள், ருமால்கள், சித்திரப் பட்டாடைகள், விலை ஜரிகை வேலைப்பாட்டுடன் கூடிய உடைகள், படுக்கை விரிப்புகள, தபாரி சோகாக்கள், ஜமுக் காளங்கள் முதலியனவும் இருக்கின்றன. ஜமக்காளத்தினுசு கள் ஆப்கானியர், சீக்கியர், தோக்கரர் காலத்தவையாயும் இது வரை உபயோகத்தில் இருந்து வருபவைகளாயும் இருக்கின்றன. உயர்தரமான போர்வைகளுக்கு ஷாபசந்த் எனறு பெயர் கொடுத்திருக்கிறார்கள. அப்போர்வைகள் ஜம்வார், பூச்சித்திரவேலை, சிக்னி, ஸஜானி ஆகிய சித்திர வேலைத்திறமைகளுடன் திகழ்கின்றன. மேலும், ஆட்டு ரோமத்தால் செய்யப்பட்ட அழகான போர்வைகளும், டாஷ்மினுக்களும். ஒன்றோடொனறு பினனிய மாதிரிப் பூச்சித்திர வேலைப்பாட்டுடன, ரேகா கணிதப்படி வரைந்த சித்திரங்களையுடையனவாய் இருக்கின்றன சில படடாடைகளில் மனித உருவங்களும், மிருக உருவங்களும் பின்னப்பட்டிருக் கின்றன. இவைகளேயன்றி, மதிய ஆசியப் பட்டாடைப் பிரிவு ஒன்றும் இருக்கிறது. அதில் சித்திரபட்டாடைகள், பூவேலை செய்யப்பட்ட பட்டாடைகள் முதலியனவும், சுத்தப்பட்டு, கழிவுப்பட்டு, நார்ப்பட்டு, வெல்வெட்டு ஆகியவைகளின துண்டு களும் இருக்கின்றன. தவிர, சோகாக்களுக்கு உபயோக மாகும் துபபடிகளும், சேணங்களின் உறைக்கு உபயோக மாகும உறைத்துணி வகைகளும், நீண்ட அல்லது குறுகிய இருக்கை விரிப்புகளுக்கு உபயோகமாகும் துணிவகைகளும், கழுத்தில் கட்டும் பட்டைத் துணித் தனுசுகளும இருக்கினறன.

கைத்தொழில் கலைப்பிரிவில் மரக்கட்டையில் செதுக்கிய சித்திரங்களும் எண்ணெய் பூசிய மாதிரி தோனறும் நூதன முறையில் தயாரிக்கப்பட்ட வழுவழுபபான காகிதமும, ஆப ரணங்களும், பூஜை போனற பிரத்தியேகக் கிரியைகளுககு உபயோகப்படுத்தபபடும் பாத்திரங்களும், மற்றும் சாதாரண உபயோகத்துக்குரிய பாத்திரங்களும், அழகான கைத்தொழில் திறமையுடன்கூடிய வெள்ளிப் பாத்திரங்களும் இருகினறன. அவற்றுடன் இப்பிரிவில் சீக்கிய தோக்கரர் காலத்துத் தங்கத் துப்பாக்கி, வாள் முதலியனவும், முதல் உலகயுத்த வெற்றிச் சினனங்களும் இருக்கின்றன.

சித்திரப் பிரிவில் சுமார் 275 சித்திரங்களும் லடாக்கி டங்கா சித்திரதில் ஒன்றும இருகின்றன. சித்திரங்களில் அநேக ங்கராப் பாணியில் இருகின்றன. பசோலி ஜம்மு ஆகிய ஓவங்களைச் சேர்ந்த சில தோகராப் பாணிச் சித்திரங்களும் இருக் கின்றன. இவைகளேயன்றி, காஷ்மீரைச் சேர்ந்த சித்திரங் களிலும் சில சித்திரங்கள் இருக்கினறன.

தாதுப் பொருள் பிரிவில் காந்தி நினைவுக் கல்லூரியிலும் சர்க்கார் தாதுப்பொருள் இலாக்காவிலும் சேகரித்து வைத் திருந்த தாதுப்பொருள்களுட, தாதுப்பொருள்களைக் கொண்ட பாறைகளும், மண் ரகங்களும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இக்காட்சிச் சாலை விளக்க நடவடிக்கைகள் போதிய அளவு இல்லை. ஒவ்வொரு பிரி விலும் ஆங்கிலத்திலும், உருதுவிலும விளக்கச் சீட்டுகள் வைக் கப்பட்டிருக்கின்றன. அவற்றைக் காஷ்மீர்ப் பாஷையிலும் வைப்பதெனத்தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

வெளியீடு.—S.P.S. பொருட்காட்சிச்சாலைத் துணைப்புத்த கம்.

வேலை நேரம்.—சர்க்கார் கெஜட்டில் பிரசுரிக்கப்படும் விடு முறை நாட்களும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் திறக்கப்படடிருக்கும். கோடை காலததில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையும், மழை காலததில் காலை 10-30 மணி முதல் மாலை 4 மணி வரையும் வேலை நேரம்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—புதை பொருள் ஆராய்ச்சிப் பிரிவு பொருட்காட்சிச் சாலை இவைகளின் சூப்பிரண்டெண்டின் ஆட்சிக்குட்பட்ட நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—இரசாயன உதவியாளர்—ஸ்ரீ ஷாம்லாம் செய்ஜி, B.A.

உயிரிழந்த பிராணிகளின் தோலைப் பதப்படுத்தி அவறறுள் பஞ்சடைக்கும் தொழிலாளி, பார்வையாளர்கடகு உதவி புரிவதுடன பதிவு செய்யும் தொழிலுமுடைய குமாஸ்தா, ஐந்து வேலையாட்கள், ஒரு தோட்டக்காரன.

நிதி நிலை.—வருஷ வரவு-செலவுததிட்டம், ரூ. 6,400.

விவரக் குறிப்புகள்.—நாளொனறுக்குச் சராசரி 300 முதல் 400 பார்வையாளர்களும் வருஷம் ஒனறுக்குச் சுமார் 1,40,000 பார்வையாளர்களும காட்சிச சாலையைப் பார்க்க வருகிறார்கள். ஆனால், சுறறுலாவரும் பிரயாணிகள் காஷ்மீருக்கு அதிகமாக வரகூடிய காலமான ஏப்ரல் முதல் செப்டெம்பர் வரையுள்ள மாதங்களில் காட்சிச் சாலையில் கூட்டம் அதிகமாய் இருகும். 50 வருஷங்களுக்கு முன்பாகவே காஷ்மீர் அரச குடும்பதினர் உபயோகித்து வந்த கட்டடத்தில் இக்காட்சிச்சாலை இருந்து வருகிறது. அக்கட்டடத்தைச் சமீபத்தில் புதுபபித்துங்கூட அஙகுள்ள பொருள்களுக்குப் போதிய இடவசதியில்லாமல் இருக்கிறது. தங்க வெள்ளி நாணயங்கள் பத்திரமாய்ச் சர்க் கார் கஜானாவில் வைக்கப்பட்டிருக்கின்றன. தவிரவும், காட்சிச் சாலைககு இரசாயன ஆராய்ச்சிக கூடமும் இல்லை, போதிய எணணிக்கையுள்ள புத்தகங்களையுடைய புத்தகசாலையும் இல்லை. இககாட்சிச் சாலை ஊழியாகளின் உதவிககு 100 புத்த கங்களும, சிறிதளவே மாத, வார, தினசரிப் பத்திரிகை களுமே இருக்கினறன இஙகுள்ள காட்சிப் பொருள்களில் பெரும்பானமை தோஷ்காலுவிலிருந்தும், அகழ்ந்தெடுத்த பகுதிகளிலிருந்தும் அகப்பட்டவைகளாகும்.

கேரளா

திருச்சூர்

ஜனத்தொகை—69,515.

புதைபொருட்காட்சிச் சாலையும், சித்திரகூடமும்.

தோற்றம்.—1938.

வரலாறு.—1938-ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் சித்திர கூடம் ஸதாபிக்கப்பட்டது. 1947-ஆம் வருஷம் மார்ச்சு மாதத்தில் புதைபொருட்காட்சிச் சாலையும் சேர்க்கப்பட்டது. சித்திரக்கலையின் சிறந்த போஷகராயிருந்த காலஞ்சென்ற மேனனம தங்கிய கொச்சி மஹாராஜா அவர்கள் ஜனம நட்சத்திர ஞாபகார்த்தமாக இச்சித்திரகூடததுக்கு 'ஸ்ரீமூலம் சித்திரசாலை' எனப் பெயரிடபபட்டிருக்கிறது. இந்தச சித்திர கூடததில் இந்தியாவின் பல பகுதிகளிலுமுளள அழகான சித்திரஙகள் வைக்கப்பட்டிருக்கினறன. தவிர, பற்பல ராஜ்யங் களிலும் சித்திரசகலை வழிவழியாக வளர்ந்தோங்கிய வரலாற்றை விளக்கிக் காட்டும் வகையிலும் சித்திரங்கள் பல சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. பல வருஷங்களாக மிகவும் சிரமம் எடுதது தேடியதன் பயனாகக் கொச்சிச் சமஸ்தான அரண்மனைகளிலும், பற்பல கோயில்களிலும் காணப்பட்ட பழஙகாலச் சித்திரங்களில் முக்கியமானவைகளை நகல் எடுத்தும் இந்தச் சித்திரகூடம் அமைக்கப்பட்டிருக் கிறது.

நோக்கமும் பொருள்களும்.—இங்குள்ள புதைபொருள் காட்சிச்சாலையிலும், சித்திரகூடத்திலும் சரித்திர சம்பந்தமான பொருள்கள் பல இருக்கின்றன. அவைகள் புதைபொருள் பற்றிய ஆராய்ச்சிக்கு ஊக்கம் ஊட்டக் கூடியவையாய் இருக்கின்றன. மேலும், இங்கே சிறிய படங்களை வைத்துப் பெரியனவாக எடுத்த போட்டோகளும், சுவர்ச்சித்திரங்களின் நகல்களும், மற்றும் பல திறப்பட்ட சித்திரங்களும் கால வரிசைப்படி தரம் பிரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள காட்சிப் பொருள்களில் முக்கியமானவை பின வருவனவாகும் :

(a) மொஹஞ்சதாரோ, ஹாரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட பழங்காலப் புதைபொருள்கள்.

(b) தக்ஷசீலத்தில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள்கள், இவ்வினத்தில் சில கல்வெட்டுகளும், நேர்த்தியான பொடி மணலையும் சுண்ணாம்பையும் கலந்து அரைத்துச் சுவர்களில் பூசிப் பளிங்கு போலாக்கிய அப்பூச்சுகளின்மேல் எழுதப் பட்டிருந்த சித்திரங்களும் இருக்கின்றன. இவைகள் சக்கா கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த காந்தாரகலையின் அழகை எடுத்துக் காட்டக்கூடியவைகள்.

(c) அடுத்தாற்போல் சக்கா கி.பி. 4-வது நூற்றாண்டில் தக்ஷசீலத்துக்கும கொச்சிக்கும் மத்திய கேரளப் பிரதேசங்களுக்கும் இடையே பரவி இருந்த கலைப பண்பாட்டின தொடர்பை விளக்கிக் காட்டும் புதைபொருள்களும் சித்திரங்களும்.

(d) கொச்சிச் சமஸ்தானத்தையும் மத்திய கேரளப் பிரதேசங்களையும் சேர்ந்த பெரிய கல்வெட்டுச் சாஸனங்கள்.

(e) கொசசிச் சமஸ்தானத்தையும், மத்திய கேரளப் பிரதேசங்களையும் சேர்ந்த பெரிய கல சினனங்களிலிருந்து அகழ்ந்து எடுத்ததன் மூலம் அகபபட்ட மண தாழிகளும் மண கலங்களும ஸ்படிகத்தில் செய்யப்பட்ட குணடுமணி களும்.

(f) கொசசி சமஸ்தானப் பெருங்கல் பிரதேசங்களிலுள்ள பாறைகளின மேல் தளத்திலிருந்து வெட்டி எடுத்த மெருகு கொடுக்கப்பட்டுப் பால்போல சுடர்விட்டுப பிரகாசிக்கும் பொடிப பொடிக் கல பாளங்கள.

(g) 1946-ம் வருஷம் செப்டெம்பர் மாதத்தில் திண்டியா என்ற இடத்திலுள்ள பழங்காலக் கோயில்களுக்கும் முஷிரிலை என்ற இடத்திலுள்ள பழங்காலக் கோயில்களுக்கும இடையே செல்லும் பிரதான ரஸ்தாவிலுள்ள எயயல் என்ற கிராமத் தில் கண்டெடுகக்பபட்ட தேதியுடன் கூடிய தங்க, வெளளி நாணயங்களும், முத்திரையுடன் கூடிய வேறு சில வெள்ளி நாணயங்களும் சாக்கா முதலாவது நூற்றாண்டில் கொச்சிச் சமஸ்தானதிலும் மத்திய கேரளப பிரதேசங்களிலும் ரோம நாகரிகம் முதன்முதலாகப் பரவ ஆரம்பித்த விவரங்களைத் தெரிவிப்பனவாய் இருக்கின்றன.

(h) கிரங்கனூரில் (முஸ்ரிஸ்) கண்டெடுக்கப்பட்ட உடைந்த மண பாத்திரத் துண்டுகள், இரும்பாலும் செம்பாலும் செயயப்பட்ட பொருள்கள்; ஸ்படிகத்திலும் கண்ணாடியிலும் செய்யப்பட்ட குணடுமணிகள் முதலியன. இவைகள சக்கா கி.பி. முதலாவது நூற்றாண்டில் இந்தியா ரோமாபுரிக்கு இடையே நடந்த வர்த்தகத்துக்கு இந்தியாவின் கிழக்குக கடற்கரையில் வர்த்தக நிலையமாய் விளங்கிய அரிபினைமேடு என்ற இடத்தில கணடெடுகக்பபட்ட பொருள்களைப் போல இருக்கின்றன.

(i) கிரங்கனூரில் (முஸ்ரிஸ்) கண்டெடுக்கப்பட்ட உடைந்த துண்டு சீனப்பீங்கான்கள். இவைகளில் சில சித்திரங்களுட னும் சில சித்திரங்கள் இல்லாமலும் இருக்கின்றன. இவை களில் சில இரணடு அடுக்குகள் முதல் நான்கு அடுக்குகள வரை உள்ளனவாயக கலந்து கலந்து இருக்கினறன. இவைகள் சக்கா கி.பி. 11, 12-வது நூற்றாண்டுகளில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே இருந்துவந்த தொடர்பை விளக்குவன வாயும் இருக்கின்றன.

(j) கி.பி. 10 முதல் 15-வது வரையுள்ள நூற்றாண்டுகளைச் சேர்ந்த தமிழ்மொழியிலும்வட்டெழுத்துமொழியிலும் உள்ள கல் வெட்டுகளின காகித நகல்கள். இவை மத்திய கேரளப் பிரதேசங்களுகும் தமிழ் நாடடுக்குமிடையே மத்திய காலத்திலிருந்து வந்த அரசியல் ஒற்றுமையையும் கலைப் பணபாட்டின தொடர்பையும் விளக்கிக காட்டுவனவாய இருக்கின்றன.

(k) கி.பி. 15-வது நூற்றாண்டு முதல் 18-வது நூற்றாண்டு வரை மலையாள மொழியின வளர்ச்சியை விளக்கிக் காட்டும் ஆதிகால மலையாளக் கல்வெட்டுகளின காகித நகல்கள்.

(l) சர்க்கா கி. பி. 11-வது நூற்றாண்டில் மத்திய கேரளப் பிரதேசங்களில் நிலவிய மரச் சித்திரச் செதுக்கு வேலை, உலோகங்களில சிலைகள் வார்த்தல் முதலிய தொழிலின கலைத்திறனை எடுத்துக் காட்டும மரச் சித்திரச் செதுககு வேலைப் பொருள்களும் உலோகங்களில் வார்க் கப்பட்ட சிலைகளும்.

(m) மட்டாஞ்சேரி அரண்மனையிலும், கொசசி, வடக்கு நாதன் கோயில, திருச்சூர் ஆகிய இடங்களிலுமிருந்து கொண்டு வரபபட்ட நூற்றுக்கு மேற்பட்ட சுவர்ச் சித்திரங் களின் சடடமிட்ட தகடுகள.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிச் சாலையினை டைரகடர் உபயோகத்துக்கென நிறுவபபடடுள்ள புதுதக சாலையை ஹெகாடசிச்சாலை ஊழியர்களும உபயோகித்து வருகின்றனர். காட்சிச்சாலைப் பொருளகளினை மூலம் மாணவர்களும் ஆசிரியர் களும் நாட்டின வாலாற்றைத தெரிந்துகொளவதற்கு வசதியளிபபதாய் இருக்கிறது. பள்ளி மாணவர்களுக்கும பட்டம் பெற்று ஆசிரியர் போதனை முறைக் கல்லூரியில் படித்து வருபவர்களுககும இங்குளள காட்சிப் பொருளகளின் விளக்கம் கூற வழி வகைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. சரித்திரப பிரசித்தி பெறற இடங்களையும், புதைபொருள கண்டெடுககப்பட்ட இடங்களையும், ஞாபகச் சினனங்களையும் மின் ஒளி விளக்கின் மூலம் திரைப் படம் காட்டி விளக்கக் கண்ணாடிப படங்களும் இங்கே கிடைக்கும். கோடை காலததில் (எபரல, மே மாதங்களில) திருச்சூர் முனிசிபாலிட்டியார் நடத்தி வருகிற அகில இநதியப் பொருட்காட்சி விழாவில் காட்சிச் சாலையிலுள்ள பொருள்கள் விசேஷக் காட்சிப் பொருள் களாக வைக்கப்படுகினறன. காட்சிப் பொருள்களின் மீது மலையாளத்திலும், ஆங்கிலத்திலும விளக்கச் சீட்டுகள் வைகைகப்படடிருககின்றன. விசேஷமான விவரங்களை விளக்கிக் காட்டுவதறகு அனுகூலமாகத் தரைப்படங்கள், வளர்சசி தாழ்ச்சி காட்டும குறிப்புப படங்கள, போட்டோக்கள முதலியனவும் இருக்கின்றன. திருச்சூர் நகரிலும் மூனறு முதல் தரக் கல்லூரிகளிலும் சுமார் இருபது உயாநிலைப பள்ளிகளிலும் படிததுவரும் மாணவர்களும் மற்றுமுள்ள நிலையங்களிலுள்ளவர்களும் இக்காட்சிச் சாலைப் பொருள்களைப் பற்றித் தெரிந்துகொள்வதில் மிகவும் ஆரவமுடையவர் களாய் இருக்கின்றனர்.

வெளியீடு.—சித்திரகூடப பட்டியல் 2-வது பதிப்பு விலை 25. ந.பை.

வேலை நேரம்.—எல்லா நாட்களிலும் காலை 11மணி முதல மாலை 5 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இலலை.

நிர்வாகக் குழு.—இப்புதைபொருட்காட்சிச சாலையும, சித்திரகூடமும், பொருட்காட்சிச் சாலைகள், மிருகக் காட்சி சாலைகள் டைரக்டர் மேற்பாவையில இருந்துவருகின்றன

ஊழியர்கள்.—காவலா நியமிக்கப்பட வேண்டும். படங களுக்கு மாதிரி வரைபவர், சித்திரம வரைபவர், இரணடு வேலைகாரர்கள்.

நிதி நிலை.—புதைபொருட்காட்சிச் சாலைக்கும் சித்திர கூடததுக்கும் சேர்த்து வருஷ வாவு கெலவுத் திட்டத தொகை ரூ. 1,000.

விவரக் குறிப்புகள்.—இந்தப புதைபொருட்காட்சிச் சாலையும் சித்திர கூடமும் டவுன்ஹால் கட்டடத்தின மேல மாடியில் உள்ள நான்கு பெரிய அறைகளில் இருக்கின்றன. விசேஷ நாட்களான ஓணம், கிறிஸ்துமஸ், பூரம் ஆகிய நாட்களில் வராளமான பார்வையாளர்கள் வருகின்றார்களா யினும், வருஷமொன்றுக்கு இங்கு வரும் பார்வையாளர் களின் எண்ணிக்கை சராசரி 15,000 தான. காட்சிச்சாலைக்கும் சித்திரக் கூடத்துக்கும் டவுன்ஹால் கட்டடம் தகுதியானதும் இடவசதியுள்ளதுமாய இருக்கிறது. சில நகல்களையும் பண்டகசாலை விசேஷ காரியத்துக்காக ஒதுக்கி வைக்கப்படும் பொருள்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க வசதியும் இருக் கிறது. காட்சிச் சாலையுடன் இணைக்கபபட்ட இரசாயன ஆராய்ச்சிக கூடமும் இங்கே இருக்கிறது.

(ii) ராஜ்யப் பொருட்காட்சிச்சாலையும் மிருகக் காட்சிச்சாலையும் தாவரங்களின் தோட்டமும்

தோற்றம்.—1885.

வரலாறு.—பொருட்காட்சிச் சாலையும், மிருகக் காட்சிச்சாலை யம, தாவரங்களின தோட்டமும் அடங்கிய இந்நிலையம் திருச்சூரின வடக்கு எல்லையிலிருந்து சுமார் 1½ மைல் தூரத்திலுள்ள வியூர் என்ற இடத்தில் 1885-ம் வருஷத்தில் அப்பொழுது 'சங்கரய்யா பூங்கா' என வழங்கப்பட்ட இடத்தில் ஆரம்பிக்கப்படடது. பொருட்காட்சிச்சாலைக்கு வேண்டிய பொருள்களாகக குறைந்த எண்ணிக்கையுள்ள கலைத்திறமை காட்டும் பொருள்களையும், ராஜ்யத்தில் விளையக் கூடிய பல வகை விவசாயப் பொருள்களையும, கைத்தொழில் பொருள்களையும் சேர்த்து வைத்துக் காட்சிச்சாலை ஆரம்பிக்கப்பட்டது. அதே சமயத்தில மிருகக் காட்சிச் சாலைக்குச் சாம்பூர் எனச் சொல்லப்படும் பெரிய மான்கள், புள்ளிமான்கள், முரட்டுக குணமுள்ளகரடிகள், சிறுத்தைகள், குரங்குகள் முதலியவற்றைச் சேகரித்து மிருகக் காட்சிச் சாலை தொடங்கப்பட்டது. 1912-ம் வருஷத்தில் பொருட்காட்சிச் சாலை மடடும் எர்ணகுளத்திலுள்ள கிருஷ்ண விலாஸ் அரண்மனைக்கு மாற்றப்பட்டது; பினபு சில வருஷங்கள் கழிதது இப்பொழுது இருந்து வரும் இடத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பின் மிருக, தாவர வகைகளுக்கும் மானிட சாஸ்திர சேகரப் பொருள்களுக்கும் இடவசதியமைக் கும்பொருட்டுக் கட்டடம் பல மாறுதல்களுககு உட்பட்டது. புதிய கடடமும் கட்டப்பட்டது. பறபல சீர்திருத்தங்களும் செய்யப்பட்டன. பொருட்காட்சிச் சாலை முழுவதையும் சுற்றி நேர்த்தியான தோட்டம் ஒன்று அமைதது அதில் மிருகங்கள தங்குவதற்கு வீடுகளும் கட்டபபட்டன. பின்னல் புத்தகசாலைக்கும் வாசகசாலைக்கும் பண உதவி செய்தவர்கள் பெயரால் "கிருஷ்ண-கல்யாணி" இலவச வாசகசாலையும் புத்தகசாலையும் இணைக்கப்பட்டன. பொருடகாட்சிசசாலையை யும மிருகககாட்சிச் சாலையையும் விஸ்தரிக்கும்பொருட்டு ராஜ்ய சர்க்கார் 2½ எக்கர் விஸ்தீரணமும் காம்பவுண்டு சுவரும் கூடிய நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கி, அதில் ஒரு வசதியான கட்டடம் கட்டியிருக்கிறது. இப்பொழுது காட்சிப் பொருள்கள் அனைத்தையும் இப்புதிய கட்டடத்துக்கு எடுத்துச் சென்றுகொண்டிருக்கின்றனர். காட்சிப் பொருள் களை நல்ல முறையில் காட்சிக்கு வைபபதற்காக இக்கட்ட டமும் திருத்தி அமைக்கப்படுகிறது.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச்சாலையில் (மிருக, தாவர, மன இயல் சாஸ்திர) இயற்கை வரலாற்றுப் பொருள் களும், மானிடவர்க்க சாஸ்திரப் பொருள்களும், இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த கலைப் பொருள்களும், கைத்தொழில் பொருள்களும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற றுடன் சில புதைபொருள் இனங்களும் சில தங்க நாணயங்களும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—முக்கியமாகக் காட்சிச்சாலை அலு வலர்களின் உபயோகத்தக்காக இங்கே ஒரு புத்தகசாலை இருக்கிறது. ஆயினும், பொது மக்கள் படிக்க விரும்பி னால், அவர்களுக்கும் அனுமதி கொடுக்கப்படுகிறது. அத் துடன் சமஸ்கிருதம், மலையாளம், ஆங்கில மொழிகளில் பல வகைப்பட்ட புத்தகங்களைக் கொண்ட ஓர் இலவசப் புத்தக சாலையும் வாசக சாலையும் இங்கே இருக்கின்றன. விளக்கப் புத்தக சாலையில் சுமார் 1,000 புத்தகங்களும் இலவச வாசக சாலையில் சுமார் 5,000 புத்தகங்களும் இருகின்றன. பள்ளி மாணவர்கள் கூட்டம் இங்கே வரும் பொழுது அவர்களுக்குப்பொருட்காட்சிச் சாலையிலும், மிருகக் காட்சிச் சாலையிலும் விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப் படுகின்றன. எல்லாக் காட்சிப் பொருள்களுக்கும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. ஆயினும், அப்பொருள்களைப் பற்றி இன்னும் அதிகமான விவரங்கள் அறிய விரும்பும் பாவையாளர்களுக்கு அங்குள்ள சூப்பிரண்டெண்டும், இதர ஊழியர்களும் விவரங்களை விரிவாக எடுத்துச் சொல்கிறார்கள். இந்தப் பகுதியிலுள்ள பள்ளிக்கூட ஆசிரியர் களும் மாணவர்களும் விசேஷ முன்னேற்பாடுகள் செய்து கொண்டு இப்பொருட்காட்சிச்சாலையையும், மிருகக்காட்சிச் சாலையையும், தாவரவர்க்கக் காட்சித் தோட்டங்களையும் அடிக்கடி வந்து பார்த்துப் போகிறார்கள்.

வெளியீடுகள்.— நிர்வாக அறிக்கை.

வேலை நேரம்.—வெள்ளிக்கிழமை தவிர மற்ற எல்லா நாட்களிலும் காலை 8 முதல் 11–30 மணி வரை, மாலை 3 முதல் 6 மணி வரை.

அனுமதி.—பொருட்காட்சிச் சாலையைப பார்க்கக் கட்டணம் இல்லை. மிருகக் காட்சிச் சாலையைப் பார்க்கப் பெயரளவுக் குத் தலைக்கு ஆறு நயா பைசா நுழைவுக் கட்டணமாக வைத்திருக்கிறார்கள். ஆனால், மாணவர்களுககும் சிறுவர் களுக்கும் அதுவும் இலவசம்.

நிர்வாகக் குழு.—கேரள ராஜ்யப் பொருட்காட்சிச் சாலைகள் மிருகக்காட்சிச் சாலைகளின் டைரக்டர் அதிகாரதுக் குட்பட்டு ஒரு சூப்பிரண்டெண்டு பொருட்காட்சிச் சாலை, மிருகக்காட்சிச்சாலை, தாவர வர்க்கக் காட்சித தோட்டங்களின் பொறுப்பு அதிகாரியாய் இருந்து வருகிறார்.

ஊழியர்கள்.—பொருட்காட்சிச்சாலை, மிருகக்காட்சிச் சாலை, தாவரவர்க்கக் காட்சித் தோட்டங்கள் இம்மூனறுக்குமாகச் சேர்த்து ஸ்ரீ M. கோவிந்தன் குட்டி மேனன். M.A., சூபபிரிரண் டாக இருக்கிறார். அவருக்குக்கீழ் கணக்கப் பிள்ளைகள், புத்தகசாலைப் பொறுப்பாளியும் குமாஸ்தாவுமான ஒருவர், வேறொரு குமாஸ்தா, மிருகங்களின் தோலைப் பதனிட்டு அதனுள் பஞ்சடைக்கும் தொழிலாளி ஒருவர், வேலைக் காரர்கள், தோட்டக்காரர்கள், தூப்புக்காரர்கள்.

நிதி நிலை.—புத்தக சாலைக்கும் வாசக சாலைக்கும் தேவை யான புத்தகங்களும் பத்திரிகைகளும் வாங்கிக்கொள் வது உட்படப் பொருட்காட்சிச்சாலை, மிருகக்காட்சிச் சாலை, தாவரவர்க்கக் காட்சித் தோட்டம் இம்மூன்றுக்குமாகச் சேர்த்து வருஷ வரவு செலவு திட்டத தொகை சுமார் ரூ. 50,000.

விவரக் குறிப்புகள்.—காட்சிச் சாலை திருச்சூர் நகரின் மத்தியில் இருக்கிறது. நாள் ஒன்றுக்குச் சராசரி சுமார் 400 பேரும், வருஷம் ஒன்றுக்குச் சுமார் 1,40,000 பேர் களும் காட்சிச் சாலையைப் பார்க்க வருகிறார்கள். விடுமுறை நாட்களிலும் திருவிழாக் காலங்களிலும பொருட்காட்சிச் சாலையையும் மிருகக்காட்சிச்சாலையையும் பாப்பதற்கு வராளமான கூட்டம் வருகிறது. அதிலும் முக்கியமாகத் திருச்சூரில் ஏப்ரல் அலலது மே மாதததில் நடைபெறும் ஓணம் விழா 4 நாட்களிலும் கூட்டம அதிகமாக இருக்கும். காட்சிச்சாலைக் கட்டடம் பொருத்தமில்லாமலும் இடவசதி இல்லாமலும் இருக்கிறது. இரண்டு இரவு காவற்காரர்கள் இருக்கிறார்கள். நாணயங்களைப் பத்திரமாக இரும்புப் பெட்டிகளில் வைத்துப் பூட்டி இருக்கிறார்கள. விசேஷமான ஏறபாட்டின் பேரிலேதான அவைகளைப் பார்க்க முடியும். விசேஷ காரியங்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பொருள்களுக்கும் நகல் பொருள்களுக்கும் சிறிதளவு வில தீரணமுள்ள ஒரு பண்டகசாலை இருக்கிறது. களஞ்சியச் சேமிப்புச் சட்டப்படி இப்பொருட்காட்சிச் சாலை ஸ்தாபிதம் செய்யப்பட்டது. தேவையான சமயங்களில் நகல் பொருள்

களைப் பரிவர்த்தனை செய்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஆங்கிலம், மலையாளம் மொழிகளில் விளக்கச் சீட்டுகள் வைக்கப்படிருக்கின்றன. பொருட்காட்சிச் சாலையை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்று சர்க்காரிடம் தர்க்கல் செய்யப்பட்டிருக்கிறது. அது அமுலுக்கு வரக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திருவனந்தபுரம்

ஜனத்தொகை, 186,931

(i) சர்க்கார் சித்திரகூடம் (ஸ்ரீ சித்திராலயம்)

தோற்றம்.—1935.

வரலாறு.—ஸ்ரீ சித்திராலயம் 1935-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 25-ம் தேதி ஸ்தாபிக்கப்பட்டு, மேனமை தங்கிய திருவாங்கூர் மஹாராஜா அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. அது சர்க்கார் பொருட்காட்சிச் சாலையை அடுத்து நகரின் மத்தியில் இருக்கும் பொது மக்கள் பார்வைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தாவரக் காட்சித் தோட்டங்களும் மிருகக் காட்சிச் சாலையும் இருந்து வரும் இடத்திற்குள்ளேயே விசாலமான நிலப்பரப்பில அமைக்கப்படிருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—ஸ்ரீ சித்திராலயம் ராஜ்யச் சர்க்காரைச் சேர்ந்த சிததிரகூடமாகும். இங்கே ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகளின் சித்திரங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளாவன :—

(a) நவீன இந்தியச் சித்திரங்கள்
(b) இந்தோ–ஐரோப்பியச் சித்திரங்கள்
(c) மொகலாயர் காலத்துச் சித்திரங்கள்
(d) ராஜபுத்திரர்களின் சித்திரங்கள்
(e) நிலை மாறுதலைக் குறிக்கும் சித்திரங்கள்
(f) பெர்சியாத் தேசததுச் சித்திரங்கள்
(g) சீனாததேசததுச் சிததிரங்கள்
(h) ஜப்பான் தேசத்துச சித்திரங்கள்
(i) சுவர்ச சித்திரங்கள்.

விளக்க நடவடிக்கைகள்.—சிததிரகூடத்தின் பொறுப்புடையவராய் இதைக கண்காணிதது வருபவரே இங்குள்ள பொருள்களுககு விளககம தெரிவிக்கும சொறபொழிவாளராயும் இருககிறார். காட்சிச்சாலை ஊழியாகளின உபயோகத்துக்கென 292 புத்தகங்களைக் கொண்ட ஒரு சிறிய புத்தக சாலை இருககிறது. இவகுள்ள சித்திரங்களைச சில சமயங்களில் ஆங்காங்கு நடககும பொருட்காட்சிகளுககுக் கடனாக அனுப்பி வைககிறார்கள். பொருள்களின்மீது ஆங்கிலததில் விளக்கச சீடடுகள வைக்கப்பட்டிருக்கினறன. இந்நகரிலும் அக்கம் பக்கத்திலுள்ள பள்ளிககூடச சிறுவாகளும் கல்லூரி மாணவர்களும் இநதச சித்திரகூடததைப் பாாக்க அடிக்கடி வருகிறார்கள்.

வெளியீடுகள்.—நிர்வாக அறிக்கை, படக்கார்டுகள.

வேலை நேரம்.—எல்லாத் திஙகடகிழமைகளும் மற்றும் ஆவணி (மாதப்) பிறப்பு, திருவோணம், ஆராடடு, சுதந்தரதினம், குடியரசு தினம் ஆகிய ஐந்து விடுமுறை நாட்களும் நீஙகலாக மற்ற எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல மாலை 6 மணி வரை திறககப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு—இந்தச சித்திராலயம் சர்ககாரின் சொந்த அதிகாரததினகீழ் இருந்து வருகிறது. இதறகுத் தலைவராக ஓர் அதிகாரி நியமிக்கபபடடிருக்கிறார்.

ஊழியர்கள்.—சிததிராலயப் பொறுபபு அதிகாரி ஸ்ரீA. ஸ்ரீதர மேனன், M A., A.M. ஹார்வார்டு, இரண்டு குமாஸ்தாககள் சுருககெழுத்து டைப அடிக்கத தெரிநத குமாஸ்தா ஒருவர், கணகாணப்பாளர் ஒருவர், பத்து வேலைககாரர்கள், தோட்ட வேலைக்காரர் இருவர், இரவு காவறகாரர் ஒருவர், தூப்புக்காரர் இருவர்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டத்தில் சர்க்கார் வழங்கும் மொததத் தொகை ரூ. 42,400.

விவரக் குறிப்புகள்.—நாள் ஒனறுக்குச் சராசரி 275 பேர்களும் வருஷம் ஒன்றுக்கு 72,000 பார்வையாளர்களும் சிததிராலயத்தைப் பார்க்க வருகிறார்கள. ஸ்ரீபதுமநாப சுவாமி கோவிலில் நடைபெறும் ஆராட்டு விழா, ஓணம், கிறிஸ்துமஸ், ஈஸ்தர் பண்டிகை முதலிய விசேஷ நாட்களில் கூட்டம் அதிகமாய் வருகிறது. சிததிராலயம் இருந்த கட்டடத்தில் விசேஷப் பொருள்களாக ஒதுக்கி வைக்கப் படும் பொருள்களுக்குப் பண்டகசாலையும், ரசாயன ஆராய்ச்சிக் கூடமும் இலலையெனினும், இது இருந்து வரும் கட்டடம் போதிய இடவசதியுளளதாகவே இருக்கிறது. இக்கட்டடத்துக்குள்ளேயே சிததிரம் வரையும் நிலையம் ஒனறும் இருககிறது. இஙகுள்ள சிததிரங்கள முக்கியமாக விலை கொடுத்து வாங்கியும் வெகுமதிகளாகப் பெற்றும், கடன முறையிலும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. களஞ்சியச சேமிபபுச் சட்டப்படி இந்தச சிததிரகூடம் ஆர்ஜிதம செய்யப்படவில்லை. நகல் பிரதிகளைப் பரிவர்த்தனை செய்வது இந்தச் சிததிரகூடத்தின் நோககமாகும். சித்திரகூடததையும், கலைப்பொருட்காட்சிச் சாலையையும் ஒனறாக இணைத்துவிட வேண்டும் எனற கருதது, சர்க்கார் ஆலோசனையில் இருந்து வருகிறது.

(ii) சர்க்கார் பொருட்காட்சிச் சாலை

தோற்றம்—1857.

வரலாறு.—1857-ஆம் வருஷத்தில் திருவனந்தபுரம் பொருட்காட்சிச் சாலை ஆரம்பிககப்பட்டது. 1859-ஆம் வருஷததில பொருட்காட்சிச் சாலையைச் சுற்றியுளள சுமார் 60 ஏக்கர் நிலத்தைப் பண்படுததி ஒரு பூங்காவும் மிருகக காட்சிச் சாலையும் அமைக்கப்பட்டன. இபபொழுது இருந்து வரும் கட்டடம 1880-ஆம வருஷத்தில கட்டப்பட்டது. 1898-ஆம வருஷத்தில் முதல் டைரக்டர் நியமிக்கப்படும் வரை பொருட்காடசிக் குழு ஒன்று காட்சிச் சாலையை நிர்வகித்து வந்தது. நாளடைவில் இந்த ராஜ்யததைச் சேர்ந்த உயிர் வர்கக வரலாற்றுப் பொருள்கள் கலைப்பொருள்கள், கைத்தொழில பொருளகளின் எண்ணிக்கை மிசவும் அதிகரிதது வந்தபடியால, 1930-ஆம் வருஷததில் பொருளகளை எல்லாம ஒன்றின்மேலொனறாகக் குவிதது வைக்கும்படி நேரிட்டது. அதனால, இடம் போதாதாயிறறு. ஆகையால், உயிர் வர்கக வரலாற்றுக் காட்சிப பொருட் பிரிவைத தனியாகப் பிரிதது 1942-ஆம வருஷததில கடறகரையிலுள்ள வேறொரு கட்டடததுக்கு மாற்றபபடடது. ஆனால், 1950-ஆம் வருஷத்தில் அப்பிரிவு மறுபடியும தற்சமயம் இருந்துவரும் கடடடத்துக்கே மாற்றப்பட்டது. அககாலததில் இக்கடடடத்தில கலைப் பொருளகள் பிரிவு மட்டும வைக்கப்பட்டிருந்தது. 1908-ஆம் வருஷ முதல இநதப பொருட்காட்சிச சாலையின் நிர்வாகப் பொறுப்பு, கௌரவ டைரசடர் ஒருவரிடம ஒப்படைக்கப் பட்டது. அவருககு உதவியாக முழுநேரச் சூப்பிரண்டெண்டு ஒருவர் நியமிக்கப்பட்டார். அது முதலாக இந்தப் பொருட்காடசிச சாலை நிர்வாகததில் பற்பல மாறுதலகள் இருந்து கொண்டே வந்து, கடைசியாக 1949-ஆம வருஷத்தில் திருவாங்கூர், கொசசிச் சமஸதானங்கள் ஒன்றாக இணைக்கப் பட்ட பொழுது பொருட்காட்சிச் சாலைகள், மிருககாட்சிச் சாலைகள், தாவரவர்க்கக் காட்சித் தோட்டங்கள் முதலியனயாவும் பொருட்காட்சி, மிருகக்காட்சிச் சாலைகளின டைரக்டருடைய நிர்வாகத்தின்கீழ் வநதன.

நோக்கமும் பொருள்களும்—இககாடசிச்சாலையில் திருவாங்கூர் கொசசி ராஜ்யங்களின் சிற்பக்கலை, கைத்தொழில திறமை, புதை பொருளகள, நாணயங்கள, உயிர் வர்க்க வரலாறு முதலியன சம்பந்தப்பட்ட பொருளகள் சேர்த்து வைக்கப்பட்டிருககின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிச்சாலை ஊழியர்களுடைய உபயோகத்துக்காக அபூர்வமானதும், விலைமதிப்புடையதுமான புத்தகங்களும் பத்திரிகைகளும் கொண்ட ஒரு நல்ல புத்தகசாலை இருக்கிறது. ஆனால், பழமபொருளகள் பற்றி ஆராய்ச்சி செயயும் மாணவாகளும், இங்குள்ள புத்தகங்களைப் படிக்க விரும்பும் பொதுமக்களும விரும்பும் போது படிக்க அனுமதி கொடுக்கப்படுகிறது. காட்சிச்சாலையைப பார்க்க வருபவர்களைச் சுற்றிக் கூட்டிககொண்டு போய்க் காண்பிகக்வும், பொருளகளைப் பற்றி விளக்கம் தெரிவிக்க வும் காட்சிச்சாலை ஊழியர்களில் இரணடு பேர் இருக்கிறார்கள். பல்கலைக கழகம, பள்ளிக் கூடங்களைச் சேர்ந்த மாணவர்களும், காட்சிச்சாலை ஊழியாகளும் இதன வளர்ச்சி யில் மிகவும் ஆர்வமுடையவர்களாய் இருக்கின்றனர். அவர்களுக்குத் தங்கள் கல்லூரிகளில படிக்கும் பாடங் களில் வரும விஷயங்களை நன்கு தெரிந்துகொள்வதற்கு இங்குள்ள காட்சிப் பொருள்கள் உதவியாய் இருக்கின்றன.

வெளியீடுகள்.—வருஷநதோறும் வெளியிடும் நிர்வாக அறிக்கைகள், தபால் கார்டு அளவுள்ள படக் கார்டுகள், துணைப் புதகங்கள்.

வேலை நேரம்.—திங்கள் கிழமை தவிர மற்ற எல்லா நாட்களிலும் 8 மணி முதல் மாலை 6 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—திருவனந்தபுரதில் இருக்கும் பொருட் காட்சிச சாலையும் மிருகக்காட்சிச் சாலையும் தாவரவர்க்கக் காட்சித் தோட்டங்களும் திருச்சூரில் இருக்கும் பொருட் காட்சிசாலையும் மிருகக்காட்சிச் சாலையும் சேர்ந்து கேரள சர்க்காரின் பொருட்காட்சிச் சாலைகள, மிருகக்காட்சிச் சாலைகள் இலாகா ஆகிறது. இந்த இலாகா, பொருட்காட்சிச் சாலைகள் மிருகக்காட்சிச் சாலைகள் டைரக்டரால் நிர்வகிக்கப்படுகிறது.

ஊழியர்கள், உயிர் வர்க்க வரலாற்றுப் பிரிவு.—காவலர் ஸ்ரீ N. G. பிள்ளை, B.A., தோல் பதனிட்டு அதனுள் பஞ் சடைப்பவர் ஒருவர், படங்களுக்கு மாதிரி வரைபவர் ஒருவர், மாதிரிப் பொருள்களைச் சேகரிப்பவர் ஒருவர், இரசாயன ஆராய்ச்சிக்கூட (உயர்தர) ஆராய்ச்சியாளர் ஒருவர், ரசாயன் ஆராயச்சிக்கூட (கீழ்த்தர) உதவி ஆராய்ச்சியாளர் ஒருவா, ஒரு தூரப்புக்காரன் உட்பட ஒன்பது சில்லறை வேலையாட்கள்.

கலைப்பொருள் பிரிவு.—ஸ்ரீ N. கோபாலகிருஷ்ணன் உன் னித்தன, B.A., படங்களுக்கு மாதிரி வரைபவர் ஒருவர், பொருட்காட்சிச சாலை உதவி அதிகாரி ஒருவர், சித்திரகூட உதவி அதிகாரி ஒருவர், காட்சிப்பொருள்களின் விளக்கச் சொற்பொழிவாளர் ஒருவர், முழுநேரச் சில்லறை வேலையாட்கள் ஆறு பேர், பகுதி நேரச் சில்லறை வேலையாட்கள் இருவர்.

நிதி நிலை.—வருஷ வரவு-செலவு திட்டத்தில் பொருட் காட்சிசசாலையிலுள்ள கலைப்பிரிவு நீங்கலாக மற்றுள்ள பிரிவு களுக்கும் மிருகக்காட்சி சாலைக்கும், தாவர வர்க்கக் காட்சித் தோட்டங்களுக்கும் சேர்த்து உதவித்தொகை ரூ. 1,80,000. கலைப்பிரிவுக்கு மட்டும் ரூ. 22,000.

விவரக் குறிப்புகள்.—பொருட்காட்சிச் சாலை நகரின் மத்தி யில் இருப்பதால் பொதுமக்கள் எப்பொழுதும் போய்ப் பார்த்து வர உபயோகமாய் இருக்கிறது. நாளொன்றுக்கு 1,100 பார்வையாளர்களும் வருஷம் ஒன்றுக்கு 3,25,000 பேர்களும் காட்சிச்சாலையைப் பார்க்க வருகிறார்கள். கோவில் திருவிழாத் தினங்களிலும் தேசிய விழாக்களிலும், விடுமுறை நாட்களி லும்அதிகமான பாரவையாளர்கள் வருகின்றனர். பொருட் காட்சிச் சாலைக்கட்டடம், இடவசதியில்லாமலும, பண்டகசாலை வசதியில்லாமலும், ரசாயன ஆராய்ச்சிக்கூட வசதிகளில்லா மலும இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் விசேஷப் பொருட் காட்சி விழாக்கள் நடத்தப்படுகின்றன. தேடிக் கொணர்தல், பிரயம் கொடுத்து வாங்குதல், அகழ்ந்தெடுத்துச் சேகரித்தல், தானியமாகப் பெறுதல், மற்றப் பொருட்காட்சிச் சாலையுடன் பரிவர்த்தனை முறையில் பொருள்களை மாற்றிக்கொள்ளுதல் ஆகிய வழிகளில் காட்சிப்பொருள்கள் சேகரிக்கபபடுகின்றன. காட்சிச்சாலை, களஞ்சியச் சேமிப்புச் சட்டப்படி அங்கீகாரம் செய் யப்பட்டிருகிறது. அவ்வப்பொழுது ஏற்படும் தேவைகளை அனுசரிதது இக்காட்சிச் சாலைக்கும் ஏனைய காட்சிச்சாலைகளுக்கு மிடையே நகல் பொருள்களும் வெளியீடுகளும் பரிவர்த்தனை செய்துகொள்ளப்படுகின்றன. காட்சிப்பொருள்களுக்கு ஆங்கி லம், மலையாளம் மொழிகளில் விளக்கச் சீட்டுகள வைக்கப் பட்டிருக்கின்றன.

மத்தியப்பிரதேசம்

பில்சா (விதிசா)

ஜனத்தொகை 19,184.

விதிசாப் பொருட்காட்சிச் சாலை

தோற்றம்.—1940.

வரலாறு.—1940-ஆம் வருஷத்தில் பில்சா (விதிசா) நகரில் வசித்துவந்த ஜாகிர்தார் ஒருவர் பாறைகளை உடைத்துக் கற்கள் எடுப்பதறகாகப் பூமியைத் தோண்டியபொழுது அவவிடத்தில் சில அழகான கற்சிலைகள் கிடைத்தன. அச்சிலைகள நல்ல சிற்பக் கலைத்திறனுடையவைகளாகவும விலை மதிப்பு மிக்க வையாயும் இருந்ததோடல்லாமல் விதிசா நகரின் பழங்கால வரலாற்றைத் தெளிவாகத் தெரிவிப்பனவாகவும் இருந்த படியால் அப்படிப்பட்ட பழங்காலப் பொருள்களைச் சேகரித்து அவைகளை வைத்து ஒரு பொருட்காட்சிச் சாலையை ஸ்தாபிக்க வேண்டுமென (மததியப் பிரதேசச் சர்க்காருக்கு) ஓர் உணர்ச்சி எழுந்தது. அது முதல் ஆங்காங்குள்ள பழங்காலப் பொருள் களைத தேடிச் சேகரித்து, இங்கே கொண்டுவந்தனர். அவை களில் மிகவும் விசேஷமானது கி. மு. 2-வது நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பெரிய கல்லில் செதுக்கப்பட்ட மிக உயரமான யக்ஷன சிலையாகும். இவைகள் எல்லாம் இப்பொழுது பிரயாணிகள் விடுதி ஒன்றில வைக்கப்படடிருக்கின்றன. இவைகள் வைப்பதற்குப் புதுக்கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. அந்தக் கட்டட வேலை முடியும் வரை பொருள்கள யாவும் பிரயாணிகள் விடுதியிலே இருந்துவரும்.

நோக்கமும் பொருள்களும்.—விதிசா நகரிலும் அங் குள்ள அழிந்துபோன கோட்டையிலும், நதிப் படுகையிலும், மற்றும் பக்கத்து இடங்களிலும் கணடெடுக்கப்பட்ட பழங் காலப் பொருள்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே சுமார் 150 செதுக்கு வேலைச் சிற்பங்களும் கல்வெட்டு களும் இருக்கினறன.

விளக்க நடவடிக்கைகள்.—இல்லை.

வெளியீடுகள்.—இல்லை.

நிர்வாகக் குழு.—மத்திய பிரதேசச் சர்க்கார் புதைபொருள் இலாக்கா டைரக்டருடைய நிர்வாகத்தில் இருந்துவருகிறது.

ஊழியர்கள்.—பொருள்களைப் பற்றிய விளக்கம் தெரிவிப் பவரும் கண்காணிப்பாளருமான ஸ்ரீ ராஜ்மால் ஜெயின் மாதவய்யா.

நிதி நிலை.—விவரம் தெரியவில்லை.

விவரக் குறிப்பு.—இந்தப் பொருட்காட்சிச்சாலை இப்பொழுது தான் உருவாகி வருகிறது. கட்டப்பட்டுவரும் கட்டடம் கட்டி முடிந்தவுடன் அக்கட்டடத்தில் வைபபதற்காக மதிப்பு மிக்க பொருள்கள் பல சேகரிக்கப்பட்டுள்ளன. மத்தியப பிரதேச சர்க்கார் புதைபொருள் இலாக்கா டைரெக்டரின நிர்வாகத துக்கு உட்பட்ட இந்தப் பொருட்காட்சிச்சாலையின் பொறுப்பு தாராக இருந்துவரும் ஸ்ரீ ராஜ்மால் ஜெயின இந்தப் பிரதே சத்தில அகப்படக்கூடிய பழங்காலச செதுக்குவேலைச் சிற்பங்கள், நாணயங்கள், மற்றும் பழங்காலத்தைச் சேர்ந்த வேறு பல பொருள்களைச் சேகரித்து வருகிறார். அவ்வாறு சேகரிக்கப்படும் பொருள்களையெல்லாம் ஒன்றுசேர்த்து இந்தப்

பொருட்காட்சிச்சாலையை உருவாக்கி, இக்காட்சிச் சாலையை இப்பிரதேசத்தில் மிகவும் பிரசித்தியடையச் செய்யவேண்டு மென முயற்சி எடுத்து வருகிறார்.

போபால்

ஜனத்தொகை 102,333

மத்தியப் பொருட்காட்சிச் சாலை

தோற்றம்.—1949.

வரலாறு.—இந்தப் பொருட்காட்சிச்சாலை 1949-ஆம் வருஷம், ஏப்ரல் மாதம், 20-ஆந தேதி ஸ்தாபிக்கப்பட்டது. சர்க்கார் ஹமீதியாக் கல்லூரி நிர்வாகஸ்தர்கள் இதை ஒரு கலவிப் பொருட்காட்சிச்சாலையாக உருவாக்க முயற்சி செய்து வருகிறார்கள்.

நோக்கமும் பொருள்களும்.—இந்தப் பொருட்காட்சிச் சாலையில் சித்திரங்கள், நாணயங்கள், மீங்கான சாமான்கள், உலோகங்களினாலும தந்தத்தினாலும் செய்யப்பட்ட விளையாடுச் சாமான்கள், மரவேலைப் பொருள்கள், தையல் ஊசிகொண்டு துணிகளில் கையால் பினைய சித்திரவேலைத் துணிகள் முதலியன சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—20,000 புத்தகங்கள் வரை கொண்ட ஒரு பெரிய புத்தகசாலை இக்காட்சிச்சாலையுட்ன இணைக்கப்பட்டிருக்கிறது. இநதப் புத்தகசாலையிலுள்ள புத்தகங்களைப் பொதுமக்கள படிக்கலாம். இந்தப் பொருட்காட்சிச் சாலையின் உதவி அதிகாரி இங்கு வரும் பார்வையாளர்களுக்கு இங்குள்ள பொருளகளைப்பற்றி விளக்கம் தெரிவிக்கிறார். பொருள்களுக்கு ஆங்கிலதத்தில் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கினறன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும், சர்ககார் விடுமுறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 10-30 மணி முதல மாலை 5 மணி வரை திறக்கபபட்டிருக்கும்.

நிர்வாகக் குழு.—தற்சமயம் இப்பொருட்காட்சிச் சாலை சர்க்கார் ஹமீதியாக கலலூரி முதலவர் மேற்பார்வையில் இருந்து வருகிறது. அவரே இதன காவலருமாவார.

ஊழியர்கள்.—பொருட்காட்சிச்சாலை உதவியதிகாரி, ஜானிட்டர், இரண்டு வேலைக்காரர்கள.

நிதிநிலை.—தற்சமயம் பொருட்காட்சிச் செலவுகளெல்லாம் மத்திய பத்திர அலுவலகம் வரவு-செலவு திட்டதிலிருநது கொடுக்கபடுகின்றன. காட்சிச்சாலைக்கெனத் தனி வரவு-செலவுதட்டம் ஏற்படுத்துவது சர்க்கார ஆலோசனையில இருந்து வருகிறது.

விவரக் குறிப்பு.—பொருட்காட்சிச்சாலை தகுதியான இடததில் அமைகபப்பட்டிருக்கிறது. இதனை வேறொரு கட்டடத்துக்கு மாற்ற வேண்டுமெனச் சர்க்கார் ஆலோசனை செய்து வருகிறது. இது இப்பொழுதுதான் புதிதாக ஸதாபிக்கப்பட்ட பொருட்காட்சிச்சாலை. இதை இன்னும அபிவிருததி செயயவேண்டியிருக்கிறது. இங்குள்ள காட்சிப்பொருளகள எல்லாம் அநேகமாக விலை கொடுத்து வாங்கியே சேர்க்கப்பட்டிருக்கினறன.

தார்

ஜனத்தொகை, 23,652.

ஜில்லா புதை பொருட்காட்சிச்சாலை.

தோற்றம், 1902.

வரலாறு.—1872-ம் வருஷத்தில் தார் நகர் அரண்மனையிலிருந்து விழுந்து புதையுண்டு கிடநத சில சிலைத் துண்டுகளும், அரண்மனையின் பக்கத்திலிருந்த கிணற்றிலிருந்து கணடெடுக்கப்பட்ட சில கல் சிலைத் துண்டுகளும், அப்பொருள்களின்மீது காலஞ்சென்ற தார் சமஸ்தான மகாராஜா மூன்றாவது ஆனந்த ராவ் பாவார், ஆங்கில சர்க்காரால் மத்திய இந்திய அரசியல் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்ட படைத்தளபதி கினகெய்டு, படைத் தலைவர் பார்னிங் முதலியோருக்கு ஏற்பட்ட ஆர்வமும், அதற்கெல்லாம் மேலாக இந்திய ராஜப் பிரதிநிதி லார்டு கர்ஸன் தார் சமஸ்தானத்துக்கு வந்த பொழுது இப்புதைபொருளகளைப் பார்வையிட்டதும், பின்னால் காலஞ்சென்ற K. K. லீ என்பவர் தார் நகரிலுள்ள போஜ் சாலைத தூண்களில் பார்த்த நாக பந்தனச் சிறபங்களும், செதுகபப்பட்ட எழுத்துகளைக் கொணட கல பாளஙகள் கண்டுபிடிக்கப்பட்டதும் ஆகிய இவையெல்லாம் தூணடுகோலாக, அதன் பயனாய், தார் சமஸ்தானத்தில் புதைபொருள் இலாகாவும், புதைபொருட்காட்சிச்சாலையும் நிறுவுவதற்குக் காரணமாயின. அவ்வாறு கிடைத்த அப்புதைபொருள் முழுவதும் 1902-ஆம் வருஷத்தில் தார் நகரிலுள்ள ஆனந்த உயர்நிலைப் பள்ளியில் முதன்முதலில் வைக்கப்பட்டன. அங்கே போதிய இட வசதியில்லாத காரணத்தால், அவை யாவும் சில காலம் தார் நகரிலுள்ள விக்டோரியா பொதுப் புததக சாலையின் வராந்தாவில கவனிப்பாரற்றுக் கிடந்தன. பின் 1939-ஆம் வருஷத்தில அபபொருள்களைத் தற்சமயம் வைத்திருக்கும் கட்டடததை அமர்த்தி அவைகள் யாவும் அங்குக கொண்டு போய் வைக்கப்பட்டன.

நோக்கமும் பொருள்களும்.—இது ஒரு புதைபொருட்காட்சிச சாலை. இதில் அடியிறகாணும் பிரிவுகள் இருக்கின்றன :

(1) பாரமாராக் காலவரையைச் சேர்ந்த இந்து ஜைன மதங்களைச் சேர்ந்த சிற்பங்கள.

(2) கல் வெட்டுகள் : —

(a) போஜ் சாலையில் இருப்பவை. (i) பாரிஜாத மஞ்சரி அல்லது விஜய ஸ்ரீ நாட்டியம், (ii) கூர்ம சாதகா, (iii) நாக பந்தனஙகள்;

(b) பொருட்காட்சிச்சாலையில் இருப்பவை (i) கோதண்ட காவியம், (ii) கட்க சாதம, (iii) ஆதியந்த காவியம், பல சிறு சிறு துணடுகள்.

இவைகளில் பிராகிருத மொழியிலும் சமஸ்கிருதத்திலும் உள்ள பாரிஜாத மஞசரி தவிர, மற்றவையெல்லாம் மஹாராஷ்டிர பிராகிருத மொழி பில கி. பி. 1010 முதல் 1250 வரையுள்ள பாரமாரர் காலத்தைச் சேர்ந்தவையாயிருக்கினறன.

(3) நாணயங்கள், (தஙகம், வெள்ளி, செம்பு)

(a) முத்திரையிடப்பட்டவை.

(b) குப்த காலததைச் சேர்ந்தவை (II-வது சந்திர குப்தருடைய நாணயங்கள்.)

(c) நாகர்.

(d) முகம்மதியர் நாணயங்கள்.

(4) களி மண்ணும் மணலும சேர்த்துச் செய்து சுட்டெடுத்த மண சிலைகள. (ஸ்ரீ V. S. வாக்கன் கார சேகரித்துக் கொடுத்தவை).

(a) மணணால செய்யப்பட்டுச் செதுக்கி வர்ணம் பூசப்பட்ட சிறிய சிலைகள.

(b) வாகடக முத்திரைகள்.

(c) செஙகற்கள (புத்த பாரமாரக் காலத்தவை)

(d) குண்டு மணிகள், கண்ணாடி, சங்கு வளையல்கள்.

(5) சரித்திர சம்பந்தப்பட்ட ஞாபகச் சின்னங்களின் போட்டோக்கள், முத்திரைகள், வரி வடிவப் படங்கள், சித்திரங்கள்.

விளக்க நடவடிக்கைகள்.—இந்தப் பிரதேசத்திலுள்ள கலாசாலை, கல்லூரி மாணவர்கள் இந்தப் பொருட்காட்சிச் சாலையைப் பார்க்க வருகிறார்கள், சமயா சமயங்களில் பூனவி லிருந்து வரும் நர்மதைப் பள்ளத்தாக்குப் பிரயாணக் குழுவினர்களும் இதைப் பார்க்க வருகிறார்கள். இங்குள்ள காட்சிப் பொருள்களைப்பற்றி மாணவர்களுக்கு விளக்கம் தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடுகள் :—

(a) புதை பொருள் பிரிவு.—

(i) போஜ தேவாச்சி சாஹித்ய சேவா (ஹிந்தியிலும் மராத்தி மொழியிலும்) ஹிந்தியில் எழுதியவர் பண்டிதர் K. K. லீ. விலை 16 ந.பை. மராத்தியில் எழுதியவர்—பண்டிதர் S. K. ஒக். விலை 12 ந.பை.

(ii) தார்வா மண்டேவ்; எழுதியவர், C. B. லீ. B. A. விலை 50 ந.பை.

(iii) தாரும் மாண்டேவும்; எழுதியவர் கேப்டன் C. R. லார்டு. விலை ரூ. 3.

(iv) மஹிழ்ச்சி நகரான மாண்டே; எழுதியவர் G. யஸ்நாதி. விலை ரூ. 6·25 ந.பை.

(v) பாரமாரக் கல்வெட்டுகள் (விக்ரம் ஞாபகார்த்தத் தொகுதி). எழுதியவர் C. B. லீ, B.A., விலை ரூ. 1·50 ந.பை.

(vi) தார் மால்வா (சமஸ்தானத்து பாரமாரர்கள்). எழுதியவர் பண்டிதர் K. K. லீயும் கேப்டன் C. E. லார்டும். விலை 75 ந.பை.

(b) சரித்திர சம்பந்தமானவை :—

(1) தார் சமஸ்தான் சா இதிகாஸ் (பழங்காலம்). எழுதியவர் பண்டிதர் K. K. லீயும் பண்டிதர் S. K. ஒக்கும்.

(2) தார் சமஸ்தான் சா இதிஹாஸ் (தற்காலம்). எழுதியவர் பண்டிதர் K. K. லீயும் பண்டிதர் S. K. ஓகும். விலை ரூ. 2.

(3) தார்கார் பாவரஞ்சிய இதிஹாஸ்ாச்சி சத்ஹேன். காணட் (முதல் பாகம்) எழுதியவர் A. V. வாகண்டர் B.A., L.T., விலை ரூ. 5.

வேலை நேரம்.—திங்கட்கிழமை தவிர மற்ற எல்லா நாட்களிலும் காலை 7-30 முதல் 10-30 மணி வரையும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—புதை பொருட்காட்சிச் சாலை, பொருட் காட்சி வேலை ஆகியவைகளின் டிப்டி டைரக்டர் அதிகாரத் தின்கீழ் இக்காட்சிச் சாலை இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—காவலர் ஸ்ரீ R. K. தியோ. காட்சிப் பொருள்களின் விளக்கம் தெரிவிப்பவர் ஒருவர். வேலைக் காரன் ஒருவன்.

நிதி நிலை.—பொருட்காட்சிச் சாலை ஊழியர்களின் சம்பளமும் எதிர்பாராத செலவினங்களும் சேர்த்து வருஷ வரவு செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட ரூ. 3,850.

விவரக் குறிப்புகள்.—பொருட்காட்சிச் சாலை இருக்கும் இடம் அவ்வளவு நல்ல இடமாக இல்லை. கட்டடம் போதிய இட வசதியில்லாமலும் பொருத்தமில்லாமலுமிருப்பதுடன் பண்டக சாலை வசதியுமில்லை. வருஷந்தோறும் மார்ச்சு–ஏப்ரல் மாதங்களில் பரீக்ஷை எழுதும் மாணவர்களுக்கு இந்நகர் பரீக்ஷை நடைபெறும் கேந்திர ஸ்தானம். அச்சமயம் இங்கே பரீக்ஷை எழுத வரும் தார் நகரைச் சுற்றியுள்ள பற்பல கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்கள் காட்சிச் சாலையைப் பார்க்க வருவதால் அச்சமயங்களில பார்வை யாளர்களின் எண்ணிக்கை அதிகமாய் இருக்கிறது. தங்க நாணயங்கள் போன்ற விலை மதிப்புள்ள பொருள்களைப் பத்திரமாய் வைத்துக்கொள்வதற்குப் பெட்டிகளும் காவற் காரர்களும் இல்லாதபடியால், அவைகள் எல்லாம் ஜில்லாக் கஜானாவில் வைக்கப்பட்டிருக்கின்றன. கண்ணுடி போலத் தெளிவான செயற்கை அரக்கில் நாணயங்களின் நகல் எடுத்து அந்நகல் நாணயங்கள் மட்டும் இங்கே வைக்கப்பட் டிருக்கின்றன. விலைக்கு வாங்குவதாலும், இனம் பெறுவதன மூலமாகவும் காட்சிப் பொருள்கள் சேர்க்கப்படுகின்றன. இப்பிரதேச ஆராய்ச்சிக்கு வேண்டிய பொருள்கள் இங்கிருப் பதால் காட்சிச் சாலை மத்தியப் பிரதேசச் சர்க்காரால் அங்கீ கரிக்கப்பட்டிருக்கிறது. காட்சிப் பொருள்களுக்கு ஹிந்தி, ஆங்கில மொழிகளில் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட் டுள்ளன. காட்சிப் பொருள்களைப்பற்றிப் படித்துத தெரிந்து கொள்வதற்காக அச்சடிக்கப்பட்ட குறிப்புகளும், வளர்ச்சி, தாழ்ச்சிகளை விளக்கச் சில விளக்க அட்டைகளும் வைக்கப்பட் டிருக்கின்றன.

குவாலியர்

ஜனத்தொகை—241,577.

குவாலியர் கோட்டையிலுள்ள புதைபொருட்காட்சிச் சாலை தோற்றம்—1922.

வரலாறு.—காலஞ்சென்ற மேன்மை தங்கிய குவாலியர் மஹாராஜா மாதவ ராவ் சிந்தியா அவர்களால் 1913–ஆம் வருஷத்தில் குவாலியர் சமஸ்தானத்தில் புதைபொருள் (ஆராய்ச்சி) இலாக்கா ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுது புதைபொருட்காட்சிச் சாலை ஒன்றும் நிறுவப்படவேண்டும் எனறும் கருதப்பட்டது. சில நாட்கள் கழித்து, குவாலியர் மஹாராஜாவின் தர்பார் நடைபெற்ற பொழுது சமஸ்தான ஜில்லாக்களில ஆங்காங்குச் சிதறிக்கிடக்கும் பழங்காலச் சங்கமப் பொருள்களையெல்லாம் சேகரிக்க வேண்டுமெனப் புதைபொருள இலாகாவுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதை அனுசரித்துப் புதைபொருள் ஆராய்ச்சி இலாக்கா வினர் அவ்வேலையை ஆரம்பித்தனர். 1920-ஆம் வருஷம் வரை போதிய அளவு பொருள்களைச் சேகரித்துவிட்டபடியால் அடுத்து நடந்த மனனர் தர்பாரில் அவ்வாறு சேகரிக்கப் பட்டுள்ள பொருள்களைக் காட்சிக்கு வைக்க, குஜாரி மஹால் என்ற கட்டடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அது வரை சேகரிக் கப்படடிருந்த பொருள்களெல்லாம் தரம் பிரித்து, குஜாரி மஹாலில் வரிசைவாரி வைக்கப்பட்டன. 1922–ஆம் வருஷம் மே மாதத்தில் பொருட்காட்சிச் சாலை திறகப்பட்டது. இங் கிருக்கும் பொருள்கள் எல்லாம் அநேகமாகக் குவாலியர் சமஸ்தானப் பகுதிகளைச் சேர்ந்தவைகளேயாகும். வெளிப் பிரதேசப் பொருள்களாக இருப்பவை மொஹஞ்சதாரோ மண் கலங்களும், முத்திரைகளும், சில நாணயங்களும், சில உலோகச் சிலைகளும், சில சித்திரங்கள் முதலியவை களுமாகும்.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச் சாலை முக்கியமாகப் புதை பொருள்களை பிரதானமாகக் கொண்ட காட்சிச் சாலை யாகும். இங்கு, சேகரித்து வைக்கப்பட்டுள்ள பொருள் களாவன: சிற்பங்கள், கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், உட்குடைந்த எழுத்துக்களையுடைய முத்திரைகள், கல் தூண்கள், தூண்களின் உச்சிப் பாகங்கள், வீரர் சிலைகள், உடன் கட்டை ஏறும் நிகழ்ச்சிகள் செதுக்கப்பட்ட கல் சித்திரங்கள், உலோகச் சிலைகள், அலங்கார மண் பாண்ட உடைந்த துண்டுகள், நாணயங்கள், பாவாயா (பத்மாவதி), பெஸ்நகர் (விதிசா), உஜ்ஜய்ன (உஜ்ஜெயினி), மஹேஸ்வர் ஆகிய இடங்களிலுள்ள பழங்கால நிலப் பகுதிகளில் அகழ்ந் தெடுத்த புதைபொருள்கள், பாக்கா நகரில் உள்ள காரைச் சுவர்ச் சித்திரங்கள், ஏனைய சித்திரங்கள் முதலிய வற்றின் நகல்கள் முதலியனவாகும். காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ள பொருள்கள் கி. பி. 3-வது நூற்றாண்டு முதல் கி. பி. 17-வது நூற்றாண்டு வரையுள்ள இடைக் காலத்தில் இந்தச் சமஸ்தானத்தில் பரவி இருந்த கலைத் திறனையும் பண்பாடுகளையும் தெரிவிப்பனவாய் இருக்கின்றன.

இங்குள்ள பொருள்களில் பாவாயா என்னுமிடத்தில் கிடைத்த கல் தூணில் பீனமரம் செதுக்கப்பட்ட உச்சிப் பாகமும், மணிபத்ராவில் கிடைத்த யக்ஷன் சிலையும், மற்றும் பழங்காலச் சிற்பங்களும், பதோ என்னுமிடத்தில் கிடைத்த தாயும் குழந்தையும் கொண்ட அழகான சிற்பமும், மற்றும் குப்தர் காலத்து மத்தியக் காலத்துச சிற்பங்களும், பாவாயா என்னுமிடத்தில் கிடைத்த சுடபபட்ட மண் சிலைகளின அழகான தலைகளும், டீமெயின் எனற இடதத்தில் கிடைதத குமார குப்த மன்னனுடைய கல்வெட்டுகள் உட்படப் பல கல்வெட்டுகளும், செப்புப் பட்டயங்களும், பலரக மாதிரி நாணயங்களும் பாக் குகையிலிருந்து கொணர்நத காரைச் சுவர்ச் சித்திரங்களின் நகல்களும், ராஜபுத்திரர் மொகலாயருடைய பல வகைச் சித்திரங்களும் முக்கியமாகப் பார்க்கத் தக்கவையாகும்.

விளக்க நடவடிக்கைகள்.—புதைபொருள் இலாக்காவுக் கென ஏற்படுத்தப்பட்டுள்ள புத்தகசாலை இந்தப் பொருட் காட்சிச்சாலை உபயோகத்துக்குப் பயன்படுகிறது. சில சமயங் களில் ஆராய்ச்சித் துறையில் ஆர்வமுள்ளவர்கள் படிக்க விரும்பினால், அவர்களுக்குக் கூடுதலாகப் புத்தகங்கள் கொடுக்கப் படுகின்றன. காட்சிச்சாலைக்கு வரும் பார்வையாளர்களுக்குக் காவலர் இங்குள்ள காட்சிப் பொருள்களைப் பற்றி விளக்கம் தெரிவிக்கிறார். இங்குள்ள பொருள்களுக்கு மின்விளக்கு ஒளியின் மூலம் திரைப்படம் காட்டுவதற்கு உபயோகிக்கப்படும் படக்கண்ணாடிகள் இருக்கின்றன. எச்சமயங்களில் பொது மக்களுக்குப் படங்கள் காட்டி விளகம தெரிவிகக வேண் டுவது அவசியம் எனத் தோன்றுமோ, அவ்வப்பொழுது அவ்வாறு திரையின்மீது இங்குள்ள புதைபொருள்களைப் பற்றிய படங்கள் காட்டப்படுகின்றன. புதை பொருள் இலாக்காவுடன் இக்காட்சிச் சாலைக்குச் சம்பந்தம் இருப்பதால் அதன் உதவிகொண்டு காட்சிச்சாலை தனககுத் தேவைப்படும் போட்டோக்களை எடுத்துக்கொள்கிறது. பொருட்காட்சிச்சாலை தன் சொந்த நிலைமையில் விசேஷ நிகழ்ச்சியாகவோ அல்லது வருஷந்தோறும் குறிப்பிட்ட ஏதாவதொரு மாதத்திலே வழக்கமாகவோ பொருடகாட்சி விழா நடத்துவதில்லை யாயினும், வேறிடங்களில் அவ்வாறு நடக்கும் பொருட் காட்சி விழாக்களுக்கு இங்குள்ள பொருள்களைக் கொடுத்து உதவி ஒத்துழைக்கிறார்கள். காட்சிப்பொருள்களுக்கு ஹிந்தி யிலும் ஆங்கிலத்திலும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக் கின்றன. இங்குள்ள பொருள்கள் சம்பந்தப்பட்டவரை அவை களின் மூலம் விளங்கும் சிற்பத்திறன், உடையலங்காரம் முதலியன படிப்படியாக எப்படி அபிவிருத்தியடைநதன என்பதைக் கையால் வரைந்த சித்திரங்கள் மூலமாயும் சிறிய போட்டோக்களிலிருந்து எடுக்கப்பட்ட பெரிய போட்டோக்களின் மூலமாயும் விளக்கிக் கூறப்படுகின்றன.

வெளியீடுகள்—

(1) குவாலியர் புதைபொருட்காட்சிச்சாலைப் பொருள் களைப் பற்றிய விளக்கப் புத்தகம்.

(2) புதைபொருட்காட்சிச் சாலையிலுள்ள சிற்பங்களின் பட்டியல்.

(3) தபால் கார்டு அளவிலுள்ள காட்சிப் பொருள்களின் பட அட்டைகள்.

வேலை நேரம்.—ஒவ்வொரு திங்கட்கிழமையும் சர்க்கார் விடு முறை நாட்களும் நீங்கலாக மற்ற எல்லாநாட்களிலும் நவம்பர் முதல் மார்ச்சு மாதம் வரை தினம் காலை 8 மணி முதல் 11 மணி வரையும், மாலை 2 முதல் 5 மணி வரையும், எப்பிரல் முதல் அக்டோபர் மாதம் வரை தினம் காலை 7 மணி முதல் 11 மணி வரையும், மாலை 3 முதல் 6 மணி வரையும் திறக்கப் பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—பொருட்காட்சிச்சாலை மத்தியப் பிரதேசச் சாககார் புதை பொருள் ஆராய்ச்சி இலாகா டிப்டி டைரக்டரின் பொறுப்பில் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—காவலர் ஸ்ரீ H.H.K. கோடெஷி, M.A., வரும் பார்வையாளர்களுக்கு இங்குள்ள பொருளகளைப் பற்றி விளக்கம் தெரிவிப்பவர் ஒருவர். பொருள்களைப் பத்திரமாகக் கவனித்து வரும் வேலையாளர் இருவர். தோட்டக்காரன் ஒருவன். இரவு காவற்காரன் ஒருவன். தூப்புக்காரன் ஒருவன்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 12,900.

விவரக் குறிப்புகள்.—அகண்ட குவாலியர் பகுதியில் லஷ்கார், குவாலியர், மொரார் ஆகிய நகரங்கள் அடங்கியிருக் கின்றன. அவற்றுள் குவாலியர் நகரின மத்தியில லஷ்கார், மொரார் ஆகிய இரு நகரங்களுக்கும சமதூரத்தில் இக்காட்சிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. காட்சிச் சாலைக்கு வருஷம் ஒன்றுக்குச் சுமார் 25,000 பார்வையாளாகள் வருகிறார்கள். தினம் ஒனறுக்கு 50 பேர் வீதம் ஆகிறது. வருஷத்தில் இரண்டு நாட்கள், அதாவது கார்த்திகை மாதத்துக கடைசி ஞாயிற்றுக்கிழமையிலும் அஸ்வினி மாதத்தில் ஜெயினர் சந்தை கூடும நாளிலும் காட்சிச் சாலையைப் பார்க்க எராள மான கூட்டம் வருகிறது. காட்சிச் சாலைக்கட்டடம் தகுதியான இடத்தில் இருந்தபோதிலும் போதுமான இடவசதி இல்லை. தேடி எடுப்பதன் மூலமாகவே சிற்பங்கள் சேர்ககப்படுகினறன. அகழ்நதெடுத்ததன் மூலமாகச் சில மண்பாணடங்கள், சுடப் பட்ட சில மண் உருவங்கள், மற்றும் சில சிற்பங்கள் முதலியன வும் சேர்க்கப்படுகின்றன. சித்திரங்களும் உலோகச் சிலைகளும் விலை கொடுத்து வாஙகப்பட்டவை. களஞ்சியச சேமிப்புச் சட்டப்படி அங்கீகாரம் பெறறு வேறு சில பொருட்காட்சிசசாலை களிலிருந்து நாணய வகைகளில் கிரயம் கொடுத்தும் வேறு சில நாணயங்கள் பரிவர்த்தனையின் மூலமாயும் சேகரிக்கப் பட்டுள்ளன. சில நாணயங்கள் அன்பளிப்பாகவும் கிடைத் துள்ளன. சிற்பக்கலை, செதுக்கு வேலை, உடைகளின நாகரிகம் முதலியன வளர்ச்சி அடைந்த வரலாற்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்காகப் போட்டோக்களும், விவரவடிவப் படங் களும் உபயோகிக்கப்படுகின்றன. இக்காட்சிச் சாலை இந்தியக் காட்சிச் சாலைகளின் சங்கத்தில் ஸ்தாபன அங்கம் வகிக்கிறது.

ராஜ்ய (சர்க்கார்) பொருட்காட்சிச் சாலை.

ஜம்னு பாக்

தோற்றம்.—1910.

வரலாறு.—காலஞ்சென்ற குவாலியர் மகாராஜாவான லெப்டினென்ட் ஜெனரல் சர் மாதவ ராவ் சிந்தியா அவர் களால் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில இந்தப் பொருட் காட்சிச் சாலை ஸ்தாபிக்கப்பட்டது. முதன்முதலாக இது மஹாராஜாவின் அரண்மனையின் ஒரு சாரியிலிருந்த விசாலமான அறையிலேயே நிறுவப்பட்டது. முதலாவது இக்காட்சிச் சாலை ஒரு மிருகக் காட்சிச் சாலையாகவே ஆரம் பிக்கப்படடது. பின்னர் 1922-ஆம் வருஷத்தில் வேல்ஸ் இளவரசர், குவாலியர் சமஸ்தானதுக்கு விஜயம் செய்த சமயம் இக்காட்சிச் சாலை இப்பொழுது இருந்துவரும் ஜம்னு பாக் கோதி என்ற கட்டடத்துக்கு மாற்றப்படடது.

நோக்கமும் பொருள்களும்.—இக்காட்சிச் சாலையில் அடியிற்காணும் பிரிவுகள் இருக்கின்றன:

(1) உயிரினங்கள் வரலாற்றுப் பிரிவு.
(2) போர்க் கருவிகளின் பிரிவு.
(3) சிற்பங்களின் பிரிவு.
(4) நாணயங்களின் பிரிவு.
(5) தந்தம், மரச் சாமான்களின் பிரிவு.
(6) செம்புச் சிலைகளின் பிரிவு.
(7) வனப் பொருள்களின பிரிவு.
(8) பவளங்களின் பிரிவு.
(9) மண் வகைகளின் பிரிவு—முதலியன.

விளக்க நடவடிக்கைகள்.—பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் தத்தம் ஆசிரியர்களுடன் கூட்டம் கூட்டமாய்க் காட்சிச் சாலையைப் பார்க்க அடிக்கடி வருகிறார்கள். காட்சிப் பொருள்களுக்கு ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—எல்லாத் திங்கட்கிழமைகளும் சர்க்கார் விடு முறைத் தினங்களும் நீங்கலாக மற்ற நாட்களில் கோடை காலத்தில் காலை 7 மணி முதல் 11 மணிவரையும், மழை காலத் தில் மாலை 2 மணி முதல் 6 மணி வரையும் திறக்கப்பட் டிருக்கும்

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—லாஷ்கார் நகராட்சி மன்றம் ஓர் உத்தி யோகஸ்தரை நியமித்து, அவர் மூலமாக இக்காட்சிச்சாலை மேறபார்க்கப்பட்டு வருகிறது.

ஊழியர்கள்.—காட்சிச் சாலையின் பொறுப்பு அதிகாரி ஸ்ரீ B. குர்ஜார், குமாஸ்தா ஒருவர், வேலைக்காரர்கள்.

நிதி நிலை.—இந்திய சர்க்கார் குறிப்பிட்ட மானியமாக வருஷம் ஒன்றுக்கு ரூ. 4,400 கொடுக்கிறது. அதற்குமேல் ஏற்படும் செலவினங்களை நகராட்சி மன்றம் கொடுத்து உதவுகிறது.

விவரக் குறிப்புகள்.—காட்சிச்சாலை செம்மையாக அமைக்கப் பட்ட ஒரு விசாலமான தோட்டத்தில் இருக்கிறது. அதே இடத்தில் மிருகக்காட்சிச் சாலையும் இருக்கிறது. நாள் ஒன்றுக்கு 100 முதல் 300 வரை பார்வையாளர் வருகின்றனர். 1952-ம் வருஷத்தில் கணக்கெடுத்ததில் அவ்வருஷம் முழுதும் கிட்டத் தட்ட 40,000 பார்வையாளர்கள் வந்திருக்கின்றனர். வேலை மாற்று முறையில் பகலிலும் இரவிலுமாகத் தொடர்ந்து இரண்டு காவறகாரர்கள வேலை பார்த்து வருகின்றனர். நாணயங்கள் இருக்கும் பிரிவு பந்தோபஸ்து செய்யப்பட் டிருக்கிறது. சில புத்தகங்களைத் தவிர, காட்சிச் சாலையோடு இணைக்கப்பட்ட புத்தகசாலை இல்லை. இங்குள்ள பொருள்கள் எல்லாம் கிரயம், இனாம், பரிவர்த்தனை வழிகளில் சேர்க்கப் பட்டவை.

இந்தூர்

ஜனத்தொகை, 3,10,859.

மத்தியப் பொருட்காட்சிச் சாலை

தோற்றம்.—1929.

வரலாறு.—இந்தப் பொருட்காட்சிச் சாலை 1929-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுது அது முக்கியமாய்ப் புதை பொருள்களைக் கொண்ட காட்சிச் சாலை யாகவே இருந்தது. நாளடைவில் மற்றப் பிரிவுப் பொருள் களும் சேகரித்து வைக்கப்பட்டன. காட்சிச் சாலை யில் சுமார் 7,000 காட்சிப் பொருள்கள் இருக்கின்றன. 1923-ம் வருஷத்தில் நர ரத்ன மந்திர் அல்லது மனிதரில் சிறந்தோர் மன்றம் என்று ஒரு நிலையம் ஸ்தாபிக்கப்பட் டிருந்தது. அது 1931-ம் வருஷத்தில பொருட்காட்சிச் சாலை யுடன் ஒரு தனிப்பிரிவாக இணைக்கப்பட்டது. அந்த மன்றத் தில் எல்லா நாடுகளிலும் எல்லா ஜாதிகளையும் எல்லா மதங் களையும் சேர்ந்த சிறந்த மனிதர்களின் உருவப்படங்கள் இருக்கின்றன. அப்படங்களுள் ஒவ்வொன்றிலும் அதில் கண்ட சிறந்த மனிதரின் வாழ்க்கை வரலாறு, அவர் செய்த சாதனைகள முதலியவை பற்றிக் குறிப்புகள் எழுதப்பட் டிருக்கின்றன. இந்த நர ரத்ன மந்திரோடு இணைக்கப் பட்டதாய்ச் சுமார் 7,000 புத்தகங்களைக் கொண்ட சிறந்த தோர் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகசாலை இருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச் சாலையில் புதை பொருள்களே முக்கியமாகச் சேர்த்து வைக்கப்பட்டிருக் கின்றன. அவைகள் பற்பல பிரிவுகளைச் சேர்ந்தவைகளாய் இருக்கின்றன. அப்பிரிவுகளாவன.—

1. எடுத்துக்கொண்ட ஒரு பொருளைப்பற்றித் தெரிய வேண்டுவன அனைத்தையும் படங்களின் மூலமாகவே தெரிந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்ட படங்கள் பிரிவு.

2. நாணயங்களின் வரலாற்றுப் பிரிவு.

3. கல்வெட்டுப் பிரிவு.

4. தேச சரித்திரப் பிரிவு.

5. பழங்கால மண்பாண்டங்கள், போர்க் கருவிகள், போர் வீரர் உடைகள் பிரிவு.

இங்கே எழுத்துக்கள் செதுக்கப்பட்ட கல், செங்கல் செப்பேடு, முத்திரைகள் முதலியனவும், பிரம சமாஜ, சைன மதங்களைச் சேர்ந்த கல், செப்புச் சிலைகளும், சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய கல், உலோகங்களில் செதுக்கப்பட்ட கவர்ச்சிகரமான பொருள்களும் இருக்கின்றன. மேலும் இந்தியாவிலுள்ள பற்பல சித்திரப் பாணிகளைச் சேர்ந்த சித்திரங்களும், அபூர்வமான கையெழுத்துச் சுவடி களும், பழங்கால ஆபரணங்களும் இருக்கின்றன. தவிரவும் மண் இயல் பாகுபாடுகள், பல்வேறு மானிட வர்க்கப் பாகுபாடுகள், வர்த்தகத் துறை விளைபொருள்கள் முதலியவற்றை விளக்கும் பிரிவுகளும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—முக்கியமாகக் காட்சிச் சாலை ஊழியர்களின் உபயோகத்துக்காக இதனோடு ஒரு புத்தகசாலை இணைக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், காட்சிச் சாலையின் வேலை நேரங்களில் அவற்றைப் படிக்க மாணவர்களும் சில சமயங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவ்வட்டாரத்தி லுள்ள பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் காட்சிச் சாலையைப் பார்க்க வரும்பொழுது காட்சிச் சாலை காவலர் அவர்களைக் கூட்டிக்கொண்டு போய்க் காட்சிச் சாலை முழுவதை யும் சுற்றிக் காண்பிக்கிறார். குழந்தைகளுக்கென ஒரு பிரிவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. குவாலியர் சமஸ்தானப் பழங்கால ஞாபகச் சின்னங்கள் எழுதி மின் விளக்கு ஒளியின் மூலம் திரைப்படம் காட்டுவதற்குரிய படக்கண்ணாடிகள் இருக்கின்றன. ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

வெளியீடுகள்.—இந்தூர் பொருட்காட்சிச் சாலை.

வேலை நேரம்.—ஒவ்வொரு புதன் கிழமையும், சர்க்கார் கெஜட்டில் பிரசுரிக்கப்படும் விடுமுறை நாட்களும் தவிர, எல்லா நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—மத்தியப் பிரதேசப் புதை பொருள் இலாகா, பொருட்காட்சிச் சாலைகளின் டிப்டி டைரக்டர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—காவலர் பி. ஜி. பரஞ்சபே, எம். ஏ., விளக்கம் கூறுபவர் ஒருவர், குமாஸ்தா ஒருவர், பொருள் களைப் பாதுகாப்போர் 5 பேர், சௌக்கிதார் ஒருவர்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 11,800.

விவரக் குறிப்புகள்.—நாளொன்றுக்குச் சராசரி 53 பார்வையாளர்களும் வருஷமொன்றுக்கு 14,913 பேர்களும் காட்சிச் சாலையைப் பார்க்க வருகிறார்கள். சந்தை கூடும் நாட்களிலும் மகாநாடுகள் நடக்கின்ற சமயங்களிலும் கூட்டம் அதிகமாய் இருக்கும். இப்பொழுது காட்சிச் சாலை இருந்து வரும் கட்டடம் பொருத்தமில்லாமலும் இடவசதி இல்லாமலும் இருக்கிறது. இங்குள்ள பொருள் பழுதுறாமல் கவனம் செலுத்திப் பாதுகாப்பதற்காக அமர்த்தப்பட்ட அதிகாரி ஒருவர் பகலிலும், இரவிலும் இதைக் கவனித்து

வருகிறார். நாணயங்களும் இதர வீலையுயர்ந்த பொருள்களும் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கின்றன. பண்டகசாலையில் இடமில்லாதபடியால், நகல் பொருள்கள் எல்லாம் அலமாரியில் வைக்கப்பட்டிருக்கின்றன. தேடிச் சேகரித்தல், களஞ்சியச் சேமிப்புச் சட்டப்படி பெறுதல், இதரப் பொருட்காட்சிச் சாலைகளிலிருந்து பெற்றுக் கொள்ளுதல கிரயத்துக்கு வாங்குதல், மிகவும் அபூர்வமாக இனங்கள் மூலம் கிடைத்தல் ஆகிய வழிகளில் சேகரிக்கப் படுகின்றன.

காஜுராஹோ

ஜனத்தொகை, 4,000.

புதைபொருட்காட்சிச் சாலை.

தோற்றம்.—1910.

வரலாறு.—காஜுராஹோவில் உள்ள பொருட்காட்சிச் சாலை 1910-ஆம் வருஷம் திறக்கப்பட்டது. அச்சமயம் பண்டல் கண்டில பிரிட்டிஷ் சர்க்காரின் அரசியல் ஏஜண்டாக இருந்த ஜார்டைன் எனபவர் பெயரால் இந்தப் பொருட்காட்சிச் சாலை ஜார்டைன் பொருட்காட்சிச் சாலை எனப் பெயரிடப்பட்டது. இங்கேயுள்ள பொருள்கள் ஜார்டைன் என்பவரால் காஜுராஹோவிலுள்ள அழிந்து போன பழங்காலக் கோவில்களிலிருந்து கண்டெடுத்து அவர் பாதுகாத்து வைத்திருந்த பழங்காலப் பொருள்களாகும். விந்தியப் பிரதேச ராஜ்யம் பிரிக்கப்பட்டு இந்நகர் அதனுள் சேர்க்கப்பட்டபொழுது இக்காட்சிச் சாலை இந்திய சர்க்காரின் புதைபொருள் இலாக்காவின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு, காவலர் ஒருவரும், காடசிச் சாலை ஊழியர்களும் நியமிக்கப்பட்டனர். இப்பொழுது இது காஜுராஹோ புதைபொருட்காட்சிச் சாலை என்று வழங்கப்படுகிறது.

நோக்கமும் பொருள்களும்.—இது முற்றிலும் ஒரு புதை பொருட்காட்சிச் சாலையே ஆகும். இதில் சுமார் 2,000 சிற்பங்களும், கல், மரக்கட்டைகளில் செதுக்கிய சித்திர வேலைப் பொருள்களும் இருக்கினறன. இங்குளள பொருள்கள் கி.பி. 10 முதல் 12-வது நூற்றாண்டு வரை இப்பிரதேசத்தில் பிரம்ம சமாஜம், புத்தமதம், சைனமதம் பரவியிருந்த நிலைமையை எடுத்துக் காட்டுவதில் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இக்காட்சிச் சாலையைப் பார்க்க வரும் மாணவர்களும் பார்வையாளர்களும் விரும்பினால், காவலர் பொருள்களுக்கு விளக்கம் தெரிவிக்கிறார். பொருள்களுக்கு ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

வெளியீடுகள்.—சந்திரா என்பாரும் தாமா என்பவரும் சேர்ந்து எழுதிய "காஜுராஹோ" (பொருட்காட்சிச் சாலை) விளக்கப் புத்தகம்.

வேலை நேரம்.—எல்லா நாட்களிலும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—இந்திய சர்க்கார் புதை பொருள் இலாகாவின் உட்பிரிவுகளில் ஒன்றான பொருட்காட்சிச் சாலைப் பிரிவின் சூப்பிரண்டெண்டின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறது.

ஊழியர்கள்.—காவலர் ஸ்ரீ பி. எஸ். நாயர், எம். ஏ., குமாஸ்தா ஒருவர், குறிப்புத்திறனாளிகள், ஐந்து வேலைக்காரர்கள், ஒரு தூப்புக்காரன்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 15,600.

விவரக் குறிப்புகள்.—காட்சிச் சாலை கோவிலுக்குப் பக்கத்தில் வசதியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

நவ்காங்

ஜனத்தொகை, 50,000.

துபேலா அரண்மனையிலுள்ள ராஜ்ய (சர்க்கார்) பொருட்காட்சிச் சாலை.

தோற்றம்.—1937.

வரலாறு.—இந்தப் பொருட்காட்சிச் சாலை ரீவா சமஸ்தானத்தின் காலஞ் சென்ற மேன்மை தங்கிய மஹாராஜாவாய் இருந்த வேங்கடராம சிங் அவர்கள் பெயரால் வேங்கட சதனப் பொருட்காட்சிச் சாலை என்று பெயரிடப்பட்டது. இங்குளள காட்சிப பொருள்கள் அச்சமயத்தில ரீவா நகரில் விந்தியப் பிரதேசப் புதைபொருள ஆராய்ச்சி சூப்பிரண்டெண்டாய இருந்தவரால் முயற்சி செய்து சேர்க்கப் பட்டவைகளாகும். பின 1956-ஆம் வருஷம் செப்டெம்பர் மாதம் 12-ஆம் தேதி பண்டித ஜவஹர்லால் நேருவால் விந்திய பிரதேச ராஜய (சர்க்கார) பொருட்காட்சிச் சாலையாகத் திறந்து வைக்கப்பட்டது.

நோக்கமும் பொருள்களும்.—பொருட்காட்சிச் சாலையிலுளள பொருளகள் முக்கியமாய்ப் புதைபொருள்களின் இனதைச் சேர்ந்தவைகளாகவே இருக்கின்றன. இவைகளை அடியிற்காணும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்:—

(a) சிலைகளும் சிற்பங்களும்.
(b) செப்பேடுகளும் கல் வெட்டுகளும்.
(c) செம்பினால் செய்யப்பட்ட கருவிகள்.
(d) நாணயங்கள்.
(e) கூட்டெடுக்கப்பட்ட மண்பாண்டத்துண்டுகளும் மண் உருவங்களும்.
(f) சித்திரகூடம.
(g) தாதுப் பொருள்கள்.
(h) ரீவா சமஸ்தான மஹாராஜா குடும்பத்தினருக்கு வழிவழியாய்ப் பாத்தியப்பட்ட பொருள்.
(i) மரவேலை, தந்த வேலைப் பொருள்கள்.
(j) பல வகைப்பட்டவை.

கல சிலைக்கூடத்தில் மிகவும் உன்னதமானதும், முக்கியமானதுமான அழகான சைனமதத் தீர்த்தங்கரர்கள், யக்ஷர்கள், யக்ஷிணிகள சிலைகளும், பிரம சமாஜத்தைச் சேர்ந்தவைகளில் பேராகாட்டில கிடைத்த யோகினிகளின் சிலை வரிசையைப் போலவே தோற்றமுள்ளவைகளாய் கோக்கிரியிலிருந்து கிடைத்த அழகான தேவியின் சிலை வரிசைகளும் மற்றும் சிவன, விஷ்ணு முதலிய தெய்வங்களின் சிலைகளும், பாகவதம், ராமாயணம், வேறு சில நூல்கள் ஆகியவற்றில் சொல்லிய நிகழ்சசிகளைக் காட்டும் சிலைகளும் இருக்கின்றன.

கல்வெட்டுகளின பிரிவில் குஷானர், குப்தர் காலத்துக் கல்வெட்டுகளும் 6-வது நூற்றுண்டைச் சேர்ந்த மானியச் செப்பேடுகளும், மத்திய காலத்தைச் சேர்ந்த காலசூரியர்களின் கலவெட்டுகளும், உடன் கட்டை ஏறுதலைக் குறிக்கும் உணர்ச்சியைத் தூண்டும் சில கல்வெட்டுகளும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—முனனால் பொருட்காட்சிச் சாலையோடு இணைக்கப்பட்ட புத்தக சாலையொன்று இருந்தது. இப்போது அது தனியாகப் பிரிக்கப்பட்டுக் கல்வி இலாக்காவால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. காட்சிச் சாலையில் முக்கியமான கல்வி வசதி எதுவும் செயயப்படவில்லை. ஆயினும், காட்சிச் சாலையிலுள்ள பொருள்களைப் பார்ப்பதிலும் அவைகளின் மூலம் கல்விக்கு வேணடுவனவற்றைப் பற்றித் தெரிந்துகொள்வதிலும் கல்வி நிலையங்கள் மிகவும் ஆர்வம் உடையனவாய் இருக்கின்றன. அலகபாது, வாரணஸி முதலிய பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த வித்துவான்கள் இங்கே வருஷந்தோறும் குறிப்பிட்ட சில மாதங்களில் வந்து போகிறார்கள்.

வெளியீடுகள்.—நவ்காங்கிலுள்ளதுபோல அரண்மனையில் இருக்கும் ராஜ்ய (சர்க்கார்) பொருட்காட்சிச் சாலையின விளக்கப் புஸ்தகம் எழுதியவர் S. K. தீக்ஷிதர், M.A., விலை ரூ. 1—0—0.

வேலை நேரம்.—ஞாயிற்றுக் கிழமைகளும், சர்க்கார் விடு முறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 10–30 மணி முதல் மாலை 4–30 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—மத்தியப் பிரதேச சர்க்காரால் நிர்வகிக்கப் படுகிறது.

ஊழியர்கள்.—காவலர்—ஸ்ரீ S.K. தீக்ஷிதர், M.A., கணக்கப் பிள்ளை ஒருவர், போட்டோ எடுப்பவரும் படங்களுக்கு மாதிரி வரைபவருமான தொழிலாளி ஒருவர், குமாஸ்தாக்கள் இருவர், தப்ரி ஒருவர், வேலைக்காரர் இருவர், சௌக்கி தார்கள் இருவர், தோட்டக்காரன் ஒருவன்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டத்தின் திட்டமான தொகை தெரியவில்லை.

விவரக் குறிப்புகள்.—பொருட்காட்சிச் சாலை நவ்காங் நகரில் பொருத்தமான இடத்தில் அமைந்திருக்கிறது. நாள் ஒன்றுக்குச் சராசரி 16 பேர்களும், வருஷம் ஒன்றுக்குச் சராசரி 5691 பேர்களும் காட்சிச் சாலையைப் பார்க்க வருகிறார்கள். நாணயங்களையும், மற்றும் விலையுயர்ந்த பொருள்களையும் காவற்காரர்கள் பத்திரமாய்க் கவனித்துக்கொள்ளுகிறார்கள். இங்குள்ள காட்சிப் பொருள்கள் தேடி எடுத்தல், விலைக்கு வாங்குதல், களஞ்சியச் சேமிப்புச் சட்டப்படி அங்கீரிக்கப்பட்ட இதர காட்சிச் சாலையிலிருந்து பெற்றுக்கொள்ளுதல், அகழ்ந்து எடுத்தல் ஆகிய வழிகளில் சேகரிக்கப்படுகின்றன. மற்றக் காட்சிச் சாலைகளுடன நகல்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்காக ஏற்பாடுகள் இன்னும் செய்யப்படவில்லை. விளக்கச் சீட்டுகள் முழுவதும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன.

ரெய்ப்பூர்

ஜனத்தொகை, 89,804.

மஹந்து காசிதாஸ் ஞாபகார்த்தப் பொருட்காட்சிச் சாலை.

தோற்றம்.—1875.

வரலாறு.—இது மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த சத்திஸ்கார் ஜில்லாவிலுள்ள பொருள்களை மட்டும் முக்கிய மாகக் கொண்ட ஒரு மண்டலப் பொருட்காட்சிச் சாலையாக இருக்கிறது. இது மத்தியப் பிரதேச ராஜ்ய சர்க்காரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. நந்தகோன் நகரிலுள்ள ராணி சாஹேபா ஜோதி தேவி அம்மையாரும் அவருடைய குமாரர் ராஜா சாஹேப் திக் விஜய தாஸ் அவர்களும் மனம் உவந்து அளித்த நன்கொடை ரூ. 1,50,000. இதைக் கொண்டு காட்சிச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. இதுமட்டுமன்றி, அவ்விரு வரும் இப்பொழுது இந்தக் காட்சிச் சாலையின் பொதுஜன சபா மண்டபத்திலிருக்கும் 'மஹந்த் சாவேஸ்வரதாஸ் புத்தகசாலை' ஸ்தாபிப்பதற்கும் ரூ. 50,000 நன்கொடை அளித்துள்ளனர். 1875-ம் வருஷத்தில் நந்தகோன் நகரிலிருந்த காலஞ்சென்ற மஹந்த் காசி தாஸ் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டு அந்நகர் ஜனபாத் சபாவின உட்பிரிவுக் குழுவான பொருட்காட்சிச் சாலை நிதிக் குழுவினரால் நிர்வகிக்கப்பட்டு வந்த பழைய ரெய்ப்பூர் பொருட்காட்சிச் சாலையும் இக்காட்சிச் சாலையோடு ஒன்று சேர்க்கப்பட்டது. பொருட்காட்சிச் சாலையும் புஸ்தக சாலையும் இருந்துவரும் புதிய கட்டடம் 1953-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 23-ம் தேதியில் இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இரண்டு மாடிகளைக் கொண்ட இந்தப் பொருட்காட்சிச்சாலைக் கட்டடத்தில் பிரவேச மண்டபம் ஒன்றும், அதனையடுத்துக் கீழ்ப் பக்கத்தில் இரண்டு காட்சிப் பொருள் கூடங்களும், அவைகளுக்குத் தென்பக்கம் பொதுஜன சபா மண்டபமும், அதுவல் அகமாக நான்கு அறைகளும், அடித்தளத்தில் பண்டகசாலை அறைகளும், முகப்பு மண்டபத்தைச் சுற்றி இரண்டு காட்சிப் பொருள் கூடங்களும் இருகின்றன. இக் கட்டடம், விசாலமான அலங்காரப் புல்வெளித் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புல் வெளிகள் இங்கு வரும் பார்வையாளர்களின் வசதிக்காகச் செம்மையான முறையில் வைகைகப்பட்டிருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிப் பொருள்கள் முக்கிய மாய் (சத்திஸ்கார் ஜில்லாவை மட்டும் சேர்ந்த) மண்டலப் பொருள்களாகவே இருக்கின்றன. எனினும், மத்தியப் பிரதேச ராஜ்யத்திலுள்ள வேறு சில இடங்களிலிருந்தும் இந்தியாவிலுள்ள இதர இராஜ்யங்களிலிருநதும் சேகரிக்கப் பட்ட சில பொருள்களும் இங்கிருக்கின்றன. அவைகள் ஐந்து பிரிவுகளாகப பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன— (1) புதை பொருள்கள், (2) மானிட சமூக வரலாற்றுப் பொருள்கள், (3) பற்பல உயிர்ப் பிராணிகளின் வரலாற்றுப் பொருள்கள், (4) சிறுபக்கலை கைத்தொழில் பொருள் கள், (5) சித்திரங்கள் முதலியன. முகப்பு மண்டபத்துக்குக் கீழ்ப்புறமிருக்கிற கலைகூடத்தில் சிற்பக்கலைப் பொருள் களும் கைத்தொழில் பொருள்களும் இருக்கின்றன, அவைகளில் வாரணசி, ஜெய்ப்பூர் ஆகிய இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட சித்திரவேலைபபாட்டுடன் கூடியனவும், சித்திரம் இலலாதனவுமான உலோக (பித்தளை, செம்பு) பாத்திரவகைகளும், ஆக்கிராவிலிருந்து கொணர்ந்த அழகாக இழைத்த கல் சித்திரங்களும், கல்லில் இழைத்த மேடு பள்ளங காட்டும் சித்திரங்களும், ஆக்கிரா, ஜெய்ப்பூர், பிஜா னூர் ஆகிய இடங்களிலிருந்து கிடைத்த மெருகெண்ணெய் பூசி வர்ண அலங்காரங்கள் செய்யப்பட்ட மர வேலைப் பொருள்களும, ஜெய்ப்பூர், பாம்பே, சுனூர் ஆகிய இடங்களி லிருந்து கொணர்ந்த சித்திரவேலைப்பாடமைந்த மண் கலங்களும், வட குஜராத்திலுள்ள விசா நகரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட மரத்தால் செய்யப்பட்ட ஓர் அழகிய மேசையும், பம்பாய், பித்ரிவார், லக்னோ ஆகிய இடங்களி லிருந்து சேகரித்த எனாமல் சாமான்களும் இருக்கின்றன.

அதையடுத்து கீழ்ப்பக்கமுள்ள காட்சிக் கூடதில் புதை பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் குப்தர்களுக்குப் பிற்பட்ட காலத்தையும் கால சூரியர் காலத்தையும் சேர்ந்த கவர்ச்சிகரமான கல் சிற்பங்களும் கி. பி. 7-வது, 8-வது நூற்றாண்டைச்சேர்ந்ததாய் சிங்கப்பூரிலிருந்து கிடைத்த புத்தர் போதிசத்துருவர் உருவங்கள் தோண்டப்பட்ட செம்புத் தகடுகள் உடபடச் சில சிலைகளும், கி.பி. 2-வது நூற்றாண்டைச் சேர்ந்ததாய்க் கிராரி என்னுமிடத்தில் கிடைத்த சித்திரங்கள் தீட்டியப்பட்ட மரத்தூண் ஒன்றும், சாரபாபுரர்கள், சோமவமிசத்தவர், தக்ஷிணகோசலத்தைச் சேர்ந்த கால சூரியர் ஆகியோரின் செப்பேடுகளும் இருக்கின்றன. கல் வெட்டுகளும், சிற்பங்களும் வராந்தாவில் வைக்கப்பட்டிருக்கின் றன. மானிட சமூக வரலாற்றுப் பொருள்கள் வரிசையில் முக்கியமாகச் சத்திஸ்கார் ஜில்லாப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆதி குடிகள் உபயோகித்து வந்த பல வகைச் சாமான்கள் இருக்கின்றன. அவ்வினத்தில் ஆதி குடிகள் உபயோகித்து வந்த உடைகள், தலையணிப் பொருள்கள், ஆபரணங்கள், வீட்டுப் புழக்கத்துக்கு உபயோகிக்கப்பட்ட பாத்திரங்கள், தட்டு முட்டுச் சாமான்கள், சங்கீதக் கருவிகள் இருக்கின்றன. மேலும், போர்க்கருவிகளும், போர் வீரர் உடைகளும் இருக் கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிச் சாலையைப் பார்க்க வரும் மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும், வேன்ய பார்வையாளர்களுக்கும் காட்சிக்கூட உதவி அதிகாரி பொருள் களைப் பற்றி விளக்கம் தெரிவிக்கிறார். பொதுமக்கள் உபயோகத்துக்கெனத் தனிப் புத்தகசாலையொன்றும், காட்சிச் சாலை ஊழியர்களின் உபயோகத்துக்கும் ஆராய்ச்சிக்குமாக மற்றொரு புத்தகசாலையும் இருக்கின்றன. பொது மக்கள் புத்தக சாலையில் ஆங்கிலம், சமஸ்கிருதம், மராத்தி ஆகிய பாஷைகளில் 10,000 புத்தகங்களும், ஊழியர்கள் புத்தக சாலையில் ஆங்கிலம், சமஸ்கிருதம், மராத்தி பாஷைகளில் 2,000 புத்தகங்களும் பத்திரிகைளும் இருக்கின்றன.

வெளியீடுகள்.—(1) 1953-ம் வருஷத்தில் இக்காட்சிச் சாலைத் திறப்பு விழாவின் போது வெளியிட்ட திறப்பு விழா ஞாபகார்த்த விசேஷ வெளியீடு, (2) காட்சிச் சாலையிலிருக்கும் கல்வெட்டுகள், மானியச் செப்பேடுகள் பற்றிய விவர விளக்கப் பட்டியல், (3) காட்சிச் சாலையிலுள்ள நாணயங்களின் ஜாபிதா, (4) தபால் கார்டு அளவுள்ள பட அட்டைகள்.

வேலை நேரம்.—எல்லாத் திங்கட்கிழமைகளும், குடியரசு தினம், தீபாவளி, ஹோலிப்பண்டிகை, தசரா இவை போன்ற முக்கியமான விடுமுறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—போப்பாலில் இருக்கும் மத்தியப் பிரதேச சர்க்காரின் புதைபொருள் ஆராய்ச்சி இலாக்கா, பொருட் காட்சிச் சாலைகளின் டிப்டி டைரக்டருடைய அதிகாரத்தின்கீழ் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—உதவிக்காவலர் ஸ்ரீ B. C. ஜெயின், M.A., காட்சிக் கூடங்களின் உதவி அதிகாரி ஒருவர், புத்தகசாலைப் பொறுப்பாளர் ஒருவர், குமாஸ்தா ஒருவர், தப்தாரி ஒருவர், வேலைக்காரர்கள் ஒன்பது பேர், காவற்காரன் ஒருவன், தூப்புக்காரன் ஒருவன்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 30,000.

விவரக் குறிப்புகள்.—காட்சிப் பொருள்களுக்கான வசதியை அனுசரித்து விசேஷத் திட்டமிட்டுச் சமீபகாலத்தில் கட்டப்பட்ட புதிய கட்டடத்திற்குக் காட்சிச்சாலை மாற்றப்பட்டிருக்கிறது. காட்சிச்சாலைக்குத் தேவையான உபகரணங்கள் இருப்பதோடு சபாமண்டபமும் இருப்பதால், இவ்வட்டாரக் கல்வி வளர்ச்சிக்கான தேவைகளைக் காட்சிச்சாலை அளிக்கக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. நாளொன்றுக்குச் சராசரி 550க்கும் மேற் பட்ட பார்வையாளர்கள் இதனைப் பார்க்க வருகிறார்கள், மஹாதியோகாத் மேளாத் தினம், ரத யாத்திரைத் தினம் போன்ற விசேஷத் தினங்களில் நாள் ஒன்றுக்கு 5,000 பேர்கள் வரை வருகிறார்கள்.

சௌகார்

ஜனத்தொகை, 66,442

புதை பொருட்காட்சிச் சாலை, சாகர் பல்கலைக் கழகம்.

தோற்றம்.—1951.

வரலாறு.—மஹாகோசலப் பிரதேசத்தைச் சேர்ந்த புதை பொருள்களையெல்லாம் சேகரித்துக் காட்சிக்கு வைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இக்காட்சிச்சாலை 1951-ஆம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நோக்கமும் பொருள்களும்.—இக்காட்சிச் சாலையில் சரித்திர காலத்துக்கு முற்பட்ட ஆயுதங்கள், தட்டு முட்டுச் சாமான்கள், கல் சிற்பங்கள், சுட்ட மண் பாண்டங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், குன்றி மணிகள் முதலியவை களின் மாதிரிப் புதைபொருள்கள் இருக்கின்றன. ஜபல்பூர் ஜில்லாவில் திரிபுரியிலும், செய்ப்பூர் ஜில்லாவில் சிர்ப் பூரிலும் சாகர் பல்கலைக் கழகப் புதைபொருள் ஆராய்ச்சிப் பிரிவினர் நிலை களை அகழ்ந்தெடுத்ததன் பயனாக ஏராளமான பழங்காலப் பொருள்கள் கிடைத்தன. இவை களோடு சாகர் ஜில்லாவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் ஆங்காங்குப் பூமியின் மேற்பரப்பிலேயே சிதறிக் கிடந்த பல பொருள்களும் சேர்ந்து இக்காட்சிச் சாலையில் 2,000-க்கு மேற்பட்ட பழங்காலப் பொருள்கள இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிசாலை ஊழியர்களின் உப யோகத்துக்கென 500 புத்தகங்களையும் பற்பல பத்திரிகை களையும் கொண்ட ஒரு புத்தகசாலை இருக்கிறது. பார்வை யாளர்களுக்கு இங்குள்ள ஊழியர்கள் பொருள்களைப் பற்றி விளக்கம் தெரிவிக்கிறார்கள். சில சமயங்களில் சொற் பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. மாணவர் களுக்கு உதவியாக மீன் விளக்கு ஒளி மூலம் திரையில் படம் காட்டுவதற்குரிய படக் கண்ணாடிகளும் இருக்கின்றன. சில காலங்களில் பொருட்காட்சி விழாவும் நடத்தப்படு கின்றது. விளக்கச் சீட்டுகள் ஹிந்தி, ஆங்கில மொழிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன.

வெளியீடுகள்.—(1) மத்தியப் பிரதேஷ்கே புரதத்வ ரூப்ரேகா. எழுதியவர். டாக்டர் M. G. தீக்ஷிதர், (2) டாக்டர் M. G. தீக்ஷிதரால் எழுதப்பட்ட திரிபுரம் அகழ்ந் தெடுத்த அறிக்கை.

வேலை நேரம்.—ஞாயிற்றுக் கிழமைகளும் கெஜட்டில் பிர சுரிக்கப்பட்ட விடுமுறை நாட்களும் தவிர, மற்றெல்லா நாட்களிலும் காலை 10-30 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—சாகர் பல்கலைக் கழகப் புராதன இந்திய சரித்திரம், பண்பாடு, புதை பொருட்படங்களின் பேராசிரிய ருடைய நிர்வாகத்தின்கீழ் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—குமாஸ்தாவும் வேலைக்காரனும்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 3,500.

விவரக் குறிப்புகள்.—பண்டக சாலைக்கு இடவசதியிருந் தாலும், காட்சிசாலை இருக்குமிடம் பொருத்தமில்லாத தாகவும் இடவசதியில்லாததாகவும் இருக்கிறது. நாளொன் றுக்குச் சராசரி 15 பேர்களும், வருஷம் ஒன்றுக்கு 5,000 பார்வையாளர்களும் வருகின்றனர். பொருள்கள தேடி எடுத்தல், அகழ்ந்தெடுத்தல் மூலமாகச் சேகரிக்கப்படுகின்றன.

சாஞ்சி

ஜனத்தொகை, 300

புதைபொருட்காட்சிச் சாலை.

தோற்றம்—1919.

வரலாறு.—1919-ஆம் வருஷத்தில் இந்திய சர்க்கார் புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவில் டைரக்டர் ஜெனரலாய் இருந்த சர் ஜான் மார்ஷல் என்பவர் சாஞ்சியில் சில இடங் களை அகழ்ந்து பார்த்தபோது சில பழங்காலப் பொருள்கள் அகப்பட்டன. அவ்வாறு அகப்பட்ட பொருள்களை அவ்வூரி லேயே ஒரு கட்டடத்தில் காட்சிப் பொருள்களாக வைக்க வேண்டும் என்றும், அவைகள் அகப்பட்ட இடத்தையும் பாதுகாப்புச் செய்ய வேண்டுமென்றும் அவர் கருதியதன் பயனாக, சாஞ்சியில் அவரால் இந்தப் புதைபொருட் காட்சிச்சாலை ஏற்படுத்தப்பட்டது. புதைபொருள்கள் கிடைத்த இடத்தையே பாதுகாப்புச் செய்த போதிலும் அவ் விடத்திலேயே விட்டு வைக்க முடியாத சில சிற்பங்களையும் சிற்பத் துணுக்குகளையும் அவர் தம் சொந்த மேற்பார்வை யில் இருந்த இந்தப் பொருட்காட்சிச் சாலையில் வைத்தார். பின்னர் அதே 1919-ஆம் வருஷத்தில் போபால் சமஸ்தானத் தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சி இலாக்காவிடம் காட்சிச சாலையின் பொறுப்பை ஒப்படைத்தார். 1953-ஆம் வருஷம் ஜூலை மாதத்தில் புதை பொருள் ஆராய்சசி இலாக்காவின் மத்திய வடடாரப் பிரிவு ஏற் படுத்தப்பட்டு, இப்பொழுது இக்காட்சிச் சாலை இந்திய சர்க்காரின் புதைபொருள் ஆராய்சசி இலாக்காவின் அதி காரத்தின்கீழ் இருந்து வருகிறது.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச் சாலையில், சாஞ்சி யிலும் அதன் பக்கத்திலுள்ள இடங்களிலும் அகழ்ந் தெடுத்த சிற்பததுண்டுகள் வைக்கப்பட்டிருகினறன. மௌரி யர் காலம் முதல் மத்திய காலம் வரையுளள செதுக்கு (சிற்ப) வேலைப் பொருள்களும் அசோகர் காலத் தூணின் உச்சிப் பாகம், வாயிற்கதவு, கம்பி அழியின் துண்டுகள், சாஞ்சியின் ஞாபகார்த்த நகைச் செப்புகள், மண்கலங்கள், விவசாயக் கருவிகள், வீடுகளிலும் சந்நியாசி மடங்களி

உபயோகிக்கப்பட்டு வந்த இரும்பு, வெண்கலம். செம்பு உலோகங்களால் செய்யப்பட்ட தட்டு முட்டுச் சாமான்கள், களி மண்ணும், மணலும் கலந்து செய்து சுட்ட ஒரு வகை மண் கலங்கள், நாணயங்கள் முதலியன இருக்கின்றன. காட்சிச் சாலையில் திறந்த முகப்பையுடைய ஒரு விசாலமான அறை யும், அதன் பக்கத்தில் வேறு இரண்டு அறைகளும், அழி போடப்படாத பெரிய முற்றம் ஒன்றும் இருக்கின்றன. இவை கள் எல்லாவற்றிலும் காட்சிப் பொருள்கள் வைக்கப்பட்டி ருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இங்குள்ள ஞாபகச் சின்னங் களுக்கும் மற்றுமுள்ள பொருள்களுக்கும் பொறுப்பினராயுள்ளவர், பார்வையாளர்கள் கேட்டுக்கொண்டால் அவர்களுக்குப் பொருள்களைப் பற்றி விளக்கம் தெரிவிக்கிறார். உலகத்திலுள்ள பல பாகங்களிலிருந்தும் பார்வை யாளர்கள் வருவதால், விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்தில் வைக்கப்படடிருக்கின்றன.

வெளியீடுகள்.—(1) சாஞ்சியிலுள்ள புதை பொருள், காட்சிச் சாலைப் பொருள்களின் பட்டியல் விலை ரூ 1—0—0 (2) தபால் கார்டு அளவில பட அட்டைகள்.

வேலை நேரம்—எல்லா நாட்களிலும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—புதைபொருள் இலாக்கா ஆராய்ச்சி மத்திய வட்டாரம் சூப்பிரண்டெண்ட் ஆணையின்கீழ் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—ஞாபகார்த்தச் சின்னங்களுக்கும் காட்சிச் சாலைக்கும் பொறுப்பினர்—தற்சமயம் ஆள் இல்லை. குமாஸ் தாக்கள் இருவர், நான்கு வேலையாட்கள்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 12,700.

விவரக் குறிப்புகள்.—நாள் ஒன்றுக்குச் சராசரி 15 பார்வையாளர்களும் வருஷம் ஒன்றுக்கு 6000 பார்வை யாளர்களும் வருகிறார்கள். மழை காலத்தில் அயல் நாட் டுப் பார்வையாளர்கள் அதிகமாய் வருகிறார்கள். இக் காட்சிச் சாலைக் கட்டடம் இடவசதி உள்ளதாய் இருக்கிறது. பழங்காலப் பொருள்களில் மிகச் சிறியனவாயுள்ளவற்றைப் பக்கத்து அறைகளிலுள்ள பெட்டிகளில் வைத்திருக்கிறார்கள். புதைபொருள் இலாக்கா சொக்கிதார் ஒருவன் இக்காட்சிச் சாலையின் எல்லைக்குள்ளேயே குடியிருந்து வருகிறான். அவன் காட்சிச் சாலையைக் காவல் காத்துக்கொள்ளுகிறான். பண்டக சாலை இல்லை. காட்சிப் பொருள்களில் எதையேனும் ரசாயனப் பரீட்சை செய்ய வேண்டிய அவசியம் நேரிட்டால், அச்சமயங்களில் இந்தியாவிலுள்ள புதைபொருள் ரசாயன ஆராய்ச்சி அதிகாரி இங்கு வந்து ரசாயனப் பரீட்சை செய்கிறார். இங்குள்ள பொருள்கள் எல்லாம் முக்கியமாய்த் தேடிச் சேகரித்தல், அகழ்ந்தெடுத்தல் ஆகிய வழிகளில் சேர்க்கப்படுகின்றன. காட்சிச் சாலையை இன்னும் பெரி தாக்கி அதிகமான பொருள்களைச் சேர்த்து வைக்கவேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சோணகிர்

ஜனத்தொகை, 500

திகம்பர் ஜெயின் பொருட்காட்சிச் சாலை.

தோற்றம்.—1948.

வரலாறு.—இந்தப் பொருட்காட்சிச்சாலை 1948-ஆம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. சோணகிர் மலையின் சுற்றுப் புறங் களில் சிதறிக்கிடந்த சற்பங்களும், புதைபொருள்களும் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருகின்றன. இதன் காவலர் சில முக்கியமான பொருட்காட்சிச் சாலைகளுக்கு நேரில் போய் அவைகளிலிருந்து சில பொருள்களை வாங்கி வந்து இங்குள்ள பொருள்களோடு சேர்த்து வைத்திருக்கிறார். சைன மதத்தைச் சேர்ந்த பழங்காலப் பொருள்களை யெல்லாம் தேடிச் சேர்த்து இக்காட்சிச் சாலையில் வைக்க வேண்டுமென்பதே இக்காட்சிச் சாலை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கமாகும். இது கை கூடக் கூடியதேயாகும். எனெ னில், இக்காட்சிச் சாலையைச் சுற்றி 40 மைல் சுற்றளவுக்குள் ஏராளமான பொருள்கள் புதையுண்டு கிடக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—இங்குள்ள பொருள்கள் யாவும் புதைபொருள்களாகவும் அவற்றில் அதிகமான எண் ணிக்கை சைன மதத்தைச் சேர்ந்த பொருள்களாவும் இருக் கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இல்லை

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.— எல்லா நாட்களிலும் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—சோணகிர் கமிட்டியாரால் நிர்வகிக்கப் படும்.

ஊழியர்கள்.—சோணகிர் கமிட்டி ஊழியர்களே இந்தப் பொருட்காட்சிச் சாலையையும் மேற்பார்த்து வருகிறார்கள்.

நிதி நிலை.—இக்காட்சிச் சாலைக்கெனத் தனிப்பட்ட வரவு செலவுத் திட்டம் இல்லை. பொது வரவு செலவுத் திட்டத்தி லிருந்தே இக்காடசிச்சாலையின் செலவினங்களுக்குத் தொகை கொடுக்கப்படுகிறது.

விவரக் குறிப்புகள்.—சோணகிர் ஒரு கிராமம். சுமார் 500 பேர்களே வசிக்கிறார்கள். ஆயினும், ஆயிரக்கணக்கான புண் ணிய ஸ்தல யாத்திரை வாசிகள் வருஷந்தோறும் இதைப் பார்க்க வருகிறார்கள். வருஷச் சந்தை கூடும் சமயத்தில் பத்தா யிரம பார்வையாளர்கள் வருகிறார்கள். காட்சிச் சாலையைக் காவல் காத்துவர, சோணகிர் கமிட்டியாரால் ஒரு காவற் காரன் நியமிக்கப்பட்டிருக்கிறான். பக்கத்து ஊர்களிலிருந்தும் மென்மேலும் பொருள்கள் சேகரிக்கப்பட்டு இங்கே வைக்கப் படுகின்றன. இன்னும் பரிவர்த்தனை முறைபற்றி யோசிக்கப் படவில்லை. காட்சிப் பொருள்களுக்கு ஹிந்தி மொழியில் மட்டும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்படடிருக்கின்றன. நாடெங் கும் கவனிக்கப்படாமல் பரந்து கிடக்கும் புதை பொருள் களின் மாதிரிகளைச் சேர்க்கவேண்டும் எனற எண்ணத்துக்கு இடையூறாய் இருந்துவரும் தடைகளை அகற்றி மேன்மேலும் அதிகமான புதைபொருள்களைப் பலவிடங்களிலும் சென்று கொணர்ந்து சேர்த்து இந்தப் பொருட்காட்சிச் சாலையை இன் னும் அதிகமாக விஸ்தரிக்க வேண்டுமெனக் காட்சிச் சாலையை நிர்வகித்து வரும் சோணகிர் கமிட்டியாருக்கு அவா மிகுதி யாய் இருக்கிறது.

சென்னை

ஜனத்தொகை, 1,416,056

(i) செயின்ட் ஜார்ஜ் கோட்டைப் பொருட்காட்சிச் சாலை.

தோற்றம்.—1948.

வரலாறு.—இந்தியா சுதந்தரம் அடைந்த சில நாட் களுக்குள்ளாகவே ஆங்கிலேயர் அரசாட்சி செய்த காலத்துத் தென்னிந்திய ஞாபகச் சின்னங்களை ஓர் இடத்தில் சேர்த்து வைக்க வேண்டுமென்று கருதி, 1948-ஆம் வருஷத்தில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இந்தப பொருட்காட்சிச் சாலை நிறுவப்பட்டது. காட்சிச்சாலை நிறுவப்பட்டுள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டையே ஆங்கிலேயர் அரசாட்சி யின் ஒரு ஞாபகச் சின்னமாகும். ஏனெனில், இக் கோட்டை 1792-ஆம் வருஷத்தில் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட பழைய கட்டடமாய் இருப்பதுமனறி, இதுவே சென்னை வட்டாரத்திலுள்ள வியாபாரிகளும் ஆங்கிலேயரின் வியாபாரக் கம்பெனியாகிய கிழக்கு இந்தியக் கம்பெனியாரும் வியாபார

ஒப்பந்தங்களுக்காக இக்கோட்டைக்குள்ளேயே சந்தித்து ஒருவர்க்கொருவர் தத்தம் வியாபாரப் பொருள்களைக் கொடுக்கல் வாங்கல் முறையில் வியாபாரம் நடத்தி வந்த பரிவர்த்தனை நிலையமாகவும் இருந்திருக்கிறது. இப்பொழுது மிகவும் அபிவிருத்தியடைந்துள்ள இந்தப் பொருட்காட்சிச் சாலை, இந்தியாவில் ஆங்கிலேயர் ஏற்படுத்திய அவர்களுடைய முதல் ஸ்தாபனமான செயின்ட் ஜியார்ஜ் கோட்டையின் தோற்றம், வளர்ச்சி முதலியவற்றைப்பற்றியும் சென்ற மூன்று நூற்றாண்டுகளில் தென்னிந்திய சரித்திரம் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு மிகவும் பயன் அளிக்கக்கூடியதாயிருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச்சாலை ஆரம்பிக்கப்பட்ட தன் நோக்கம், போர்க்கருவிகள், கையெழுத்துப் பிரதிகள், சித்திரங்கள், அச்சுப் பிரதிகள, நாணயங்கள், மெடல்கள், வெற்றிக் குறிகள், துணி வகைகள், பீங்கான் சாமான்கள் முதலியவற்றைச் சேகரித்து வைப்பதேயாகும். இங்கே ஐந்து காட்சிக் கூடங்கள் இருக்கின்றன. அவற்றுள் மூன்று கூடங்களில் கையால் எழுதப்பட்ட சிறந்தோர் உருவப்படங்களும், அச்சுப்பிரதிகளும், போர்க்கருவிகளும் வைக்கப்பட்டுள்ளன. மற்றுமுள்ள இரண்டு கூடங்களில் நாணயவகைகள், மெடல்கள், வெற்றிக் குறிகள், ஆதாரப் பத்திரங்கள், வெள்ளியிற் செய்யப்பட்டுள்ள கிறிஸ்தவர் தேவாலயத்திலுள்ள நற்கருணைச் சடங்குக்குரிய சாமான்கள் ஆகிய பல வகைப்பட்ட பழங்காலச் சின்னங்கள் வைகைப்படடுள்ளன. கையால் வரையப்பட்ட சிறந்தோர் உருவப்படங்களைக் கொண்ட காட்சிக் கூடத்தில் முன்னூட்களில் சென்னை மாகாணத்து கவர்னராய் இருந்தவர்கள், இங்கிலாந்து தேசத்து அரசர்கள், அரசிகள், கர்நாடக நவாபுகள் முதலியோருடைய எண்ணெய் வர்ணச் சித்திரங்கள் இருக்கின்றன. அச்சுப் பிரதிகள் பிரிவில் 18-வது நூற்றாண்டில் செயின்ட் ஜார்ஜ் கோட்டை, செயின்ட் தாமஸ் மவுண்ட் (பரங்கிமலை—ஆங்கிலேயர் குடியிருந்த இடம்), தஞ்சாவூர், திருநெல்வேலி, மற்றும் சரித்திர சம்பந்தப்பட்ட இடங்களின தோற்றங்களைக் காட்டும் அச்சுப்படங்கள் இருக்கின்றன. போர்கருவிகளின் பிரிவில் 1752-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சென்னை மாகாணச் சேனையைப் பற்றிய கருத்தை விளக்கக்கூடிய போர்க்கருவி வகைகள் இருகின்றன. மற்றப் பழங்காலப் பொருள்கள் வேறு இரண்டு விசாலமான அறைகளில் வைக்கப்பட்டுளளன. அவைகளில் வலப் பக்கம் இருக்கும் அறையில் சென்னை, பமபாய், வங்காளம் முதலான இடங்களிலுள்ள தங்கசாலை (நாணயம் அடிக்கும் இடங்களில்) அடிக்கப்பட்ட நாணய வகைகளும், போர்த்துக்கீவியர், பிரெஞ்சுக்காரர், டெனமார்க் தேசத்தாரின் நாணய வகைகளும், மெடல்களும் இருக்கின்றன. மற்றோர் அறையில் இங்கிலாந்து தேசத்தில் கான்டன் என்னுமிடத்தில் செய்யப்பட்ட கிழக்கு இந்தியக் கம்பெனியாருடையவும் ஆற்காட்டைச் சேர்ந்ததுவுமான பீங்கான் பாத்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கடுத்த விசாலமான அறையில் புனித மரியன்னை தேவாலயத்தில் உபயோகிக்கப்பட்ட வெள்ளியால் செய்யப்பட்ட நற்கருணைக்குரிய சிறு சாமான்களும், செயினட் ஜார்ஜ் கோட்டையின் மாதிரி உருவமும், ஆற்காட்டு நவாபுவின் பல்லக்கும், ஜியார்ஜ் கோட்டைக்கு உபயோகித்த பழைய பூட்டுகள் திறவு கோல்கள் முதலியனவும் வைக்கப்பட்டுள்ளன.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிச் சாலையின் காவலர் அல்லது காட்சிக் கூடங்களின் கீழ்த்தர உதவி அதிகாரி, பார்வையாளர்கள், முக்கியமாக ஆசிரியர்களும் மாணவர்களும் கேட்டுக்கொண்டால் அவர்கள் கூடப்போய்க காட்சிச்சாலை முழுவதையும் சுற்றிக் காண்பிக்கிறார். புதுதக சாலைக்கு வேண்டிய புத்தகங்கள் சோக்கப்பட்டு வருகின்றன. அது முக்கியமாகக் காட்சிச்சாலை ஊழியர்களின் உபயோகத்துகாகவே சேர்க்கப்படுகிறது. அதில் 1,091 புத்தகங்களும், வார, மாதப பத்திரிகைகளும் இருக்கின்றன. காட்சிக் கூடங்களிலுளள பொருள்களில் தமிழிலும் ஆங்கிலதிலும விளகக் சீட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. பலகலைக் கழக மாணவாகளும், ஏனைய கல்வி நிலைய மாணவர்களும் குழுகளாகக்கூடிக் காடசிச் சாலையைப் பார்க்க வருகிறார்கள். பார்வையாளர்களுக்குப் பொருள்களைப் பற்றிய தனிப்பட்ட விசேஷ விவரங்களை விளக்கிக் காட்டுவதற்காக வைக்கப்பட்டுள்ள வளர்ச்சி தாழ்ச்சி காட்டும் குறிப்புகள், மாதிரி உருவங்கள், அட்டைகள், படங்கள் முதலியவறறை யாரும் தாராளமாக எடுத்துப் பார்க்கலாம்.

வெளியீடுகள்.—'சென்னை ராஜ்ய விஷயங்களைப் பற்றிய செய்திகள்' என்ற இதழில் வெளியிட்டுளள படங்களுடன் கூடிய செயின்ட் ஜியார்ஜ் கோட்டைப் பொருட்காட்சிச் சாலையைப பற்றிய துண்டுப் பிரசுரம். இததுண்டுப் பிரசுரத்தில் சென்னை ராஜ்யச் செய்திகள் டைரக்டரால் 2,000 பிரதிகள் வரை திரும்பவும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. விரும்பும் பார்வையாளர்களுக்கு இந்தத் துண்டுப் பிரசுரம் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.

வேலை நேரம்.—ஞாயிற்றுக்கிழமைகளும், மற்ற விடுமுறை நாட்களும் உள்பட (வருஷம் 365 நாட்களிலும்) எல்லா நாட்களிலும் இக்காட்சிசாலை தினந்தோறும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—இந்திய சர்க்காரின் புதைபொருள் ஆராய்ச்சி இலாக்காவைச் சேர்ந்த பொருட்காட்சிச்சாலைப் பிரிவு சூபபிரண்டெண்டின் அதிகாரத்தின்கீழ் இருந்துவருகிறது.

ஊழியர்கள்.—காவலர்—ஸ்ரீ **K. R.** விஜயராகவன், **B. A.**' காட்சிக்-கூடங்களின் கீழ்த்தர உதவி அதிகாரி, கீழ்ப் பிரிவுக் குமாஸ்தா, பண்டகசாலைப் பொறுப்பாளி, குறிப்புத் திறனுளி. தலைமை வேலையாள், சௌக்கிதார், ஐந்து வேலையாட்கள்,

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 30,000.

விவரக் குறிப்புகள்.—காட்சிச் சாலை செயின்ட் ஜியார்ஜ் கோட்டையில் நிறுவப்பட்டிருக்கிறது. இது ஆங்கிலேயர் அரசாட்சி செய்த காலத்தைச் சோந்த ஞாபகச் சின்னங்களைச் சேர்த்து வைப்பதறகாக ஸ்தாபிக்கப்பட்ட காட்சிச்சாலையாகையால, அந்த நோக்கத்துக்குத தகுந்தாற்போல அமைக்கப்பட்டிருப்பதுடன் யாரும் எளிதில் பார்க்கக்கூடியதாயும் இருக்கிறது. நாளொன்றுக்குச் சராசரி 325 பார்வையாளர்களும வருஷம் ஒன்றுக்கு 1,15,000 பார்வையாளர்களும் இதனைப் பார்க்க வருகிறார்கள். கிறிஸ்மஸ் விடுமுறை, மாட்டுப பொங்கல், வைகுண்ட ஏகாதசிக்கு அடுத்த நாள், சுதநதர தினம் ஆகிய இப்படிப்பட்ட விசேஷ தினங்களில் கூட்டம் ஏராளமாய் இருக்கிறது. கட்டடம் தகுதியுடையதாகவே இருகிறது. ஆயினும், இன்னும் சில காட்சிக் கூடங்களும, பண்டகசாலைக்கு இடமும தேவைப்படுகின்றன. புதைபொருள் ஆராய்ச்சி இலாக்கா ரசாயன அதிகாரியே இங்கேயும் அவ்வப்படும் சந்தர்ப்பங்களில் ரசாயன ஆராய்ச்சி செய்கிறார். பார்வையாளர்களுக்கு வசதியாக ஆசனங்கள், மின்சார விசிறிகள் முதலியன அமைக்கப்படடிருக்கினறன. இந்தப் பொருட்காடசிச் சாலை இன்னும் களஞ்சியச் சேமிப்புச் சட்டப்படி அங்கீகாரம் பெறவில்லை. ஆகையால், இங்குள்ள பொருள்கள எலலாம் விலை கொடுத்தும், இனமாகவும், கடனுகவும் வாங்கிச் சேர்த்து வைக்கப்படுகின்றன. இந்தியப் பொருட்காட்சிக் கூடங்கள் சங்கத்தில இது ஒரு ஸ்தாபன அங்கம் வகிக்கிறது.

(ii) சர்க்கார் பொருட்காட்சிச்சாலையும் தேசியக் கலைக்கூடமும்.

தோற்றம்.—1851.

வரலாறு.—லண்டன் எசியாட்டிக் சொஸைட்டியின் இலையான சென்னை இலக்கியக் கழகத்தாருக்குச் சென்னையில பொருளாதார பூதத்துவப் பொருட்காடசிச்சாலை ஒன்றை நிறுவ வேண்டுமென 1828-ஆம் வருஷத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. அதன்பேரில் அவர்கள் பூதத்துவப் பொருளைச் சோக்கத் தொடங்கினர். ஆனால், நிதிப் பற்றுக் குறைவாலும் சேகரித்த பொருள்களைக காட்சிக்கு வைக்க இடம் கிடைக்காமல போனதாலும, அவர்கள் சென்னைச் சர்க்காருக்கு எழுதி, அப்பொருள்களை ஆரம்பப் பொருள்களாக வைத்

சென்னையில் ஒரு பூதத்துவப் பொருட் காட்சிச் சாலை நிறுவும் பொறுப்பைச் சர்க்காரே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன் பின் 1843-ஆம் வருஷத்தில் மேஜர் ஜெனரல் கல்லன் எனபார் சர்க்காருகு எழுதிய கடிதத்தில் சிற்சில குறிப்பிடட இடங்களில் அந்தந்த வட்டாரப் பொருடகாட்சிச் சாலைகளை ஏற்படுத்தவேண்டுமென்றும், அவ்வாறு ஏறபடுத்துவதால் அவை பொது மக்களிடையே பூமியிலுள்ள தாதுப் பொருளகளைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு ஆர்வத்தை உண்டாக்குவதோடல்லாமல் விவசாயத் துறையில் ஊக்கத்தையும் புதிய முறைகளைக் கையாளுவதில் சீர்திருத்தங்களையும விளைவிக்கும் என்றும் யோசனை கூறியிருந்தார். இவ்விதமாக மேஜர் கல்லனும், சென்னை இலக்கியக் கழகக் காரியதரிசியும் எழுதிய கடிதங்களில் கண்ட அடிப்படைக் கருத்துகளை ஒட்டிக கிழக்கு இந்தியக் கம்பெனியின் நிர்வாகக் குழுவினர் 18 6-ஆம் வருஷம் மே மாதம் 20-ஆம் தேதியில ஒரு பதில் கடிதம் எழுதினர்கள். "மாகாணங்களில் சில குறிப்பிட்ட இடங்களில் அநதந்த வட்டாரப் பொருட்காட்சிச் சாலைகளை நிறுவவேண்டுமென்ற எண்ணம் பற்றித் தாங்கள் எழுதியுள்ள காரணங்களை வைத்து ஆலோசனை செய்ததில் சென்னையில் முதல் உதாரணமாக மததியப் பொருட்காட்சிச்சாலையொன்றை நிறுவி அதைப் பல்கலைக்கழகத்துடன் சம்பந்தபபடுத்துவது தங்களுடைய முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். அவ்வாறுயின், அதற்குத் தேவைப்படும் காட்சிப் பொருள்களைச் சேகரிக்கும் வகைக்கு அவசியப்படும் சில்லறைச் செலவுகளைச் செய்ய மனப்பூவமாய் அதிகாரம் அளிப்போம்," என்று எழுதியிருந்ததோடு, "மேலும் மாகாணங்களில் குறிப்பிட்ட சில இடங்களிலுள்ள அந்தந்த வட்டாரப் பொருட்காட்சிச் சாலைகளில் எதுவாயினும் இததகைய அதிகாரம் அளிக்கப்படக்கூடிய தகுதியை அடைந்து அதற்கும் அதிகாரம் அளிக்கப்படும் பொழுது அவ்விதமான பொருட்காட்சிச் சாலைகளில் விசேஷச் சிறப்புடைய பொருள்கள் இருந்தால், அப்பொருள்களைக் கலைப் பண்பாட்டுப் பொருட்காட்சிச் சாலையில் கொண்டு வைக்கவேண்டும்; அதற்காகும் செலவுகளைச் செய்துகொள்ளவும் மனப்பூர்வமான அதிகாரம் அளிப்போம்," என்றும் எழுதியிருந்தனர்.

பின் 1850-ஆம் வருஷத்தில் சென்னைக் கவர்னரின் மெய்காப்பாளருக்கு மருத்துவ அதிகாரியாகவும் மருத்துவப் பரிசோதனைத் தலைவராகவும் இருந்த உதவி ரண மருத்துவர் எட்வர்டு கிரீன் பால்போர் என்பவர், ஆரம்பிக்கத தீர்மானித்துள்ள பொருட்காட்சிச்சாலை ஆரம்பிக்கப் படுமாயின், அதற்குத் தாம பொறுப்பு அதிகாரியாயிருந்து பணியாற்ற ஆயத்தமாய் இருப்பதாகத் தெரிவித்தார். ஆகவே, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள கலலூரியில மத்தியப பொருட்காட்சிச்சாலை ஆரம்பிக்கப்பட்டது. பால்போர் இப்பொருட்காட்சிச் சாலையில் இன்னின்ன வகைப் பொருள்கள் தான் வைக்கப்படவேண்டுமென்று கட்டுப்பாடு எதுவும் செய்யவில்லை. அதன் பயனுக மனமுவந்தளிக்கும் தானகர்த்தாக்கள் பலரிடமிருந்து மிக்க விலை மதிப்புள்ள பொருள்கள பல வந்து குவிந்தன. 1853-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 9-ஆம் தேதியில் மொத்தம் 19,830 மாதிரிப் பொருள்கள் சேர்ந்து விட்டன. அவ்வமயம் இப்பொருட காட்சிச்சாலை ஆரம்பித்து 20 மாதங்களே ஆகியிருந்தது. ஆயினும், இககாட்சிச்சாலை வங்காள ஏஷியாட்டிக் சொஸைட்டியாரால் பெரு நாட்களுக்கு முன் கல்கத்தாவில் ஸ்தாபிக்கப்பட்ட நிலை நிற்கும் பொருட்காட்சிச் சாலையை ஒத்த நிலையை அடைந்திருந்தது. இக்காட்சிச் சாலை இருந்துவந்த கல்லூரி அறைகளில் அதி சீக்கிரமாக அளவுக்கு மிஞ்சிப் பொருள்கள் குவிந்துவிட்டபடியால், காட்சிச் சாலைக்குத் தனிக் கட்டடம் வேண்டுமெனச் சர்க்காரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது அவ்வாறு ஒரு தனிக் கட்டம் அமைக்கப் படுமானால், அது "நாட்டிலுள்ள தெய்வத் திருவுருவங்களின் வடிவங்களைக் கைப்பற்றுவதற்குக் குறைந்த செலவில் சாத்தியமான வழியாகும்" எனக் கருதப்பட்டது. மேலும், கீழவ் காலத்தைச் சேர்ந்த பெரிய கட்டட்டத்தில் இப்பொழுது மிச்சமாக உள்ள தூணின் சதுரமான அடித் தளத்தையும் அக்கட்டடத்தில் படங்கள் போடப்பட்ட இரண்டு அறைகளின் அலங்காரச் செங்கல் தளத்தின் ஒரு பகுதியையும் அப்புதிய கட்டடத்தில் கொணர்ந்து வைக்கலாம் என்று கருதப்பட்டது.

டாக்டர் பால்போர் சென்னைப் பொருட்காட்சிச் சாலையை அபிவிருத்தி செய்ததோடு மட்டுமலலாமல், பெங்களூர், பல்லாரி, கோயம்புத்தூர், கூடலூர், உதகமண்டலம், சிக்கந்தராபாது, மங்களூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரப் பொருட்காட்சிச் சாலைகளை ஏற்படுத்துவதற்கும் ஊக்கமூட்டினார். 1855-ஆம் வருஷத்தில சென்னைப் பொருட்காட்சிச் சாலையுடன் இணைந்ததாய்ச் சென்னை மாகாணத்தில் பல்லாரி, கோயம்புத்தூர், கூடலூர், மங்களூர், உதகமண்டலம், ராஜமஹேந்திரம் ஆகிய ஆறு இடங்களில் அந்தந்த வட்டாரப் பொருட்காட்சிச் சாலைகள் இருந்தன. இவ்விதம் ஜில்லாக்களில ஆரம்பிக்கப்பட்ட வட்டாரப பொருட்காட்சிச் சாலைகள நன்கு விருத்தியடையும் என்று மிகுதியும் நம்பப்பட்டது. ஆனால், உதவியின்றியும் கவனிப்பாரினறியும் அவைகளில ஐந்து பொருட்காட்சிச சாலைகள் 1861-ஆம் வருஷத்திலேயே மூடப்பட்டன. பாக்கியிருந்த ஒன்றும் 1875-ம் வருஷத்தில் மறைந்தது. 1854-ஆம் வருஷத்தில் சென்னைப் பொருட்காட்சிச் சாலையிலிருந்த ஒரு சிறுத்தைக்குட்டியும், புலியும் பார்வையாளர்களின் கவனத்தை மிகவும் கவர்ந்தபடியால், அதை அனுசரித்து, டாக்டர் பால்போர் கர்நாடக நவாபுவுக்கு ஒரு கடிதம எழுதி, அவர் வசமிருந்த எல்லாக் காட்டு மிருகங்களையும் சென்னைப் பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டார். 1856-ஆம் வருஷத்தில் சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் மிருகக்காட்சிச் சாலைப் பிரிவு உற்பத்தியாகி அதில் 360 மிருகங்கள்வரை சேர்ந்துவிட்டதுடன் பொது ஜனங்களில் அதைப் பார்க்க ஏராளமானபேர் வர ஆரம்பித்தனர். 1863-ஆம் வருஷத்தில் சென்னை நகராட்சி மனறம் இந்த மிருகக் காட்சிச் சாலையைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இக்காடசிச் சாலையை இப்பொழுது இது இருந்துவரும் பொதுமக்கள் பூங்காவிலுள்ள இடத்துக்கு மாற்றியது. 1855-ஆம் வருஷத்திலேயே சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் தாதுப் பொருள்களின் வரலாறு, பூமியின் தோற்றக்கால ஆதி வரலாறுகளைப் பற்றியும், முதுகெலும்பில்லாத நத்தை, கணவாய் மீன் போன்ற இனங்களைச் சேர்ந்த ஆதி உயிர்வர்க்கங்கள், முதுகெலும்புடைய பிராணிகளின் வரலாறு ஆகிய இவைகளைப் பறறியும் படித்துத் தெரிந்துகொள்வதற்கான பொருள்கள் போதிய அளவு இருந்தன. 1859-ஆம் வருஷத்தில் காட்சிச் சாலையில் (a) மிருகக்காட்சிச் சாலையுடன் எனைய உயிர் வர்க்கங்களின் வரலாற்றுப் பிரிவு, (b) பூகோள சாஸ்திர விளக்கத்துடன் கூடிய பூதத்துவ ஆராய்ச்சிப் பிரிவு, (c) பொருளாதார பூதத்துவப் பொருள்களின் பிரிவு, (d) பொதுமக்கள் புத்தக சாலை ஆகிய பிரிவுகள் இருந்தன. டாக்டர் பால்போர் அக் காட்சிச் சாலையின பொறுப்பாளராய் இருந்த காலத்தில் ஏராளமான பட்டியல்களும் அறிக்கைகளும் வெளியிடப்பட்டன.

பின்னர் டாக்டர் பீடி என்பவர் இகாட்சிச் சாலையின் பொறுப்பாளராய் இருந்த காலத்தில் தாவரவர்க்கக் காட்சிப் பிரிவு விஸ்தரிக்கப்பட்டதுடன் மானிட வமிச விளக்கப் பிரிவும் சேர்க்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்திலேதான் இந்தியாவின் சரித்திர காலத்துக்கு முற்பட்ட புதைபொருள் ஆராய்ச்சித் தந்தை எனச் சொல்லத்தகும் பூட் என்பார் கொடதலை யாற்றுப் பள்ளத்தாக்குகளில் ஆதி மனிதனைப் பற்றிய முதல் சின்னங்களைக் கண்டுபிடித்தார். அங்கே அவர் கண்டெடுத்த சின்னங்களில் சிலவற்றைச் சென்னைப் பொருட்காசிச்சாலைக்கு அனுப்பிவைத்தார். டாக்டர் பால்போர் காலத்திலேயே இக் காட்சிச் சாலையில் ஓரளவு சோத்து வைக்கப்பட்டிருந்த அமராவதி சலவைக் கற்கள் டாக்டர் பீடி காலத்தில் மேலும் அதிகமாகச் சேர்த்துவைக்கப்பட்டன. புஸ்தகசாலையும் பிரசங்க மண்டபமும் 1875-ஆம் வருஷத்தில் கட்டி முடிக்கப்பட்டு, அது முதல் இக்காட்சிச் சாலையின் ஆதரவில் பொது மக்களுக்கெனப் பிரசங்கங்களும் நடத்த ஆரம்பிக்கப்பட்டது. 1698-ம் வருஷத்தில் கன்னிமாரா புத்தகசாலைக் கட்டடமும் கலை

யரங்கும் கட்டிமுடிக்கப்பட்டன. அதன் பிறகு அமராவதித் தீரங்களிலிருந்து மேலும் அதிகமான சிற்பங்களும் படடிப் ரோலுவிலிருந்து பழங்காலத்து எஞ்சிய உடற்கூடுகளும் சேர்க்கப்பட்டன. டாக்டர் பீடிக்குப் பிறகு இக்காட்சிச்சாலைப் பொறுப்பாளராய் வந்த டாக்டர் தர்ஸ்டன என்பார் தமகு மூன் பொறுப்பாளாகளாய இருந்தோர் கைக்கொண்ட மூறைகளை மாற்றி, இக்காடசிச் சாலையில இருக்கவேண்டிய பொருள்களைப் பற்றி ஒரு கட்டுப்பாடு செய்தார். அக்கட்டுப் பாட்டின்படி இக்காட்சிச் சாலையில செனனை மாகாணத்தை மட்டும சேர்ந்த புதைபொருள்கள், உயிர் வர்க்க வரலாறறுப் பொருள்கள், சிற்பக் கலைப்பொருள்கள், கைத்தொழில் பொருள்கள் ஆகிய வகை வகையாகப் பிரிக்க ஏற்பாடு செய்தார். இவ்வாறு அவர் செய்த கட்டுப்பாட்டின் பயனுக நம் மாகாணம் தவிர இந்தியாவிலுள்ள இதர இடங்களிலிருந்து கொண்டு வந்து இக்காட்சிச் சாலையில வைக்கப்பட்டிருந்த காட்சிப் பொருள்கள் எல்லாம் வேறு பல பொருட்காட்சிச் சாலைகளுக்குக் கொடுக்கப் பட்டன. துரதிருஷ்ட வசமாக நமது காடசிச் சாலை யிலிருந்த காந்தாரச் சிற்பக் கலைப் பொருள்கள் எல்லாம் லாகூருக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. எனினும், தர்ஸ்டன் இக்காட்சிச் சாலையில் உயிர் வர்க்க வரலாறு சம்பந்தப்பட்ட பொருள்களை வராளமாய்ச் சேர்த்ததுடன இக்காட்சிச் சாலை யினை பணிகளையும் அதிகமாக்கினார். இக்காட்சிச சாலையி லிருந்து புத்தகங்கள் வெளியிடுவதில அதிகக் கவனம செலுத்தினர். ஆயினும், இந்தியப் பொருட்காட்சிச் சாலைகள் எல்லாவறறிலும் சென்னைப் பொருட்காட்சிச் சாலை தற்சமயம் ஒப்பற்ற நிலையில் இருப்பதற்கு அரும்பணியாற்றிய பெரியார் மிக்க பேராற்றல் படைத்த டாக்டர் ஹிரேவ்லி எனபவராவர். அவரே ஒரு சிறந்த கலா விற்பன்னராயும், விஞ்ஞானியாயும், காட்சிப் பொருள்களை அறிவுத்திறன் கொண்டு கலின் பெற ஒருங்கு சேர்த்து ஒழுங்கு படுத்தும் சிறந்த அறிஞராயும் இருந்தார். அவர் பொறுப்பாளராயிருந்த காலத்தில இக காட்சிச் சாலையின் ஒவ்வொரு பிரிவும் முறறிலும திருத்தி யமைக்கப்பட்டது. அவருடைய காலத்தில் இகாட்சிச சாலை யில் இப்பொழுதுள்ள நிலைமையில் காட்சி தரும செப்புச் சிலைப் பிரிவு, சிற்பக்கலைப் பொருள்கள் பிரிவு, மானிட வர்க்கங்களின் தோற்றம் வளர்ச்சி, வரலாற்றுப் பொருளகள் பிரிவு, பூதத் துவப் பொருள்கள் பிரிவு, மிருகக் காட்சிப் பிரிவு, தாவர வர்ககக் காட்சிப் பிரிவு ஆகிய யாவும அதிகமாக அபிவிருத்தி செய்யப்படடன. ரசாயனங்களின் உதவியால் பொருளகள கெட்டுப்போகாமல் பாதுகாக்க முடியும என்பதை மிகவும தீவிரமாய் உணர்ந்த அவா, இப்பொருட்காட்சிச்சாலையிலுளள பொருள்களை நீண்ட காலம் பாதுகாப்பதற்கு ரசாயனப் பரீட்சைக் கூடம ஒன்றை ஸ்தாபித்தா. அவா காலத்தில காட்சிப் பொருள்களைப் பற்றிய ஆராய்சசிகள் அதிகமாய நடத்தப்பட்டன. அவ்வாராய்ச்சிகளின் பயனுய் இக்காட்சிச் சாலையிலிருந்து அநேக அலுவலகப் பிரசுரங்கள் வெளியிடப் பட்டன. அவ்வாறு அவர் காலத்தில வெளியிடப்பட்ட பிரசுரங்கள் யாவும் அவா ஆற்றிய அரும்பணிகளுக்கு இனனும் நிலையான பத்திரக் குறிப்புகளாய் இருக்கினறன. இக்காட்சிச் சாலையின் அபிவிருத்தித் திடடதில கன்னிமரா புத்தகசாலைக்கும் ஒரு முக்கியஸ்தானம அளிக்கப்பட்டது. 1951-ம் வருஷத்தில் சென்னைப் பொருட்காட்சிச சாலை அதனு டைய நூற்றாண்டு விழாவை மிகவும கோலாகலத்துடன் கொண்டாடியது.

நோக்கமும் பொருள்களும்.—இக்காட்சிச் சாலை சிற்பக்கலை, புதைபொருள்கள், உயிர் வர்க்கங்கள், மிருக வர்க்கங்கள், தாவர வர்க்கங்கள், பூதத்துவப் பொருள்கள், நாணய வகைகள் ஆகிய காட்சிப் பொருள்களைச் சேகரித்து வைப்ப தற்காக அமைக்கப்பட்டது. பின பகுதியிலுள்ள கட்டடத்தின் முதல் அறையில் சில படங்கள சேர்த்து வைக்கப்பட்டிருக் கின்றன. அவற்றில ராஜ ராஜ வர்மா, ரவி வாமா, துஷந்தர் ஆகியோரும மற்றும தற்காலச் சித்திர வலலுநரா பலரும் எழுதிய எண்ணெய் வர்ணச் சித்திரங்களும இதர வகைச் சித்திரங்களும் இருப்பதுடன், கடப்பை, கர்நூல், தஞ்சாவூர், மைசூர் ஆகிய இவ்விடங்களுக்குரிய சித்திரங்களின் வழி வழி வரலாற்றை விளக்கும் பழங்காலப்பாணிகளிலுள்ள சித்திரங் களும் இருகினறன.

அதற்கு அடுத்துள்ள அறைகளில் விசாலமான அறையில் மிருக வர்க்கங்களைச் சோந்த காடசிப் பொருள்கள் வைக்கப படடிருக்கின்றன. அதற்கு இடப்புறமாக மூன்று விசால மான அறைகளும் ஒரு சிறு அறையும் இருக்கின்றன. அந்த சிறு அறையில முதுகெலும்புடைய பிராணிகளின் வகைகள் இருகினறன. இதை விட்டு மேலும் சென்றால், மூனறு அறைகளில் மிருகங்களின் உடற்கூறுகளின ஒறறுமை வேறறுமைகளை விளக்கும் காட்சிப் பொருள்கள் இருக்கினறன. அடுததாற்போலப் பறக்கும் ஜந்துகளுக்குப் பறப்பதற்கு அனுகூலமாய அமைந்துள்ள உடறகூறுகளை விளகும் காட்சிப் பொருளகளும், சில பிராணிகளின உடலி லுள்ள துடுப்பு, உரோமம், தோகை, பற்கள, கொம்புகள், முதுகெலும்புள்ள பிராணிகளின தோலிலிருந்து எடுத்த ஜவ்வு முதலியனவும் வைக்கப்படடிருக்கின்றன. பல வகைபபட்ட மிருகங்களின் எலும்புக்கூடுகளும் கொம்பு களின் அமைப்பிலுள்ள விததியாசததை விளக்கிக் காட்டுவதற்கு அனுகூலமாக எருமைகள், இதர கால நடைகள, வெள்ளாடுகள் ஆகிய இவைகளின் மணடை ஓடு களும் வைக்கபபடடிருக்கின்றன. முதுகெலும்புள்ள பிராணி வகைகளின காட்சிக கூடத்தில் தெனனிந்திய விஷப்பாமபு கள், விஷமிலலாத பாம்புகள், ஆச்சரியமான பறக்கும் பாம்பு, பச்சோந்தி, மற்றும் இயற்கைச் சுற்றுப்புறங்களில காணும் பல வகைப பிராணிகள முதலியன காட்சிக்கு வைக்கப்பட்டுளளன. பூமியின தளத்திலுள்ள மூன்று அறைகள் மீனகளின பல வகைகளுக்கும் முதுகெலும்புள்ள எலலாப் பிராணிகளுக்கு மாக ஒதுக்கப்பட்டிருக்கினறன. இவைகளில முதல அறையில பவள வகைகளும சில புல்லுருவி இனங்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் பொருள்களும் படங்களின் விளகக துடன் வைக்கப்பட்டிருகினறன. இது அங்கே ஒரு மூதனமையான இடததில் வைக்கப்படடிருக்கிறது. இதற் கடுதத காட்சிக கூடத்தில சில பிராணிகளின் மேல் ஓடுகள் (நத்தைக் கூடு போன்றவை), கடல் நண்டுகள், நாட்டு நண்டு கள, பூரான்கள், சிலந்திகள், பூச்சி இனங்கள முதலியன இருகினறன. மூன்றாவது அறையில் மீன இனங்கள் இருக கினறன.

தரையின் தளத்திலுள்ள பாக்கி இரண்டு அறைகளில தெனனிந்தியச் செடிகளின உடலமைப்பு, தராதரங்கள், பொருளாதார முக்கியததுவம் ஆகிய இவற்றின் விளக்கப் படங்களுடன தாவர வர்க்கங்கள் வைகபபட்டிருக்கினறன. மேலும், தென்னிந்தியாவில் உததிரங்களுகு உபயோகப்படும் மர வகைகள், சணல் எடுக்கப்படும் செடிகள, மூலிகை (மருந்துச) செடிகள் முதலியனவையும் இருக்கினறன.

அதற்கடுதது மத்திய அறையின பின்னால தரையின தளத்திலுள்ள ஓர் அறையில் யானைகள் சமபந்தப்பட்ட ஒரு சிறு காட்சிக்கூடம் இருக்கிறது.

இதற்குப் பினபுறமுள்ள காட்சிக்கூடத்தில் பூதத்துவக் காட்சிப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கினறன. அதில தென னிநதியாவில காணப்படும் முக்கியமான பாறற இனங்கள், தாதப பொருளகள, மண்ணோடு மணணாய்ப புதைந்து கிடந்து மட்கிப்போன செடி கொடி. மிருகங்கள ஆகியவற்றின் பழங் காலச சினனங்கள், தங்கம கலநத மண்ணிலிருந்து தங்கத் தைப பிரித்தெடுக்கும் மூறைகள, நெல்லூர்ச சுரங்கங்களி லிருந்து கிடைத்த அபிரகம், கட்டடதுக்கு உபயோகப்படும் கல வகைக் கல் இனங்கள முதலியவை இருகின்றன.

மத்திய அறைக்கு வலப் பக்கம, மிருக வர்க்க பொருள் கள் இருக்கும் அறையை ஒத்த தரையின் தளத்தி லுள்ள அறை ஒனறில புதைபொருட் காட்சிகூடங்கள் இருகின்றன. முதற்கூடத்தில சைன மதப் பழங்காலச் சிற்பங்கள் இருக்கின்றன. அவைகளில் தனவுல பாடு என்ற

இடத்தில கிடைத்த புகழ் பெற்ற சைன சிற்பங்கள் இருக்கின்றன. அதிலிருந்து மேலும் சென்றால், அமராவதி நதி, கிருஷ்ணா நதிப் புரவுகள ஆகிய புததமதம் பரவியிருந்த இடங்களிலிருந்து கணடெடுக்கப்பட்ட வைரக கற்கள் முதலியனவும, அதன் பினபக்கமுள்ள விசாலமான அறையில் புத்த மதச் சிற்பங்களும் இருகினறன. அவைகளில் கோலி எறை இடத்தில் கண்டெடுதத சிற்பங்கள மிகவும் முக்கியமானவை. பல்லவர், சோழர், தமிழ, கன்னட ஜில்லாகளின் பிற்காலச் சிற்பங்களும் கட்டடக்கலைச் சிற்பத் துணடுகளும் இருக்கின்றன. இதன் வழியே ஒரு ஒடுக்கமான தாழ்வாரம செலகிறது. அததாழ்வாரத்தில் புதைபொருட்பிரிவு புதிதாக விஸ்தரிக்கப்பட்டதை அறிவிக்கும் ஞாபகார்த்தக் கல் வெட்டுகள் இருக்கினறன. தரையின தளத்திலுள்ள புதிதாக விஸதரிக்கப்பட்ட அறையொன்றில் உளள புதைபொருட்பிரிவில் தமிழர், சாளுக்கியரின் பற்பல கால வரைகளைச் சேர்ந்த பாணிகளின் பொருள்களும், வடஇந்தியப் பாணிகளைச் சேர்ந்த பொருள்களும் இருக்கின்றன. இபபிரிவில, பிராமி, தமிழ், கிரந்தம், தெலுங்கு, கன்னடம், நாகரி மொழிகளிலுள்ள எழுதுகளின் படிப்படியான வளர்ச்சி, தாழ்ச்சி விவரங காட்டும் குறிப்புகளும் உதாரணங்களும் காட்டப் பட்டிருக்கின்றன. இதறகுப் பின்னல் பெரிய அறைகுச் செல்லும் தாழ்வாரதில் மொஹஞ்சதரோ விலிருந்து கொண்டுவந்த சரித்திர காலததுக்கும் முற்பட்ட பழங்காலப் புதைபொருள்கள் வைக்கபபட்டிருக்கின்றன. இவைகளில் ஒரு வகைக் களி மண்ணும் மணலும் கலந்து செய்து சுட்ட பழங்கால மண்பாண்டஙகளும, நாணய அசசுகளும் இருக்கின்றன. இவை இக்காட்சிக் கூடத்திலுள்ள மிகவும் முக்கியமான பொருள்களாய் இருக்கின்றன. இவை செப்பேடுகளுடன் சேர்த்துத் தனியாக வைக்கப் பட்டிருக்கின்றன. புதிதாக விஸ்தரிகபபட்ட கட்டடத்தின் வாசலருகே கோவில்களின் கட்டடக் கலைகளின் வரலாற்றைக் காட்டும போட்டோக்கள் வைக்கப்பட்டிருகின்றன.

பக்கத்திலுள்ள கட்டடத்திலிருந்து கன்னிமாரா புத்தக சாலையால் பிரிக்கப்பட்டு மற்றொரு முகப்புக்கட்டடம் இருக்கிறது. அதறகுத் தனி வாயில் இருக்கிறது. அக் கட்டடத்தில் தரையின் தளத்திலுள்ள அறைகளில் சரித்திர காலத்துக்கு முற்பட்ட பழங்காலப் பொருள்கள் வைக்கப்பட்டிருப்பதோடல்லாமல், மிகவும் அழகான போர்க் கருவிக் கூடமும் இருக்கிறது. இக்கூடத்தில் தஞ்சாவூரிலிருந்தும் சென்னை ஜியார்ஜ் கோட்டையிலிருநதும்கிடைத்த போர்க் கருவி வகைகள் வைகைகப்பட்டிருக்கின்றன. ஜியாஜ் கோட்டையிலிருந்து கிடைத்த போர்க் கருவிகளில சிலவற்றை அக்கோட்டையிலே இருககும் (1948–ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட) கோட்டைப் பொருட்காட்சிச் சாலைக்குக் கொடுத்துள்ளனர். சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்துப் பழம்பொருட்காட்சிக் கூடத்தில் ஆதி காலத்தைச் சேர்ந்த கற்கருவிகளும், உலோகக் கருவிகளும், மண் கலங்களும், குன்றிமணிகள் முதலியனவும் இருக்கின்றன. அதற்கடுத்த அறையில் ஆதி குடிகள் இரும்பினால் செய்த பொருளகளை உபயோகித்த காலததைச் சேர்ந்த இரும்புப் பொருளகள் இருக்கினறன. இவற்றில் ஆதிச்சநலலூர், பெரும்போர் முதலான இடங்களிலிருந்து கணடெடுக்கப்பட்ட சவ அடக்கப் பெட்டிகளும, மண் தாழிகளும், இரும்புக் கருவிகளும், கடப்பையிலிருந்து கிடைத்த செம்மறியாட்டின் வடிவதத்தில மண்ணால் செய்து சுட்டெடுக்கப்பட்ட சவப் பெட்டி ஒன்றும் இருககின்றன. சரித்திரததிற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த புதைபொருட்காட்சிக்கூட வாயிலருகே ஒரு பக்கத்தில் பழங்காலத்தைச் சேர்ந்த பெரிய பலி ஸ்தம்பம் ஒன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. அடுத்த பக்கத்தில் பெட்டிகளில் நிழற்காடசிகளுக்கு உபயோகிக்கப்பட்ட தோலால் செய்யப்பட்ட உருவங்கள் இருக்கின்றன. தரையின் தளத்திலுள்ள நான்கு அறைகள் புதைபொருட்பிரிவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் மூன்று அறைகளில் உலோகச் சிலைகளும், மரத்திலும் தந்தத்திலும் செதுக்கப் பட்ட சித்திரவேலைப்பாடமைந்த பொருள்களும, மற்றொன்றில் உலோகச் சிலைகளும் சிறுத் தேசத்து மண்ணால் செய்யப்பட்ட பீங்கான் உருவங்களும் இருக்கின்றன. தென்னிந்திய இசைக்கருவிகளின் வகைகளும் நேர்த்தியாகத் தோநதெடுதது வைக்கப்பட்டிருப்பதோடு ஆதி காலப்பழங்குடி மக்கள வசித்த குடிசைகளின் மாதிரிகளும் வைகைகப்பட்டிருக்கின்றன. எழுதுவதற்கு உபயோகிகபபட்ட கருவிகளும் சாதனங்களும் மலையாளப் பேய்க் கூத்தாடிகளின் கூத்தாட்டங்களைக் காடடும் ஒளி ஊடுருவதத்தக்க கணணழித்தாள்களிலமைந்த படங்களும், ஆதிகுடிகள் நெருப்பு உண்டாகுவதற்கு உபயோகித்த பொருளகளும், மந்திரவாதிகள் உபயோகித்த பொருள்களும், மனித வர்க்க வரலாறறை அறிவிக்கும் முகியப் பொருள்களாய் இருக்கினறன. அவறறுடன் சமீப காலத்தில் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட மலையாளத்துக்கதகளி கூத்துக்களைக் காட்டுமு அக்கூததாடிகளின் சரி உயரத்திலுளள மாதிரி உருவங்களும் இஙகே இருக்கின்றன.

இக்காட்சிச் சாலையில் இருக்கும் தென்னிந்தியச் சிலைகள் முக்கியமாய்ப் பார்ககதக்கவை. எனெனில், அவைகள் எராளமாய் இருப்பதோடு மட்டுமல்லாமல், சிறபக் கலையின் அழகை எடுததுக்காட்டக் கூடியனவாயும் பல ரகங்களாயும் இருக்கின்றன. தேர்ந்தெடுக்கபபட்ட புத்த, சைன, இந்து மதச் சிலைகளும், இந்துமதச் சிலைகளில் சைவம், வைணவம் ஆகிய இரு பிரிவுகளைச் சேர்ந்த சிலைகளும் இருக்கின்றன. படிக்கட்டுககு மேலேயுள்ள ஓர் அறையில் தாண்டவமாடும் சிவனுடைய சிலைகள் பல விதங்களில இருக்கினறன. ஒரு சிலை உலகத்திலேயே மிகச் சிறந்த சிலையாயிருக்கிறது. உலோக வகைச் சாமான்கள் வைக்கப்பட்டுளள அறையில் தெனனிந்திய விளக்கு வகைகள் வீடுகளிலும் கோயில்களிலும் பூஜைக்கு உபயோகிக்கும் சாமான்கள, சீப்புகள், பெடடிகள், தட்டுகள் முதலியன இருக்கினறன. ஒப்புமை கவனிப்பதற்காக அவற்றுடன தீபேத்து, நேப்பாளத தேசங்களின் சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. பழங்காலக் கோயில் ரதங்கள், உத்திரங்கள், வாயிற்படியின் மேல் நிலைகள் முதலியவைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட இந்தீத் தெய்வங்களின் உருவங்கள், அழகாகச் செதுக்கப்பட்ட மரச் சித்திர வேலைப் பொருளகள் முதலியன மிக நேர்த்தியான முறையில் வைக்கப்பட்டிருக்கின்றன. சந்தனக் கட்டையால் செய்யப்பட்ட இநதுத் தெய்வஙகளின் உருவங்களும் மற்றும் சில உருவங்களும இருகினறன. மேடையில இருக்கும் ஓர் அறையில இரும்புப் பெட்டிகளில் எராளமான நாணய வகைகள் இருக்கின்றன. காட்சிச்சாலை இருக்கும் காம்பவுண்டுக்குள் கூரை போடப்பட்ட இடம் ஒன்றில கல் வெட்டுகள் எராளமாய் வைக்கப்பட்டிருக்கின்றன.

தேசியக் கலைக்கூடம்

விக்டோரியா கைத்தொழிற்பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த விக்டோரியா ஞாபகார்ததக் கட்டடத்தை வாடகைக்கு எடுத்து, அப்பெரிய கட்டடத்தில் தேசீயக கலைப் பொருட்கூடம் ஒன்று சமீப காலத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. 1951-ஆம் வருஷத்தில் சென்னைப் பொருட்காட்சிச்சாலையின் நூற்றாண்டு விழாவினபோது இந்தக் கலைப் பொருட்கூடம் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சென்னைப் பொருட்காட்சிக்கு அதிகமாகச் சேர்ககப்பட்ட கலைத்திறன் மிகுந்ததும தேர்ந்தெடுக்கப்பட்டதுமான சில பொருள்கள் இக்கலைகூடதில் இருக்கின்றன. திருவாலங்காட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட நடராஜரின் செம்புச் சிலை, வடக்குப் பனையூரிலிருந்து கொணர்ந்த ராமர், சீதை, லட்சுமணர், ஹனுமார் சிலைகள் ஒரு தனிக் கூட்டாக அமைந்த சிலை, செதுக்கு வேலையின் திறனை எடுததுக்காட்டும் சில மரச் சிற்பங்கள், தந்த வேலைப் பொருள்கள், உலோகப் பொருள்கள், பூச்சித்திர வேலைப் பாடுகளமைந்த படுக்கை விரிப்புகள், துணி வகைகள், முகலாய, ரஜபுத்ர, தக்காண, தஞ்சாவூர், மைசூர்ப் பாணிச் சித்திர வகைகளும் ரவிவர்மா உட்பட்ட தறகாலச சித்திர வல்லுனர்கள் எழுதிய அழகான சித்திரங்களும் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நல்ல விளக்கு வெளிச்சததுடன் கூடிய சித்திர கூடத்தில் அலங்காரமாய் வைத்திருக்கிறார்கள்.

விளக்க நடவடிக்கைகள்:—காட்சிச்சாலைக்குச் சொந்தமான புத்தகசாலை இல்லை. ஆயினும், இந்தியாவிலுள்ள மேலான புத்தகசாலைகளில் ஒன்றாய் விளங்கும் கன்னிமாரா பொது மக்கள் புத்தகசாலை இக்காட்சிச் சாலையிருக்கும் அதே இடத்தினுள்ளே இருக்கிறது. அப்புத்தகசாலையில் காட்சிச் சாலை ஊழியர்கள் போய்ப் படிக்கலாம். காட்சிச் சாலையி லுள்ள பொருள்களைப்பற்றி மாணவர்கள் படிப்பதற்காக அவர்களைக் கூட்டங்கூட்டமாய்க் கூட்டிவந்து காண்பிக்கும்படி கல்வி ஆசிரியர்களுக்கு இங்குள்ள பொருள்களை நேரில் எடுத்துக்காட்டி விளக்கம் தெரிவிக்கப்படுகிறது. தவிரவும், பள்ளிக்கூடங்களிலேயும் இத்தகைய பொருட்காட்சிச் சாலை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்துடன் ஆசிரியாகளுக்குப் பொருட்காட்சிச்சாலை அமைத்தல், அதை விருத்தி செய்தல் ஆகியவற்றில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. காட்சிசாலையைப் பார்க்க வரும் பள்ளிச் சிறுவர்கள், கல்லூரி மாணவர்கள், பட்டப் படிப்பு முடிந்து மேல் படிப்புப் படிக்கும் மாண வர்கள் ஆகியோருக்கு இதன் காவலரும் உதவிக் காவலரும் இங்குள்ள பொருள்களைப் பற்றி விளக்கம் கூறுகிறார்கள். அடிக்கடி இக்காட்சிச்சாலை அதிகாரிகள் சொற்பொழிவுகளும் நிகழ்த்துகிறார்கள். காட்சிச்சாலையினுள் நாடகசாலை ஒன்று தனியாய் இருக்கிறது. அது இந்தியாவிலே பிரசித்தி பெற்ற நாடகசாலைகளுள் ஒன்றாய்த் திகழ்கிறது. கூடிய சீக்கிரம் இங்கே குழந்தைகளுக்கு ஆர்வம் அளிக்கும் பொருள்களைக் கொண்ட பொருட்காட்சிச்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படும். கல்விக் காரியங்களுக்கு உதவியாய் இருக்கும்பொருட்டு மின்சார ஒளி விளக்குத் திரைப்படக் கண்ணாடிகள் இங்கே ஏராளமாய் இருக்கின்றன. திரைப்படம் காட்டும் இயந்திரம் ஒன்றும் இங்கே இருக்கிறது. அதன் மூலம் கல்வி சம் பந்தப்பட்ட நிழற்காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. இங் குள்ள விற்பனை நிலையத்தில் போட்டோக்கள் விற்கப் படுகின்றன. நாணய வகைகளைப்பற்றி மாணவர்கள் படிப் பதற்கு ஊக்கம் ஊட்டப் பலவகை நாணயங்களின வார்ப்புத் தயாரிக்கப்பட்டுப் பள்ளிக்கூடங்களுககு விற்கப்படுகிறது. அடிக் கடி பருவகாலப் பொருட்காட்சி விழாக்களும் நடத்தப் படுகின்றன. இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உள்ள பொருட்காட்சிச்சாலைகளுடன் பரிவர்த்தனை முறையில் வெளியீடுகள் மாற்றிகொள்ளப்படுகின்றன. அவ்விதமான பரிவர்த்தனை மூலம் கிடைக்கப்பெறும் வெளியீடுகள் எல் லாம் கன்னிமாரா புத்தகசாலையில் சேர்த்து வைக்கப் படுகின்றன. கலைக்கூடங்களில இருக்கும் பொருள்களைப் பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும், தெலுங்கிலும் விளக்கச் சீட்டுகள் வைக்கபட்டிருக்கின்றன. யோக்கியதா பத்திரப் பரீட்சைகளுக்கும், உயிர் வர்க்க சாஸ்திரப் பட்டப் பரீட்சை களுக்கும் பயிலும் மாணவர்கள் இக்காட்சிச் சாலையைப் பார்க்க அந்தந்தக் கல்லூரிகளின் பிரதிநிதிக்கூட்டமாக வருவார்கள். அவ்வாறு வருபவர்களுக்கு இககாட்சிச்சாலை மின் மேற்பார்வையதிகாரி சில சொற்பொழிவுகள் ஆற்று கிறார். இங்குள்ள தேச சரித்திரக் காட்சிப் பொருட்கூடம், பிராணி நூல் பொருட்காட்சிக்கூடம் ஆகியவைகளை மாண வர்கள் தங்கள் கல்விக்காகப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

தொகுதி. வரிசை எண்.	விவரம்.	பக்கம்.	படம்	விலை. ரூ. அ. பை.
	பொதுப் பிரிவு (உயிர் வர்கப பிரிவுக்கும் புதைபொருள் பிரிவுக்கும் முறையே தனித்தனி தொகுதிகளுடன்).			
தொ. 1. எண் 1 1929	குண்டூர் ஜில்லா, கோவி கிராமத்துக்கு அருகிலுள்ள பௌத்த மத ஞாபகச் சின்னக் கட்டடத்திலுள்ள பௌத்த மதச்சிற்ப வேலைப் பொருள்கள்—எழுதியவர் T. N. ராம சந்திரன், M.A.	44	4	2 12 0
தொ. 1. எண் 2 1932	சென்னைச் சர்க்கார் பொருட்காட்சிச் சாலையிலுள்ள தென்னிந் திய உலோகச் சிலைகளின பட்டியல்—எழுதியவர் T. N. ராமசந்திரன், M.A.	144	23	5 8 0
தொ. 1 எண் 1 1930	திருப்பருத்திக்குன்றமும் அதன கோயில்களும்–ஜைனர்களின் அளவைகளும் அவற்றின் காலமும், படைப்பின அமைப்புப் பாகங்கள் முதலியவற்றின் விளக்கமும் ஆன்மாக்களின் தராதரமும் ஆகிய அனுபந்தங்களுடன்—எழுதியவர் T. N. ராமசந்திரன, M.A.	260	37	11 4 0
தொ. 2. எண் 1 1930	ஆதிச்சநல்லூர் மண்டை ஓடுகள்—எழுதியவர் சுக்கர் மேன், M.A., M.R.C.S., L.R.C.P. (பேராசிரியர் E. எலி யட்ஸ்மித்து, F.H.S. முகவுரையுடன்)	24	3	1 6 0
தொ. 2 எண் 1 1931	ஸ்ரீவைஷ்ணவ பிராமணர்கள்—எழுதியவர் திவான்பகதூர் K. ரெங்காச்சாரி, M.A.,L.T.	158	12	5 12 0
தொ. 2. எண் 3 1931	சென்னைச் சர்க்கார் பொருட்காடசியிலுள்ள இசைகருவிகளின் பட்டியல்—எழுதியவர் P. சாம்பமூர்த்தி, B.A., B.L. ..	25	9	2 8 0
தொ. II. எண் 4 1937	மலபார் நாயாடி வகுப்பினர் ஜன சமூக உடற்கூற்று வர லாறு—எழுதியவர் A. ஐயப்பன், M.A.	141	12	3 2 0
தொ. III. எண் 1 1934	சிற்ப சாஸ்திரம் அங்கீகரிக்கும கோயில் கட்டடக் கலையின மூன்று முக்கியமான விதங்கள்—எழுதியவர் F.H. கிரேவ்லி, D.Sc.யும், T.N. ராமசந்திரன், M.A.யும்.	26	2	1 0 0
தொ. III எண். 9 1936.	இந்தியக் கட்டடக் கலையின சுருக்க வரலாறு—எழுதியவர் F.H. கிரேவ்லி, D.Sc.	23	1	0 14 0
தொ. III. எண். 3 1938.	சென்னைச சர்க்கார் பொருட்காட்சிச் சாலையிலுள்ள வெனிஸ் நகரத்து நாணயங்களின் பட்டியல்—எழுதியவர் G. ஆரோவமுதன், M.A.,B.L.	59	1	1 8 0

தொகுதி. வரிசை எண்.	விவரம்.	பக்கம்.	படம்.	விலை. ரூ. அ. பை.
(1) (2)	(3)	(4)	(5)	(6)
தொ. III எ. 3 1938.	புதை பொருட்காட்சிக் கூடங்களின் விளக்கப் புஸ்தகம் —தென்னிந்தியக் கோயில் கட்டடச் சிற்ப வேலைகளுக்கும் கலைகளுக்கும் அறி முகநூல்—எழுதியவர் F.H. கிரேவ்லி D.SC.-யும் C. சிவராம மூர்த்தி M.A.-யும், மற்றும் சில பொருட்காட்சி காவலர்களும்.	48	4	1 0 0
தொ. III எ. 3 1939.	இந்திய சிற்பக் கலையின் விளக்கப் படங்கள் அதிகமாகத் தென் னிந்திய சிற்பக் கலைகளைப் பற்றி, புதைப்பொருட் காட்சிக் கூட விளக்கத்துடன் வெளியிடுபவர் F H. கிரேவ்லி, D.Mc- யும் C. சிவராமமூர்த்தி, M.A.-யும்.	..	45	1 0 0
தொ. IV 1942.	சென்னைச் சர்க்கார் பொருட்காட்சிச் சாலையிலுள்ள அமரா வதிச சிற்பங்கள்—எழுதியவர் C. சிவராம மூர்த்தி, M A.	376	65	14 8 0
தொ. IV 1944.	இரவர்களும், கலைப்பண்பட்டினை மாறுதல்களும்—எழுதியவர் A. ஐயப்பன், M.A. Ph.D. லண்டன்).	204	12	16 0 0
தொ. IV. எண்.1 1951.	தோடர் ஆசார விதிகளின்படி கையாளக்கூடிய சுமேரிய நாட்டுப் பழங்கால நீலப் பொருள்கள்—எழுதியவர் மேனமை தங்ய கிரீஸ் (ஹவரசர் பீட்டர், M.A. (Hry) Ltd.	24	10	6 4 0
தொ. III. எண். 4.	இந்தியக் கல் வெட்டுச் சாசனங்களும், தென்னிந்திய எழுத்து வகைகளும்—எழுதியவர் C. சிவராமமூர்த்தி, M.A.	..	..	14 8 0
1952.	சென்னைச் சர்க்கார் பொருட்காட்சி நூற்றாண்டு விழா ..	158	12	16 10 0
1952.	பௌத்த மதப் பழங்காலப் பொருள்களின் விளக்கம் —எழுதியவர் A. ஐயப்பனும், P. R. ஸ்ரீனிவாசனும்.	58	..	1 10 0
1953.	வழி வழியாக வந்த இந்திய நாணயங்கள் ..	17	3	0 8 0
தொ. VIII. எண். 1 1954.	நாசப்பட்டினம் செம்புச் சிலைகள்—எழுதியவர் T. N. ராம சந்திரன், M. A.	..	..	0 6 0
தொ. VII எண். 2. 1957.	ஆரம்ப காலக் கிழக்குச் சாளுக்கியர் சிற்பக்கலை—எழுதியவர் C சிவராமமூர்த்தி, M.A.	71	35	6 60 ந. பை

பட்டியல்கள் பழைய தொகுதிகள்

		விலை: ரூ. அ. பை.
1	சரித்திர காலத்துக்கு முற்பட்ட பழம்பொருள்களின் பட்டியல் தொகுத்தவர்—R. புரூஸ் பூட், 1901.	5 4 0
2	பூட் (Foote) என்பவர் சேர்த்த சரித்திர காலத்துக்கு முற்பட் டவை—தொகுத்தவர் R. புரூஸ் பூட், 1914.	2 0 0
3	ஆதிச்ச நல்லூர் பெரும்போ ஆகிய இடங்களில் கண் டெடுத்த சரித்திர காலத்துக்கு முற்பட்ட பழம்பொருள்கள் பட்டியல், தொகுத்தவர், A. ரீயா, 1915.	1 8 0
4	பூட் சேர்தத சரித்திர காலத்துக்கு முற்பட்டனவும் சரித்திர காலத்துக்கு மூலமுமான பழம்பொருள்கள் அவற்றைப் பற்றிய குறிப்புகளுடன் அவைகள் பரவி இருந்த இடங்களின் விவரமும்—எழுதியவர் R. புரூஸ் பூட், 1916.	9 12 0
5	பொருளாதாரக் காடசிப் பொருள்கள் பிரிவில் மரவேலைப் பொருள் தவிர மற்றுள்ள காட்சிப் பொருள்களின் பட்டியல் —தொகுத்தவர் S. N. சந்திரசேகரய்யர், 1921.	2 2 0
6	ஹைதர் அலி திபபு சுல்தான ஆகியோர் நாணயங்களின் பட்டியல்—தொகுத்தவர் J. R. ஹெண்டர்சன், 1921.	4 0 0
7	மானியச் செபபேடுகளின் பட்டியல்.	0 14 0
8	சென்னை மாகாணத்திலுள்ள பாஷைகளிலும், சிற்சில குறிப் பிட்ட இடங்களில பேசப்படும் பாஷைகளிலுமுள்ள கிராம போன் ஒசைத் தட்டுகளின் பட்டியல், அவ்வத் தட்டுகளி லுள்ள இசைகளுடன்.	1 4 0
9	தென்னிந்தியத் தவளைகள் தேரைகள் மற்றும் அவ்வினப் பிராணிகளின் பட்டியல்—தொகுத்தவர் E. தர்ஸ்டன், 1888.	2 8 0
10	உயிர்வர்க்க வாலாற்றுப் பொருடகாட்சிக்கூடம், தாதுப் பொருள்கள் காட்சிக்கூடம் ஆகிய இவற்றிலுள்ள காட்சிப் பொருள்களின் விளக்கம், 1890.	0 2 0
11	விஞ்ஞான வரிசைகள் எண் 1- ராமேஸ்வரம் கடல் வாழ் பிராணிகளின் பூர்வாங்க அறிக்கை, 1887.	0 10 0
12	டில்லிச் சுல்தான்களின் நாணயங்கள்—தொகுத்தவர் E. தர்ஸ்டன்.	0 3 0

தொகுதி. (1)	வரிசை எண். (2)	விவரம். (3)	பக்கம். (4)	படம். (5)	விலை. (6) ரூ. அ. பை.
		அலுவலக வெளியீடுகள் (பழைய வரிசை)			
	1	மன்னார் குடாக்கடலிலுள்ள சங்கு மீன பிடி துறைகள்—வெளியிட்டவர் E. தர்ஸ்டன், 1895.	..	..	1 4 0
	3	ராமேஸ்வரம் தீவும் மன்னார் குடாக்கடலில் வாழும் பிராணி வகைகளும்—வெளியிட்டவர் E. தர்ஸ்டன், 1 95.	..	..	1 8 0
3. தொ. II.	எண் 1.	மானிட வர்க்க வரலாறு, நீலகிரியிலுள்ள படகர்களும் இருளர்களும், மலபாரிலுள்ள பணியர்கள், சைனக் காரனுடைய தமிழ்ச் சிலம்ப ஒனறு, ஜொமன் மணடை ஒடு ஒனறு, குறும்ப நாட்டுக குறும்பா, பலாபலனகளின் விவரம் – எழுதியவர்—E. தாஸ்டன், 1897.	..	..	2 0 0
4. தொ. II.	எண். 2.	மானிட வர்க்க வரலாறு சென்னை மாகாணத்திலும் மலபாரி லுமுள்ள யூரேஷியர்கள். அவர்கள் பச்சை குத்துவதைப் பற்றிய குறிப்புக்களுடன—எழுதியவர் E. தர்ஸ்டன, 1898.	..	..	1 0 0
5. தொ. III.	எண. 2.	மலபார் தென கன்னடதிதிலுள்ள கடல் மீன் பிடிதுறைகள் —எழுதியவர் E. தர்ஸ்டன, 1900.	..	..	1 4 0
6. தொ. III.	எண். 3.	மானிட வர்க்க வரலாறு, மலபாரிலுள்ள நாயர் வகுப்பினர் —எழுதியவர் F. பாஸெட், 1901.	..	..	1 8 0
7. தொ. IV.	எண். 2.	மானிடவாக்க வரலாறு, திராவிடர் தலையமைப்பு, நெல்லூர் எலுதிகள், 1902.	..	..	1 0 0
8. தொ. IV.	எண். 3.	மானிட வர்க்க வரலாறு, தென்னிநதியாவிலுள்ள சில திருமணப் பழக்க வழக்கங்கள, அங்கப பழுதுகள செய்தல், அழகைக குறைததல, யுராலியர், சோழகா, இருளாகள், கஞசம் ஜில்லாவில் தீக்குழியில் நடத்தல, வட்டாரமொழி ஆரமபப பள்ளிகளில் சரீர சமபந்தமான தண்டனைகள் முதலிய விவரங்கள், 1903.	..	..	0 12 0
9. தொ V. எண்.	1.	மானிட வர்க்க வரலாறு—யுராலியர் சோழகர்களின் மனக் கற்பனைகள். தென்னிந்தியாவிலுள்ள மேலும் சில திருமணப பழக்க வழக்கங்கள், அலகு குத்துதல், பாளையம் முதலியன, 1903.	..	..	1 0 0

வேலை நேரம்.—வெள்ளிக்கிழமை தவிர மற்றெல்லா நாட்களிலும் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருகும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—பொருட்காட்சிச் சாலையும் தேசியக் கலைக் கூடமும் சூப்பிரண்டெண்டு ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வரு கின்றன. காட்சிச்சாலைக்கும் கலைக்கூடத்துக்கும் சர்க்காரால் தனித்தனி குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

ஊழியர்கள்.—சூப்பிரண்டெண்ட் டாகடர் S. T. சததிய மூர்த்தி, M. A., D. Sc.

காவலர்கள்.—மானிட வர்க்க வரலாற்றுப் பிரிவு—P. R. ஸ்ரீனிவாசன், M. A., தாவர பூததுவப் பிரிவு—ஸ்ரீ M.S. சந்தரசேகர், B. Sc., நாணய வர்க்கப் பிரிவு—குமாரி R. வனஜா, M. A., M. Litt., ரசாயன மூலம் பொருள்கள் பழுதுறுமல் காக்கும் பிரிவு—H. ஹரிநாராயண, M.A., B. Sc. (Tech.)

உதவிக்காவலர்.—சிற்பக் கலை; புதைபொருட்பிரிவு—குமாரி பத்மா, B. A., B.T. அலுவலக உதவியதிகாரி; மூன்று மேற்பிரிவுக் குமாஸ்தாக்கள்; ஆறு கீழ்ப்பிரிவு குமாஸ்தாக்கள். டைப் அடிப்பவர், தோலை பதபடுத்திப் பஞ்சடைக்கும் உயர்தரத் தொழில் நிபுணர், அதே தொழில் இரண்டாம்தர நிபுணர்: போட்டோ பிடிப்பவர், உதவிப் போட்டோ பிடிப்பவர், காட்சிச் சாலையையும் நாடக சாலையை யும் பழுதுறுமல் காப்பவர், அச்சடிப்பவர், எவினதைச் செய்யும் எட்டு டபேதார்கள, 37 வேலைக்காரர்கள், 11 காவற் காரர்கள், தோட்ட மேஸ்திரி, இரண்டு தோடக்காரர்கள், எழு தூப்புக்காரர்கள்.

தேசீயக் கலைக் கூட ஊழியர்கள்.—குமாஸ்தா, இரண்டு வேலைக்காரர்கள், இரண்டு காவற்காரர்கள், தோட்ட மேஸ்திரி. நான்கு தோட்ட வேலைக்காரர்கள்.

நிதி நிலை. வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 261.500.

விவரக் குறிப்புகள்.—காட்சிச் சாலை நகரில் மிகவும் அழகாக அமைக்கபபடடிருகிறது. நாள் ஒன்றுக்குச் சராசரி 1,218 பேர்களும், வருஷம் ஒன்றுக்கு 481,207 பேர்களும் பார்க்க வருகிறார்கள். கன்னிப் பொங்கல் தினத்திலும் வைகுண்ட துவாதசி தினத்திலும் ஏராளமான கூட்டம் வருகிறது. தற் சமயம் காடசிசாலைக் கட்டடம் போதிய இடவசதியுடையதாய இருகிறது. இது இன்னும் விஸ்தரிகபபடலாம். அதற்கான திட்டங்களும் தயாரிகபபட்டிருக்கின்றன. பண்டகசாலைக்குப் போதுமான இடம் இலலை. இரவும் பகலும் காவல காத்துவரக காவறகாரர்கள் இருக்கிறார்கள். நாணயங்கள் எல்லாம் பந்தோபஸ்தான ஓர் அறையில் வைக்கப்பட்டிருக்கின்றன. காட்சிச் சாலைக்கெனத் தனியாய் ஒரு ரசாயனப பரிசோதனைக் கூடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பார்வையாளரின் சௌகரி யத்திற்காக ஆசனங்களும் மின்சார விசிறிகளும் போடப்பட் டிருக்கின்றன. காட்சிச சாலை களஞ்சியச் சேமிப்புச் சட்டப்படி அங்கீகரிகபபட்டுளளது. இக்காட்சிச் சாலைக்குப் பொருள்கள் விலைக்கு வாங்குதல், தேடிக்கணடு பிடிததல, அகழ்ந்து எடுத்தல், இனமாகப் பெறுதல், பொக்கிஷப் பேழை என அங்கீகரிக்கப்பட்டவைகளை இதரக் காட்சிச சாலையிலிருந்து பெறுதல், பரிவர்த்தனை செய்தல் ஆகிய இவ்வழிகளில் சேர்க்கப்படுகின்றன. காட்சிப் பொருள்களின் விசேஷ விவரங்களை விளக்கிக காட்டுவதறகுத் தரைப்படங்கள், எற்றத் தாழ்ச்சிக் குறிப்புகள் மாதிரிகள், வாப்புகள், படங்கள், ஒளி ஊடுருவும் கண்ணுடித்தாள்களில் வரைந்துள்ள படங்கள் முதலியவைகள தயாரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியப் பொருட்காட்சிச் சாலைச் சங்கத்தில் இக்காட்சிச் சாலை ஒரு ஸ்தாபன அங்கம் வகிக்கிறது. பள்ளிக்கூடங்களிலும் பொருட்காட்சிச் சாலை அமைத்து, மாணவர்களுக்கு விளக்க ஆசிரியர்களும் பயிறசி பெற வேண்டுமென்று பொதுக் கல்வித் துறை டைரக்டர் உத்தரவிட்டிருக்கிறார். அதன்படி பற்பல பள்ளிகளிலிருந்து வரும் ஆசிரியர்களுக்குப் பொருட்காட்சிச் சாலை அமைப்பு முறைகளைப்பற்றி விசேஷப் பயிற்சியளிக்கப் படுகிறது. பொது மக்களுடைய ஒத்துழைப்பைப்பெறப் பல ஜில்லாக்களிலுள்ள உத்தியோகஸ்தர்களும், உத்தியோகப் பற்றில்லாதவர்களுமாக ஐநது கௌரவ ஆலோசனையாளர்கள் நியமிக்கபட்டிருகிறார்கள். படக்காட்சி காட்டும் பெட்டிகளின் பினனணிகளுக்கு வர்ணம் தீட்டுவதும், இருட்டறையிலிருந்து படங்களைப் பார்க்கும்போது அப்படங்கள வெளிச்சத்தில பிரகாசிக்கும்படி செய்வதற்கான திட்டங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்திய நாணய வகைகளின் வரலாற்றை உதாரணங்களுடன் காட்டிக் கல்வி கற்பிக்கும்பொருட்டு இக்காட்சிச் சாலையில் இந்திய நாணயங்களின் அச்சுவார்ப்புத் தயாரிக்கப் பட்டு அவைகள் பள்ளிக்கூடங்களுக்கும் விரும்பிக் கேட்கும் பொது மக்களுக்கும் விற்கப்படுகின்றன.

மதுரை

ஜனத்தொகை—361,781.

(i) காந்தி ஸ்மாரக் சங்கிரஹாலயா (காந்தி ஞாபகார்த்தப் பொருட்காட்சிச் சாலை).

தோற்றம்.—1949.

வரலாறு.—மகாத்துமா காந்தியின் ஞாபகார்த்தமாக நான்கு இடங்களில பொருட்காட்சிச் சாலை நிறுவவேண்டுமெனக் காநதி ஸ்மாரக் நிதிக் குழுவினர் 1949-ம் வருஷத்தில் தீர்மானம் செய்தனர். அத்தீர்மானத்தின்படி புது டில்லி, சேவாகிராமம், சபர்மதி, மதுரை ஆகிய நான்கு இடங்களிலும் காந்தி ஸ்மாரக சங்கிரஹாலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. மற்ற இடங்களிலுள்ள இதே பொருட்காட்சிச் சாலைகளுக்கு உள்ள நோக்கம் எதுவோ, அதே நோக்கந்தான் இந்த மதுரைக் காட்சிச சாலையின் நோக்கமும் ஆகும். அந்த நோக்கம் என்னவென்றால், காந்திஜி விட்டுச சென்ற பத்திரக் குறிப்புகள், அவருக்குச் சொந்தமான பொருள்கள் முதலியவற்றைப் பதத்திரப்படுத்திப் பாதுகாப்பதேயாகும். அவராலும் அவரைப்பற்றிப் பிறராலும் எழுதப்பட்ட புதகங்கள், அவர் எழுதிய கடிதங்கள், அவருடைய சித்திரங்கள், போட்டோக்கள் எல்லாம் இருகின்றன. சென்ற எட்டு வருஷங்களாக இந்தப் பொருட்காட்சிச்சாலை இந்தியாவின் முக்கிய பாஷைகளிலும் அன்னிய பாஷைகளிலும் உள்ள காந்திய இலக்கியங்களையும் இந்தியாவில் உளளவர்களுக்கும், வெளி நாட்டில் உள்ளவர்களுக்கும் காந்திஜி எழுதிய கடிதங்களையும், அக்கடிதங்களின் போட்டோ நகல்களையும் சேர்த்து வருகிறது.

நோக்கமும் பொருள்களும்.—இங்கே சேகரித்து வைக்கப் பட்டுள்ள பொருள்கள் காந்திஜி விட்டுச் சென்ற அவருக்குச் சொந்தமான பொருள்களும் கையெழுத்து உருவச் சித்திரங்களுமாம். காந்தீய இலகியங்களும், மேலும் இவ்வகையான பொருள்களையும் சேகரித்து இங்கே வைத்துக் காட்சிச் சாலையை இன்னும் பெரிதாக்கப பொருள சேகரிக்கப்பட்டு வருகிறது.

விளக்க நடவடிக்கைகள்.—காந்திஜி வாழ்க்கையின் எல்லா விதமான நிலைகளையும் கொளகைகளையும் நம் நாட்டு மக்கள் படிதது தெரிந்துகொளவதறகாகவே இக்காட்சிச் சாலை ஏற்படுததப்பட்டிருக்கிறது. காந்திஜியின எண்ணம், கொள்கை, நடவடிக்கைகள் முதலியவற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்வோருக்கு உபயோகமாக இங்கே காந்திஜியாலும் அவரைப்பற்றிப் பிறராலும் எழுதப்பட்ட புதகங்கள் அடங்கிய புத்தகசாலை ஒன்றும் இருகிறது. இப்புத்தகசாலையுடன் இணைக்கப்பட்ட வாசகசாலையில் காந்திஜியால் ஸ்தாபிக்கப் பட்ட வாரப் பத்திரிகையின் பழம்பிரதிகளின் கட்டுகள் இருக்கின்றன. காந்திஜி எழுதிய கடிதங்கள், குறிப்புகள், மனுக்கள் முதலியவற்றைப் போட்டோ எடுத்த நகல்களும் இருக்கின்றன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக்குழு.—காந்தி ஸ்மாரக் நிதிக் குழுவினர்.

ஊழியர்.—டைரக்டர்.

நிதி நிலை.—தம்முடைய பல திறப்பட்ட வேலைகளில் ஒன்றுகக் காந்தி ஸ்மாரக் நிதிக் குழுவினர் இக்காட்சிச் சாலைக்குப் பொருளுதவி செய்கின்றனர்.

விவரக் குறிப்புகள்.—புத்தகசாலையுடன் கூடிய இக்காட்சிச் சாலை காந்திஜியின் வாழ்க்கை அவருடைய கொள்கைகள் முதலிய சம்பந்தப்பட்ட மேன்மையான இலக்கியங்களையுடையதாய் இருப்பதால், பொது மக்கள் மிகவும் விரும்பி வந்து கண்டு களிக்கிறார்கள்.

(ii) ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானப் பொருட் காட்சிச் சாலை.

தோற்றம்.—1942.

வரலாறு.—இந்தப் பொருட்காட்சிச் சாலை 1942-ம் வருஷம், மார்ச்சு மாதம், 6-ம் தேதியன்று சர் தாமஸ் ஆஸ்டின், C.I.E. I.C.S. என்பவரால் திறந்து வைக்கப்பட்டது. நல்ல முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்றாலும் முற்றிலும் கவனிக்கப்படாமல் போனதால இங்கிருந்த பொருள்கள் இபபொழுது ஒரு கிட்டங்கியில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருகின்றன. காட்சிச் சாலை தகுதியான முறையில் ஒழுங்கு செய்யப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச் சாலையில் உள்ள பொருள்கள எல்லாவற்றிலும் உலோகத்தால் செய்யப்பட்ட விளக்கு ஏந்திய நாச்சியார் சிலைகள் கவனிக்கத் தக்கவை. மேலும் கிளிக்கூடு போலச் செய்யப்பட்டு அழகான வேலைப்பாடமைந்த ஒரு விளக்கு, அனனப்பறவையின் உருவத்தில் செய்யப்பட்ட ஒரு தொங்கு விளக்கு, கோயிற்சங்குகள், அலங்காரங்களுடன் கூடிய சவுரிகள், நகைப்பெட்டிகள் முதலியனவும், வேறு பல வகைப்பட்ட பொருள்களும் இருக்கினறன.

விளக்க நடவடிக்கைகள்.—அனைத்திந்தியக் காதி சுதேசி கைத்தொழில் பொருட்காட்சி, கோயம்புத்தூரிலும், தஞ்சாவூரிலும் நடந்த ஐந்தாவது தமிழ் விழா முதலிய விசேஷ காலங்களில் காட்சிச் சாலைப் பொருள்களைப் பொது மக்கள் பார்வைக்காக வைக்கவேண்டுமென்று இந்து மத தர்ம பரிபாலன இலாக்காவிலிருந்து உத்தரவு வரும் சமயங்களில் இங்குள்ள காட்சிப் பொருள்கள் அத்தகைய விசேஷ விழாக்கள் நடக்கும் இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—காட்சிச் சாலையிலிருந்த பொருள்களெல்லாம் இப்பொழுது ஒரு கிட்டங்கியில் கொண்டுபோய் வைக்கப் பட்டு உபயோகிக்கப்படாமல் இருப்பதால், அவை தூங்குகிற நிலைமையில் இருக்கின்றன. இங்கு வரும் பார்வையாளர்கள் இப்பொருள்களைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கேட்டுகொண்டால் மட்டும் அவர்களுக்குக் காட்டப்படுகினறன.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—காட்சிச்சாலை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானதின் ஒரு பகுதியாய் இருக்கிறது. தேவஸ்தான அதிகாரிகள் இதை மேற்பார்த்து வருகிறார்கள்.

ஊழியர்கள்.—இல்லை.

நிதி நிலை.—தனி வரவு செலவுத் திட்டம் எதுவும் இல்லை.

விவரக் குறிப்புகள்.—உண்மையைச் சொல்ல விரும்பினால் இக்காட்சிச்சாலைப் பொருள்கள் யாவும் ஒரு கிட்டங்கியில் போட்டுப் பூட்டப்பட்டு, அதற்குள் சிதறிக் கிடக்கின்றன; அவற்றை ஒழுங்குபடுத்தித் தகுதியான நிலையில் காட்சிக்கு வைக்கவேண்டுவது அவசியம் எனச் சொல்லலாம். இங்கே சேகரித்து வைக்கப்பட்டுள்ள பொருள்கள் கோயில் பூஜைக் குரியவை. அவைகள் யாவும் தேவஸ்தானத்தைச் சேர்ந்தவை. அவைகளைப் பொது மக்கள் காண, தேவஸ்தானத்தார் ஆவன செய்ய வேண்டும்.

பதுமநாபபுரம்

ஜனத்தொகை—13,397.

பழங்காலப் பொருள்களின் காட்சிச் சாலை

தோற்றம்.—1939.

வரலாறு.—இந்தப் பொருட்காட்சிச்சாலை 1939-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. கவனிக்குமிடத்து இதில் இரண்டு வகைப் பொருட்காட்சிச் சாலைகள் இருக்கின்றன என்று சொல்லலாம். அவைகளில் ஒன்று, பழங்காலப் பொருட் காட்சிச்சாலை; மற்றொன்று, பதுமநாபபுரம் அரண்மனைக் கட்டடமே ஒரு தனிக் காட்சிச்சாலை என்று சொல்லாம்.

நோக்கமும் பொருள்களும்.—பழங்காலப் பொருட்காட்சிப பிரிவில் திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஆதி வரலாறுகளை விளக்கும் கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயவகைகள், சிலைகள் முதலியன இருக்கின்றன. இந்நகர் திருவாங்கூர் சமஸ்தானத்தின் தலைநகராய் இருந்த காலத்தில திருவாங்கூர் சமஸ்தான ராஜ குடும்பத்தார் இந்த அரண்மனையிலே தான் வசித்து வந்தார்கள். ராஜ குடும்பத்தாரின் வாசஸ்தலமாயிருந்தபொழுது அங்கேயிருந்த ராஜ குடும்பத்தார் உபயோகித்த தட்டுமுட்டுச் சாமான்கள், மத சம்பந்தமான சாமான்கள், சுவர்ச்சித்திரங்கள், ஆயுதங்கள் முதலியவை இன்னும் அப்படியே வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. திருவாங்கூர் சமஸ்தானக் கட்டடக் கலையின் சிறப்புக்கு இந்த அரண்மனை எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. இங்கே சித்திர வேலைப் பாடமைந்த மரவேலைப் பொருள்களும், சிற்பக்கலைப் பொருள்களும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிச் சாலையைப்பார்க்க வரும் பார்வையாளர்களையும் மாணவர்களையும் காட்சிச்சாலைக் காவலர் கூட்டிக்கொண்டு போய்ச் சுற்றிக் காண்பிக்கிறார். காட்சிப் பொருள்களுக்கு ஆங்கிலம், தமிழ் மொழிகளில் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—திங்கட்கிழமை தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 9-30 மணி முதல் 5-30 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—மொழிவாரி ராஜ்யங்கள் பிரிக்கப்பட்டபின், இது சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு சர்க்கார் ஸ்தாபனமாய் இருக்கிறது. ஆயினும், இது கேரளச் சர்க்கார் நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—காவலர் ஸ்ரீ V. பத்மநாபபிள்ளை, வேலையாள் இரவு காவற்காரன், இரண்டு தோட்ட வேலைக்காரர்கள், 17 பகுதி நேரத் தூப்புக்காரர்கள்.

நிதி நிலை.—கட்டடப் பாதுகாப்புச் செலவு நீங்கலாக வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ 19 000

விவரக் குறிப்புகள்.—நாளொன்றுக்குச் சராசரி 200 பார்வையாளர்களும் வருஷமொன்றுக்கு 73,000 பார்வையாளர்களும் வருகிறார்கள். வட்டாரத் திருவிழாக்களின் போதும் கோடை காலங்களிலும் சுற்றுலாப் பிரயாணிகள் ஏராளமாய் வருகிறார்கள். காட்சிச்சாலைக் கட்டடங்கள் பொருத்தமாயும் இடவசதியுடையவையாயும் இருக்கின்றன. போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருப்பதுடன் இரவு காவற்காரர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. நாணயங்களும் வேலை மதிப்புள்ள பொருள்களும் காவலருடைய பொறுப்பில் இருந்து வருகின்றன. தேடிக் கண்டுபிடித்தல், கிரயம் கொடுத்து வாங்குதல், பொகிஷப் பேழை என அங்கீகாரம் பெற்ற இதரப் பொருட்காட்சிச் சாலைகளிலிருந்து பொருள்களைப் பெற்றுக்கொள்ளுதல் முதலிய வழிகளில் இங்குள்ள காட்சிப் பொருள்கள் சேர்க்கப்படுகின்றன.

புதுக்கோட்டை

ஜனத்தொகை .—44,527.

சர்க்கார் பொருட்காட்சிச் சாலை

தோற்றம்.—1910

வரலாறு.—சமஸ்தானப் பொருட்காட்சிச் சாலை ஒன்றை அமைக்க 1898-ஆம் வருஷத்திலேயே கருதப்பட்டது. ஆரம்பத்தில் காட்சிச் சாலையை அனந்தபாக் என்னும் சமஸ்தானப் பூங்காவில் அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், 1909-ஆம் வருஷத்தில் அக்காட்சிச சாலையைப் புதுக்கோட்டை நகரின் ஒரு பகுதியான திருக்கோர்ணத்தில் பிரதான ரஸ்தாவிலிருக்கும் சிறிய அரண்மனையில் நிறுவுவதென முடிவு செய்யப்பட்டது. அதனபடி 1910-ஆம் வருஷத்தில் பொருட்காட்சிச் சாலை ஸ்தாபிக்கப்பட்டது. பின் 1912-13 வருஷத்தில பொருளாதாரப் பிரிவு சேர்க்கப்பட்டது. பின்பு 1914-ஆம் வருஷத்தில சித்திரக் கலைப்பொருட்பிரிவும் கைத்தொழில் பிரிவும் சேர்க்கப்பட்டன. பொருளாதாரப் பிரிவில் சமஸ்தான எல்லைக்குள் வளரும் 80 வகைச் செடிகளும் கைத்தொழில் பிரிவில் சமஸ்தான எல்லைக்குள் பெண்கள் கைத்தொழிலான பல வகைக் குடிசைத் தொழில் உற்பத்திப் பொருள்களும் சேர்க்கப்பட்டன. குடிசைத் தொழில உற்பத்திப பொருள்கள் சென்னையில் நடந்த தென் இந்தியப பெண்கள் பொருட்காட்சி விழாவுக்காக முதலில் சேகரிக்கப்பட்டு அவ்விழா முடிந்தபின் இக்காட்சிச் சாலையில் கொண்டு வந்து வைக்கப்பட்டன. 1923-24ல் புதை பொருட்பிரிவு தகுந்த அளவுக்குச் சீர் திருத்தப்பட்டது. 1946-ஆம் வருஷம் விவசாயப் பிரிவும் சேர்க்கப்பட்டது. இப் பொழுது காட்சிச சாலையில் அடியிற்காணும் பிரிவுகள் இருக்கின்றன. அவை பூதத்துப் பிரிவு, தாவர வர்க்கப் பிரிவு, மிருக வர்க்கப் பிரிவு, விவசாயப் பிரிவு, பொருளாதாரப் பிரிவு என்பவை. இது சித்திரக் கலைப் பொருள்களும் கைத் தொழில பொருள்களும் சேர்த்து, கல்வெட்டுகளும, நாணய வகைகளும் அடங்கிய புதை பொருள முதலியன. இங்குள்ள காட்சிப் பொருள்கள் தேடிக் கண்டு பிடித்தல், அசந்தெடுத்தல், பொகிஷப் பேழை என அங்கீகாரம் பெற்ற இதர பொருட்காட்சிச்சாலையிலிருந்து தருவித்தல், புதுக்கோட்டை மஹாராஜா தர்பாரிலும் சென்னைப் பொருட்காட்சிச் சாலையிலும் ராயல் ஏஷியாட்டிக் சொஸைட்டியின் பம்பாய்க் கிளையிலும் இனமாகப் பெற்ற வகையிலுமாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிப் பொருள்கள் பொதுவாக புதுககோட்டைச் சமஸ்தானச் சித்திரக கலைக் கைத் தொழில்கள், மானிட வர்க்கப் பாகுபாடு, புதைபொருள்கள், பொருளாதார உற்பத்திப் பொருள்கள், பூதத்துவம், தாவர சாஸ்திரம், மிருக வாக்க சாஸ்திரம், விவசாயம் ஆகியவைகளைப் பற்றித் தெரிவிக்கக்கூடியனவாய் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்—முக்கியமாக இக்காட்சிச் சாலையின் உபயோகத்துக்கென இங்கே சுமார் 1,000 புத்தகங்கள் அடங்கிய புத்தகசாலை இருக்கிறது. மாணவர்களும் பண்டிதர்களும் எதாவது தெரிய விரும்பினால், இப்புத்தகங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். மாணவர்களும் சுற்றுலாக் கூட்டத்தினரும் காட்சிச் சாலையைப் பார்க்க வரும்பொழுது இங்குள்ள காவலரும் கைத்தொழில் உதவி அதிகாரியும அவர்களுக்கு வேண்டும் உதவி செய்கிறார்கள். காட்சிப்பொருட் கூடங்களைப்பார்த்து விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கு வேண்டும் வசதியளிக்கப்படுகின்றது. பள்ளிக்கூடங்களுக்கு இக்காட்சிச் சாலை செய்யும் அரும்பணியாக இங்குள்ள பொருள்களில் தேர்ந்தெடுத்த சில காட்சிப் பொருள்கள் கையில் எடுத்துச் செல்லும் பெட்டிகளில வைத்து வேளா வேளைகளில் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி மாணவர்களுக்குக் காட்டிப், பின் இங்குக கொண்டு வரப்படுகின்றன. விசேஷ இனங்களைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு உதவியாக மாதிரிப் பொருள்கள் எற்றத் தாழ்ச்சி விளக்கக் குறிப்புகள், சுண்ணும்பு வார்ப்பு உருவங்கள் முதலியன இருக்கின்றன. விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வைக்கப்பட்டிருகின்றன.

வெளியீடுகள்.—(1) வருஷாந்தர நிர்வாக அறிக்கை, (2) அலுவலக வெளியீடு, (3) காட்சிச் சாலையிலுள்ள முக்கியமான காட்சிபொருள்களைப் பற்றிய கையடக்க விளக்கப்புத்தகம் (ஆங்கிலத்திலும் தமிழிலும்).

வேலை நேரம்.—ஞாயிறறுக்கிழமைகளும் சர்க்கார் ஓய்வு நாட்களும் தவிர மற்ற எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் 11 மணி வரை, மாலை 2 மணி முதல் 5 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக்குழு.—சென்னை சர்க்கார் பொருட்காட்சிச் சாலை சூப்பிரெண்டெனடின் அதிகாரத்துக்குட்பட்ட காவலர் பொறுப்பில் இருநது வருகிறது.

ஊழியர்கள்.—காவலர் T. S. சுந்தரம், B.Sc., (Ag.) L.T., கைத்தொழில் உதவி அதிகாரி, தோல் பதனிட்டுப் பஞ்சடைப்பவர், குமாஸ்தா, 9 வேலைக்காரர்கள், ஓர் இரவு காவற்காரன.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம். ரூ. 16,615.

விவரக் குறிப்புகள்.—காட்சிச்சாலை புதுக்கோட்டை நகரின் ஒரு பாகமாகிய திருக்கோகாணத்தில் பிரதான ரஸ்தாவில் இருக்கிறது. பார்வையாளர்கள் எளிதாய்ப் போய்ப் பார்ககக் கூடியதாய் இருக்கிறது. தினந்தோறும் சராசரி 526 பார்வையாளர் வரை வருகினறனர். ஆயினும், ஏப்பிரல், மே, ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் திருக்கோகர்ணத்தில் நடைபெறும் ஸ்ரீ பிரகதாம்பாள் கோகர்ணேஸ்வரர் தேர்த் திருவிழாவின் போதும், செப்டெம்பர் அக்டோபரில் வரும் தசரா விசேஷத்திலும், திருவாப்பூர் மாரியம்மன் கோவில் திருவிழாவிலும் மிகவும் அதிகமான பார்வையாளர் வருகின்றனர். அடுத்தடுத்து இருக்கும சமஸ்தானக கட்டடங்கள இரண்டின் ஒன்பது அறைகளில் காட்சிப்பொருள்கள வைக்கப்பட்டுள்ளன. 1934–37 வருஷங்களில் வேண்டும் சீர்திருத்தங்கள் செய்துங்கூட இனனும் கட்டடங்கள் பொருத்தமில்லாதவைகளாகவே இருக்கின்றன. பொருட்காட்சிச் சாலைக்கென்றே தனித் திட்டதுடன் ஒரு புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்ற எண்ணம் புதுகோட்டைத் தர்பாரிலேயே ஆலோசிக்கப்படடதாயினும், சென்னைச் சர்ககாரின் தற்சமய நிதி நிலை இடந்தர வழியில்லாதிருப்பதனால், இனனும் அவ்வெண்ணம் நிறைவேறுவதற்கு இல்லை. பணடகசாலைகளெனத் தனி இடமில்லை. ரசாயனப் பரீட்சைக் கூடமும் இல்லை. தேடிக் கண்டு பிடித்தல் அகழ்ந்தெடுத்தல், பொகிஷப் பேழையென அங்கீகரிகப்பட்ட பிற பொருட்காட்சி சாலையிலிருந்து பெறுதல், தானங்கள் மூலம் பெறுதல் ஆகிய வழிகளில் இங்குள்ள காட்சிப் பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. இப் பொருட்காட்சிச்சாலை சென்னைச் சர்க்கார் பொருட்காட்சிச் சாலையின் ஒரு கிளையாகவே இருப்பதால், அதனுடன் சேர்த்து இதுவும் பொக்கிஷப் பேழையென அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நகல பொருள்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ளுதல, மாதிரிப் பொருள்களை அன்பளிப்பாகக் கொடுத்தல் ஆகிய முறைகளைக் காட்சிச்சாலை மேற்கொள்ளுகிறது. இந்தியப் பொருட்காட்சிச்சாலைகளின சங்கத்தில் இக்காட்சிச்சாலை ஒரு ஸ்தாபன அங்கம் வகிக்கிறது. படிக்கத் தெரியாதவர்களாக வரும் பார்வையாளருகுக் காட்சிச் சாலையிலுள்ள பொருள்களைப் பற்றிய விளக்கம் தெரிவிப்பதற்காகச் சாரணர்களுக்கு இக்காட்சிச் சாலை வேலைகளில் பயிறசியளிக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

ஸ்ரீரங்கம்

ஜனத்தொகை—36,702.

ஸ்ரீ ரங்கநாதசுவாமி வகையரு தேவஸ்தானப் பொருட் காட்சிச் சாலை.

தோற்றம்.—1935.

வரலாறு.—மதிப்பு மிக்க புதைபொருள்களைப் பொதுமக்கள் பார்த்துத் தெரிந்துகொளளும்பொருட்டு அவைகளைப் பொருட்காட்சிக் கூடத்தில் வைக்கவேண்டும் எனறு ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தான அதிகாரிகள் கருதியதால் 1935-ஆம் வருஷம் செப்டெம்பர் மாதம் 9-ஆம் தேதியில் பொருட்காட்சிச் சாலையும் அதோடு சேர்ந்த புத்தக சாலையும் தேவஸ்தான அலுவற்கூடத்தை அடுத்திருந்த அறைகளில் ஆரம்பிக்கபபட்டன.

நோக்கமும் பொருள்களும்.—இந்தப் பொருட்காட்சிச்சாலையில் மதுரை நாய்க்க அரசர்கள் காலத்தைச் சேர்ந்த உயர்தரமான சிற்ப வேலைப்பாடமைந்த தந்தத்தால் ஆன பழங காலச் செதுக்கு வேலைப் பொருள்கள் இருக்கின்றன. அவைகளில் சம காலதைதச் சேர்ந்த அரசர்களும் பிரபுக்களும் அந்தப்புரங்களில் அமர்ந்திருக்கும் பற்பல விதமான நிலைகளைக் காண்பிக்கும் மிகக விலைமதிப்புள்ள உருவச சித்திரங்களும், மாதிரிகளின மூலம் விளக்கம் தெரிவிக்கும் துறையில் சிறந்த கதைச் காட்சிகளும், அவை சம்பந்தப்பட்ட உருவங்களும், சிறபக் கலையின் ஆர்வத்தை வடித்துக காட்டிய சிற்ப வேலைப்பாட்டுடன் கூடிய மாதிரிகளும் உண்டு. மேலும், அதி உன்னதமாய்ச் செதுக்கிய அலங்கார வடிவங்களைக் கொண்ட தந்தப் பாளத்துண்டுகளும், பின்னிக்கிடக்கும் அலங்காரததுடன் செதுக்கப்பட்ட ஒரு பெரிய தந்தப் பெட்டியும் பல்லக்கின் பாகங்களிலுள்ள அழகான சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய துண்டுகளும், மேஜையின் செருகு அறைகளில் வைக்கப்பட்ட அலங்கார வேலைத் தந்தத் துண்டுகளும், மற்றும் பல விதமான அலங்காரங்களையுடைய தந்தத் துண்டுகளும் இருக்கின்றன. உலோகத்தால் செய்யப்பட்ட ஒரு பெரிய மூடி, கருட வாகனம், செம்பு சாஸனம, நாணயங்கள், வெள்ளியில் சில உருவங்கள், பழைய பூட்டுகள், உலோகத்தால் ஆன போர்க் கவசம், வாள்கள், கட்டாரிகள், மரவேலைப் பொருள்கள, சில கற்சிலைகள் இருக்கின்றன. புஸ்தகசாலையில் மத சம்பந்தப்பட்டனவும், தத்துவ சாஸ்திர சம்பந்தப்பட்டனவுமான புத்தகங்களும் உண்டு.

விளக்க நடவடிக்கைகள்.—பொருட்காட்சிச் சாலையோடு இணைக்கப்பட்ட புத்தகசாலையில் சுமார் 2,500 புத்தகங்கள் இருகின்றன. அவைகளில் அநேகம் அபூர்வமானவையும் இது வரை வெளியிடப்படாதவையுமான கையெழுத்துச் சுவடிகள். புத்தகங்களைப் படிகபப் பொதுமக்கள் தாராளமாய் அனுமதிக்கப்படுகிறார்கள். இங்குள்ள குமாஸ்தா வருகிற பார்வையாளர்களைக் கூட்டிக்கொண்டுபோய்க் காட்சிப்பொருள்களைக் காண்பிக்கிறார். காட்சிப் பொருள்களுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—ஞாயிற்றுக்கிழமையும், சர்க்கார் விடுமுறை நாட்களும தவிர, மற்ற எல்லா நாட்களிலும காலை 10 மணி முதல் 1 மணி வரை; மாலை 3 மணி முதல 6 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானம் தர்மகர்த்தர்கள குழுவின மேறபார்வையில் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—குமாஸ்தா ஒருவர் மட்டும்.

நிதி நிலை.—தேவஸ்தான வரவு செலவுத திட்டத்துக்குப் புறம்பாக இககாட்சிசசாலைக்கெனத் தனி வரவு செலவுத்திட்டம் எதுவும் இலலை.

விவரக் குறிப்புகள்.—பொருட்காட்சிசசாலையும புத்தக சாலையும் ஒரு சிறிய அறையில் வைக்கப்பட்டிருக்கினறன இடம், காட்சிச்சாலைக்குத் தகுதியில்லாததாயிருக்கிறது. காட்சிப பொருளகளை நல்ல முறையில் வைகக வேணடியிருப்பதுடன் அவைகளின் வரலாறுகளையும் நன்றுகத் தெரிந்துகொள்ள வேணடி இருக்கிறது. தேவஸ்தானத்தை இரவு காவல காக்கும் காவற்காரனே பொருட்காட்சிசசாலையையும் காவல காகிறான. விசேஷப் பொருட்காட்சி விழாக்களுக்கு இஙகுள்ள காட்சிபபொருள்கள் அனுப்பிவைக்கபபடுகின்றன. தேவஸ்தானச் சொத்தாக இந்தத தேவஸ்தானத்தில் கிடைக்கும் பழஞ்பொருள்கள வாயிலாக அன்றி வேறெந்த வழியாகவும் அங்குள்ள பொருளகள் சேர்ககபபட்டதில்லை. வருஷ முழுவதும சுமார் 5,000 பேர்கள் காட்சிச்சாலையைப் பார்க்க வருகிறார்கள். வைகுண்ட ஏகாதசி போனறு விசேஷ தினஙகளில கூடடம அதிகம்.

தஞ்சாவூர்

ஜனத்தொகை—1,00,680.

தஞ்சாவூர் சிற்பக் கலைக்கூடம், அரண்மனைக் கட்டடங்கள்.

தோற்றம்.—1953.

வரலாறு.—இந்தியப் பொருட்காட்சிச சாலையின் புதை பொருட்பிரிவு சூப்பிரண்டெணட தஞ்சாவூர பக்கதில கணட சோழர் காலத்துப் பிரமாவுடைய சிற்பத்தின் அழகைக் கண்டு பிரமித்துப் போனார். அந்தச் சிறபத்தை இநதியச பொருட்காட்சிசசாலைக்கு எடுத்துக்கொணடுபோக முயறசி செய்தார். எடுத்துக்கொணடு போக அனுமதி அளிகக்கும்படி சூப்பிரணடெணட் தஞ்சை ஜில்லாக் கலெகட ரிடம மனுக கொடுத்து வேண்டிக்கொண்டார. ஆனால, அச்சிலையிருந்த கிராமதது மககள் அதனை எடுககக்கூடாதென மறுத்துவிட்டனர். அதனால் கலெக்டருடைய முயறசி தோல்வி யுற்றது. ஆனால, சிலையைத் தஞ்சாவூரிலேயே வைத்திருப்ப தாலல் எடுதது்க்கொண்டு போகலாம எனறு கிராம மக்கள தாலல் எடுதது்க்கொண்டு போகலாம எனறு கிராம மக்கள சம்மதம தெரிவித்ததபடியால், சிலை தஞ்சாவூருக்கு எடுத்து வரப்பட்டது. பின்பு, தஞ்சை அரண்மனையில் காலியாயிருந்த அறைகளில் பினனர்க் கிடைத்த வேறு சில சிலைகளும் ஒன்று சோக்கபபட்டு, ஒழுங்காக அமைதது வைக்கப்பட்டதால், தஞ்சையில் ஓர் அழகிய சிற்பக் கலைக்கூடம் உற்பததியாகி யிருக்கிறது. உயர்தரச் சிறபத்திறனமைநத எராளமான சோழர் காலதது்ச் சிற்பங்கள சிற்பக் கலைகூடதின முக்கியப் பொருள்களாயிருக்கின்றன. பக்கதது ஊர்களிலிருந்து கிடைத்த சிற்பங்களும் செம்புச் சிலைகளும இங்கே சேர்த்து வைகக்பபட்டிருப்பதால, இதைத் தஞ்சாவூர் ஜில்லாப பொருட் காடசிச்சாலை என்று சொல்லலாம். இநதப் பொருட்காட்சிச் சாலை தோன்றக் காரணமாயிருந்தது அசசமயம தஞ்சை ஜில்லாக் கலெக்டராயிருந்த **ஸ்ரீ T. K.** பழனியப்பா எனபாரின் மூயற்சியேயாகும்.

நோக்கமும் பொருள்களும்.—பொருட்காட்சிச் சாலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மிகக மதிப்புடைய சோழர் காலத்துச் சிற்பங்களும் செம்புச் சிலைகளும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—பார்வையாளர்கள வேண்டிக் கொளளும்போது காட்சிச்சாலை காவலர் அவர்களுக்கு இங் குளள பொருள்களைப்பற்றி விளக்கம் தெரிவிக்கிறார். காட்சிப் பொருள்களுககு ஆஙகிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் விளககச் சீட்டுகள வைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூரி லும் பககத்து ஊர்களிலும் படிக்கும் மாணவாகளும பொருட் காட்சிச சாலைகத வநது இங்குளள பொருள்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுகிறாகள். தவிர, இந்தியாவின் பல பாகஙகளிலிருநதும் பல பணடிதர்களும் ஏனையோரும் இஙகு வந்து பார்த்து இஙகுள்ள சிற்பங்களையும் சிலைகளையும் பறறித் தெரிந்துகொள்வதில மிகவும் ஆர்வமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

வெளியீடுகள்.—(1) 1953, 1955-ஆம் வருஷங்களில் நடந்த தஞ்சைக கலைப் பொருட்காட்சி விழாக்களின போது வெளி யிடப்பட்ட ஞாபகார்தத வெளியீடுகள். (2) தஞ்சைக கலைப் பொருட்காட்சிக்கூடத்தின் படஙகளுடன் கூடிய விளககப் புத்தகம (ஆங்கிலம, தமிழ், ஹிநதி ஆகிய மூனறு பாஷை களில்)

வேலை நேரம்.—பொஙகல, தமிழ் வருஷப் பிறப்பு, ஆயுத பூசை, தீபாவளி ஆகிய இந்த நான்கு நாட்கள் தவிர, மற்ற எல்லா நாடகளிலும காலை 8–30 மணி முதல் 12 மணி வரையும, மாலை 3 மணி முதல் 6 மணி வரையும் திறகசப் படடிருககும்.

அனுமதி.—நுழைவுக கட்டணம் 1 அணு.

நிர்வாகக் குழு.—தஞ்சை ஜில்லாக் கலெகடரைத் தலைவராகக் கொணட நிாவாகக்குழு ஒன்று இக்காட்சிச்சாலையை நிர்வ ஹித்து வருகிறது.

ஊழியர்கள்.—காவலர் ஸ்ரீ G. கிருஷ்ணமூர்த்தி அய்யரும் 2 காவற்காரர்களும்.

நிதி நிலை.—இக்காட்சிச்சாலையின் காவலர், 2 வேலைக் காராகள் ஆகிய இவாகளுடைய சமபளம் உட்பட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் தொகை சுமார் ரூ. 7,000.

விவரக் குறிப்புகள்.—இக்காட்சிச்சாலை சமீபத்தில் புதுபபிக் கப்பட்ட தஞ்சை அரண்மனைக் கட்டடங்களில் இருந்து வருகிறது. இஙகு யாரும் எளிதில் செலலலாம. நாளொன றுககுச் சராசரி 205 பாரவையாளாகளும, வருஷத்துககுச் சுமார 75,000 பார்வையாளாகளும இங்கே வருகிறாகள். வருஷந்தோறும ஏப்பிரல மாதத்தில் கவின் கலைபபொருட் காட்சி விழா நடைபெறும் பொழுது பாரவையாளர் எண்ணிககை 20,000-க்கும் மேலாகிறது. சிற்பக்கூடத்துக் கெனத தனிபபடட புததகசாலை இலலையாயினும, இதையடுத் துளள சரஸவதி மஹாலில விலை மதிப்புடைய ஏராளமான புததகஙகளும், கையெழுத்துச் சுவடிகளும இருக்கின்றன. பொகிஷப பேழை என இக்காட்சிசசாலை அஙகீகரிக்கப் படடிருக்கிறது. இஙகுளள பொருள்களை யாவும் தேடிக் கண்டுபிடிததல, தானமாகப் பெறுதல, கடனுகப பெறுதல, பொகிஷப் பேழை என அஙகீகரிககபபட்ட இதரப் பொருட் காட்சிசசாலைகளிலிருந்து பெறுதல ஆகிய வழிகளில் சேர்க்கப் படுகின்றன. மதிபபு மிக்க சில செமபுச் சிலைகளும் மற்றும் சில காட்சிபபொருளகளும சில கோயில அதிகாரிகளிட மிருந்து வாஙகபபட்டவை. 1954-ஆம் வருஷம் ஆவடியில் நடந்த காஙகிரஸ் பொருட்காட்சி விழாவுககு அனுப்பி வைததது போலவே சில பொருட்காட்சி நடக்கும இடங்களுக்கு இஙகுள்ள காடசிப பொருள்கள் அனுப்பி வைக்கப்படு கினறன.

மைசூர்

பெங்களூர்.

ஜனத்தொகை—7,78,977.

மைசூர் சர்க்கார் பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—1866.

வரலாறு.—இந்தியாவிலுள்ள பழமையான பொருட்காட்சிச்சாலைகளில் ஒன்றான மைசூர்ப் பொருட்காட்சிச்சாலை 1866-ஆம் வருஷத்தில ஸ்தாபிக்கப்பட்டது. சென்னையில் சர்க்கார் மத்தியப் பொருட்காட்சிச்சாலையை ஸ்தாபிப்பதற்கு மிகவும் பொறுப்பு எடுத்துக்கொண்ட டாக்டர் எட்வர்ட் கிரீன் பால்போர் எனபவர் பெங்களூர் சர்க்கார் பொருட்காட்சிச் சாலையின் முதல பொறுப்பு அதிகாரியாய் அமர்ந்தார். 1943-ம் வருஷத்தில் மைசூர் சர்க்கார் பொருட்காட்சிச்சாலை ஆலோசனைக்குழு ஒன்றை ஏற்படுத்தியது. அதற்குக கைத்தொழில், வர்த்தக டைரக்டர் தலைவராகவும், சமஸ்தானத்திலுள்ள விஞ்ஞான இலாக்காத் தலைவர்களும் மைசூர் சாஸகலாசாலை உயிர் வர்க்க வரலாற்றுப் பேராசிரியரும் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுகக்பட்டனர். சமீப காலங்களில் இந்தப் பொருட்காட்சிசசாலை மிகவும் அபிவிருத்தியடைந்திருப்பதுடன் மைசூர் ராஜ்யத்திலே மிகவும் புகழ் பெறற கலவி நிலையமாகவும் இருந்து வருகிறது.

நோக்கமும் பொருள்களும்.—புதைபொருள்கள், கலைப் பண்பாட்டு வரலாறு, நாணய வகைகள், மானிட வர்க்கங்களின் தோற்ற வளர்ச்சி வரலாறு, கைத்தொழிற்கலை, பூதத்துவம், தாவர சாஸ்திரம, மிருக வர்க்க சாஸ்திரம் சம்பந்தப்பட்ட பொருள்கள இக்காட்சிச் சாலையில் சேகரித்து வைக்கப்படுகின்றன.

புதைபொருட்பிரிவிலுள்ள மாதிரிப்பொருள்கள் மைசூரின் பழங்காலப் புதைபொருட்பூமியான பிரம்மகிரி சந்திரவல்லி முதலிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பழங்காலப் பொருள்களாகும். சிற்பக்கலைக் கூடதத்தில், துல்லியமான செதுககு வேலை அலங்காரங்களுடன் அற்புதமாகச் செதுக்கப்பட்ட ஹொய்சாலர் காலத்துச் சிற்பங்கள் மற்றெல்லாச் சிற்பங்களையும்விட மிக அற்புதமாய் விளங்குகின்றன.

காட்சிச்சாலையின் பிரதானமான பெரிய அறையில் உள்ள தேச சரித்திரப் பிரிவில் பழங்காலத் தறகாலப் போர்க்கருவிகளும், போர் உடைகளும். அழகாக வைக்கப்பட்டிருப்பதுடன் கி.பி. 1800-ஆம் வருஷத்தில் ஸ்ரீரங்கப்பட்டணம் இருந்த இயற்கைத தோறறத்தைக் காட்டும் ஒரு பெரிய தரைப்படமும் மிகவும் கவனிக்கத் தக்கதாய் இருக்கிறது. மானிட வர்க்கங்களின் தோற்ற வளாசசி வரலாற்றுப் பிரிவில தூரக் கிழக்கு நாடுகளின் மானிட வர்க்க வரலாறுகள் அவற்றிற்குரிய மாதிரிப் பொருளகளுடன் வைக்கப்பட்டிருக்கின்றன. நுண்கலை, கைததொழிற்பிரிவில் தந்தம் பதிக்கப்பட்ட மைசூர் ராஜ்யதின் அற்புத வேலைப்பாடுகள் அமைந்த பொருளகளும், சிப்பியில் செய்த பொருள்களும், உலோசஙகளிலும் தந்தத்திலும் செதுக்கப்பட்ட பொருளகளும், புகழ் பெற்ற மைசூர்ச் சந்தனக் கட்டையில் செய்த கைத்தொழிற் பொருளகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், இந்தப் பிரிவில் உளள பொருள்களில் இசைக் கருவிகள், ஆபரணங்கள், இந்துமத புராணங்களில் சொல்லப்பட்டுள்ளவர்களின் உருவங்கள், துணி வகைகள, உலோகவகைப் பொருள்கள், முக்கியமானவையாகும். ராஜ்யத்தின் கைத்தொழில அபிவிருத்தியை விளக்கிக் காட்டும்பொருட்டுப பிரமபு வேலைப்பொருள்கள், னமசூர் ராஜ்ய கைத்தொழிற் பொருள்கள பத்திராவதி இரும்பு வேலைக் கூடதின் வேலைகளை விளக்கிக் காட்டுமப போட்டோக்கள், வளர்ச்சி விவரக் குறிப்புகள், முதலியனவும் வைக்கப்பட்டிருக்கின்றன.

இயற்கை வரலாற்றுப் பிரிவில் பற்பல வகை மண் இனங்களின மாதிரிகள் இருக்கின்றன. பூதத்துவப்பாட மாணவர்களுக்கும் மற்றுமுள்ளோர்களுக்கும் உபயோகமாயிருக்கத் தக்க முறையில் அவைகளெல்லாம் ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. மைசூர் ராஜ்யத்தின தாதுப் பொருள்களின் வகைகள், ராஜ்யத்தின் இயறகையமைப்பையும் மண் வளங்களையும் காட்டும் தரைப்படங்கள், ஆபரணக் கற்கள், கைத்தொழல்களில் தாதுப் பொருள்களின் உபயோகம், ராஜயக் கைத்தொழில் நிலையங்களில செய்யப்பட்ட வேலை முடிந்த கைத்தொழிற் பொருள்களின மாதிரிப் பொருள்கள் முக்கியமாயக் கவனிக்கத் தக்கவையாய் இருகின்றன.

தாவர வர்க்கப் பிரிவில் மைசூர ராஜ்யத்திலுள்ள உள் நாட்டுப் பழவகைகள், காய்கறித் தினுசுகள், செடிகளின அபிவிருதியை விளகும் குறிப்புகள, மூலிகைச் செடிகள, புஷ்டியளிகும் உணவு தானிய வகைகள், பற்பல தோட்டப் பண்ணைகள் தோட்டங்கள் முதலியவறறில் விளையும் பொருள்கள், மைசூர் ராஜ்யக காடுகளில் விளையும் உத்திரத்துக்குப் பயன்படக்கூடிய மரக்கட்டைகளின் மாதிரிகள ஆகியவை வைகைப்பட்டிருகின்றன.

மிருக வர்க்கப் பிரிவில் குட்டி போடடுப் பால் கொடுக்கும் பிராணி இனங்களும், பறவைகளும், ஊர்ந்து செல்லும் பிராணி இனங்களும் இருகின்றன. பறவை இனங்களில் 1939-40-ம் வருஷத்தில பமபாய் உயிர் வர்க்க வரலாற்றுக் குழுவினர் இந்த ராஜ்யத்திலுள்ள பறவை இனங்களைப்பற்றிப் பரிசோதனை செய்த சமயம் கிடைத்த பறவைகளை இந்தப் பொருட்காட்சிச்சரலைக்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ள பறவைகள் பார்க்கத்தக்கனவாகும். மைசூர் ராஜ்யத்தில் காணபபடும் சுத்த ஜல மீன்களும், கப்பினி ஆறறில் பிடிக்கப்பட்ட வர்ணங்களுடன் கூடிய மஹாஷிர் என்ற இனத்தைச் சேர்ந்த மாபெரு மீன் ஒன்றின் மாதிரியும் வைக்கப்பட்டிருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—பொருட்காட்சிச்சாலையுடன் இணைக்கப்பட்ட ஒரு சிறிய விவரப் புதகசாலை இருக்கிறது. இந்தப் புத்தகசாலை இக்காட்சிச்சாலை ஊழியர்களுகும், பண்டிதர்களுக்கும், ஆராய்ச்சித்துறை மாணவர்களுக்கும், பார்வையாளாகளுக்கும பயன்படக்கூடியதாய் இருக்கிறது. இந்தப் புத்தகசாலையில் 700 புத்தகங்களும் வார மாதப் பத்திரிகைகளும் இருப்பதுடன் மேலும் புத்தகங்கள் வாங்குவதற்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. படிப்பில்லாத மக்களுக்கு இங்குள்ள பொருள்களைக் காட்சிச்சாலை அதிகாரிகள் தெளிவாக விளங்கும்படி எடுத்துரைப்பதும், ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்குத் தேச சரித்திரம், இந்தியாவின் வழிவழிக் கலைப் பண்பாட்டு வளர்ச்சி, மைசூர் ராஜ்யத்திலுள்ள உயிர்ப் பிராணிகள், தாவர வர்க்கங்கள், கைத்தொழில்கள் ஆகிய வைகளைப் பற்றி விளக்கமான சொறபொழிவுகள் நடத்துவதும் காட்சிசசாலை கல்வி வளர்சசிக்குச்செய்யும் பணிகளாகும், பள்ளிச் சிறுவர்களுக்குமப, கல்லூரி மாணவர்களுக்கும். ஆராய்ச்சித்துறைப்பண்டிதர்களுக்கும் இக்காட்சிச்சாலை வேண்டும் வசதிகள் எல்லாம் அளிக்கிறது. பல்கலைக் கழகங்களின் ஆதரவிலும் மறறுமுள்ள கலவி ஸ்தாபனங்களின் ஆதரவிலும நடைபெறும் கல்விப் பொருட்காட்சி விழாக்களில் இந்தப் பொருட்காட்சிச்சாலையும் பங்கெடுத்துக்கொள்கிறது. காட்சிப் பொருள்களுக்குக் கன்னடம் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவசியமான இடங்களில் தரைப்படமும், வளாச்சி தாழ்ச்சி விவரக் குறிப்புகளும வைக்கப்பட்டிருக்கின்றன. தத்தம ஆசிரியர்களுடனும் பேராசிரியர்களுடனும் பற்பல கல்விச் சாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் பல்கலைக் கழக மாணவர்களும் காட்சிச்சாலையைப பார்க்க வருகிறாகள்.

வெளியீடுகள்.—ஆண்டறிக்கை.

வேலை நேரம்.—புதன் கிழமையும் மற்றும் விடுமுறை நாட்களும் தவிர, மற்ற நாட்களில காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையும், சனிக்கிழமைகளில் பிற்பகல் 1 மணிக்குப் பினபும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—மைசூர் சர்க்கார்.

ஊழியர்கள்.—காவலர் ஸ்ரீ K. நாராயண அய்ய்ங்கார், M.A., இரண்டு உதவிக் காவலர்கள்; (a) ஸ்ரீ J. M. ஜெயராம ராஜு, B.A.,(Hons)., (b) இப்பொழுது ஆள இல்லை. சித்திர வேலைக்காரர்—1, ஏவலாள்—1, வேலைக்காரர்கள் 5, சைக்கிளில் செலலும் ஏவலாள்—1, காவறகாரன்—1.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத திட்டத்தில் இக்காட்சிச் சாலைகக ஒதுககப்படும் தொகை ரூ. 12,500.

விவரக் குறிப்புகள்.—பொருட் காட்சிச்சாலை அதன் நோக்கத துக்குத் தகுதியான இடத்தில் அமைந்திருக்கிறது. நாள் ஒன்றுககுச் சராசரி 1,200-க்கும் மேறபட்ட பார்வையாளர் களும் வருஷத்துக்கு 4,48,600 பார்வையாளாகளும் பார்க்க வருகிறார்கள். கரகா, தசராப போன்ற தேசீய விழா, வட்டார விழாக்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் பகல் முழுதும் தொடர்ச்சியாகப் பார்வையாளர்கள் வந்த வண்ண மாகவே இருபபார்கள். கட்டடம் பொருததமாயிலலா விட்டாலும் காட்சிப் பொருள்களை விசாலமாக வைப்பதற்குப் போதிய இடவசதி இல்லாமல் பொருள்கள எல்லாம் ஒனறின் மேலொனறாக நெருக்கமாக வைக்கப்பட்டிருக்கின்றன. கட்டடத்தை விஸ்தரிக்க வேண்டுமெனற எண்ணம் ஆலோசனையில் இருநது வருகிறது. பகலில மூன்று வேலைகாரர் களும், ஒரு ஏவலாளும், இரவில் இரண்டு வேலைக்காரர்களும் காட்சிச்சாலையைக காவல் புரிநது வருகிறார்கள். நாணயங களும் விலையுயர்நத பொருள்களும் இரும்புப் பெட்டிகளிலும் பீரோக்களிலும் வைத்துப் பூட்டப்பட்டிருக்கின்றன. விசேஷ கால்ங்களுககு என்று ஒதுககி வைகைபபட்ட பொருளகளுக்கும் நகல் பொருள்களுககும் ஒதுக்கபபட்ட இடம மிகவும் குறுகிய தாய இருக்கிறது. காட்சிசசாலையில பார்வையாளர்கள உடகாரு வதற்கு ஆசனங்கள் அமைப்பதற்குக்கூட இடமில்லாதபடி பார்வையாளாகள் கூட்டம் அதிகமாய் வருகிறது. ஆயினும், இக்கட்டடத்தில் போதிய அளவு காற்றோட்ட வசதிகள் இருபபதோடு மின்சார விசிறிகளும் போடப்பட்டிருக்கின்றன. தேடிச் சேகரித்தல்; விலை கொடுத்து வாங்குதல், அகழ்ந தெடுத்தல், மானியமாகப் பெறுதல், பரிவர்த்தனை, பொக்கிஷப் புதையல என அங்கீகரிக்கப்பட்ட இதரப பொருட்காட்சிச்சாலை களிலிருந்து பெறறுக்கொள்ளுதல மூலமாகக் காட்சிப் பொருள்களின் எண்ணிக்கை மேனமேலும் அதிகரிக்கப்படு கிறது. இக்காட்சிச்சாலையும் பொகிஷப் புதையல என அங்கீகாரம் பெறத் தகுதியுடையதாய் இருக்கிறது. மறறக் காட்சிகளுடன் காட்சிப் பொருள்களையும் நகல் பொருள்களை யும் பரிவர்த்தனை செய்துகொள்ள ஊக்கம் அளிக்கப்படுவ துடன் அது நல்ல முறையென வரவேற்கவுமபடுகிறது. காட்சிச்சாலையை விஸ்தரிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆலோசனையில் இருந்து வருகிறது.

பிஜப்பூர்

ஜனத்தொகை—65,734.

புதைபொருட் காட்சிச்சாலை.

தோற்றம்:—1912.

வரலாறு:—பொருட்காட்சிசசாலை 1912-ஆம் வருஷம் ஜூலை மாதம் 19-ஆம் தேதி ஸ்தாபிக்கப்பட்டது. பொதுவாக இந்து தேச சரித்திரததையும் முக்கியமாகப் பிஜப்பூர் சமஸ்தான சரித்திரத்தையும் கறறுக்கொள்வதற்கு உதவியாய் இருக்க வும், சரித்திர சம்பந்தமான, புதைபொருள் ஆராய்ச்சியில் ஆர்வம் ஊட்டக்கூடிய பழஙகாலப் பொருள்களைச் சேகரிக்க வும், அவற்றைப் பாதுகாக்கவும் காட்சிக்கு வைக்கவும் வேண்டுமென்னும் நோக்கத்துடன் இக்காட்சிச்சாலை ஆரம்பிக்கப்பட்டது. இக்காட்சிச்சாலை சரித்திர பிரசித்தி பெற்ற பிஜப்பூர் கோல் கும்பாஸுககு எதிராகவுள்ள நகர் காஜி எனற கட்டடத்தில் அமைகைபபட்டிருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்:—இங்கு வைக்கப்பட்டுள்ள காட்சிப பொருள்கள் பிஜப்பூரிலும் பக்கத்து ஊர்களிலும் கண்டெடுதத பழங்காலப் பொருளகளாகும். இங்கே (a) லவெட்டுகள்; (b) தான சாஸனங்கள், (c) சிற்பங்கள், (d) சிததிரங்கள், (e) நாணயங்கள், (f) போர்ககருவிகளும் ஆயுதங்களும், (g) மரததில்செதுக்கிய பொருளகள், (h) சைனீ தேசச் சாமான்கள், (i) ஜமக்காளங்கள, (j) தரைப்படங்கள், (k) படங்களும் போடோக்களும், (l) கையெழுததுச் சுவடி கள் முதலியன இருக்கின்றன. இககாட்சியில் உளள பழம் பொருள்களில முக்கியமானது பிஜப்பூர் அஸர் மஹாலில கிடைத்த பழஙகாலதது ஜமகாளங்களாகும். அராபி, பெர் ஷிய, சமஸ்கிருத, கனனட மொழிகளில அநேக கலவெட் டுகள் இருக்கினறன. மேலும், ஹிந்து ஜைனமதச் சிற்பங்கள மிகவும் அழகாகச் செதுகைபபட்ட மரத்தாலான கதவு நிலை, பழஙகாலச் சீனத் தேசதது உலோகச் சாமானகள, போர்க் கருவிகளும் ஆயுதங்களும், பொஷிய, அராபிய, உருது மொழிகளில இலகியம, தேச சரித்திரம், மத சம்பநதக் கோடபாடு ஆகியவை பற்றிய கையெழுததுச் சுவடிகளும், சித் திரங்களும், அவற்றில முக்கியமாய் மராத்தி ராஜபுத்திர பாணிகளில உள்ள சிததிரஙகளும், பிஜப்பூரிலிருநத ஆர்க் வில்லா எனப்படும் கோட்டையைச் சமதளபபடுததுமபோது கிடைத்த பல வகைப பொருள்களும இருகினறன. தவிர வும், இநதுஸதான பஞசாபு ஆகிய இடங்களிலுள்ள காஷ்மி வேலைகளைப போலொத்த அழகான வர்ணததுணடுகள பதிதத உடைந்த ஓடடுத துணடுகளும இஙகே இருகினறன. இந்த உடைநத ஓட்டுத் துணடுகள எல்லாம் பிஜபபூரிலிருநத சத மனைலில் அல்லது எழுநிலை மாடத் (ஏழுமாடிக் கட்டடத்) தைச் சேர்நதவைகள எனச சொல்லபபடுகிறது.

விளக்க நடவடிக்கைகள்.—பொருட்காடசிசசாலையுடன் இணைகைபபட்ட ஒரு சிறிய புத்தகசாலை இருக்கிறது. அதி லுளள புததகஙகளை பார்வையாளாகளும படிகைகலாம். காட்சிசசாலையைப் பார்ககவரும் பார்வையாளாகளை இங்குளள உதவிக் காவலா காட்சிசிச்சாலை முழுவதையும் சுற்றிக் காண் பிததுக் காடசிப்பொருள்களை பற்றிய விளக்கமும தெரி விக்கிறார்.

வெளியீடுகள்.—ஒரு விளக்கமான காட்சிப் பொருள் பட்டியல்.

வேலை நேரம்.—எலலா நாட்களிலும் காலை 8·30 மணி முதல மாலை 5·30 மணி வரை.

அனுமதி.—நபா 1க்கு 6 ந. பை. வீதமும், பளளிப் பிள்ளைகளுக்கு அதில பாதி வீதமும் நுழைவுக் கட்டணம் வசூலிகைபபடுகிறது. ஆனால், திங்கட்கிழமைகளில் மட்டும் கட்டணமில்லாது அனுமதி இலைவசம.

நிர்வாகக் குழு.—இக்காடசிசசாலை ஏழு பேர்கள் அடஙகிய ஒரு நிலையான குழுவினரால நிர்வகிக்கப்படு வருகிறது. அந்த ஏழு போகளில ஐநது பேர் சர்க்காரால நியமிக்கப்பட கின்றனர். இரணடு பேர் காட்சிசசாலைத் தலைவரால் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்.

ஊழியர்கள்.—கௌரவ காவலர் ஸ்ரீ M. N. தேஷ்பாண்டே, B. A. (Hons), உதவிக்காவலா—ஸ்ரீ S. V. பர்வதிகார், M. A., மறறும எவல் தொழில புரிபவர் மூவா.

நிதி நிலை.—ரூ. 5,150. மைசூர் சர்க்காரிடமிருநது ரூ. 3,850-ம பிஜபபூர நகராட்சி மனறததிலிருந்து ரூ. 300-ம். உபகாரப் பணமாகப பெறுகிறது. நுழைவுக் கட்டணச் சீட்டு கள் விற்பனையின மூலம் ரூ. 1,000 கிடைக்கிறது.

விவரக் குறிப்புகள்.—நாள் ஒன்றுக்கு 110 பாவையாளர் கள் வருகிறார்கள. திருவிழா நடைபெறும் நாட்களில் அதிகமான பார்வையாளர்கள் வருகிறார்கள். காட்சிசசாலைக் கட்டடம அதிலுள்ள காட்சிப் பொருள்களுக்குப் போதுமான இடவசதியுள்ளதாய் இருகைகிறது. காட்சிசசாலையை வேலைக் காரர் இரவு பகல் காவல காத்து வருகினறனர். விலை கொடுதது வாங்குதல, அகழ்ந்தெடுத்தல், பொக்கிஷப புதை யல் என அங்கீகாரம பெறற இதரப் பொருட்காட்சிச்சாலை யிலிருநது பெற்றுக்கொளளுதல், மானியமாகப் பெறுதல், பரிவர்த்தனை ஆகிய வழிகளில் காட்சிப் பொருள்கள் சேகரிக் கப்படுகின்றன.

சித்திரதுர்க்கா

ஜனத்தொகை—25,081.

வட்டாரப் பழம்பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—1951.

வரலாறு.—இந்தக் காட்சிச்சாலை கர்நாடகத் தேசத்துக்கு ஆராய்ச்சி நிபுணரான காலஞ்சென்ற H. S. ஜோய்ஸ் என் பவரால் உண்டாக்கப்பட்டது. அவரே காட்சிசசாலையின முதற் காவலராய் அமர்ந்து பழங்காலப் பொருள்களைச் சேர்த்து இதை உருவாக்கினார். இது 1951-ஆம் வருஷத்தில் மைசூர்க கவர்னர் ஸ்ரீ ஜெயசாமராஜேந்திர உடையாரால் முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

நோக்கமும் பொருள்களும்.—இக்காட்சிசசாலை சித்திர துர்க்கா ஜில்லாவின சரித்திரத்தையும் புதை பொருள்களையும் பற்றித தெரிவிப்பதாய் இருக்கிறது. பிரமகிரி, சந்திரவலலி ஆகிய இடங்களில புதைபொருள் ஆராய்ச்சியின்பொருட்டு நிலங்களை அகழ்ந்த போது கிடைத்த பழங்காலப் பொருள்கள் இங்கே காடசிக்கு வைகைப்படடிருக்கினறன. இங்குள்ள காட் சிப் பொருள்களில நாணயங்கள, மண் கலங்கள், சித்தபுரம், பிரமகிரி, ஜட்டிங்கி ராமேஸ்வரம ஆகிய இடங்களிலிருந்து கொணாந்த அசோகருடைய கல்வெட்டுகள, பற்பல பழங் கால ஞாபகார்த்தச் சின்னங்களின போட்டோக்கள, மற்றும் கல்வெட்டுகளில உள்ள கையெழுத்துகள் முதலியன இருக் கின்றன. இவை யாவும் இந்த வட்டார வரலாறறைப்பற்றிக் கற்றுக்கொளள உபகாரமாய் இருக்கினறன.

விளக்க நடவடிக்கைகள்.—மைசூர் ராஜ்யத்திலுள்ள கலா சாலை மாணவர்களும் ஆசிரியர்களும் காட்சிச் சாலையைப் பார்கக வருகிறார்கள். அவர்களுக்கு இங்குள்ள பொருளமீது மிகவும் ஆர்வம் இருந்து வருகிறது.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—திங்கட்கிழமையும், சனிக்கிழமைப் பிற்பக லும், மற்றச் சர்க்கார் விடுமுறை நாட்களும் தவிர மற்ற எல்லா நாட்களிலும் காலை 8 முதல் 10-30 மணி வரையும், மாலை 2-30 முதல் 5 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—காட்சிச்சாலை மைசூர்ப் புதைபொருள் இலாக்கா டைரக்டர் நிர்வாகத்தின் கீழ் இருந்துவருகிறது. கௌரவக காவலர் ஒருவர் இதைக் கவனித்து வருகிறார்.

ஊழியர்கள்.—கௌரவக் காவலர்—ஸ்ரீ. J. S பாண்டுரங்க ஜோய்ஸ், எவிய தொழில் செய்பவன் 1, வேலைக்காரன 1.

நிதி நிலை.—தெரியவிலலை.

விவரக் குறிப்புகள்.—சரித்திரப் பிரசித்தி பெற்ற சித்திர துர்க்காக் கோட்டையின கீழ வாசலான ரங்கை ஹாணு பாகிலு என்ற கட்டடத்தில் இருக்கிறது. தினம் 50 பேரும் வருஷத்துக்கு 20,000 பேரும் பார்வையாளர் வருகின்றனர்.

தார்வார்

ஜனத்தொகை—66,571.

கன்னட ஆராய்ச்சி நிலையப் பொருட்காட்சிச்சாலை

தோற்றம்.—1940.

வரலாறு.—கர்நாடகத் தேசத்து வரலாறு புதைபொருள் பற்றியும், கன்னட மொழி வளாச்சி அம்மொழியிலுள்ள இலக்கியங்கள் பற்றியும் ஆராய்ச்சி செயவதற்காகத் கன்னட ஆராய்ச்சி நிலையம் ஒன்று 1939-ஆம் வருஷத்தில் பம்பாய்ச் சர்க்காரால் தார்வார் என்ற இடததில் ஸ்தாபிகபபட்டது. அவ் விது ஆராய்ச்சி சம்பந்தமாய்த் தேடியதால் கிடைத்த கவர்ச்சி கரமான பொருள்களை வைத்து 1940-ஆம் வருஷத்தில அந்த ஆராய்ச்சி நிலையத்தை அடுத்துச சரித்திரம் இலக்கியங்கள் சம்பந்தப்பட்ட ஒரு பொருட்காட்சிச்சாலை ஆரம்பிக்கபபடடது. இக்காட்சிச்சாலையின முதல் டைரக்டரான பஞ்சமுகி எனபவர் கர்நாடகத் தேசம் முழுவதும் சென்று மதிப்பு மிக்க பொருள் களைச் சேகரித்ததன் மூலம் காட்டிய ஊக்கம இக்காட்சிச் சாலை அதி சிகரமாக வளர்ச்சியுற உதவியிருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச் சாலையில் சரிததிர காலத்துக்கு முற்பட்டதும் சரித்திர காலத்தைச் சேர்ந்தது மான புதைபொருள்கள இருகின்றன. இங்கே புத்த, இந்து, சைன மதங்களைச் சேர்ந்த கறசிலைகளும் உலோகச் சிலைகளும் எராளமாய் இருக்கின்றன. இங்குள்ள சிறபங் களில் பட்டடக்கல் என்னுமிடத்தில் இடைதத நடராஜர் சிலை யானது சிற்பக் கலையில் சிறந்ததாய், பார்ககத்தக ஒரு சிலை யாய் இருக்கிறது. இது கி. பி. எட்டாவது நூறறாணடைச் சேர்ந்தது எனக் கருதப்படுகிறது. இது தவிர, சூப்பர்ஸ்வர், பார்ஸ்வநாதர் ஆகியோர் போன்ற ஜைனமத தீர்த்தங்கரர் களின் சிலைகளும் இருக்கினறன. சுமார் 250 உலோகச் சிலைகள் இருபபதோடு ஐந்து மரச்சிற்பங்களும் இருக்கின்றன. அவற்றில் கின்னரனுடைய சிலை ஒன்றும், வருணனுடைய சிலை ஒனறும் சிறப்பானவை.

எழுத்துகளின் தோற்ற வளர்ச்சிகளை அறிவிக்கும் காட் சிக் கூடத்தில கி. மு. முதலாவது நூற்றாண்டு முதல் கி.பி. 17-வது நூற்றாண்டு வரை கன்னட அகர வரிசை தோன்றி வளர்ந்த விவரங்களைக் காட்டும் அநதந்தக் காலத்து அசல எழுத்துகள் இருக்கின்றன. மேலும், இங்கே பல வீரர்களின் கற்சிலைகளும், உடன்கட்டை ஏறும் காட்சிக் கற்சிற்பங்களும் நிவிதி ஞாபகார்த்தச் சிற்பங்களும் இருக்கின்றன. தவிர, செப்புப் பட்டயங்களும் இருக்கினறன. அவைகளில் முக்கிய மானவை வடகாவோன், மாதவ்பூர் ஆகிய இடங்களிலிருந்து கிடைத்தவையாகும். அவை கி. மு. முதலாவது நூற்றாண் டில் பழக்கத்தில் இருந்த வேதயாகப் பலிகளைப் பற்றி பிராமி மொழி எழுத்துகளில் இருக்கின்றன. அவற்றுடன் சாகா 465-ல் பாதாமியில் முதலாவது புலிகேசி மலைக் கோட்டை கட்டிய விவரங்களை அறிவிக்கும் பாதாமி கல் வெட்டுகளும் இருக்கின்றன.

காட்சிச் சாலையிலுள்ள கையெழுத்துச் சுவடிகள் பிரிவில் இலக்கியம், சரித்திரம் சம்பந்தப்பட்ட முக்கியமான சுவடிகள் தவிர, மோதி மொழியில் மராட்டிய மன்னர்களும் பெர்சிய மொழியில் மகமதிய மன்னர்களும் வெளியிட்ட பல சரித் திர சம்பந்தமான பத்திரங்களும் இருக்கின்றன.

நாணய வகைப் பிரிவில் எராளமான நாணயங்கள் இருக்கினறன. அவைகளில் அநேகம் விஜயநகர, மகா ராஷ்டிர மன்னர்களின் செம்பு நாணயங்களாய இருக்கின் றன. தவிர,"ராஜாதி ராஜா" என்ற புராண கதையின் சம்பவங் களைக் கொண்ட ஒரு குவியல வெளளி நாணயங்கள் இருக் கின்றன. இவைகளின் மூலம் இந்த எல்லையில் பிற் காலச் சோழர்களின் ஆதிக்கம் எவ்வளவு தூரம் பரவி யிருந்தது என்பதைத் தெரிந்துகொள்ள உதவியாய் இருக்கிறது. அத்துடன் ஆந்திர மன்னர்களான சூட்டுக் குலநந்தா, மூலநந்தா ஆகியோரின் ஈய நாணயங்களும் பத்ம தங்காக்களும் இருக்கின்றன. மேலும், காட்சிச்சாலை யில் பல சித்திரங்களைக் கொண்ட ஒரு சித்திர கூடமும் இருக்கிறது.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிச்சாலை ஊழியர்களின் உப யோகத்துக்காகவும் பொதுமக்கள் உபயோகத்துக்காகவும் இங் குள்ள ஆராய்ச்சி நிலையத்தில 6,155 புத்தகங்களும், 79 வகைப் பத்திரிகைகளும் கொண்ட ஒரு புத்தகசாலை இருக்கி றது. பள்ளிச் சிறுவர்களும் மாணவர்களும் காட்சிச் சாலையைப் பார்க்க வரும் பொழுது இங்குள்ள ஊழியர்கள் அவர் களுகுக்காட்சிச்சாலையைக் சுற்றிக் காண்பிப்பதோடு காட்சிப் பொருள்களைப் பற்றி விளக்கமும் தெரிவிக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி காட்சிச்சாலையைப் பார்க்க வருகிறார்கள்.

சில சமயங்களில் விசேஷமான பொருட்காட்சி விழாகள் நடத்தப்படுகின்றன. காட்சிப் பொருள்களுக்குக் கன்னடம் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. காட்சிச்சாலையிலுள்ள பொருள்களைப்பற்றிய விவரங்களைப் படித்துத் தெரிந்து கொளள விரும்புவோர்க்கு வேண்டும் வசதிகள் செய்யப் படுகின்றன. இங்குள்ள ஆராய்ச்சி நிலையத்தில் பருவகாலச் சொற்பொழிவுகள் ஒழுங்காக நடத்தப்படுகின்றன. பின் அவைகள் வெளியீடுகளாகவும் வெளியிடப்படுகின்றன.

வெளியீடுகள்.—கன்னட ஆராய்ச்சி நிலையப் பொருட்காட்சிச் சாலையின் விளக்கப்புத்தகம் ஒன்று இப்பொழுது அச்சிடப்பட்டு வருகிறது. பொருட்காட்சிச் சாலையின தனி வெளியீடாக எதுவு மில்லையாயினும், ஆராய்சசி நிலைய அபிவிருத்தி அறிக்கை களில இப்பொருட்காட்சிச் சாலையைப் பற்றிய தகவல்களும் குறிப்புகளும் இதன் நடவடிக்கைகள் விவரங்களும் வெளி யிடப்படுகின்றன. இதனடியிற்கண்ட ஜாபிதாவில சொல்லிய படி இந்த ஆராயச்சி நிலையம் பல வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறது.

(1) கன்னட ஆராய்ச்சி நிலையப் பொருடகாட்சிச் சாலை யின் விளக்கப் புத்தகம்.

(2) பம்பாய் மாகாணத்தில் செயத கனனட மொழி ஆராய்சசியின் ஆண்டறிக்கை (1930—40)

(3) பம்பாய் மாகாணத்தில் செய்த கன்னட மொழி ஆராய்சசி ஆணடறிக்கையின் சங்கிரகம் (Digest) (1940–41)

(4) பம்பாய் மாகாணத்தில் கன்னட ஆராய்சசியின் வளர்ச்சி விவரங்கள். (1941—46)

5) பம்பாய் ராஜ்யததில் கன்னட ஆராய்ச்சியின் வளர்ச்சி விவரஙகள. (1947—52)

(6) பம்பாய் ராஜ்யத்தில் பன்னிரண்டு வருஷங்களாகச் செய்த கன்னட ஆராய்சசி (1939—51)

கன்னட ஆராய்ச்சி நிலைய முன்னாள் டைரக்டர் R. S. பஞ்சமுகி M. A., எழுதிய நூல்கள்.

(7) இந்திய விக்கிரஹ விளக்கத்தில் கநதர்வர்களும் கின்னரர்களும்.

(8) கர்நாடகக் கட்டடக் கலைவேட்டுகள் (கர்நாடக மொழியில்)

(9) கர்நாடக நூல்களில் காணும் புதைபொருள்களின் வரலாறு

(10–12) கர்நாடகக் கல்வெட்டுகள் (தொகுதி I, II, III-ல் I-வது பாகம்)

(13) கவி ஜிஹ்வாபநதனம் (கன்னட மொழியில்)

(14) மதன திலகா (கன்னட மொழியில்)

(15) ஐராவதா (கன்னட மொழியில்)

(16) விரூபாக்ஷ வஸந்தோதஸவ சம்பு (சம்ஸ் கிருத த்தில்)

(17) தார்வார், கன்னட ஆராய்ச்சி நிலையத்திலுள்ள கையெழுத்துச் சுவடிகளின விளக்கமான பட்டியல். எழுதியவர்—R. S. பஞ்சமுகியும், A. M., அன்னி கெரியும்

(18) முரு உபன்யாசகளு (கனனட மொழியில்) எழு தியவர்—கோவிந்த பாய்

(19) K. V. சுப்பிரமணிய அய்யர், B. A. நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகள்.

(20) கர்நாடக சங்கீதவு தசகூடவு—எழுதியவர்—கின்னரி வித்துவான் உலகூரு கிருஷ்ணாசாரியர்.

(21) சப்தமணி தர்ப்பநாத பதந்தராகளு மாட்டு அநுபவமிருத்வு ஹரி கதாம்ரிதஸாரவு. எழுதிய வர், பேராசிரியர், D. K. பீமசேன ராவ்.

(22) கர்நாடகதா பூர்வ சரித்ரே (கனனட மொழியில்) எழுதியவர், டாக்டர் M. H. கிருஷ்ணா.

வேலை நேரம்.—செவ்வாய் தவிர எல்லா நாட்களிலும் நடுப்பகல் 12 மணி முதல் மாலை 5-மணி வரையும், செவ் வாய்கிழமைகளில மட்டும் காலை 9–மணி முதல 11–30 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—பொருட்காட்சிச் சாலை கன்னட ஆராய்ச்சி நிலையத்தின டைரக்டரான டாக்டர் B.A. சலட்டோர் எனபவர் அதிகாரத்தினகீழ் இருக்கிறது. முனனாள கர்நாடகப் பல்கலைக் கழகத்தின நிர்வாகத்தின் கீழ் இருந்த இந்த ஆராய்ச்சி நிலையத்தை இப்பொழுது பமபாயச சர்க்கார் ஒபபுக்கொண் டுள்ளது.

ஊழியர்கள்.—காவலர் ஸ்ரீ A. M. அன்னிகெரி, M. A. போட்டோ பிடிபபது—சித்திரம் வரைவது—மாதிரிப்படம் வரைவது ஆகிய முததொழில்களையும் செயயும் ஒரு தொழிலாளர், ஒரு வேலைக்காரன.

நிதி நிலை.—ஆராயச்சி நிலையத்தினின்றும் தனியாக இநதப் பொருட்காடசிச சாலைககு நிதி எதுவுமில்லை. ஆயினும், இப்பொருட்காடசிச்சாலைகதுக் காவலர் பிற ஊழியர்கள் ஆகியோர் சம்பளம நீஙகலாக வருஷம் ஒன்றுக்கு ரூ.2,000 வரை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கொடுக்கப்படுகிறது.

விவரக் குறிப்புகள்.—இப்பொழுது இந்தப் பொருட்காட்சிச் சாலை தார்வார் நகரின மததியில் ஒரு வாடகைக் கட்ட டத்தில் இருகறிறது. கூடிய சீக்கிரம் இது பலகலைக் கழகக் கட்டடஙகள இருந்து வரும் எல்லைக்குள் உள்ள கட்டடத்துககு மாற்றப்படும். வருஷம் ஒன்றுக்குச் சுமார் 200 பார்வையாளர்கள் வருகிறார்கள். காட்சிச சாலை யில் இரசாயனப் பரிசோதனைக் கூடம் இல்லை. தவிரவும் விசேஷ காலங்களுக்கென ஒதுக்கி வைக்கப்படும் காட்சிப் பொருள்களுக்கும் நகல பொருள்களுக்கும் போதிய பண்டக சாலை வசதியிலலை. விலையுயாந்த காட்சிப் பொருளகள் இரும்புப் பெட்டிகளில வைத்துப் பூட்டப்பட்டு அவை கனனட ஆராய்சசி நிலைப டைரக்டர் அல்லது காட்சிசசாலை காவலர ஆகிய இவர்களில ஒருவர் பொறுபபில் இருந்து வருகினறன. இரவில் காவல் உண்டு. தேடிச சேகரித்தல, விலைகொடுத்து வாஙகுதல், தானமாகப் பெறுதல், பொகஷிஷப் புதையல் என அஙகீகரிக்கப்பட்ட வேறு காட்சிச்சாலைகளி லிருந்து பெறுதல ஆகிய வழிகளில் பொருள்கள் சேர்க்கப் படுகினறன. பரிவர்ததன முறையிலும் ஊக்கமளிக்கப் படுகிறது.

ஹம்பி

ஜனத்தொகை—12,000.

புதைபொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—1953

வரலாறு.—விஜய நகர சாம்ராஜ்யத் தலைநகராய் இருந்தபடி யால ஹம்பியிலும அதன் சுற்றுபபுறங்களிலும் ஏராள மான புதைபொருளகள் ஆஙகாஙகு, பலஇடங்களில் சிதறிக் கிடந்தன ஆகையால், அவறறை எல்லாம் அகழ்நதெடுதது ஹமபியில அவ்விடத்துப் பொருளகளைக் கொணட ஒரு பொருட்காட்சிச சாலையை நிறுவ வேண்டுமெனத் தீர்மானிகக் பட்டது. அதன்படி புதைபொருள ஆராய்சசி இலாக்கா ஹமபியில் 1953-ஆம் வருஷத்தில ஒரு பொருட்காட்சிச சாலையை ஆரம்பித்து வைத்தது. ஆனல், வெகு

சிக்கிரத்தில் ஏராளமான புதைபொருள்கள் அகப் பட்டிட்டபடியால் அவைகளைக் காட்சிக்கு வைப்பதற்குப் புதிய கட்டடம் ஒன்று தேவை எனத் தெரிந்ததால் அவ்விதமே புதிய கட்டடம் ஒன்று கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வகைக்கு 1957-58-ஆம் வருஷத்தில் ரூ, 78,000 உபகாரப பணமாகக கொடுகபபட்டுக் கட்டட வேலையும் நடந்து வருகிறது. கூடிய கிக்கிரம் கட்டடம் முடிநதுவிடு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. அக்கட்டடம் முடிந்த பின் அதில் பொருட்காடசிச்சாலை நலல முறை யில் அமைக்கப்படும். தற்சமயம் அவைகளெலலாம் ஹம்பியில பழங்கால ஞாபகச சின்னஙகளாகப் பாதுகாக் கபபட்டு வரும் காவற்கூடங்களிலுமு யானை கடடும் கூடங்களிலும் ஏவக்கப்பட்டிருகினறன.

நோக்கமும் பொருள்களும்.—இங்குள்ள பழங்காலக் காட்சிப் பொருள்களாகச் சிற்பங்கள், உடலகட்டையேறும் நிகழ்ச்சி கள செதுக்கபபட்ட கறகள், வீரர் கிலைகள், தூணகள் மூதலிய கட்டடக் கலைப பொருள்களும், மண கலஙகளும். சுட்ட மண் கிலைகளும், மிருதுவான சாந்தால் பூசப்பட்டு வர்ணம் தீடடிய சவரின் மேறபரப்புப் பகுதிகளும், கல்வெடடு களும், மானிய செப்பேடுகளும், கையினால் எழுதிய பன யோலைச் சுவடிகளும், நாணய வகைகளும். குண்டுமணி களும் தங்க நகைகளும், ஒளியூடுருவிச செலலும் கண ணாடித் தாள்களில் சித்திரங்களும் இருக்கின்றன. இவை களில் பல கி. பி. 1336 முதல் 1565-ஆம் வருஷம் வரை யுள்ள விஜயநகர சாம்ராஜ்ய காலத்தைச் சேர்ந்தவை யாகும்.

விளக்க நடவடிக்கைகள்.—இங்குவரும் பார்வையாளர்கள் பொருளகளைப்பற்றி விளக்கம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொளளுமபோதெலலாம் அவர்களுக்கு விளகம் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், பொருடகாட்சிசாலை இன்னும் ஒழுங்கு செய்யபபடாமல் இருபபதால விசேஷமான கல்வி வசதி ஏதும் எற்படுத்தப்படவில்லை. காட்சிப் பொருள் களுகது வேண்டிய விளக்கச் சீட்டுகள்கூட இன்னும் தயாரிக் கப்படவிலலை. ஆனால், அவற்றைக் கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயாரிப்பதென முடிவு செய்யப் பட்டிருக்கிறது. முகியமாகக் காட்சிச்சாலை ஊழியர்களின் உபயோகத்துக்காக இதனுடன் இணைந்ததாகச் சுமார் 250 புத்தகங்களும் ஆறு பததிரிகைகளும் கொண்ட ஒரு சிறிய புத்தகசாலை அமைகபபட்டிருகிறது. பத்திரிகைகள் எல்லாம் சந்தா செலுததியே வரவழைக்கபபடுகின்றன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—ஞாயிற்றுக்கிழமைப் பிற்பகலும், திங்கட் கிழமையும், சர்க்கார் விடுமுறைத் தினஙகளும் தவிர, மற்ற எலலா நாட்களிலும் காலை 11-30 மணி முதல் மாலை 4-30 மணி வரை திறக்கப்படடிருக்கும்.

நிர்வாகக் குழு.—இந்திய சர்க்கார் புதைபொருள் ஆராய்ச்சி இலாக்காவின் ஒரு கிளையாகிய பொருட்காட்சிப் பிரிவின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—ஸ்ரீ C. T. M. கோட்ரய்யா, M.A. குமாஸ்தா ஒருவர், காட்சிச்சாலைப் பணியாட்கள் ஐந்துபேர், கூலியாட்கள, கொத்தர்கள், தச்சர்கள் போன்ற பகுதி நேர வேலையாட் களில் சிலர்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரு. 30,000.

விவரக் குறிப்புகள்.—பொருட்காட்சிச்சாலை கமலாபுரம் கிராமத்துக்கு மிகவும் அருகில் இருகிறது. நாளொன்றுக்குச் சுமார் 300 பார்வையாளாகளும், வருஷத்துக்கு 1,10,000 பார்வையாளர்களும் காட்சிச்சாலையைப் பார்க்க வருகிறாகள். கோடை காலததில் இந்தப் பக்கங்களில் பொருட்காட்சி களும் திருவிழாக்களும் நடைபெறும்பொழுது, அதிலும் முக்கியமாக இவ்வூரிலுள்ள விருபாக்ஷர் கோயில் தேர்த் திருவிழாவின் போதும பார்வையாளர்களின் கூட்டம் மிகவும் அதிகமாய இருக்கிறது. தேடிச் சேகரித்தல், அகழ்ந் தெடுத்தல், விலை கொடுத்து வாங்குதல், பொக்கிஷப்புதையல் களான மற்றக் காட்சிச்சாலைகளிலிருந்து பெறுதல் முதலான வழிகளில் காட்சிப் பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. இக் காட்சிச்சாலையிலுள்ள பொருளகள் கெட்டுப் போகாமல் நல்ல முறையில் நீடித்து இருக்கும் வகைக்குச் செய்யக்கூடிய ரசாயனப் பரிசோதனைகளைப் புதைபொருள் ஆராய்ச்சி இலாக்காவின் மருத்துவக்கிளை செய்து வருகிறது.

மங்களூர்

ஜனத்தொகை—117,083.

சர்க்கார் பொருட்காட்சிச்சாலை, ஸ்ரீமந்தி பவன், பிஜாய்.

தோற்றம்.—1957.

(5) "பிரதசாரி வித்தியாஸ்ரமம்" என்ற பெயருடன் மாணவர் கலவி முடியும் வரை பள்ளிகூடத்திலேயே வசித்து வரும்படியான வசதிகளுடன் கூடிய உயர்தரப் பளளி.

(6) ஒரு சுகாதார நிலையம்.

(7) சமூக (வயது வந்தோர்) கல்வி நிலையம்.

(8) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(9) விவசாயக் கல்வியும் மீன பிடிக்கும பயிற்சியும்.

(10) பாமர மக்களின் கலைத்திறனும் கைத்தொழில் நுட்ப வேலைப் பொருள்கள் செயயும் ஆற்றலும் விளக்கும் பொருட் காட்சிச்சாலை முதலியனவும்.

வெளியீடுகள்.—"வங்காள மாகாணத்தைச சேர்ந்த பாமர மக்களின் நடனங்கள்" என்ற பெயருள்ள புஸ்தகம் ஒன்று ஸ்ரீ குருசடேட்டால் பதிப்பிக்கப்பட்டு விற்பனை யாகி வருகிறது. கிடைக்குமிடம்: வங்காள பிரதசாரி சங்கம், 191/1, பிபீன் பீகாரி கங்கூலி தெரு (பழைய 191, பவ் பஸார் தெரு), கல்கத்தா-12.

வேலை நேரம்.—ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி, சனிக் கிழமைகளில் மத்தியானம் 1 மணி முதல் மாலை 4 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—வங்காள பிரதசாரி சங்கத்தின் சம்ஸத (நிர்வாகக் குழு) இக்காட்சிச்சாலையை நிர்வகிக் கிறது.

ஊழியர்கள்.—சங்கத்தின் கல்வி போதகரூள் ஒருவர் தற்சமயம் இந்தப் பொருட்காட்சிச் சாலையின் வேலைகளைக் கவனித்து வருகிறார். இன்னும் காவலர் நியமிக்கப்பட வில்லை.

நிதி நிலை.— தனித்திட்டம் இல்லை.

விவரக் குறிப்புகள்.—இல்லை.

கந்தல்பரா (நைஹதி).

ஜனத்தொகை—75,596.

ரிஷி பங்கிம் புஸ்தக சாலையும் பொருட்காட்சிச் சாலையும்.

தோற்றம்.—1954.

வரலாறு.—1938-ஆம் வருஷத்தில் வங்காள மாகாணம் முழுவதிலும் பங்கிம சந்திரருடைய நூற்றாண்டு விழாக கொண்டாடப்பட்ட பொழுது பங்கிய சாஹித்ய பரிஷத், பங்கிம் சந்திரர் வசித்து வந்த வீட்டின ஒரு பாகத்தை [இந்த இடத்திலிருந்துகொண்டுதான பங்கிம் சந்திரர் இறவாப் புகழுடைய "வந்தே மாதரம்" கீதத்தையும் நவீனங்களையும் (நாவலகளையும்) மற்றும் பல புஸ்தகங்களை யும் எழுதினார்] கிரயத்துக்கு வாங்கி, அதைப் பழுது பார்த்து நன்னிலையில் வைததுப பாதுகாத்து வந்தது. பின் பங்கிம சந்திரருடன் தொடர்புடைய இலக்கியங்களைச் சேர்த்து ஒரு புஸ்தக சாலையும் பொருடகாட்சிச் சாலையும் ஸ்தாபிக்க வேணடுமென்ற கருததுடன இந்த வீடு 1954-ஆம் வருஷத் தில் வங்காள சாக்காரிடம் ஒப்படைக்கபபடடது. பங்கிம் சந்திரரால் எழுதப்பட்டனவும் அவரைப்பற்றிப் பிறர் எழுதி யுளளனவுமான நூல்களைக கொணட ஒரு புஸதகசாலை இப்பொழுது இஙகே இருந்து வருகிறது.

இநதக் கடடடத்தில் 3 சிறிய அறைகளும், ஒரு பெரிய விசாலமான அறையும கட்டடத்தையடுதது ஒரு தோட்டமும் இருக்கின்றன. பங்கிம் சந்திரருடன் தொடாபுளள பொருள்கள் யாவும் அவருடைய சகோதரரின் பேரர் ஸ்ரீ சதன்ஜிப் சந்திர சட்டர்ஜீ என்பவரால இந்தப் பொருட்காட்சிச்சாலைக்கு மானியமாகக் கொடுக்கபபட்டிருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—பங்கிம சநதிரா உபயோகித்த அவருடைய தலைப்பாகை, போர்வை, விளக்கு, பெட்டி முதலியனவும், அவரால பல பேர்களுக்கு எழுதப்பட்ட 150 கடிதங்களும், அவருடைய கையெழுததுப் பிரதிகளில் சில பிரதிகளும், அவருடைய குடும்பததினரின 16 போட்டோப் படங்களும், பல வழிகளில் சேகரிதத அவர் சம்பநதப்பட்ட மற்றும் பல விவரங்களையுடைய பத்திரங்களும இங்கே இருக்கினறன.

விளக்க நடவடிக்கைகள்.—இநதப் பொருட்காட்சிச சாலையை மாணவாகளும் வித்தியார்த்திகளும் ஒழுங்காக வந்து பாாக் கினறனா. இலக்கியம் சமபநதப்பட்ட—அதிலும் முக்கியமாய்ப் பங்கிம சந்திரருடைய நூலகளையுடைய—புஸ்தகசாலை யொன்று இஙகே இருக்கிறது. இக்காட்சிச் சாலையைப் பார்க்க வரும் மாணவர்களுக்கும் பட்டப்படிப்புக்கு மேற்படிப்புப படிக்கும்

மாணவர்களுக்கும் இங்குள்ள காட்சிப் பொருள்களைப் பற்றி விளக்கம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வித விளக்கம் தெரிவிப்பவர் இக்காட்சிச்சாலையின் காவலரே. அவரே புஸ்தக சாலைப் பொறுப்பாளியாயும் இருக்கிறார். சில சமயங்களில் வெளியிலுள்ள வித்தியார்த்திகளைக் கொண்டும் தனித்துறை ஆராய்ச்சித் துறையில புகழ் பெற்றோர்களைக் கொண்டும் சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன. விளக்கச் சீட்டுகள் வங்காள பாஷையில் இருக்கின்றன. இக்காட்சிச் சாலைக்கு அருகிலுள்ள ரிஷி பங்கிம் சந்திரர் கல்லூரி மாணவர்கள் இக்காட்சிச் சாலைப் பொருள்களைப் பற்றிப் படிப்பதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் மிகவும் ஆர்வம் உள்ளவர்களாய இருக்கிறார்கள்.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—வியாழக்கிழமைகளும் சர்க்கார் விடுமுறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் மத்தியானம் 12 மணி முதல் மாலை 6 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—மேற்கு வங்காளச் சர்க்காரால் நியமிக்கப் பட்ட ஒரு குழுவினர் இக்காட்சிச் சாலையை நிர்வகித்து வருகின்றனர்.

ஊழியர்கள்.—காவலரும் சௌக்கிதாரும்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 3,000.

விவரக் குறிப்புகள்.—புஸ்தகசாலையும் பொருட்காட்சிச் சாலையும் பொருத்தமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. நாளொன்றுக்குச் சராசரி 50 பார்வையாளர்களும் வருஷத்துக்கு 18,250 பேர்களும் இக்காட்சிச் சாலையைப் பார்க்க வருகிறார்கள். மானியமாகவும் வீலை கொடுத்து வாங்கும் வழியிலும் இக்காட்சிச் சாலைக்குக் காட்சிப் பொருள்கள் சேர்க்கப்படுகின்றன.

மால்டா.

ஜனத்தொகை—37,420.

B. R. ஸென் பொருட்காட்சிச் சாலை.

தோற்றம்.—1937.

வரலாறு.—மால்டாவிலிருந்து கோர், பண்டுவா ஆகிய இடங்கள் வரை தொடர்ந்து கிடைக்கக்கூடியனவாய் இருந்த பழங்காலப் பொருள்களையும் மத்திய காலப் பழம்பொருள்களையும் சேர்த்தால் மால்டாவில் ஒரு பொருட்காட்சிசசாலை அமைபபதற்கு அது ஒரு நோத்தியான வட்டாரமாக அமையும் எனபது தெரிய வந்தது. அதன்பேரில் இந்தப் பொருட்காட்சிசசாலை தோன்றக் காரணகர்த்தாகளாகச் சிலர் ஒன்றுகூடி, அப்பொழுது மால்டா ஜில்லா மாஜிஸ்டிரேட்டாக இருந்த ஸ்ரீ B. R. ஸென், I.C.S. என்பவர் தலைமையில் வங்காள சர்வகலாசாலை நிர்வாகத்துறையில் உத்தியோகஸ்தராயிருந்த ஸ்ரீ K.C. பர்மன் என்பவரது உதவியால் இந்தப் பொருட்காட்சிச்சாலையை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவ்வகைக்குக காட்சிப் பொருள்களைச் சேர்ப்பதற்காக எடுத்த முயற்சியில் காலஞ்சென்ற பிரமாதநாத் மிஸ்ரா M.A., என்பவரும் மிகவும் உதவி செய்தார். எனவே, இவ்விதமான முயற்சிகளின் பயனுக்க் காட்சிப் பொருள்கள் சேர்க்கப்பட்டு, இந்தப் பொருட்காட்சிச் சாலை 1937-ஆம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது டாக்கா சர்வகலாசாலையின் உப அத்தியட்சராயிருந்த டாக்டர் R. C. மஜும்தார் என்பவர் இந்தப் பொருட்காட்சிச சாலையைத் திறந்துவைத்தார்.

இந்தப் பொருட்காட்சிச் சாலை தர்மகர்த்தர்கள் குழு வொன்றால் நிர்வகிக்கப்படுகிறது. இக்குழுவில் மஹா மஹோபாத்தியாய பண்டித விதுசேகர் சாஸ்திரி என்பவரும் ஒரு தர்மகர்த்தராய் இருக்கிறார். இது B. R. ஸென் பொது ஜன புஸ்தகசாலையை அடுத்துள்ள ஓர் அறையில் நிறுவப் பட்டிருக்கிறது. இந்தப் பொருட்காட்சிச்சாலைக்கு ஒரு கட்டடம் கட்டும் வகைக்குச் சர்க்காரால் அனுமதி கொடுக்கப்பட்டு அவ் வகைக்குச் சர்க்கார் கொடுக்கக்கூடிய ரூ. 30,000 இவ்வருஷத்தில் கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது. இந்தப் பொருட்காட்சிச் சாலை இந்திய சர்க்காரின் 1860-ஆம் வருஷத்து (XXI-வது சட்டம்) குழுக்கள் பதிவுச் சட்டபபடி பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—இந்தப் பொருட்காட்சிச் சாலையில் இந்து மதத்தைச் சேர்ந்த தெய்வச் சிலைகள் இருக்கின்றன. அவற்றில் சூரியன், விஷ்ணு, தேவி சிலைகள் முக்கியமானவை. இவை தவிர, சில பௌத்த விக்கிரகங்களும் வேறு பல வகைப்பட்ட சிலைகளும் இருக்கின்றன. மேலும், இரண்டாம் கோபால தேவருடைய செப்புப் பட்டயம் ஒன்றும் இங்கே இருக்கிறது. நாணயப் பெட்டியில் வங்காளத்தில் ஆரம்ப காலத்தில் தனியரசு செலுத்திய சுல்தான்களின் நாணயங்களும், நேப்பாள, திரிபுராத் தேசத்து நாணயங்களும், டில்லி சுல்தான்கள், பதானிய, மொகலாய சக்கரவர்த்திகள் முதலியோரின் நாணயங்களும் இருக்கின்றன. இவையு மன்றிப் பழங்காலத்தைச் சேர்ந்த சில முக்கியமான புஸ்தகங்களும் சில அபூர்வமான கையெழுத்துப் பிரதிகளும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இக்காட்சிச்சாலை ஊழியர்களின் உபயோகத்துக்கென 300 புஸ்தகங்கள் கொண்ட ஒரு புஸ்தக சாலை இருக்கிறது. ஆனால், அவறறை வாசிக்கப் பொது மக்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். இககாட்சிச் சாலையிலுள்ள பொருள்களை ஆராய்ச்சி செய்யவும் அவற்றைப்பற்றிப் படித்துத் தெரிந்துகொளளவும் வசதிகள் செய்யப் பட்டிருப்பதுடன், அவற்றைப்பற்றி விளக்கம் விரும்பும் மாணவர்களுக்கு விளக்கமும் தெரிவிக்கப்படுகிறது. சில சமயங்களில் விசேஷப் பொருட்காட்சி விழாக்களும் நடத்தப் படுகின்றன. விளக்கச் சீட்டுகள் ஆங்கிலம், வங்காளி ஆகிய இரு பாஷைகளிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பொருட்காட்சிச் சாலையிலுள்ள காட்சிப் பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சி, படிப்பு ஆகியவற்றில் சர்வகலாசாலை ஆர்வம் கொள்வதில்லையாயினும், மால்டா ஜில்லாவிலுள்ள கல்லூரி களும் மற்றுமுள்ள கல்வி ஸ்தாபனங்களும் அவ்வகையில் ஆர்வம் உடையனவாய் இருக்கின்றன.

வெளியீடுகள்.—(1) இரண்டாம் கோபால் தேவருடைய செப்புப் பட்டயங்கள்.—பதிப்பித்தவர், காலஞ்சென்ற பிரமாத நாத் மிஸ்ரா, M.R.A.S. (புதைபொருள்கள் சம்பந்தமாக ஸ்ரீ K. C. ஸர், M.A. எனபார் பதிப்பித்திருந்த அத்துறைக்கு வழி காட்டியான பதிப்பை, டாக்டர் R.C. மஜும்தாரை ஒருவராக வைத்துக் கலந்து அதிலிருந்து ஆராய்ந்து எடுத்துத் தொகுக்கப்பட்டது இப்புஸ்தகம்.)

(2) கோர் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட பழங் காலததைச சேர்ந்த அழிநது போன கட்டப் பொருள்கள்.—பதிப்பித்தவர், காலஞ்சென்ற பிரமாத நாத் மிஸ்ரா, M.R.A.S. இப்புத்தகம் மேன்மை தங்கிய மேற்கு வங்கக் கவர்னர் டாக்டர் H.C. முக்கர்ஜிக்கு ஒரு வழி காட்டி (விளக்கம் தெரிவிக்கும் புஸ்தகமாக இருக்கும்படி நாளது வரையுள்ள விவரங்களுடன் தொகுத்து எழுதப்பட்டிருக்கிறது.)

(3) தபால் கார்டு அளவுள்ள பட அட்டைகள்.—இவை முன்னால் மால்டா ஜில்லா மாஜிஸ்டிரேட்டாய் இருந்து வரும் இப்பொழுது மேற்கு வங்கச் சர்க்காரின் அபிவிருத்திக் கமிஷனராய் இருநது வருபவருமான ஸ்ரீ அசோகமித்திரா, I.C.S. என்பவரால் போட்டோக்களாகப் படம் எடுக்கப்பட்டு, அச்சிடப்பட்டு, படங்கள் பொதிந்த புஸ்தகமாக வெளியிடப்பட்டுள்ளன.

வேலை நேரம்.—எல்லா நாட்களிலும் காலை 7 மணி முதல் 9 மணி வரையும், மாலை 6 மணி முதல் 9 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும். சனிக்கிழமைகளில் பெண்கள் மட்டும் அனுமதிக்கப்படுகிறார்கள்

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—இந்தப் பொருட்காட்சிச்சாலை, தர்மகர்த்தர்கள் குழுவொன்றினும், பொதுஜனப் புஸ்தகசாலையின் சந்தாதார்களாகவும் போஷகர்களாகவும் இருப்பவர்களால் நியமிக்கப்படும் செயற்குழுவொன்றினும் நிர்வகிக்கப்படுகிறது.

ஊழியர்கள்.—ஒரு கௌரவ காரியதரிசியும், ஒரு கௌரவ உதவிக் காரியதரிசியும், முழு நேர வேலையாளான ஒரு காவற்காரன் மட்டுந்தான்.

நிதி நிலை.—வருஷத்துக்கு ரூ. 830.

	ரூ.	அ.	பை.
இதில் மேற்கு வங்கச் சர்க்கார் உபகாரப் பணம்.	600	0	0
ஜில்லா போர்டார் உபகாரப் பணம் ..	120	0	0
நகராட்சி மன்ற உபகாரப் பணம் ..	60	0	0
பொதுஜன வாசக சாலை உபகாரப் பணம்.	50	0	0
ஆக ரூ.	830	0	0

விவரக் குறிப்புகள்.—இந்தப் பொருட்காட்சிச்சாலையானது, மால்டா ஜில்லாவினும் அதன் சுற்றுப்புறங்களாயுள்ளதும் மகமதியர் ஆட்சிக் காலத்தில் வங்காளத்தின் தலைநகராயிருந்ததுமான பாண்டுவா, பழங்கால கௌர் ஆகிய இடங்களில் கிடைத்ததுமான பழம்பொருள்களை வைத்து உருவாக்கப்பட்ட ஒரு மண்டலப் பொருட்காட்சிச் சாலையாய் இருக்கிறது. நாளொன்றுக்குச் சராசரி 50 பார்வையாளர்கள் வருகிறார்கள். ஆனால், தனிப்பட்ட விசேஷக் காலங்களில் மேலும் அதிகமான பார்வையாளர்கள் வருகிறார்கள். இந்தக் காட்சிச்சாலைக் கட்டடம் இடவசதியில்லாமலும் காட்சிப் பொருள்களை வைப்பதற்குத் தகுதியிலாமலும் இருப்பதால் வேறு ஒரு தகுதியான கட்டடம் கட்டவேண்டுமென்பது இந்தக் காட்சிச்சாலை நிர்வாகஸ்தாகளின் எண்ணமாய் இருந்து வருகிறது. நாணயங்களும் விலையுயர்ந்த பொருள்களும் இரும்புப் பெட்டிகளில் வைத்துப் பூட்டப்பட்டு, காரியதரிசி, உதவிக காரியதரிசி ஆகியோர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. தேடிச் சேகரித்தல், அகழ்ந்தெடுத்தல், மானியங்களாகக் கிடைத்தல், ஆகிய இவ்வழிகளில் காட்சிப் பொருள்கள் சேர்க்கப்படுகினறன. பொக்கிஷப் புதையலென இக்காட்சிச்சாலை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இக்காட்சிச்சாலை தன்னிடமுள்ள காட்சிப் பொருள்களை வேனைய காட்சிச்சாலைப் பொருள்களுடன் பரஸ்பர சம்மதத்துடன் பரிவர்த்தனை செய்துகொள்ள விரும்புகிறது. இக்காட்சிச்சாலையின் நிர்வாஸ்கதர்களுக்கு இப்பொழுது இதிலிருக்கும் கல்வெட்டுப் பிரிவு, புதைபொருட்பிரிவு, நாணயங்கள் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு மேலும் காட்சிப் பொருள்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்து வருவதோடல்லாமல், இக்காட்சிச் சாலையில் பாமர மக்களின் கலைத்திறனையும் கைத்தொழில் நுட்பவேலைத்திறனையும் எடுத்துக்காட்டும் சித்திரக் காட்சிக் கூடமொன்றையும் சேர்க்கவேண்டுமென்ற எண்ணமும் இருந்து வருகிறது. இடவசதிக் குறைவு காரணமாக, இங்கிருந்து எட்டு மைல் தூரத்திலிருக்கும் கௌர் என்ற இடத்திலுள்ள "கூம்டி" கதவை இக்காட்சிச்சாலையில் கொண்டு வந்து வைக்கவேண்டும் எனத் தீர்மானித்துள்ளதும் காலதாமதமாகிக்கொண்டிருக்கிறது.

சாந்தி நிகேதன் (போல்பூர்).

ஜனத்தொகை—77,440.

இரவீந்திர சாதனை (தாகூர் பொருட்காட்சிச்சாலை).

தோற்றம்.—1942.

வரலாறு.—கவிஞர் இரவீந்திரநாத தாகூரின் ஞாபகம் எப்பொழுதும் நிலைத்திருக்கும்பொருட்டு 1942-ஆம் வருஷம் ஜூலை 1-ம் தேதியன்று சாந்தி நிகேதனத்தில் ஆராய்ச்சிக் கழகமாகவும் கவிஞரின் ஞாபகார்த்தப் பொருட்காட்சிச்சாலையாகவும் "இரவீந்திர சாதனை" என்ற பெயருடன் இந்தப் பொருட்காட்சிச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. கவிஞர் தம வாழ்நாட்களின் இறுதிக் காலத்தைக் கழித்த 'உதயனை' என்ற கட்டடத்தின் தென்புறஇல் வரிசையாயிருந்த அறைகளை அவ்வாறு பொருட்காட்சிச்சாலை வைத்துக்கொள்ளும்படி இரவீந்திர நாததாகூர அன்பாகக் கொடுத்தார். விஸ்வபாரதியினை ஸ்தாபகரும் தலைவருமாயிருந்தவருடைய முன்னுள அலுவலகத்திலிருந்த புத்தகசாலையும் அதனோடிணைந்த பழங்காலச் சம்பவங்களின் விவரக் குறிப்புகளடங்கிய தஸ்தாவேசுகளும், அவைகளுடன் கவிஞர் இரவீந்திரநாத தாகூர் தம் சொந்ததில் சேகரித்து வைத்திருந்த மதிப்புமிக்க காட்சிப் பொருள்களும் சர்வகலாசாலைகு அன்பளிப்பாகக கொடுக்கப்படடன. இவைகளையே மூலப்பொருளாகள வைத்து, இநதப் பொருட்காட்சிச் சாலை ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் இநதியாவிலும் வெளிநாடுகளிலுமுளள கவிஞரின நணபர்களும் அவருடைய புகழறிந்தோரும சேகரித்துக கொடுத்ததும் அன்பளிப்பாக வழஙகியதுமான பொருள்களும் சோந்ததன மூலம் இங்குள்ள காட்சிப் பொருளகளின் எண்ணிக்கை அதிகமாயிற்று. இரவீநதிர சாதனைவின் கொள்கைகள் என்ன என்பது அடியிற் காணுமாறு வெளியிடப்பட்டது :

இந்தப் பொருட்காட்சிச் சாலை கவிஞர் விட்டுச்சென்ற சில பழம்பொருள்களை மட்டும் கொண்டதாய் இராமல், கவிஞரின் இலக்கியஙகளைப் படிக்கவும், படித்துணர்ந்து புகழவும், அவற்றிலுள்ள விஷயங்களைத் தெளிவுபடப் புரிந்துகொள்ளவும், அவற்றைப் பிரசாரம் வாயிலாக எங்கும் பரபபவும் கற்றுக்கொடுக்கும் ஒரு சர்வ கலாசாலையாகவும், அவருடைய இலக்கியங்களையும கலைப்பொருள்களையும் அவருடைய வாழ்க்கையோடும் நூல்களோடும் சம்பந்தப்பட்ட பழங்கால விவரக் குறிப்புகளடஙகிய தஸ்தாவேசுகளையும் கொண்ட ஒரு பண்டக சாலையாகவும், அவருடைய ஞாபகததை நிலைநிறுத்தக்கூடிய பொருளகளுக்கெல்லாம் இது ஒரு நிலைக்களனாகவும் வளர்ந்தோங்கி என்றும் அழியாத ஸ்தாபனமாக நிலவி வரவேண்டும் என்பதே.

நோக்கமும் பொருள்களும்.—இரவீந்திர சாதனைவில் அடியிற்காணும் பிரிவுகள் இருகின்றன :—

(1) தாகூரால எழுதப்பட்டனவும் தாகூரைப்பற்றிப் பிறரால் எழுதப்பட்டனவுமான புஸ்தகங்களைக் கொண்ட புஸ்தக சாலை.

(2) வர்த்தமானப் பத்திரிகைகளில் வெளி வந்தவையும் பிறவுமான பழங்கால நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் குறிப்புகள்.

(3) கடிதங்களும் கையெழுத்துப் பிரதிகளும்.

(4) இரவீந்திரநாத தாகூரால் வரையப்பட்ட சித்திரங்கள்.

(5) போட்டோக்களும் திரைப்படச் சுருள்களும்.

(6) தாகூரின் பாடல்கள் பதிவு செய்யப்பட்ட இசைத் தட்டுகள்.

(7) ஞாபகக் குறிப்புப்பொருள்கள், தானமாகக் கிடைத்த பொருள்கள், தனிச் சொந்தமான பொருள்கள்.

விளக்க நடவடிக்கைகள்.—இந்தப் பொருட்காட்சிச்சாலையைச் சேர்ந்த புஸ்தகசாலையில் தாகூரின் வாழ்க்கை வரலாறு, அவரால் எழுதப்பட்ட புஸ்தகங்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட சுமார் 6,800 புஸ்தகங்களும் 4,600 பருவகால வர்த்தமானப் பத்திரிகைகள் முதலியனவும் இருக்கின்றன. இவற்றை மாணவர்களும் ஆராய்ச்சியாளர்களும் எடுத்துப் படிக்கலாம். சர்வகலாசாலையாரால் 'சித்தி பதிரா' என்ற பெயருடன் வெளியிடப்பட்ட தாகூர் கடிதங்களின் தொடர்ச்சிக்கு வேண்டிய விவரங்கள் இந்தப் பொருட்காட்சிச்சாலையிலிருந்தே எடுக்கப்பட்டன. விசேஷ சம்பவங்கள் நிகழும் நாட்களில் விசேஷப் பொருட்காட்சி விழாக்கள் நடத்தப்படுகின்றன. காட்சிப் பொருள்களுக்கு ஆங்கிலத்தில் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பொருட்காட்சிச் சாலையைப் பார்க்க உலகிலுள்ள எல்லாப் பகுதிகளிலிருந்தும் பார்வையாளர் வருவதால் ஆங்கிலமே எல்லோராலும் புரிந்துகொள்ளக்கூடியதும் நாட்டுடன் நாடு தொடர்புடையதுமான பாஷை எனத் தோந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

வெளியீடுகள்.—(1) சாந்தி நிகேதன் "இரவீந்திர சாதனை" என்னும் தலைப்புடைய விலர விளக்கச் சிறு புத்தகம்.

(2) தாகூர் எழுதியவற்றின் அசலுக்குச் சரியான நகல்கள். இந்நகல் பிரதிகள் அடிக்கடி திரும்பத் திரும்ப அச்சடிக்கப்பட்டு இலவசமாக வினியோகிக்கப்படுகின்றன.

வேலை நேரம்.—புதன்கிழமையும் செவ்வாய்க்கிழமை பிற்பகலும் தவிர, மற்றெல்லா நாட்களிலும் திறக்கப்பட்டிருக்கும். மழை காலத்தில் காலை 7 மணி முதல் 11-30 மணிவரையும், மாலை 2 மணி முதல 4-30 மணி வரையும்; கோடைகாலத்தில் காலை 7 மணி முதல் 11-30 மணி வரையும், மாலை 3 மணி முதல் 5-30 மணி வரையும் வேலை நேரம். பார்வையாளர்கள் பிற்பகலில் மட்டும அனுமதிக்கப்படுகிறார்கள்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—இந்தப்பொருட்காட்சிச்சாலை சர்வகலாசாலையாரால் நிர்வகிக்கப்படட வருகிறது.

ஊழியர்கள்.—காவலர் ஸ்ரீ K. C. ராய், உதவிக் காவலர் 1, இலக்கிய உதவியதிகாரி 1, சுருக்கெழுத்து எழுதுவதும் டைப் அடிப்பதுமாகிய வேலைகளுடன் அலுவலக உதவியாளர் 1, வித்தியார்த்தி 1, வேலைக்காரர்கள் 2, தர்வான் 1.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம், ரூ. 28,639.

விவரக் குறிப்புகள்.—கவிஞர் தமது இறுதி நாட்களைக் கழித்த உத்தராயண எல்லையில இந்தப பொருட்காட்சிச்சாலை ஸ்தாபிகபப்பட்டுள்ளது. நாளொன்றுக்குச் சராசரி 50 பார்வையாளர்கள் வருகிறார்கள். ஆனால், கவிஞருடன் சம்பந்தப்பட்ட விசேஷ நாட்களில் கூட்டம் அதிகமாயிருக்கிறது. இந்தப் பொருட்காட்சிச் சாலை இருந்துவரும் 'உதயணை' எனற கட்டடமே கவிஞரின வாசஸ்தலமானபடியால், முதற்கண் அந்தக் கட்டடமே ஒரு காட்சிப் பொருளாகும். அந்தக் கட்டடத்தில் தாகூரின் சித்திரங்கள் போன்ற சிலவகைக் காட்சிப் பொருளகளைக் காட்சிக்கு வைப்பதற்குப் போதிய இடவசதியில்லை. பொருட்காட்சிச் சாலையில் பார்வையாளர்களின் வசதிக்காக ஆசனங்களும் மின்சார விசிறிகள் முதலியனவும் போடப்பட்டிருக்கின்றன. இக்காட்சிச்சாலைக்கு வேண்டும் காட்சிப் பொருள்கள் சேகரிக்கப்படும் வழிகள்:

(1) இதன் ஸ்தாபகரும் நூலவருமானவருடைய அலுவலகத்தோடு இணைகபப்பட்டிருந்த புஸ்தகசாலை;

(2) கவிஞரின குமாரர் ஸ்ரீ ரதீந்திரநாத தாகூரும் கவிஞரின் மருமகள் ஸ்ரீமதி பிரதிமா தாகூரும் தாம் சொந்தமாகச் சேகரித்து வைத்திருந்த பொருள்கள்;

(3) இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உள்ள கவிஞரின் நண்பர்களும் புகழ்ச்சியாளர்களும் நன்கொடையாகவும் மானியமாகவும் கொடுத்த பொருள்கள்;

(4) சமயாசமயங்களில் விலைகொடுத்து வாங்கப்பட்டவை. ஆகிய இவ்வழிகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

இரவீந்திர சாதனை தொன்றுதொட்டுச் சர்வகலாசாலைகளுடனும், இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள பல ஸ்தாபனங்கள், கழகங்களுடனும் தொடர்புடையதாய் இருந்து வருகிறது. இந்தியப் பொருட்காட்சிச் சாலைகள் சங்கத்தில் இது ஓர் அங்கமாய இருக்கிறது. 'உத்தராயணை' என்னும் பெயருள்ள சொத்தை (நிலங்களை) இந்தப் பொருட்காட்சிச் சாலையின் ஆஸ்தியாக மாற்றி, அதில் ஒரு புஸ்தகசாலை, ஒரு பழங்கால தஸ்தாவேசுகள் அறை, ஒரு பொருட்காட்சிச்சாலை, ஒரு சித்திர கூடம் ஒரு சொற்பொழிவு மண்டபம், சபா மண்டபம் முதலியவற்றையும் ஏற்படுத்த வேண்டுமென்றும், இவைகளை நிர்வகிக்கத் தர்மகர்த்தர்கள் குழுவொன்றையும் அமைக்கவேண்டுமென்றும் ஒரு திட்டமிடப்பட்டிருக்கிறது. இவ்வகைக்கு எல்லோரும் உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டு ஸ்ரீ ஜவஹர்லால் நேரு, (விஸ்வபாரதி சர்வகலாசாலை அத்தியட்சர்) முதலியோரால் ஏற்கெனவே வேண்டுகோளும் வெளியிடப்பட்டிருக்கிறது.

செரம்பூர்.

ஜனத்தொகை—80,000.

செரம்பூர் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—1818.

வரலாறு.—இந்தப் பொருட்காட்சிச்சாலை 1818-ம் வருஷத்தில் பிரதான மதபோதகரான வில்லியம் கேரி என்பவரால் அவருடன் உழைத்த J. மார்ஷ்மேன், W. வார்டு ஆகிய இருவரின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின் அவருடைய பிற்காலத்தில் இருந்தவர்களால் அது விருத்தி செய்யப்பட்டது.

நோக்கமும் பொருள்களும்.—இந்தப் பொருட்காட்சிச்சாலையில் அபூர்வமான புஸ்தகங்கள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானது கேரியால் 34 இந்திய பாஷைகளில் மொழி பெயர்த்து எழுதப்பட்ட விவிலிய நூலின் முதற்பதிப்பு ஆகும். மற்றுமுள்ள புஸ்தகங்களில் முக்கியமானவை, "இந்திய நண்பன்" என்பதன் முதல் வெளியீடுகள், "சமாச்சார் தர்ப்பண", "திக் தபரன்" என்ற வர்த்தமானப் பத்திரிகைகள். இவை தவிர, இந்து மதத்தின் புனித நூல்களாகிய வேதங்கள், உபநிஷத்துகள் போன்றவைகளின் கையெழுத்துப் பிரதிகள் முதலியனவும் இருக்கின்றன. 19-வது நூறாண்டின் ஆரம்பத்தில மத போதகர்கள் உபயோகித்த நாற்காலிகள், மேஜைகள் போன்ற தட்டு முட்டுச் சாமானகளும் இருப்பதுடன், அந்தக் காலத்தைச் சேர்ந்த சிறிய நீராவி இஞ்சினும் இன்னும் வேலை செய்யக் கூடிய நிலைமையிலேயே இருக்கிறது.

விளக்க நடவடிக்கைகள்.—செரம்பூர்க் கல்லூரி கல்கத்தாச் சர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்டதாய், கலைகள், விஞ்ஞானம் போதிக்கும் முதல்தரக் கல்லூரியாயிருப்பதுடன், சமய ஆசார (கிறிஸ்தவ) சர்வகலாசாலையாயும் இருக்கிறது. இந்த உயர்பதவி இக்கல்லூரிக்கு 1827—ஆம வருஷத்து டென்மார்க்கு அரசர் நியமனப் பத்திரத்தின் மூலம் கொடுக்கப்பட்டது. இந்நிலைமையில் இக்கல்லூரிக காட்சிசசாலையில் சில அபூர்வப் புஸ்தகங்களும் அவற்றில் முக்கியமாக விவிலிய நூலின் ஆதிகாலப் பதிப்புகளும், மற்றும் செரம்பூருக்கு வந்த

ஏனைய பொருள்களும் இருக்கின்றன. இவை யாவும் இக் கல்லூரிக்கு மிகவும் பயன்படக்கூடியவைகளாய் இருக்கின்றன. இந்நகருக்கு அருகிலுள்ள பள்ளிக்கூட மாணவர்களும் பொது ஜனங்களும இக்காட்சிச்சாலையைப் பார்க்க வரும் பொழுது அவர்களே இக்காடசிசாலையைச் சுற்றிக் கூட்டிக் கொண்டுபோய் இங்குள்ள பொருள்களெல்லாம் காண்பிக்கப் படுகின்றன. விசேஷ தினங்களிலும் திருவிழாக்கள் நடக்கும் நாட்களிலும் பங்கிய சாஹித்ய பரிஷத், கல்கததா சர்வகலா சாலே, மற்றும் பல கல்வி நிலேயங்களிலிருந்து இங்கு வரும் ஆராய்ச்சித் துறை மேதைகளுக்கு வேண்டும் வசதி கள் யாவும் செய்து கொடுக்கப்படுகின்றன.

வெளியீடுகள்.—தபால் கார்டு அளவில் பட அட்டைகள்.

வேலை நேரம்.—ஞாயிற்றுக்கிழமைகளும் கெஜட்டில் பிரசுரிக்கப்படும் விடுமுறை நாட்களும் தவிர, மற்ற நாட் களில் காலே 10 மணி முதல் மாலே 4–30 மணி வரையும்; சனிக்கிழமைகளில் காலே 10 மணி முதல் பகல் 1 மணி வரையும் இக்காட்சிச்சாலே திறகக் கட்டிருக்கும.

அனுமதி.—கட்டணம் இல்லே.

நிர்வாகக் குழு.—இநதப் பொருட்காட்சிச்சாலே கல்லூரியின் நிர்வாகக் குழுவினரால் நிர்வகிக்கப்படுகிறது. இக்கல்லூரி யின் புஸ்தகசாலேப் பொறுப்பாளர் இந்தப் பொருட்காட்சிச் சாலேயையும் கவனித்துகொள்கிருர்.

நிதி நிலே.—இந்தப் பொருட்காட்சிச்சாலே கல்லூரியின் ஒரு பகுதியாகவே இருப்பதால், இதறகெனத் தனிப்பட்ட நிதி யெதுவும் ஒதுக்கப்படுவதில்லே.

விவரக் குறிப்புகள்.—இநதப் பொருட்காட்சிசாலே ஆரம்பிக கப்பட்ட நோக்கத்திற்கிணங்க இது இக்கல்லூரியினுள் ளேயே அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகஸ்டும் 17ஐ கலலூரி தினம் கொண்டாடப்படும் பொழுதும், கேரியின் பிறந்த தின விழா, திருச்சபை விழா முதலிய விழாக்கள் நடை பெறும் நாட்களிலும் பார்வையாளர்களின கூட்டம் மிகவும் அதிகமாயிருகிறது. இந்தப் பொருட்காட்சிச் சாலே இக்கல லூரியின் புஸ்தகசாலேயுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிப் புஸ்தகசாலேயைக கலலூரி ஆசிரியர்களும் மாணவர்களுந்தான் உபயோகிக்கலாம. ஆனல, கலலூரித் தினம், திருச்சபை விழா முதலிய விசேஷநாகள கொண் டாடப்படும் பொழுது விசேஷப் பொருட்காட்சியொன்றும நடத்தப்படுகிறது. இப்பொழுது இந்தப் பொருட்காட்சிச் சாலேக்கு இதைவிட நல்லதான ஒரு கட்டடமும் அதிகமான இடமும் தேவை. எனவே, ஒரு பெரிய தனிக்கட்டடம் கட்டவும் அதற்கான தளவாடங்கள் அமைக்கவும் ஒரு தீர்மானம் இருந்து வருகிறது. காட்சிப் பொருள் களெல்லாம் முன்னலிருந்த மத போதகர்களால் மாணிய மாகப் பெற்றுச் சேர்க்கப்பட்டவைகளாகும்.

தாம்லூக்

ஜனத்தொகை—13,599.

ஹாமில்டன் உயர்நிலேப்பள்ளிப் பொருட்காட்சிச்சாலே.

தோற்றம்.—1934.

வரலாறு.—முன்னெரு காலத்தில் தாம்ரலிப்தா என்ற நகர் இருந்த இடமாகையால் தாம்லூக் முக்கியமான பழங் காலப பொருள்களே கொணட ஒரு பகுதியாகும. ஆகையால், இப்பகுதியில விலேயுயர்ந்த பழங்காலப் பொருள் கிடைப் பதறகு உயாநிலேப்பளி மாணவர்கள் ஏற்கெனவே பல காட்சிப் பொருள்களேச் சேகரித்து அவற்றைக் கண்ணுடிப் பெட்டிகளில் வைதிருக்கினறனர். நாளடைவில் அவைகள் பார்வையாளர்கள் காணுமபடி காடசிக்கு வைக்கப்படும்.

நோக்கமும் பொருள்களும்.—இந்த உயாநிலேப் பள்ளி மாணவர்களே சேர்ததுள்ள பொருள்களில் சுட்டெடுத்த மண சிலேகளில் சில அழகான உருவங்கள. கி.மு. 2-ஆம் நூற்ருணடைச் சோந்த எழுத்துகள் இல்லாத வார்ப்பு நாணயங்கள, சிறபங்கள் செதுகிய தூண்கள, மண ஜாடிகள், மிகப்பழமையான காலத்தைத்த சேர்ந்த மண கலங்கள் ஆகியனவ இருக்கின்றன. இவைகள் யாவும் அபபகுதியி லேயே சேர்க்கப்பட்டவைகளாகும். மேலும், இங்கே சலாபங் கள், பாறை இனங்கள், தாதுப் பொருள்கள், பிராணிகளின் இனததைச் சேர்ந்த சில மாதிரிப் பொருள்கள், பணடித ஈஸ்வா சநதிர வித்தியா சாகரருடைய தனிச் சொந்தப் பொருள் களாகிய அவருடைய கம்பளி, நடை கம்பு முதலியவை களும் இருகின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இந்தப் பொருட்காட்சிச் சாலே சம்பந்தமாக இந்த உயர்நிலேபபள்ளி மாணவர்களுக்கு ஆர் வம் அதிகமிருகிறது. இந்த ஆவந்தான பொருட்காட்சிச் சாலேக்கு வேண்டிய பொருள்களேச் சேகரிக்கும்படி அவர் களோத தூண்டியதாகும. இவ்வாறு சேகரிக்கப்பட்ட பழம் பொருள்கள் மாணவர்களுக்குச சென்ற காலத்தைப்பற்றித தெளிவாகத் தெரிவிகக்கூடியனவாய் இருப்பதுடன் பழங் கால இந்திய சரித்திரத்தைப்பற்றிப் போதிப்பதற்கு உதவி யாகவும் இருக்கின்றன.

வெளியீடுகள்.—இல்லே.

வேலை நேரம்.—பளளிகூட வேலை நாட்களிலெல்லாம் பள்ளிக்கூட வேலை நேரங்களில் திறந்திருக்கும்.

அனுமதி.—கட்டணம் இலலே. ஆயினும், முக்கியமாக மாணவர்களே வந்து பாாப்பதறகாக ஏறபாடு செய்யப்பட் டிருக்கிறது.

நிர்வாகக் குழு.—இநதப் பொருட்காட்சிச்சாலே பள்ளிக் கூட மேற்பாவையில இருந்து வருகிறது.

நிதி நிலே.—பள்ளிகூட வரவுசெலவுத் திட்டத்துடன் சேர்க்கப்படடுள்ளது.

விவரக் குறிப்புகள்.—இல்லே.

II

கல்வி விஞ்ஞானப் பொருட்காட்சிச்சாலைகள்.

ஆந்திரப் பிரதேசம்.

குண்டூர்

ஜனத்தொகை.—1,250,255.

குண்டூர் வைத்தியக் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலை.

(a) அங்கக் கூறுபாடு, (b) வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள், (c) சமூக மருந்துகள், தடுப்பு மருந்துகள், (d) மருந்துகள் தயாரிக்கும் முறை, (e) நீதி மன்றத்தில் சந்தேகமான கேள்விகளைத் தெளிவுபடுத்தும்பொருட்டு வைத்தியத் திறமையை உபயோகிக்கும் விதம், வைத்தியச் சட்டம் ஆகிய பிரிவுகளைக் கொண்ட பொருட்காட்சிச்சாலை இது.

தோற்றம்.—தெரியவில்லை.

வரலாறு.—குண்டூர் வைத்தியக் கல்லூரியில் வைத்தியம் கற்றுக்கொடுப்பதற்கு உதவியாக இயற்கை விஞ்ஞானம், இயறகையின் மாறுதலால் ஏற்படும் வியாதிகளுக்குக் காரணம் அவறறிறகான மருந்துகள், தடுப்புமருந்துகள், நீதி மன்றத்தில் சந்தேகமான கேள்விகளைத் தெளிவுபடுத்தும்பொருட்டு வைத்திய அறிவை உபயோகிப்பது (வைத்தியச் சட்டம்) ஆகிய இவ்வகைப் பிரிவுகளையுடையதாக வைத்தியப் பொருட்காட்சிச்சாலைகளும், பொதுஜன சுகாதாரப் பொருட்காட்சிச் சாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. M. B. B. S. வகுப்பு மாணவர்களுகும், பட்டப் படிப்புக்கு மேல் படிக்கும் வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்கும், அப்படியே சுகாதார இன்ஸ்பெக்டர் படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கும் இக்காட்சிச் சாலைகள் மிகவும் பயன்படுகின்றன.

நோக்கமும் பொருள்களும்.—அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச்சாலையில் எலும்புகள், பற்பல காலங்களைச் சேர்ந்த மனிதர்களின் எலுமபுக் கூடுகள், நோயுடைய இருதயம், நுரையீரல், மண்டையோடு, வயிறு, கல்லீரல், கை கால்கள் முதலியவை இருக்கின்றன. கருத்தரிக்கும் மாதிரிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இரத்த ஓட்டம் காட்டும் படங்களும் மனிதவுடல் வேலை செய்யும் விதங்களைக் காட்டும் படங்களும் அளவுப்படி வரையப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன.

வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள் ஆகியவை பறறிய பொருட்காட்சிச்சாலையில் நோய் பிடித்த அங்கங்களைக் கூறுபாடு செய்த மாதிரி வடிவங்களும் வியாதிகளின் காரணங்களைத் தெரிவிக்கும் மாதிரிப் பொருள்களும் இருக்கின்றன.

சமூக மருந்து, தடுப்பு மருந்து பொருட்காட்சிச்சாலையில் சுகாதாரம், தொத்து வியாதிகள், அவற்றைத் தடுக்கும் முறைகள் ஆகிய இவற்றை விளக்கும் விவரக் குறிப்புகளும் மாதிரி வடிவங்களும வைக்கப்பட்டிருக்கின்றன.

மருந்துகள் தயாரிக்கும் முறைகளைக் காட்டும் பொருட்காட்சிச்சாலையில் சுத்திகரிக்கப்படாத பல மருந்து வகைகளும், மருந்துகள் தயாரிக்க உபயோகப்படும் மூலிகைகள், இலைகள் முதலியனவும் இருக்கின்றன.

நீதி மன்றங்களில் சந்தேகமான கேள்விகளைத் தெளிவுபடுத்தும்பொருட்டு வைத்தியத் திறமையை உபயோகிப்பதை விளக்கும் பொருட்காட்சிச்சாலையில் பாம்பு கடித்து மரணம் குத்திக் கொன்றதால மரணம், உணவில விஷக் கலப்பால் மரணம், துப்பாக்கியைக் கொண்டு சுட்டதால மரணம், குத்திக் காயங்கள் ஏற்படுத்தியதன் பயனாக ஏற்பட்ட மரணம் ஆகிய இவ்விதமான காரணங்களால் ஏற்படக் கூடிய மரணங்களை விளக்கிக் காட்டக் கூடியதாய் அவ்வத்தாக்குதலுக்கிலக்கான பாகங்களின் அங்கக் கூறுபாடுகளின் மாதிரிப் பொருள்கள் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—மரணவர்களுக்கு மின்சார விளக்கொளியின் மூலம் திரைப்படங்கள் காட்டும் படக் கண்ணாடிகளைக் கொண்டும், திரைப்படப் காட்சிச் சுருள்களைக் கொணடும் திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன. சென்ற 3 வருஷங்களில் இக் கல்லூரியிலுள்ள ஜன சமூக சேவா சங்கத்தின் ஆதரவில் வருஷந்தோறும் அக்டோபர் மாததில் 3 அல்லது 4 நாட்கள் மருத்துவ சுகாதாரப் பொருட்காட்சி விழாக்கள் நடத்தப்படுகின்றன. இந்தப் பொருட்காட்சி விழாக்கள பொது ஜனங்களுக்குச் சுகாதார முறைகளைக் கற்பிப்பதில் மிகவும பயனளிக்கக் கூடியவை என்பது தெரியலாயிற்று.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—கல்லூரியின் வேலை நாட்களில் வேலை நேரங்களில திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. ஆயினும், இக்காட்சிச் சாலை கல்லூரி மாணவர்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நிர்வாகக்குழு.—இந்தப் பொருட்காட்சிச்சாலைகளெல்லாம் குண்டூர் வைத்தியக் கல்லூரியின் மேற்பார்வையில் இருந்து வருகின்றன.

ஊழியர்கள்.—இந்தப் பொருட்காட்சிச் சாலைகளெல்லாம் வெவ்வேறு வைத்தியக் கல்விப் பிரிவுகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்தப் கல்விப் பிரிவுகளின் தலைமையாசிரியர்கள் அந்தந்தக் பிரிவுப் பொருட்காட்சிச் சாலைகளைக் கவனித்துக்கொள்கிறார்கள்.

நிதி நிலை.—கல்லூரியின் பொது வரவு செலவுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

விவரக் குறிப்புகள்.—இலலை.

ஹைதராபாது.

ஜனத்தொகை—10,85,722.

ஹைதராபாது சுகாதாரப் பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—1950.

வரலாறு.—நமது நாட்டில் சுகாதாரப் பொருட்காட்சிச் சாலை இனத்தில் மிகவும் நன்முறையில் அமைக்கப்பட்ட பொருட்காட்சிச் சாலைகளில் இந்த ஹைதராபாது சுகாதாரப் பொருட்காட்சிச் சாலையும் ஒனறாகும். முதன்முதல் இக் காட்சிச் சாலை ஹைதராபாது நகரில் பிரிக்கத்தமில்லாத ஓர் இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அவ்வமயம் ஹைதராபாது சர்க்காரில் சுகாதார மந்திரியாயிருந்த ஸ்ரீ பூல்சந்த் காந்தி என்பவர் மேற்கொண்ட பெருமுயற்சிகளின் பயனால் பினனால் 1952-ஆம் வருஷத்தில் இக்காட்சிச்சாலை பொதுமக்கள் பூங்காவிலுள்ள அழகிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. இப்பொழுது இக்காட்சிச் சாலை அக்கட்டடத்திலேயே இருந்து வருகிறது. இந்தக் காட்சிச்சாலையைப பார்க்க வருபவர்கள் இதனைப் பார்த்ததன் பயனாய்த் தத்தம் வீடுகளிலும் சுகாதாரம், நோயணுகா முறை, காற்றோட்ட வசதி முதலிய வழிகளைப் பின்பற்றி நடக்குமாறு அறிவுறுத்தக்கூடிய அவ்வளவு நேர்த்தியான கவர்ச்சியான காட்சிப் பொருள்களை ஏராளமாக உடையதாய் இருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—இக்காட்சிச் சாலையில் சுகாதார விதிகள், வியாதிகளைத் தடுக்கும் முறை, சுகாதாரத்தை அதிகப்படுத்தும் வழிகள் இவைகளைக் கண் பார்வையிலேயே பார்த்துத் தெரிந்துகொள்ளும்படி சுகாதார அறிவுரைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இக்காட்சிச் சாலையில் சுகாதாரத்தைப் பாதிக்கும் விஷயங்கள் காலரா, பிளேகு, க்ஷயரோகம், வைசூரி முதலான தொத்து நோய்கள், மற்றும் கொப்புளங்களை விளைவிக்கும காய்ச்சல், தொண்டையில் சதை வளர்ந்து அதைத் தொடர்ந்து ஏற்படும் காய்ச்சல், விஷக் கிருமிகளாலும் பூச்சிகளாலும் ஏற்படும் மலேரியாக் காய்ச்சல், கொக்கிப் புழு நோய் முதலியவற்றைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும் காட்சிப் பொருள்களும்; மனித சரீரத்தின் அமைப்பு, அது வேலை செய்யும் விதம், சரீரத்திலுள்ள அங்கங்களின கூறு பாடுகள், பள்ளிக்கூடங்களைச் சுகாதார முறையில் வைத்துக் கொள்ளுதல், தாய் சேய் நலம், உடல் போஷிப்பு, குடும்பக் கட்டுப்பாடு, பூச்சிகள், புழுக்கள், பாம்புகள், தேள்கள், கிராமங்களுக்கு வைத்திய உதவி, உடல் போஷிப்புப் பற்றிய புள்ளி விவரங்கள், சுகாதார விதிகள், கைத்தொழில் செய்வோர் அனுசரிக்க வேண்டிய சுகாதார முறைகள், மருந்துகளின தோற்ற வளர்ச்சி வரலாறு ஆகிய இவையனைத்தையும் விளக்கிக் காட்டக் கூடிய காட்சிப் பொருள்கள் நிறைய இருக்கினறன. மருந்துகளின் வரலாறு தெரிவிக்கும் இடங்களில் ஆதி காலம் முதல் நாளது வரையுள்ள புது மருந்துகளையும், வைத்திய சாஸ்திரத்தில் புதிய முறைகளையும் கண்டு பிடித்த புகழ் பெற்ற வைத்தியத் துறை மேதாவிகளின் படங்கள் வைக்கப்பட்டு, அவ்வகைப் படங்களிலுள்ள வைத்திய சிரேஷ்டர்களுக்கெல்லாம் சுகாதார வீரர்கள் என்ற புகழுரைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இக்காட்சிச் சாலையில் உததியோகத்துக்காக இங்கே 150 புத்தகங்களையும் பருவகால, வர்த்தமானப் பத்திரிகைகளையும் கொண்ட ஒரு புஸ்தகசாலை இருகிறது. இக்காட்சிச் சாலையைப் பார்க்க வரும் பாவையாளர்களுக்கும் பள்ளிச் சிறுவர்களுக்கும் இங்குள்ள காடசிப் பொருள்களைப் பற்றியும் மாதிரி வடிவங்களைப் பற்றியும் விளக்கம் தெரிவிக்கப்படுகிறது. பள்ளிச் சிறுவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் திரைப்படகாட்சிகள் காட்டப்படுகின்றன. குறிப்பிட்ட சில காலங்களில் விசேஷப பொருட்காட்சி விழாக்கள் நடத்தப்படுவதோடு, ஜனவரி, பிப்பிரவரி மாதங்களில் நடைபெறும் அகில இந்தியக் கைத்தொழிற்பொருட்காட்சி விழாவில் இக்காட்சிச்சாலையிலுள்ள பொருள்கள் காடசிக்கு வைக்கப்படுகின்றன. ஆங்கிலம், உருது, ஹிந்தி, தெலுங்கு ஆகிய பாஷைகளில் விளக்கச சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. சுகாதார வழிகளைப்பற்றிய சிறு சிறு புஸ்தகங்களும் வினியோகிக்கப்படுகின்றன.

வெளியீடுகள்.—ஹைதராபாது பொருட்காட்சிச்சாலை பற்பல வியாதிகளைப் பற்றியும், பள்ளிக்கூடச் சுகாதாரங்களைப் பற்றியும் தெரிவிக்கும் சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், சிறு சிறு புஸ்தகங்கள் முதலியன. இவைகள் பார்வையாளர்களுக்கு இலவசமாய் வினியோகிக்கப்படுகின்றன.

வேலை நேரம்.—வியாழக்கிழமைகளும். சர்க்கார் விடுமுறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 9 மணி முதல் 12 மணி வரையும், மாலை 3-30 மணி முதல் 6-30 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—இக்காட்சிச்சாலை ஆந்திரப் பிரதேசச் சர்க்காரின் பொதுச் சுகாதார டைரக்டர் அதிகாரத்தின்கீழ் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—உயர்தரச் சுகாதார இன்ஸபெக்டர் ஒருவர், கீழ்த்தரச் சுகாதார இன்ஸ்பெக்டர் ஒருவர், வேலைக்காரர்கள் ஐந்து பேர், சௌக்கிதார் ஒருவர்.

நிதி நிலை.—இந்தப் பொருட்காட்சிச்சாலை ஆந்திரப் பிரதேசச் சர்க்காரின் சுகாதாரப் படிப்பினை இலாக்காவுடன் இணைக்கப்பட்டிருப்பதால் இதற்கெனத் தனிப்பட்ட வரவு செலவுத் திட்டம் எதுவும் இல்லை.

விவரக் குறிப்புகள்.—இநதப், பொருட்காட்சிச்சாலை பொது ஜனப் பூங்காவிலுள்ள அழகான ஒரு கட்டடத்தில் அமைக்கப் பட்டிருக்கிறது. இங்கே ஏராளமான பார்வையாளர்கள் வருகிறார்கள. மகாநாடுகள நடக்கும் பொழுது பார்வையாளாகள கூட்டம் இனனும் அதிகமாகிறது. காட்சிக் கூடங்களுக்குப் போதிய இடவசதி இருக்கிறது; ஆயினும், பண்டக சாலை வசதியிலலை.

மதனப்பள்ளிக் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலை

"புதைபொருள், கலைப் பண்பாட்டுப் பொருட்காட்சிச் சாலைகள்" வரிசையில் பார்க்கவும்.

விசாகப்பட்டணம்

ஜனததொகை—1,08,042.

ஆந்திரா வைத்தியக் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலைகள்

(a) அங்கக் கூறுபாடு, (b) வியாதிகளின் தனமை—வியாதிகளின் காரணங்களும மருந்துகளும், (c) சமூக மருந்துகள், தடுப்பு மருந்துகள் ஆகிய மூப்பிரிவு பொருட்காட்சிச் சாலைகள.

தோற்றம்.—(a) அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச்சாலை 1923, (b) வியாதிகளின் தன்மை, காரணம், மருந்துகள் பொருட்காட்சிச்சாலை 1925, (c) சமூக மருந்துகள், தடுப்பு மருந்துகள் பொருட்காட்சிச்சாலை 1955—56.

வரலாறு.—இந்த வைத்தியக் கல்லூரியுடனே சேர்த்து அங்கக கூறுபாடுப் பொருட்காட்சிச் சாலை 1923-ஆம வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னுலை இப்பிரிவுக கல்வியாசிரியர்களால் அங்கக் கூறுபாடறியும் அறுபபு முறை வைத்தியங்கள் விசேஷமாகச் செய்ய நேரிடடதாலும், அதனபொருடடு மாறிப பொருள்கள் வாங்கப்பட்டதாலும், பிறப்பதற்கு ஆயத்தமாய்க் கருவில சகல அங்கங்களும பூரத்தியான நிலைமையிலிருக்கும் சிசுக்களின் எலும்புக கூடுகள் (அல்லது அவை போனற உருவங்கள) சேர்க்கபபட்டதாலும், பிரெஷ எனபவரால் தயாரிக்கப்பட்ட அங்கக் கூறுபாட்டு விளக்கக் (படங்கள) குறிப்புகள் முதலியன வாங்கபபட்டதாலும், இப பிரிவுக காட்சிசாலை படிபபடியாக வளர்ந்தோங்கிப்பெருகியது. இப்பொழுது இப்பிரிவில் மனித சரீர அங்கக் கூறுபாடுகளின் விளக்கம் தெரிவிப்பனவாயும், அங்கக் கூறுபாடுகளை செய்யப்பட்டவைகளாயும் 831 மாதிரிக் காடசிப் பொருள்கள இருக்கின்றன. அவைகளில் இரண்டு நிகரற்றகாட்சிப் பொருள்களாய் இருக்கின்றன. ஒன்று தநதத்தாலும, மற்றொன்று மரத்தாலும் செய்யபபட்ட எலுமபுக் கூடுகள். இவை இக்கல்லூரியில முன்னுள் அங்கக்கூறுபாட்டுப் பேராசிரியராய இருந்த டாக்டர் R. கிருஷ்ணராவ் எனபவரால் வாங்கி இநதப் பொருட்காட்சிச்சாலைக்குத தானமாக வழங்கப்பட்டன. இவையிரண்டும் 1705—10-ஆம வருஷங்களில் தஞ்சாவூரிலிருந்த சரபோஜி மன்னருக்கு நுண்கலைப் பொருள்கள் செய்து கொடுத்து வநத தஞ்சை சமஸ்தானக் கலைச் சிற்பிகளால் செய்யப்பட்டவை என்று மேற்சொல்லிய டாக்டர் R. கிருஷ்ணராவ் தெரிவித்திருக்கிறார். கீழ வகுப்புகளின் அங்கக் கூறுபாட்டுப் பொருள்களாக 300 மாதிரிப பொருள்களும் இங்கே இருக்கின்றன.

வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள ஆகிய இப்பிரிவுப் பொருட்காட்சிச்சாலை இரண்டு வருஷங்கள் கழித்து, அதாவது 1925-ஆம வருஷத்தில் தொடங்கப்பட்டது. இங்கே வியாதிகளின் காரணங்களையும் அவற்றிற்கான மருந்துகளையும் தெரிவிக்கும் 3,000 காட்சிப் பொருள்கள் அவறறிறகுரிய வரலாறுகளுடன வைக்கபபட்டிருக்கின்றன.

சமூக மருந்துகள், தடுப்பு மருந்துகள் காட்சிச்சாலை சமீப காலத்திலேதான், அதாவது 1955–56-ஆம வருஷத்திலேதான்

தொடங்கப்பட்டிருக்கிறது. இப்பிரிவுக் காட்சிச்சாலையில் எல்லாம் விலை கொடுத்து வாங்கப்பட்ட மாதிரிப் பொருள்கள் பல இருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—அங்கக் கூறுபாட்டுப் பொருட் காட்சிச்சாலையில் மனித சரீர அங்கக் கூறுபாடு, கருவின் விளக்கங்கள், உயிர் வர்க்கங்களின வர்ணனை, ஒப்பு நோக்கிப் பார்க்க உபயோகமான அங்கக் கூறுபாடுகள், எக்ஸ்ரே கதிர் களின் மூலம் அங்கக் கூறுபாடுகளை அறிந்துகொள்வது ஆகிய இவ்வகைகளைச் சேர்ந்த மாதிரிப் பொருள்கள் இருக் கின்றன. வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள் ஆகிய இவை பற்றிய பிரிவுக் காட்சிச்சாலையில் நோய் பிடித்த எல்லா விதமான அவயவங்களின் காட்சிப் பொருள்களும் அவற்றிற்குப் பொருத்தமான படங்களும் இருக்கின்றன. சமூக மருந்துகள். தடுப்பு மருந்துகள் பிரிவுக் காட்சிச்சாலை யில் அநேக மாதிரி வடிவங்களும், விளக்கக் குறிப்புகளும், படங்கள் முதலியனவும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இந்தப் பொருட்காட்சிச்சாலை யிலிருக்கும் காட்சிப் பொருள்களைப் பற்றிக் கல்லூரி இடை வகுப்பு மாணவர்களும், பட்டப்படிப்பு மேற்படிப்புப் படிக்கும் மாணவர்களும தமக்கு வேண்டுவதைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் தவிர, பக்கத்து ஜில்லாக் களிலுள்ள உயர்தரப் பள்ளி மாணவர்களும் இவற்றைப் பார்க்க வருகிறார்கள். இக்கல்லூரியில் நடக்கும் சொற் பொழிவுகளுக்கு உபயோகமாக மின்சார விளக்கொளியின் மூலம் திரைப்படம் காண்பிக்க உபயோகிக்கும் படக் கண்ணாடி கள் உபயோகிக்கப்படுகின்றன. சில சமயங்களில் சுகாதாரப் பொருட்காட்சி விழாக்களுக்கும், வேறு பல பொருட்காட்சி விழாக்களுக்கும் இந்தப் பொருட்காட்சிச்சாலையிலுள்ள காட்சிப் பொருள்கள் கொடுத்து வாங்கப்படுகின்றன. காட்சிப் பொருள்களுக்குரிய விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்தில் இருக் கின்றன. வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள் இவை சம்பந்தப்பட்ட காட்சிச்சாலையில் மாதிரிப் பொருள்களை இணைத்துப் பீடங்களில் ஏற்றும் பயிற்சியளிக்கப்படுகிறது.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—இந்தப் பொருட்காட்சிச்சாலைகள் இந்த வைத்தியக் கல்லூரியின் வேலை நாட்களிலெல்லாம் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையும், ஞாயிற்றுக்கிழமை களிலும் சர்க்கார் விடுமுறை நாட்களிலும் காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. ஆனால், முக்கியமாக வைத்தியம் கற்கும் மாணவர்களின் நலனுக்காகவே இவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

நிர்வாகக் குழு.—இக்காட்சிச்சாலைகள் அனைத்தும் இவ் வைத்தியக் கல்லூரியின் முதல்வர் மேற்பார்வையிலிருந்து வருகின்றன.

ஊழியர்கள்.—அந்தந்தப் பிரிவுப பொருட்காட்சிச்சாலைகள் அந்தந்தப் பிரிவுக் கல்விப் பேராசிரியர்களால் கவனித்துக் கொள்ளப்படுகின்றன. அவர்களில் ஒருவர் காவலராய் இருக் கிறார்.

நிதி நிலை.—இக்கல்லூரி வரவு செலவுத் திட்டத்துள் சேர்க் கப்பட்டிருக்கிறது.

விவரக் குறிப்புகள்.—வைத்தியம் கற்கும் மாணவர்கள் வைத்திய சாஸ்திரத்தின் பற்பல பிரிவுகளைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு இக்காட்சிச் சாலைகள் மிகவும் உதவி யாயிருக்கின்றன. நாளொன்றுக்குச் சராசரி 5 பார்வையாளர் களும், வருஷத்துக்கு 2,000 பேர்களும் இக்காட்சிச் சாலையைப் பார்க்க வருகிறார்கள். தேடிச் சேகரித்தல், விலை கொடுத்து வாங்குதல், தானமாகப் பெறுதல் ஆகிய வழிகளில் அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலைக்கும், அறுப்பு வைத்திய சமயங்களில் எடுக்கப்படும் பொருள்களையும், பிரேதங்களின் உடலைப் பரிசோதனை செய்யும் பொழுது எடுக்கும் பொருள் களையும் சேகரிப்பது மூலமாக வியாதிகளின் தன்மை, காரணங் கள், மருந்துகள் ஆகிய இவைகள் சம்பந்தப்பட்ட பொருட் காட்சிச் சாலைக்கும், காட்சிப் பொருள்களை விலை கொடுத்து வாங்குவது மூலமாகச் சமூக மருந்துகள், தடுப்பு மருந்துகள் பொருட்காட்சிச் சாலைக்கும் காட்சிப் பொருள்கள் சேர்க்கப்படு கின்றன.

அஸ்ஸாம்

கௌஹத்தி

ஜனத்தொகை—43,615

அஸ்ஸாம் காட்டுப் பொருள்கள் காட்சிச்சாலை

தோற்றம்.—1944.

வரலாறு.—காட்டிலாக்கா அதிகாரிகள் அவர்களுடைய பயணங்களின்போது சேகரித்த அற்புதமான காட்டுப் பொருள்களை வைத்து அஸ்ஸாம் காட்டுப் பொருள்கள் காட்சிச் சாலை 1944-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொருள் களை அடிக்கடி பொருட்காட்சி விழாக்கள் நடந்த இடங்களில் பந்தல் கொட்டில்களில் காட்சிக்காக வைக்கப்பட்டபொழுது இவை மக்களுக்கு மிகவும் ஆர்வமும் கவர்ச்சியும் அளித்த தால் இவற்றைச் சாஸ்வதமான காட்சிப்பொருள்களாக வைத் துப் பாதுகாக்க ஓர் இடம் அமைக்க வேண்டுவது அவசியம் என்பது உணரப்பட்டது.

நோக்கமும் பொருள்களும்.—கட்டட வேலைகளுக்குப் பயன் படும் மரங்களின் மாதிரித் துண்டுகள், மூங்கில்கள், ஈரக் கழிகள், பிரம்புகள் முதலியனவும் காட்டில்விளையும் பலவிதப் பொருள்களும், தந்த வேலைச் சாமான்களும், மெருகெண் ணெய் பூசிய பொருள்களும், பிரம்பிலும் மூங்கில்களிலும் செதுக்கிய சித்திரங்களும், சோஸனம், கற்பூரத் தைலம், அகில் கட்டை, மருந்துச் செடிகள் முதலியனவும் இங்கே சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

காடுகளின் போட்டோக்கள், காண்டா மிருகங்களைப் பிடிப் பது, யானைகளைப் பிடிப்பது ஆகிய போட்டோக்களும் இவ் விதமான நடவடிக்கைகளை விளக்கிக் காட்டும் விவரக் குறிப்பு கள், தரைப்படங்கள் முதலியனவும் இங்கே இருக்கின்றன.

இவை தவிர, காட்டுப் பொருள்களைக் கொண்டு செய்யும் கைத்தொழிற்பொருள்கள், மூவொட்டுப் பலகை, நானுவிதப் பலகைகளின் கலப்பு, பாலங்களின் மாதிரி வடிவங்கள், காட்டிலாக்காப் பொறியியற்பயிற்சி குறிக்கும் கட்டடங்களின் மாதிரி வடிவங்கள், விவரக் குறிப்புகளுடன் கூடிய யானைத் தந்தங்கள், காண்டா மிருகத்தின் கொம்புகள், பஞ்சடைக்கப் பட்ட பற்பல மிருகங்களின் உடல்கள் முதலியனவும் இருக் கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—காட்டுப் பொருள்களைக் கொண்டு செய்யும் கைதொழில்கள், மரங்களை அறுத்தல், காண்டா மிருகம் யானை போன்ற துஷ்ட மிருகங்களைப் பிடித்தல், மற்றும் காட்டில் விளையும் பொருள்களைப் பயன்படுத்தும் வழிகள் ஆகிய இவைகளைப் பற்றி ஜனங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தப் பொருட்காட்சிச்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கௌஹத்தி சர்வகலாசாலை மாணவர்களும், கல்லூரி, பள்ளிக்கூட மாணவர்களும் அடிக்கடி இந்தப் பொருட்காட்சிச்சாலையைப் பார்க்க வருகிறார் கள். காட்சிப் பொருள்களுக்குரிய விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்திலும் அஸ்ஸாம் பாஷையிலும் இருக்கின்றன. காட்சிப்பொருள்களின் விளக்கம் தெரிய விரும்பும் பார்வை யாளர்களுக்கு இக்காட்சிச்சாலைக்குப் பொறுப்பதிகாரியாய் இருப்பவர் விளக்கம் தெரிவிக்கிறார்.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—சனிக்கிழமைகளில் பிற்பகலிலும், ஞாயிற் றுக் கிழமைகளும் சர்க்கார் விடுமுறை நாட்களும் தவிர,

மற்ற எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 4–30 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

நிர்வாகக்குழு.—இக்காட்சிச்சாலை அஸ்ஸாம் சர்க்காரின் நிர்வாகத்திலிருக்கிறது. ஷில்லாங்கிலிருக்கும் காட்டுப் பொருள்கள் உபயோக விளக்க அதிகாரி இக்காட்சிச்சாலையை மேற்பார்த்து வருகிறார்.

ஊழியர்கள்.—ஓர் உதவியதிகாரியும் காவற்காரனும்.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 6,200.

விவரக் குறிப்புகள்.—இந்தப் பொருடகாட்சிச்சாலை கௌஹத்தியில் வசதியான இடத்தில் அமைகக்பட்டிருக்கிறது. யாரும் போய்ப் பார்க்கலாம். இங்குள்ள காட்சிப் பொருள்களுக்கு இக்கட்டடத்தில் வசதியில்லை. இரசாயனப் பரிசோதனை வசதிகளும் இல்லை. இக்காட்சிச்சாலைக்கு வேண்டிய காட்சிப் பொருள்கள், தேடிச் சேகரித்தல், விலைக்கு வாங்குதல், தானமாகப் பெறுதல ஆகிய வழிகளில் சேர்க்கப்படுகின்றன.

பம்பாய்

அஹமதாபாது:

ஜனத்தொகை—7,88,333.

B. J. வைத்தியக் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலை.

அங்கக் கூறுபாடு, வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள், மருந்துகள் தயாரிக்கும் முறைகள, உடல் நல வழிகள், நீதி மன்றங்களில் சந்தேகப்படும் கேள்விகளுக்குத் தெளிவு படுத்தும்பொருட்டு வைத்திய அறிவைப் பிரயோகிக்கும் முறைகள் ஆகிய இப்பிரிவுகள் சம்பந்தபபட்ட காட்சிப பொருளகளைக் கொண்டது இக்காட்சிசசாலை.

தோற்றம்.—1946.

வரலாறு.—இக்காட்சிச்சாலைகள யாவும் 1946-ஆம் வருஷம ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன. அது முதல் இவைகள் வளர்ச்சியுற்று வருகின்றன. அங்கக் கூறுபாடு, வியாதிகள் விளக்கப் பிரிவு, மருந்துகள் தயாரிக்கும் முறை, உடல் நல வழிகள், வைத்தியத்தில் நீதி மன்றச் சட்டத்திறன ஆகிய ஐந்து பெரும்பிரிவுகளையுடைய இக்கல்லூரியில ஒவவொரு பிரிவுக்கும் அப்பிரிவு சம்பந்தப்பட்ட காட்சிப் பொருளகளுடன் கூடிய தனித்தனி பொருட்காட்சிச்சாலை இருக்கிறது. இப் பொழுது இருந்துவரும் கட்டடத்தில் இட வசதியில்லை. ஆகையால், புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதுவும் விரைவில் கட்டி முடிந்துவிடும். அது கட்டி முடிந்துவிட்டால இங்குள்ள காட்சிப் பொருள்களுக்கு அக்கட்டடத்தில் இட வசதி இருக்கும்.

நோக்கமும் பொருள்களும்.—கல்லூரி இடை வகுப்பு மாணவர்களுக்கும், பட்டப்படிப்புககு மேற்படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கும் கற்றுக்கொடுப்பதற்கு வசதியாக மேலே சொல்லிய ஐந்து வகை வைத்தியப் படிப்புப பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் சொந்தமாக ஒவ்வொரு பொருட்காட்சிச்சாலை இருக்கிறது.

விளக்க நடவடிக்கைகள்.—சுமார் 346 கல்லூரி இடை வகுப்பு மாணவர்களும், பட்டப்படிப்புககு மேற்படிப்புப் படிக்கும் 35 மாணவர்களும் இக்காட்சிச்சாலைகளைப் பயன் படுத்திக்கொள்கின்றனர். கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் சுமார் 75 பேர்களும், கல்லூரியிலேயே தங்கும ஆசிரியர்களில் 26 பேர்களும் இக்காட்சிச்சாலைகளின மூலம தம் போதனைகளுக்குத் தேவையான விஷயங்களைத் தெரிந்துகொள்கிறார்கள். சில சமயங்களில் இக்காட்சிச்சாலையைப் பார்ப்பதறகு மாணவர் குழுக்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன. மாணவர்களின உபயோகததுக்கும், ஆசிரியர்களின் உபயோகத்துக்கும் ஒரு புஸ்தகசாலை இருக்கிறது. அதில் 1,890 புஸ்தகங்கள் இருப்பதுடன் சந்தாப்பணம் செலுத்தி 49 வர்த்தமானப் பத்திரிகைகளும் வரவழைக்கப்படுகின்றன. இக்கல்லூரியிலிருக்கும் திரைப்படங்காட்டும் இயந்திரத்தைக்கொண்டு படக் கண்ணாடிகள் மூலமாகவும், கல்வித் துறைக்குப் பயன் படக்கூடிய திரைப்படச் சுருள்கள் மூலமாகவும் மாணவர்களுக்குத் திரைப்படம் காட்டப்படுகிறது. மாணவர்களைக் கூட்டிக் கொண்டு இக்காட்சிசசாலைகளைச் சுற்றிக் காண்பித்துப் பொருள் விளக்கம் கூறுவதன் மூலமாகவே பாடங்கற்பிப்பதன ஒரு பிரிவு வேலை நிறைவேறறப்படுகிறது. விசேஷ விவரக் குறிப்புகள தயார் செய்து உபயோகிக்கப்படுகின்றன. மாணவர்களுக்கு விளக்கிக காண்பிப்பதற்காக நோயாளிகளின் படுக்கையணடையில் செய்யும் வைத்தியத்திற்கு உபயோகப்படுத்தும் பொருள்கள் போட்டோ எடுத்து வைக்கப்படுகின்றன. இக்காட்சிச்சாலைகள் இக்கல்லூரி மாணவர்களால் உபயோகிக்கப்படுவதுடன் வேறு சில கல்வி ஸ்தாபனங்களில் படிக்கும் மாணவர்களாலும் உபயோகப் படுத்தப்படுகின்றது.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—கலலூரியின் வேலை நேரஙகளில் திறக்கப் பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—அவவக கல்விப் பிரிவின தலைமைப் பேராசிரியர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

ஊழியர்கள்.—இகாட்சிச்சாலைகளுக்கெனத் தனிப்பட்ட ஊழியாகள இல்லை. ஒவ்வொரு கல்விப் பிரிவும் அதன தன் காட்சிப் பொருள்களைக் கவனித்துகொள்கிறது.

நிதி நிலை.—இக்காட்சிச்சாலைகளுக்கெனத தனித் தொகை எதுவும வரையறுக்கப்படவில்லை. சர்க்கார் கொடுக்கும் தொகையிலிருநது ஒவ்வொரு பிரிவுக காட்சிச்சாலையும் தனகுத தேவையான அளவு தொகை ஒதுக்கித் தரப் பெறுகிறது. புஸ்தக சாலைக்குப் புஸ்தகங்கள், வர்தமானப் பத்திரிகைகள் முதலியன வாங்கிக்கொளள ரூ. 5,600 வருஷந்தோறும் சர்க்காரால் வழங்கப்படுகிறது.

விவரக் குறிப்புகள்.—இக்கலலூரியைச் சேர்ந்த புதிய நிலைப் பரபபினுள் கட்டபபட்டு வரும் புதிய கட்டடதில் இக்காட்சிசாலைகளுககுப் போதிய இடவசதி கிடைக்கும். தேவையான அளவுககுப பண்டக சாலைக்கும் இடவசதியளிக்கப்படும். அவை முடிந்த பின்புதான தகுதியான ரசாயனப் பரிசோதனை வசதிகளும கிடைககும. இக்காட்சிசசாலைகளுககு வேணடும் காடசிப பொருள்களைச சேகரிக்கும் வழிகளில ஒன்று இந்நகரிலுளள பொதுஜன ஆஸபததிரியிலிருந்து நோயாளிகளின படுககையணடை செய்யும் வைத்தியப பொருளகளைப் பெறறுககொள்வது. காட்சிப் பொருளகளுக்கு இனனும் விளக்கச சீடடுகள் வைக்கப்படவில்லை. உதாரணஙகளுடன் கற்பிக்கும் வகைககு விவரக் குறிப்புகளும், மாதிரி வடிவங்களும் இருக்கின்றன.

ஆம்ரெலி

கிர்தார்பாய் குழந்தைகள் பொருட்காட்சிச்சாலை

புதைபொருள், கலைப்பண்பாட்டுப் பொருட்காட்சிச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ்ப் பாக்கவும்.

பரோடா

ஜனத்தொகை—2,11,407.

பரோடா நகர மன்றச் சுகாதாரப் பொருட்காட்சிச்சாலை

தோற்றம்.—1953.

வரலாறு.—நமது தேச முழுவதிலும் பற்பல இடங்களில் சுகாதாரப் பொருட்காட்சிச்சாலைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்ற ஆர்வங கொண்டவரும், தற்சமயம் இந்தப் பொருட்காட்சிசசாலையில் கௌரவக் காவலராய் இருப்பவருமான ஸ்ரீ G. M. ஜாதவ் என்பவர், பரோடா நகரிலுள்ள சர்க்கார்

வாடா என்ற இடத்தில் அப்படிப்பட்ட ஒரு பொருட் காட்சிச்சாலையை ஸ்தாபிக்க வேண்டுமென்று பரோடா மஹா ராஜாவைக் கேட்டுக்கொண்டார். பின் அவர் 1953-ம் வருஷத்தில் இந்தச் சுகாதாரப் பொருட்காட்சிச்சாலையைச் சாயாஜி பூங்காவிலுள்ள வெளிளைக் கூடத்தில் நிறுவுவதற்கு பரோடா நகர் மன்றத தலைவரையும் இணங்க வைத்தார்.

நோக்கமும் பொருள்களும்.—இந்தப் பொருட்காட்சிச்சாலை முக்கியமாய்ச் சுகாதார முறைகளை அறிவுறுத்தற்பொருட்டு ஏற்படுத்தப்பட்டதாகும். இக்காட்சிச்சாலையில் சுகாதார முள்ள ஒரு கிராமத்தின் மாதிரி வடிவம், சுகாதாரமான கிணறு, குளம், இலாயம், குப்பை வண்டி, மலங்கழிக்கு மிடம், சாக்கடைத் தண்ணீரைக் கழிகால் வழியாக வெளி யேற்றும் யந்திரத் தொகுதி, பரோடா நகரின் குடி தண் ணீர்த் திட்டத்தை விளக்கும் தண்ணீர் வரும் மார்க்கங்கள், அத்தண்ணீர் கிடைக்கும் எரி, வடிகால் தொட்டிகள், தலைநீர் சேமித்து வைக்கும் இடங்கு முதலியவற்றின் மாதிரி வடிவங்கள், பிரஸவ மருத்துவத்தை விளக்கும் மாதிரி வடிவங்கள், விவரக் குறிப்புகள், பிரசவ வைத் திய சாலை, மனித சரீர அங்கங்களின் கூறுபாடுகள், இரு தயம, கண். காது முதலியவை செய்யும் வேலைகள், பிளேகு, காலரா, க்ஷயரோகம், தோல வியாதிகள், இவைகளைத் தடுக்கும் முறைகள, கட்டுப்படுத்தும் முறைகள், ஆகிய இவ்விஷயங்களைப் பற்றிய சகல விவரங்கள ஆகியவை இருக்கின்றன. அநேக மாதிரி வடிவங்களும் விவரக் குறிப்புகளும் உண்டு. இவை ஐக்கிய நாடுகளின் செய்தியறி விப்புக குழு முதலிய ஸ்தாபனங்களும் வேறு சில ஸ்தாபனங்களும் அனுப்பியவையாகும். "புகழ் பெற்றோர் பேரறை" என்ற ஒரு பெரிய அறையில இக்காட்சிச்சாலையின் தனிப் பிரிவாகப் புகழ் பெற்ற உயிர் முறை வைத்திய வல்லு நர்கள், மானிட வைத்திய மேதைகள், அறுப்பு வைத்திய நிபுணர்கள், கிருமி வர்க்க ஆராய்ச்சியாளர்கள் முதலி யோரின் போட்டோக்கள் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—பார்வையாளர்கள் படிப்பதற்கு உபயோகமாக இக்காட்சிச்சாலையில் ஒரு சிறிய புஸ்தக சாலை இருக்கிறது. காட்சிச்சாலையில் இருக்கும் காட்சிப் பொருள்களைப் பற்றி விளக்கங்கள் தெரிவிக்கப்படுகின்றன. வாரந்தோறும் ஐக்கிய நாடுகளின் செய்தியறிவிப்புக் குழு வினரிடமிருந்து திரைப்படச் சுருள்களைக் கடனாக வாங்கித் திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன. இக்காட்சிச்சாலை யிலிருந்து விவரக் குறிப்புகளும், மாதிரி வடிவங்களும் பள் ளிக்கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் கடனாகக் கொடுத்து வாங்கப்படுகின்றன. காட்சிப் பொருள்களுக்கு விளக்கச் சீட்டு கள் முகியமாய்க் குஜராத்தியிலும், ஆங்கிலத்திலும், உருது விலும் வைக்கப்பட்டிருக்கின்றன. பரோடா சாவ கலா சாலை மாணவர்கள் இக்காட்சிச்சாலைப் பொருளகளைப் பார்ப்பதிலும் படிப்பதிலும் மிகவும் ஆர்வமுள்ளவர்களாய் இருக்கின்றனர். சமூக சேவா சங்கத்தார் பக்கத்திலுள்ள கிராமங்களில் காண்பிப்பதற்காக இக்காட்சிச்சாலையிலிருந்து மாதிரி வடிவங்கள், விவரக் குறிப்புகள், தரைப் படங்கள முதலியவற்றை வாங்கிக்கொண்டு போய்க் காண்பித்து விட்டுத் திரும்பக் கொணடு வந்து கொடுக்கிறார்கள்.

வெளியீடு.—"நகர மன்றச் சுகாதாரப் பொருட்காட்சிச் சாலை" என்னும் சிறிய புஸ்தகம்.

வேலை நேரம்.—எல்லா நாட்களிலும் காலை 1 மணி முதல் மாலை 6 மணி வரை, சனிக்கிழமைகளில் மாலை 2 மணி முதல 6 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—இந்தச் சுகாதாரப் பொருட்காட்சிச் சாலைக் குழுவினரின் உதவியுடன் பரோடா நகர் மன்றம் இந்தப் பொருட்காட்சிச்சாலையை நிர்வகித்து வருகிறது.

ஊழியர்கள்.—கௌரவக் காவலர் G. M. ஜாதவ், உதவி அதிகாரிகள் 4, தூப்புக்காரன் 1.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம், ரூ. 6,000

விவரக்குறிப்புகள்.—இக்காட்சிச்சாலை பரோடா நகரில் பொருத்தமான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது இந்நகரைச் சுற்றியுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாய் இருக்கிறது. நாளொன்றுக்கு 200க்கு மேற்பட்ட பார்வையாளர்கள் வருகிறார்கள். ஆனால், விடு முறை நாட்களில் பார்வையாளர்களின் எண்ணிக்கை 1,600 வரையும் உயர்கிறது. பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகளிலுள்ள மருத்துவத துறை நேயர்களின் உதவி கொண்டு இக்காட்சிச் சாலையை விஸ்தரிக்க வேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்திய பொருட் காட்சிச சாலைகளின் சங்கத்தில் இந்தப் பொருட்காட்சிச் சாலை ஒரு ஸ்தாபன அங்கமாய் இருக்கிறது.

(ii) வைத்தியக் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலைகள்

(1) அங்கக் கூறுபாடு, (2) மருந்துகள் தயாரிக்கும் முறை, விஷங்களின் விதங்கள், (3) வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள, (4) தடுப்பு மருந்துகள் ஆகிய நான்கு பிரிவுப் பொருட்காட்சிச்சாலைகள்.

தோற்றம்.—1949.

வரலாறு.—இந்தக் கல்லூரியுடன் சேர்த்து இந்தப் பொருட் காட்சிச்சாலைகள 1949-ஆம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இந்தக் கல்லூரி மாணவர்கள், பட்டப் படிப்புக்கு மேற் படிப்புப் படிக்கும் மாணவர்கள் ஆகியோரின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் இக்காட்சிச் சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

நோக்கமும் பொருள்களும்.—(1)அங்கக் கூறுபாடு,(2) மருந் துகள் தயாரிக்கும் முறைகள், (3) விஷங்களின் விதங்கள் (4)வியாதிகளின் தன்மை,காரணங்கள் மருந்துகள் (5) தடுப்பு மருந்துகள் ஆகிய இந்நால்வகைப் பிரிவுகளுக்குரிய பொருட் காட்சிச்சாலைகள இங்கேயிருக்கின்றன. அவைகளில் பொருத்தமான மாதிரிகளும் காட்சிப் பொருள்களும் இருக் கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இக்காட்சிச்சாலைகளின் உப யோகத்துக்காக வசதியான ஒரு புஸ்தகசாலை இருக்கிறது. அதில 3,000 புஸ்தகங்களுக்கு மேல் இருப்பதுடன். 42 பருவகால வர்த்தமானப் பத்திரிகைகளும் சந்தா செலுத்தி வரவழைக்கப்படுகின்றன. M.B.B.S. வகுப்பு மாணவர் களுக்கும் ஏனைய வைத்திய வகுப்பு மாணவர்களுக்கும் வேண் டிய கல்வி வசதிகளனைத்தும் இக்காட்சிச்சாலைகளில் கிடைக்கின்றன. இக்காட்சிச்சாலைகளைப் பார்க்க வருபவர்கள் இங்குள்ள பொருள்களைப் பற்றி விளக்கம் தெரிய விரும் பினால், அவர்களுக்கு அந்தந்தக் காட்சிச்சாலைப் பிரிவின் சொற்பொழிவாளர்களால விளக்கம் தெரிவிக்கப்படுகிறது, சர்வகலாசாலை ஆண்டு விழாக் கொண்டாடப்படும் பொழுது விசேஷப் பொருட்காட்சி விழாக்களும் நடத்தப்படுகின்றன. விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்தில் இருக்கின்றன.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—ஞாயிற்றுக் கிழமைகளும். சர்க்கார் விடு முறை நாட்களும் தவிர, மற்ற நாட்களில் தினம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும், சனிக்கிழமைகளில் மட்டும் பிற்பகல் 1 மணி முதல் மாலை 5 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. ஆனால், கல்லூரி மாண வர்களின் உபயோகத்துக்காகவே நிறுவப்பட்டுளளது.

நிர்வாகக் குழு.—கல்லூரியின் பொது நிர்வாகத்திலிருந்து வருகிறது.

நிதி நிலை.—தனி வரவு செலவுத் திட்டம் இல்லை. ஆயினும், புஸ்தக சாலைக்குத் தேவையான புஸ்தகங்கள் வாங்கிக்கொள்வதற்காகத் தனிப்பட்ட உபகாரப் பணம் கொடுக்கப்படுகிறது.

விவரக் குறிப்புகள்.—அந்தந்தப் பிரிவு ஊழியர்களால் அந்தந்தப் பிரிவுப் பொருட்காட்சிச் சாலைகளுக்கு வேண்டிய மாதிரிப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. மாதிரி வடிவங்களும், இரசாயன மருந்துகளும் விலை கொடுத்து வாங்கப்படுகின்றன. எந்தெந்தக கட்டங்களில் தேவைப்படுமோ, அந்தந்தக் கட்டங்களுக்குத் தரைப்படங்களும் விவரக் குறிப்புகளும் தயாரிக்கப்படுகின்றன.

(iii) பரோடா M. S. சர்வகலாசாலைப் புதைபொருட்பிரிவுக் காட்சிச்சாலை.

புதைபொருள்கள்—கலைப்பண்பாட்டுப் பொருட்காட்சிச் சாலைகள் என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கவும்.

பம்பாய்.

ஜனத்தொகை—2,839,270.

(i) கிராண்ட் வைத்தியக்கல்லூரிப் பொருட்காட்சிச்சாலைகள்.

(a) வியாதிகளின் இயல்பு, காரணங்கள், மருந்துகளின் பொருட்காட்சிச்சாலை. (b) அங்கக்கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலை. (c) தடுப்பு மருந்துகள், சமூக மருந்துகள் பொருட் காட்சிச்சாலை ஆகிய மூப்பிரிவுப் பொருட்காட்சிச்சாலைகள்.

தோற்றம்.—1845.

வரலாறு.—கிராண்ட் வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 1845-ஆம் வருஷத்திற்குப்பின் அதிசீக்கிரத்தில் வியாதிகளின் இயல்பு, காரணங்கள, மருந்துகள் பிரிவுப பொருட்காட்சிச் சாலையும் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், மிகப் பழமையான பட்டியல் அது 1850-ஆம்வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்று தெரிவிக்கிறது. இது 1925-ம் வருஷத்தில் திருத்தியமைக்கப பட்டது. யுத்த காலத்துக்குமுன வயது வந்த மாணவர்கள் இக்காட்சிச்சாலையைப் பார்க்க வருவது ஒரு விசேஷ சம்பவ மாயிருந்தது. சமூக சேவையாளர்கள், முதியோர கலவிக் குழு அங்கத்தினர்கள், ஆயாக்கள், சுகாதார மேற்பார்வை யாளர்கள் ஆகியோர் தாம் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்காக இக்காட்சிச்சாலைக்கு வழக்கமாக வந்து போகிறார்கள். காட்சிப் பொருள்களை உதாரணங்களுடன் வகைபடுதது விளக்கிக் காட்டும் ஓர் அறை இருக்கிறது. அதில் சுமார் 100 போகளுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்கிறது. அங்கக்கூறுபாட்டுப் பொருட் காட்சிச்சாலை கிராண்ட் வைத்தியக் கல்லூரியின் ஒரு பாகமாக 1845-ஆம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டு, அது முதல் அது ஆரம்பிக்கப்பட்ட நோககத்தையும், கல்லூரியின் நோக்கங்களையும், மாணவர் ஆசிரியர்களின் நோக்கங்களையும் நிறை வேற்றி வருகிறது.

1932-ஆம் வருஷத்தில் 116 மாதிரிப் பொருள்களுடன் மட்டும் இருந்த இந்தப் பொருட்காட்சிச்சாலை அது முதல் தீவிர மாய் வளர்ச்சியடைநது வந்திருக்கிறது. 1949-ஆம் வருஷம் சமீபம் இக்காட்சிச்சாலையில் 1,274 மாதிரிப் பொருள்கள் இருந்தபடியால், பம்பாய் ராஜ்யச் சர்க்கார் இந்த அங்கக்கூறு பாட்டுப் பொருட்காட்சிச்சாலையைப் போதுமான இட வசதியுடன் விஸ்தரிக்க வேண்டியது அவசியமென உணர்ந்தனர். 1950ம் வருஷத்தில் கட்டடம் விஸ்தரிக்கப்பட்டது. இது இந்தியா விலுள்ள அங்கக்கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலைகள் அனைத்திலும் மேம்பட்டதாய் இருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—வியாதிகளின் இயல்பு, காரணம், மருந்துகள பிரிவுக் காட்சிச் சாலையில் அவ்வகைப் பிரிவு, நீதி மன்றங்களில் சந்தேகப்படும் கேள்விகளுகுப் பதிலுரைக்கும் வைத்திய அறிவு விளக்கப்பிரிவு, உடல் நலச் சாஸ்திரப் பொது சுகாதாரப்பிரிவு ஆகிய பிரிவுகள் இருக்கின்றன. இந்தப் பொருட் காட்சிசாலையில் வடக்கு, கிழக்கு, மேற்குப் பக்கங்களில் இருபெரு மாடிகளுக்கிடையே தணிந்த மாடியையுடைய 12,000 சதுர அடிப் பரபபளவில் தரைமட்ட முள்ள அறையொன்றில் வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள் பிரிவுப் பொருட்காட்சிசாலை இருக்கிறது. இதில் சுமார் 3,000 காட்சிப் பொருள்களும் மாதிரிப் பொருள்களும் இருப்பதுடன் சில ஆயிரக்கணக்கான படங்களும் வரைப் படங்களும் போட்டோக்களும் இருக்கின்றன. ஒவ்வொரு மாதிரிப் பொருளும் போட்டோக்கள் சகிதம் படைப்பு அடித்த விளககங்களுடன் தெரிவிக்கப்பட்டிருப்பதோடு கூடுமான இடங்களிலெல்லாம் நோயாளிகளின் போட்டோக் களுடனும் வைக்கப்பட்டிருக்கின்றன. மெழுகினால் செய்யப் பட்ட மாதிரி வடிவங்களும், விளக்கமான படங்களும், கோட்டுப் படங்களும், தோல் வியாதிகளைக் காட்டும் போட்டோக் களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு மாதிரிப் பொருளும் பூதக்கண்ணாடி கொண்டு பாாத்தால் எப்படிப் பெரிதாகத் தெரியுமோ, அப்படிப் பெரிதான வடிவங்களில் தெளிவுபடச் செய்து வைக்கப்பட்டிருக் கிறது. சில வைத்திய சிகிச்சைகளின போது எடுக்கபபட்ட நோயாளிகளின் போட்டோக்கள் பிளாக்கு எடுத்து அச்சடித்து வைக்கப்பட்டிருக்கினறன. வியாதிகளின் தன்மை, காரணங் கள், மருந்துகள் நிலைமை சமபந்தமாய்ச் சூரிய ஒளியைக்கும் கருவிகளையுடைய அலமாரிப் பெட்டிகளின் உச்சியில் கண் ணெதிரியைகும் கருவிகளின் பரிசோதனைக்காக விளக்கொளி பொருத்தபபட்டிருக்கிறது.

அடுத்தபடி அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலை அமைத்துள்ள நோகக்மாவது, மனித சரீரதத்தின் அங்கங்களைப் பல நோக்குகளில் காட்ட வேண்டுமென்பதே. இப்பிரிவுக் காட்சிச்சாலையில் எலும்புகளும் (a) தன் நிலையிலுள்ள மனித சரீர அங்ககக்கூறுபாடு, (b) தன்நிலையில் மாறுதலடைந்த அங்கக் கூறுபாடு, (c) மாணிடக் கருவுற்பத்தி, (d) ஒப்பு நோக்கும் அங்ககக்கூறுபாடு ஆகிய இவைகளை விவரித்துக் காட்டும் நோக்கத் துடன் சரீரத்திலுள்ள பொதுவான பாகங்களும் காட்சிககு வைக்கப்பட்டிருக்கின்றன. தற்சமயம் இந்த அங்கக் கூறுபாடு பொருள்காடசிசாலையில 2000 மாதிரிப் பொருள்கள் இருகினறன. அவைகளில் ஒரு சில பொருள்கள் வெளி நாடுகளிலிருந்து தருவித்தன போக, மீதியெல்லாம் இந்த அங்கக்கூறுபாட்டு இலாக்கா அலுவலர்களாலேயே தயாரிக்கப் பட்டவையாகும்.

விளக்க நடவடிக்கைகள்.—வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள் இவை சம்பந்தப்பட்ட பொருட் காட்சிச்சாலையில 100 பேர் வரை உட்காரக்கூடிய வசதியுடன் கூடிய ஒரு திருஷ்டாந்த பூர்வ விளக்க அறை இருக்கிறது. இக்காட்சிச் சாலையிலுள்ள பொருள்கள் முழுதுகும் விளக்கங் கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. விளகக சீட்டுகளிலேயே விவரங்கள் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அநேக கட்டங்களில் படங்களுடனும் விளக்கங்கள் தெரிவிக கப்பட்டிருக்கினறன. இக்காட்சிச்சாலையில் தெளிவான, மனத்தில் பதியக்கூடிய, தரவாரியான, கையால் வரையப்பட்ட படங்கள், சித்திரங்கள், போட்டோக்கள், மாதிரி வடிவங்கள், விவரக் குறிபபுகள, புள்ளி விவரங்கள் இவைகளும், ஒவ்வொரு விஷயததையும் பற்றிப் பூரணமாய்த தெரிந்து கொளளும்படியான முறையில் அசல் காட்சிப் பொருள்களே வைக்கபபட்டிருக்கின்றன. இந்த வைத்தியப் பொருடகாட்சிச் சாலையமைக்கப்பட்ட நோக்கம், இது முக்கியமாய் வைத்தியக் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பயனளிக்க வேண்டு மென்பதேயாயினும், இதனை எனைய கல்வித் துறையாளர் களும் ஆராய்ச்சியாளர்களும் பாாதது்ப் பயனடையட்டும் என்றும் கருதப்படுகிறது. பொது மக்கள் பொருள் காட்சி விழாக்களில் வைத்திய, சுகாதார வழிகளை அறிவுறுத்தும் கூடங்கள் அமைத்து, அவற்றில் இகுகுள்ள பொருளகளைக் காட்சிக்கு வைத்து, சுகாதார வழிகளை அறிவுறுத்துவதுடன பம்பாயிலும் வெளியிடங்களிலும் இவ்விதமாய நடைபெறும் பொருட்காட்சி விழாக்களுக்கு எவ்வப்போது வசதிப்படுமோ, அவ்வப்போது இங்குள்ள காட்சிப் பொருள் கடனாகக் கொடுத்து வாங்கப்படுகின்றன.

அங்கக் கூறுபாடுகள் பொருட்காட்சிச் சாலையில் வைத்தியம் பயிலும் மாணவர்கள் உபயோகதது்காக விவரமான குறிப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இநத வைத்தியக்

கல்லூரி மாணவர்களின் உபயோகத்துக்காகக் கல்லூரி வாசக சாலையொன்று இருக்கிறது. அதில் பொது மக்கள் படிக்க முடியாது.

வெளியீடுகள்.—வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள ஆகிய இப்பிரிவுப் பொருடகாட்சிச் சாலை ரிகப் பழமையான சில பட்டியல்களை வெளியிட்டிருக்கிறது. இவற்றின் முதற்பதிப்பு 1859-ஆம் வருஷத்தில் வெளியிடப் பட்டது. அதன்பின் 1904, 1916, 1925, 1930-ஆம் வருஷங் களில் தொடர்ச்சியான பதிப்புகள் வெளியாயின. இக்காட்சிச் சாலையிலுள்ள பொருள்களைப் பற்றி இதே மாதிரி சில வெளியீடுகள் விஞ்ஞான வர்த்தமானப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன.

வேலை நேரம்.—இக்கல்லூரியின் வேலை நாட்களிலெலலாம் சனிகிழமை தவிர, மற்ற நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும், சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும் அங்கக்கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலையும், வியாதிகளின் தன்மை, காரணங் கள், மருந்துகள் பிரிவு பொருள்காட்சிச்சாலையும் திறக்கப் பட்டிருக்கும். சமூக மருந்துகள், தடுப்பு மருந்துகள் பொருட் காட்சிச் சாலை காலை 10-30 மணி முதல் மாலை 5-30 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. இக்காட்சிசசாலை கிரான்ட் வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்காக, அதிலும் முக்கியமாகச் சர்வகலாசாலை இடை வகுப்பு மாணவர்களுக் கும் பட்டப் படிபபுக்கு மேற்படிப்புப் படிக்கும் மாணவர் களுக்குமென்றே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

நிர்வாகக் குழு.—இக்காட்சிச் சாலைகள் கிரானட் வைத்தியக் கல்லூரியின் அவ்வப்பகுதித் தலைவர்களின் மேற்பார்வையி லிருக்கின்றன.

ஊழியர்கள்.—தனிப்பட்ட ஊழியர்கள் தொகுதி அமைக் கப்படவில்லை. வியாதிகளின தனமை, காரணங்கள், மருந்து கள் வகைப் பொருட்காட்சிச்சாலை, அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலை, சமூக, தடுப்பு மருந்துகள பொருப் காட்சிச் சாலை முதலியவற்றிற்கு அந்தந்தப் பிரிவுப் பேராசிரி யர்களே காவலர்களாய் இருந்துவருகிறார்கள. அவர்களுக்கு அவரவர்கள் பிரிவு இதர ஆசிரியாகள் உதவியாய் இருந்து வருகிறார்கள.

நிதி நிலை.—இந்தப் பொருட்காட்சிச் சாலைகளுக்கெனத் தனி வரவு செலவுத் திட்டம இல்லை. ஆனால், அந்தந்த வைத் தியக் கல்விப் பிரிவுகளின வரவு செலவுத் திட்டத்துடன் சேர்க்கபபட்டிருக்கிறது.

விவரக் குறிப்புகள்.—வைத்தியப் படிப்பு மாணவாகளுக் காகவே இந்தப் பொருட்காட்சிச்சாலைகள் ஏற்படுத்தப்பட் டுள்ளன. வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள பிரிவுப் பொருட்காட்சிச்சாலைக்கு, நாளொன்றுக்குச சரா சரி 60 பார்வையாளர்கள் வருகிறார்கள். இந்தப் பொருட் காட்சிச்சாலையில் விசேஷ காலங்களுக்கென ஒதுக்கிவைக்கப் படும் காட்சிப் பொருள்களுக்குப் போதிய அளவுக்குப் பணடக சாலை வசதியும, இரசாயனக்கூட வசதிகளும் இருக்கின்றன. பிரேதங்களை அறுத்துப் பரிசோதிப்பதற்கும், இரணங்களை அறுத்துப் பரிசோதிப்பதற்கும் உபயோகிக்கப்படும் கருவிகளே இங்குள்ள பிரதான காட்சிப் பொருள்களாகும். இந்தப் பொருட்காட்சிச்சாலை இந்தியாவிலும் வெளி நாடுகளிலு முள்ள வைத்தியக் கல்லூரிகளுக்குப் பணி புரிகிறது. விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்திலும் ஹிந்துஸ்தானியிலும் இருக்கின் றன. இந்தப் பொருட்காட்சிச்சாலை, இந்தியப் பொருட்காட்சிச் சாலைகள் சங்கத்தில் ஒரு ஸ்தாபன அங்கமாய் இருக்கிறது.

அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலைக்கு நாளொன் றுக்குச் சராசரி 50 பார்வையாளர்கள் வருகிறார்கள. தற்சமயத் துக்கு இதன் கட்டடம் பொருத்தமானதாகவும், இடவசதி போதுமானதாகவும் இருக்கிறதுடன், தேவையான அளவுக்கு இரசாயனப் பரிசோதனை வசதிகள் உடையதாகவும் இருக்கிறது. பிரேதப் பரிசோதனையின் போது ஆசிரியர்கள் குழு மாதிரிப் பொருள்களை எடுத்துக் காட்சிப்பொருள்களாகத் தயார் செய்து வைக்கின்றனர். காட்சிப் பொருள்களுக்கு விளக்கச் சீட்டுகள் வைக்கப்படவில்லையாயினும், அவைகளுக்கு இலக்கமிட்டு, அட்டவணை அட்டைகள் போடப்பட்டிருக்கின்றன. இக்காட்சிச் சாலை, வைத்தியப் படிப்பு மாணவர்களுக்கு மிகவும் உதவி யாயிருப்பதால், மாணவர்கள் இக்காட்சிச்சாலையைப் பயன் படுத்திக்கொள்கிறார்கள்.

(ii) செயின்ட் ஸேவியர் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலை.

(a) இயற்கைப் பொருள்கள் காட்சிச்சாலை, (b) இந்திய சரித்திர ஆராய்ச்சி நிலையப் பொருட்காட்சிச்சாலை ஆகிய இரு பிரிவுகள்.

தோற்றம்.—(a) இயற்கைப் பொருள்கள் காட்சிச்சாலை 1918; (b) இந்திய சரித்திர ஆராய்ச்சி நிலையப் பொருட்காட்சிச் சாலை 1928.

வரலாறு.—பிளாட்டர் என்பவர் சேகரித்த செடி வகைகளை வைத்து 1918-ஆம் வருஷத்தில் இயற்கைப் பொருள்கள் காட்சிச்சாலை ஆரம்பிக்கப்பட்டது. பின்பு அவைகளுடன் ஹால் பர்க், மக்கான் முதலியோர் சேகரித்த செடியினங்களும் சேர்க் கப்பட்டன. உயிர் வாக்கக் காட்சிப் பொருள்களில் ஆஸ்மத்து, பாலாஹியன் முதலியோர்களால் சேகரிகபபட்ட காட்சிப் பொருள்கள் இருக்கின்றன.

இந்திய சரித்திர ஆராய்ச்சி நிலையப் பொருட்காட்சிச் சாலை, அதன் டைரக்டரான Fr. ஹீராஸ் என்பவர், தாம் தேடிச் சேகரித்தனவும் விலை கொடுத்து வாங்கியனவுமான பழங்காலப் பொருள்களை வைத்து ஒரு பொருட்காட்சிச்சாலை அமைப்ப தற்குத் தக்க ஏற்பாடுகளையும் செய்தார். நாளடைவில் இது இந்திய சரித்திர ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு முக்கிய பாகமாக வளர்ச்சியடைநதது. ஆனால், போதிய பண வசதியும் இட வசதியும் இல்லாத காரணத்தால், இதை விஸ்தரிக்க முடியா மல் போனதுடன் இப்பொழுது இருக்கும் காட்சிப்பொருள் களுக்குங்கூட வசதியான ஏற்பாடு எதுவும் செய்யப் படாமல் இருந்து வருகிறது.

நோக்கமும் பொருள்களும்.—இயற்கைப் பொருள்கள் பிரி வில் பம்பாய், சால்செட்டுத் தீவுகளிலும் மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும் வசிகும் எலலா விதமான பறவையினங் களும் இருக்கினறன. தாவர வர்க்கப் பிரிவில் பம்பாய் ராஜ்யத்தின் பல பகுதிகளிலுமுள்ள செடி இனங்கள் பல உலர்த்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்திய சரித்திர ஆராய்ச்சி நிலையததில் இந்தியச் சிற்பங் களின் மாதிரிகள் இருக்கின்றன. அவைகள இந்து, புத்த, ஜைன மதங்களைச் சேர்ந்த செம்புச சிலைகள், ஒரு பெரிய நாணயப் பெட்டகம், கையெழுத்துப் பிரதிகள், மற்றும் பல பழம்பொருள்கள் ஆகிய இவைகளைக் கொண்டதாய் இருக் கிறது.

விளக்க நடவடிக்கைகள்.—(a) இயற்கைப் பொருள்கள் பிரிவுக் காட்சிச்சாலையுடன் இணைந்த ஒரு புஸ்தகசாலை இருக்கிறது. அது இக்காட்சிச்சாலை ஊழியர்களின் உபயோ கத்துக்காக ஸ்தாபிகபபட்டது. புஸ்தகங்களும் வர்தமா னப் பத்திரிகைகளுமாய்ச் சேர்ந்து 5,000-க்கு மேல் இருக் கின்றன. காட்சிக்கூடத்திலுள்ள சொற்பொழிவு மன்றத் தில் மாதிரிப் பொருள்கள் திருஷ்டாந்த பூர்வமாய விளக்கிக் காட்டப்படுவதுடன், திரைப்படக கண்ணாடிகள், திரைப்படச் சுருள்கள் இவற்றைக்கொண்டு திரைப்படங்களும் காட்டபபடு கினறன. சர்வகலாசாலையைச் சோந்த பல கல்லூரிகளி லிருந்து வரும் ஆராய்ச்சிக் குழுவினா தாவர வாக்கப் பிரிவி லுள்ள காட்சிப் பொருள்களைப் பற்றி ஆராய்ச்சி செய் கிறாகள்.

(b) இந்திய சரித்திர ஆராய்ச்சி நிலையத்தில் இந்தியா வின (பல துறை அபிவிருத்தி) சாஸ்திரம் சம்பந்தப்பட்ட சுமார் 26,000 தொகுதிப் புஸ்தகங்கள் இருக்கின்றன. ஆராய்ச்சித் துறைப்பணியை மேற்கொண்டுள்ள மாணவர்

களும், ஆசிரியர்களும், அதேவிதமாக ஆர்வமுள்ள பார்வையாளர்களும் இப்புஸ்தகங்களை எடுதது படித்து ஆராய்ச்சி செய்கின்றனர். புதைபொருள்கள் சம்பந்தப்பட்ட சொற்பொழிவுகளில் உபயோகப்படுத்தக்கூடிய படக் கருவிப் பெட்டியொன்று இருக்கிறது. ஆராய்ச்சித் துறையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் சொற்பொழிவாற்றும்படி புகழ் பெற்ற கல்வித்துறை மேதைகள் அடிக்கடி வரவழைக்கப்படுகின்றார்கள். காட்சிப் பொருள்களுக்கு ஆங்கிலத்தில் விளக்கச் சீட்டுகள் வைக்கப்படுகின்றன. இந்த வட்டாரத்திலுள்ள ஏனைய சர்வகலாசாலைகளையும், கல்லூரிகளையும் சேர்ந்த வித்தியார்த்திகள் பலர் இந்த நிலையத்தையும் பொருட் காட்சிச்சாலையையும் பார்க்க அடிக்கடி வருகிறார்கள். காட்சிப் பொருள்களின் தனிப் பண்புகளை விளக்கிக் காட்டுவதற்குத் தரைப்படங்கள், விவரக் குறிப்புகள். மாதிரி வடிவங்கள், வார்ப்புகள், படங்கள் முதலியன தயாரிக்கப்படுகின்றன.

வெளியீடுகள்.—(a) இயற்கைப் பொருள்கள் காட்சிச்சாலை· இக்காட்சிச்சாலையின் தாவர வர்க்கப் பிரிவிலிருந்து இதனடியில் காணும் புஸ்தகங்களும், இதழ்களும் வெளியிடப்பட்டுள்ளன :—(1) எடனின் தாவர வர்க்கங்கள், (2) சிந்து நதி டெல்டாப் பிரதேசங்களின் தாவர வர்க்கங்கள், (3) சிந்து மாகாணத்தின் தாவர வர்க்கங்கள், (4) கட்சு பிரதேசத் தாவர வர்க்கங்கள், (5) காந்தலாப் பிரதேசத் தாவர வர்க்கங்கள், (6) பம்பாய் ராஜ்யத் தாவர வர்க்கங்களின் மறு பதிபபு, (7) புரந்தரப் பிரதேசத் தாவர வாக்கங்கள், (8) சௌராஷ்டிர ராஜ்யத் தாவர வர்க்கங்கள், (9) பாம்பார் புல் தினுசுகள முதலியன.

(b) இந்திய சரித்திர ஆராய்ச்சி நிலையமும் 18 தொகுதிகள் கொண்டதாய் இந்திய பல துறை ஆராய்சசிச் சாஸ்திர விஷயங்கள் பற்றிய வரிசைக் கிரமமான வெளியீடுகளை வெளியிட்டுள்ளது.

வேலை நேரம்.—இந்தக் கல்லூரியின் வேலை நாட்களிலெல்லாம் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இக்காட்சிச் சாலைகள் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—இயற்கைப் பொருள்கள் காட்சிச்சாலை தாவர வாக்க, உயிர்வர்க்கப் பிரிவால் மேறபாவை செய்யப்படுகிறது. அவை அந்தநதப் பிரிவைச் சேர்ந்த கலலூரிப் பேராசியர்கள் பொறுப்பில் இருநது வருகினறன. இந்திய சரித்திர ஆராய்ச்சி நிலையப் பொருட்காட்சிச் சாலை அந்த நிலையத்தாரால் கவனிததுக்கொள்ளப்படுகிறது.

ஊழியர்கள்.—தனிப்பட்ட ஊழியர்கள் இல்லை.

நிதி நிலை.—இக்காட்சிச்சாலைகளுக்கெனத் தனிப்பட்ட வரவு செலவுத்திட்டத் தொகை எதுவும் ஒதுக்கப்படுவதில்லை. சரித்திரப் பொருட்காட்சிச்சாலைகு வேண்டும் தொகை சரித்திரப் பிரிவுக கணககிலும், இயறகைப் பொருட்காட்சிச் சாலைக்கு வேண்டும் தொகை தாவர வர்கக, உயிர் வர்க்கப் பிரிவுகளின் கண்க்கிலும் ஒதுக்கப்படுகினறன.

விவரக் குறிப்புகள்.—பொதுவாகச் சில விசேஷ நாட்களில் மட்டுமன்றி. மற்ற நாட்களில் பொது மக்கள் இயற்கைப் பொருள்கள் காட்சிச்சாலையைப் பார்க்க முடியாது. எவ்வகை மாணவர்களுக்குத் தேவையோ அதற்கேற்றபடி அது பொருத்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது. பொருட்காட்சிச்சாலையினுள்ளே இரசாயனப் பரிசோதனை வசதிகள இல்லையாயினும், அடுத்துள்ள (கல்லூரி) இரசாயனக் கூடங்களில் அவ்வசதிகள் கிடைக்கக்கூடியனவாய் இருக்கின்றன. தாவர விளக்கச் சீட்டுகளெல்லாம் விஞ்ஞான (தாவர சாஸ்திர) விதிகளின்படி லத்தீன் அல்லது ஆங்கில பாஷையில் இருக்கின்றன. தாவர வர்க்கப் பிரிவுக்குரிய பண்டகசாலையின் இடவசதி சமீப காலத்தில் இரட்டிபபுச் செய்யபபட்டிருப்பதால் ஒரு பெரிய காட்சிக் கூடம் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது

இந்திய சரித்திர ஆராய்ச்சி நிலையப் பொருட்காட்சிச் சாலை செயிண்ட் சேவியர்ஸ் கல்லூரியினுள் அமைக்கப் பட்டிருக்கிறது.· ரோடு மூலமாகவும் பொதுஜன வாகன வசதிகள் மூலமாகவும் இக்காட்சிச் சாலையை வசதியாகப் போய்ப் பார்க்கலாம். ஆயினும், இது இந்தக் கல்லூரியில் படிக்கும 2000-க்கும் மேற்பட்ட மாணவர்களின தனி உபயோகத்துக்காகவே அமைக்கப்பட்டிருப்பதால், பொது மக்கள் போயப் பார்க்க முடியாது. விதியார்த்திகளும் புகழ் பெற்ற பார்வையாளர்களும் இக்காட்சிச் சாலையை வநது பார்க்கும் படி அழைகக்படுகிறார்கள். விலையுயர்ந்த காட்சிப் பொருள்களெல்லாம டைரக்டர் பொறுபபில் இருககின்றன. இங்குள்ள காட்சிப் பொருள்களெலலாம் இதன டைரக்டரால் தம் சொந்த நிலைமையில் தேடிச் சேகரிததும், விலை கொடுதது வாஙகியும், தானஙகளாகவும் சேர்ககப்பட்டவைகளாகும. இதரப் பொருடகாட்சிச்சாலைகள் வேண்டுகோளுக்கிணஙகி இங்குள்ள காட்சிப் பொருள்களை கடனுகக் கொடுதது வாங்கப்படுகின்றன. அதேபோல இநதப் பொருட்காட்சிச்சாலையும் இதரப் பொருட்காட்சிச்சாலைகளிலிருந்து காடசிப் பொருள்களைக் கடனுக வாஙகி ஆராய்ச்சி செய்த பிறை திருமபக் கொடுக்கிறது. போதிய அளவு இட வசதியும் பணவசதியும் இருப்பதால், இக்காட்சிச்சாலையை மேலும அதிகமாக அபிவிருததி செயது இந்த வட்டாரத்திலேயே கல்வி சம்பந்தப்பட்டதும் கலைப்பணபாடுகள் சமபந்தப்பட்டதுமான ஒரு சிலாக்கியமான பொருட்காட்சிச்சாலையாகச் செய்ய வேண்டுமெனத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

(iii) சேத் கோவர்த்தன்தாஸ் சுந்தர்தாஸ் வைத்தியக் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலை.

(1) அங்கக் கூறுபாடு, கருவுற்பத்தி விளக்கப் பொருட் காட்சிச்சாலை.

(2) சேத ஜமனுதாஸ் லல்லுபாய் நோய்கள வரலாற்றுப் பொருடகாட்சிச்சாலை.

தோற்றம்.—(1) அங்கக் கூறுபாடு, கருவுற்பத்தி விளக்கப் பொருட்காட்சிச்சாலை—1925. (2) சேத் ஜம்னுதாஸ் லல்லு பாய் நோய்கள வரலாற்றுப் பொருடகாட்சிச்சாலை–1926.

வரலாறு.—1925-ஆம வருஷம் முதல் அங்கக் கூறுபாடு கருவுற்பததி விளக்கப பொருட் காட்சிச்சாலைக்குப் பொருள்கள சேர்ககப்பட்டு வருகின்றன. கலலூரியில பிரதான அறையில் இரண்டு பிரிவுகளாக விசேஷ அங்கக் கூறுபாடுகளைச் சேர்நத சுமார் 4,000 காட்சிப் பொருள்கள் இருக்கின்றன. அவறறில் ஒரு பிரிவு முக்கியமாக வைதியப் பரிட்சைகளுக்குப் படிக்கும் மாணவாகளின் உபயோகத்துககுப் பயன்பட வேண்டுமென்ற நோககத்துடன அமைகபப்பட்டிருகிறது. மறறொனறு விஞஞானப் பட்டம் பெறுவதற்காக அங்கக் கூறுபாடு வகைகளைப் பற்றிப் படிக்கும் மாணவர்களுக்கு உபயோகமாக ஒப்பு நோககு அங்கக் கூறுபாடு, கருவுற்பத்தி விவரஙகள் ஆகியவற்றை விளக்கும் உயிர் வர்க்க மாதிரிப் பொருள்களையுடையதாய அமைக்கப்பட்டிருக்கிறது. சேத் ஜம்னுதாஸ் லலலுபாய் வியாதிகள விளகபப பொருட்காட்சிச்சாலை 1926-ஆம வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. 1934-ஆம் வருஷத்தில் அது புதுக் கட்டடத்துக்கு மாறறப்பட்டது. கலலூரிக்குக் கிழக்கே இக்கட்டடம் சேத ஜமுனுதாஸ் லல்லுபாய் தர்ம நிதிகளிலிருந்து ரூ. 1,10,000 செலவில் கட்டப்பட்டிருக்கிறது. அக்கட்டடதிலி தரை மட்டதில் ஓர் அறையும் இரண்டு மேல் மாடிகளும் இருக்கின்றன. இக்காடசிச்சாலையில் 1,782-கரு மேற்பட்ட வியாதிகள விளகபக் காட்சிப் பொருள்கள் இருககின்றன. பொதுஜன சுகாதாரம், வைதிய நீதி, விஷ சாஸதிரம் முதலியன பயிலும் மாணவர்களுக்குப் பாடங்களைத தெளிவுபட தெரிந்துகொளவதற்குச் சாதகமாயுளள காடசிப்பொருள்களைக் கொண்ட தாய் இக்காட்சிச்சாலையில் ஒரு தனிப பிரிவு அமைக்கப் பட்டிருகிறது. தரையின் சம தளத்திலுள்ள ஒரு பெரிய அறையும் சகல உபகரணங்களுடன் அமைக்கப்பட்ட ஓர் இருட்டறையில் மேலமாடியில் மனிதா அவயவங்களின் ஜீவ

வஸ்துக்களைப் பற்றிப் போதிக்கும் காட்சிப் பொருள்களடங்கிய ஓர் அறையும் இருப்பதோடுகூட, மாதிரிப் பொருள்களைப் பீடங்களில் அல்லது கண்ணாடி ஜாடியில் ஏற்றுவதற்கும், மற்றும் பொருட்காட்சிச்சாலை சம்பந்தப்பட்ட வேலைகளைச் செய்வதற்கும் இரண்டு அறைகள் இருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—அங்கக் கூறுபாடு, கருவுற்பத்தி விளக்கப் பொருடகாட்சிச்சாலையில் கல்லூரி இடை வகுப்பு மாணவர்களுக்கும் பட்டப் படிப்புகுமேல் படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கும் பயனபடக்கூடிய அங்கக் கூறு பாட்டுக் காட்சிப்பொருள்களும், வியாதிகள் விளக்கப்பொருட் காட்சிச்சாலையில் வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்குப யன் படக்கூடிய வியாதிகளின்தன்மை, காரணங்கள், அவற்றிற்கு மருந்துகள் முதலியனவற்றை விளக்கும் காட்சிப் பொருள் களும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இந்த வைத்தியக் கல்லூரியில் படிக்கும் கல்லூரி இடை வகுப்பு மாணவர்களுக்கும் பட்டப் படிப்புக்கு மேல் படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கும் பயிற்சி யளிப்பதற்கான் சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் பல பள்ளிக்கூடங்களிலிருந்து வரும் மாணவர்களும் வைத்திய சாலைகளிலிருந்து வரும் ஆயாக்களும் தத்தம் வைத்தியப் பரிட்சைக்குப் போகுமுன் இந்தக் காட்சிச்சாலைகளை வந்து பார்த்துத் தம் பரிட்சைக்குப் பயன்படக்கூடிய விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்கிறார்கள். மற்றப் பள்ளிக்கூடங்களி லிருந்தும் கல்லூரிகளிலிருநதும் வரும் மாணவர்களுக்குக் இக்காட்சிச்சாலைகளிலுள்ள பொருள்களைப் பற்றித் தனிப்பட்ட விசேஷ முறையில் விளக்கம் தெரிவிக்கப்படுகிறது. விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச்சாலையில் மாதிரிப் பொருள்களைக் கண்ணாடி ஜாடியில் அடைத்து அவற்றின்மேல் அப்பொருள் களைப் பற்றிய விவரங்களும் அவைகளில ஏற்படும் நோய் களுக்கு வைத்தியம் செய்யும் முறைகளும் அந்த ஜாடிகளின் மீது ஒட்டப்பட்டிருக்கின்றன. இதே மாதிரி வியாதிகள விளக்கக் காட்சிச்சாலையில் அவ்வகைக் காட்சிப்பொருள்களும் அவற்றின் அருகில் அவைகளைப் பற்றிய விவரங்களும் வைத்தியம் செய் யும் முறைகளும் அடுக்கடுக்கான தாள்களில் எழுதிவைக்கப் பட்டிருக்கின்றன. கல்லூரிப் புஸ்தகசாலை இக்காட்சிச்சாலை களுக்கும் பயனபடுகிறது. அந்தப் புத்தக சாலையில் சுமார் 17,000 புஸ்தகங்களும் வர்த்தமானப் பத்திரிகைகளும் இருக்கின்றன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—கல்லூரி வேலை நாட்களிலெல்லாம் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இக்காட்சிச்சாலைகள் திறக் கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. ஆயினும், இக்காட்சிச்சாலை கள் கல்லூரி மாணவர்களின் உபயோகத்துக்காகவே ஏற்படுத் தப்பட்டுள்ளன.

நிர்வாகக் குழு.—இக்காட்சிச்சாலைகள் அந்தந்தப் பிரிவு தலைமைப் பேராசிரியர்கள் பொறுப்பில் இருக்கின்றன.

ஊழியர்கள்.—அங்கக் கூறுபாடு : கருவுற்பத்தி விளக்கப் பொருட்காட்சிச்சாலையும் வியாதிகள் விளக்கப் பொருட் காட்சிச்சாலையும் முறையே அங்கக் கூறுபாடு கற்பிக்கும் பேராசியராலும் ; வியாதிகள், கிருமிகள் பற்றிக் கற்பிக்கும் பேராசிரியராலும் கவனித்துக்கொள்ளப்படுகின்றன. பொருட் காட்சிச்சாலைகளின் வேலைகளுக்கு உதவியாய் இருக் கும் இந்த வைத்தியக் கல்லூரிப் பேராசிரியர்கள் தவிர, இப் பொருட்காட்சிச்சாலைகளின் தனிப்பட்ட ஊழியர்களாக இரசா யனப் பரிசோதனையாளர் ஒருவரும், அவருக்கு உதவியாளர் ஒருவரும், ஒரு பணியாளரும், மூன்று வேலைக்காரர்களும் கொண்ட ஒரு சிறு ஊழியர் குழுவும் இருக்கிறது.

நிதி நிலை.—இக்காட்சிச் சாலைகளுக்கெனத் தனிப்பட்ட வரவு செலவுத் திட்டம் இல்லை.

விவரக் குறிப்புகள்.—அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலைக்குக் கொஞ்சம் பண்டகசாலை இடவசதியிருந்தபோதிலும் காட்சிப பொருள்களுக்குக் காட்சிக் கூடங்களில் போதிய இட வசதியிலலை. ஆனால், இரசாயனப் பரிசோதனை வசதிகள் இருக்கின்றன. போலீஸாரிடமிருந்தும், R. E. M. ஆஸ்பத் திரியிலிருந்தும், வாடியா பிரசவ ஆஸ்பத்திரியிலிருந்தும் வரக் கூடிய பிரேதங்களைப் பரிசோதிப்பதிலிருந்தும் மாதிரிப் பொருள்கள் எடுத்துச் சேகரிக்கப்படுகினறன. வேறு வைத் திய நிலையங்களின் வேண்டுகோளின் பேரில் அவர்களுக்குத் தேவையான மாதிரிப் பொருள்களும் சேகரித்துக் கொடுக்கப் படுகின்றன. எந்தெந்தச் சந்தர்ப்பங்களுக்குத் தேவப் படுமோ, அந்தந்தச் சந்தர்ப்பங்களில் தரைப் படங்கள், விவரக் குறிப்புகள் முதலியன தயாரிக்கப்படுகின்றன.

வியாதிகள் விளக்கப் பொருட்காட்சிச்சாலை அது அமைக் கப்பட்ட நோக்கத்துக்கு ஏற்ற அளவு இட வசதியுடைய தாய் இருக்கிறது. அதில் இரசாயனப் பரிசோதனைக் கூட வசதி களும் பண்டகசாலை வசதிகளும் இருக்கின்றன. இக்காட்சிச் சாலைக்கு வேண்டும் மாதிரிப் பொருள்கள் ஆஸ்பத்திரி யிலுள்ள இரண அறுவைக் கூடங்களிலிருந்தும் பிண அறுவை யிலிருந்தும் சேகரிக்கப்படுகின்றன. வேறு வைத்திய நிலை யங்களுக்கும் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி மாதிரிப் பொருள்கள் சேகரித்துக் கொடுக்கப்படுகின்றன. இந்தியப் பொருட்காட்சிச் சாலைகள் சங்கத்தில் இநதப் பொருட்காட்சிச் சாலையும் ஒரு ஸ்தாபன அங்கமாய் இருக்கிறது.

பம்பாய் இயற்கை வரலாற்றுப் பொருள்கள் சங்கப் பொருட் காட்சிச்சாலை. *

தோற்றம்.—1883.

வரலாறு.—பம்பாய் வாசிகளான எட்டுப் பேர்களால் ஒரு தனியார் சங்கமாக இந்தச் சங்கம் 1883-ம் வருஷத்தில் ஸ்தா பிக்கப்பட்டது. சங்கம் ஸ்தாபிதமானவுடனே இச்சங்கததி லிருந்து ஒரு வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்டு அது முதல் தொடர்ந்து வெளி வந்துகொண்டிருந்தது. 1923-ம் வருஷத்தில் வேல்ஸ் இளவரசர் பொருட்காட்சிச்சாலை யுடன் செய்துகொண்ட ஏறபாட்டினபடி அக்காட்சிசசாலை யும் இச்சங்கமும் கூட்டாகச் சேர்ந்து இயற்கை வரலாற்றுப் பொருள்கள் காட்சிச்சாலை ஒன்றை ஸ்தாபித்து நடத்திவரு வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இப்பொழுது பம்பாயிலிருக் கும் வேல்ஸ் இளவரசர் பொருட்காட்சிச்சாலையிலுள்ள இயற்கைப் பிராணிகள் காட்சிக் கூடம் அவ்வினத்தில ஆசியாக் கண்டம் முழுவதிலுமே மிகச் சிறந்த பொருட்காட்சிச்சாலை யாய் இருக்கிறது. இந்தச் சங்கத்தில் இப்பொழுது 900 அங் கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தியா முழுவ திலும், பர்மா, இலங்கை, இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்காவிலும், மற்றும் பல இடங்களிலும் இருக்கிறார்கள். இந்தச் சங்கம் உலக முழுவதிலும் இதே தன்மையிலுள்ள சங்கங்கள் பொருட்காட்சிச்சாலைகள், விஞ்ஞான நிலையங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—இந்தச் சங்கம் ஸ்தாபித மானது முதல் இயற்கை வரலாற்றுப் பொருள்கள் சம்பந்தப் பட்ட தகவல்களையும் மாதிரிப் பிராணிகளையும் சேர்ப்பதி லும் இந்தியாவிலுள்ள தாவர வர்க்கங்கள், பிராணிவர்க்கங் கள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களை உலகமெங்கும் பரப்பு வதிலும், இந்நாட்டின் (இந்தியாவின்) பல வகைப்பட்ட வன மிருகங்களின் வாழ்க்கை வரலாற்றை நன்கு தெரிந்து அவற்றைப் பாதுகாப்பது, அபிவிருத்தி செய்வது ஆகியவற் றில் உத்தியோகஸ்தர்களுடைய கவனத்தையும் பொது ஜனங் களின் கவனத்தையும் இழுக்கவேண்டுமென்ற ஆர்வத்துடன் மிகவும் சுறுசுறுப்பாய் வேலை செய்ய ஆரம்பித்தது.

*பம்பாய் வேல்ஸ் இளவரசர் பொருட்காட்சிச்சாலையிலுள்ள இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சி, பம்பாய், இயற்கை வரலாற்றுப்பொருள்கள் சங் கத்தார் சேகரித்துக் கொடுத்த காட்சிப் பொருள்களைக் கொண்டு அமைக்கப் பட்டுளளதால் அந்தப் பொருட்காட்சிச்சாலை யே சங்கத்தார் பொருட்காட்சிச் சாலையும் ஆகிறது. யே சங்கத்தார் கேட்டுக்கொண்டபடி இத்தகவல் தனியாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெகு தீவிரமாய் வளர்ச்சியடைந்த இக்காட்சிச் சாலையில் இயற்கைப் பிராணிகளின் திருஷ்டாந்தப் பொருள்களாய் இப்பொழுது இருக்கும் காட்சிப் பிராணிகள் இந்தியா முழுவதிலுமே இதைப் போன்ற இயற்கைப் பிராணிகளைக்கொண்ட காட்சிச் சாலைகள அனைத்தையும்விட மிகவும் மதிப்புள்ள ஒரு பொருட்காட்சிச் சாலையாய் இருக்கிறது. இக்காட்சிச் சாலையில இப்பொழுது குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பிராணிகள் இனத்தில் 21,500 பிராணிகளும், பறவை இனங்களில் 20,000 பறவைகளும், மீன் இனங்களில் 3,500 மீன்களும், ஊர்ந்து செல்லும் பிராணிகள் இனங்களில் 4,000 பிராணிகளும், நீரிலும் நிலத்திலும் ஒருங்கே வசிக்கக் கூடிய பிராணிகள் இனங்களில் 1,000 பிராணிகளும், பூச்சியினங்களில் 80,000 பூச்சிகளும், மற்றும் முதுகெலும்பில்லாப் பிராணிகளின் இனங்களில் பலவும் இருக்கின்றன.

இச்சங்கத்தில் உன்னதமான புஸ்தகசாலையொன்றும் இருக்கிறது. அதில் 6,000 புஸ்தகங்களும் பருவகால வர்த்தமானப் பத்திரிகைகளும் மற்றும் பல வெளியீடுகளும் இருக்கினறன. இங்குள்ள காட்சிப் பொருள்களை மாணவர்களும் ஆராய்ச்சியாளர்களும் இச்சங்கத்தின அங்கத்தினர்களும் போய்ப் பரர்க்கலாம்.

இந்த வேல்ஸ் இளவரசர் பொருட்காட்சிச் சாலையில் சட்டங்கள் இணைக்கபபட்ட பல காட்சிக் கூடங்களில் குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பிராணிகள், பறவைகள், அவ்வவற்றின் இயற்கைக் குணங்களுடனேயுளள ஊரும் பிராணிகள் முதலியன இருகினறன. இந்த மாதிரிப பிராணிகளின் வகைகளெல்லாம் இசசங்கத்தின் அங்கத்தினர்கள உதவி கொண்டு இச்சங்கத்தாரால் சோகபபட்டவையாகும்.

விளக்க நடவடிக்கைகள்.—பம்பாய் ராஜ்யச் சர்க்காரின் பண உதவி கொண்டு இச்சங்கம் இயற்கைக் கல்வித் திட்ட மொன்றைச் செயற்படுத்தி வருகிறது. அத்திட்டத்தை ஆரம்பித்து இப்பொழுது 11வருஷங்கள் ஆகினறன. இக்காட்சிச் சாலையைச் சேர்ந்த முழு நேரப் போதகர் ஒருவர் பளளிகளுக்குச் சென்று அங்குள்ள சிறுவர்களுக்கும், ஆசிரியர்களுக்குச் சொனறு அங்குள்ள சிறுவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும, மறறும் பொது ஜனங்களுகளுக்கும் இயறகைப் பிராணிகளைப் பற்றிப் போதிக்கிறார். அதோடுகூட, அவர் பள்ளிசகளைப் பற்றிப் போதிக்கிறார். அதோடுகூட, அவர் பள்ளிசகளைச் சிறுவர்களையும், ஆசிரியர்களையும் விக்டோரியா பூங்காவனத்திலிருக்கும் தரப் போரிவாலா நீர்வாழ ஜந்துக்கள பொருட் காட்சிச சாலைக்கும், பம்பாய் உயிர்ப்பிராணிகள பொருட் காட்சிச் சாலைக்கும கூட்டிக்கொண்டு போய் அங்குளள காடசிப் பொருள்களைக் காண்பிகிறார். இப்பொழுது பம்பாயிலுளள அநேக பள்ளிகசுகூடங்களில் சிறுவர்கள் இயறகைப பொருட பாடச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, சென்ற ஆறு ஆண்டுகளாய வெற்றிகரமாய்ச் செயற்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள் இயற்கைப் பொருள்கள் வரலாற்றுச் சங்கமும் 1953-ஆம் வருஷத்தில ஸ்தாபிக்கப்பட்டது. சாரணச் சிறுவர்கள சாரணச் சிறுமிகள், பள்ளிச் சிறுவர்கள், இயறகையழகு ரசிகர்கள ஆகியோர்களுக்கு உல்லாசப் பிரயாண அநுபவஸ்தர்களின தலைமையினகீழ்ப் பம்பாய நகருககு வெளியே உல்லாசப் பிரயாணங்கள் சென்று இயற்கையின வளத்தையும வனப்பையும் இரசிக்கப் பல விதமான உல்லாசப்பிரயாணங்களை இச் சங்கதாதார் நடத்தி வருகின்றனர்.

அவ்விதமான உல்லாசப் பிரயாணங்கள் செல்லுமிடங்களில் எவ்வெப்பொழுது இயலுமோ, அவ்வப்பொழுதெல்லாம் ஆராய்ச்சி வேலைகள் மேற்கொளளப்படுகினறன. இவ்விதமான பணியில் இது வரை செய்துளள வேலை என்ன வெனறால், இந்தியா முழுவதிலுமுளள குட்டி போட்டுப பால் கொடுக்கும பிராணிகளை ஆராய்நது கணக்கெடுததிருப்பதாகும். சமீபத்தில் சென்ற பிரயாணம் அமெரிக்கப் பிரயாணக் குழுவொனறுடன் மத்தியப் பிரதேசததுக்குச் சென்று அங்குள்ள பறவைகளையும் குட்டி போட்டுப பால் கொடுக்கும் பிராணிகளையும் பிடித்துச சோபபதற்காகச சென்ற தொன்றும், விஷ ஆராய்ச்சிக் குழுவொன்றுடன் காஷ்மீருக்குச் சென்றதுமாகும். இவை தவிர, இம்மாதிரியான பிரயாணங்களை மேற்கொள்ளும் தனி நபாகளுக்கும் உதவி செய்யப்பட்டது. இப்பொழுது மற்றொரு பெரிய சாதனை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. W.H.O உடன் சேர்ந்து காட்டு வாத்துகள் வழியாகச் சில பருவங்களில் வெளி நாடுகளிலிருந்து இங்கு வந்திறங்கும் சில பறவைகளைப் பிடிப்பதற்கான முயலத் தீர்மானித்துள்ள பிரயாணமாகும். இப் பிரயாணங்களையெல்லாம் மேற்கொள்ளும் நோக்கம் கியாளனூர் காட்டு நோய் போன்ற தொத்து நோய் விஷங்களைப் பல இடங்களுக்கும் எடுத்துச் சென்று பரப்பும் வெளிப்படையான ஒட்டுணணிகள் (தொத்து நோய்களின்) காரணப் பிராணிகள எவையென்பதைப பரிசோதித்தலேயாகும்.

வெளியீடுகள்.—வருஷத்துககு மூன்று முறை வர்த்தமானப் பத்திரிகையொனறு வெளியிடப்படுகிறது. இப்பொழுது இதன் 56-ஆம தொகுதி வெளி வந்திருகிறது. இந்தப் பதிதிரிகை, கிழக்கு நாடுகளில வெளிவரும பிராணிகள வரலாறு சம்பந்தப்பட்ட மற்ற எல்லாப் பதிதிரிகைகளிலும் மிகவும மேலானதாயிருக்கிறது. மேலும், இச்சங்கத்தார் பந்தயப் பறவைகள், வாத்து இனங்கள, மற்றும் விளையாடல்களுக்கு ஏற்ற பறவைகள, குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பிராணிகள், மீன் பிடிபபது, மலர் மரங்கள், வணணத்துப் பூச்சிகள் ஆகிய இவ்விதமான பல வகைப் பட்ட இயற்கைப பிராணிகள சமபந்தமாய் அநேக புஸ்தகங்களை வெளியிட்டிருகிறார்கள. இவைகளெல்லாம் வணணப்படங்கள இருக்கின்றன. இவைகள மிகவும் குறைந்த விலைககு விறகபபடுகினறன.

வேலை நேரம்.—அலுவலகமும், புஸ்தக சாலையும், ஆராய்ச்சிகுரிய காட்சிக கூடங்களும வார முழுவதும் காலை 10–30 மணி முதல மாலை 5–30 மணி வரையும், சனிக் கிழமைகளில் மட்டும் காலை 10–30 மணி முதல பிறபகல 1–30 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—ஆராய்ச்சிக்கு உபயோகமாயுள்ள காட்சிக்கூடங்களை நலலைகுடைய ஆராய்ச்சியாளாகள் போய்ப பார்க்கலாம்.

நிர்வாகக் குழு.—தேநதெடுக்கப்பட்ட 10 அங்கதினர்களை கொண்ட ஒரு நிர்வாகக் குழுவினர் ஆணையின்படி ஒரு கௌரவக காரியதரிசியால நிசசயகதத்தின் வேலைகள் மேறபார்க்கப்படுகினறன. அங்கத்தினர் எல்லோரும் பம்பாயைச் சுற்றி 200 மைலகளுகுகுள வசிபபவாகளாய் இருகிறார்கள். இநத நிர்வாகக் குழுவுககு உதவியாக 10 அங்கத்தினர்களைக் கொணட ஓர் அறிவுரைக் குழு இருக்கிறது. இநதப பததுப் பேர்களும் இந்தியா வாசிகளில பல வகைக் கல்வியறிவிற் சிறந்த மேதைகளாகத் தெரிநதெடுக்கப்படுகிறார்கள்.

ஊழியர்கள்.—கௌரவக் காரியதரிசி இக்காட்சிச் சாலையின் வேலைகளைக் கவனிகிறார். அவருக்கு உதவியாக ஒரு காலர், ஓர் உயாதர ஆராய்சசியதிகாரி, இரணடு கீழ்த்தர ஆராய்ச்சியதிகாரிகள், சில குமாஸதாக்கள முதலியோர் இருகினறனர்.

நிதி நிலை.—வர்த்தமானப் பதிதிரிகை வெளியிடுவதில் ஏற்படும் செலவு உளபட, ஆனல் ஆராய்ச்சிகுரிய காட்சிப் பொருள இனங்களின பாதுகாப்புச செலவு நீங்கலாக இந்தச் சங்கதின் வருஷ வருமானம் சுமார் ரூ 60,000. இவ்வருமானம் பதிதிரிகை சநதாப் பணம் மூலமாகவும், வெளியீடுகளின விறபனையிறகிடைககும் இலாப மூலமாகவும, மதிய சர்கார் ராஜ்யச சாகாகார்களின் உபகார பணம் மூலமாகவும் கிடைக்கிறது. நடப்பு வருஷத்தில் இச்சங்கத்திற்கு ராக்பெல்லர் ஸ்தாபனத்திலிருநது பத்தாயிரம் டாலர்கள் உபகார பணமாய்க் கிடைததிருக்கிறது. அந்த ஸ்தாபனத்தின் உதவியுடன இச்சங்கம இந்தப் பொருட்காட்சிச சாலையின் வேலைகளை அதிகமாய் விஸ்தரிக்க நினைத்திருக்கிறது. இயற்கைப் பொருளகளை சம்பந்தப்பட்ட எதேனும் குறிபபிட்ட துறையில ஆராய்ச்சி செய்ய விரும்பும அங்கத்தினாகளுக்கு அதற்காகும் செலவுகளுக்கு இச்சங்கத்தாரால் தொகை கொடுத்து உதவி செய்யப்படுகிறது.

விவரக் குறிப்புகள்.—இச்சங்கம் பம்பாய் ராஜ்யப பூங்காக் காட்சித் தோட்டங்கள் ஸ்தாபனத்திலும், பம்பாய் ராஜ்ய வனவாழ் உயிரினங்கள் பாதுகாப்பு அறிவுரைக் குழுவிலும் இந்திய வனவாழ் உயிரினங்கள் பாதுகாப்புக் குழுவிலும் அதிகாரம்பெற்ற பிரதிநிதியாய் இருக்கிறது. 1951-ம் வருஷத்தில் நிறைவேற்றப்பட்ட பம்பாய் ராஜ்ய வனவாழ் மிருகங்கள், பறவைகள் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற இந்தச சங்கந்தான் காரணமாய் இருந்தது. அந்தச் சட்டம் அவ்வினத்தில் இந்தியாவிலேயே முதன்மையானதாய் இருப்பதுடன் அதே மாதிரிச சட்டங்களை நிறைவேற்றுவதற்கு அது ஓர் ஒப்பற்ற மாதிரிச் சட்டமாகவும் இருக்கிறது.

பூனே

ஜனத்தொகை 4,80,982.

B. J. வைத்தியக் கல்லூரிப் பொருட்காட்சிச் சாலை.

(a) வியாதிகள் விளக்கப் பொருட்காட்சிச் சாலை, (b) அங்கக் கூறுபாட்டுப் பொருட்காடசிச் சாலை, (c) மருந்துகள் தயாரிப்பு முறை, விஷ வர்க்க ஆராயச்சி, சுகாதாரப் பொருட்காட்சிச் சாலை.

தோற்றம். - வியாதிகள் விளககப் பொருட்காட்சிச் சாலையும் அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலையும், 1946. மருந்துகள் தயாரிப்பு முறை, விஷ வர்க்க ஆராய்ச்சி சுகாதாரப் பொருட்காட்சிச் சாலை, 1951.

வரலாறு.—இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால் அங்கிருந்த வைத்தியப் பள்ளிக் கூடத்திலேயே வியாதிகள் விளக்கப் பொருடகாட்சிச் சாலை இருந்தது. ஆகையால், சில மாதிரிக் காட்சிப பொருள்கள் 30 வருஷங்களுக்கு முன்பாகவே சேர்க்கப்பட்டவைகளாய் இருக்கின்றன. ஆனால், இப் பொழுதிருக்கும் திருநதிய நிலையில் 1946-ஆம வருஷம் முதல் இருந்து வருகிறது.

இதே மாதிரி அகக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலையிலிருக்கும் சில காட்சிப் பொருள்களும், 1946-ஆம் வருஷத்தில் திருத்தியமைக்கப்பட்டவைகளாயிருந்தாலும் அவைகளில் சில அந்தப் பள்ளிக்கூடதைச் சேர்ந்தவைகளாகவே இருக்கின்றன.

மருநதுகள் தயாரிப்பு முறை, விஷ வர்க்கங்களின் ஆராயசி, சுகாதாரம் ஆகிய இவை சம்பந்தப்பட்ட பொருட்காட்சிச்சாலை 1951-ம் வருஷத்தில் இந்த வைத்தியக் கல்லூரிக் கட்டடம கட்டி முடிந்தபின் ஆரம்பிகப்பட்டது. ஆயினும், அதிலும் இந்த வைத்தியப் பள்ளிக்கூடத்தைச் சோநத சில மாதிரிக காட்சிப் பொருள்கள் இருகின்றன.

நோக்கமும் பொருள்களும்.—வியாதிகளின் தன்மை, காரணங்கள, மருந்துகள், ஒட்டுவாரொட்டி நோய்கள, கிருமிகளால் பரவும் நோயகள், மனித வர்க்க வியாதிகள்.—

(a) அங்கக் கூறுபாடு, கரு விளக்கம்—தன் நிலை, விகார நிலை.

(b) உடல் நல வழிகளும், பொதுச் சுகாதாரமும், வைத்திய நீதி, மருந்துகள் தயாரிக்கும் முறைகள்.

விளக்க நடவடிக்கைகள்.—கல்லூரிப் புஸ்தக சாலையும் பொருட்காட்சிப் பிரிவுகளின் புஸ்தக சாலையும் பொது மக்கள் போய்ப் படிக்க முடியாதவை. வியாதிகளின் தன்மை, காரணங்கள், மருந்துகள் ஆகியவைபற்றியும், அங்கக் கூறுபாட்டுகள் பற்றியும், மருந்துகள் தயாரிக்கும் முறைகள் பற்றியும், காட்சிப் பொருள்களை நேரில் காட்டிப் பாகம் பாகமாய்ப் பிரித்துச் சுட்டிக் காட்டிப் போதிப்பதும், அவ்விதமல்லாத சாதாரண வகுப்புகளும் நடைபெறுகின்றன. பொருட் காட்சிச் சாலையைப் பார்க்க வருவோர் கேட்டுக்கொண்டால் காட்சிப் பொருள்களைப் பற்றி அந்தப் பிரதேச பாஷையில் விளக்கம் தெரிவிப்பதற்காக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். சில சமயாசமயங்களில் விசேஷப் பொருட்காட்சி விழாக்கள் நடத்தப்படுகின்றன. கல்வி ஸ்தாபனங்கள் மட்டும் இந்தப் பொருட்காடசிச் சாலையைப் பார்க்கத் தத்தம் மாணவர்களை அனுப்பி வைக்கின்றன. பற்பல வைத்தியப் பாடப் பிரிவுகள் அதாவது வியாதிகள் விளக்கப் பிரிவு, இரண அறுப்பு வைத்தியப் பிரிவு, மருந்துகள் வகைப் பிரிவு, பெண்கள வியாதிப் பிரிவு ஆகிய இவற்றில் சொற்பொழிவுகளும், காட்சிப் பொருள்களின் பாகங்களைத் தனித்தனி பிரித்துக் காட்டி, திருஷ்டாந்த பூர்வமாகக் கற்பிக்கும் வகுப்புகளும் நடத்தப் படுகின்றன. விளக்கச் சீட்டுகள முழுவதும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. வியாதிகள் விளக்கப் பொருட்காட்சிச் சாலையில் திரைப்படம் காட்டும் படக கண்ணாடிகள் இருக்கின்றன. படுக்கையிற்கிடக்கும் நோயாளிக்குச் செய்யும் வைத்தியச் சிகிச்சை, அதற்கு உபயோகிக்கும் மருந்துகள் ஆகிய இவைகள் பற்றி ஆராய்ச்சி செய்ய மாதந்தோறும் கூடும் மகாநாடுகளில் மனித சரீரத்திலுள்ள கெட்டிப் பொருள், நீர்ப் பொருள் முதலியன பற்றிய விவரங்களை விளகுவதற்காக இநதப் படக் கண்ணாடிகள் உபயோகிக்கப்படுத்தப்படுகின்றன.

வெளியீடுகள்.—இல்லை.

வேலை நேரம்.—எல்லா வேலை நாட்களிலும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும் இக்காட்சிச் சாலைகள் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. ஆயினும், இக்காட்சிச் சாலைகள் வைத்தியக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் உபயோகத்துக்காகவே நிறுவப்பட்டுள்ளன.

நிர்வாகக் குழு.—வியாதிகள் விளக்கப் பிரிவு, அங்கக் கூறுபாடுகள் பிரிவு, மருந்துகள் தயாரிக்கும் பிரிவு ஆகிய இப் பிரிவுகளின் கல்விப் பேராசிரியர்களின் மூலம் இக்கல்லூரி முதல்வர் இப்பொருட்காட்சிச் சாலைகளை மேற்பார்த்து வருகிறார்.

ஊழியர்கள்.—அந்தந்தப் பிரிவுப் பொருட்காட்சிச் சாலைகள் அந்தந்தப் பிரிவு கல்விப் பேராசிரியர்களால் கவனித்துக் கொள்ளப்படுகின்றன. அத்துடன் அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலையில் இரண்டு வேலைக்காரர்களும், வியாதிகள் விளக்கப் பிரிவுப் பொருட்காட்சிச் சாலையில் இரண்டு வேலைக்காரர்களும், மருந்துகள் தயாரிக்கும் பிரிவுப் பொருட்காட்சிச் சாலையில் ஓர் இரசாயன ஆராய்ச்சியாளரும் இருக்கிறார்கள்.

நிதி நிலை.—தனி வரவு—செலவுத் திட்டமாவது, காட்சிப் பொருள்களை விலைக்கு வாங்குவதற்குத் தனி நிதியாவது இல்லை.

விவரக் குறிப்புகள்.—இக்காட்சிச் சாலைகள் முற்றிலும் வைத்தியக் கல்லூரி மாணவர்கள் வசதிக்காகவே ஏற்படுத்தப் பட்டுள்ளன. வியாதிகள் விளக்கப் பொருட்காட்சிச் சாலைக்கும் தானேயியங்கும் கருவிகளும், இரண அறுப்புக் கருவிகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. அங்கக் கூறுபாட்டுப் பொருட்காடசிச் சாலைக்குப் பிரதேங்களும், இந்தியாவில் மனித சரீர அவயவங்களின் மாதிரி வடிவங்கள் செய்பவர்களிடமிருந்து பொருத்தமான வடிவங்களும் விலை கொடுதது வாங்கிச் சேர்க்கப்படுகின்றன. மருந்துகள் தயாரிக்கும் பிரிவுப் பொருட்காட்சிச் சாலைக்கு உயிர்ப் பிராணிகள் சமபந்தப்பட்ட பொருள்களும் விலை கொடுத்து வாங்கப்படுகின்றன.

தக்காணக் கல்லூரிப் பொருட்காட்சிச் சாலை.

"புதை பொருள்கள், கலைப் பண்பாட்டுப் பொருட் காட்சிச் சாலைகள்" என்ற தலைப்பினகீழ்ப் பார்க்கவும்.

டில்லி

ஜனத் தொகை 914.790

மானிட வர்க்கப் பொருட்காட்சிச்சாலை

தோற்றம்—1947.

வரலாறு.—1947-ம் வருஷத்தில் டில்லி சர்வகலாசாலையின் மானிட வர்க்க வரலாற்றுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்ட பொழுது இந்தப் பொருட்காட்சிச்சாலையும் ஆரம்பிக்கபபட்டது. ஆரம் பத்தில் சில கிழக்கு ஆப்பிரிக்க மாதிரிப் பொருள்களையும் இந்தியப் பொருட்காடசிச்சாலையில் மானிட வாகக வரலாறறுப் பிரிவினரிடமிருந்து கிடைத்த அந்தமான் தீவுகளச சேர்ந்த பொருள்களையும், சென்னைச சர்க்காா பொருட்காடசிச் சாலை யிலுமிருந்து கிடைத்த சரித்திர காலத்துக்கு முற்பட்ட சில காட்சிப் பொருளகளையும், மாயூர்பஞ்ச் சமஸ்தானப் பொருட்காட்சிச்சாலையிலிருநது கிடைத்த வேறு சில பொருள் களையும் வைதது இக்காட்சிச்சாலை ஆரம்பிகபப்பட்டது. இவற் றுடன இந்தியப் பிரதம மநதிரி ஸ்ரீ ஜவஹர்லால அனபளிப் பாகக் கொடுத்த மானிட வாக்கததின பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் வரலாறு உணர்த்தும் சில காட்சிப் பொருள் கள் உட்பட வேறு பலா அன்பளிப்பாகக் கொடுத்த காட்சிப் பொருள்களும் சோக்கப்பட்டன. டில்லி சர்வகலாசாலை இந்தக் பொருட்காட்சிச்சாலைக்கென ஒரு விசாலமான அறையை ஒதுக்கியுளளது. அந்த அறையின் நீளம் 68 அடி; அகலம் 37 அடி. அது கலைக்கழகக் கட்டடதின முதல் தளததில் இருகிறது. R. C. பில்வால் எனும் பேராசிரியர் இந்தப் பொருட்காட்சிச்சாலையை மிகவும் ஊக்கததுடன விருததி செய்துகொண்டிருகிறார். டில்லி, பாரதீய அதிம்ஜாதி சேவக் சங்கத்தைச் சேர்ந்த சில காடசிப பொருளகளும இந்தக் காட்சிச்சாலையில் கடனாக வாங்கி வைக்கப்பட்டிருக் கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச்சாலையில் பல்வேறு மக்கள் இனக்களைச் சேர்ந்த பல விதமான காட்சிப்பொருள் களும், சரித்திர காலததிற்கு முற்பட்ட காட்சிப்பொருள்களும், மண்டை ஓடுகளும், மனித எலும்புக்கூடுகளும் இருக்கின்றன. அவைகளெல்லாம் பற்பல பிரிவுகளாக வைகபப்பட்டிருக் கின்றன.

உலக முழுவதிலும் வாழும் பல வகையான மக்கள் இனங்களைப் பற்றி விஞ்ஞான ரீதியாய் எடுத்துக்காட்டும் பிரிவு மிகப் பெரிய பிரிவாய் இருபபதுடன மாணவர்களின் பரிசோதனைக் கல்விப் பயிற்சிகு மிகவும உபயோகமுளள தாயுமிருக்கிறது. இப்பிரிவு காட்சிக் கூடங்களில் இந்தியாவி லும் மறற நாடுகளிலும் வசிதத ஆதிகுடிகள் உபயோகிதத சாமான்கள் காட்சிகு வைக்கப்பட்டிருக்கின்றன. ஆப்பிரிகா நாட்டு மக்களுடைய காடசிப் பொருளகளாக பனடு எனபபடும இனத்தைச் சேர்ந்த மககள் உபயோகிதத மந்திர சத்தி வாய்ந்த பொருள்களினுள்ளே பூதம் இருப்பதாக வும் அநத மந்திரப் பொருள் எவன் கையில் இருக்குமோ அவன் சொனனபடி எலலாம் அநதப பூதம அவனுக்கு வேண்டியதை எலலாம் கொடுக்கும எனறும சொலலப் படுகிறது. ஆதிகால மக்களில் ஆண் பெண்களின் உருவங் கள் செதுக்கப்பட்ட மரச் சிறபங்கள், நாடு செழிக்கக் கடவுளைத் துதிப்பதறகு உபயோகித்த பொருள்கள். ஸந்து இனத்தைச் சேர்ந்த மக்களால் இறந்தவர்களின ஆன்ம சாந்தன எனக் கருதி வழி பாடு செய்த பலியும் அதுபோல் பறபல வகை யான ஆதிகால அப்பிரிக்கக் குடிகள் வணங்கி வந்த வேடிக் கையான பொருள்களும், மந்திரசத்தியால வியாதிகளைக குணப படுத்திய மந்திரவாதி வைததியர்கள உபயோகித்த உபகரணங் களும் (மாத்திரைக்கோல் போனறவை), நெருபபுக் கோழியின் முட்டையில் செய்த பாத்திரங்களும், சுரைக குடுக்கை முதலியனவும் இருக்கின்றன. அரேபியாவைச் சேர்ந்த உலோ கத்தால் செயத ஜாடிகள், திபெத்துக் கிராமவாசிகள் உபயோகித்த பொருள்கள், சைனு, திபேத்து ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆதிகுடிகள் உபயோகித்த தடிக்கம்புகள, நிக்கோ பார்த் தீவுகள சைனு நாடுகளைச சேர்ந்த ஆதிகுடிகள் உப யோகித்த குறுக்கு வில்லுகள் முதலிய காட்சிப் பொருள் களும் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியப்பிரிவில் இந்தியாவிலுள்ள பற்பல இனங்களைச் சோநத மக்களின் வேலைத் திறமையைக் காட்டக்கூடிய பொருள்கள் இருக்கினறன. இபபிரிவில் உள்ள காட்சிப் பொருளகளின் மூலமாகக் காட்டப்பட்டுள்ள இந்தியாவின் மக்களினஙகளாவன :— பீஹாரில் வாழும் ஓராயர், ஹோ வகுப்பினர், முண்டாஸ் சண்டாளர்; மத்தியப் பிரதேசத்தில் வாழும் பிலஸா, கோணடுகள், மூரியா, கார்வாக்கள் முதலிய இனங்கள்; அஸ்ஸாமில வசிககும் அபோர் நாகர், கரோ, காஸி முதலிய இனஙகள்; உததரப் பிரதேசத்தில் வாழும் கார் வாலி, ஜானஸார் ஆகிய இனஙகள. இவ்வின மக்களைச் சேர்நத பொருள்களாயக் காட்சியில் வைக்கபபட்டிருக்கிறவை, இவர்கள உபயோகித்த விவசாயக கருவிகள, இசைக கருவி கள், தற்காப்பு எதிர்ப்பு ஆயுதஙகள, வண்டி வாகனஙதிகள், சமய ஆசாரச சடஙகுப் பொருள்கள் முதலியன.

இவைகள் தவிர, மூரியா, சண்டாளர், நாகர், ஓராயர், தோடர் முதலிய மகளை பிரிவினரா உபயோகித்து வந்த உடை வகை களும் ஆபரண வகைகளும் இருக்கின்றன. மேலும், கூடை முடையும் திறமையைக் காடடும் பறபல வகைக் கோடுகள், கட்டங்கள, பூகள் விழும்படி முடைந்த கூடைத தினுசுகள், வீட்டுப் பொருளகளாய் உபயோகப்படுததிய சுரைக் குடுக்கை, மரக்கழி மூஙகிலால செய்த சாமான்கள், பற்பல வகையான பொருள்களைக் கொண்டு பற்பல மாதிரியாகச் செய்த சிறிய கரண்டிகள, பெரிய அகப்பைகள், புகையிலைப பெட்டிகள், தணணீர் வழியாகக் கொப்பளிககும் சத்ததுடன் புகை உறிஞசும ஹுக்காக் குழல்கள், சமையல பாத்திரங்கள் முதலிய பொருளகளும்; சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த மகளின் பிரிவினரின் காட்சிப் பொருள் கள் வகையில் பழைய கற்காலக கருவிகளான கற்கோடரி, கசாப்புக்கான உபயோகித்த கருவிகள், மற்றும் வேறு பொருள்களைத் துண்டுபடுததுவதறகு உபயோகித்த கருவிகள், பாதரடசையின் அடித்தோலைச் சுரண்டி மெதுவாக்க உபயோகித்த ஆயுதங்கள், முதலைகளை வேடடையாடுவதற்குக் கூரிய முனையுடன செதுக்கப்பட்ட எறிகம்பு வகைகள், அவை படிப்படியாக அபிவிருத்தியடைந்த விதங்கள் முதலியவற்றை விளக்கும் பொருளகளும இருகின்றன.

புதிய கற்காலக் கருவிகள் வகையில் சென்னை மாகாணத் திலும் மாயூரபஞ்ச் சமஸ்தானத்திலும் வாழ்ந்த ஆதி குடிகள் உபயோகித்த கருவகல, மேகவண்ணக்கல் முதலிய வற்றால செய்த கருவிகள்; குஜராத்து, பம்பாய் மாகாணங் களில் வசித்த ஆதிகுடிகள உபயோகிதத சிறிய கற்கருவி கள் முதலியனவும் காட்சிக்கு வைக்கபபட்டுள்ளன. ஹாரப பாவின் நாகரிகச் சின்னஙகளாக சிற்சில முததிரைகளின் மாதிரிகள, சுட்ட மண் சிலைகள், உடைந்துபோன மட்கல்த துணடுகள் முதலியனவும், ஆதிச்சநல்லூரில் கண்டெடுத்த இரும்புச் சாமான்களும் இ நககின்றன.

ஒப்பு நோக்கும் அங்கக் கூறுபாட்டுப் பிரிவில் இந்தியாவி லுள்ள பல்வேறு மக்கள் பிரிவினரில் உள்ள ஆண் பெண் களின் எலும்புகூடுகளும, இனனினன இனதநவ நுடையன வெனத் தெளிவாகத் தீர்மானிக்கக் கூடியதாவும் தெளிவாகத் தெரிநதுகொளள முடியாதனவுமான எலும்புக்கூடுகள், வயது முதிர்நதோர், குழநதைகள். கருவின் உள்ளிருக்கும் குழநதைகள் முதலியோரின் மண்டை ஓடுகளும், மனிதரின் கை, கால எலும்புகள், மூடடுகளின் குழிகளுடன் கூடிய தோள்பட்டை எலும்புகளும, இன்னினன மக்கள் பிரிவைச சோந்தவர்களுடையனவெனத தெரியும் கை எலுமபு, பாத எலும்புகளும, மனிதக் குரஙகுகள, ஓழக்கு இந்தியத் தீவுகளைச் சோந்த நீணட கைகளையுடைய வாலில்லாக் குரஙகுகள, உராஙகுட்டான என்று வழக்கபபடும் (சுமாத்திரா, போர்னியோக் காடுகளில் வசிக்கும் சிவந்து காட்டும் நிறமான வும், குட்டிக்கர்ணஙகள போடும் குணமுள்ளனவுமான) குரங்குகள் ஆகியவறறின மண்டையோடுகளும்; வாலில்லாக், குரஙகு, சாதாரண (வாலுள்ள) குரங்குகளின் எலும்புக் கூடுகளும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—பி.எ. வகுப்புக்கு மேற்பட் குப்புகளில் மானிடவர்க்க ஆராய்ச்சிப் பிரிவில் படிக்கும் மாணவர்களின நேர்முக ஆராய்ச்சி வகுப்புகள் இக்காட்சிச் சாலையில் வைத்து நடத்தப்படுகின்றன. ஆங்கிலத்தில் விளக்க ஏடுகள் வைக்கப்பட்டுள்ளன.

வெளியீடு.—மானிட வர்க்க ஆராய்ச்சிப் பிரிவினர் வெளியிடும் "மானிடவாக்க ஆராய்ச்சியாளன்" என்னும் வர்த்தமானப் பத்திரிகை.

வேலை நேரம்.—சர்வகலாசாலையின் வேலை நாட்களில் காலை 10½-மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. காட்சிச்சாலை மாணவர்களின நலத்தைக் கருதியே அமைக்கப்பட்டிருக்கிறது.

நிர்வாகக்குழு.—மானிடவர்க்க ஆராய்ச்சிக் கல்விப் பிரிவின் தலைமை பேராசிரியரால் மேறபார்க்கப்படுகிறது.

ஊழியர்கள்.—காவலரும் சௌக்கிதாரும்.

நிதி நிலை.—சர்வகலாசாலையின் மானிடவர்க்க ஆராய்ச்சிப் பிரிவுக்கும் பொருட்காட்சிச சாலைக்குமாக ஆண்டுதோறும் கொடுக்கப்படும் உபகாரப் பணம் ரூ. 9,000; இரண்டாவது ஐந்தாண்டுத திட்டதின்படி பொருட்காட்சிசசாலைக்கு உபகாரப் பணமாக ரூ. 15,000.

விவரக் குறிப்புகள்.—இந்தப் பொருட்காட்சிச் சாலைக்கு இன்னும அதிகமான பண்டகசாலை இடவசதி தேவைப்படுகிறது. இரசாயன முறையில் காட்சிப் பொருளகளை மருந்துகள் பேரட்டும் புகை காட்டியும் பாதுகாக்கும்பொருடடு ஒரு சிறிய ரசாயனப் பரிசோதனைக்கூடம் இருக்கிறது. தேடிச் சேகரித்தல், அனபளிப்பாகக் கிடைப்பன, விலை கொடுத்து வாங்குவன, பரிவர்த்தனை ஆகிய வழிகளில இக்காட்சிச் சாலைக்குவேண்டிய காட்சிப் பொருள்கள் சேகரிகபப்டுகின்றன. நாளொன்றுக்கு 12 பார்வையாளர்கள் வரை வருகிறார்கள். சர்வகலாசாலையில் நடைபெறும் பட்டமளிபபு விழா வாரத்தில் கூட்டம் அதிகம். இப்பொழுது, பொருட்காட்சிசசாலையை மானிட வர்க்க உடற கூற்றுப்பிரிவு, கலைப்பண்பாட்டுப் பிரிவு எனனும் இரண்டு பெரும்பிரிவுகளாகப் பிரிப்பதென ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

புது டில்லி

ஜனத்தொகை 276,324

பொறியியல் இயந்திரங்கள் பாட்டுக்காட்சிச்சாலை

தோற்றம்—1951.

வரலாறு.—இவ்வகையில் ஒரு பொருட் காட்சிச்சாலையை ஸ்தாபிகக வேண்டும் என்ற ஆலோசனை, இந்தியப் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால நேருவால தெரிவிக்கப்பட்டது. ஆறுகளிலும பள்ளத்தாக்குகளிலும் சமீபகாலங்களில பற்ப பல இடங்களில அணைகடடுகள நீர்ததேக்கங்கள் முதலியன கட்டபபட்டு வருவதால, அவ்வகைக்கு உபயோகப்படுதிய இயநதிரங்களின மாதிரிகளையும், மறறும் அவை போன்ற ஏதசீய முக்கியத்துவம் உணர்த்தும் யந்திரங்களையும், டில்லி பில் நடந்த பல நாடுகளின பொறியியல் பொருட் காட்சி விழாவின் போது காட்சிக்காக வைக்கபபட்டிருநத இயந்திர வகைகளையும் ஒனறு சேர்த்து, டிலலியில் ஒரு பொறியியல் (இயந்திரங்கள) பொருட்காட்சிச்சாலையை ஸ்தாபிக்க வேண்டுமென நினைத்தார். அதன்படி நீர்ப் பாசன மின்சார அபிவிருத்தி மத்தியக குழுவினர இப் பணியை மேற்கொணடு டில்லியில் நடந்த பல நாட்டுப் பொறியியல் பொருட்காட்சி விழாவுகுக் காட்சிப்பொருள்கள் கொண்டு வந்திருந்த கல்விப் பிரிவு, வர்த்தகப் பிரிவு காட்சியாளர்களிடம் பிரதம மநதிரியின் அவாவினைத் தெரிவித்து, இப்பொருட்காட்சிச்சாலைக்கு அவர்களிடம் உள்ள காட்சிப் பொருள்களைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறு கேட்டுக்கொண்டவுடனே எல்லோரும் மகிழ்ச்சியோடு தத்தம் காட்சிப் பொருளகளைக் கொடுத்து உதவியதோடல்லாமல், இமமுயற்சியில் ஊக்கமும் காட்டினார்கள். இந்தியாவின மததியச் சாக்காரும், யூகோஸ்லாவியா, இத்தாலி, சுவிடஸலாநது, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தேசீயக் குழுவினர்களும், மற்றும் பல வர்த்தக ஸ்தாபனங்களும் பொருட்காட்சிச்சாலைக்கு வேண்டும் காட்சிப் பொருள்களைக் கொடுக்க முன வந்தார்கள். அதன் பயனாக இப்பொழுது இந்தப் பொருட்காட்சிச்சாலையில் கவர்ச்சிகரமான சிறிய மாதிரிக் காட்சிப்பொருள்கள் பல இருக்கினறன. அவைகள் யாவும் தற்சமயம் இந்தியாவின பல பாகங்களிலும நடக்கும அணைக்கட்டு வேலைகளை நுணுக்கமாய் எடுத்துக் காட்டுவனவாய் இருக்கினறன. அடிகடி நமது நாட்டின பற்பல பாகங்களில் வெளளச சேதங்களால ஏற்படும் உயிர், பொருள், பயிர், கால் நடைகள் முதலிய வற்றின நஷ்டங்களை எவ்வாறு தவிரப்பது எனற கவலை தநத பெரும்பிரச்சினை இநத அணைகடடுத் திட்டங்களால் நிவிர்த்தியாகிவிடுகிறது என்பதைத் இங்குள்ள காட்சிப் பொருளகள் விளக்கிக் காட்டுவனவாய் இருக்கினறன.

நோக்கமும் பொருள்களும்.— நமது நாட்டிலுள்ள நீர்ப்பாசனம் மின் சத்தி ஆகிய இவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டு நிலைமையும் அபிவிருத்தி அடைகிறது என்பதைப்பற்றி ஒரு பொதுப் படிப்பினையாக மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தப் பொருட்காட்சிச்சாலை அந்நோக்கத்துக்கு ஏற்றபடி அமைத்த மாதிரி வடிவங்கள், விவரக்குறிப்புகள், தரைப் படங்களையும், மற்ற நாடுகளிலிருந்து வரும் பொறியியல் அமைப்புகளையும கொணடதாய் இருக்கிறது.

விளக்க நடவடிக்கைகள்.—பொருட்காட்சிச்சாலையிலுள்ள அதிகாரிகளால இங்கு வரும் பார்வையாளர்களுக்குப் பொருள்களைப் பற்றிய விளக்கம் தெரிவிக்கப்படுகிறது. அணைக்கட்டுகளின் திரைப்படக்காட்சிச் சுருள்கள் இருப்பதுடன் சமயா சமயங்களில சொற்பொழிவுகளும் நடத்தப்படுகினறன. முன் அறிவிப்புச் செய்தால, ஓர் உயர்தர அதிகாரி காட்சிச் சாலையைப் பார்க்க வரும் பார்வையாளர்களையும், தொழிற் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் முதலானோரையும் தம்முடன் கூட்டிக்கொண்டு போய் இக்காட்சிச்சாலையைச் சுறறிக் காணபித்துக் காட்சிப் பொருளகளைப்பற்றிய விளக்கமும் தெரிவிக்கிறார். காட்சிச்சாலையில் வைகபப்பட்டுளள பொருள்களைப் போன்ற மாதிரி வடிவங்கள் செய்து கொள்ள விரும்புவோர்க்கு அவ்வாறு செய்வதற்குரிய முறைகள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. விவர விளக்கங்களுடன் கூடிய அறிவிப்புப் பலகைகளும், குறிப்புகளும், விளக்கச் சீட்டுகளும் இருக்கினறன. விளக்கச் சீட்டுகள ஆங்கிலத்தில் இருக்கின்றன. நமது நாட்டின் பல பாகங்களிலிருந்து பொறியியற்கலவி, தொழிற்கல்வி முதலியன பயிலும் மாணவர்கள், டிலலிக்குக் கல்வி சம்பந்தமான சுறறுப் பிரயாணம் வரும்பொழுது இக்காட்சிச் சாலையையும் வநது பார்க்கிறார்கள்.

வெளியீடுகள்.—(1) பொறியியற் பொருட்காட்சிச்சாலை (ஆங்கிலத்தில சிறிய புத்தகம), (2) தபால் கார்டு அளவில் பட அட்டைகள்.

வேலை நேரம்.—திங்கட்கிழமைகளும் இதர விடுமுறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—காட்சிசசாலை கால்வாய் நிர்வாகக் குழு ஆணைக்குட்பட்ட மத்திய தண்ணீர், மின்சார விசாரணைச் சங்கதினை நிர்வாகத்தில இருந்து வருகிறது. இது மேற் சொல்லிய கால்வாய் நிர்வாகக் குழுவின் டிப்டி டைரக்டருடைய அதிகாரத்துக்கு உட்பட்ட குழுவின் ஒரு பிரிவாகிய படம் வரைந்து உத்தேசச் செலவு கணிக்கும் பிரிவுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

ஊழியர்கள்.—உதவி டைரக்டர், மேற்பார்வை அதிகாரி; மூன மாதிரிப் படம் வரைபவர், காட்சிப்பொருள் விளக்கம் தெரிவிப்பவர், பர்ராஷ், சௌக்கிதார்.

நிதி நிலை.—காட்சிச்சாலையை நிர்வகிக்கும் செலவு வகைக்கு மட்டும் வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 8,000.

விவரக் குறிப்புகள்.—இதில வேலை பார்க்கும் ஊழியர்கள மத்தியத தணணீர், மினசார விசாரணைச் சங்கத்திலிருந்து எடுக்கப்படுகிறார்கள. இக்காட்சிச்சாலை நகரின் மத்தியில அமைக்கப்படடிருப்பதால், பொதுமக்கள் எளிதாகப் போய்ப் பாக்கலாம். நாள் ஒன்றுகுச சராசரி 15 பார்வையாளர்களும் வருஷததுக்குச் சுமார் 4000 பார்வையாளர்களும் பார்க்க வருகிறார்கள். 1958-ஆம் வருஷத்தில் இநதியா என்ற பொருட்காட்சி விழாவில் இநதப் பொருட்காட்சியிலுள்ள ஏராளமான காட்சிப் பொருள்களை வைதது அமைத்திருநத கூடாரத்தைப் பார்க்கக் கிட்டத்தட்ட 25 லட்சம் பார்வையாளாகள் வரை வந்தனர். இப்பொழுது இந்தப் பொருட்காட்சிச் சாலையை மதுரா ரோடிலிருககும் நிரந்தரப் பொருட் காட்சிச்சாலைக்கு மாறறுவதெனத தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. விசேஷ காலங்களுக்கென ஒதுக்கப்பட்ட பொருளகளை வைத்து எடுக்கப் போதிய அளவுகுப் பண்டகசாலைக்கு வேண்டிய இடவசதியிருககிறது. ராஜ்யச் சர்க்கார்களிட மிருந்தும் நீர்ப்பாசன மின்சார அபிவிருததி மத்தியக் குழுவினரிடமிருநதும் தருவிதத மாதிரி வடிவங்களும், அணைககட்டுப் பொருள்களும், வெளி நாடுகளிலிருநது அன்பளிப்பாகக் கிடைத் பொருளகளும் இககாட்சிச் சாலை ஸதாபிப்பதற்கு மூலப் பொருள்களாய இருநதன. இதர மாதிரி வடிவங்கள் விலை கொடுத்து வாங்கபபடுகினறன, அலலது இவ்விடத்திலேயே செய்யபபடுகின்றன.

(ii) விஞ்ஞானப் பொருட்காட்சிச்சாலை தேசிய பௌதிக இரசாயனக் கூடம்.

தோற்றம்—1956.

விவரக் குறிப்புகள்.—உதாரணக் காட்சிப் பொருள்களைக் கொண்ட இக்காட்சிச்சாலை மண்டபம் முகாம் கடல்வாழ் மீன்கள் மத்திய ஆராய்ச்சி நிலையத் தலைமை அலுவலகங்களில் இருக்கிறது. சாதாரணமாக நாள் ஒன்றுக்கு 50 பார்வையாளர்கள் பார்க்க வருகிறார்கள். சில காலங்களில் பளிகூட மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் இந்தியாவிலுள்ள பல சர்வ கலாசாலையைச் சேர்ந்த மாணவர்களும் பார்க்க வருகிறார்கள்.

தாம்பரம்

ஜனததொகை—18,574

உயிர்ப்பிராணிகளின் பொருட்காட்சிச்சாலை, சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி.

தோற்றம்.—1885.

வரலாறு.—இந்தக கல்லூரியில் 1885–ம் வருஷத்தில இயற்கைப் பொருள்கள் வரலாற்றுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பொழுது இக்காட்சிச்சாலையும் உருவானது. ஆரம்பத்தில் இதில் மிகவும் சொற்பமான காட்சிப பொருள்களே இருந்தன. 1911–ஆம் வருஷத்தில் சென்னைச் சர்க்கார் பொருட்காட்சிச் சாலையிலிருந்த சூப்பிரண்டென்ட், இக்காட்சிச் சாலைக்குப பலவளபபூச்சிகள், மீன்கள, ஊரும் பிராணிகள முதலியவற்றின மாதிரிகளும், பஞசடைத்த சில பறவைகளும், காட்சிக்கு வைபபதறகு வேண்டிய அலமாரிகளும் (கணணுடிப்) பெட்டிகளும் சென்னைச் சர்க்கார் பொருட்காட்சிச் சாலையிலிருந்து கிடைககும்படி உதவி செய்தார். இதைத் தொடாந்து ஏராளமான காட்சிப் பொருளகள வெளியிலிருந்து விலைகொடுதது வாஙகபபட்டன. 1928-ஆம் வருஷ முதல் இக்கலலூரியில் படிக்கும் மாணவர்கள் இக்காட்சிச் சாலைகுகு காட்சிப பொருள்கள் சேர்ப்பதற்காக ஒழுஙகான பிரயாணஙகளை மேற்கொள்வாராயினர். அவற்றின் பயனுகத் தெனனிநதிய உயிர்ப் பிராணிகளின் மாதிரியும் தாவரவர்க்க மாதிரிகளும இககாடசிச்சாலையில் ஏராளமாகக குவிந்தன. இநதிய சாக்காரின மணவள ஆராய்சசிக் குழுவினா அன்பளிப்பாகக கொடுத்த சில மாதிரி மண் இனங்களை மூலப் பொருள்களாக வைதது, பூமியின் ஆதிவரலாறு உணர்த்தும் மண் இனப் பொருளகளைச் சேகரிக்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. 1937-ஆம் வருஷத்தில் இக்கல்லூரி சென்னை நகரிலிருந்து அதன் ஒரு பாகமான தாம்பரத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்திற்கு மாற்றபபட்டபொழுது அப்புதிய கட்டடத்திலுள்ள ஒரு தனி அறையில் இக்கரட்சிப் பொருளகள் எல்லாம் வைக்கப்பட்டன. 1945-ஆம் வருஷத்தில் இக்காட்சிச் சாலை இருந்த அறையில் இடவசதி இல்லாமல் போனதால், ஆதி உயிரினஙகளின சரீர தாரதமமியம் உணர்த்தும் பல காட்சிப் பொருள்கள் வகுப்பறைகளிலுள்ள பீரோக்களிலும் அலமாரிகளிலும் கொண்டு போய் வைக்கப்பட்டன. இந்தியாவிலும் இலஙகையிலுமுள்ள மற்றப் பொருட்காட்சிச் சாலைகளுடன் பரிவர்த்தனை செய்துகொண்டது மூலமாக இக்காட்சிச் சாலைகு மேலும் அதிகமான பொருளகள் சேர்ந்தன. 1948-ஆம் வருஷத்தில் ஆலதிரேலியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் பரிவர்த்தனை மூலமாய் அநேக மாதிரிக் காட்சிப்பொருள்கள் கிடைத்தன.

நோக்கமும் பொருள்களும்.—இநதப் பொருட்காட்சிச் சாலை இயற்கை வரலாற்றுப் பொருள்களைக் கொண்டதாய் இருப்பதால், இது கல்லூரியில் கற்பிக்கப்படும் உயிரப்பிராணிகளைப் பற்றிய பாடங்களுக்கும் தாவர வர்க்கங்களைப் பறறிய பாடங்களுக்கும் உபயோகமாயிருக்க வேண்டுமென்ற கருத்துடன் அக்கருத்துக்கு இணஙகத்தக்க முறையில் வைக்கப்பட்டிருக்கின்றன. இக்காட்சிச் சாலையில் கண்ணுடி ஜாடிகளிலும் உயர்நத பீடங்களின் மேலும் வைத்துப் பாதுகாக்கப்படும் உயிர்ப்பிராணிகள, தாவர வர்க்கங்கள் ஆகியவற்றின் மாதிரிப் பொருள்களும், சலாபங்களும், மாதிரி வடிவங்களும், விவரக் குறிப்புகளும் இருக்கின்றன. காடசிச்சாலையில் திரைப்படங் காட்டும படக்கண்ணுடிகளும், பூதக் கண்ணுடி கொண்டு பெரிதாகப் பார்க்கக் கூடிய மிகச் சிறிய படங்களைக்கொண்ட திரைப்படக் கண்ணுடிகளும் இருக்கின்றன. இவைகள எல்லாவற்றையும் பற்றிய விவர ஜாபிதா ஒன்று இருக்கிறது. தேவையானால், அவைகளின நகல்களும் எடுத்துக்கொள்ளலாம்.

விளக்க நடவடிக்கைகள்.—இக்கல்லூரி மாணவர்களுக்குச் சகல வசதிகளும் செய்யப்படடிருகின்றன. திரைப்படம் காட்டும் படக கணணுடிகள், உபகரணஙகள் முதலியன இருப்பதுடன் சொற்பொழிவுகளும நடததப்படுகிறன. இரண்டாம் தரப் புத்தகசாலையாக உள்ள இயற்கை விஞ்ஞானப புத்தகசாலை ஒன்று இப்பொருட்காட்சிச சாலையை அடுதுளள அறையில இருககிறது. இது இக்கலலூரி ஆசிரியாகள, மாணவர்கள் முதலியோர் நலததுக்காகவே வைக்கபபடடிருக்கிறது. கல்லூரியிலுள்ள இயறகைப் பொருள் வரலாற்றுக் குழுவினர், வருஷந்தோறும் ஒரு பொருட்காடசி விழா நடததுகினறனர். விளக்கச சீட்டுகள ஆஙகிலத்திலேயே இருக்கின்றன. காட்சிப் பொருளகளைக் கோட்டுப படங்களின் மூலமாய் விளக்கிக் கூறுவதற்காகச் சிறிதளவு விவரக் குறிபபுகளும் இருக்கின்றன. மறறக் கல்வி ஸ்தாபனங்களும் இக்காட்சிச் சாலையிலுள்ள உதாரணப் பொருளகளைப பார்த்துத் தெளிவதுடன இயறகைப் பொருட்பாட மாணவர்களின் கூட்டங்களும் இக்காட்சிசசாலையை வந்து பார்க்கின்றன.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—குறிப்பிட்ட நாட்களிலும் குறிப்பிட்ட நேரஙகளிலும் மாணவர்களுக்காகத் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. கல்லூரி மாணவர்களுகாக மட்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகக் குழு.—இக்கல்லூரியிலுளள உயிர்ப் பிராணிகளின பாடப பிரிவு, தாவரஙகள் பாடப்பிரிவு ஆகிய இவ்விரு பிரிவுகளால் நிர்வகிக்கபபடுகிறது.

ஊழியர்கள்.—உயிர் இனப் பொருளகளின் உடலைப் பதப்படுத்தி அதில் பஞ்சடைப்பவர் ஒருவர் மட்டும்.

நிதி நிலை.—பொருட்காட்சிச் சாலைக்கெனத் தனி வரவு செலவுத திட்டம் இல்லை. ஆயினும், வருஷம் ஒன்றுக்கு இக்காட்சிச்சாலைக்குச் சுமார் ரூ. 200 வரை செலவிடப்படுகிறது.

விவரக் குறிப்புகள்.—பொருட்காட்சிச் சாலைக் கட்டடத்தில் இடவசதி இல்லாதபடியால், காட்சிப் பொருள்களை எல்லாம மிகவும சிரமதசதோடு நெருக்கி வைக்கபபட்டிருக்கின்றன. இவைகளில் அநேக பொருள்களை பண்டகசாலையில் வைக்க வேணடி இருககிறது. சில காடசிப் பொருள்கள் வகுப்பு அறையிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன. வருஷந் தோறும் காட்சிப் பொருள்கள் அதிகரித்துக்கொண்டேயிருபப தால, புதியனவாகக் கிடைக்கினற பொருள்களை வைக்க இட மில்லா ல கஷ்டமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. காட்சிப் பொருள்களில் சிலவறறைத் தவிர, மற்றவைகளின் நகல் பொருள்கள் பரிவர்தசனைக்காக ஒதுக்கிவைக்கபபட் டுள்ளன. விசேஷ காலங்களுக்கென ஒதுக்கப்பட்டவையென விசேஷமாகச் சொல்லக்கூடிய காட்சிப் பொருள் எதுவு மில்லை. இரசாயனப் பரிசோதனைக கூட வசதிகளும் இலலை. சில சமயங்களில் இங்குள்ள காட்சிப் பொருள்கள் மற்றப் பொருட்காட்சிச்சாலைகளுக்குக் கடனாக அனுப்பி வைக்கப படுகினறன. காட்சிசசாலைக்குக் காட்சிப் பொருளகள் சேர்க்கும் பணியை மேற்கொண்டு பிரயாணம செய்துவரும் இக்கல்லூரி மாணவர்களாலேயே அநேகமாகக்காட்சிச்சாலைக்கு வேண்டிய காட்சிப்பொருள்கள் எல்லாம் சேகரிக்கப்படு கின்றன. சில பொருள்கள் பரிவர்த்தனை மூலமாகவும் சேர்க்கப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளி

ஜனத்தொகை—218,921

இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சி சாலை, புனித யோசேப்பு கல்லூரி.

தோற்றம்.—உத்தேசம் 1880-ஆம் வருஷம்.

வரலாறு.—1880-ஆம் வருஷம் ஒரு சிறிய பொருட்காட்சிச சாலையாக ஆரம்பிக்கபபட்ட இந்தப் பொருட்காட்சிச சாலை, அதன் பின்னர்த் தொடர்ச்சியாக வளர்ச்சியுற்று முக்கியத் துவம் அடைந்தது. சுமார் 30 வருஷங்களுக்குப் பிறகு இக் கல்லூரியின் பழைய கட்டடங்களில் மத்தியக் கட்டடதகில் தனிப்பட்ட ஒரு பொருட்காட்சிசசாலையாக அமைக்கப் பட்டது.

நோக்கமும் பொருள்களும்.—இப்பொருட்காட்சிசசாலையில் பூச்சி இனங்கள், பறவை இனங்கள, குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பிராணிகளின் மண்டை ஓடுகள, பாம்பினங் கள், மண் இனங்கள இவற்றைப் போன்ற இயறகை வர லாற்றுப் பொருள்களே அதிகமாய் இருக்கின்றன. தவிர, பழங்காலத்து ஆயுதங்கள், போர்க்கருவிகள, பஞ்சடைத்த பறவை இனங்கள் ஆகிய சில காட்சிப் பொருள்களும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—பொருட்காட்சிச சாலையுடன் இணைக்கப்பட்ட ஒரு புத்தகசாலை இருக்கிறது. அதில் சுமார் 370 புத்தகங்கள் வரை இருக்கினறன. இந்தப் பொருட் காட்சிச் சாலையில் காவலருடைய உபயோகத்துக்காகவும் காட்சிப் பொருள்களைப் பதனிட்டுப் பஞ்சடைபபவர் உபயோகத் துக்காகவுமே வாங்கி வைக்கப்பட்டுள்ளன. அவைகள் யாவும் மிகவும் அபூர்வமான புத்தகங்கள் ஆனபடியால, வெளியில் உள்ளவர்களுக்கு அவற்றைக் கொடுப்ப தில்லை. காட்சிப் பொருள்களைப்பற்றிய விளக்கம் தெரி விக்க வேண்டுமெனறு பார்வையாளர்களில் யாராவது கேட்டுக்கொண்டால, அச்சமயம் காட்சிப் பொருள்களுக்குப் பஞ்சடைப்பவர் விளக்கம் தெரிவிக்கிறார். பள்ளிச் சிறுவர் கள் இக்காட்சிச் சாலையைப் பாக்க வந்தால், காட்சிச் சாலை காவலராவது, பஞ்சடைப்பவராவது, அம்மாணவாகளை கூட்டிக்கொண்டுபோய்ப் பொருட்காட்சிச் சாலையைச் சுற்றிக் காண்பித்து, விளக்கமும் தெரிவிக்கிறார். ஆங்கிலதிலும் தமிழிலும் விளக்கச் சீட்டுகள் இருக்கினறன. இந்நகரிலும் இம்மாவட்டத்திலுமுளள எல்லரப் பள்ளிக்கூடங்களிலும் இது மிகவும் புகழ் பெற்றதாய் இருக்கிறது.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—வருஷத்தில் 270 நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—இக்கல்லூரியிலுள்ள இயற்கை வரலாற் றுப் பாடப் பிரிவின் தலைமைப் பேராசிரியர் காட்சிச் சாலையைக் கவனித்துக்கொள்கிறார்.

ஊழியர்கள்.—காவலர்—சங்கைக்குரிய தந்தையார் **L. M.** பால்ம, சே. சு. பி. ஏ. (ஆனர்ஸ்). இவர் இக்கல்லூரியில் தாவர வர்க்கப் பேராசிரியராகவும் இருக்கிறார். இவருடைய ஆணைக்குட்பட்டுக் காட்சிப் பொருள்களைப் பதனிடுப் பஞ் சடைகளும் முழு நேர வேலையாள் ஒருவரும், காட்சிச் சாலையைப் பார்க்க வரும் பார்வையர்களாக்குக் காட்சிப் பொருள்களைப் பற்றிய விளக்கம் தெரிவிப்பவர் ஒருவரும் வேலை செய்கிறார்கள்.

நிதி நிலை—வருஷத்திற்கு இவ்வளவு தொகைதான் என்ற திட்டம் எதுவும் இல்லை. கல்லூரி நிர்வாகஸ்தர் கள் காட்சிச் சாலைக்கு ஆகும செலவுக்குப் பணம் கொடுக் கிறார்கள்.

விவரக் குறிப்புகள்.—கல்லூரிப் பொருட்காட்சிச் சாலை நகரின் மத்தியில் பொருத்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது. வருஷத்துக்குச சுமார் 7,000 பார்வையாளர்கள் காட்சிச் சாலையைப பார்க்க வருகிறார்கள். அவர்களில் பள்ளிச் சிறுவாகளே அதிகம். காட்சிப் பொருளகள் அதிக மாய்ச் சோந்துவிடடபடியால் இக்கட்டிடத்தில் அவைகள் ஒன்றேடொனறு நெருக்கி வைக்கப்பட்டிருக்கினறன. இட வசதி போதாது. சீக்கிரம் இட வசதி செய்ய வேண்டும். காட்சிச் சாலையைக் காவல் செய்துவர நிதி எதுவும் ஒதுக்கப்பட வில்லை. யாராவது இக்காட்சிசசாலையைப் பார்க்க வருவ தாக முன் கூட்டியே தெரிவிக்கப்பட்டால், காட்சிப் பொருள் களுக்குப் பஞ்சடைப்பவா பார்வையாளர்களுக்குக் காட்சிச் சாலையைத் திறந்து காண்பிக்கிறார். பண்டக சாலையிலும் இட வசதியில்லை. இரசாயனப் பரிசோதனைக் கூடம் இருக் கிறது. காட்சிப் பொருள்களுக்கு அனுபந்தமாக ஏதாவது பொருள் தேவைபபட்டால் அதை இக்கல்லூரியி லுள்ள தொழிற்பட்டறை செய்து கொடுக்கிறது. இக்காட்சிச் சாலையிலிருநது மற்றக காட்சிச் சாலைகளுக்குக் கடன முறை யில் பொருள்களைக் கொடுப்பதாவது வாங்குவதாவது இல்லை.

மைசூர்

பங்களூர்

ஜனத்தொகை—778,977

மத்தியச் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலைகள்.

(a) மண் இனங்கள் பொருட்காட்சிச்சாலை, (b) தாவர வர்க்கப் பொருட்காட்சிச்சாலை, (c) உயிர்ப்பிராணிகளின் பொருட்காட்சிசசாலை.

தோற்றம்.—(a) மண் இனங்களின பொருட்காட்சிச்சாலை 1898, (b) தாவரவர்க்கப் பொருட்காட்சிச்சாலை 1921, (c) உயிர்பிராணிகள் பொருட்காட்சிசாலை 1923.

வரலாறு.—மண் இனங்கள் பொருட்காட்சி சாலை 1898-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அது முதல் ஏராளமான காட்சிப் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டன.

தாவர வர்க்கப் பொருடகாட்சிச்சாலை 1921-ல் ஆரம் பிக்கப்பட்டது. அது முதல் அவ்வகைக் காட்சிப் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டு வருகினறன.

உயிர்ப் பிராணிகள் பொருட்காட்சிச்சாலை 1923-ஆம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. கல்வி சம்பந்தமாய் வருஷம் தோறும் இக்கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் செல்லும் சுற்றுலாக்களின் போது சேகரிக்கப்பட்ட காட்சிப் பொருள்கள் பாதுகாக்கப்பட்டு கண்ணுடி ஜாடிகளில் வைக்கப் பட்டிருக்கின்றன. சில அபூர்வமான மாதிரிப் பொருள்களும் எலும்புக் கூடுகளும் விலை கொடுத்து வாங்கப்படுகின்றன. காட்சிச் சாலையில உயிர்ப்பிராணிகளின் பல குடும்பங்களையும் பல இனங்களையும், பல வகுப்புகளையும், பல வகுப்புகளின் உட்பிரிவுகளையும் சேர்ந்த காட்சிப்பொருள்கள் இருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—மண் இனங்கள் காட்சிச் சாலையில் (a) பாறை வகைகள், (b) தாதுப் பொருள்கள், (c) சலாபங்கள், (d) ஸ்படிகங்கள், (e) மண் இனங்கள் பூமியில் படிந்திருக்கும் அமைப்புகளை விளக்கும் மாதிரி வடிவங்கள் ஆகியவை இருக்கின்றன.

தாவரங்கள் பிரிவில் தாவர வகை மாதிரிப் பொருள்கள் மட்டும் இருக்கின்றன.

உயிர்ப்பிராணிகள் பிரிவில முதுகெலும்பில்லாதவை, முதுகெலும்புடையவை, முக்கியமாய்க் குட்டி போட்டுப் பால் கொடுப்பவை, வாத்தின் அலகைப்போல் அலகையும் நாற்காலிகளையுமுடைய பிளாட்டிபஸ, மற்றும். அபூர்வமான பறவைகள் முதலியவற்றின் பஞ்சடைத்த மாதிரிகளும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இக்கல்லூரி மாணவர்களுக்காக இக்காட்சிசாலை ஸ்தாபிகப்பட்டுள்ளது. இங்குள்ள காட்சிப் பொருள்களைபற்றி மாணவர்களுக்கு விளக்கம் தெரிவிக்கப் படுகிறது. இக்கல்லூரியில் புத்தகசாலை இருப்பதுடன வர்த்த மானப் பத்திரிகைகளும் இருகின்றன. அவைகளைக் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் உபயோகிக்கின்றனர். கல்லூரித் தின விழாவை ஒட்டி நடக்கும் பொருட்காட்சி விழாவின் போது இக்காட்சிச் சாலையைப் பார்க்கப் பொது மக்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். மற்றச் சர்வ கலாசாலையைச் சேர்ந்த மாணவர்களும் சுற்றுலா வரும் பொழுது இக்காட்சிச் சாலையைப் பார்க்க வருகிறார்கள.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—கல்லூரி வேலை நாட்களில் காலை 11-30 மணி முதல், மாலை 6 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை. பொது மக்களுக்கு அனுமதி இல்லை.

நிர்வாகக்குழு.—ஒவ்வொரு பொருட்காட்சிச் சாலையும் அந்தந்தக் கலவிப் பிரிவால் கவனிக்கபபடுகிறது.

ஊழியர்கள்—தனியாக ஊழியர்கள் இல்லை. கல்லூரியி லுள்ள அந்தந்தக் கல்விப பிரிவால் கவனிக்கப்படுகிறது.

நிதி நிலை.—இக்காட்சிச் சாலைக்கெனத் தனிப்பட்ட வரவு செலவுத திட்டம இலலை. கலவிப பிரிவுக்கு ஒதுகப்படும் நிதித்திட்டத்தில் தாவர வர்க்கப் பொருட்காட்சிச் சாலைக்கு ரூ. 1000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

விவரக் குறிப்புகள்.—இந்தப் பொருட்காட்சிச் சாலைகள அமைகபப்பட்ட நோக்கம் கண்டிப்பாய் வரையறுக்கப்பட்டுள்ள தால், பொதுமக்களுக்கு அனுமதி இல்லை. மாணவாகள் மட்டும பாாகலாம். கல்லூரியின பொருட்காட்சி விழாவின் போது ஏராளமான பார்வையாளாகள வருகிறார்கள். மண் இனப் பொருள்கள காடசிச்சாலைக்குத் தேவைப்படும் காட்சிப் பொருளகள் இருப்பு நிதியிலிருநது விலை கொடுத்து வாங கபபடுகினறன ; அல்லது கல்லூரி ஆசிரியர்களும் மாணவர் களும் சுற்றுலாப போய் வரும்போது சேகரிகபபடுகினறன. விளக்கச் சீட்டுகள ஆங்கிலதில இருக்கின்றன. தாவரவர்க் கப்பொருட்காட்சிச் சாலைக்கு வேண்டுமை மாதிரிப் பொருள் கள், தேடிச் சேகரிப்பது மூலமாகவும் பரிவர்த்தனை மூலமாக வும் சேர்க்கபபடுகின்றன. பரிவர்த்தனைக்குப் பொருட் சுலவுகி இலலை. உயிர்ப் பிராணிகள் வர்க்கப் பொருட்காட்சிச் சாலைகு வேண்டிய காட்சிப் பொருள்கள், மாணவர்களால் சுற்றுலாக்களில் சிரமப்பட்டுத் தேடிச் சேகரித்துக்கொண்டு வந்து பீடங்களில் பொருத்தப்படுகினறன. எலும்புக் கூடுகள் அபூர்வமான சில மாதிரிகள் விலை கொடுத்து வாங்கபபடு கின்றன. விசேஷகாலங்களுக்கென ஒதுக்கி வைக்கப்படும் காட்சிப் பொருளகளும நகல பொருள்களும் கண்ணுடி ஜாடி களில் வைத்துக் காப்பாற்றப்படுகினறன. விளக்கச் சீட்டுகளில் அவ்வபபொருள்களுக்கு விஞ்ஞானப் பெயர்களும் சாதாரண மாக ஆங்கிலத்தில வழஙகும்பெயர்களும் ஆங்கிலத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. மாணவா படிக்கும் பாடஙகளைத் தெளிவுறத தெரிந்துகொளளும்படி விவரக் குறிபபுகளும மாதிரிவடிவங்களும் உபயோகப்படுததபபடுகின்றன. இந்தக் காட்சிச் சாலைக்கு இனனும் அதிகமான இடவசதி வேண்டிய தாயிருப்பதுடன் காடசிச் சாலை உதவி அதிகாரி, காட்சிப் பொருளகளைப் பதனிட்டுப் பஞ்சடைப்பவர், காவலர் ஆகிய இவர்களைக் கொண்ட ஸ்திரமான ஊழியர்களும் தேவைப் படுகிறபடியால், அது வரைக்கும் சர்வ கலாசாலையாரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

மங்களூர்

கனரா உயர்நிலைப்பள்ளி மகாத்துமா காந்தி பொருட்காட்சிச்சாலை

" புதைபொருட்கலைப்பண்பாட்டுப் பொருட்காட்சிச சாலைகள் "

என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கவும்.

மைசூர்

ஜனத்தொகை—244,323

வைத்தியக்கல்லூரிப் பொருட்காட்சிச்சாலைகள்.

(a) அங்கக் கூறு பிரிவு, (b) வியாதிகளின தன்மை, காரணம், மருநதுகள் பற்றிய பிரிவு, (c) மருந்துகள் தயாரிக்கும் முறைகளைப் பற்றிய பிரிவு. (d) தடுப்பு மருந்து கள், ஜன சமூக மருந்துகள் பிரிவு.

தோற்றம்.—(a) அங்கக்கூறு பொருட்காட்சிச சாலை—1924, (b) வியாதிகள் விளக்கப் பிரிவுப் பொருட்காட்சிச்சாலை—1939, (c) மருநதுகள் தயாரிக்கும் முறை பொருட்காட்சிச் சாலைக்கும் தடுப்பு மருந்துகள சமூக மருந்துகள் பொருட்காட்சிச் சாலைக்கும் தோற்றக்காலம் தெரியவில்லை.

வரலாறு.—வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்குப் பாடங்கள் கற்றுக்கொடுப்பதற்கு உதவியாய் இருக்கும்படி 1924-ஆம் வருஷத்தில் அங்கக்கூறு பொருட்காட்சிச்சாலை அமைக்கப்பட்டது. அப்படியே வியாதிகள் விளகப் பிரிவுப் பாடஙகளகற்றுக்கொடுப்பதற்கு வசதியாக 1939-ஆம் வருஷத் தில் டாக்டர் V. R. நாயுடு எனபவா வியாதிகள் விளக்கப் பிரிவுப் பேராசிரியராயிப் பதவி ஏற்றபோது வியாதிகளின் தன்மை, காரணம், மருந்துகள் முதலியவற்றைப்பற்றிய பொருட்காட்சிச் சாலை நிறுவப்பட்டது. அவர் B. A. படிப்பு முடித்து மேல் படிப்புக்காக அமெரிக்கா இங்கிலாந்து முத லிய மேனாடுகளில் படித்துக்கொண்டிருக்கும்போது சேகரித்து வைத்திருந்த அநேக மாதிரிப் பொருள்களைக் கொண்டு வந்திருந்தார். 1939-ஆம் வருஷத்தில் ஒரு தனிக் கட்டடம் கட்டப்பட்டது. அதில தரைத் தளத்திலுள்ள ஓர் அறை இக்காட்சிச் சாலைக்காக உபயோகப்படுத்தப்படுகிறது. 1000-கும மேற்பட்ட காட்சிப் பொருள்கள இருக்கினறன. எல்லாவற்றிறகும் அட்டவணை வைக்கப்பட்டிருப்பதுடன் வியாதிகள் விளக்கப் பரீட்சை எழுதபபோகும் மாணவர் களுகு உபயோகமாயிருககும்படி ஒவவொரு வியாதியின் வரலாற்று விவரங்களும் படங்களுடன் வைக்கப்பட்டிருக் கினறன.

நோக்கமும் பொருள்களும்.—அங்கக கூறு பொருட்காட்சிச் சாலையில் பீடங்களில் பொருத்தப்பட்ட சுமார் 100 காட்சிப்

பொருள்கள் இருக்கின்றன. அவைகளில் சரீரத்தின் உட்பகுதிகளைக் குறுக்கு நெடுக்காக வெட்டிக் காட்டிய மாதிரிகளில் (கண்ணுடி ஜாடிகளில் அப்படியே ஈரப் பதத்துடன் வைக்கப்பட்ட) 260 வகைகளும், எலும்பு தயாரிப்பு வகையில் 65-ம், இயற்கைக்கு மாறுக அதிகமாக விரிவடைந்த அல்லது புடைத்த அங்கங்களின் மாதிரிகளில் 20-ம், கருவுற்பத்தி மற்றும் சில வகையைச் சேர்ந்தவற்றில் 30-ம், மிருகங்களின் மண்டை ஓடுகளும் அங்கக் கூறு ஒப்புநோக்குக்காக வைக்கப்பட்டுள்ளன: அங்கங்களைக் குறுக்கு நெடுக்காக வெட்டியனவாய்ப் பொருத்தப்படாத மாதிரிப் பொருள்களில் அநேகம் தனிப்பட்ட ஆராய்ச்சிக்காக வைகைப் பட்டிருக்கின்றன. அவற்றோடு கூடச் சொற்பொழிவு வகுப்பு களில் உபயோகப்படுத்துவதற்காகக் காட்சிப் பொருள்களைப் பற்றி 50 விவரக் குறிப்புகளும் இருக்கின்றன.

வியாதிகள் விளக்கப் பிரிவுப் பொருட்காட்சிச் சாலை.—இக் காட்சிச்சாலையில் அங்கங்கள் பொருத்தப்பட்டு ஜாடிகளில் வைக்கப்பட்டுள்ள 2,020 மாதிரிப் பொருள்களும், 75 மாதிரி வடிவங்களும் (இவற்றில் சில உள்ளூரிலேயே செய்யப் பட்டவை), சட்டமிடப்பட்ட 200 விவரக்குறிப்புகளும், 75,000-க்கு மேற்பட்ட ஜீவதாதுப் பொருளைப்பற்றிய மாதிரிகளும் இருக்கின்றன.

மருந்துகள் தயாரிப்பு விளக்கப்பிரிவுப் பொருட்காட்சிச சாலையில் அலமாரிகளில் வைகைப்பட்ட 100 வகை மருந்து களும், தனிப்பட்ட ஆராய்ச்சி செய்து புதிதாகக் கண்டுபிடித்துத் தமக்கென உரிமைப் பதிவு பெற்ற சிலர் தனி உரிமை (Patent) மருந்துகளில் அவைகளைத் தயாரிக்கும் மருந்து ஸ்தாபனங்கள் அனுப்பிவைத்த மருந்து வகையில் 15-ம், செடிகளின் சித்திரங்களில் 25-ம், விவரக் குறிப்புகளில் 40-ம் இருக்கின்றன.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—கல்லூரி வேலை நாட்களிலெல்லாம் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. ஆனல், பொது மககள் இக்காட்சிச்சாலைகளைப் பார்க்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நிர்வாகக் குழு.—அந்தந்தப் பிரிவுத் தலைவர் மேறபார்வை யில் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—காட்சிச்சாலைக்கெனத் தனிப்பட்ட ஊழியர்கள் இல்லை.

நிதி நிலை.—கல்லூரி வரவு-செலவுத் திட்டத்தைத் தவிரக் காட்சிச் சாலைக்கெனத் தனிப்பட்ட நிதித் திட்டம் இல்லை,

விவரக் குறிப்புகள்.—இக்காட்சிச்சாலைகள் வைத்தியக் கல்வி மாணவர்களுக்காகவே நிறுவபபட்டுள்ளதால், பொது மக்கள் அனுமதிக்கபபடுவதில்லை. இக்கல்லூரியின ஒரு பிரிவைச் சேர்ந்த வேலைக்காரன் இக்காட்சிச சாலைகளைக் காவல் செய்கிறான். விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. தூமரணமடைந்தோரின் மரணத்திற்குக் காரணம் கண்டுபிடிக்கப் பிரேதத்தை அறுத்துப் பரிசோதிக் கும்போது எடுக்கபபடும் பொருள்கள் வாயிலாயும், அங்கங களைக் குறுக்கு நெடுக்காக வெட்டிப் பார்த்துச் சாதாரணமாக ஆராய்ச்சி செய்யும்பொழுது எடுக்கப்படும் பொருள் வாயி லாகவும் காட்சிப் பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன.

வியாதிகளின் தன்மை, காரணம், மருந்துவகைகள் முதலியவை பற்றியும் கிருமிகளைப் பற்றியும் படிப்பதற்கு அனுகூலமாகப் பற்பல மாதிரி வடிவங்களும் படங்களும் இருக்கினறன.

ஒவ்வொரு கல்விப் பிரிவுக்கும் அந்தந்தக் கல்விப் பிரிவு ஆசிரியர் மாணவர்களுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள புத்தக சாலை இக்காட்சிச்சாலைக்கும் பயன்படுகிறது.

பஞ்சாபு.

அமிர்தசரஸ்.

ஜனத்தொகை—325,747.

தாவர வர்க்கப் பிரிவுப் பொருட்காட்சிச்சாலை, பஞ்சாபு சர்வகலாசாலை

தோற்றம்.—1947.

வரலாறு.—இலாகூரில் முற்றிலும் பூரணமாய் அமைக்கப் பட்டிருந்த ஒரு பொருட்காட்சிச் சாலையை 1947ம் வருஷத்தில் (இந்தியா பாக்கிஸ்தான் பிரிவினையினபோது) பஞ்சாபு சர்வ கலாசாலையை இழந்துவிட்டபடியால், அதே வருஷத்தில் அமிர்தசரசில் பஞ்சாபு சர்வகலாசாலையாரால் இந்தப் பொருட் காட்சிச்சாலை ஆரம்பிகபப்ட்டது. அது முதல் இந்நாள் வரை சேர்க்கப்படடுள்ள காடசிப்பொருள்களைத தகுதியானபடி காட்சிக்கு வைகக இடவசதியில்லாமல் இருந்து வருகிறது. இப்பொழுதுள்ள காட்சிப் பொருள்களைச சண்டிகார் நகரில் ஒரு கட்டடத்தில் வைக்க நினைத்துளளபடியால் அங்குப் போய்ச் சேரும் பொழுது அக்கட்டடத்தில் இவைகள் தகுதியான அறையில் காட்சிக்கு வைக்கப்படலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—இக்காட்சிச்சாலை தாவர வர்க் கங்களின் மாதிரிப் பொருள்களைக் கொண்டதாய் இருக்க வேண்டுமென நிறுவபபடடுள்ளது. இக்காட்சிச்சாலை கலலூரி மாணவர்களின் நலன்களுக்காகவும நிறுவப்பட்டுள்ளது. காட்சிச்சாலையைப் பார்க்க வரும் மாணவர்களுக்கு இங்குள்ள காட்சிப் பொருளகளைப் பற்றியும் அவைகள் சம்பந்தப்பட்ட பாடங்களைப் பறறியும் விளக்கம் தெரிவிகபப்டுகின்றன. திரைப்படம காடடும் படக் கண்ணுடிகளும் திரைப்படச சுருள்களும் இங்கு இருக்கின்றன. அவைகளைக் கொண்டு மாணவாகளுக்குத் திரைப்படங்கள் காட்டப்படுகினறன. காட்சிச் சாலை ஊழியர்களின உபயோகத்துக்கெனச் சுமார் 5,000 புத்தகங்களைக் கொண்ட ஒரு புத்தகசாலை இருக்கிறது. திறமை வாய்ந்தவர்களைக்கொண்டு விசேஷச சொற்பொழிவு களை நடததப்படுகின்றன. காட்சிச் சாலை சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பறறிச் சம்பாஷிப்பதற்காக வருஷந்தோறும் ஒரு கூட்டம் நடைபெறுகிறது. அக்கூட்டத்திற்குப் பல கல்வி ஸ்தாபனங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வருகிறார்கள். அவவமயம இக்காட்சிச சாலையையும் பார்க்கின்றனர். ஆங்கி லத்தில் விளகக்ச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

வெளியீடு.—இலலை.

வேலை நேரம்.—ஞாயிற்றுக்கிழமைகளும் கெஜட்டில் பிரசுரிக்கப்படும் சாக்கார் விடுமுறை நாட்களிலும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும, மழை காலத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையும், கோடையில் காலை 7-30 மணி முதல் மதியம் 1-30 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. காட்சிச்சாலை கலலூரி மாணவர்களுக்காகவும் பி.எ.வுக்கு மேல் படிக்கும் மாணவர் களுக்காகவும நிறுவப்பட்டுளளபடியால், பொதுமக்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

நிர்வாகக் குழு.—சண்டிகார் நகரிலிருக்கும் பஞ்சாபு சர்வ கலாசாலைத தாவர வர்க்க இலாக்காத தலைவரின் அதிகாரத்துக்கு உடபடடதாய் இருக்கிறது.

ஊழியர்கள்.—காவலர் 1, காட்சிச் சாலை உதவி அதிகாரி 1, சுமை தூக்குகிறவன் 1.

நிதி நிலை.—பொருட்காட்சிச் சாலைக்கெனத் தனிப்பட்ட நிதித் திட்டம் எதுவுமில்லை. இதற்குத் தேவைப்படும் செலவு களுக்குத் தாவர வர்க்க இலாகா உபகார பணம் கொடுக்கிறது.

விவரக் குறிப்புகள்.—தற்சமயம் இந்தப் பொருட்காட்சிச் சாலை அமிர்தசரசில் இருக்கிறது. ஆனால், சீக்கிரமாக இது சண்டிகாரில் இருக்கும் சர்வகலாசாலையிலுள்ள சாஸ்வதமான கட்டடத்துக்கு மாற்றப்படும். அவ்வாறு புதிய கட்டடத்தில் போய சேர்ந்துவிட்டபின் அங்கே காட்சிக்கு வைக்கப் போதிய காட்சிக் கூட வசதியும் பண்டகசாலை வசதியும் இருக்கும். காட்சிசாலைக்கு வேண்டிய காட்சிப் பொருள்கள் இந்தச் சாவகலாசாலையின் தாவர இலாக்கா அங்கத்தினர்கள் இந்தியாவின் டல பாகங்களுக்கும் சென்று சேகரிப்பது மூலமாகவும் உயிர்ப்பிராணிகளின் காட்சிப் பொருள்களைச் சேகரித்துக் கொடுக்கும் நிலையத்திலிருந்து கிரயத்துக்கு வாங்குவதன மூலமாகவும் சேர்க்கப்படுகின்றன.

ஹோஷியார்ப்பூர்

ஜனத்தொகை—45,291.

பஞ்சாபு சர்வ கலாசாலை உயிர்ப்பிராணிகளின் இலாக்காப் பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—1948.

வரலாறு.—இந்தப் பொருட்காட்சிச்சாலை 1948-ஆம் வருஷத்தில் ஸ்தாபிக்கபபட்டது. அது முதல் ஏராளமான காட்சிப் பொருள்களைச் சேகரித்துகொண்டு இது மிகவும் தீவிரமாய் வளர்ச்சியடைந்து வருகிறது.

நோக்கமும் பொருள்களும்.—சகல இனங்களையும் சேர்ந்த மிருகங்களின காட்சிப் பொருள்களையுடைய இந்தப் பொருட்காட்சிசாலை, உயிர்ப்பிராணிகள் பொருட்காட்சிச்சாலையாய் இருக்கிறது. சர்வகலாசாலையின் கல்லூரிகள் முதலியவற்றில் படிக்கும் மாணவர்களும், பி. எ. வகுப்பிலும் பி. எக்கு மேற்படிப்புக்கும் படிதது வரும் மாணவர்களும் தம் பாடங்களுக்கு வேண்டியவைகளை இக்காட்சிச்சாலையில் பார்த்துப் படித்துத் தெரிநதகொள்ள வேண்டும் என்னும் கருத்துடன இந்தப் பொருட்காட்சிச்சாலை ஆரம்பிக்கபபட்டுள்ளது. இக்காட்சிச்சாலை ஊழியர்களுக்காக இங்கே ஒரு புத்தக சாலை இருக்கிறது. விளக்கச் சீட்டுகள ஆங்கிலத்தில் இருக்கின்றன. பஞ்சாபு சர்வகலாசாலை உயிர்ப்பிராணிகள் (ஆராய்ச்சி) கழகத்தின் ஆதரவில் வருஷந்தோறும் மிருகங்களைப் பற்றிய சம்பாஷணைக் கூட்டம் இக் காட்சிசாலையில் வைத்து நடத்தப்படுகிறது. அச்சமயம் பற்பல கல்வி ஸ்தாபனங்களைச் சோந்தோர் அக்கூட்டத்திற்கு வருகிறார்கள். அவ்வாறு வருபவர்கள் காட்சிச்சாலையிலுள்ள பொருள்களைப் பற்றி ஆராய்ந்து வருகிறார்கள.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—ஞாயிற்றுக்கிழமைகளும் சர்க்கார் கெஜடடில் பிரசுரிக்கப்படும் விடுமுறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும, கோடை காலத்தில காலை 7-30 மணி முதல 1-30 மணி வரையும், மழை காலததில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. இது கல்லூரி மாணவர்கள் உபயோகத்துக்காக மட்டும் நிறுவப்பட்டதாகும்.

நிர்வாகக் குழு.—சண்டிகாரில் இருக்கும் பஞ்சாபு சர்வ கலாசாலை உயிர்ப்பிராணிகள் (ஆராய்ச்சி) இலாக்காவின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிறது.

ஊழியர்கள்.—காவலர்—1, பொருட்காட்சிச் சாலை உதவி அதிகாரி—1, இரசாயனக்கூடப் பணியாள்—1.

நிதி நிலை.—வருஷ உபகாரத் தொகை ரூ. 2,500. இது தவிர, அவ்வப்போது வேறு சில தனிப்பட்ட உபகாரத் தொகைகளும் கொடுகபபடுகின்றன.

விவரக் குறிப்புகள்.—இந்தப் பொருட் காட்சிச்சாலை தற்காலிகமாக இப்பொழுது ஹோஷியார்ப்பூரில் இருக்கிறது. இன்னும் ஒரு வருஷத்திற்குள் சண்டிகாருக்குச் சாஸ்வதமாக மாறறப்படும். இப்பொழுதிருக்கும் கட்டடத்தில் இடவசதி இல்லை. ஆனால், சண்டிகார் கட்டடத்தில் போதிய இடவசதி இருக்கும் என நம்பப்படுகிறது. இககாட்சிச்சாலைக்கு இரசாயனப் பரிசோதனைக் கூடம் இருக்கின்றது. காட்சிச்சாலைக்கு வேண்டிய காட்சிப் பொருள்கள் கிரயம் கொடுத்து வாங்குவதன் மூலமாகவும், சர்வகலாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அடிக்கடி காட்சிப் பொருள்களைச் சேர்ப்பதன் மூலமாகவும் சேர்க்கப்படுகினறன.

ராஜஸ்தான்

பிலானி மத்தியப் பொருட்காட்சிச்சாலை

" கைத்தொழில், வர்த்தகப் பொருட்காட்சிச்சாலை " என்ற தலைப்பின்கீழ்ப் பார்க்கவும்.

உத்தரப் பிரதேசம்

ஆக்ரா

ஜனத்தொகை—375,665.

புனித யோவான் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—தெரியவில்லை.

வரலாறு.—இக்கல்லூரியிலுள்ள பல்வேறு பாடப்பிரிவுகளுக்கு உபயோகமாய் இருக்கும்பொருட்டு இக்கல்லூரியில் (1) பல்வேறு உயிரினங்கள் வரலாறு, (2) உயிர்ப் பிராணிகள் வரலாறு, (3) தாவர வர்க்கங்களின் வரலாறு, (4) வர்த்தக சம்பந்தப்பட்டவை ஆகிய நால்வகைப் பொருட் காட்சிச்சாலைகள் இருக்கின்றன. அவற்றோடு கல்லூரிப் புத்தகசாலை இருக்கும் அறையில் இந்தியாவின் பல் வேறு சித்திரக் கலைப் பாணிகளைச் சேர்ந்த சித்திரங்களும் இருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—உயிரினங்களின் காட்சிப் பொருள்களும் தாவர வர்க்கக் காட்சிப் பொருள்களும் பல் வேறு உயிரினங்கள் பிரிவுகளைக் கொண்ட அறையில் வைக்கப்பட்டிருக்கின்றன. தாழ்வாரத்தில் இயறகைப் பொருள்கள் வரலாற்றுச் சித்திரகூடம் இருக்கின்றது. இந்தச சித்திரகூடத்தில் நம் நாட்டு வனங்களில் விளையும் பொருள்கள், தாவர, பிராணி வர்க்கங்களின் வாழ்க்கை ஆகிய இவற்றைக் காட்டும் சித்திரங்கள் இருக்கின்றன. உயிர்ப் பிராணிகள் வரலாறு உணர்த்தும் காட்சிச் சாலையில் நிலத்திலும் கடலிலும் வாழும் பிராணிகளின் பதஞ்செய்து பாதுகாக்கப்பட்ட பொருள்கள், சரித்திர காலத்துக்கு முற்பட்ட மிருகங்களின் சலாபங்கள், மாதிரி வடிவங்கள், மானிட வர்க்கத்தின் தோற்றம், மாறுதல், வளர்ச்சி முதலியன உணர்த்தும் பொருள்கள் ஆகியவை இருக்கின்றன. இவை தவிர, விசேஷக் காட்சிப் பொருள்களாக வட இந்தியப் பூச்சி வகைகள் இருக்கின்றன. அப்பூச்சி இனங்களில் சாயந் தோய்ப்பதற்கு உபயோகப்படுத்தும் கொட்டை போன்ற ஒரு வஸ்துவை மரங்களைத் துளைத்து உற்பத்தி செய்யும் ஒரு வகைப் பூச்சி மிகவும் அற்புதமான ஒரு வகையாகும். தாவர வர்கபப் பொருட்காட்சிச் சாலையில் தாவர வர்க்கச் சலாபங்கள், தாவரங்களின் வாழ்க்கை, பூக்கள், பழங்கள், விதைகள் இவற்றின் மாதிரி வடிவங்களும் பொருளாதாரத் தாவர வர்க்கங்களின் விளைபொருள்களின் மாதிரிப் பொருளகளும் இருக்கின்றன. வர்த்தகப் பிரிவு பொருட்காட்சிச்சாலையில் வர்த்தகம் கைத்தொழில்கள் சம்பந்தப்பட்ட காட்சிப் பொருள்கள் இருக்கின்றன. கல்லூரிப் புத்தகசாலையில் வர்த்தகம், கைத்தொழில்கள் சம்பந்தப்பட்ட காட்சிப் பொருள்கள் இருக்கின்றன. கல்லூரிப் புதகசாலை அறையில் பல பாணிகளிலுள்ள இந்தியச் சித்திரங்களும் மேலும் சித்திரங்களும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இக்கல்லூரியில் பற்பல பாடப் பிரிவுகளில் படிக்கும் மாணவர்களின் பாடங்களுக்கு இக் காட்சிச்சாலைகள் மிகவும் பயன் அளிப்பனவாய் இருக்கின்றன.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—கல்லூரி வேலை நாட்களில் வேலை நேரங்கள் முழுவதிலும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—இக்காட்சிச் சாலைகள் இக்கல்லூரி மாணவர் களின் நலன்களுக்காகவே நிறுவப்பட்டுள்ளது.

நிர்வாகக் குழு.—கல்லூரி முதல்வரின் ஆளுகையில் இருக்கின்றன.

ஊழியர்கள்.—கல்லூரியிலுள்ள அந்தந்தப் பாடப் பிரிவுப் பேராசிரியர்களால் கவனிக்கப்படுகிறது.

நிதி நிலை.—கல்லூரி வரவு-செலவுத் திட்டத்தில் அடக்கம்.

விவரக் குறிப்புகள்.—இல்லை.

அலகபாது.

ஜனத்தொகை—332,295.

அலகபாது சர்வகலாசாலை பொருட்காட்சிச்சாலைகள்.

(a) உயிர்ப் பிராணிகள் பொருட்காட்சிச்சாலை.

(b) தாவர வர்க்கப் பொருட்காட்சிச்சாலை.

(c) கௌசாம்பிப் பொருட்காட்சிச்சாலை (புதைபொருள்).

தோற்றம்.—(a) உயிர்ப் பிராணிகள் பொருட் காட்சிச் சாலை, 1910.

(b) தாவர வர்க்கப் பொருட்காட்சிச்சாலை, 1922.

(c) கௌசாம்பிப் பொருடகாட்சிசசாலை, 1952.

வரலாறு.—அலகபாது சர்வகலாசாலையில் உயிர்ப் பிராணி கள் ஆராய்ச்சி இலாக்கா 1910-ஆம் வருஷத்தில ஆரம்பிக்கப் பட்டது. அதனுடன் சேர்த்தே இந்தப் பொருட்காட்சிச் சாலைக்கும் அஸ்திவாரக் கல் நாட்டப்பட்டதெனத் தீர்மானிக்க லாம். 1912-ஆம் வருஷமுதல் 1922-ஆம் வருஷம் வரை சர்வ கலாசாலையின் உயிர்ப் பிராணிகள் ஆராய்ச்சி இலாக்காவின் தலைவராய் இருந்த டாக்டர் W. H. உட்லண்டு என்பவர் காலத்தில் இந்தக் காட்சிச்சாலை முக்கியமாய் வளர்ச்சி யடைந்தது. அது முதலாக மேலும் மேலும காட்சிப் பொருள்கள் சேர்க்கப்பட்டன.

1922-ஆம் வருஷம் இந்தச் சர்வகலாசாலையில் தாவர வர்க்க இலாக்கா ஸ்தாபிகபபட்டபொழுது தாவர வர்க்கப் பொருட்காட்சிச் சாலையும் நிறுவப்பட்டது. சமீப காலம் வரை இந்தப் பொருட்காட்சிச்சாலை ஒரு சிறிய அறையில் இருந்து வந்தது. 1952-ஆம் வருஷத்தில் இதற்கென ஒரு பெரிய அறை ஒதுக்கப்படடது.

1952-ஆம் வருஷம ஆகஸ்டு மாதம் 8-ஆம் தேதியில் அச் சமயம் உத்தரப்பிரதேசக் கவர்னராய் இருந்த கே. எம். முன்ஷி என்பவரால் கௌசாம்பிப் பொருட் காட்சிச்சாலை முறைப்படி திறந்து வைகைப்பட்டது. 1949-ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில் இந்தச் சர்வகலாசாலையினர் கௌசாம்பியில் நிலகதை அகழ்ந்து எடுக்க ஆரம்பித்து அவ்வாறு அகழ்ந்தெடுததில் அகப்பட்ட பழம்பொருளகளை இக்காட்சிச் சாலையில கொணடு வந்து வைததனர். கௌசாம்பியில் புத்தரின் புகழ்பெற்ற வாசஸ்தலமாயிருந்த கோஷிதாராமா என்ற இடத்தில் அகழ்ந்து எடுத்ததில் ஏராளமான சிற்பங்களும் முத்திரைகளும் மறறும் பல பொருள்களும் கிடைத்தன. கௌசாம்பியிலுள்ள கோஷி தாராமா சத்நியாசி மடத்துக்குப் புத்தர் சென்றதை விளக்கு விலையுயர்ந்த கல் வெட்டுகளில் சில இக்காட்சிச் சாலையில் இருக்கின்றன. புத்த சமயச் சிற்பக் கலைத் திறனை விளகும் ஏராளமான சிற்பங்களும் இங்கே இருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—உயிர்ப் பிராணிகள் பொருட் காட்சிச் சாலையிலிருகும் காட்சிப் பொருள்கள் முக்கியமாக உயிர்ப் பிராணிகள பாடப் பிரிவு மாணவர்கள் உயிர்ப் பிராணிகளைப் பற்றிக் கற்றுத் தெரிந்துகொள்வதற்காக வைக்கப்பட்டிருக்கினறன. இக்காட்சிச சாலையில் எல்லா உயிர்ப் பிராணி இனங்களின் உள் பிரிவைச சேர்ந்த பிராணி களின் மாதிரிக் காட்சிப பொருள்களும் இருக்கின்றன. இந்தக் காட்சிபபொருளகள் சில பஞ்சடைகபப்பட்டனவாகவும், சில அப்படியே மருந்து ஊற்றி உலரவைத்தவைகளாகவும், சில பூட்டப பூட்டாகப் பொருத்தப்பட்ட எலும்புக கூடுகளாக வும் இருக்கின்றன.

தாவர வர்க்கப் பிரிவுப் பொருட்காட்சிச்சாலையில் தாவர சாஸ்திரம் சம்பநதப்பட்ட காட்சிப் பொருள்களையும் தாவர சாஸதிரத்துடன சம்பநதப்பட்ட இதர வகைக் காட்சிப் பொருள்களையும் கொண்டதாய் இருக்கிறது.

கௌசாம்பிப் பொருட்காட்சிச் சாலை புதைபொருள்களைக் கொண்டதாகும். அதில் இதன் அடியில் காணும் விதங்களில் ஏராளமான பழங்காலக் காட்சிப் பொருள்கள் இருக்கின்றன. அவையாவன.—கல்வெட்டுகள், முத்திரைகள, சுட்ட மண் சிலைகள, சிற்பங்கள, நாணயங்கள், குண்டு மணிகள், வளையல்கள், இரும்பு ஆயுதங்கள, எழுத்தாணிகள், நீலாஞ்சனக் கற்குச்சிகள், மற்றும் இந்தச் சர்வகலாசாலை யார் கௌசாம்பியில் அகழ்ந்தெடுத்த பல பழங்காலப பொருள்கள் ஆகும்.

விளக்க நடவடிக்கைகள்.—உயிர்ப் பிராணிகள் பிரிவைச் சேர்நத புததக சாலையை அப்பிரிவு ஆசிரியர் மாணவர்கள் உபயோகிக்கினறனர். அதில் 6000 புத்தகங்களும், வர்த்த மானப பததிரிகைகளும இருக்கினறன. அந்தப் பிரிவுப் பொருட்காட்சிசசாலை உயிர்ப் பிராணிகளைப் பற்றி மாணவர் கள் படிப்பதற்கு உதவியாய் இருக்கிறது. மாணவர்களுக்குக் காட்சிப் பொருள்களைப் பற்றி விளகக்கூறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உயிர்ப் பிராணிகள் பற்றிய பாடங்கள சம்பந்தப்பட்ட திரைப்படச் சுருள்கள் இருக்கின்றன. அவைகள் குறிப்பிட்ட சில பாடங்களுக்கு மட்டும் இருப்பதால் கொஞ்சமாகவே இருகசினறன. ஆகையால, அவைகளை வேறிடங்களுக்குக கொடுபபதிலலை. ஆங்கிலத்தில தகுதி யான விளக்கச் சீட்டுகள் வைக்கபபட்டிருக்கினறன. காட்சிப் பொருள்களின் தனிப் பணபுகளை விளக்கிக் காட்டுவதற்கு உதவியாகத் தரைப் படங்கள், விவரக் குறிப்புகள, மாதிரி வடிவங்கள், வார்ப்புகள, படங்கள் முதலியன இருக்கின்றன. பக்கத்து வட்டாரங்களிலுள்ள கல்லூரி மாணவர்கள் அடிக்கடி காட்சிச் சாலையை வந்து பார்த்துப் போகிறார்கள்.

தாவர வர்க்கப் பிரிவுப் பொருட்காட்சிச்சாலையோடு இணைக்கபபட்ட ஒரு புத்தக சாலையும் இருகசிறது. அதில் 1,523 புத்தகங்களும், 36 வர்த்தமானப் பதிதிரிகைகளும் இருக்கினறன. காடசிச்சாலையை எல்லோரும பார்க்கலாம். ஆயினும், அது சர்வகலாசாலை மாணவர்கள் உபயோகததுக் காகவே ஸதாபிக்கப்பட்டதாகும். இப்பிரிவு கல்வி வசதிக் காகச் சுமார் 100 திரைபபடக் கண்ணாடிகள் இருக்கின்றன. காட்சிப் பொருள்களுக்கு ஆங்கிலததில் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கினறன.

பழங்கால இந்திய சரித்திரத்தைப் பற்றியும் பண்பாடுகளைப் பற்றியும் விசேஷமாகப் படித்துத் தெரிந்துகொள்வதற்குச சர்வகலாசாலை மாணவர்களுக்கு வேண்டிய விசஷமான காட்சிப் பொருள்கள் கௌசாம்பியில் பொருட்காட்சிச் சாலையில் ஏராளமாய் இருக்கினறன. இதைப் பார்க்க வருபவர்களுக்கு இப்பிரிவுப் பேராசிரியர்கள் பொருள்களைப் பற்றிய விளக்கம் தெரிவிக்கின்றார்கள்.

தவிரவும் இப்பிரிவுக் காட்சிச்சாலையிலும் எராளமான திரைப் படங் காட்டும் படக் கண்ணாடிகள இருக்கின்றன. சில சமயங்களில் தனிப்பட்ட பொருட்காட்சி விழாக்களும் நடத்தப்படுகின்றன. கௌசாம்பியில் நடந்த அகழ்ந்து எடுத்த சமபவங்களை விளக்கிக் காட்டுகிற தரைப் படங்கள், விவரக் குறிப்புகள், போட்டோக்கள், திரைப்படக் கண்ணாடிகள் போல விளக்கு வெளிச்சதில் படங்கள் காட்டும் கண்ணாடித் தாள்கள் முதலியனவும் இருகின்றன.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—எல்லா வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—எல்லாப் பொருட்காட்சிச்சாலைகளும் சர்வகலாசாலையால் நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு பொருட்காட்சிச்சாலையும் தனித்தனியே அப்பிரிவுப் பேராசிரியர்களால் கவனித்துக்கொள்ளப்படுகிறது.

ஊழியர்கள்.—பொருட்காட்சிச்சாலைக்கெனத் தனிப்பட்ட ஊழியர்கள் இல்லை. உயிரினங்கள் பாடப் பிரிவுப் பேராசிரியர். ஆசிரியர்கள் முதலியோர் மேற்பார்வையில் உயிர்ப் பிராணிகள் பொருட்காட்சிச்சாலையில் இரசாயனப் பரிசோதனைக் கூடத்தின் உதவி அதிகாரிகள் வேலை செய்து வருகின்றனர். தாவர வர்க்கப் பாடப் பிரிவுப் பேராசிரியர் ஒருவருடைய பொறுப்பில் தாவர வர்க்கப் பொருட்காட்சிச்சாலை இருந்துக் வருகிறது. அவர் தம் ஓய்வு நேரங்களில் இதைக் கவனித்துக் கொள்கிறார். கௌசாம்பிப பொருட்காட்சிச்சாலையைச் சேர்ந்த அகழ்ந்து எடுக்கும் பிரயாணக் குழுவில் போட்டோ எடுபபவா—1, மாதிரிப் படம் வரையும் உதவியாள்—1, வேலைக்காரர்கள்—2 பேர்.

நிதி நிலை.—பொருட்காட்சிச்சாலைக்கெனத் தனியாக நிதி இல்லை. சர்வகலாசாலையாரால் அகழ்ந்தெடுக்கும் செலவு வகைக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தும் சர்வகலாசாலை யின் பொது நிதியிலிருந்தும் அவசியமான சமயங்களில் கூடுதலாக ஏதாவது கொடுக்கும் தொகையைக் கொண்டும் கௌசாம்பிப் பொருட்காட்சிச்சாலையின் செலவினங்கள் நடத்தப்படுகின்றன.

விவரக் குறிப்புகள்.—உயிர்ப் பிராணிகள் பிரிவுப் பொருட் காடசிச்சாலை சர்வகலாசாலைக் கட்டடத்தில் பொருத்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இது சர்வகலாசாலை மாணவர்கள் உபயோகத்துக்காகவே நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பாடப் பிரிவு மாணவர்களும் அக்கம் பக்கதது கல்லூரிகளிலிருந்து இதைப பார்க்க வரும் மாணவர்களின் எண்ணிகையுமாகச் சுமார் 400 பேர்கள் தவிர, நாளொன்றுக்குச் சராசரி 8 முதல் 10 பார்வையாளர்களும், வருஷத்துக்குச் சுமார் 3,000 முதல் 3,650 பார்வையாளர்களும், காட்சிச்சாலையைப் பார்க்க வருகிறார்கள். இரசாயனகூட வசதியும் இருக்கிறது. காடசிச்சாலைக்கு வேண்டும் காட்சிப் பொருள்கள் தேடிச் சேகரித்தல, விலை கொடுத்து வாங்குதல், மானியமாகப் பெறுதல், பரிவர்த்தனை ஆகிய வழிகளில் சேர்க்கப்படுகின்றன. இங்குள்ள காட்சிப் பொருள்களின் அமைப்பை மாற்றி மேலும் அதிகமான பொருள்களைக் கொண்டுவந்து வைக்க ஒரு திடடம் எற்பாடாகி வருகிறது. தாவர வர்க்கப் பொருட் காட்சிச்சாலை அப்பிரிவுப் பாட மாணவர்கள் உபயோகத்துக் காக நிறுவப்பட்டதாயினும், சில வேளாவேளைகளில் வெளி யிலிருந்தும் பார்வையாளர்கள் வருகிறார்கள். காட்சிச் சாலையில் இடவசதி இல்லை. காட்சிச்சாலைகெனத தனிபபட்ட இரசாயன வசதியிலலை. ஆயினும், இப்பாடப் பிரிவு சம்பந்தப் பட்ட இலாக்கா மூலமாக வேண்டும் இரசாயன வசதிகள் கிடைக்கின்றன. காட்சிச்சாலைக்கு வேண்டிய காட்சிப் பொருள் கள் அனேகமாக ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சேகரிக்கபடுகின்றன. மானிய வாயிலாகவும் விலைக்கு வாங்குவதன் மூலமாகவும் காட்சிப் பொருள்கள் சேகரிக்கப் படுகின்றன. பரிவர்த்தனை முறை இதுவரை கையாளப் படவில்தலையாயினும், இரு சாராரும் மனப்பூர்வமாகச் சம்மதித்தால பரிவர்த்தனை செய்துகொள்ள இக்காட்சிச்சாலை தடை செய்வதில்லை.

சர்வகலாசாலை மாணவர்களை அதிகமாக வந்து பார்க் கும்படியான விதத்தில் கௌசாம்பிப் பொருட்காட்சிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. நாள் ஒன்றுகுச் சராசரி 50 பார்வையாளர் வருகின்றனர். காட்சிச் சாலைக்கெனத் தனிக் கட்டடம் இல்லை. இனிமேல் ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென ஆலோசிக்கப்பட்டு வருகிறது. கௌசாம்பியில் அகழ்ந்து எடுதத பழம்பொருள்களைக் கொண்டே காட்சிச் சாலைக்குரிய சுாட்சிப் பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பரிவர்த்தனை மூலம் மேலும் வேண்டிய காட்சிப் பொருள் சேகரிகக வழி இருக்கிறது. பொக்கிஷப் புதையல் என்ற வகைப் பொருட்காட்சிச்சாலையாக இது இன்னும் அங்கீகரிக் கப்படவில்லை.

டேராடூன்.

ஜனத்தொகை.—144,216.

வனங்கள் ஆராய்ச்சி நிலையம் வன இலாக்காப் பயிற்சிக் கல்லூரிகளின் பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—1914.

வரலாறு.—1878-ம் வருஷத்தில் டேராடூனில் வனக்கல்விப் பள்ளிக்கூடம் ஒன்று நிறுவப்பட்டது. ஆனால், 1906–ஆம் வருஷம் வரை அப்பள்ளிக்கூடம் வனங்களின் அபிவிருத்தி சம்பந்தப்பட்டதும் வனப் பொருள்களை உபயோகிக்கும் முறைகள் சம்பந்தப்பட்டதுமான விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து புதிய முறைகளைக் கண்டு பிடிக்கக்கூடிய ஒரு மத்திய வன ஆராய்ச்சி நிலையம் ஆக்கப்படாமலே இருந்து வந்தது. 1914-ஆம் வருஷம் முதன்முதலாக டேராடூனில் வனங்கள் ஆராய்ச்சி நிலையம் திறக்கப்பட்டது. அதிலிருந்து சில நாட்களுக்குள்ளாகவே முதலாவது உலக யுத்தம் ஆரம்பித்துவிட்டபடியால் யுத்தத்துக்காக வனப் பொருள் கள் அதிகமாய்த் தேவைப்பட்டது காரணமாக வனங்கள் ஆராய்ச்சி பற்றிய அவசியம் ஏற்பட்டது. ஆகையால், வனங் களைப்பற்றிய பரந்த விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. அவ்வித ஆராய்சிக்கு ஒரு புதிய கட்டடமும் தேவைப்பட்டபடியால் C. G. பிள்ளாம்பீல்டு, F. R. I. B. A. வரைந்து திட்டமிட்டபடி பெரிய கட்டடம் ஒன்று 1929–ஆம் வருஷத்தில் கட்டி முடிக்கப்பட்டது. 200 எக்கர் தேயிலை காப்பிப் பண்ணைகள் தவிர, பரிசோதனை வகைகளென ஏற்படுத்திய தோட்டம் இரசாயனப் பொருள்களைக்கொண்ட இரசாயன ஆராய்ச்சிக் கூடங்கள், பூச்சி வகைக் காட்சிக் கூடம், மரங்களை அறுக்கும் யந்திரசாலை, செடிகளின் சக்கைகளைக் கொண்ட காகிதம் தயாரிக்கும் யந்திரங்கள், பற் பல வகையான தசசுவேலைப் பட்டறைகள் முதலியனவை இங்கே இருக்கின்றன. (1) கட்டடத்திற்கு உபயோகமான வனங் களில் விளையும் மரங்கள வகை, (2) வனங்களில் விளையும் சில்லறைப் பொருள்கள், (3) மரங்களை வளர்த்துப் பாது காச்கும் விதங்கள், (4) வனங்கள் சம்பந்தப்பட்ட நோய் களும் அவற்றிற்குரிய மருந்துகளும், (5) வனங்களிலுள்ள பூச்சி வகைகள், (6) வன மூலிகைகள் ஆகிய இந்த ஆறு பிரிவுகளைக் கொண்ட காட்சிச்சாலைகள் இப்புதிய கட்டடதில் இருக்கின்றன. வனமூலிகைகள் ஆகிய இந்த ஆறு பிரிவுகளைக் கொண்ட காட்சிச் சாலைகள் இப்புதிய கட்டடத்தில் இருக்கின்றன. வனமூலிகைகள் பிரிவுக் கட்டடம் ஆரம்பித்த தொடக்கத்திலேயே அக்கட்டடத்தில் நிறுவப்பட்டது. மற்றவை கட்டடம் முடிந்தபின் நிறுவப்பட்டன. பொருட்காட்சிச் சாலைக் கட்டடம் இந்தியாவில் மட்டுமன்றி, ஆசியாக் கண்டத் திலேயே மிகவும் அமைப்பான சிறந்த கட்டடமாய் இருக் கிறது.

நோக்கமும் பொருள்களும்.—பொருட்காட்சிச்சாலை முழுவதும் முக்கியமாக வன ஆராய்ச்சி சம்பந்தப்பட்டதும் வனப பொருள்களையே மிகுதியாக உடையனதாவும் இருக்கின்றது

(i) **வனங்களில் விளையும் கட்டடத்திற்கு உபயோகமான மரங்களின் விதங்களைக் கொண்ட பொருட்காட்சிச்சாலை.**—இக்காட்சிச்சாலையில இந்தியாவிலுள்ள வனங்களில் வளரும மரங்களில கட்டட உபயோகப் பல தினுசுகள் பளபளப்பாகச் செதுக்கப்பட்டதும், செதுக்கப்படாததுமான பலகைகளாக வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், வனங்களில் விளையும் கட்டடத்திறகு உபயோகமான மரங்களின் கட்டைகளைப் பதம பண்ணுதல், பாதுகாத்தல், பரிசோதித்தல் ஆகிய தொழிலகளை விளகிக் காட்டும் விதங்களும் அவற்றிற்கான கருவிகளின தினுசுகளும் இருக்கின்றன. இந்தியாவில வளரும் கட்டடத்திற்கு உபயோகமான மரங்களைக் கொண்டு செய்யும் பல வகை உபயோகப் பொருள்களான வீடுகளுக்கும் உததியோக அலுவலகங்களுகுமுரிய தளவாட, தட்டு முடடுச சாமான்களும், தளங்களுக்குப் பரவும் பலகைகள், கூரைகளுக்குப் பரபபும் மரப் பலகைகள், துப்பாக்கிகள், துப்பாக்கி மருந்துகள் வைக்கும் பெட்டிகள், துப்பாக்கி ஏற்றும் வண்டிச் சக்கரங்கள. உடற் பயிற்சிவிளையாட்டுப் பொருள்கள, ஆயுதங்களின் கைப்பிடிகள் முதலிய காட்சிப பொருள்களும் வைகபபட்டிருக்கின்றன.

(ii) **வனங்களின் சில்லறை விளைபொருள்கள் காட்சிச் சாலை.**—கட்டடத்திற்கு உபயோகமான மரங்களைத் தவிர இந்திய வனங்களின் சிலலறை விளை பொருள்களை மக்களுக்குத தெரிவிக்கும் முறையில இககாட்சிச்சாலை அமைக்கப்படடிருக்கிறது. இவ்வினங்களைச் சேர்ந்த பொருளகளில அநேகம் பொருளாதார முக்கியத்துவம உடையவைகளாகவும இவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன மூலம் வருஷம் ஒனறுக்கு 18 கோடி ரூபாய வருமானம தரகூடிய பொருள்களாகவும இருக்கின்றன. இவறறை நசுகடிப் பிழிந்து சாறு அல்லது சாரங்களை எடுககும விதமும் (extraction) அவறறை உபயோகிக்கும் விதங்களும் காட்டப்பட்டிருக்கினறன. இவ்வகைக் காட்சிப் பொருள்களாக முக்கியமான மருந்துகள், வாசனைத திரவியஙகள், வாசனைப் பொருளகள் தயாரிக்கும சாமானகள், சாயங்கள், படடை அல்லது தோல்களைப் பதனிடுதல், நார் எடுக்கும் வகைப பொருளகள், சில வகைச செடிகளின் படடை அல்லது தண்டுகளிலிருந்து எடுககப்படும் பட்டுப்போன்ற மிருதுவான நார், கோந்து வகைகள், ரோசனைகள், மெழுகு முதலிய பொருள்களும் இருக்கினறன. அவைகளை நசுக்கிச் சாரங்கள எடுக்கும் முறைகளும் அவற்றை உபயோகிக்கும முறைகளும விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இக்காட்சிச்சாலையில் 1,700க்கு மேற்பட்ட காடசிப்பொருள்கள் இருக்கின்றன.

(iii) **மரங்களை வளர்த்துப் பாதுகாக்கும் முறைகளைத் தெரிவிக்கும் பொருட்காட்சிச்சாலை.**—இந்தப் பொருள்காட்சிச் சாலையில மரங்களின வளாப்பு பாதுகாபபு முதலிய விவரங்களையும் மண் அரிபபால் நேரிடும் தீமைகளையும் தெளிவறத் திருஷடாந்த பூர்வமாக விளகிக காட்டும் மாதிரி வடிவங்கள ஏராளமாக இருக்கின்றன. மேலும, வன ஆராய்ச்சி சம்பந்தப்பட்டதும் நிலங்களை உபயோகிககும் திட்டங்கள சம்பந்தப் பட்டதும் ஆன ஆயுதங்கள் பல இருக்கின்றன. அவைகளாவன : (1) மரங்களின் வளர்ப்புப பாதுகாப்பு முறைகளையும். மண் அரிப்புகளால் ஏறபடும் தீமைகளையும் விளக்கிக் காட்டக்கூடிய மாதிரி வடிவங்களைக் கொண்ட 10 காட்சிப் பெட்டிகள், (2) முக்கியமான சில மரங்கள அல்லது செடிகளின் விதைகளைக் கொண்ட ஒரு காட்சிப் பெட்டி, (3) வனங்களில பொதுவாகப் பல திசைப் பார்வைகளை அறிவதற்கு அநுகூலமான இரண்டுக் கண்ணுடி சிலலுகளை உடையதாயும் அச்சில்லுகளின் புறம்பாக ஒவ்வொன்றிலும வைக்கபபடும இரண்டு படங்களையும் உற்றுப் பார்க்குமிடத்து இரண்டும் ஒன்றுகச் சோந்திருப்பது போலக் காட்டும் பார்வைக் குழல் ஒன்றும் (Stereoscope) அதைக் கொண்டு பார்ப்பதன் மூலம் காணப்படும் காட்சிகளை ஜோடிப்படங்களாக அச்சிட்ட பிரதிகளும், (4) வனங்களின் போட்டோக்கள் (வர்ணந் தீட்டியதும், தீடடாததுமாக) வைக்கபபட்ட 6 மரச சடடங்களை முதலியனவும் இருகினறன. இவைகள் தவிர, வனங்களின் வேலைகளுக்கு உபயோகப்படுததும இந்தியாவைச் சேர்ந்ததும் வெளி நாடுகளை சேர்ந்ததுமான ஆயுதங்கள, நாற்றுகளை நடுவதறகும விதைகளை விதைபபதறகும உபயோகப்படுததும் கருவிகள, பாறை வகைகளின மாதிரிகள, கட்டட வேலைக்குப் பயனபடும மரஙகள இனஙகளின் மாதிரிக கட்டைகள், பறபல மரஙகளின உயரம, வயது முதலியவறறைக காட்டும் வரை படஙகள, இந்திய யூனியனிலுள்ள வனப பிரதேசங்களை மெல்லியதாகக காட்டும கையால வரைநத படஙகள், பிரசாரச் சுவரொட்டிகள, தரைபபடஙகள முதலியன இருக்கின்றன.

(iv) **பூச்சிகள் வகைப் பொருட்காட்சிச்சாலை.**—இந்தியாவிலுளள கட்டடத்திறகு உபயோகமான மரஙகளுக்கும மற்ற மரங்களுககும பூச்சிகளால் நேரிடும் நஷ்டஙகளைத தெளிவாகவும் திருத்தமாகவும் விளக்கிக காட்டும் வகையில இக்காடசிச்சாலைச அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் முக்கியமான மரங்களின் வகைகளைத் தனிததனியாக வைத்து அவைகளுள் ஒவவொனறையும எனனெனன பூச்சிகள எவவாறு தாக்குகினறன, அவ்வாறு அவைகள் தாகக நேரிடும் நிலைமைகள, அதனால் அந்த மரஙகளுக்கு எந்தெந்த வகைகளில் தீமைகள விளைகின்றன எனற விவரஙகள விளகபபட்டிருக்கினறன. அவறறுடனை அந்தப பூசசி இனஙகளை ஒழிததுக்கட்டுவதறகான வழிகளும் தெரிவிக்கபபட்டிருக்கின்றன. இக்காட்சிசசாலையில் சுமார் 3,100 காட்சிப் பொருள்கள் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—வன ஆராய்ச்சி நிலையம், வன இலாக்காப பயிறசிக் கல்லூரிகள் ஆகியவற்றின ஊழியர்கள, மாணவர்கள் முதலியோர் நலனுக்காக ஒரு மத்திய புத்தகசாலை இருக்கிறது. இப்புத்தகங்களைப் பொதுமகக்கள் யாராவது படிகக விருமபினால வன ஆராய்ச்சி நிலையம், வன இலாக்காப பயிறசிக கல்லூரிகளின தலைவரிடம் அனுமதி பெற்றுததான் படிகக முடியும். காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள ஒவவொரு பொருளுககும ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் விளககச் சிட்டுகள வைகபபடடிருகின்றன. காடசிச்சாலை ஊழியர்கள் இதைப் பார்க்க வரும் மாணவர் கூட்டஙகளுக்கு இஙகுள்ள காடசிப் பொருள்களைப் பறறி விளககம் தெரிவிக்கிறாகள. கலவி ஸ்தாபனங்கள் கேட்டுக்கொணடால் அவைகளுக்குக் காடசிப் பொருளகளும், சுவரொட்டிகளும் இலவசமாகவோ அல்லது அவற்றிற்கான அடக்க விலைகோ கொடுக்கபபடுகினறன. இந்திய வனக கலலூரியில் ஒரு 16 m.m. திரைப்படம காடடும யநதிரம் இருகிறது. இந்த ஆராய்சசி நிலையத்துகுட்பட்ட வனக் கலலூரியல அநத யந்திரதின மூலம் திரைபடஙகள் காட்டுவதற்காக இந்த ஆராய்சசி நிலையம 14 வகைத் திரைப்படச் சுருளகளை விலை கொடுதது வாஙகியிருகிறது. இவை தவிர, வன இலாக்காப பயிற்சிக கலலூரிகளில வன இலாக்கா அதிகாரிகள் சொற்பொழிவுகள நடத்தும போது அவைகளைபபறறி விளக்கஙகள காட்டுவதறகாகத திரைப்படம காட்டும கண்ணுடிகளும் இருக்கின்றன. மற்றக கல்வி ஸ்தாபனங்கள கேட்டுக் கொணடால, இந்தப படக கண்ணுடிகள் அவைகளுக்குக் கடனகக் கொடுத்து வாங்கபபடுகினறன. இந்தப் பொருட் காட்சிச்சாலைகளின பொறுப்பு அதிகாரிகள வன இலாகக பயிறசிக் கலலூரி மாணவர்களிடையே அடிகடி சொறபொழிவாறறுகிறார்கள். வனப்பொருளகள் பொருட்காடசி விழா நடத்தும் இடஙகளில இந்தக காட்சிசசாலைகளும் பங்கெடுத்துக் கொள்கினறன. எஙகெங்கு அவசியமோ, அங்கங்குக காட்சிப் பொருள்களின் தனிப் பணபுகளை விளக்கிக் காட்டுவதற்கு உதவியாகத தரைப்படஙகள், விவரக குறிப்புகள், மாதிரி வடிவங்கள் முதலியன தயாரிக்கப்பட்டு வைகபபட்டுளளன.

வெளியீடுகள்.—வன ஆராய்ச்சி நிலையம், வன இலாக்காப் பயிற்சிக் கல்லூரிகளின் வெளியீடுகளின் விவர ஜாபிதாவில்

ஆற்றுக்கணக்கான சிறு புத்தகங்களின் விவரங்கள் இருக்கின்றன. இக்காட்சிச்சாலைகளில் உள்ள காட்சிப் பொருள்களைப் பற்றிய விரிவான விளக்கப் புத்தகம் ஒன்று தயாராகி வருகிறது. இந்த ஆராய்ச்சி நிலையம் பற்றிய சிறு புத்தகம் ஒன்று விலைக்குக் கிடைக்கும். இதன் அடியில் குறித்துள்ள விவரக் குறிப்புகள் கேட்போருக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

(a) உங்கள் நிலங்களை வனங்கள் பாதுகாக்கின்றன (ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும்).

(b) காற்றுகள் தாக்காதபடி கட்டடத்துக்கு உபயோகமான மரகட்டைகளை அடுக்குகளாக வைத்துப் பாதுகாக்கும் முறை (ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும்).

(c) பதஞ்செய்து தயார் செய்யப்பட்ட மரக்கட்டைகள் (ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும்).

(d) இந்திய மரக்கட்டைகளின் வலிமைகளை ஒப்பு நோக்கிப் பார்ப்பது (ஆங்கிலத்தில்).

வேலை நேரம்.—சனிக்கிழமைகளில் பிற்பகலும் ஞாயிற்றுக் கிழமைகளும் மற்றும் சர்காரா கெஜட்டில் பிரசுரமாகும் விடுமுறை நாட்களும் தவிர, மற்றெல்லா நாட்களிலும் காலை 9 மணி முதல் 11–30 மணி வரை, மாலை 1–30 மணி முதல் 4–30 மணி வரை இக்காட்சிச்சாலைகள் திறக்கப் பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—ஒவ்வொரு பொருட்காட்சிச் சாலையும் அந்தந்தக் காட்சிச்சாலை சம்பந்தப்பட்ட இன்ன நிலைய அதிகாரியின் ஆளுகையில் இருக்கிறது. அவைகள் எல்லாம் சேர்ந்து இந்திய சர்க்காரின உணவு விவசாயப பிரிவு மந்திரி சபை ஆட்சிக்குட்பட்ட வன ஆராய்ச்சி நிலையம், வன இலாக்காப பயிற்சிக கல்லூரிகளின் தலைவருடைய பொது நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகினறன.

ஊழியர்கள்.—ஒவ்வொரு பொருட்காட்சிச்சாலையிலும் இதன் அடியிற்காணும் ஊழியர்கள் இருக்கிறார்கள். காட்சிச் சாலை பொறுப்பு அதிகாரி ஒருவர்; இவருக்குக் கீழ் காட்சிச் சாலை உதவி அதிகாரி ஒருவர்; காட்சிச்சாலை சித்திரக்காரர்கள் இருவர்; தொழில் துறை உதவி அதிகாரி ஒருவர். காட்சிச் சாலையின் உதவிக் காவலர் ஒருவர். வேலைக்காரன் ஒருவன்.

நிதி நிலை.—இந்தக் காட்சிச்சாலைகளுக்கெனத் தனிப்பட்ட நிதித திட்டம இல்லை. ஆனால், இவைகளுக்கு ஆகும் செலவினங்கள் இந்தியச் சர்க்காரால் வன ஆராய்ச்சி நிலையம், வன இலாகாப பயிற்சிக் கல்லூரிகளுக்கு வருஷந்தோறும் கொடுக்கப்படும் உபகாரப் பணத்திலிருந்து செலவிடப் படுகிறது.

விவரக் குறிப்புகள்.—காட்சிசசாலைகள் எல்லாம் வசதியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. வேலை நாட்களில் எல்லாம் பொதுமக்கள் பார்வைக்காக அவைகள் திறந்து வைக்கப் படுகின்றன. நாள் ஒன்றுக்குச் சராசரி 100 பார்வையாளர்கள் வருகின்றனர். தசரா, தீபாவளி ஆகிய விடுமுறை நாட்களில் ஏராளமாக வரும் மாணவர் கூட்டங்களும். இந்நகரில் நடைபெறும் ஜண்டா, சிவராத்திரி ஆகிய திருவிழாக்களில் உள்ளூரிலும் சுற்றிலுமுள்ள கிராமங்களிலுமிருந்து வரும் ஏராளமான பொதுஜனங்களும் இந்தப் பொருட்காட்சிச் சாலையைப் பார்க்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்தப் பொருட்காட்சிசசாலைகள இருக்கும் கட்டடம் காட்சிப் பொருள்களை வைப்பதற்குப் பொருத்தமாகவும் இடவசதி உடையதாகவும் இருப்பதுடன் விசேஷ காலங்களுக்கெனத் தனியே ஒதுக்கி வைக்கப்படும் பொருள்களுக்குப் பண்டக சாலை வசதியுடையதாயும் இரசாயனப் பரிசோதனைக்கூட வசதியுடையதாயும் இருக்கிறது. இதற்கு உபயோகமாகும் இரசாயனப் பரிசோதனைக்கூடம் வன ஆராய்ச்சி நிலையம் முழுவதற்குமாக நிறுவப்பட்டிருந்த போதிலும், இக்காட்சிச் சாலைகளுக்கும் அதுவே இரசாயனப பரிசோதனை செய்ய உதவுகிறது. வேலை நாட்களில் பகலில் வேலைக்காரர்களாலும், இரவிலும் விடுமுறை நாட்களிலும் சௌக்கிதாராலும் காவல் செய்யப்படுகின்றன. ஆராய்ச்சி நிலையத்தின வனங்களின் வளர்ச்சி பாதுகாப்புப் பிரிவுப் பொருட்காட்சிச்சாலையின் மூலம் வேண்டுவோர் கிரயம் கொடுத்தால் வாங்கிக் கொள்ளலாம். போட்டோகளும், பல்வேறு பகுதிப் படங்களும் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காட்சிச்சாலைகளில் இருக்கும் காட்சிப் பொருள்கள் இதரக் காட்சிச்சாலைகளுக்குக் கடனாகக் கொடுத்து வாங்கப்படுகின்றன. ஆனால், இக்காட்சிச்சாலைகள் இதரக் காட்சிச்சாலைகளிலிருந்து காட்சிப பொருள்களைக் கடனாக வாங்குவதில்லை. எனினும், இங்குள்ள காட்சிப் பொருள்கள் அனைத்தும் செய்முறையில் இங்கே செய்த ஆராய்ச்சிகளின் பயனாகத் தயாரிக்கப்பட்டவைகளாய் இருப்பதனால்தான். வனத்தின் விளைபொருள் சம்பந்தப்பட்ட காட்சிப்பொருள்களில் அநேகம் இம்முறையிலேயே தயாரிக்கப்பட்டவைகளாகும். சில பொருள்கள் மட்டும் வனப் பொருள்கள் வியாபாரம் சம்பந்தப்பட்டவர்களால் மானியமாகக் கொடுக்கப்பட்டவைகளாகும். உயிர்ப் பிராணிகள (பூச்சிகள் போன்றவை), காட்சிப் பொருள்களின் மாதிரி வடிவங்கள் இந்த ஆராய்ச்சி நிலையத்திலேயே செய்யப்படுகின்றன அல்லது இந்த ஆராய்ச்சி நிலைய ஊழியர்களால் சேகரிக்கப்படுகின்றன. இவைகளில் சில இந்த ராஜ்யச் சர்க்காரின் வன இலாக்கா அதிகாரிகளால் மானியமாகக் கொடுக்கப்பட்டவைகளும் இருக்கின்றன. இந்த வன ஆராய்ச்சி நிலையம் வெளியிடுகிற அதே மாதிரிப் புத்தகங்களை வெளியிடும் ஸ்தாபனங்களுடனும் அல்லது இந்த ஆராய்ச்சி நிலைய வெளியீடுகளைப் போல வெளியீடுகளை வெளியிட ஆர்வங்கொள்ளும் இதர ஸ்தாபனங்கள் அல்லது தனி நபர்களுடனும் இரு சாராரின் மனப் பூர்வமான சம்மதத்தின் பேரில் காட்சிப் பொருள்களைப் பரிவர்த்தனை செய்துகொள்வது என்ற திட்டம் இருந்து வருகிறது. இந்தியாவில், ஆசியாக் கண்டம் முழுவதிலுமே இந்தப் பொருட்காட்சிச் சாலையைப் போல இதே வகையிலுள்ள பொருட்காட்சி வேறு எதுவும் இல்லை. ஆகையால், இது வரை காடசிப் பொருள்களைப் பரிவர்த்தனை செய்ய வேண்டிய சந்தர்ப்பமே ஏற்படவில்லை. கலகத்தா, பம்பாய் போன்ற முக்கிய இடங்களில் இருக்கும் பொது மக்கள் பொருட்காட்சிச் சாலைகளுக்கும் மரச் சாமான்கள் உற்பத்தி செய்யும் கைத்தொழில் குழுவினர்களின் தலைமை அலுவலகங்களுக்கும் இக்காட்சிச் சாலையிலிருந்து காட்சிப் பொருள்களை அனுப்பி வைத்துக கைத்தொழிற காட்சிக் கூடங்களை நிறுவ வேண்டுமெனபது இந்த ஆராய்ச்சி நிலையத்தின் கருத்தாய் இருந்து வருகிறது.

பூமியின் நிலப்பரப்பையும் பல்வேறு பாகங்களையும் பெரிய அளவில் அளந்து பரிசோதிக்கும் இலாகாவினரின் பொருட்காட்சிச் சாலை.

(இந்திய சர்க்காரின் நில அளவு ஆராய்ச்சிப் பிரிவு.)

தோற்றம் —1927.

வரலாறு.—1927-ஆம் வருஷத்தில் சேனைத்தலைமைக் கர்த்தரான E. A. தாண்டி R. E. என்பவர் இந்திய சர்க்காரின் நில அளவு, ஆராய்ச்சி இலாக்காவின் தலைமை அதிகாரியாகவும் அவருக்கு அடுத்த ஸ்தானத்தில இருந்த உதவித் தலைக்கர்த்தர் M.O.C. தாண்டி D.S.O.,O.B.E.,R.E. எனபவர் பூமியின் நிலப்பரப்பைப் பெரிய அளவில் அளந்து பரிசோதிக்கும் இலை இயக்குநராகவும் (Director) இருந்தபோது இந்தப் பொருட்காட்சிச் சாலை 1927–ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில் திறக்கப்பட்டது. இந்தப் பொருட்காட்சிசசாலை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம், ஆதிகாலத்தில் பூமியின் நிலப்பரப்பையும் பல்வேறு பாகங்களையும் பெரிய அளவில்

அளந்து கணக்கிடுவதற்காக உபயோகப்படுத்தப்பட்ட கருவிகளையும் அதற்காகத் தற்காலத்தில் உபயோகப்படுத்தப்படும் கருவிகளையும் காட்சிக்கு வைக்கவேண்டும் என்பதாகும்.

நோக்கமும் பொருள்களும்.—இந்தப் பொருட்காட்சிச்சாலையில் "மாபெருந் திரிகோண அளவுமுறை"யைக் கண்டுபிடித்தவர்களின் போட்டோக்கள், மாபெருந்தூரமும் உயரமும் கோணமும் அளக்கும் கருவி, லாம்ப்டன் என்பவர் கண்டு பிடித்த சங்கிலி, மாபெருந்தூரமும் உயரமும் கோணமும் அளக்கும் கருவியுடன் ஒப்பு நோக்கிப் பார்ப்பதற்கான தற்காலத்திய ல வகைப்பட்ட தூரம், உயரம் கோணம் அளக்கும் கருவிகள், அவைகளில் ஒன்றான கல்கத்தாவைச் சேர்ந்த சையத் மீர்மோஷின் என்பவரால் பெரிதாகச்செய்யப்பட்ட தூரம், உயரம், கோணம் அளக்கும் கருவி, கோல்வி என்பவர் கண்டுபிடித்த சட்டங்கள் அட்சரேகை (தென்வடல்தூரம் கணிக்கும் கோடுகள் கண்டுபிடிக்க உபயோகமான இரண்டு வான சாஸ்திரக் கருவிகள் பழங்கால தற்கால இரசமட்டம், மட்டம் பார்க்கும் கம்புகள், தொங்கட்டங்கள், காந்த ஊசிகள் பருவகால ஏற்றத் தாழ்வு காட்டும் கருவி, போட்டோக்களும் ஆதிகாலத்துத் தரைப் படங்களும், சட்லெட்ஜுக்கும் நைனிடாலுக்கும் இடையேயுள்ள இமயமலைப் பிரதேசம இருக்கும் இடத்தின் நேரம் தெரிந்து அதன் மூலம் தீர்க்க ரேகை (கிழமேல் தூரம்) கணிப்பதற்கு உபயோகமான நகரும் தூரப்பார்வைக் கண்ணாடிக் குழல் கருவி முதலியவைகள் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—ஒவ்வொரு காட்சிப் பொருளின் மீதும் விளக்கமான பத்திரிகை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இங்கு வரும் பார்வையாளர்களுக்குக் காட்சிப் பொருள்களைப் பற்றி விளக்கம் தெரிவிப்பதற்கு அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—சனிக்கிழமைப் பிற்பகலும், ஞாயிற்றுக் கிழமைகளும், சர்க்கார் விடுமுறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 9–30 மணி முதல் மாலை 4-30 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. ஆனால், முன் கூட்டி அனுமதி பெற்று வரவேண்டும்.

நிர்வாகக் குழு.-இந்திய சர்க்காரின் நில அளவு ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த பூமியின் நிலப்பரப்பைப் பெரிய அளவில் அளந்து கணக்கிடுவதும் ஆராய்ச்சி செய்வதுமான கிளையின் டைரெக்டருடைய நிர்வாகத்தில் இந்தக் காட்சிச்சாலை இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—தனிப்பட்ட ஊழியர்கள் இல்லை.

நிதி நிலை.—தனியாக நிதி இல்லை.

விவரக் குறிப்புகள்.—இல்லை.

ஹரித்துவார்.

குருகுல் காங்கிரீட் பொருட்காட்சிச்சாலை.

"பூதைபொருள்கள், கலைப்பண்பாட்டுப் பொருட்காட்சிச் சாலைகள்" என்ற தலைப்பின்கீழ்ப் பார்க்கவும்.

லக்னே (லக்ஷ்மணபுரி)

ஜனத்தொகை—496,861.

மாகர்ணச் சுகாதார நிலையப் பொருட்காட்சிச்சாலை

தோற்றம்.—1928.

வரலாறு.—இந்தப் பொருட்காட்சிச்சாலை 1928-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில ஸ்தாபிக்கப்பட்டது. இதில் பல பிரிவுகள் இருக்கின்றன. அவையாவன (1) காற்றின் நிலையையும் பருவ நிலையையும் உணர்த்தும் பிரிவு, (2) பௌதிக சாஸ்திரப பிரிவு, (3) இரசாயன சாஸ்திரப் பிரிவு, (4) அங்கக் கூறுபாடுகள் பிரிவு, (5) தடுக்கவேண்டிய நோய்கள், (6) தண்ணீர்த திட்டம, (7) காறறும் காறறேற்ட வசதிகளும், (8) கழிவுப் பொருள்களை அகற்றும் விதமும் சாக்கடையும், (9) போஷாக்கு முறைகள், (10) பல வகைப்பட்டவை, M.B.B.S. பட்டப் படிப்பு வகுப்புகளில் சுகாதாரப் பிரிவு மாணவர்களுக்கும், பொதுச் சுகாதார யோக்கியதா பத்திரப் படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கும், சுகாதாரச் சோதனையாளர் வேலைக்கும் பார்வையாளர் வேலைக்கும் படிக்கும் மாணவர்களின் நலனுக்காக இந்தப் பொருட்காட்சிச்சாலை நிறுவப்பட்டுள்ளது. மாகாணச் சுகாதார நிலையத்தில் கல்வி கற்பிக்கும் பாடங்கள் அதிகரிக்கப்பட்டபடியால், இந்தப் பொருட்காட்சிச்சாலையிலும் வராளமான புதிய மாதிரி வடிவங்கள் விவரக்குறிப்புகள் முதலியன அதிகமாய்ச் சேர்க்கப்பட்டதனால் காட்சிப் பொருள்களின் எண்ணிக்கையும் அதிகமாயிறறு. கிட்டத்தட்ட 20 வருஷங்களுக்குப் பிறகு 1949-ம் வருஷத்தில் இப்பொருட்காட்சிச் சாலைக்குக் கண்காணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் அந்தப் பொறுப்பை மேற்கொண்டார்.

நோக்கமும் பொருள்களும்.—இந்தப் பொருட்காட்சிச்சாலை சுற்றுப்புறச் சுகாதாரம்,சமூகமருந்துகள் முதலியன சம்பந்தப்பட்டது. இங்குள்ள மாதிரி வடிவங்கள், விவரக் குறிப்புகள், திரைப்படம் காட்டும் படக் கண்ணாடிகள் முதலியன, சுற்றுப்புறச் சுகாதாரம, போஷாக்கு, நோய்கள், நோய்களைப் பரவச் செய்வதற்குக் காரணமாயுள்ளவை முதலிய விஷயங்கள் சம்பந்தப்பட்டவைகளாய் இருக்கின்றன. இதனடியில் காணுமாறு மாதிரி வடிவங்களும் விவரக் குறிப்புகளும் இருக்கின்றன :—

(1) மனித சரீரத்தின் அங்கக் கூறுபாடுகளை விளக்கும் எலும்புக்கூடுகள்.

(2) சீதோஷ்ண நிலைமைகளை அறிந்துகொள்வற்கு உபயோகமாக மழை அளக்கும் கருவிகள், சரம், சீதோஷ்ணநிலை, காறறின் வேகம், மின்சாரக் கம்பிகள் மூலம் உஷ்ணதனதைச் செல்ல விடுவதால் அது தீர்ந்து போவது, அதே உஷ்ணத்தை நீர்வஸ்துக்கள் அல்லது ஆவிகளில் செலுத்துவதால் ஏற்படும் பலாபலன், உஷ்ணத்தை ஆவியாக மாற்றுவதில் காணும் பலாபலன்கள் முதலியவை.

(3) காற்றேற்ட வசதிகளுக்கு அமைக்கக்கூடிய பல வகையான சாதனங்களின மாதிரி வடிவங்கள்.

(4) நகர, கிராமத் தண்ணீர்த் திட்டங்களின் பல வகைத் தண்ணீர் உற்பததி ஸ்தானங்கள், தண்ணீரை வடிகட்டுவது, சுத்தம் செய்வது இவற்றிற்கு உபயோகிக்கப்படும் சாதனங்களின் மாதிரி வடிவங்கள்.

(5) பொது ஜனங்கள் உபயோகிக்கும் கக்கூஸ், தனிப்பட்டோர் வீடுகளிலுளள கக்கூஸ், அவற்றைப் பாதுகாபபது, பொதுவிடங்களிலும் தனியார் கக்கூஸ்களிலுமிருந்து மலங்களை அப்புறப்படுத்துவது சம்பந்தப்பட்ட மாதிரி வடிவங்கள் விவரக குறிப்புகள்.

(6) கிராமவாசியின் மாதிரி வீடு, மாதிரிக் கசாப்புக் கடை, சுகாதாரம் உள்ளதும் சுகாதாரம் இல்லாததுமான கிராமம், பாறபண்ணை இவற்றை விளக்கும் மாதிரி வடிவங்கள்.

(7) சுகாதார முறையில் கட்டப்படும் கட்டடங்களில் வைக்க வேண்டிய சுகாதாரச் சாதனங்களின் மாதிரி வடிவங்கள்.

(8) பிளேகு, காலரா, மலேரியாக் காய்ச்சல், க்ஷயரோகம், மேகவியாதிகள் ஆகிய இவ்விதமான பொதுமக்களிடையே யுள்ள தொற்று நோய்களின் தன்மைகளும் அவற றைத் தடுக்கும் வழிகளும், தனிப்பட்ட ஒவ்வொருவரும் தம்மைத்தாம் அந்நோய்களினின்று பாதுகாத்துக் கொள்ளும் வழிகளும் ஆகிய இவற்றை விளக்கிக் காட்டும் மாதிரி வடிவங்களும், விவரக் குறிப்புகளும்.

(9) நம் நாட்டில் பொதுவாகப் பழக்கத்தில் இருந்து வரும் பல மாதிரி ஆகார பொருள்கள், அவற்றின போஷாக் குத் திறமை, பல நிலைமைகளிலுள்ள மனிதருக்குத் தேவையான உணவின போஷாகு அளவு, ஒரு வகை உணவுப் பொருளின் போஷாக்குத் தன்மையின் குறைவை மற்றொரு வகைப் போஷாக்குத் தனமை அதிகமுள்ள உணவை உண் தால் போஷாக்கைச் சரிகட்டும் விதம் ஆகிய இவ்விவரங்களை விளக்கும் மாதிரி வடிவங்களும் விளக்கக் குறிப்புகளும் இக்காட்சிச்சாலை யில் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இந்தப் பாடங்களைப் படிக்கும் மாணவர் பார்வைக்கு இக்காட்சிச்சாலை திறக்கப்பட்டிருக் கிறது. விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்தில் வைக்கப்பட்டிருக் கின்றன எப்போது அவசியம் ஏற்படுமோ, அப்போது மாகாணச் சுகாதார நிலைய உதவி டைரெக்டர் சொற்பொழி வாளர்கள் இக்காட்சிப் பொருள்களைப்பற்றி விளக்கம் தெரிவிப்பதோடு அவற்றைத் தனித் தனியாக பிரித்துக் காண் பிப்பதும் விளக்கங்களைத் தெளிவுபடுத்துகிறார்கள். சுற்றுப்புறம் சுகாதாரம், சுகாதார வழிகளுக்கு மேற்கொள்ளப்படும் நல்வழிகள் முதலியவை சம்பந்தமாய நடத்தப்படும் பொருட்காட்சி விழாக்களுக்குக் காட்சிச்சாலை தன்னிட மிருக்கும் காட்சிப் பொருள்களை அனுப்பி வைக்கிறது. காட்சிப் பொருள்களைப்பற்றிய விளக்கங்களை மிகவும் தெளி வாகவும், திருத்தமாகவும் தெரிவிப்பதற்கு உதவியாக மாதிரி வடிவங்களும் விவரக் குறிப்புகளும் உபயோகப் படுத்தப்படுகின்றன. லக்ஷ்மணபுரி சர்வகலாசாலையில் M.B.B.S. வைத்தியப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கும் சுகாதார நிலையத்தில் படிக்கும் மாணவர்களுக்கும் இக் காட்சிச்சாலை மிகவும் பயன்படுகிறது.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—ஞாயிற்றுக் கிழமைகளும் கெஜட்டில் பிரகடிக்கப்பட்ட சர்க்கார் விடுமுறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை காட்சிச்சாலை திறக்கப்படடிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—லக்ஷ்மணபுரி, மாகாணச் சுகாதார நிலைய உதவி இயக்குநர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—பொருட்காட்சிச்சாலை கண்காணிப்பாளர்.

நிதி நிலை.—காட்சிச்சாலை சுகாதார நிலையத்தின் ஒரு பகுதி யாய் இருப்பதால், இதற்கெனத் தனி நிதி எதுவும் இல்லை.

விவரக் குறிப்புகள்.—காட்சிச்சாலை பொருத்தமாய் அமைக் கப்பட்டிருக்கிறது. சட்டத்தில் இடவசதி இல்லை. பண்டக சாலையிலும் இடவசதி இல்லை. காட்சிச்சாலைக்கு இரசாயன ஆராய்ச்சிக்கூட வசதி தேவை இல்லை. மாகாணச் சுகாதார நிலையச் சௌகிதார்கள் இந்தப் பொருட்காட்சிச்சாலையையும் காவல் காக்கிறார்கள். போட்டோக்களை விற்பனை செய்வதற கான ஏறபாடு எதுவும் இல்லை. மாதிரி வடிவங் கள் செய்பவர்களிடமிருந்து கிரயத்துக்கு வாங்கப் படுகின்றன. விவரக் குறிப்புகள் இந்த நிலையத்தின் சித்தி ரக்காரரால் தயாரிக்கப்படுகின்றன, அல்லது வெளியிலிருந்து கிரயத்துக்கு வாங்கப்படுகின்றன.

லக்ஷ்மணபுரி சர்வகலாசாலைப் பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—(வியாதிகளின் தன்மை, காரணம், அவற்றிற் கான மருந்துகள் ஆகிய இவ்விஷயங்கள பற்றிய) வியாதிகள் விளக்கப் பொருட்காட்சிச்சாலை 1913-ஆம் வருஷத் தில் நிறுவப்பட்டது.

இந்தச் சர்வகலாசாலைப் பொருட்காட்சிச் சாலையில் இதன் அடியில் காணும் பிரிவுகள் இருகின்றன:—

(a) அங்கக் கூறுபாட்டுப பிரிவு, (b) வியாதிகள் விளக்கப் பிரிவு, (c) மருந்துகள் தயாரிக்கும் முறைகள் பிரிவு, (d) நீதி மன்றங்களின சந்தேகப்பட்ட கேளவிகளுக்குப் பதிலளிக்க உபயோகமாகும் வைததியத்திறன் விளக்கப் பிரிவு, (e) பொதுச் சுகாதாரப பிரிவு, (f) உயிர்ப் பிராணி கள் பிரிவு, (g) மண் இனங்கள் பிரிவு, (h) இயற்கைப் பொருள்கள் பிரிவு.

இந்தப் பொருட்காட்சிசசாலைகள் அனைத்தும் அந்தந்தப் பிரிவுக் கல்வி கற்பதற்கு உபயோகமாய் அமைக்கப்பட்டவை யாகும். வியாதிகள் விளக்கப் பிரிவுப் பொருட்காட்சிச் சாலை, லக்ஷ்மணபுரி சர்வகலாசாலை வைத்திய சாஸ்திரக் குழுவினுளள வியாதிகள் விளக்க, தொத்து நோய்க் கிருமிகள் விளக்க இலாக்காவுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அது 1913-ஆம் வருஷத்தில் சுமார் 110 மாதிரிப்பொருள் களை வைத்து ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது காட்சிச் சாலையில பீடங்களில் பொருத்தி இணைக்கப்பட்ட மாதிரிப் பொருள்கள, திரைப்படங்காட்டும் படக்கண்ணாடிகள், போட்டோப் படக்கண்ணாடிச் சில்லுகள், போட்டோக்கள், மெழு கினும் களிமண்ணினாலும் செய்யப்பட்ட மாதிரி வடிவங்கள் ஆகிய 6,000 காட்சிப் பொருள்கள் அடங்கியிருக்கின்றன. நீதி மன்றங்களில் சந்தேகக் கேள்விகளுக்குப் பதில் அளிக் கும் வைததிய திறனுக்கு உபயோகமாகும் மருந்துகள் பிரிவுக் காட்சிச் சாலைக்கு ஒரு கட்டடம் கட்டி முடியும் தறுவா யில் இருகிறது. அது வேலை முடிந்த பின் வியாதிகள் விளகக பிரிவுப் பொருட்காட்சிச்சாலையிலிருந்து இப்பிரிவுப் பொருட்காட்சிச்சாலைக்குரிய காட்சிப பொருள்கள் அங்கே கொண்டுபோய வைக்கபடும்.

நோக்கமும் பொருள்களும்.—(a) **அங்கக்கூறு பொருட் காட்சிச்சாலை.**—இக்காட்சிச்சாலையில் கருத்தரிக்கும் பொது வான முறைகள், தனிப்பட்ட புலன்கள், சரீரத்தின் உள்ளடங்கிய தனிப்பட்ட ஓர் உறுப்பைச் சுற்றியுள்ள பாகங் களின் அங்கக்கூறுபாடு, தன் பிரிவின் அங்கக் கூறுபாடு, மண்டையோட்டின் கூறுபாடு, ஒப்பு நோக்கு அங்கக் கூறு பாடு ஆகிய இவ்வினங்களைச் சேர்ந்த மாதிரிப் பொருள களும் மாதிரி வடிவங்களும் இருக்கின்றன. இயற்கைப் பொருளகள் பற்றிய இரசாயன ஆராய்ச்சிக்கூடத்தில் மனித ருடைய முகம் முதலில மீன முகத்தைப்போலிருந்து பின் படிப்படியாக மாறிய விதத்தைக் காட்டும் 12 மாதிரி வடிவங்கள் இருகின்றன. மேலும, சரித்திர காலத்துக்கு முற்பட்ட மனித வாழ்க்கை வரலாறு மாதிரி வடிவங்களுடனும் சித்திர விளக்கத்துடனும் வைக்கப்பட் டிருப்பதோடு "ஆதிகால ஜீவஜந்துக்களிடையே மனிதன்" என்ற தலைப்புடன் கூடிய ஒரு வமிசாவளி ஜாபிதாவும் இருக்கிறது. இந்தப் பிரிவில் இயற்கைப் பொருள்களைச் (மீன் வகைகளை) சீவும் ஆயுத வகைகளும் இருக் கின்றன.

(b) **வியாதிகள் விளக்கப் பிரிவுப் பொருட்காட்சிச்சாலை.**—இது ஆறு முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. (1) வியாதிகளின் தன்மை, காரணம், மருந்துகள் இவற்றைப் பொதுவான வழிகளில் தெரிவிக்கும் பிரிவு, (2) வியாதி கள் ஏற்படக் காரணமாயிருக்கும் பொருள்கள் பற்றிய பிரிவு, (3) இரத்த ஓட்டப் பிரிவுகளிலும், சரீரம் வேலை செய்யும் மற்றப் பிரிவுகளிலும் வியாதிகள், அவற்றின் காரணங்கள முதலியவற்றை விளக்கும் பிரிவு, (4) தனிப்பட்ட வைத் திய பாடங்கள் சம்பந்தப்பட்ட வியாதிகள் விளக்க

முறைகள் பிரிவு, (5) வீக்கம் உண்டுபண்ணக்கூடியதும் கருவுற்பத்திக்கான ஜீவதாதுக்களைக் கெடுப்பதுமான இனத்தைச் சேர்ந்த வியாதிகள், அவற்றின் காரணங்கள், அவற்றிற்கான மருந்துகள் முதலியன பற்றிய பிரிவு, (6) மிருகங்களிலும் தாவரங்களிலும் ஏற்படும் வியாதிகள விளக்கப் பிரிவு எனனும் ஆறு பிரிவுகளாகும்.

(c) **மருந்துகள் தயாரிக்கும் முறைப் பொருட்காட்சிச் சாலை.**—இது மருந்துகள் தயாரிக்கும் முறைகளை எளிமையான மாதிரிகளுடனும், விவரங்களுடனும், படங்களுடனும் விளக்கிக் காட்டுவதில் நாளது வரையுள்ள முறைகளைத் தெரிவிப் தாய் இருக்கிறது.

(d) **நீதி மன்றங்களில் சந்தேகக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வைத்தியத் திறனுக்குப் பயன்படும் மருந்துகள் காட்சிச்சாலை.**—இக்காட்சிச் சாலை இது வரை வியாதிகள் விளக்கப் பிரிவுப் பொருட்காட்சிச் சாலையுடன் சேர்ந்திருந்தது. இப்பொழுது இதற்கெனப் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. கட்டடம் முடிந்த பின் அக்கட்டடத்தில் தனியே ஒரு பொருட்காட்சிச் சாலையாகப் பிரித்து வைக்கப்படும்.

(e) **பொதுச் சுகாதார இலாக்காப் பொருட்காட்சிச்சாலை.**—இக்காட்சிசாலை, மாகாணச் சுகாதார நிலையக் கட்டடத்தில் இருக்கிறது. இது உததரப் பிரதேசச் சர்க்காரைச் சேர்ந்தது. சர்வகலாசாலை மாணவர்களுகு மிகவும் பயன்படுகிறது.

(f) **உயிர்ப் பிராணிகள் பிரிவு பொருட்காட்சிச்சாலை.**—இக் காட்சிச்சாலையில் கீழ்த்தர உயிரினங்கள் தொடங்கி மேல்தர உயிரினங்கள் வரை சகல உயிரினங்களின் பிரிவுகளும் இருக்கின்றன. சில அபூர்வமானவையும் முக்கியத்துவம் வாய்ந்தவையுமான காட்சிப் பொருள்களும் இருக்கின்றன. இங்குள்ள காடசிப பொருளகள், மீனகளின வகைகள், நீரிலும் நிலத்திலும் ஒருங்கே வாழக்கூடிய பிராணிகள், ஊர்வன, பறப்பன, குட்டி போட்டுப் பால் கொடுப்பவை, முதுகு எலும்பு இல்லாதவை முதலியவற்றின் மாதிரிப் பொருள்களாகும்.

(g) **இயற்கைப் பொருள்கள் பிரிவுப் பொருட்காட்சிச் சாலை.**—ஐந்து வருஷங்களுக்கு முன் நிறுவப்பட்ட இந்தப் பொருட்காட்சிச்சாலையில இந்தியாவிலும் வெளி நாடு, களிலும் சரித்திர காலதுக்கு முறபட்ட காலங்களில் ஆதி குடிகளால் உபயோகிக்கப்பட்டுவந்த ஆயுத வகைகள, மண் கலங்கள் மற்றும் பல விதப் பழம்பொருள்கள் முதலியன இருக்கின்றன. ஆதிகால மக்கள் கூட்டங்களில் பறபல இனத்தவர் உபயோகித்து வந்தனவும், சாமான்கள் செய்யும் திறமை படிப்படியாய் அபிவிருத்தியடைந்தனத ஒப்பு நோக்கிப் பார்க்கக்கூடிய வகையில் உளளனவுமாக ஆதிகால மக்கள் உபயோகித்த மரஙகளின் அடிப்பாகத்தைக் குடைந்து செய்த அல்லது மிருகங்களின் தோல் அல்லது மரங்களின் பட்டைகள் இவற்றால் செயத தோணிகள், ஆடையாபரணங்கள், போர் ஆயுதங்கள், மீன பிடிக்கும் சாதனங்கள், கூடைகள், இசைக் கருவிகள் முதலியவை இருக்கினறன. இவைகள் சம்பந்தப்பட்ட போட்டோச்களும், தரைப் படங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. சரித்திர காலத்துக்கு முறபட்ட மனிதர்களுடைய உருவங்கள் இடுப்புக்கு மேற்பட்ட வைகளாக வைக்கப்பட்டிருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இந்தக் காட்சிச் சாலைகள் அனைத்தும் அந்தந்தத தனிப் படிப்பு மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியவைகளாய் இருப்பதால், இவை யாவும் அவ்விதமான பயன்களைக் கொடுத்து உதவுகின்றன.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—சர்வ கலாசாலையின் விடுமுறை நாட்கள் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் கல்லூரி வேலை நேரங்களில் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—பல வகையான இந்தப் பொருட்காட்சிச் சாலைகள் அனைதும் இவை சம்பந்தப்பட்ட இலாக்காவால் நிர்வகிக்கப்படுகின்றன.

விவரக் குறிப்புகள்.—வைத்தியம் சம்பந்தப்பட்ட பொருட் காட்சிச் சாலைகளுக்குத் தேவையான காட்சிப் பொருள்கள், ஆஸ்பத்திரிகள் துர்மரணம் அடைநத பிரேதஙகளை மரணத்தின காரணம் தெரிய அறுதலுப் பரிசோதிக்கும்பொழுது எடுக்கப்படும் பொருள்கள் மூலமாகவும், அறுப்பு முறை வைதியர்களிடமிருநதும் சேர்கப்படுகினறன. சில மாதிரிக் காட்சிப் பொருள்கள் அயல் நாடுகளிலிருந்து வரவழைக்கப் பட்டவை.

(iii) மோதிலால் நேரு பால சங்கிரஹாலயம்

தோற்றம்.—1957.

வரலாறு.—மோதிலால் நேரு ஞாபகார்த்தக் குழுவினர் சார்பில் ஸ்ரீ சந்திரபானு குப்தா என்பவரும் மற்றும் சிலரும் எடுத்துக்கொண்ட முகுந்த ஊக்கத்தின பயனாக இந்தப் பொருட்காட்சிசசாலை ஸ்தாபிக்கப்பட்டது. தம் தந்தையார் பெயரை நிரந்தரமாய் ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய இக்காட்சிச்சாலையை இந்தியப் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு 1957-ஆம் வருஷம், அக்டோபர் மாதம், 27-ஆம் தேதியன்று திறந்து வைததார்.

நோக்கமும் பொருள்களும்.—காட்சிச்சாலையில அடியிற் காணும் மூன்று பிரிவுகள் இருக்கின்றன:—

(1) சுகாதாரப் பிரிவு.

(2) பொதுவானதும் விளையாட்டுக் கருவிகளைக் கொண்டதுமான பிரிவு.

(3) இயற்கைப் பொருட்பிரிவு.

சுகாதாரப் பிரிவு, குழந்தைகளுக்குப் பற்பல வியாதிகளின் விதங்களையும் அவற்றைத் தடுககும் முறைகளையும் குணபடுத்தும் முறைகளையும் பற்றி, வர்ணப்படங்களுடனும் மாதிரி வடிவங்களுடனும் தெளிவாகத் தெரியும்படி அமைக்கப்பட்டிருகிறது.

பொதுவானதும் விளையாட்டுப் பொருள்களைக்கொண்டதுமான பிரிவில் விசைகளால் வேலை செய்யும் சிறிய விளையாடடுப் பொருள்களும் மாதிரி வடிவஙகளும் பற்பல இடங்களைச் சேர்ந்த பொம்மைகளும், மறறும் விளையாட்டின மூலமாகவே கலவி அறிவையும் புகட்டக்கூடிய காட்சிப் பொருள்களும் இருக்கின்றன. குழந்தையின் சரீரம், அறிவுத்திறன், சமூக வாழ்க்கை இவற்றின வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவியாய் இருக்கும்படி காட்சிப் பொருள்கள் வரிசைப் படுத்தித் தகுதியான விதமாக வைக்கப்பட்டிருக்கினறன.

இயற்கைப் பொருட்பிரிவுக் காட்சிச் சாலையில் ஒரு குழந்தைக்குச் சுற்றிலும காணப்படும் மிருக வர்க்கங்கள், தாவர வர்க்கங்களினுடைய காட்சிப் பொருள்கள் இருப்பதுடன், அவற்றின் வாழ்க்கை வரலாறுகளையும் பழக்கவழக்கங்களையும் தெரிந்து அறிவு பெறகூடிய வகையில் காட்சிப் பொருள்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—பொருட்காட்சிச் சாலையில் குழந்தைகளுக்கான 3,000 புத்தகஙகளைக் கொண்ட ஒரு சிறிய புததகசாலை இருகிறது. அபுததகங்கள் பல வர்ணபபடங்களையும், மற்றும் பல வகைப் படஙகளையும் குழந்தைகளின் கொச்சை மொழி இலக்கியங்களையும் கொண்டனவாய் இருக்கின்றன. அவைகள் வகைபடுத்திக் கவர்ச்சிகரமான முறையில் வைக்கப்படடிருகினறன. ஹிந்தி, ஆங்கிலம், வங்காளம் ஆகிய மூன்று மொழிகளில் விளக்கச் சீட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கல்வி அறிவைப், புகட்டும் திரைப்படக் காட்சி

களும் காண்பிக்கப்படுகின்றன. வீட்டில் நடப்பது போலவே இக்காட்சிச் சாலையினுள்ளும் குழந்தைகள் தாராளமாய் ஓடிச்சாடி விளையாடவும், காட்சிப் பொருள்களைப் பார்த்து ஒருவரோடொருவர் தாராளமாய்ப் பேசிக்கொள்ளவும் ஊக்கம் ஊட்டப்படுகிறார்கள். காட்சிச் சாலையின் நிர்வாகக் குழுவைச் சேர்ந்த அங்கத்தினர்கள தங்களுக்குள்ளே குழு அமைத்து அவர்கள் விருப்பப்படி சில நிகழ்ச்சி நிரல்களும், திரைப்படக் காட்சிகளும் ஞாயிறுக்கிழமைகளில் காட்டப்படுகின்றன. தவிர, பொருட்காட்சிச்சாலையில் வைப்பதற்கு விளையாட்டுச் சாமான்கள் செய்யும்படியும் அவர்கள் உற்சாகப் படுத்தப்படுகிறார்கள். படங்கள் வரையும் போட்டியும் ஏற்படுத்தப்பட்டு நல்ல படங்கள் வரைபவருக்கு வெகுமதியும் கொடுக்கப்படுகிறது

வெளியீடு.—"மோதிலால் நேரு குழந்தைகள் பொருட்காட்சிச்சாலை" என்னும் பெயருள்ள ஒரு சிறு புத்தகம்.

வேலை நேரம்.—ஞாயிற்றுக்கிழமைகள் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 10-மணி முதல் இரவு 7-மணி வரையும், சனிக்கிழமைகளில் மட்டும் காலை 10-மணி முதல் மாலை 5-மணி வரையும், திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—15 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவினரால் நிர்வகிக்கப்படுகிறது. ஸ்ரீமதி ஷீலா கவுல் என்னும பெண்மணி அக்குழுவின் தலைவியராய் இருக்கிறார்.

ஊழியர்கள்.—க்ரவலர்-குமாரி ஹீனராய். மற்றும் 13 இதர ஊழியரும் இருக்கின்றனர்.

நிதி நிலை.—

	ரூ.	ந.பை.
திரும்பத் திரும்ப நிலையாக நிற்கும் தொகை	14,612	39
அவ்வாறில்லாத தொகை	30,673	47

விவரக் குறிப்புகள்.—பொருட்காட்சிச்சாலை மனத்துக்கு இனிமையான சுற்றுப் புறங்களுக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருப்பதுடன யாரும் எளிதில் போய்ப் பார்க்கக்கூடியதாகவும இருக்கிறது. காட்சிச்சாலையின் நிர்வாகக் குழுவைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்குத் தனிப்பட்ட வசதிகள செய்யப்பட்டிருக்கின்றன. நாள ஒன்றுகுச் சராசரி 125 போகளும, வருஷத்துக்கு 37,500 போகளும் காட்சிச் சாலையைப் பார்க்க வருகிறார்களை. சர்க்கார் விடுமுறை நாட்களில் கூட்டம் அதிகம். குழந்தைகளுகு ஆர்வம உண்டாகும்படி சிறு சிறு விஞ்ஞானப் பரிசோதனைகளைச் செய்து காண்பிப்பதற்காக இரசாயன ஆராய்ச்சிக்கூடம் ஒன்று அதிவிரைவில் திறக்கப் படப்போவதாக இருக்கிறது. குழந்தைகளின் பிரியமான விளையாட்டுக்கூடம் ஒன்றும் தயாராகி வருகிறது. இதில் தற்சமயம் களிமண்ணால் மாதிரி உருவங்கள் செய்வது, மரப் பலகைகளைக் குடைந்து சவாரி முதலிய விளையாட்டுகள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. விலைகொடுத்து வாங்குவது மூலமாகவும், மானியங்களின் மூலமாகவும் இக்காட்சிச் சாலைக்கு வேண்டும் காட்சிப் பொருள்கள் சேர்க்கப்படுகின்றன.

வாரணஸி ஹிந்து சர்வகலாசாலை

பாரத் கலா பவன் பொருட்காட்சிச் சாலை

"புதைபொருள் கலைப் பண்பாட்டுப் பொருட்காட்சிச் சாலைகள்" என்ற தலைபபினைக்கீழ்ப் பார்க்கவும்.

மேற்கு வங்காளம்

கல்கத்தா

ஜனத்தொகை—25, 48, 677

(i) வைத்தியக் கல்லூரிப் பொருட்காட்சிச்சாலைகள்

(a) அங்கக் கூறுபாட்டுப் பிரிவுப் பொருட்காட்சிச் சாலை.
(b) வியாதிகளின் இயல்பு, காரணம், மருந்துகள் முதலிய விளக்கப் பிரிவுப் பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—தெரியவில்லை.

வரலாறு.—கல்கத்தா வைத்தியக் கல்லூரி 1835-ஆம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், அங்கக் கூறுபாட்டுப் பொருட்காடசி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்பது சம்பந்தமாய்ப் பத்திரக் குறிப்பு எதுவுமில்லை. ஆனால், 1907-ம் வருஷத்தில் மேஜர் D.M. மோயர் என்பவர் அங்கக் கூறுபாடு, அறுப்பு முறை அங்கக் கூறுபாடு, நோயாளிகளின் படுக்கை அண்டையிலேயே செய்யும் அறுப்பு முறை ஆகிய இப்பிரிவுப் பாடங்களின் பேராசிரியராய் இருந்த பொழுது இக்கல்லூரியிலிருந்த அங்கக் கூறுபாட்டுப் பொருட்காட்சிச் சாலைக் கட்டடம் இடிக்கப்பட்டு அவ்விடம் புதிய கட்டடம் கட்டப்பட்டுப் பின் அப்புதிய கட்டடத்தில் அங்கக் கூறுபாடு ஜீவவர்க்கப் பிரிவுக் காட்சிப் பொருள்கள் கொண்டுபோய் வைக்கப்பட்டன.

வைத்தியக் கல்லூரியிலுள்ள வியாதிகள் விளக்கப்பிரிவுப் பொருட்காட்சிச்சாலையில் இந்த மாகாணம் முழுவதற்குமே முதல் தரமான காட்சிப் பொருள்கள் இங்கு இருக்கின்றன. ஆரம்பக் காட்சிப் பொருள்களாக இந்த வைத்தியக் கல்லூரியாலும், 1823-ஆம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்ட கல்கத்தா பௌதிக சாஸ்திரக் குழுவினராலும் பாதுகாக்கப் பட்டு வந்த சில மாதிரிக் காட்சிப் பொருள்கள் இங்கே இருக்கின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட காட்சிப்பொருள்கள் எல்லாம் 1839-ஆம் வருஷத்தில் கல்கத்தா வைத்தியக் கல்லூரியிடம் ஒப்படைக்கப்பட்டன. டாக்டர் அல்லன் வெப் என்பவர் இந்தப் பொருட்காட்சிச் சாலையின் முதல் காவலராய் இருந்தார். 1843-ஆம் வருஷத்தில் கல்கத்தா வைத்தியக் குழுவினர் இந்தியா முழுவதிலுமுள்ள வைத்திய அதிகாரிகள் அனைவர்க்கும் வேண்டுகோள் விடுத்து இக்காட்சிச்சாலைக்கு வியாதிகள விளகக்க் காட்சிப் பொருள்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டனர். அதன் பயனாக இக்காட்சிச் சாலைக்கு முக்கியமான பல காட்சிப்பொருள்கள் கிடைத்தன, 1865-ம் வருஷத்தில் ஜோஸப்பு இவார்ட்டு என்பவரால இக்காட்சிச்சாலையில் அச்சமயம் இருந்த வியாதிகள் விளக்கக் காட்சிப் பொருள்கள் 1322-க்கும் 100 மாதிரி வடிவங்களுகும் முழு விவரம் அடங்கிய பட்டியல் ஒன்று வெளியிடபபட்டது. 1884-ஆம் வருஷத்தில் புனித ஜியார்ஜ் ஆஸ்பத்திரி வெளியிட்டிருந்த பட்டியலைப போல அதே விதமாக 2890 மாதிரிக் காடசிப் பொருள்களும், 259 மாதிரி வடிவங்களும், வியாதிகள் விளக்கபபடங்களும் கொண்ட புதுப்பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டது. 1900-வது வருஷதில கேப்டன் (இப்பொழுது சர்) லியோனார்ட் ரோஜர்ஸ் என்பவர் காட்சிச சாலையின் காவலராகவும் வியாதிகள் விளக்கப பிரிவுப் பேராசிரியராகவும் அமர்ந்தார். 1905-ஆம் வருஷத்தில் இப்பொழுதிருக்கும் வியாதிகள் விளக்கபபிரிவு இரசாயன ஆராய்ச்சிக்கூடம் திறக்கப்பட்டது. பின் சில புதிய காட்சிப பொருள்களும் சேர்க்கப்பட்டன. அவைகள் எல்லாம் சேர்ந்து மொத்தத்தில் நோயுற்ற சரீரத்திலிருந்து எடுக்கப்பட்ட பொருள்களாக 9612-ம், 100 மாதிரி வடிவங்களும், கையால் வரையப்பட்ட படங்களில் 400ம் இருந்தன. இப்பொழுது இருக்கும் பட்டியல் G.N. மித்திரா, S.C. தாஸ், ஆகியவர்களால வெளியிடபபட்டது. வியாதிகள் விளக்கப் பொருட்காட்சிச் சாலையில் நோயுற்ற உடலில் லிருந்து எடுக்கப்பட்ட மாதிரிப் பொருளகளில 5,000-மும்; மாதிரி வடிவங்களில் 100-க்கு மேலும், கையால் எழுதப்பட்ட படங்களில்

600-க்கு மேலும், போட்டோக்களில் 250-க்கு மேலும், திரைப் படங்காட்டும் கண்ணுடிப் படங்களில் 300-க்கு மேலும் இருக் கின்றன. இப்பொழுது இந்தப் பொருட்காட்சிச்சாலை 10,000 சதுர அடிப் பரப்புள்ள கட்டடத்தில் இருக்கிறது. இக்கட்டடத் தில் 55 இரட்டை அலமாரிகளும், சுழலும் பட ஸ்தம்பங் களும், பல காட்சிப் பொருட் பெட்டிகளும் இருக்கின்றன.

நோக்கமும் பொருள்களும்.—அங்கக் கூறுபாட்டுப் பொருட் காட்சிச் சாலையில் குறுக்கு நெடுக்காக வெட்டிய அங்கங்களின் மாதிரிப் பொருள்களும், மனித சரீரத்தின் பல ரகங்களைக் காட்டும் மாதிரி வடிவங்களும், நரம்புகளின் கூறுபாடுகளும், கரு உற்பத்தி அவயவங்களின கூறுபாடுகளும் விளக்கும் மாதிரிப் பொருள்கள் இருக்கின்றன. உயிர்ப் பிராணிகளின் அங்கக் கூறுபாடுகளை விளக்கிக்காட்டும் சில மாதிரிப் பொருள் களும் இருக்கின்றன.

வியாதிகள் விளக்கப் பிரிவுப் பொருட்காட்சிச்சாலையில் வியாதிகளின் இயல்பு, காரணங்கள் முதலியவற்றை விளக்கிக் காட்டும் நோயுறற உடல்களிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிப் பொருள்களும், மாதிரி வடிவங்களும், கையால் வரைந்த படங்களும், போட்டோக்களும இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—இந்தப் பொருட் காட்சிச்சாலை முக்கியமாக வைத்தியக் கல்லூரி மாணவர்கள் டாக்டர்கள் ஆகியோர் நலனுக்காக ஸ்தாபிக்கப்பட்டது. வைத்திய விஷயங்களில் ஆர்வமுள்ள எவரையோரும் இக்காட்சிச் சாலையைப பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் இந்த வைத்தியக் கல்லூரியிலுள்ள பாடப் பிரிவுத் தலைமைப் பேராசிரியர்களிடமாவது கல்லூரி முதல்வரிடமா வது அனுமதி பெற்றல்லாது பார்க்க முடியும். இந்நகரி லுள்ள எல்லா வைதிய ஸ்தாபனங்களிலும் படிக்கும் மாணவர்களை பாட சம்பந்தமான விஷயங்களை ஆராய்ந்தறியக் காட்சிச் சாலைக்கு வருகிறார்களை. கல்லூரியின மறு சேர்க்கைத் தின விழாக் கொண்டாடும் தினத்திலும் வேறு சில விசேஷ நாட்களிலும் விசேஷப் பொருட்காட்சி விழாக்கள் நடத்தப் படுகின்றன. அப்பொழுது ஏராளமான பார்வையாளர்கள் வருகிறார்கள். விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்தில் வைக்கப் பட்டுள்ளன. கூடிய வரை தரைப்படங்கள், விவரக்குறிப்பு கள், மாதிரி வடிவங்கள் முதலியன தயாரித்து வைக்கப் பட்டிருக்கின்றன.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—சர்க்கார் விடுமுறை நாட்கள் தவிர, மற்ற நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. காட்சிச் சாலை, வைத்தியம் படிக்கும் மாணவர்களின் நலன்களைக் கருதியே அமைக்கப் பட்டிருக்கிறது.

நிர்வாகக் குழு.—அந்தந்தக் கல்விப் பிரிவு தலைமைப் பேராசிரியரால் அந்தந்தப் பிரிவுப் பொருட்காட்சிச் சாலை நிர்வகிக்கப்படுகிறது.

ஊழியர்கள்.—அங்கக் கூறுகளைத் திருஷ்டாந்த பூர்வமாய் விளக்கிப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர், தமக்கு ஏற்பட்ட வேலைகளோடு அங்கக் கூறு பொருட்காட்சிச் சாலையையும் மேற்பார்த்துக்கொள்கிறார். அவருக்கு உதவியாக ஒரு சிறு பையன் அமர்த்தப்படடிருக்கிறான். வியாதிகள் விளக்கப் பிரிவுப் பொருட்காட்சிச்சாலை ஊழியர்களாகக் காவலர்—1. கைத்தொழில் கற்பிப்போர்—2, குமாஸ்தாக்கள் சிலர், தோல் பதனிட்டுப் பஞ்சடைப்பவர்—1, சித்திரக்காரர்—1, வேலைக்காரர்—2 பேர்.

நிதி நிலை.—காட்சிச்சாலைக்கெனத் தனிப்பட்ட நிதி இல்லை. கல்லூரியில் உள்ள பாடப் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படும் நிதியி லிருந்து அந்தந்தக் காட்சிச் சாலையின் செலவினங்களுக்குத் தொகை செலவழிக்கப்படுகிறது.

விவரக் குறிப்புகள்.—அங்கக் கூறு பொருட் காட்சிச் சாலைக் கட்டடத்தில் இரசாயன ஆராய்ச்சிக் கூடமில்லை. ஆயினும், கட்டடதினுள் போதிய இடவசதி இருக்கிறது. காட்சிச் சாலைக்குக் கல்லூரியிலுள்ள இந்தப் பாடப் பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் அங்கங்களைக் குறுக்கு நெடுக்காக வெட்டிப் பரிசோதிப்பது மூலமாகவும், வெளியிலிருந்து விலை கொடுத்து வாங்கியும், காட்சிப் பொருள்கள சேகரிக்கப் படுகினறன. இப்பிரிவைச் சேர்ந்த தர்வான்களால் இக் காட்சிச்சாலை காவல் செய்யப்பட்டு வருகிறது.

வியாதிகள் விளக்கப் பிரிவுப் பொருட்காட்சிச்சாலைக் கட்டட மும் போதிய இட வசதியுடையதாயிருப்பதுடன் இரசாயன ஆராய்ச்சிக்கூட வசதிகளும உடையதாய் இருக்கிறது. இந்தப் பிரிவைச் சேர்ந்த தர்வான்களின் பாதுகாப்பில் இக்காட்சிச சாலை இருந்து வருகிறது. துர்மரணங்களால் இறந்தவர் களுடைய பிரேதங்களை மரணத்தின் காரணத்தைக் கண்டு பிடிக்க வெட்டிப் பரிசோதிப்பதில் எடுக்கப்படும் நோயுற்ற அங்கங்களைச சேர்ப்பதன் மூலமாகவும், இந்தப் பிரிவினர் சேர்க்கும் பொருள்கள் மூலமாகவும் இக்காட்சிச் சாலைக்கு வேண்டிய காட்சிப் பொருள்கள் சேர்க்கப்படுகின்றன.

(ii) உஷ்ணப் பிரதேச மருந்துகள் பள்ளிக்கூடப் பொருட் காட்சிச்சாலை

தோற்றம்.—1921.

வரலாறு.—இந்தப் பொருட்காட்சிச் சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்களுடன் இது 1921-ம் வருஷத்தில் உஷ்ணப் பிரதேச மருந்துகள் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கபபட்ட பொழுது அதனுடன் சேர்த்து ஆரம்பிக்கப்பட்டது. பின்னால் இது தனக்குத் தேவையான காட்சிப் பொருள்களைச் சேகரித்துக் கொண்டே வந்ததன மூலம் படிப்படியாக விஸ்தீரணம் அடைநதது. இது வைதியத்துறை ஆராய்ச்சிக்கும் பி.எ-க்கு மேல் படிககும் மாணவர்களுக்கு மருந்து வகைகளைப் பற்றிக கறறுக்கொடுப்பதற்கும் உதவியாக ஸ்தாபிகபபட்ட பொருட் காட்சிசசாலையாகும்.

நோக்கமும் பொருள்களும்.—இங்கே சேர்த்து வைக்கப் பட்டுள்ள காட்சிப் பொருள்கள் மாணவர்களின் செய்முறைக் கல்விப் பயிற்சியைத் திருஷ்டாந்த பூர்வமாய்க் கற்றுக் கொள்வதறகு வசதியாயிருக்க வேண்டுமென்ற நோக்கத் தோடும், வைத்தியத்துறையில் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உதவியாய் இருக்குமபொருட்டும் சேர்த்து வைக்கப்பட் டுள்ளன. இங்குள்ள காடசிப பொருள்களை இதன் அடிப்படை காணும் இனங்களாகப் பிரிக்கலாம் :—

(a) பதனிட்டுப் பாதுகாக்கப்பட்ட உயிர்ப் பிராணிகளில் பல வகைகளைச் சேர்ந்த காட்சிப் பொருள்கள்.

(1) டைபாயிடு காய்ச்சல், காலரா, குஷ்டம், கூஷயரோகம் ஆகியவற்றை விளைவிக்கும் கிருமிகள.

(2) முறைக் காய்ச்சல். மலேரியாக் காயச்சல், கலாஸார் காய்ச்சல், தொத்து நோய்கள் இவற்றிற்குக் காரணமா யிருக்கும் கிருமிகளின் வகைகள்.

(3) யானைக்கால் நோயை உற்பத்தி செய்யும் புழுக்கள்.

(4) மஞ்சள் காய்ச்சல், மூடக்குக் காய்ச்சல், தொத்துக் காய்ச்சல், பிளேகு, காலரா, விட்டுவிட்டு வரும் காய்ச்சல் முதலியவற்றிற்குக் காரணமாயுள்ள கிருமிகளின் வகைகளும், அழுகும் சிரங்கு, சொறி சிரங்கு முதலியவற்றை உண்டுபண்ணும் பூச்சிகளின் வகைகளும்.

(5) பாம்பு இனங்கள் (விஷப்பாம்புகளும் விஷமில்லாத பாம்புகளும்) விஷப்பாம்பு கடித்து மரணம் ஏற்படுவதும், பயக்கம் ஏற்படுவதும்.

(6) பிளேகு நோய்க்கு இருப்பிடமான எலிகள், வையல் நோய, எலிக்கடிக் காய்ச்சல் முதலியன.

(b) தொத்து நோய்களுக்குக் காரணமாயிருக்கும் ஜந்துக்களும், மனித சரீரத்தை இறந்த பின்னும் உயிரோடிருக்கும் போதும் குறுகும் நெடுக்குமாக வெட்டிக் காண்பித்துள்ளனவுமான காட்சிப் பொருள்கள்.

(c) உஷ்ணப் பிரதேச நோய்களை விளக்கிக் காட்டச் சுண்ணாம்பால் செய்யப்பட்ட மாதிரி வடிவங்கள்.

(d) மனித சரீரத்தின் பல்வேறு உறுப்புகளையும் நாசமாக்கும் வியாதிகள், குஷ்டம், வைசூரி முதலியவற்றின் மெழுகால் செய்யப்பட்ட உருவங்கள்.

(e) பூகோள ரீதியாக உஷ்ணப் பிரதேச நோய்கள் பரவுகின்ற இடங்கள், அவைகளின் அறிகுறிகள், அவற்றைத் தடுக்கும் முறைகள், அவைகள் ஏற்படுவதற்குக் காரணமாயுள்ள பூச்சிகள், கிருமிகள், புழுக்கள் முதலியவற்றின் வாழ்நாள் விவரங்கள் ஆகியவற்றை விளக்கிக்காட்டும் விவரக் குறிப்புகள் படங்கள், போட்டோக்கள்.

(f) தரம் பிரிக்கப்பட்ட மருந்துச் செடிகள், மருந்து வகைகள் முதலியன.

விளக்க நடவடிக்கைகள்.—பொருட்காட்சிச்சாலை பி.ஏ-க்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கும் வைத்தியத் துறை ஆராய்ச்சியாளர்களுக்கும் பயன்படும்படி ஸ்தாபிக்கப்பட்டதாகும். விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. கூடிய சீக்கிரம் ஹிந்தியிலும் வங்காளியிலும் வைக்கப்படும். பி.ஏ.-க்கு மேல் படிக்கும் சர்வகலாசாலைப் பொது விஞ்ஞானக் கல்வி மாணவர்களும் உயர்தர வைத்தியக் கல்வி படிக்கும் மாணவர்களும் ஆராய்ச்சித் துறைக்கு அனுகூலமாயுள்ள இந்தப் பொருட்காட்சிச் சாலையால் பெரிதும் பயன அடைகிறார்கள். பற்பல விஷயங்களையும் தெளிவுபடுத்தும் பொருட்டுத் தரைப்படங்கள், விவரக் குறிப்புகள், மாதிரி வடிவங்கள், அச்சுகள் முதலியன இங்கு இருக்கின்றன.

வெளியீடு.—இல்லை.

வேலை நேரம்.—ஞாயிற்றுக்கிழமைகளும் விடுமுறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அனுமதி.—கட்டணம் இல்லை. பி. ஏ.-க்கு மேல் படிக்கும் மாணவர்கள், வைத்தியத் துறை ஆராய்ச்சியாளர்கள், முதலியோர் நலன்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டது.

நிர்வாகக் குழு.—உஷ்ணப் பிரதேசத்து மருந்துகள் டைரெக்டர் நிர்வாகத்தில் இருக்கிறது. அவருக்கு அப்பள்ளி யாசிரியர்கள் உதவியாய் இருக்கிறார்கள்.

ஊழியர்கள்.— காவலர்–1, வேலைக்காரன்.

நிதி நிலை.—பொருட்காட்சிச் சாலை உஷ்ணப் பிரதேச மருந்துகள் பள்ளிக்கூடத்தின் ஒரு பகுதியாய் இருப்பதால் இதற்கெனத் தனிப்பட்ட நிதித்திட்டம் எதுவும் இல்லை.

விவரக்குறிப்புகள்.— பொருட்காட்சிச்சாலை நகரின் மத்தியில் இருக்கிறது. வைத்தியக் கல்வி மாணவர்களுக்காகவும் வைத்தியத்துறை ஆராய்ச்சியாளர்களுக்காகவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகையால், பொதுமக்கள் பார்க்க அனுமதி இல்லை. இங்கு வரும் பார்வையாளர்கள் எண்ணிக்கை அதிகமில்லை. காட்சிச் சாலை விஷயமாய்ச் சம்பாஷணை முறையில் நடத்தும் கூட்டங்களின்போது இந்தக் காட்சிச் சாலையில் பார்வையாளர் கூட்டம் அதிகமாய் இருக்கிறது. இக்காட்சிச் சாலையை விஸ்தரிக்கும் வகைக்கு இன்னும் அதிகமான இடம் வேண்டியிருக்கிறது. காட்சிச்சாலை, பள்ளிக்கூடத்தின் ஒரு பகுதியாகவே இருப்பதால், இதற்கெனத் தனிப்பட்ட காவற்காரன் இல்லை. உஷ்ணப் பிரதேச மருந்துகள் பள்ளிக்கூடத்திலுள்ள பல்வேறு பிரிவுகளின் மூலமாகவே காட்சிச்சாலைக்கு வேண்டும் காட்சிப் பொருள்கள் சேர்த்து வைக்கப்படுகின்றன.

(iii) R. G. கார் வைத்தியக்கல்லூரி (வியாதிகள் விளக்க) பொருட்காட்சிச்சாலை

தோற்றம்.—தெரியவில்லை.

வரலாறு.— இந்தப் பொருட்காட்சிச்சாலையின் வரலாறு R. G. கார் வைத்தியக் கல்லூரி (வியாதிகள் விளக்கப்) பிரிவின் வரலாற்றினின்று வேறுபட்டதன்று.

நோக்கமும் பொருள்களும்.— பொருட்காட்சிச்சாலை வைத்தியத்துறையின் பல பிரிவுகளை விளக்கும் காட்சிப்பொள்களையுடைய கல்லூரிப் பொருட்காடசிச்சாலையாகும். இது இந்தக் கல்லூரியில் வியாதிகள் விளக்கப் பிரிவுக் கட்டடத்தை அடுத்து அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே வியாதிகள் விளக்கப்பிரிவு என்றும் (முற்கால தற்கால) மருந்துகளின் வரலாற்றுப் பிரிவு என்றும் இரண்டு பிரிவுக் காட்சிக் கூடங்கள் இருக்கின்றன. அவைகளில் ஏராளமான விவரக்குறிப்புகளும், தரைப்படங்களும், போட்டோக்களும், விளக்கமான குறிப்புகளும் இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்:— வைத்தியம் படிக்கும் மாணவர்களின் நலனுக்காக இந்தப் பொருட்காட்சிச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது, அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அனுகூலமாய் அமைந்திருக்கிறது. கல்கத்தாவில் நடைபெறும் விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட மகாநாடுகளுக்கு வரும் பிரதிநிதிகள் இக்காட்சிச் சாலையை வந்து பார்க்கிறார்கள். கல்கத்தாச் சர்வகலாசாலை மாணவர்களும் மற்றும் பக்கத்து ராஜ்யங்களிலுள்ள சர்வகலாசாலை மாணவர்களும் இக்காட்சிச் சாலையைப் பார்ப்பதில் மிகவும் ஆவலுள்ளவர்களாய் இருக்கின்றார்கள்.

வெளியீடு:—இல்லை.

வேலை நேரம்:— ஞாயிற்றுக்கிழமைகளும் மற்றும் விடுமுறைளும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் இக்காட்சிச் சாலை பகல் 12 மணி முதல் 4 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை. கல்லூரி இடைவகுப்பு மாணவர்கள், பட்டப்படிப்புக்கு மேல் படிக்கும் மாணவர்கள், வைத்திய சாஸ்திரத்தில் ஆர்வமுள்ளவர்கள் நலன்களை உத்தேசித்து இக்காட்சிச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது.

நிர்வாகக் குழு.—வியாதிகள் விளக்கப்பிரிவுப் பேராசிரியரால் காட்சிச்சாலை நிர்வகிக்கப்படுகிறது.

ஊழியர்கள்.— வியாதிகள் விளக்கப் பிரிவுப் பேராசிரியர் காட்சிச்சாலையின் காவலராகவும், ஆசிரியர்களில் ஒருவர் உதவிகாவலராகவும் இருக்கிறார்கள். இவர்கள் தவிர, காட்சிப் பொருட்களைப்பற்றிக கவனஞ்செலுத்துபவர்-1, இரசாயன பரிசோதனைக்கூட உதவியாளர்-1, தூப்புக்காரன்-1, சித்திரம் வரைவதுடன் போட்டோ எடுப்பவர்-1.

நிதி நிலை.—கல்லூரி வரவு செலவுத் திட்டத்துக்குப் புறம்பாக இந்தக் காட்சிச்சாலைக்கெனத் தனிப்பட்ட நிதித்திட்டம் எதுவுமில்லை.

விவரக்குறிப்புகள்:—வைத்தியக் கல்லூரி மாணவர்களின் தேவைகளுக்காக இந்தக் காட்சிச்சாலை, வைத்தியக் கல்லூரியிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றது. தற்சமயத்துக்கு இங்கு இடவசதி போதுமானது. இக்காட்சிச் சாலையை அபிவிருத்தி செய்யத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. கல்லூரிக் கட்டடம் முழுவதையுமே இரவு பகல் காவல் செய்யக் காவற்காரர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இறந்தவர் உடலைப் பரிசோதிப்பதன் மூலமும் இரணங்களை அறுக்கும் போதும் நோயுள்ள பாகங்கள் எடுத்துக் காட்சிச்சாலைக்குரிய காட்சிப் பொருளாக சேர்க்கப்படுகின்றன. பிரசவகாலத்தில் குழந்தைகளை வெளியில் எடுப்பதற்கு உபயோகப்படுத்தும் ஆயுதம் காலஞ்சென்ற சர். கேதார்நாத் தாஸ் சிரயம் கொடுத்து வாங்கிக் கொடுத்ததாகும்.

கல்கத்தாச் சர்வகலாசாலை அஸுடோஷ் இந்தியக் கலைப் பொருட் காட்சிச்சாலை

"புதைபொருள்கள் கலைப்பண்பாட்டுப் பொருட்காட்சிச் சாலைகள்" என்ற தலைப்பின்கீழ்ப் பார்க்கவும்.

டார்ஜிலிங்.

ஜனத்தொகை—33,605

இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சிச்சாலை

தோற்றம்.— 1903.

வரலாறு:— டார்ஜிலிங்கில் இயற்கை வரலாற்றுப் பொருட் காட்சிச்சாலை ஒன்று நிறுவவேண்டியதுபற்றி 1903–ம் வருஷத்தில் முதன்முதலாக விவாதிக்கப்பட்டது. இதன் பின் சேர்ந்திருந்த சில காட்சிப் பொருள்களை வைத்து லாயட் தாவரப் பூங்காவில் அதற்காக ஒரு கட்டடம் கட்டப்பட்டு, அக்கட்டடத்தில் அப்பொருள்கள் வைக்கப்படடன. இப்பொழுதிருக்கும் காட்சிச சாலைக் கட்டடம் 1915-ஆம் வருஷத்தில் கட்டி முடிக்கப்பட்டது. நிதி பற்றுக் குறை காரணமாக 1922-ஆம் வருஷத்தில் இக்காட்சிச் சாலை சோகேடான நிலைமையில் இருந்தபடியால், இதன் நிர்வாகக் குழுவின் அக்கிராசனர், கவர்னரிடம் போய், இக்காட்சிசசாலைக்கு உதவி யளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். கவர்னரும் உதவியளிக்க இசைந்துள்ளார். ஆயினும், காட்சிச் சாலையைப் பொறுப்பாகக் கவனித்துவர இயற்கை வரலாற்றுக் குழு ஒன்றும், திறமை வாய்ந்த காவலர் ஒருவரும் அமைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் பண உதவி செய்வதாகச் சொன்னார். அதனால், 1923-ஆம் வருஷதத்தில் டார்ஜிலிங்கில இயறகை வரலாற்றுக் குழு ஒன்று அமைக்கப் பட்டு, அக்குழுவினர் காட்சிச்சாலையின் பொறுப்பை எற்றார்கள். 1926-ஆம் வருஷத்தில் 15 பக்கங்கள் கொண்ட கால் வருடப்பத்திரிகை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இயறகை வரலாற்றுக் குழு என்ற பெயர் 1940-ஆம் வருஷத்தில் வங்காள இயற்கை வரலாற்றுக் குழு என மாற்றி அமைக்கப்பட்டது. இப்பொழுது இக்குழுவினர் இக்காட்சிச் சாலையை நிர்வகித்து வருகின்றனர். அவர்கள் இக்காடசிச சாலையின் வெளியீடான கால் வருடப் பத்திரிகையையும் திருந்திய முறையில் வெளியிட்டனர். பின்பு இக்குழுவின் தலைவர் நீண்ட நாட்களாக வியாதியில் கிடந்து இறந்து போனபடியால், அவர் ஸ்தானத்துக்கு வந்த அக்கிராசனருக்கு இக்காட்சிச் சாலை நடவடிக்கைகளில் சில கஷ்டங்கள் ஏற்பட்டன. 1952-ஆம் வருஷத்தில் டாக்டர் S. தாமஸ் சத்தியமூர்த்தி என்பவர் காவலராய் அமர்ந்த பின்புகூட கஷ்டங்கள் நீங்களாயின. அவர் பதவி எற்ற பின் இந்தப் பொருட்காட்சிச் சாலையின் நடவடிக்கைகளில் புத்துயிர் எற்பட்டதுடன் பத்திரிகையும் ஒழுங்காக வெளியிடப்பட்டது.

நோக்கமும் பொருள்களும்.—பொருட்காட்சிச் சாலையில் இயற்கை வரலாற்றுக் காட்சிப் பொருள்களாகக் குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் பிராணிகள், பறவைகள், ஊர்வன, மீன் இனங்கள், பறவைகளின் முட்டைகள், பூச்சிகள், மற்றும் முதுகெலும்பில்லாத பிராணிகள் ஆகியவற்றின் மாதிரிப் பொருள்கள் இருக்கின்றன. இக்காட்சிச சாலைக் குழுவினரின் நோக்கம், இக்காட்சிசாலை இயற்கைப் பொருடபாடங்களை நன்முறைக் கற்பிக்கக்கூடியதாய் இருக்கவேண்டும் என்பதுடன், டார்ஜிலிங், ஜாலபைகூரி ஆகிய ஜில்லாக்களிலும் சிக்கிம் சமஸ்தானத்திலுமுள்ள இயற்கைப் பொருள்களின் மாதிரிகளைச் சேகரித்து இக்காட்சிச்சாலையில் வைக்கவேண்டும் என்பதுமாகும்.

விளக்க நடவடிக்கைகள்.—காட்சிச் சாலையில் ஒரு புத்தக சாலை இருகிறது. அதில் இயற்கை வரலாற்றைப் பற்றிய புத்தகங்களும் பருவகால வர்த்தமானப் பத்திரிகைகளும் இருக்கின்றன. கிட்டத்தட்ட 500 புத்தகங்கள் இருக்கின்றன. புத்தகசாலையைக் காட்சிச் சாலையினரே உபயோகிக்கின்றனர். பள்ளிச் சிறுவர்களையும், குழுவாகச் சேர்ந்து வரும் பார்வையாளாகளையும் காட்சிச்சாலை காவலர் சுற்றிக் காண்பிப்பதுடன, பொருள்களைப்பற்றிய விளக்கமும் தெரிவிக்கிறார். அமெரிக்க ஐக்கிய ராஜ்யங்கள் செய்திகுழுவினருடைய கூட்டுறவைக் கொண்டு, கூட்டங்கூட்டமாய் வரும் பள்ளிச் சிறுவாகளுக்குக் காட்சிசசாலை காவலர், திரைப்படம் காட்டும் படக் கண்ணாடிகளை வைத்துத் திரைப்படங்கள் காட்டிச் சொற்பொழிவுகளும் நிகழ்த்துகிறார். கல்விக் காரியங்களுக்காக இங்குள்ள காட்சிப் பொருள்கள் மற்றப் பொருட்காட்சிச் சாலைகளுக்குக் கடனாகக் கொடுத்து வாங்கப் படுகினறன. இந்தப் பொருட்காட்சிச்சாலை தன்னுடைய வெளியீடான வங்காள இயறகை வரலாற்றுக் குழுவினர் பத்திரிகை என்பதை அத்த மாதிரி இயற்கை வரலாறு சம்பந்தமாக உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் மற்றப் பொருட்காட்சிச்சாலைகள், விஞ்ஞானக் கழகங்கள் முதலியவற்றின் வெளியீடுகளுடன் பரிவர்த்தனை செய்துகொள்கிறது. விளக்கச் சீட்டுகள் ஆங்கிலத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இதன பக்கத்திலுள்ள கல்லூரிகளும் பள்ளிக்கூடங்களும் இக்காட்சிச் சாலையைப் பார்க்க மிகவும் ஆர்வமுள்ளவைகளாய் இருக்கின்றன.

வெளியீடுகள்.—வங்காள இயற்கைப் பொருள் வரலாற்றுப் பத்திரிகை என்பதை, காட்சிச் சாலை 1926–ஆம் வருஷத்தில் ஆரம்பித்துத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. இதில் 26 தொகுதிகள் வெளியிடப்பட்டுவிட்டன. இது ஆரம்பத்தில் கால் வருஷப் பத்திரிகை. பின்னல் அச்சுக் கூலி அதிகரித்த படியால் 1951–ஆம் வருஷம் முதல் வருஷத்துக்கு மூன்று முறை மட்டும் வெளியிடப்பட்டு வருகிறது. மேலும், இந்தப் பொருட்காட்சிச் சாலையின் வெளியீடுகளான வண்ணம் தீட்டிய போட்டோக்கள், வண்ணம் தீட்டிய பறவைகளின் படங்களுடன் கூடிய வாழ்த்து அட்டைகள் முதலியன கிரயத்துக்கு விற்கப்படுகின்றன.

வேலை நேரம்.—சனிக்கிழமைப் பிற்பகலும் ஞாயிற்றுக் கிழமைகளும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணி வரை; மாலை 3 மணி முதல் 5 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—வங்காள இயற்கை வரலாற்றுக் குழுவினரால் நடத்தப்படுகிறது.

ஊழியர்கள்.—காவலர்—ஸ்ரீ J. C. டேனியேல், M. Sc, தோல் பதனிட்டுப் பஞ்சடைப்பவர் 1, சைக்கிதார் 2, பகுதி நேரக் குமாஸ்தா 1.

நிதி நிலை.—வருஷ வரவு செலவுத் திட்டம் ரூ. 12,000

விவரக் குறிப்புகள்.—நகரின் மத்தியில் வசதியாகப் பொருட்காட்சிச்சாலை அமைந்திருக்கிறது. இந்தியாவிலுள்ள மலேப்பிரதேச சுக வாசஸ்தலங்களில் இல்லாத தனிச் சிறப்பு வாய்ந்த பொருட்காட்சிச் சாலையாகவும் இருக்கிறது. நாள் ஒன்றுக்கு 50 பார்வையாளர்கள் வருகின்றனர். கோடை காலங்களிலும் பூஜா விழாக்களிலும் பார்வையாளர் எண்ணிக்கை அதிகமாகிறது. காட்சிச்சாலைக் கட்டடம் வசதியாயிருந்த போதிலும் மேலும் விஸ்தரித்துக் கட்டுவதற்குப் பக்கத்தில் போதுமான இட வசதியில்லை. பகலில் இரண்டு காவற்காரர்கள் உண்டு. இரவில் காவலாள் இல்லை. காவலருடைய வீடுகள் காட்சிச்சாலைக்கு அருகிலேயே இருக்கின்றன. பண்டகசாலைக்குப் போதிய இட வசதி இருக்கின்றது. காட்சிப் பொருள்களைப் பதனிட்டுப் பஞ்சடைப்பவருக்கு அறை வசதியில்லை. காட்சிச் சாலை காவலர் சுற்றுப் புறங்களில் சேகரிக்கும் பொருள்களை மாதிரி எடுப்பதன் மூலமாகவும் மானியங்கள் மூலமாகவும், காட்சிப் பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. ஊர்வன, பூச்சிகள் இவற்றிற்கு விவரதக் குறிப்புகள வார்ப்புகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. பொருள்களை எவ்விதம் பதப்படுத்திப் பாதுகாப்பது என்பதைப் பற்றி அறிய விரும்புவோர்க்கு அம்முறைகள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன.

செராம்பூர்

செராம்பூர் கல்லூரிப் பொருட்காட்சிச் சாலை

தாம்லூக் ஹேமில்டன் உயர்நிலைப்பள்ளிப் பொருட்காட்சிச்சாலை

இவ்விரண்டுக்கும் "புதை பொருள் கலைப்பண்பாட்டுப் பொருட் காட்சிச்சாலைகள்" என்ற தலைப்பின்கீழ்ப் பார்க்கவும்.

III

கைத்தொழில், வர்த்தகப் பொருட்காட்சிச்சாலைகள்

அஸ்ஸாம்

கௌஹத்தி

ஜனத்தொகை—43,615

வர்த்தகப் பொருட்காட்சிச் சாலை
கௌஹத்தி சர்வகலாசாலை, ஜாலுகாபரி.

தோற்றம்.—1957

வரலாறு.—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப்படி மத்திய சர்க்காருடைய உபகாரப் பணத்தைக் கொண்டு இந்தப் பொருட்காட்சிச்சாலை 1957–ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மிகச சுருங்கிய காலமான ஒரு வருஷத்திற்குள்ளாகவே இந்தப் பொருட் காட்சிச் சாலைக்காக வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த 600 காட்சிப் பொருள்கள வரை சேர்க்கப்பட்டுப் பற்பல பிரிவுகளாகக் காட்சிக்கு வைக்கப்பட்டன.

நோக்கமும் பொருள்களும்.—இந்தியாவின் பொருளாதார அபிவிருத்தியைக் காட்டும் விவரக் குறிப்புகள், தரைப் படங்கள், மாதிரி வடிவங்கள் முதலியன காட்சிக்கு வைக்கப்பட்டிருகின்றன. வியாபார முக்கியதுவம் வாய்ந்த 600 காட்சிப் பொருள்கள் இருக்கின்றன. அவ்விதமான காட்சிப் பொருள்களில் வர்த்தகத்திற்கான விஷபொருள்கள். தாதுப் பொருள்கள், பாறை வகைகள், வனங்களின் விஷபொருள்கள், கைநுட்பத் திறனுல் செய்யப்பட்ட பொருள்கள், கைத்தொழில் இரசாயனச் செய்பொருள்கள், வியாபார விவசாயக் கருவிகள், அலுவலகச சாமான்கள், கடினமான கூலிவேலைகளின சிரமத்தைக் குறைக்கும் யுத்திப் பொருள்கள், வியாபார சம்பந்தமான புத்தகங்கள், பத்திரங்கள், புள்ளி விவரக்குறிப்புகள்; படங்கள், தரைப் படங்கள், மாதிரி வடிவங்கள், நாணயங்கள், மற்றும் கலைப் பண்பாடுகளின் முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் முதலியன இருக்கின்றன.

விளக்க நடவடிக்கைகள்.—வியாபார முக்கியத்துவம் வாய்ந்த கச்சாப் பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், வியபாரப் பத்திரங்கள், அலுவலகச் சாமான்கள் முதலிய வற்றை மாணவர்களுக்கு அறிமுகபடுத்தும் வகையில இக் காட்சிச சாலை மிகவும் உபயோகமாயிருக்கிறது. கரவலரும், தரைப்படம் விவரக் குறிப்புகள் முதலியன தயாரிப்பவரும், காட்சிச்சாலையைப் பார்க்க வருவோர் கேட்டுகொண்டால் காட்சிப் பெர்ருள்களைப் பற்றி விளக்கம் தெரிவிக்கிறார்கள். தரைப் படங்களும் விவரக் குறிப்புகளும் தாராளமாய் எடுக்கப்படுகின்றன.

வெளியீடு —இல்லை.

வேலை நேரம்.—எல்லா வேலை நாட்களிலும் பகல் 12-30 மணி முதல், மாலை 6-30 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—கௌஹத்தி சர்வகலாசாலையால், அதனுடைய இலைகளில் ஒன்றுக நிர்வகிக்கப்படுகிறது. காட்சிச் சாலை இப்பாடப் பிரிவுப் பேராசிரியர் பொறுப்பில் இருக்கிறது. அவர் காட்சிச்சாலையின் கௌரவப் பொறுப்பாளராயும் இருக்கிறார்.

ஊழியர்கள்.—பாடப் பிரிவுப் பொறுப்புப் பேராசிரியர் ஸ்ரீ K.N. சைக்கியா, M. A. (Com) LL.B., காவலர் ஸ்ரீ N. C. தத்தா M. Com.. தரைப்படம் வரைபவர் 1, அலுவலக உதவி அதிகாரி 1.

நிதி நிலை.—திரும்பத் திரும்பச் செலவாகும் தொகை ரூ. 20,000. அவ்வாறில்லாது நிலைபெற்ற செலவு ரூ, 10,000

விவரக் குறிப்புகள்.—நாள் ஒன்றுக்குச் சராசரி 20 பேர்களும், வருஷத்துக்கு 6,000 பேர்களும் இக்காட்சிச்சாலையைப் பார்க்க வருகிறார்கள். கிரயம் கொடுத்து வாங்குவதன் மூலமாகவும் மானியமாகவும் காட்சிப் பொருள்கள சேர்க்கப்படுகினறன.

(ii) குடிசைத் தொழில்கள் பொருட்காட்சிச்சாலை.

தோற்றம்.—1955.

வரலாறு.—அஸ்ஸாம் ராஜ்யத்தின் பழங்காலக் கலைப் பொருள்களையும் கைநுட்ப வேலைப் பொருள்களையும் சேர்த்துப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 1955-ஆம் ருஷ ஆரம்பத்தில் கௌஹத்தியில் இந்த குடிசைத் தொழில்கள் பொருட்காட்சிசசாலை ஆரம்பிக்கப்பட்டது. காட்சிப் பொருள்களைத் தகுதியான முறையில் காட்சிக்கு வைப்பதற்குக் கட்டடம் கட்டி முடிந்துவிட்டது. இப்பொழுது இககட்டடத்தில் காட்சிப்பொருள்கள் வைக்கத் தயாராய் இருக்கின்றன. கட்டடம் கட்டியுள்ள நிலததின் கிரயம மட்டும் ரூ. 1,41,000.

நோக்கமும் பொருள்களும்.—இந்த ராஜ்யத்திலுள்ள பல வகைப்பட்ட மக்கள்னங்களால் செய்யப்பட்ட கலைபபொருள களும், கைநுட்பத் திறன மிகுந்த பொருள்களும் ஆங்காங்குச் சென்று சேகரித்தும் விலை கொடுத்து வாங்கியும் சேர்க்கபபட டுள்ளன. கைநுட்பத் திறமை வாரியாகவும் மக்கள் சமூக வாரியாகவும் காட்சிப் பொருள்களைச் சேகரிக்கத் திட்டங்கள் தயாரிக்கபபடடிருகினறன. அத்திட்டத்தின் நோக்கமாவது, அவ்விதமான பொருள்களைச் செய்வதில் திறமை வாய்ந்த வர்களைகொண்டு அதே மாதிரியான பொருள்களைச் செய்து விலைக்கு வைக்கவேண்டும் என்பதேயாகும்.

விளக்க நடவடிக்கைகள்.—கைத்தொழில் அபிவிருத்திக்காக இந்தப் பொருட்காட்சிச்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சுற்றுப்புறங்களில் இருக்கும் கல்வி ஸ்தாபனத்தைச் சேர்ந்த மாணவர்கள் அதிலும முக்கியமாகக் கௌஹத்தி சர்வ கலாசாலையில் மனித சமூக வரலாற்றுப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள், இக்காட்சிசசாலையைப் பார்க்க வருகிறார்கள். அவர்கள் இங்கிருக்கும் காட்சிப் பொருள்களைப் பார்த்துப் படிப்பதில் மிகவும் ஆர்வமுளளவர்களாய் இருக்கிறார்கள். இஙகுளள காட்சிப் பொருளகள் இந்த ராஜ்யத்தின் குடிசைத தொழில்கள இலாகாவைச் சேர்ந்தவை. இது மாதிரிகள தயாரிப்பதற்கும ஆராய்ச்சி செய்வதற்கும் வாய்ப்பளிப்பதாய் இருக்கிறது. காட்சிப பொருள்களுக்கு ஆங்கிலத்தில் விளக்கச் சீட்டுகள இருக்கினறன. கூடிய சீக்கிரம் அஸ்ஸாம் பாஷையிலும் விளககச் சீட்டுகள வைக்கபபடும்.

வெளியீடு.—இலலை.

வேலை நேரம்.—சனிக்கிழமைப் பிற்பகலும், ஞாயிற்றுக் கிழமைகளும், சர்ககார விடுமுறை நாட்களும் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல், மாலை 4 மணி வரை திறந்திருகுகும.

அனுமதி.—கடடணம் இல்லை.

நிர்வாகக் குழு —பொருட்காட்சிச சாலை அஸ்ஸாம் சர்க்கார் குடிசைத தொழில்கள் இலாக்கா நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

ஊழியர்கள்.—பொறுப்பு அதிகாரி (காவலர்) ஸ்ரீ S. C, டெளவேரா, M.Com.. பொருடகாட்சிச்சாலை உதவி அதிகாரி 1. அலுவலக உதவி அதிகாரி 1, வேலைக்காரன் 1, பகற்காவற்கார சௌக்கிதார, 1.

நிதி நிலை.—ரூ. 32,000.

விவரக் குறிப்புகள்.—பொருட்காட்சிச் சாலைக்கெனப் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் காட்சிச்சாலை அமைக்கப் பட்டிருக்கிறது. இதை யாரும் எளிதாகப் போய்ப் பார்க்கலாம். நாள் ஒன்றுக்குச் சராசரி 40 பார்வையாளர்களும், வருஷத் துக்குச் சுமார் 15,000 பார்வையாளர்களும் வருகிறார்கள். போகாஹ் பிஹூ (அஸ்ஸாம் மக்களின் புது வருஷ விழா), துர்க்கா பூஜா, மஹமாதம் போன்ற விசேஷ காலங்களில் பார்வையாளர்களின் கூட்டம் அதிகம். விலை கொடுத்து வாங்குவதன் மூலமாகவும் அன்பளிப்பு மூலமாகவும் காட்சிப் பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன.

பம்பாய்—அஹமதாபாது

ஜனத்தொகை—788,333

காலிக்கோத் துணிகள் பொருட்காட்சிச்சாலை

தோற்றம்.—1949.

வரலாறு.—காலிக்கோத் துணிகள் பொருட்காட்சிச்சாலை 1949-ஆம வருஷத்தில் ஸ்ரீ கௌதம சாராபாய் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இது ஒரு கவர்ச்சிகரமான கட்டடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. காட்சிப் பொருள்கள் எல்லாம் மிகவும் அழகாக வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியத் துணி வகைகளில் நவீன மோஸ்தர்களைக் கையாளவேண்டிய அவ சியம் பற்றித் தெளிவாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

நோக்கமும் பொருள்களும்.—இங்குச் சேர்த்துவைக்கப்பட்ட துணி வகைகளும், இந்திய உடையலங்காரங்களும், இந்தப் பொருட் காட்சிச்சாலை இந்தியாவிலுள்ள பொருளாதார நிலைமையையும் தொழில்களின் நிலைமையையும் எடுத்துக் காட்டுவதுடன் கைதறித்தொழிலும் பொறித்தறியும் அபி விருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் அமைந்துள்ளதையும் விளக்கிக காட்டுவனவாயும் இருக்கின்றன. கச்சாப் பொருள் களான பருத்தி, ரோமமும் பருத்தியும் சேர்ந்தது, ஆட்டு ரோமம், பட்டு, நார்ப்பட்டு இவைகளைப் பக்குவப்படுத்துவது, நூல் நூற்பது, நெய்வது ஆகிய விதங்கள் எல்லாம் மனத் தில் நனகு பதியக்கூடிய தன்மையில் ஆதிகால மனிதர்கள் கையாண்ட முறையிலிருந்து தற்காலம் நடைபெறும் நூற் றல, நெய்தல், பொறித்தறி வரை நெய்யும் தொழிலில் ஏற்பட்டு வந்த படிப்படியான மாறுதல்களைத் தெளிவுற விளக்கக்கூடிய வகையில் அந்தந்த மாறுதல் நிலைமைகளைக் காட்டகூடிய துணி வகைகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

விளக்க நடவடிக்கைகள்.—பொது மக்கள் படிப்பதற்குத் தகுதி வாய்ந்த புத்தகசாலை ஒனறு இருக்கிறது. காட்சிச் சாலையைப் பார்க்க வரும் பள்ளிச் சிறுவர்களுக்கும் மற்றவர் களுக்கும் இங்குள்ள காட்சிப் பொருள்களைப்பற்றி விளக்கம் தெரிவிக்கப்படுகிறது. திரைப்படம் காட்டும் கண்ணாடிகள் இருகினறன. நெய்தல் தொழிலில் இந்தியா சரித்திர கால ஆரமபத்திலிருந்து இந்நாள் வரை எவ்வளவு புகழ் பெற்ற தேசம் என்பதைத் துணிகள் தயாரிக்கும் ஒவ்வொரு படியிலும் ஆதிகால முதல் சற்சமயம் பொறித்தறி முறை வரை பரம்பரை அழகுடன் மிகவும் புகழத்தக்க முறையில் காட்சிப் பொருள்களை அவ்வளவு அழகாக வைத்திருப்ப துடன, காட்சிச சாலையைப் பார்த்தவுடனே வெறுங்காட்சி மூலமாகவே பொது மக்களுக்கு ஒரு படிப்பினை உண்டாக் கும்படியான ஒரு மாதிரிப் பொருட்காட்சி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு இக்காட்சிச்சாலை ஓர் எடுத்துக் காட்டாகவும் விளங்குகிறது. விளக்கச் சீட்டுகள் ஹிந்தி யிலும் ஆங்கிலத்திலும் இருக்கின்றன. தரைப்படங்கள், விவரக் குறிப்புகள், மாதிரி வடிவங்கள் இவைகள் பயன் தருமுறையில் வைக்கப்பட்டிருக்கின்றன. பக்கங்களில் உள்ள கல்வி ஸ்தாபனங்கள் காட்சிச் சாலையைப் பார்ப்பதில் மிகவும் ஆவலுள்ளனவாய் இருகினறன.

வெளியீடுகள்.—(1) நெசவுத் துறை வரலாற்றுப் பத்திரிகை, (2) அறிமுகப்படுத்தும் சிறு புத்தகம்.

வேலை நேரம்.—திங்கட்கிழமை தவிர மற்ற நாட் களில் மாலை 5 மணி முதல் 6 மணி வரை.

அனுமதி.—கட்டணம் இல்லை.

நிர்வாகக் குழு.—காலிக்கோ (நூற்றல், நெய்தல்) ஆலை களின் டைரெக்டர்.

ஊழியர்கள்.—பொருட்காட்சிச் சாலைக்குத் தனி ஊழியர் கள் இருப்பதாகத் தெரியவில்லை.

நிதி நிலை.—தெரியவில்லை. காட்சிக்கு வேண்டும் பொருள் கள் வாங்குவதற்காகக் கொடுக்கப்படும் தொகை வருஷத் துக்கு வருஷம் மாறுகிறது.

